OFFICE OF THE
27
MA

# ஜ ன ப் பி ரி ய ன்.

( * )

மாதம் ஒருமுறை பிரசுரம் செய்யப்படும்.

புஸ்தகம். 1] சென்னை 1900ஹு ஜூன்மீ [இலக்கம். 1

## பத்திரிகையின் நோக்கமுதலியன.

கல்விச்செல்வம், பொருட்செல்வமென்னும் இரண்டினுள்
கல்விச்செல்வமே விசேஷித்தது. இந்தத்தேகத்துக்கு எவ்வாறு
உணவு அவசியமோ அவ்வாறே கல்வியும் நமது ஞானவிருத்திக்கு
அவசியமாயிருக்கின்றது. முற்காலத்தில் மேற்குலத்தார் வழங்கி
வந்ததும் தற்காலத்தில் ஐரோப்பியர் முதலிய எல்லா நாகரீக
முள்ள ஜாதியாராலும் விசேஷமாய்க் கொண்டாடப்பட்டதுமான
ஸம்ஸ்கிருத பாஷையில் ஏராளமான இதிகாச புராணங்களும்
வானசாஸ்திரம், கணிதசாஸ்திரம், இரசாயனசாஸ்திரம் முதலிய
எல்லாச்சாஸ்திரங்களும் காவ்யரூபமாகவிருக்கின்றன. ஜனங்கள்
நாகரீகமடைந்து விசேஷ ஞானம் பெற்றிருந்தமையால் இப்பொ
ழுது ஐரோப்பியர் அடைந்துள்ள சாஸ்திர ஞானங்கள் நெடுநா
ளுக்கு முன்னமே ஸம்ஸ்கிருதத்தில் இருந்தன. வேதாந்த ஞான
த்திலோ இந்துக்கள் தற்காலத்திய ஐரோப்பியரும் இணையாகமாட்
டாத அவ்வளவு தேர்ச்சி முன்னாளில் பெற்றிருந்தார்கள். ஸம்ஸ்
கிருத பாஷையானது தன் பாஷையென்று சொல்ல யாருமில்
லாது பேசுவாரின்றி க்ஷீணித்துப்போகவே அதிலுள்ள காவ்யங்க
ளெல்லாம் ஆதரிப்பாரின்றிச்சில மண்ணுக்கும் செல்லுக்கும்
இரையாயும், சில மதிப்பின்றி மூலைகளில் குப்பைகளோடு குப்பை
யாயும்ஆய்விட்டன. அவைகளிலுள்ள நீதிகதைகளோமிக்க ஞானத்
தை எளிதில் உண்டாக்குவனவாயிருப்பினும், பாஷை தெரிந்தவர்

18300



வெகு சிலராயும் வேறு பாஷையில் அவை மொழிபெயர்க்கப் படாமலுமிருந்ததால் யாதொரு பயனுமற்று வீணே கிடக்கின்றன. அவைகளைத் தமிழ்ப்படுத்தி அனைவர்க்கும் பயன்படச்செய்வதே எமது முக்கியமான கருத்து.

மேலும் முற்காலத்தில் தமிழ்க்கல்வி தமிழ்நாடெங்கும் பரவியிருந்தது. ஆண்களும் பெண்களும் அங்கங்கே கல்வி கற்றுவந்தார்கள். கல்விச்சங்கம்பெரியநகரங்களிலேயிருக்க அங்குப்போய்த் தமது கல்வித்திறத்தைக் காண்பிக்கவேண்டுமென்னு மவாவினால் நாடுகளில் அநேகர் கல்விகற்றுக்காவ்யங்கள் செய்து அச்சங்கங்களில் தங்கள் காவ்யங்களை அரங்கேற்றிவந்தார்கள். ஆங்கிலேய அரசாட்சிபெற்ற இக்காலத்திலோ தமிழ்ப்பாஷையானது ஆதரிப்பாரின்றி ஈனஸ்திதிக்கு வந்துவிட்டது. ஒவ்வொருவரும் துரைத்தனத்தாரிடத்தில் உத்தியோகம் பெறவேண்டுமென்னு மவாவினால் தூண்டப்பட்டு ராஜாங்க பாஷையாகிய இங்கிலீஷில் B.A. முதலிய பரீட்சைகளுக்குப்படிப்பதில் தமது கவனத்தைச்செலுத்துகிறார்களேயொழிய தமிழைச்சிறிதும் கவனிப்பதில்லை. யூனிவர்சிடியாரும் தயைபுரிந்து சுதேசபாஷையைப்பாடபுத்தகங்களில் கட்டாயமான ஒரு பாடமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள்; என்றாலும் மாணாக்கர் தமது பரீட்சைக்கு வேண்டுவனவற்றைக் கற்று உடனே மறந்துவிடுகிறார்கள். ஆனால் தாங்களறியவேண்டிய சாஸ்திரஞானம் தத்துவஞானம் முதலியவைகளை இங்கிலீஷிலிருந்தே கற்கிறார்கள்.

இங்கிலீஷ் தெரியாத நாட்டுப்புறவாசிகளுக்கும் மற்றும் பலர்க்கும் தங்கள் தங்கள் தொழிலைச்செய்வதுதவிர வேறு ஒன்றிலும் தங்கள் புத்தியைச் செலுத்தச்சமயம் வாய்ப்பதில்லை. இரண்டொருவர் தாயுமானவர், பட்டணத்தார் முதலிய கவிகளின் பாடல்களைப்பாடி ஞானமடைந்து ஆனந்தம் பெறுகிறார்கள். பெரும்பான்மையோர் தக்கபுத்தகங்களில்லாமல் வீணே காலங்கழித்துவருகிறார்கள். இக்காலத்தில் மேற்கு ஜாதியாரிடத்தில் தினேதினே விருத்தியாகும் சாஸ்திரஞானங்களை, இவர்கள் தெரிந்துகொள்ள வழியில்லாதிருக்கின்றது. நீராவியின் உபயோகமும், புகைக்கப்பலின் நுட்பமும், தந்திக்கம்பி வேகஞானமும் தெளி



வாய் அவர்கள் உணர வழியில்லை. இப்பான்மையோருக்கு இவ்வித சாஸ்திர ஞானங்களைப்போதிப்பது எளிதல்ல. அச்சாஸ்திரங்களின் பரிபாஷைப்பெயரைக்கற்கவும் அவர்கள் விரும்பார்கள். கசப்பான மருந்தை, அம்மருந்து தன்னோயைத்தீர்க்கும் என்று தெரிந்தும் நோயாளி விரும்பாமையால் அவனுக்கு அம்மருந்தைப் பாலிலும் சர்க்கரையிலுங்கலந்து கொடுப்பதுபோல, வான சாஸ்திரம், இரசாயன சாஸ்திரம், முதலிய சாஸ்திர ஞானங்களை அவற்றிலுள்ள பல பரிபாஷைப்பெயர்களோடு அறிவிப்பது கடினமாயிருப்பதுபற்றி அவைகளை மனதில் களிப்பை யுண்டாக்கத்தக்க கதைகள் ரூபமாய் உணர்த்த முயலுவோம்.

மேலும் சுகாதாரம் முதலிய இல்வாழ்க்கைக்கு இன்றியமையாத சில விதிகளை ஆங்காங்குணர்த்துவோம்.

நமது முன்னோர் இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய ஞானம் விசேஷமாய்ப் பெற்றிருந்தாலும் சாதாரண மனிதர்க்கு அவைகளை யுணர்த்துவது வருத்தமாயிருக்கும் என்றுணர்ந்து அவர்கள் தாங்களே கதைகள் பலவுண்டாக்கி அவைகளில் தத்துவ ஞானங்களைப் புகட்டியிருக்கிறார்கள். அவைகள் தமிழ்ப்படுத்தப் பட்டு ஒவ்வொரு சஞ்சிகையிலும் சிறிது சிறிதாக வரும்.

அந்தந்தமாதத்தில் நடக்கும் விசேஷ சமாச்சாரங்களும் சிறிதுவரும். இதுவரையில் ஆண்மக்களுக்கு இப்பத்திரிகையின் பயனைக்கூறினோம். இனிப்பெண்பாலர்க்கு இது எவ்வாறு அவசியமென்பதை யுணர்த்துவோம்.

நமது நாட்டில் முன்னாட்களில் பெண்கள் கல்விகற்பது சாதாரணமாயிருந்தது. அவர்கள் சிறிது சுயேச்சையுள்ளவர்களாய்த் தங்கணவரைத் தாமே வரித்தும் வந்தார்கள். இவை ஔவை, உப்பை, வள்ளியம்மை, தமயந்தி, சாவித்திரி என்பவர்களால் விளங்கும்; என்றாலும், இந்நாடு துருக்கர் கைவசப்பட்டதும் அவர்களது கொடுமைக்கஞ்சிப்பெண்கள் வெளிவராது தங்கள்கற்பைக் காப்பதே அவர்களுக்குப் பெருந்தொழிலாய் விட்டது. ஆனது பற்றியே கல்வியை அவர்கள் சிறிதுங்கவனியாது வீட்டு வேலையில் மாத்திரம் தங்கள் மனதைச் செலுத்திவந்தார்கள். ஆங்கிலேய அரசாட்சி பெற்றதும் பெண்கல்வி மறுபடியும் தலைதூக்க

வாரம்பித்தது, என்றாலும் பெண் கல்வியைப்பற்றி ஜனங்களுக்கு இருவித அபிப்பிராயம் உண்டாயிற்று.

ஒரு திறத்தார், பெண்கள் யாதொரு உத்தியோகமும் செய்வதில்லை யாதலால் கல்வி அவர்களுக்கு அநாவசியகமென்றும், படித்தால் கர்வமடைந்து புருஷனை மதிப்பதில்லை யென்றும், வீட்டு வேலையைச் செம்மையாய்த் தெரிந்துகொள்ளாது நாற்காலியே கதியாய்ப் புத்தகமுங் கையுமாகவிருக்கிறார்களென்றும்; மற்றொரு திறத்தார், பெண்கள் படித்து B. A., M. A. முதலிய பரீட்சைகளில் தேறவேண்டுமென்றும், அங்கங்கே பொதுவிடங்களில் புருஷர்கள் சபையிலும் பேதம் லச்சையின்றி உபந்நியாசம் செய்ய வேண்டுமென்றும், ராஜாங்க விஷயங்களிலும் தலையிட்டுத் தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவேண்டுமென்றும் யாதொரு கட்டுக்கு முட்படாமல் புருஷர்களைப்போலவே சுயேச்சையாயிருக்க வேண்டுமென்றுங் கூறுகிறார்கள். இவ்விருதிறத்தார் அபிப்பிராயமும் எமக்குச்சரியென்று தோற்றவில்லை. படிப்பது உத்தியோகத்துக்காகவன்று; ஞானத்தை யடையவேயாம். படித்தவனுக்கு உத்தியோகங்கிடைப்பதானால் அது ஜீவனோபாயத்தைப்பற்றியே. ஆகையால் படிப்பது அவசியமேயாம். மேலும் சிறுவர்கள் இளம் பிராயத்தில் தங்கள் தாயாராலேயே வளர்க்கப்பட்டு வருகிறபடியால் தாய்மாருக்குக் கல்வியிருக்குமேயாயின் அவர்கள் தங்கள் பிள்ளைகளை நல்லவழியில் எளிதில் கொண்டுவரக்கூடும். மேலும் படிப்பினால் கர்வமடைவார்களென்றும் புருஷனை மதியார்களென்றும் சொல்வது தவறு. படித்தவள் கற்புள்ளவளாய்த் தன்கணவனே தனக்குத் தெய்வமென்பதையும் சத்தியமென்பது இன்னதென்பதையும் அறிந்தவளாய்த் தான் எவ்வளவு கற்றவளாயிருப்பினும் “பேதைமை யென்பது மாதர்க்கணிகல”மாதலால் படியாதவள்போலத்தோன்றி வெகு அடக்கமாயிருப்பாள். படிப்பென்பது இரண்டொரு எழுத்தை மாத்திரங் கற்பதன்று. அவ்வாறு அற்பக் கல்வி கற்றவர்கள் கர்வமடைவது வாஸ்தவமே. “நிறைகுடம்நீர் தளும்பலில்” என்பதால் அதிககல்வி கற்றவர்கள் அடக்கமாகவேயிருப்பார்கள். இந்நாட்டில் தற்காலத்திய நிலைமையில் பெண்கள் விசேஷ கல்வி கற்பது கஷ்டம். பெண்கள் இளம்பிராயத்திலும் பாட்சாலையில் கல்வி கற்பது யுக்தமாய்த்தோன்றவில்லை. உபாத்தினிமாரை வீட்டிலேயே வரவழைத்துக் கல்வி கற்பது உசிதம். B.A. முதலிய பரீட்சைகள் இவர்களுக்குச்சிறிதும் அவசியமில்லை. ஞானத்தையுணர்த்தும் புத்தகங்களே தேவை. அவர்கள் தற்காலத்திய நிலைமையில் விசேஷ ஞானம் பெறுவது கடினமாயிருப்பதுபற்றி, புருஷ சபையில் உபந்நியசிப்பதும் தம்மிஷ்டம்போல் வெளியில்போய் சுயேச்சையாய்த்திரிவதும் சரியல்ல. மாதர்க்கு வேண்டிய நீதிகளெல்லாம் இப்பத்திரிகையில் மாதம் மாதம் வருவதால் இது அவர்களுக்குப் பேருதவியாயிருக்குமென்று நம்புகிறோம். எமக்குப்புலப்படாத வேறு விஷயங்கள் தேவையென்று கருதியாராவது எழுதியனுப்புவாரானால் அவர்களுக்கு வந்தனம்செலுத்துவதுடன் அவ்விஷயங்களையும் பத்திரிகையில் பிரசுரிப்போம்.



## பக்தர்கள் கதை.

### ஆளவந்தார் சரித்திரம்.

இந்த மஹானின் சரித்திரமானது நாம் கேட்டுள்ள சரித்திரங்களெல்லாவற்றிலும் பிரம்மியமானதாயும் கடவுளின் அபாரமான கடாட்சத்தைத் தெரிவிக்கத்தகுந்த திருஷ்டாந்தமாயுமிருக்கிறது. நமது வாழ்நாளில் கடவுளின் கிருபாகடாட்சம் நமக்கு அடிக்கடி கிடைப்பதாயிருந்தாலும் நமது அஞ்ஞானத்தினால் அதையுணராது அச்சமயம் தவறவிடுகிறோம். நம்மைக் காடாந்தகாரமாய் மூடியுள்ள அஞ்ஞானம் சிறிது குறைந்து கடவுளின்கருணை நமக்குண்டாய்ப் பரிபக்குவகாலம் நமக்குச் சமீபித்திருப்பதாகத் தோன்றுவதையும் அதனால் நமக்குண்டாகும் பேரானந்தத்தையும் பயபக்தியையும் ஒவ்வொருவரும் தமது வாழ்நாளில் பல தடவை காணலாம். ஆனால் மாயையாகிய அஞ்ஞானமோ சூரியனைமறைக்கும் மேகம்போல உடனே வந்து மூடிக்கொள்ள ஞானம் போய் வீட்டுக்குவேண்டிய உப்பு புளி ஞாபகம் உடனே நமக்கு வந்துவிடுகின்றது. ஆனால் ஆளவந்தாரோ அவ்வாறன்றி, என்று தனக்குக்கடவுள்கிருபையுண்டாயிற்றோ அன்று முதல் தன் வாழ்க்கை முழுவதும் மாறி இந்தப்பிறப்பின்சம்பந்தமான சகல பற்றுக்களையும் விட்டவராய்த்தாமேயன்றி மற்றவரும் மோக்ஷஞானத்தை யடையத் தம்மாலியன்றவளவு முயன்றமையின் வைஷ்ணவ குருபரம்பரையில் மேலானபதவியை யடைந்தார். விசிஷ்டாத்வைதம் என்று சொல்லப்படும் வேதாந்தத்தின் ஓர் பிரிவை ஸ்தாபித்தவராகிய ஸ்ரீராமானுஜாசாரியர், குருபரம்பரையில் இவருக்குப்பின் வந்தவரே. யாமுனாசாரியரென்றும் ஆளவந்தாரென்றும் சொல்

லப்பட்ட இவர், இற்றைக்குச் சுமார் எண்ணூறு வருடங்களுக்கு முன்னால் பாண்டியதேசத்தின் ராஜதானியாகிய மதுரையில் அவதரித்தார். ஸ்ரீமந்நாதமுனிகள் குமாரராகிய ஈசுவரமுனி இவருக்குப்பிதா. இவருக்குப் பத்து வயதில் பிதா மரணமடைந்தார். மற்றைய பிள்ளைகளைப்போலப்பள்ளிக்கூடத்தில் பயின்றார் என்றாலும் இளம்பிராயத்திலேயே விசேஷ புத்தியும் ஞானமும் அவரிடத்தில் தோன்றின. அவருபாத்தியாயராகிய பாஷ்யாசாரியரும் அவர் சுற்றத்தாரும் மஹானாகிய தன் பாட்டனைத்தான் சொணர்ந்தானென்று பேரானந்தமடைந்தார்கள். அவர் படித்த ஒவ்வொரு வகுப்பிலும் தாமே முதன்மையாய்ச் சட்டாம்பிள்ளையாயிருந்து பாடசாலையைப் பார்த்து வந்தார். பன்னிரண்டு வயதாவதற்கு முன்னமே எல்லாச் சாஸ்திரங்களையும் ஓதியுணர்ந்தார். ஒரு நாள் உபாத்தியாயராகிய பாஷ்யாசாரியர் ஏதோ வேலையாக வெளியே போகவேண்டிப் பள்ளிக்கூடத்தைச் சட்டாம்பிள்ளையாகிய யாமுனாசாரியர் வசம் ஒப்பித்துவிட்டுப்போனார். யாமுனாசாரியரும் பிள்ளைகளுக்குப்பாடம் சொல்லிக்கொடுத்துப்பள்ளிக்கூடத்தைப் பார்த்துக்கொண்டிருக்கையில் "வித்வஜ்ஜன கோலாகலன்" என்னும் ஆடம்பரப்பெயருடன் அக்காலத்தில் பிரசித்திபெற்ற ஒரு மஹா வித்துவானிடமிருந்து ஒரு தூதன் அவருபாத்தியாயரைத் தேடிக்கொண்டு அவ்விடம் வந்தான். இந்தக்கோலாகலனென்பவன் அக்காலத்திலிருந்த வித்துவான்களுக்கெல்லாம் மிக்க பயத்தை விளைத்தவனாய் ஒவ்வொருவரையும் அறைகூவி வரவழைத்து அவர்களுடன் தர்க்கித்து அவர்களைத் தோல்வியடையும்படி செய்து வந்தான். பாண்டியவரசனும் அவனை வரவழைத்துச் சமஸ்தான வித்வானாக்கி அவனுக்குப் பல்லக்கும் விருது குடைகளும் சால்வைகளும் அத்தகடகமும் பரிவாரமும் வெகுமதியாகவளித்தான். அதனால் அந்தக்கோலாகலன் அகங்காரம் மேலிட்டு ஸம்ஸ்கிருதந்தெரிந்த ஒவ்வொருவரும் வருஷாவருஷம் இன்ன தொகை கப்பங்கட்டவேண்டுமென்று ஒரு கட்டளைபிறப்பித்தான். ஏழை வித்வான்களோ யாதும் செய்யத்தோன்றாது கட்டளைக்குட்பட்டவராய்க் கப்பங் கட்டிவந்தார்கள். யாமுனாசாரியரின் குருவாகிய பாஷ்யாசாரியரும் அப்படிக்கப்பங்கட்டி வந்தவர்களில் ஒருவர். காலக்கொடுமையினால் கப்பம் பாக்கியில் விழுந்தது. அதைக்கேட்கக்கோலாகலனும் தூதுவனை அனுப்பினான்

யாமுனாசாரியராகிய சிறுவரும் வந்த தூதனை "நீர் யார்? வந்த காரியம் யாது"? என்று வினவவும் அவனும் "கவிகளுக்குள்ளே யார் சிங்கமோ, கற்றவர்க்கு யார் அரசனோ, பண்டிதர்களுக்கு யார் கெடியோ, ஆடுகளுக்குஓநாய் போலவும்,வைக்கோற் போருக்கு நெருப்புப்போலவும், பாம்புக்குக் கருடன் போலவும்,கற்றோருக்கு யார் இருக்கிறாரோ,"வித்வஜ்ஜனகோலாகல"னென்று யாரை உலகமுழுமையும் பிரக்கியாதியாய்ச் சொல்லிக்கொள்ளுகிறார்களோ, அவரிடமிருந்து வந்தேனென்றான். "அதெல்லாம் சரிதான், உமது மனுஷியனுக்கு எங்கள் மஹா உபாத்தியாயரிடத்தில் யாதுவேண்டும்" என்று



அலக்ஷியமாய்க் கேட்டார் சிறுவரும். "எங்கள் மனுஷனா! ஆம் உன் எசமானுக்கு எசமானன் தன் அடிமையாகிய உன் எசமானனிடத்திலிருந்து தமக்குச்சேரவேண்டிய கப்பத்தைக்கேட்கிறார்" என்று வந்த தூதனும் மறுமொழி கூறினான்- "உன் மனுஷியனிடத்துள்ள கர்வத்தை விட்டுவிடச் சொல்; தன் மேலோரிடத்தில் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமோ அதைக் கற்றுக்கொள்ளட்டும். அகம்பாவங்கொண்ட மூடர்களுக்குப் பாஷ்யாசாரியர் கப்பங் கொடுப்பதில்லை போ" வென்று தூதனை அனுப்பிவிட்டார் சிறுவரும். சிறிது நேரம் சென்றதும் உபாத்தியாயர் திரும்பிவந்து நடந்த சங்கதி தெரிந்துகொண்டு "ஐயோ என் வாயில் மண்ணைப்போட்டாயே, என் குடி பாழாய் விட்டதே, கோலாகலனுக்கு இது தெரிந்தால் உடனே அரசனுடன் கூறி என்னை வாதுக்கு அழைப்பானே, என் தலை போய் விடுமே! யாமுனா, யாமுனா, என் வாயில் மண்ணைப்போட்டுவிட்டாயே, உன் பிள்ளைவிளையாட்டுத்தனத்தால் என் குடி கெட்டுப்போயிற்றே சிறு பையனிடத்தில் பள்ளிக்கூடத்தை ஒப்பித்துவிட்டுப்போன நானும் புத்தியீனனே" என்று ஆறாத்துயரத்தால் கதறினான். யாமுனாசாரியரும் "ஸ்வாமிகளே பயப்படாதிருங்கள், உம்மை அவர் தர்க்கத்துக்கு அழைப்பாரானால் நான் போய் அவரை வெல்லுவேன். அது பற்றிச்சிறிதும் துயரப்படாதிருங்கள். அந்தக் கர்வியை நான் வெல்லுவேனென்பது திண்ணம்" என்று ஆறுதல் சொல்லி உபாத்தியாயரைத் தேற்றினார்.

இஃது இவ்வாறிருக்கையில் வித்வானுடைய ஆளும் நடந்த சங்கதிகளை வித்வானுக்குச்சொல்லவும் வித்வானும் அதிகோபாக்கிராந்தனாய் அரசனுக்குத்தெரிவித்து, பாஷ்யாசாரியருடன் தர்க்கிக்க அரசனுத்தரவும் பெற்றான். தர்க்கிக்க வழைத்ததும் பாஷ்யாசாரியர் மூர்ச்சையாய்க் கீழேவிழுந்தார். யாமுனாரியரும் அவரை மூர்ச்சைதெளிவித்து உபாத்தியாயருக்குப் பதில் தான் வாதுக்குப்போகச் சம்மதித்து மஹா வித்வானாகிய பாஷ்யாசாரியார் கோலாகலனோடு நேரே வாதிப்பது தகாதென்றும் அவருடைய சிஷ்யனாகிய யாமுனாரியரென்னும் பெயருடைய தான், வித்வானுக்குரிய மரியாதையோடு தன்னை சமஸ்தானத்துக்கு அழைத்தால் வருவதாயும், இல்லாவிட்டால் கோலாகலனே பள்ளிக்கூடம் வந்து அங்கேயே தர்க்கிக்கலாமென்றும் வந்த ஆளுடன் சொல்லி யனுப்பினார்.

வந்த தூதனும் நடந்த சங்கதிகளை அரசனுக்கும் சமஸ்தான வித்வானுக்குந் தெரிவித்தான். அரசன், பையன் 12-வயது சிறுவனென்று உணர்ந்ததும் ஆச்சரியங்கொண்டு கைகொட்டிச் சிரித்துப் பையன்கொழுப்புக்காகத் தக்க தண்டனை செய்ய வேண்டுமென்று எண்ணினான். அச்சமயத்தில் அவன் பக்கத்திலிருந்த ராணி "சிறுவன் சாமர்த்தியம் யாதோ, யாரறிவர். ஒரு சிறு நெருப்புப்பொறியும் மலைபோன்ற பஞ்சு மூட்டைகளை அழிக்கிறது-எந்தப்புற்றில் எந்தப்பாம்பிருக்குமோ யாரறிவர்? ஆகையால் நாம் சும்மாவிருக்கலாகாது,

சிறுவனைப்பரீட்சிப்போம். அவன் நம்மோடு பரிகசித்ததாய்த் தெரிந்தால் பிறகு அவனைத்தண்டிப்போம். இப்போது தக்கமரியாதையோடு அவனைச் சமஸ்தானத்துக்கு வரவழையுங்கள்" என்றாள். அது நியாயமாய்த் தோற்றினதால் அரசனும் அதற்குச்சம்மதித்து பண்டிதர்களுக்கு அக்காலத்தில் செய்யும் மரியாதை வழக்கப்படி பல்லக்கும் குடையும் அச்சிறுவனுக்கு அனுப்ப, சிறுவரும் பல்லக்கிலேறி, தமக்கு வந்தஆள் குடை பிடிக்கவும் பள்ளிக்கூடத்து மாணாக்கர் அனைவரும் தம்மைப்பின்தொடரவும் அவர்களிலொருவன் "அனைவரும் பிரமிக்கத்தக்க யாமுனாரியர் வருகிறார் வழிவிடுங்கோள், கவிச்சிங்கம் வருகிறார் வழிவிடுங்கோள், தர்க்கம், வியாகரணம், மீமாம்சை முதலிய எல்லாச்சாஸ்திரங்களையுங் கற்ற வித்வான் வருகிறார் வழிவிடுங்கோள், அவரோடு தர்க்கிப்பவருக்கு விநாசகாலமே" என்று முன் சென்று வீதிகளில் கட்டியங்கூறவும், சமஸ்தானத்துக்குச் சென்றார். சிறுவர் இவ்வித ஆடம்பரத்தோடு வீதியில் செல்லலும் சிறுவரும் பெரியருமாகிய பலர் அவரைப்பின் தொடர்ந்தார்கள். சிறுவரைக்கண்டதும் பாண்டியராஜன் குலுங்க நகைத்துத் தன்னருகிருந்த ராணியை நோக்கி "இதோ பார், வீதியிற் பல்லக்கில்வருகிற இந்தக் குழந்தை நமது வித்வஜ்ஜனகோலாகலனோடு வாதுசெய்ய வருகிறதாம்! குள்ளநரி யானையோடு சண்டைசெய்யுமோ இவ்வித வேடிக்கைநான் ஒருநாளுங் கண்டதில்லை" என்றான். ராணியாரும் சிறுவனை உற்றுப்பார்த்து "சுவாமி, நீர் கொண்ட எண்ணந்தவறு: இன்று சிறுவனே வெல்லுவான். அது அவன் முகக்குறியால் தோற்றுகின்றது. நான் எங்குங்கண்டிராத தேஜசு அவனிடத்தில் விளங்குகிறது. இந்தக்கோலாகலன் மாத்திரமன்று. இவனுக்கு மேலானவர்களையும் ஜயிப்பது இச்சிறுவனுக்கு ஒரு பொருட்டன்று" என்று கூறினாள்.

அரசன். மண்குதிரையைக்கொண்டு ஆற்றைக்கடக்க முடியுமானால் நீசொல்வது சரியே. இச்சிறுவன் நமது வித்வானை ஜயிப்பது ஒரு பசுங்கன்று யானையைக் கொல்வது போலாம்.

அரசி. கோலாகலனுக்குக் கெட்ட காலந்தான். பையன் முன்னமே ஜயித்தாற்போலேதான். வித்தையுந் திறமையும் வயதையொத்ததன்று. வயசே ஒருபரிமாணமானால், நம்மெல்லாரிலும் காலஞ்சென்ற இடிசுவர் பல விருக்கின்றனவே.

அரசன். ஏன் இம்மாதிரி யுளறுகிறாய். ஆரம்பத்திலேயே பையன் தோற்றுவிடுவான் பார். அவ்வாறு அவன் தோற்றால் நீ எனக்கென்ன தருவாய்?

அரசி. அப்படியே அவன் தோல்வி யடைந்தால் நான் உன்தாதிக்குத் தாதியாவேன்.

அரசன். பேதாய், மண்படவைக்கொண்டு கடலைக்கடக்க யார் துணிவர்? நீ யோசியாது பேசுகிறாய். இச்சிறுவன் நமது வித்வானை வென்றால் எனது இராச்சியத்திற் பாதி பகிர்ந்து கொடுப்பேன்.



இவர்கள் இவ்வாறு சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் ராஜபேட்டிக்காக வந்த யாமுனாரியரும் அரசன் தன் பக்கந்திரும்பவும் மிக்க காம்பீரியத்தோடு அவனை ஆசீர்வதித்து, கோலாகலனுக்கெதிரில் ஓர் ஆசனத்தில் உட்கார்ந்தார். வித்வானும் சிறுவனைப்பார்த்து உன் துடுக்குத்தனத்தைக்காண எனக்கு நிரம்ப விசனமாயிருக்கின்றது. ஆனாலும் அது சிறுபிள்ளை விளையாட்டுத்தனமே. யாதுவேண்டி இங்கு வந்தாய்" என்று கேட்டான்.

உனக்குத்தெரிந்த எந்த விஷயத்தைப்பற்றியாவது வாதுசெய்யவேண்டியே இந்தராஜசபைக்கு வந்தேன். நீ இன்று தோற்பது நிச்சயம்; வீண்கர்வமடையாதே. உன்பேரிலுள்ள அன்பால் உன்னை எச்சரிக்கை செய்கிறேன்" என்று யாமுனாரியரும் பதிலுரைத்தார்.

வித்வான். நீயோ என்னை ஜயிப்பது! ஓ! சிறுபிள்ளாய், ஒரு பூனைக்குட்டி வேங்கைப்புலியை வெல்லுமோ.

யாமுனாரியர். உன்னைப்போலக், கல்விச்செருக்கால் விறுமாப்படைந்திருந்த வந்தியனை வென்று கிணற்றில் தள்ளியது அஷ்டாவக்கிரனென்னும் சிறுபிள்ளையன்றோ, ஏ வித்வானே! உனக்கு அந்தக்கதை தெரியுமா?

வித்வான். என்னகர்வம் உனக்கு? அரிச்சுவடி வாசித்தாயா, உனக்கு எழுத்துக்கூட்டத் தெரியுமா, உன் பெயரைப் பிழையில்லாமல் எழுதுவையா? நீயோ என்னோடு தர்க்கிப்பது; நரிக்குட்டியோ சிங்கத்தை யெதிர்ப்பது.

யாமுனாரியர். ஒரு தினையளவாகிய நெருப்புப்பொறியுமன்றோ ஆகாயமளாவிய வைக்கோற்போரைச் சுட்டெரிக்கின்றது. யானை எத்தனை பெரிது, அதைக்கண்டவுடனே உக்கிரங்கொண்டு விசையாயெழும்பிப்பாய்ந்து அதன் மஸ்தகத்தைப்பிளக்கின்ற சிங்கக்குட்டி எத்தனை சிறிது, மலை பிரமாண்டமானதாயிருந்தும் அதை விரலளவுள்ள சிற்றுளி வெட்டிச்சக்கையாய்ப் பெயர்த்தெறியவில்லையா? ஒரு பெருந்தாழி நிறைந்துள்ள பாலை துளி மோர்ப்பிரையானது தயிராய் மாற்றவில்லையா? ஆகாயமளாவிய தேரை நடத்துவது சிறிய அச்சாணியன்றோ? அகண்ட சமுத்திரஜலத்தை யுட்கொண்ட அகத்தியர் குள்ளமோ உயரமோ?

'மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும்.'

என்ற நீதி தெரிந்ததில்லையோ? இவைகளை நீர் ஆலோசியாது இளைஞனென்றும் முதியனென்றும் விவகரித்துக்கொண்டு வீண்காலம் போக்குவானேன். எடுத்தகாரியத்தை நடத்தத்துணிவதே யுக்தம்" என்றார்.

வித்வானும் அதுகேட்டு அவருடனே தர்க்கம், வியாகரணம் முதலிய சாஸ்திரவிஷயத்தைப்பற்றிச் சிறிதுநேரம் வாதித்து அதனால் அசைக்கக் கூடாமைகண்டு, அவரை நோக்கி "நீயோ சிறுபிள்ளை. உன்னோடு சாஸ்திர வாதம் செய்வது சரியன்று. குருவியின் தலைமேல் பனங்காயை வைப்பது போல உனக்கு அதிசபிரயாசைதர எனக்குச் சம்மதியில்லை. நீயே எந்த விஷயத்தைப் பற்றியாவது கேள், அதற்கு நான் பதிலுரைக்கிறேன்" என்று கபடமாகச் சொன்னான். யாமுனாரியரும் அதனால் தனக்குண்டான அநுகூலத்தை யறிந்தவராய் "என்னிடத்தில் உமக்கு எவ்வளவு அன்பு! எவ்வளவு தயை! முதலிலேயே உமக்கு இந்த ஆலோசனை தோன்றாமற்போயிற்று. முன்னமே அவ்வாறு செய்திருந்தால் சாஸ்திரங்களில் தக்க கேள்விகேட்க நீர் பிரயாசைப்படவும் நான் அவைகளை அநாயாசமாய்ப் பதிலுரைத்தால் உமக்கு மனமடியவும் நேர்ந்திராதே. நீர் சொன்னபடி செய்வதில் எனக்கு மிக்க விருப்பம். நான் "ஆம்" என்று கூறும் மூன்று சங்கதிகளை "அல்ல" வென்று மறுப்பீரானால் என்னை ஜயித்ததாக ஒப்புக்கொள்ளுகிறேன். உமக்குச் சம்மதிதானா?" என்றார். அரசனும் நிபந்தனை நியாயமாகவும் வித்வானுக் கனுகூலமாகவு மிருப்பதாகச் சொன்னார். வித்வானும் சம்மதித்தார். ஆயினும் கேள்விகள் கேட்டதும் அவருக்கு மிக்க ஆச்சரியமுண்டாயிற்று.

முதற்கேள்வி. யாமுனாரியரும் அவ்வித்வானைப் பார்த்து, "ஐயா உமது தாய் புத்திரவதி என்கிறோம். உமது வாக்கு வல்லமையால் அவள் புத்திரவதி யல்லவென்று மறுத்துவிடும், பார்ப்போம்" என்றார்.

வித்வானும் அவ்விஷயத்தைக் குறித்து நெடுநேரம் ஆலோசித்துத் தாய் எவ்விதத்திலும் மறுக்கக்கூடாமையை அறிந்தார். என்னைப் பெற்றதாய் மலடியென்று வீண் குதர்க்கம் செய்வேனேயானால் பார்ப்பவர்கள் 'நீ அவள் கர்ப்பத்திலிருந்தும் பிறந்து குட்டிச்சுவர்போல நிற்க வாய்கூசாமல் அவளை மலடி என்று பிரத்தியட்சவிரோதமாக வி[illegible]டாவாதம் செய்கிறாயே' என்பார்களே, அதற்கு என்ன உத்தரம் சொல்லுகிறது. வாய் திறவாது மௌனமாயிருத்தலே மேலென்று கருதி வெட்கத்தினாலே தலை குனிந்து நின்றார். "ஏனையா, ஒன்றும் பதிலுரைக்கவில்லை" என்று யாமுனாரியர் கூறவும் வித்வான் வாய்திறவாதிருந்ததால் அங்குள்ள ஜனங்களெல்லாம் சந்தோஷத்தால் ஆரவாரித்தார்கள்.

(இன்னும்வரும்.)

---



## காஞ்சனமாலை.

(ஓர் கதை.)

### அத்தியாயம் - க.

சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்தமுத்தி யருவுருவத்
தன்மைநாம
மேதுமின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும் பிரிவறநின்
றியக்கஞ்செய்யும்
சோதியைமாத் தூவெளியை மனதவிழ நிறைவான
துரிய வாழ்வைத்
தீதில்பர மாம்பொருளைத் திருவருளே நினைவாகச்
சிந்தைசெய்வாம்.

தாயுமானவர்.

**காலம்** மாலை. திருமாலுருவம்போல் நீலமான ஆகாயத்தில் நுட்பமான வெள்ளியமேகங்கள் சர்ப்பிணிஸ்த்ரீகள் போன்று அலஸமாய் அசைந்து அசைந்து சஞ்சரித்தன. பறவைகளைக் கணக்கிடவென்னச் சிவந்தசூரியகிரணங்கள் மரக்கிளைகளில் காணப்பட்டன. வழியே வரும் சாதுஜனங்களுக்கு எச்சரிக்கை செய்வதுபோலும் காக்கைகள் கா, கா, வென்று கூசலிட்டு இங்கு மங்கும் பறந்தன. அந்தணர்விடும் அர்க்கியபத்மங்களின் வாசனைபொருந்தி நுரைவரிசைகளாகிற முத்துச்சரங்கள் பூண்டு தெள்ளியநீரின் சோபையாகிய வெண்பட்டுடுத்துச் சகலலோகபாவனையான கங்கை பத்மினிஸ்திரீபோல் மெல்ல மெல்லப் பிரவகித்தனள். அந்நங்கை கங்கைதன் லாவண்யநீரில் தன் ஒளி யிழந்தவன்போல் மங்கியவெண்ணிறத்தனாய் சந்திரன் கீழ்த்திசையிற் றோற்றினான். துஷ்டர்கள் வெளிப்படும் காலமென்று பயத்தினாற்போலும் பிரயாகைநகர் அரவமின்றி யடங்கியிருந்தது.

தக்ஷிணவாஹினியாய் அங்கு வரும் கங்கையின் கரையோரமாய் ஓர் சாலை, அதன் விஸ்தீர்ணம் சுமார் 2-மயில் இருக்கலாம். அச்சாலையின் நடுவிலுள்ள கீர்த்திஸ்தம்பத்தினின்று தென்புறம் நோக்கின், தீயர்மனவிருள்போற் கருத்தநீருடன் ஆழ்ந்ததன்மையளாய் அந்தகன் தங்கை யமுனை கங்கையின் வேகத்திலடங்கிய ஒட்டத்துடன் காண்ஸ்டபில் கைப்பட்ட திருடிபோல் தென்படுவாள். வடபுறத்திலோ சற்றுதூரத்தில் சரணாகதவத்ஸலன் சாருதத்தனது பழயமாளிகை உயர்ந்து காணப்படும். இவ்வெல்லைக்கட்டுக்கு நடுவான சாலையினொருபக்கத்தில் சாதுக்கள் மனம்போல் தெளிந்த நீருடைய கங்காநதியும் மற்றைப்பக்கத்தில் பிரயாணிகள் கண்ணைக்கவரும் பலபுஷ்பங்கள் நிறைந்த உத்தியானவனமுமே புலப்படும்.

அவ்வனத்தில் பறித்த சிறந்தபூக்களால் நிறைந்த ரத்னபாத்திரத்தைக்கையிற்கொண்டு, வனதேவதைகள்போல் புஷ்பங்களையே தலை,மார்பு, கை, காது இவைகளில் ஆபரணமாய் அணிந்து, அத்தருவாயில் சாலைமீது இரண்டுமங்கையர் ஏறி வருவதைக் காணலாம். அவர்கள் பிடியின் நடையொடு விலாஸப்பார்வைகளால் நாற்புறமும் நீலோற்பலமலர்களை இறைத்துக்கொண்டு கல், கல்லென்று பாதநூபுரங்களொலிக்க வருவதைக் கவனித்தால் நிச்சயமாய் விலைமாதர்களென்றே யுரைப்பீர்கள்.

அந்நங்கையர் வடிவழகைச் சிறிது உற்றுநோக்கில் "எதிரில் கண்ணாடியில்லாமலே ஒருருவம் இரண்டாய்க்காணப்படுகின்றதே, இது என்னவிந்தை!" என்றையுறுவீர்கள். அவர்களுடன் சிலகாலம் பழகினவர்கள் மாத்திரமே இருவரையும் சகோதரிகளென்றறிவார்கள். குறைவற்ற அங்கங்களின் பொலிவையே அவர்களது புதிய யவ்வனதசையை யுரைக்கும். அம்மாதர்கள் வயதில் தெய்வகன்னியராவர். சரத்காலமேகம்போல் வெளுத்ததாய் மின்னல் கம்பிகள் போன்ற கரையுடையதாய் வெண்பட்டாலாய சேலையுடுத்திருந்தார்கள். சிவப்புப்பொட்டுகள் பொருந்திய பச்சைரவிக்கைகள் பத்மராகங்களிழைத்த மரகதக்கவசங்கள் போன்று அவர்கள் மார்பில் வேயப்பட்டிருந்தன. காரிருள் போன்று சுருண்டு நெருங்கிய அம்மின்னார்தம் கூந்தல் மனோகரமாய் வாரிப் பின்னப்பட்டு வாசனைப்பூச்சின் நறுமணம் வீசியது. சுகந்தங்களுக் கிருப்பிடமான பிரயாகையில் வாழு மாதர்கள் அத்தர் புனுகு முதலிய வாசனைத்திரவியங்கள் பலவும் சேர்ந்த சந்தனம் பூசியிருந்தார்கள் என்று சொல்லவும் வேண்டுமோ?

வானவில்லின் பல வர்ணங்களையும் இடைவிடாது வர்ஷிக்கும் நீருள்ள ஐந்து வைரக்கற்களிழைத்த கம்மல்கள் காதிலும், சந்திரனைப்பழிக்கவல்ல வெண்ணிலாவீசும் முக்தாஹாரங்கள் மார்பிலும், பூவுலகத்திலேயே மூல்யமாய் வாங்கக்கூடிய அரியநவரத்னங்களிழைத்த பாடலிகள் கையிலும், சொக்க வெள்ளியாலாய நாலவிட்ட முத்துக்களுடைய பாதசரங்கள் காலிலும் பூண்டிருந்தார்கள் என்றால் அவர்களது விபவத்தை வர்ணிக்கவும் கூடுமோ?

படிப்பவர்காள்! அந்நங்கையர் யாவரென்றறிவீர்களா? அவர்களுள் மூத்தவள்; அவளை இன்னாளென்று சொல்லவேண்டுவதில்லை. தயை, தாக்ஷிண்யம், நன்றி, விசுவாசம் முதலிய பல நற்குணங்களுக்கு மிருப்பிடமாய் பெண்கள் நாயகமாய் விளங்கும் காஞ்சனமாலையை அறியாதார் எவரோ?

ஜாதியில் வேசியாயினும் உத்தமஜாதிபோல் மேலோர்மனதையும் கவரும் குணமணி. தீனர்களாகிற கதிர்களைச் சீராய் வளரச்செய்யும் தினமணி. சாருதத்தன் கண்மணி. உலகோர் மெச்சும் பெண்மணி. வேசி ஜாதியில் பிறந்ததனால் தோஷமென்ன? குப்பையிற்கிடந்தாலும் மாணிக்கம் மாணிக்கமே. அரக்கர் குலத்திற் பிறந்தவளாயினும் திரிஜடையைப் புகழாதவர் யாவர்?



சம்பகமாலை எனப் பெயர்கொண்ட இளையவள் பிறப்பினாற்போலவே குணமுதலியவைகளாலும் இவளுக்கு உடன்பிறந்தவளே யாவாள்.

கவனியுங்கள்! கவனியுங்கள்! நமது சம்பகமாலை ஏதோ கேழ்க்க இச்சை கொண்டவளாய் அக்காளை அடிக்கடி புன்சிரிப்புடன் பார்க்கின்றாள். பேசவாயெடுக்கின்றாள். மறுபடி லஜ்ஜை கொண்டவளாய்த் தலைப்பினால் முகத்தை மூடிக்கொள்ளுகின்றாள்.

காஞ்சனமாலையோ ஏதோ ஆழ்ந்தயோசனை யுள்ளவள் போல் காணப்படுகின்றாள். பெருமூச்சு விடுகின்றாள். ஆகாசத்தை வெறித்துப் பார்க்கின்றாள். தானாய்ச்சிரிக்கின்றாள். கண்ணில் நீர் ததும்புகின்றது.

இப்படிச்சிறிது நேரமிருந்தபின் காஞ்சனமாலை நிச்சயம் கொண்டவள் போல் வாய் திறந்து பேசவாரம்பிக்கச் சகோதரிகளுக்குப் பின்வருமாறு சம்பாஷணை நேர்ந்தது.

காஞ்ச. சம்பகம், அப்புறமென்னடி?

சம்ப. அக்கா, என்ன; ஒன்றும் சொல்லாமல் திடீரென்று அப்புறமென்ன என்கின்றாயே?

காஞ்ச. நான் என்னடி சொன்னேன்?

சம்ப. அப்புறம் என்ன என்றாய்.

காஞ்ச. அப்படித்தான்போ.

சம்ப. அக்கா, கோபங்கொள்ளாதே.

காஞ்ச. சம்பகம், என்னடி அப்படிச் சொல்லுகின்றாய்; உன்னிடத்தில் கோபங் கொள்வேனா?

சம்ப. ஒன்று கேட்கின்றேன் கோபிக்காதே?

காஞ்ச. என்ன, மறுபடியும் அப்படிச் சொல்லுகின்றாயே.

சம்ப. என்னமோ நினைத்துக்கொண்டு அழுகிறாய், மூச்சுவிடுகிறாய், சிரிக்கின்றாய் அதென்ன. எனக்குச் சொல்லக்கூடாதா?

காஞ்ச. கண்ணே, சம்பகம், ஒன்றுமில்லை.

சம்ப. அக்காள், மறைக்கவேண்டாம். "அகத்தினழகு முகத்தில் தெரியு" மென்றபடி உன் முகத்தின் தோற்றமே பாதி வெளியாக்கிவிட்டது. எனக்குச் சொன்னால் வெளிவிடுவேனென்று நினைக்கின்றாய். அப்படியென்னிடத்தில் நம்பிக்கையில்லாவிட்டால் சொல்லவேண்டாம்.

காஞ்ச. ஏதாவதிருந்தால் உன்னிடம் சொல்லாமலிருப்பேனா? என்ன, சம்பகம், இவ்வளவு கோபிக்கின்றாய்?

சம்ப. நல்லது அதிருக்கட்டும். நேற்றுக் காசிராஜன் மகன் கீர்த்திவர்மன் வீதியில் பவனிவரும்போது உன்னைக்கண்டு ஆசையொடு பார்த்தவண்ணமே சென்றான். அவனைவிரும்பிச் சோர்கின்றாய்போலும்?

காஞ்ச. சீ, என்சம்பத்துக்கும் கவுரவத்துக்கும் அவனொருபொருளா? குங்குமஞ்சுமந்த கழுதையன்றோ அவன்? ஒரு தானமா, தர்மமா, சாதுக்களிடத்து இன்சொல்லா? என்னகாரணத்தைக்கொண்டு அவனை இச்சிப்பது. சீ சீ, அவனை நினைத்தலே பாவம்.

சம்ப. அல்லது பிரயாகைராஜன் மைத்துனன் குரூபன் உனக்கொரு கடிதமனுப்பி யிருந்தானே. அவன் இன்னம் வரவில்லை என்றோ ஆலோசிக்கின்றாய்?

காஞ்ச. அய்யோ, சோற்றுத்துருத்தியன்றோ அவன்? பாபி, அவனை நினைத்தமாத்திரத்தில் என் அங்கம் பதறுகிறது. என்ன துணிச்சலுடன் எனக்குக் கடிதமெழுதியிருக்கின்றான்! மரியாதை தெரியாத மடையன். துஷ்டர்கள் எதுதான் செய்யார்கள்?

சம்ப. ஆனால் அவனுடன் வசிக்கும் ஜயதேவஸ்வாமியைத்தான் மனதினால் எழுதுகின்றாய் என்று நினைக்கின்றேன்?

காஞ்ச. எனது குருஸ்தானமாயுள்ளவர் அவர். பகவத்பக்தசிரோன்மணிகளுள் உயர்ந்தவர். சம்பகம், நீ சொல்வதும் சரியே. இத்தகைய பாகவதரத்தினங்களையே இருதயகமலத்தில் எழுதி அநுதினம் தியானித்தல் வேண்டும். வீட்டுக்குச் சென்றவுடன் அம்மகானெழுதிய கீதகோவிந்தத்தில் ஒருபாடல் பாடுகின்றாயா?

சம்ப. அவசியம் பாடுகின்றேன். அவருமில்லை, இவருமில்லை என்று உரைக்கின்றாய், ஒருவரையும் நீ நினைக்கவில்லையா இப்பொழுது?

காஞ்ச. சம்பகம், பரிகாசம் பண்ணாதே. போன சனிக்கிழமை வேணிமாதவ தரிசனத்துக்குப் போயிருந்தோமே. ஞாபகமிருக்கின்றதா?

சம்ப. ஆம், ஆம்; ஞாபகம் வருகிறது. சத்குணநிதி சாருதத்தர் அச்சமயம் பத்னி ஸத்யவதியுடன் சேவைசெய்ய வந்திருந்தார். அவரை விசேஷமாய்ப் பார்த்தனை. அவரைத்தான் காதலிக்கின்றாய் என்று நினைக்கின்றேன். அப்படியானால் உன்காதல் புகழத்தக்கதே. ரோகிணி சந்திரனிடத்தே சேரவேண்டும்.

"சம்பகம், உன்னை மெச்சினேன்" என்று மகிழ்ச்சியுடன் பதிற்சொல்ல வாரம்பித்த காஞ்சனமாலை ஏதோ நினைவுவந்தவளாய் "சம்பகம், தோட்டத்தின் வாயிலிலுள்ள பளிங்குமேடையில் எனது கைகுட்டையை மறதியாய் வைத்து வந்துவிட்டேன். சற்று இங்கேயே நில். இதோ ஒருநொடியில் வந்துவிடுகிறேன்" என்றாள்.

"அக்கா, மத்தியானமெல்லாம் நர்த்தனம் பயின்றவளாதலின் நீ மிகவும் களைப்புற்றிருப்பாய். ஆதலின் நீ இங்குதானே இருந்து சற்று இளைப்பாறு நானிதோபோய் கொண்டுவருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே காஞ்சன



மாலையின் பதிலையும் கவனியாது சம்பகமாலை உத்தியானவாயிலை நோக்கி வேகமாய்ச் சென்றனள்.

இதற்குள் சூர்யாஸ்தமனகாலம் கிட்டியது. திடீரென்று காஞ்சனமாலையின் வலதுகண் படபடவென்று துடித்தது. அருகிலிருந்த புளியமரத்தினின்று ஆந்தையொன்று பயங்கரமான பார்வையுடன் ஒருமுறையுறைந்து மறைந்தது. நரியிடமாச்சுது. காஞ்சனமாலை மனந்தளர்ந்தாள். 'கேடுவரும்பின்னே மதிகெட்டுவரும் முன்னே' என்றபடி தெரியாத்தனமாய் சம்பகத்தைத் தனியே அனுப்பினேனே; என்ன பிசகு செய்தேனென்றேங்கினாள். சம்பகத்தைக் குறித்துச்செல்வோமென்று காலெடுத்து வைத்தாள். காலெழவில்லை. என்னென்னவோ யோசித்தாள். நான்கு திக்கிலும் திரும்பித் திரும்பிப் பலமுறை பார்த்தனள். ஒன்றும் தோன்றாமல் சித்திரப்பாவைபோல் சற்றுநேரம் நின்றனள். இவ்வளவு மாறுபாட்டுக்குக் காரணமின்னதென்று மேலும்மேலு மாலோசித்து மறிந்தாளில்லை.

இந்தஸ்திதியிலி வளிருக்கையில் தென்திசையிலிருந்து துடுப்பினாலடிபட்ட கங்காஜலத்தினொலி பலமாய் காதில்பட்டது. ஏதோ ஓடமொன்று வருகின்றதென்று நிச்சயித்தாள். யாருடையதாய் இருக்கலாமென்று சிறிதுநேரம் யோசித்தாள். ஒருவேளை சாருதத்தனது ஓடமாயிருக்கலா மென்றெண்ணினாள். இதற்குளவ்வோடம் காஞ்சனமாலைநி[illegible]ஸமீபமிடம்வந்து கரையோரமொதுங்கியது.

ஓடம் கரையிற் [illegible]டு' ஓடக்காரனொருவன் காஞ்சனமாலையிடம் வேகமாய் வந்து "அம்மா, இறங்கிவாங்க" என்றான்.

"எதற்கடா?" என்றாள் காஞ்சனம்.

"எசமான்க கூப்பிட்றாக" என்றான் நாவிகன்.

"உன் எஜமான் யாரடா?" என்றாள் காஞ்சனம்.

"மகாராசா மச்சானிருக்கிறாரில்லே குருபர்" என்றான் அவனும்.

குரூபன் என்னும் பெயர் ஈயத்தை யுருக்கிவிட்டதுபோல் காஞ்சனத்தின் காதில்படவே திடுக்கிட்டாள். புலியைக்கண்ட மான்போல் பதைத்தாள். அம்மா, சம்பகம், நீயாவது தப்பியோடடி என்றலறினாள். தெய்வமே, என்று சோர்ந்தாள்.

"வறாளா இல்லையா? கேள்" என்றான் ஓடத்திலிருந்தபடி துஷ்டன் குரூபன்.

"எசமான் கோபிச்சுக்கறாக. பேசாதே வந்துடுங்க" என்றான் நாவிகன்.

கண்ணில் தாரை தாரையாய் நீர்பெருக "நான் வரமாட்டேன் போடா" என்றாள் காஞ்சனம்.

"வரமாட்டேனென்கிறாக" என்று நாவிகன் போய்ச்சொன்னதும் குருபன் அவனுக்குக் கும்பகோணத்தையர் வேலைசெய்யும் சுமதி என்னும் பிராமணனை நோக்கி "ஐயரே, நான் முன்னாலேபோறேன், எப்படியாவது அவனை இட்டுக்கிட்டு வந்துடுங்க. இதோபாருங்க, பூர்சைததோப்பு. விட்டுடப்போறீங்க" என்று ஜாடைசொல்லிப் பரிசளிப்பதாய் 500 பவுன் எடுத்துக்காட்டி அவனை இறக்கிவிட்டு ஓடத்துடன் வடக்கு நோக்கிச் சென்றான்.

இன்னும் வரும்.

---

## சோபாமணி.

கடலாடை சூழ்ந்த நிலமாமகட்கு வதனம்போல் விளங்கும் இந்து நாடாகிய இந்த நாட்டுக்கு மேல்பால் நெடுந்தூரத்தில் பன்னூறுயோசனை கடந்து ப்ரஷ்யா (Prussia) எனுமொரு நாடுண்டு. கல்வி, செல்வம் முதலியவற்றால் குறைவின்றி நிறைந்த அந்நாட்டிற்குப் பல்வகையாலுஞ் சிறப்புற்ற பெர்லின் (Berlin) என்பது தலைநகராயது. எந்நாட்டிலுள்ளாரும் முன்னாட்டுத் தகைமைவாய்ந்த அந்நாட்டினை ஆட்சிசெய்து வந்தவன் ப்ரெடரிக் (Frederic) எனுமொரு தோன்றல். அவ்வேந்தன், இவருமினி (Saxony) நாட்டைப் படையெடுத்து வென்றபின், அதன் தலைநகராகிய ட்ரெஸ்டன் (Dresden) நகரத்துக் கைத்தொழிலாளிகளை ப்ரஷ்யா நாட்டுப் பிரதானபுரியாகிய பெர்லின் நகரத்திற்குக் குடியேறப் பலாத்கரித்தான். தம் நாடு நகரங்களையும், வீடு வாயில்களையும், உறவினர் நண்பினரையும் துறந்த இந்நிர்ப்பாக்ய ப்ராணிகள், தமது நாடொழிந்து வேறுநாடடைந்தும், தம்மைச் சிறைகொண்ட வேந்தனதிருக்கும் செல்வத்துக்குமே உழைக்க விதியாயிற்றே யன்றித்தமக்கென இன்பமேனும் இலாபமேனும் ஏதுங்கண்டாரில்லை. இவ்வடிமைத் தொழிலாளிகளுள் [சோபாமணி] சோபியாமான்ஸ்பீல்ட் (SophiaMansfield) என்றொரு பெண்மணியுண்டு. இவள்பெயரை நம்மவர் எளிதில் உச்சரிக்கக்கூடியதாக இக்கதையில் இவளுக்குச் சோபாமணி யென்னும் பெயரிட்டுவைப்போம். அவளுடைய இளமையும், ரூபலாவண்ய சௌந்தரியமும், அறிவும், அடக்கமும் அச்ச முதலிய மற்றை நற்குணங்களும் கண்டோர் கண்ணையுப் கருத்தையும் கவரத்தக்கவையா யிருந்தமையால் அவளிடத்து



அனைவரும் அன்பும் ஆசையுமுடையராயினர். பெண்களுக்கு 'மெல்லியல்' என்றபெயர் அவளுக்கே அமைந்தது என்னலாம். கள்ளங்கவடற்ற உள்ளமுடையவள். 'வெளுத்ததெல்லாம் பால் கறுத்ததெல்லாம் நீர்' என்றெண்ணும் தன்மையள். அச்சிறுமி மெய்ம்மைக்கு அணிகலம். பொய்ம்மைக்குப் பெரும்பகை. பொறுமைக்கு உறைவிடம். புகழுக்கு நல்வாழ்வு. "அன்னையும்பிதாவு முன்னறிதெய்வம்" என்னும் முதுமொழிக்கு இலக்கியமாய், பெற்றோரைத் தெய்வமெனப்பேணும் இயல்புடையள். பலசொல்லியென் ? எல்லா நற்குணங்களும் அவளை யடைந்தே நலமுற்றன என்பது பொருந்தும்.

இதுநிற்க. ப்ரெடரிக்ராஜன் ஸாக்ஸனி நாட்டிலுள்ள மீஸன் (Meason) என்னும் பட்டணத்துக் கைத்தொழிற் சாலையைப் பார்க்கவந்த காலையில் அம்மாது தனது சொந்த யுக்திபுத்தியாற்செய்த சில புதுமையான வர்ண மட்கலங்களைக் கண்ணுற்றான். கண்ணுறலும் அவற்றின் அழகுக்கும் தொழிற்பாட்டுக்கும் வியப்புற்று, அப்பெண்ணை அந்நகரினின்று தன்னகர்க்குக்கொண்டுபோகத் தீர்மானித்தான். ஆயினும் அவள் பெர்லின் போந்தநாள் தொட்டு முன்போல உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் யுக்தியோடும் வேலைகள்செய்திலள். ஆண்டுச் சீனமண்ணில் பல்வகைப்பண்ணமைந்த புதுக்கலங்களியற்றுவதும், அவற்றிற்கு வருணந்தீட்டுவதுமே அவளுக்கு அமைந்தபணி. அப்பணியை முன்போல அத்துணைச் செவ்விதாகச் செய்யத் திறமைதானில்லையோ, சிந்தைதானில்லையோ, யாதுகாரணத்தாலோ இயற்றிலள். அவள் அமைத்த உருக்கள் அந்தக்கேடாயும் இருந்தன. அச்சித்திரத்தொழிற்சாலை விசாரணைத்தலைவன் தன்னால் இயன்றவரை அவளை உற்சாகமூட்டவும், ஊக்கமுண்டாக்கவும் புரிந்த பன்முயற்சியும் பயன்படாவாயின. அச்சிறுமியும் விசனமும் விசாரமும் உள்ள உள்ளத்தளாய், கடனீரைக் கையாலிறைப்பார்போல நாள்முழுதும் ஏதேதோ எண்ணாதுமெண்ணி ஏக்கமுற்றிருப்பாள். அதுகண்டு, அவ்விசாரணைத் தலைவன் அப்பெண்பால் அன்பால் வேந்தன் மறுமுறை தொழிற்சாலையை நோக்கவருங்கால் அவளுடைய பிடிவாதத்தையும் சோம்பலையுங் குறித்து அவனுக்கு அறிக்கைசெய்வதாக அவளை அச்சுறுத்தினன்.

இங்ஙனம் சிலநாள் செல்லாநிற்க, ஒருநாள் காவலன் கைத்தொழிற்சாலையைக் காணவந்தான். அவன் கருத்தைத் தொழில் கொள்ளத்தக்க காரியங்கள் பலவுளவேனும் பெர்லினில் சீனா மட்கலத்தொழிலைச் சீர்நிலைக்குக் கொணரச்சிந்தையில் தீரா விருப்பங்கொண்டிருந்தமையால், அவன் அத்தொழிற்சாலையைத் தான் பன்முறை நேரில் கண் ஆணியிட்டுப் பார்த்து வந்தான். அவன் தன்னாட்டு யூதரை ஒருங்குசேர்த்து அவர்களைக் கைத்தொழிலிற் பயிற்றவேண்டுமென ஒரு நகைக் கேதுவான எண்ணங்கொண்டான். அவர்கள் கைத்தொழில் அவலக்ஷணமாயிருந்தமையின் அக்காட்சி காண்போர்க்கு விநோதமாய்த் தோன்றினும், அரசன் அதனைப் பொறுக்கலாற்றாது மனங்குன்றிக் குணமாறி, வந்தகாரிய முடிந்த அக்கணமே தனது மாளிகைக்கேகி அற்றைப்பகல் முற்றும் புறப்படாதிருந்தான். அதற்கு முன்னாள் சீனாமட்கலவேலையிற் சில திறஞ்செய்து பார்க்கக்கருதி, கௌந்தலஹாரன் என்பவனிடம் சிலநாள் தங்கி, அதனைப்பற்றி விஜயவித்தன் என்பவன்பால் பலசங்கதிகள் கற்றுணர்ந்த ஓராங்கில யாத்திரிகன் ப்ரெடரிக் ராஜனைக் கண்டிருந்தமையால் அம்மன்னன் யூதர் கைத்தொழிற்காட்சியை அற்றைக்காலை தன்னுடனிருந்து கண்டு களிக்குமாறு அவனை அழைத்திருந்தான். அங்ஙனமே ஆங்கிலனும் ஆண்டைச்சென்றிருந்தனன். தன்தேயத்தவர் பெருமை யொன்றனையே பெரிதுநாடிய ஆங்கிலப்பிரயாணி ப்ரஷ்யாநாட்டுச் சீனாத்தொழிற்சாலையிற் றன்னைச் சந்திப்பதாகச் சொல்லியிருந்த சில கனவான்கட்குத் தன்னிடமுள்ள ஆங்கில வேலைப்பாடுகளைக் காண்பிக்கச்சென்றான்.

அக்குழாத்துள் சற்றேறத்தாழப் பதினேழாட்டைப் பருவத்தன் அஹஸ்கலாவான் என்பானொரு வாலிபன் இருந்தனன். அவன் போலந்துநாட்டிற் பிறந்தவனாயினும் ப்ரஷ்ய பாஷையிற் படித்துத் தேறினவன். அவ்விளைஞன் கற்றுத்தேர்ந்தது போஸ்டன் பட்டணத்து இராணுவபாடசாலையில். ப்ரெடரிக்ராஜன் அப்பிள்ளையை மகாமேதாவியென நன்குமதித்திருந்தனன். அச்சிறுவன் ப்ரெடரிக் ராஜனுடைய சற்குணங்களையும் துர்க்குணங்களையும் உள்ளவாறு தெள்ளத் தெளியத் தெரிந்திருந்ததுமன்றி அவற்றைப் பிள்ளைமதியால் கள்ளங்கவடின்றிப் பல்லோரறியப்



பகர்ந்தும் வந்தனன். அவன் அரசனைச்சுட்டி ஆங்கிலப் பிரயாணியோடு உரையாடிவருங்கால் "தன்னரசியற்றும் மன்னவன் குடிகட்குச் சௌக்கியமில்லை" என்றுரைத்து வந்தான்.

"தன்னரசியற்றும் மன்னவன்! அன்னவொரு மன்னவனைக் கொடுங்கோலன் எனக்கூற வொண்ணாதோ? 'கொடுங்கோல் மன்னர் வாழுநாட்டிற் கடும்புலிவாழுங்காடுநன்றே' என்றுங் கூறியுள்ளாரே" என்று அஹஸ்கலாவானோடு ஆங்கிலன் சொல்லிக்கொண்டே பெர்லின் சீனாவேலைச் சாலைக்குள் நுழைந்தான். நுழைதலும் அதனைப்பார்த்து, இத்தொழிற்சாலை நன்னிலைக்கு வருமென்பதில் ஐயமில்லை. இதுகாறும் ட்ரெஸ்டென்சீனா! ட்ரெஸ்டென்சீனா! என்றதெல்லாம் இனிச் சிலநாட்களில் பெர்லின் சீனா! பெர்லின்சீனா!! என யாவரும் புகழ்ந்து கொண்டாடிப் புகலும்படியாகும். அன்றியும், இஃது உலகிற்கு மிகப்பயன் செய்யத்தக்கதென்றே தோன்றுகின்றது. இதுநிற்க, இங்கேபார்! போரிற் பிடிபட்ட நிர்ப்பாக்கியப் பிராணிகளின் முகத்தை நோக்கும்போதே உங்களரசன் சரிதம் நன்கு விளங்குகின்றதே!" என்று அவ்வாங்கிலன் அஹஸ்கலாவானோடு அதிரப் பேசினான்.

உள்ளவாறே அத்தொழிலாளிகளின் முகங்களில் மிக்க விசனமும் விசாரமுங்காணப்பட்டன. "அடுத்தது காட்டும் பளிங்குபோனெஞ்சங்-கடுத்ததுகாட்டுமுகம்" என்பதுபொய்யாமொழியன்றோ? அவ்வாங்கிலன் சோபாமணியைச் சுட்டிக்காட்டிப் பின்னுஞ் சொன்னதாவது: "துயரே வடிவெடுத்ததுபோற்றோன்றும் அப்பெண்பாவையைப் பார்த்தையா! விசாரணைத்தலைவன் அருகினிற்கும்போதும் எவ்வளவு வெறுப்போடு வேலைசெய்கிறாள்பார். இப்படித்தான் உங்களடிமைகளெல்லாம் உறுதுயர் நுகர்ந்து உழைக்கின்றனர். எங்கள் ஆங்கிலக் கைத்தொழிலாளிகள் (நீ அவர்களைப் பார்த்தால் தெரியும்) வேலைசெய்யும் விதமே வேறு. என்னெனில், அவர்கட்கு இவ்வித நிர்ப்பந்தமில்லை. எல்லாரும் சுதந்திரர்கள்."

இதனைச் செவியுற்ற கலாநிதி "சுதந்திரரான ஆடவரும் மகளிரும் பிணியுறுவ தில்லையோ? அல்லது, ஆங்கிலராகிய நீங்கள் எப்பொழுதேனும் உடலம் நோயுற்றால், கொற்றவன்மேற் குற்றங்கூறுதல் இயல்போ? இப்பொழுது நீ காணும் இப்பெண்மணி ஏதோ உடல்நோயுற்றாளேயன்றி உள்ளநோயுற்றாளல்லள். அவ

ளுக்குற்றநோய் இன்னதென விசாரணைத் தலைவனைக் கேட்டறிகின்றேன்" என்றான்.

பின்னர், கலாநிதி விசாரணைத் தலைவனை நோக்கி, ஆங்கிலனறியா மொழியில் பல வினவி, அவற்றிற்கு அவன் விடுத்தவற்றை ஆங்கிலனுக்கு அறியாது மறைத்துவிட்டான். ஏனெனில், அரசனுக்கு வசையாகும் செய்திகள் எதையும் பிறர் அறிவதில் அவனுக்கு விருப்பமில்லை. ஆகவே, அவன் முன்னம் அவ்வாங்கிலனோடு உரையாடிவந்த சங்கதிகளை விட்டு மற்றொன்றைத் தொட்டுப் பேசலுற்றான். பரீக்ஷார்த்தம் ஆங்கிலன் செய்யும் வேலைகளைப்பார்த்துக்கொண்டு மற்றவரெல்லாம் அங்குள்ள உலைக்களத்தைச் சூழ்ந்திருக்கையில் நம் கலாவான் சோபாமணி தொழில் செய்துகொண்டிருந்த கூடத்திற்புகுந்து "பெண்ணே! உனக்கு உடம்பு என்னை? நீ இங்குவந்த நாள்முதல் பார்த்து மகிழத்தக்க வேலையாதும் செய்திலை யென்று விசாரணைத்தலைவன் குறைகூறுகின்றான். ஆயினும் இவ்வழகிய வேலை (அவள் செய்து ஸாக்ஸனியினின்று கொணர்ந்து வைத்திருந்த ஒரு கிண்ணத்தைச் சுட்டி) நினதுபுத்திசாதுர்யத்தாற் செய்யப்பட்டதன்றோ!" எனக் கேட்டான். அதற்கு அவள்சொன்னது: "ஆம் ஐயா! யான் செய்ததே, இந்தப்பாழ்ங்கிண்ணந்தான் என் துயருக்கு மூலம். இதனை அரசன் பார்த்திரானாயின், அல்லது இதன்கண் அவன் விருப்பங்கொண்டிரானாயின் யான் இப்பொழுதுகவலையின்றி——" இதனைக் கூறிமுடிப்பதன்முன் அவளுக்குத் தனது வீட்டின் ஞாபகம் தோன்றி அதனால் மனங்கொள்ளாத் துயரத்தால் வாய்தடுமாறி வார்த்தை சொல்ல வல்லளல்லளாய் மெய்மறந்து மயக்கமுற்றனள்——, உடனே அஹஸ்கலாவான், "நீ இப்பொழுது ஸாக்ஸனியிலிருப்பாயன்றோ!" என்றுகூறி, "ஸாக்ஸனியை மறந்தொழிவாய். நினக்கு இப் பெர்லினில் யாதுகுறை?" என்றான்.

அதற்கு அச்சிறுமி மிக்க வணக்கத்தோடு "யான் ஸாக்ஸனியை மறந்தொழியேன், யான் மிக்க பாசங்கொண்டுள்ள என் தாய் தந்தையரை எப்படி மறப்பேன்! எவ்வாறு துறப்பேன்! அவர்களோ முதிர்ந்தவயதும் தளர்ந்த நிலையுமுடையவர்கள். 'தந்தை தாய் பேண்' என்னும் சத்தியவசனத்தைச் சிந்தையிற்கொண்ட யான் அதனை எங்ஙனஞ் சிதறவிடுவேன்! அவர்கள் என் கையைப்



பார்த்துக் காலந்தள்ளுபவர். ஆகவே, எனது அன்புக்குரிய எதனையும்——எனது ஆசைக்கு விஷயமான எவரையும் மறவேன். மறப்போமெனினும் என்னால் இயலவில்லையே!" என்று உறுதியாக உத்தரங்கூறினாள்.

இன்னணம் அவள் சொன்னவுடனே, அயனின்ற ஒரு ப்ரஷ்ய பணியாள், "ஐயா, இவளுக்கு ட்ரெஸ்டனில் ஒரு நண்பனுண்டு. அவனை மணஞ்செய்துகொள்ள நிற்குந் தருணத்தில் இவளை இவ்விடத்திற்குக் கொணர்ந்து விட்டனர்" என்று மறைவாய் அஹஸ்கலாவானது காதிலோதினான். அதற்கு அவன் "அந்நண்பன் இவளோடு இங்குவராமை யென்னை?" என, வேலையாள், "அவன் பெர்லின் சிறைச்சாலையிலிருக்கின்றான். அவனைக் காட்டிவிடமாட்டீர் என நம்புகின்றேன்" என்றான்.

கலாவான்:—யான் எவரையுங் காட்டிக்கொடுத்ததுமில்லை; காட்டிக்கொடுப்பதுமில்லை. இங்ஙனமாக அபாக்கியரும் துணையற்றவருமான எளியரையோ காட்டிக்கொடுப்பேன். ஒருகாலும் அதுசெய்யேன். அஃதிருக்க; இவளுடைய துணைவன் ஏன் சிறையிருக்கின்றான்?

பாஸஹன்:—இவள் இனி அவனைத் தனதாசைக்கிசைந்த அன்பனென்று சிந்தையிலுங் கருதலாகாதென்பது அரசனாணை. ப்ரபுசித்தம் கனசித்தமன்றோ! அன்றியும், இந்த ஸாக்ஸனிப் பெண்களெல்லாம் பெர்லின் போந்தநாள் தொடங்கி ப்ரஷ்யமைந்தரையே மணக்கவேண்டுமென்ற கட்டுப்பாடுண்மையை நீங்கள் அறிவீர்களே. அவ்வாறே இச்சோபாமணி யென்னும் பெண்மணியும் ஒரு ப்ரஷ்யனுக்கு [illegible]வண்டுமென்று ஏற்பாடாகியுளது. அவனோ, இவள் [illegible]க்கிற் குடன்படாது இனிக் காலந்தாழ்ப்பளாயின் இவளது பிடிவாதத்தை ப்ரெடரிக் ராஜனுக்கு அறிவிப்பதாக உறுதிகொண்டு நிற்கின்றான். போதாக்குறைக்கு வேலைச்சாலை விசாரணைத்தலைவனும் இவள் ஒழுங்காய் வேலை செய்வதில்லையென்று அரசன்பாற் குற்றங்கூற ஆயத்தனாகி யிருக்கின்றான். இந்நிலையில் இவள் இன்னும் இவ்வாறே இருப்பளாயின் இவள்கதி யாதாகுமோ? அது நீங்களோ அறிவீர்கள். யாமும் இவளுக்கு இதனைப் பன்முறை யெடுத்துரைத்தும் பயனொன்றுமில்லை. இவளோ பித்துக்கொண்டவள்போ லிருக்கின்றாள். எவ்வாறாயினும் அரசனாணைக்கு அமைந்துநடத்தலே தகுதி. "வேந்தன்சீறி னுய்ந்துணையில்லை."

(இன்னும்வரும்.)

## நீலா.

தற்காலம் பெரும் பட்டணமாய் விளங்கும் மதராஸ் என்னும் ஊருக்கருகாமையில் சுமார் 80 மயில் தூரத்தில், பாலி வேகவதி யென்னும் ஆற்றங்கரைகளின் மேல், முன்னொரு காலத்தில் மிகப்பெருமையும் பிரசித்தியும் பெற்றுச் சோழராஜனுடையமுக்கிய நகரமாயிருந்ததாயும், நீர்வளம் நிலவளம் குடிவளம் பொருந்தியதாயும், பிர்ம்மா விஷ்ணு சிவன் என்னும் திரிமூர்த்திகளுடைய ஆலயங்கள் நிறைந்துள்ளதாயும், சுமார் ஐந்து மயில் சுற்றளவுள்ளதாயும், தெருக்கள் விசாலித்து ஆங்காங்கே அநேக மண்டபங்களும் ஆலயங்களும் கூடகோபுரங்களும் நதிகளுமுள்ளதாயும், பார்ப்பவர் கண்ணுக்கு ரம்மியமானதாயும், சகலபாபங்களையும் போக்கக்கூடிய அநேக தீர்த்தங்கள் உள்ள காஞ்சீ எனுமோர் நகர் இருக்கின்றது. இவ்வூரின் எல்லையில் ஈசுவரனில்லையென்னும் நாஸ்திகனும் அடிவைத்த மாத்திரத்தில் அவனுடைய கொள்கையை விட்டுவிடுவானெனில் இதனுடைய சிறப்பைபெடுத்துக்கூறவும்வேண்டுமோ! இப்பேர்ப்பட்ட பட்டணத்தில் சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் சைவசமயத்திற் சேர்ந்த மாணிக்கமுதலியாரென்னுமொருவர் இருந்தனர். அவருக்கு ஐந்து வயதிலேயே அவருடைய தகப்பனார் சிவபதமடைந்துவிட்டார். தன்னுடையதாயும் தானுமாய் சூரிய சந்திர நக்ஷத்திராதிகள் வாசம் செய்யும்படியான தன்னுடைய இல்லத்தில் குடியிருந்து, தாயார் அம்மணியம்மாள் காலையில் எழுந்து நித்தியக்கடன்களை முடித்துக்கொண்டு, பிள்ளைக்கு சாப்பாடிட்டு பள்ளிக்கனுப்பி தான் வெளியில் சென்று நெல் குத்தல், மாவரைத்தல் முதலிய கூலிவேலை செய்து கிடைத்ததைக்கொண்டு காலத்தைக் கழித்து வந்தார்கள். மாணிக்கமோ, தன்னுடைய நிலைமையை யறிந்து கல்வி நன்றாய்க் கற்றுக்கொண்டு எல்லாருக்கும் நல்லபிள்ளையென நடந்து வந்தான். இவனிடத்தில் அன்புள்ள சிநேகன் சங்கரன் என்போன். மிகப் பிரீதியுடன் பிரதிதினமும் காலையில் இருவருமாய் வித்தியாசாலைக்குச் சென்று தங்களுடைய பாடங்களைச் சரிவர உபாத்தியாயர் மனதுக்கு சந்தோஷம் வரும்படியாய்ப் படித்து வந்தார்கள். சாதாரணமாய் முற்காலத்தில் இப்பொழுது இருக்கிறமாதிரியான பாடசாலைகள் கிடையாவெனினும் ஆங்காங்கே அநேகர் வீட்டுத் தெருத்திண்ணையிலும் சத்திரங்களிலும் சுமார் 40 அல்லது 50 பிள்ளைகளை சேர்த்துவைத்துக்கொண்டு கல்வி கற்பிப்பது வழக்கம். ஒரு சிறுவன் படிக்க வித்தியாசாலையில் சேரும்போது சுவடி தூக்கவேணும். அதாவது கர்ப்பூரம் சாம்பிராணி வெற்றிலைபாக்குத் தேங்காய் காரரிசி வெல்லம் இவைகளை ஓர் தட்டில் வைத்துக்கொண்டு மேளவாத்தியத்துடன் புதுச் சுவடி (பனையோலையில் எழுதுகிறது) எழுதி சிறுவனுக்கு வித்தியாரம்பம் செய்து ஒரு தக்ஷணை கொடுத்து அன்றையதினம் பிள்ளைகளுக்கு விடுமுறை கொடுப்பது வழக்கம். காலையில் பள்ளிக்கு வரும்போது ஒவ்வொரு சிறுவனும்



இரண்டு விரட்டி கொண்டுவரவேண்டும். சனிக்கிழமைதோறும் சனியெண்ணெயென்று ஒவ்வொரு சிறுவன் வீட்டிற்குஞ் சென்று எண்ணெய் சேர்க்கவேண்டும். சனியெண்ணெய்க்குப்போகும்போது பிள்ளைகள் கையில் ஓலைத்துண்டுகள் வைத்துக்கொண்டு கையைக்கட்டி சனியெண்ணெய்ப்பாடல் பாடி அவரவர்கள் கொடுக்கும் எண்ணெயை ஓர் பாத்திரம் நிறைய சேகரித்து உபாத்தியாயரிடம் சேர்த்து, தங்கள் கையிலுள்ள ஓலை நறுக்குகளை ஒப்புவிக்க, யாதாமொருவனுடைய ஓலைத்துண்டு வெயர்வையில் நனையாமலிருக்குமாயின் அவனுக்கு அடி விழுவது நிச்சயம். ஆகையால் சிறுவர்கள் பயத்தினால் ஓலைத்துண்டுகளை வாயிலிட்டு ஈரமாக்கி உபாத்தியாயரிடம் கொடுப்பார்கள். பிரதி பௌர்ணமை, அமாவாசை தினங்களில் விடுமுறை விடுவது வழக்கம். இதற்கு முந்திய நாளில் பிள்ளைகளொவ்வொருவரும் தங்களில்லத்திலிருந்து அமுதுபடி கொண்டுவரவேண்டும். ஏழைப்பிள்ளைகள் கொண்டுவராவிடில் அவர்களை வெயிலில் நிற்கவைக்கிறது, நாற்காலிபுட்காரவைக்கிறது, கோதண்டம் போட்டு (விட்டத்தினுடைய உத்திரத்தில் ஓர் கயிற்றைக்கட்டி அதில் இரண்டு கைகளையும் கோத்துக்கொண்டு தொங்குதல்) கீழே நெருப்புக்கொளுத்தி அவனுடைய பின்பாகத்தில் பிரம்புகொண்டடிக்கிறது. ஐயோ! என்ன பரிதாபம்! இத்யாதி திண்ணைப்பள்ளிக்கூடத்திற்கு, பிழைப்புக்கு வழியில்லாத நொண்டியும் முடமும், தண்டனையடைந்தவனும், பிள்ளைகட்கு பாடங் கற்பிக்கும் சக்தியின்மை அற்பதனை சுபாவம், பொறாமை, பொருள் தேடுதலில் ஆசை, வஞ்சித்தல், கேட்பவர்க்குப் பயமுண்டாகும்படி பேசுதல், தனக்கு நிகர் யாருமில்லையெனும் அகம்பாவமுடைமையென்னுங் குணங்களுடையவர்களுமே போதனாசிரியர்கள்.

அந்தோ பாவம், நம்முடைய மாணிக்கம் இப்பேர்ப்பட்ட ஆசானிடத்தில் அகப்பட்டு என்னபாடு பட்டான். தனக்கோ மேற்கூறியசனியெண்ணெ யரிசி கொடுக்க சக்தியில்லாததனால் உபாத்தியாயர்செய்யும் கொடுமைகளைப்பொறுத்து சாந்தத்துடன் படித்துக்கொண்டு வந்தான். ஆனால் சில துஷ்டபிள்ளைகளோ அக்கொடுமை சகியாது அவர் உட்காருமிடத்தில் பள்ளம் பறித்து அதில் முள்ளுகள் வைத்து பீடமாகிய தடுக்கை மூடிவைக்கலாமென்று நினைப்பது வழக்கம். தவிரவும் உபாத்தியாயர் தூங்கும்போது பிரம்பையெடுத்து மூக்குச்சளியை கணுவுக்குக்கணுவு தடவி உலர்த்திவைப்பார்கள். அது தெரியாமல் விழித்து எல்லாரையும் பிரம்புகொண்டு புடைக்குந்தருவாயில் சுக்கல் சுக்கலாய் ஒடிந்துபோய்விடும். இவைகளையெல்லாம் மாணிக்கம் பார்த்துப் பொறுக்க முடியாமல் படிப்பை விட்டு காட்டிற்காகிலும் போய்விடலாமென்றெண்ணினான். ஆனால் தன்னைப் பத்து மாதஞ் சுமந்து பெற்று பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டி ஈ எறும்பு அணுகாவண்ணம் பாதுகாத்து தன்னால்

சுகமடையலாமென்றுள்ள தாய்க்காகவும், காட்டிற்குச்சென்றால் மிருகங்கள் தொந்திரவு அதிகமாயிருக்குமென்றும், தன்னுடைய ஆப்த சிநேகன் சங்கரனை விட்டுப்பிரிய மனமில்லாமலும், ஊரிலேயேயிருக்க நேரிட்டது.

மாணிக்கத்தின தாயோ வயது சென்றவளாகையால் வெளியில் கூலி வேலை செய்ய முடியாமல் வீட்டிலேயே யிருக்க நேர்ந்தது. அவளுடன் பிறந்த பச்சையப்பமுதலி சஹ்யாத்ரி மலையென்று வழங்கும்(Western Ghats) மேற்குத் தொடர்ச்சிமலைகளினடிவாரத்தில் காணூர் என்னும் ஊரில் இவனுடைய செல்வத்துக்குச் சரியொத்த செல்வம் யாருக்கும் கிடையாது என்னும் அகம்பாவத்தால் தன்னுடன்பிறந்தாள் படும் கஷ்டத்தையும் எண்ணாமல் உன்மத்தனாய் வசித்து வந்தான். இவன், மக்கட் பேறு இல்லாமையால் மிக வருந்தி அருகாமையிலுள்ள படைவீட்டம்மன் கோயிலுக்குப் பிரார்த்தனைகள் செய்தும் யாத்திரைகள் போயும் இன்னமுமுள்ள அநேக நோன்புகள் விரதங்களிருந்தும் கடைசியாய் ஓர் பெண் பிறக்க அக்குழந்தைக்கு நீலா எனப் பெயரிட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து சகலவிதமான வித்தைகளையுங் கற்பித்து வெகு செல்வமாய் வளர்த்து வந்தான். பெண்ணுக்கு யுக்த வயது வந்தவுடன் அடுத்த கிராமத்தில் சுப்பராயமுதலி குமாரன் ஏகாம்பரமுதலிக்குக் கல்யாணம் செய்ய எண்ணி தகுந்த ஏற்பாடுகள் செய்து நிச்சயித்துவிட்டான். ஆனால் நீலாவோ, 'என்னுடைய அத்தை மகனிருக்க அவனைவிட வேறொருவனுக்கா வாழ்க்கைபடவேண்டும். இதற்கு நான் உடன்படமாட்டேன். இப்பொழுது ஏற்பாடு செய்த ஊர் பெரிதா, கோயில் குளங்கள் உண்டா, "கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டா" மென்று ஔவை சொல்லியிருக்கிறாள். ஆகையால் யான் எவ்விதத்திலும் என்னுடைய அத்தானையே மாலையிடுவேனென்று தீர்மானித்து, தன்னுடைய தோழிகளில் வயது சென்றவளும், தன்னிடத்தில் மிகப் பிரீதியுள்ளவளும், நம்பிக்கையுள்ளவளுமான சுந்தரம் என்பவளைக் கூட அழைத்துக்கொண்டு ஓர் பையநிறைய திரவியம் எடுத்துக்கொண்டு இருவரும் ஆண் வேடம் பூண்டு விடிய ஒரு யாமமிருக்கும் வேளையில் யாருடனும் சொல்லாமல் இரண்டு குதிரைகளில் இருவருமேறிக்கொண்டு காட்டு மார்க்கமாய்ச் சென்று ஆரணியடைந்து ஓர் சத்திரக்காரனிடம் தங்களுக்குச் சாப்பாடும் குதிரைக்குப் புல்லும் போடும்படி ஏற்பாடு செய்து அவ்விடத்திலுள்ள கோட்டைக்குச்சென்று அங்கு உண்டான அதிசயங்களை பார்த்துக்கொண்டு இரண்டு நாள் தங்கி பிறகு பிரயாணப்பட்டார்கள்.

இவர்கள் காணாமற் போன சங்கதி ஊரெங்கும் பரவி மூலைக்கு மூலை ஆட்கள்சென்று தேடியும் அகப்படாமல் பச்சையப்பமுதலி முதலானவர்கள் ஏக்கம் பிடித்தவர்களாயிருக்க, அச்சமயத்தில் ஓர் பைராகி அவ்விடம் தோன்றி, அவர்களுக்குத் தேறுதல் சொல்லி இன்னும் எட்டுநாளில் உங்கள்பெண் அகப்பட்டிடுவாள். நீங்கள் எதற்கும் பயப்படவேண்டாம்



ஜோல்நாப்பையைத்திறந்து ஓர் குட்டிச்சுவடியை எடுத்து, ஸ்வாமியை தியானித்து இக்கயிற்றை இதில் போடுங்கள் என்று ஓலைச்சுவடியைக் கையில் பிடித்தான். பச்சையப்பமுதலியினுடைய மனைவி அக்கயிற்றை அவன் சொல்லிய வண்ணம் சுவடியில் மாட்டினாள். உடனே பைராகி, சுவாமி உங்கள் பங்கில் இருக்கிறார் பயப்படாதேயுங்கள் என்றுசொல்லி அதைவாசிக்கத்தொடங்கினான்.

நீங்கள் நினைத்த காரியம் இன்னும் ஆறுமாத
த்தில் பலிக்கும்-ஆனால் தெய்வகுற்ற மிருக்கி
றது-அதற்கு பூஜைபோடுங்கள்.

அவர்களுக்கு இதைக்கேட்டதும் கொஞ்சம் சந்தோஷம் உண்டாகி அவனுக்குத்தகுந்த பரிசு கொடுத்தனுப்பி விட்டார்கள்.

பச்சையப்பமுதலிக்கோ நீலாவின் ஞாபகமே அதிகமாய், ஏக்கம் பிடித்தவனாகி நீலா நீலா என்று ஊருராய் அலைந்து திரிந்து கொண்டிருந்தான்.

இச்சங்கதி கேள்வியுற்ற ஏகாம்பரம் நீலாவைத் தேடப்புறப்பட்டு ஊரூராய்த் தேடிக்கடைசியில் ஆரணியென்னும் ஊரில் ஓர் சத்திரத்தில் தங்கினான். நீலாவும் அவளுடைய தோழியும் இதே சத்திரத்தில்தங்கியிருந்தார்கள். ஏகாம்பரத்திற்கு நீலாவென்று சந்தேகம் தோன்றி அவளை எந்தவிதத்திலாவது ஊர்கொண்டு போகவேண்டுமென்று எண்ணி அதற்குத்தகுந்த பிரயத்தனங்கள் செய்துகொண்டிருக்கையில் நீலாவும் அவளுடைய தோழியும் பிரயாணமாகிக் காட்டுமார்க்கமாய்ப் போனார்கள். ஏகாம்பரம் தானும் அவர்கள் பின் தொடர்ந்தே போனான். அவர்கள் காட்டில் பசியால் வருந்தி ஓர் குளக்கரையில் செண்பகமரத் தடியில் குதிரைகளைக் கட்டிவிட்டு அயர்ந்து தூங்கி விட்டார்கள். அத்தருணத்தில் ஏகாம்பரம் தோன்றி தன் கையிலுள்ள பாஷாணத்தை அத்தடாகத்தில் கரைத்துவிட்டு குதிரைகளிரண்டையும் பிடித்துக்கொண்டு தன் ஊர்போய்விட்டான். அவர்கள் விழித்து எழுந்து தாகம் பொறுக்காமல் அச்சரசில் நீரருந்தி மூர்ச்சையாய் விட்டார்கள். இவர்கள் ஊருக்கடுத்தாற்போல் மலையாளம் என்னும் ஊரில் ஓர் கிழவி சஞ்சீவி மூலிகைகளிலும் வயித்தியத்திலும், மந்திர தந்திரங்களிலும் பேர் பெற்றவள். இக்காட்டின் வழியாய்ப் போய்க்கொண்டிருந்தவள் ஏதோ தெய்வச்செயலாய் இக்குளக்கரையிலுள்ள நந்தனவனத்தில் தங்கி அவ்விடத்திலிருக்கப்பட்ட பல ஜாதி பக்ஷிகளின் இனிய குரலின் ஓசையைக்கேட்டு ஆனந்தத்துடன் அங்குமிங்கும் திரிந்து ஆ! இந்தவனம் எவ்வளவு நேர்த்தியாயும் அழகாயும், மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, செண்பகம், கொன்றை, முதலிய புஷ்பச்செடிகளும், வாழை, கமுகு, தெங்கு, பலா முதலிய கனி விருக்ஷங்களும் நிறைந்து மனதுக்குக் குதூகலத்தைக் கொடுக்கிறது என்று எண்ணி நடக்கையில் அக்குளத்தைக்கண்டு மிக ஆனந்தத்துடன் சென்று பார்க்கையில் இருவர் படுத்திருப்பதைக் கண்டு அருகே சென்று பார்க்க மூச்சடங்கிப் பிரேதம்போலிருப்பதை நிதானித்து ஓர் பச்சிலையை அவர்களுடைய

காதில் பிழிந்தமாத்திரத்தில் கனவு கண்டதுபோல் திடீரென எழுந்து கிழவியைக்கண்டு ஆச்சரியமடைந்து அடிபணிந்து நாவெழாமல் நின்றவர்களை நோக்கி, நீங்கள் எந்த ஊர், எங்கே செல்லுகிறீர்கள், உங்களுக்கு வந்த விபத்து யாது என்று வினவ தாங்கள் காஞ்சிக்குப்போகப் புறப்பட்டதாயும் பசி தாகாதிகளால் வருந்தி இத்தடாகத்தில் நீரருந்தியமாத்திரத்தில் மயக்கம்போலிருந்ததாயும் அதற்குமேலொன்றுந் தெரியாதென்றும் சொன்னார்கள். கிழவி உடனே அக்குளத்தருகிற்சென்று நீரைச்சோதிக்கையில் அதில் விஷம் கலந்திருப்பதாகத்தெரிந்து அதைப்பிரித்து எடுக்கும்படியான ஓர் மூலிகையைச் சேர்த்து தான் ஓர் கை நிறையஜலத்தைமுகந்து உட்கொண்டு நந்தனவனத்திற்சென்று பல ஜாதிப்பழங்களைக் கொண்டுவந்து அவர்களுடைய பசியைத்தணித்து அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கையில் இவர்களின்னாரென்று தெரிந்து இப்படியாநேரிட்டதென்று மிகவிசனமுற்று சற்று நேரம் கழித்து கிழவி நினைத்தளவில் வருவதாய் வாக்களித்துச்சென்றனள். இவர்களும் போகஎத்தனித்துக் குதிரைகளைப்பார்க்கையில் காணாமல் தேடி வழிதெரியாமல், நெருஞ்சு, ஆனைநெருஞ்சு, கண்டங்கத்திரி, கீரைமுள்ளு, களா, கள்ளி, காரை, சூரை முதலிய முள்ளுகள் கால்களில் தைக்கவும், துணிகள் முட்களிலகப்பட்டு விடுவிக்கும் தருவாயில் கைகளில் முள்தைத்தும் துணிகளெல்லாம் சின்னா பின்னமாய்க் கிழிக்கப்பட்டும் செல்லுகையில் குறுக்கே பாகு நதியென்று சொல்லப்பட்ட செய்யாற்றைக்கடந்து அதின் கரையோரமாய்ச் செல்லுகையில் கோபுரம் ஒன்றைக்கண்டு அடக்கமுடியாத சந்தோஷமுண்டாகி இதுதான் காஞ்சி யென்று எண்ணி அவ்வூர் வந்து விசாரித்ததில் அவர்களெண்ணத்துக்கு முற்றுமாறாக திருவத்தூர் என்று சொல்ல மனவருத்தத்துடன் இவ்வூரிலே சிலகாலம் இருந்தார்கள்.

ஏகாம்பரம் குதிரைகளைப் பிடித்துக்கொண்டு ஊர் சென்று இரண்டு ஆட்களுடன் வனத்திற்கு வந்து பார்க்கையில் யாரையும் காணாமல் வனமுழுவதுந்தேடி புலிக்கோ, சிங்கத்திற்கோ இரையாய் விட்டனள் என்று யோசித்து புலி சிங்கங்கள் இறந்துபோனவைகளைத் தொடா, ஒரு கால் நரியாவது பிடுங்கித்தின்றிருக்கலாமென்றால் எலும்புகளாவதிருக்கவேண்டுமே, அவற்றையும் காணோம். ஆகையாலினி உயிரை மாய்த்துக்கொள்வதே சரியெனவெண்ணி குளத்திற்குசென்று நீரருந்தியும் சாகாமையால் யாரோ தன்னுடைய மருந்தை மாற்றிவிட்டார்கள் என்றெண்ணி நீலாவின் நினைவே அதிகரித்து ஊரூராய்த் தேடிக்கொண்டேயிருந்தான். இம்மாதிரியாயிவன் தேடிக்கொண்டிருக்கையில் இவனுடன் வந்த ஆட்களிரண்டுபேரும் ஓர் கள்ளுக்கடையில் புகுந்து மது சாப்பிட மனதுள்ளவர்களாய்க் கையிலுள்ள பணத்திற்கு மதுவையுட்கொண்டு மயக்கம் தலைக்கேறி வெளியேவந்து, அடே தம்பி என்னமாடாயிருக்குது, போடா போ இந்த சாணார் ரொம்ப ஆசைபிடிச்ச தண்ணியெ ஊத்திருக்கிறான், போனா போறான் நம்ம இட்ட பிரகாரம் ஊத்தினான்.

(இன்னும்வரும்)



## சுகாதாரம்.

சரீரசுகமென்பது ஒவ்வொருவருக்கும் அவசியம். சரீரம் சுகமாயிருந்தாலன்றி ஒருகாரியமும் நடவாது. அளவற்ற தனமுள்ளவனாய் அநேகநாட்டுக்கு அரசனாயிருப்பினும் அவனுக்குச் சரீரசுகமில்லையாயின் பட்டினிகிடந்து வருந்தும் அவனது பேதைக் குடிகளுக்குள்ள மனவமைதியும் சந்தோஷமும் அவனிடத்து ஒருபோதுமிராது. அரசன் தனது செங்கோல் வன்மையினால் குடிகளை முழந்தாளிடச் செய்யலாமென்றாலும் அவர்களிடத்துள்ள சரீரசுகத்தை அவன் அபகரிக்கமுடியுமோ? கருணைகூர்ந்த கடவுளானவர் சிலருக்குத் தனத்தையும் ஓய்வையும், சிலருக்கு கஷ்டத்தையுமேழைமையையுந் தந்திருப்பதால் ஜனங்கள் தனவான்களதுவெளித்தோற்றத்தால் மதிமயங்குகிறார்களே தவிர அவர்களிடத்துள்ள சுகதுக்கங்களை யாரறிவர்? மனவமைதிக்கும் சந்தோஷத்துக்கும் சரீரசுகம் இன்றியமையாதது. இது தனத்தையும் ஏழைமையையும் ஒத்ததன்று. விசேஷமாய் ஏழைகளிடத்துச்சுகமும் தனவான்களிடத்தும் அரசரிடத்தும் வியாதியும் காணப்படுகின்றன; என்றாலும் இதை ஒரேவிதமாய்ச் சொல்லமுடியாது. தாழ்ந்தகுலத்தார் அநேகர் தங்கள் குழந்தைகளை விசேஷமாய் இளம்பிராயத்திலே பறிகொடுப்பதைத் தினமும் நாங்கண்டிருக்கிறோம். ஒருவனுக்குச் சரீரசுகமுளதாயின் அவன் ஏகசக்ராதிபதியைவிடச் சிறந்தவனாவான்; ஆயின் ஜனங்கள் ஏன் முதலிலேயே சுகத்தைநாடுவதில்லை?

சுகமென்பது தேகத்தில் நோயில்லாமை மாத்திரமன்று. நம்மைச்சுற்றிலுமுள்ள வஸ்துக்களெவற்றைக் காணினும் நமக்குக்களிப்பை யுண்டாக்குவதாம். சரீரசுகம் ஒன்றுமாத்திரம் ஒருவனுக்குளதாயின், அவன் எவ்வளவு உழைத்துக் கஷ்டப்படினும் அந்தக்கஷ்டங்கள் அவனுக்கு இனிப்பையுங் களிப்பையுமேதரும். அவனுக்குண்டாகும் நிர்ம்மதியான நித்திரை யாதொருவேலையும் செய்யாது சும்மா இருக்கும் அரசனுக்கு ஒருபோதும் உண்டாகாது.

சரீரசுகத்தின் அருமை இவ்வாறிருக்க, ஜனங்களோ அதை இலட்சியம்செய்யாது தங்கள் இளமையை ஏனோ கெடுத்துக்கொ

ள்ளுகிருர்கள்? கொஞ்சக்காலம் சிற்றின்பத்துக்காகவேண்டித் தங்தள் நெடுங்காலத்தியசுகத்தைப் பறிகொடுக்கிருர்கள்.

இதுமாத்திரமேயோ! இக்காலத்தில் சிறுவர் இங்கிலீஷ்படித்து B.A. முதலிய பரீட்சையில் தேறவேண்டி இரவும் பகலும் படிப்பே கதியாய்த் தங்கள் தேகசுகத்தைச் சிறிதுங் கவனியாது கடைசியில் வருந்துகிருர்கள். இதனுல் அவர்கள் தேகசுகங்குறைந்துசரீரமும் நாளுக்குநாள் மெலிந்து பலவீனப்படுகிறது. சரீரப்பயிற்சியைச்சிலரே கவனிக்கின்றனர். நாம்ஜீவித்திருப்பதற்கு இன்றியமையாதவை மூன்று. அவை வாயு, ஜலம், அன்னம்; நித்திரையும் அவசியமேயாம். நாம் சுகமாயிருக்கவேண்டுமானுல் அசுத்தமில்லாமல் நல்ல காற்றுவேண்டும். அழுக்கு முதலியனவில்லாமல் சுத்தஜலம் ஸ்நாநம் பண்ணுவதற்கும் குடிப்பதற்கும் வேண்டும். தேகபலத்துக்குத் தகுந்த ஆகாரங்களை நிர்ணயமான காலங்களி லுண்ணவேண்டும். தினமும் 6. மணிக்குக்குறையாமல் அவரவர்கள் சக்திக்கேற்றபடி நல்லகாற்று வருமிடத்தில் நித்திரை செய்யவேண்டும். இவ்வளவு மிருந்தபோதிலும் ஒவ்வொருவரும் சரீரப்பயிற்சி பயில்வது அவசியம். சரீரப்பயிற்சி யில்லாவிடில் சாப்பாடும் ஜீரணமாகமாட்டாது. சுகாதாரத்தின்மகிமை பின்வரும்கதையால் விளங்கும்.

ஒரு ஊரில் ஒரு பிரபு இருந்தார். அவருக்கு இரண்டுகுமாரர்களிருந்தார்கள். அவர்களிருவரையும் அந்தபிரபு அடுத்த கிராமத்திலுள்ள ஒரு உபாத்தியாயர் வசம் ஒப்பித்து அங்கேயே அவர்களிருக்க இடம் அமைத்துக் கல்விகற்கும்படி ஏற்பாடுசெய்துவந்தார். பிள்ளைகளும் அவ்வாறே கல்விகற்றுவந்தார்கள். ஒருவருஷமானதும், அவர்களைப்பற்றிப் பிரபு உபாத்தியாயரை விசாரிக்கவும், உபாத்தியாயரும் பெரியவன் அதிகபலசாலியாயும் சுகியாயுமிருந்தாலும் படிப்பில் சிறிது மந்தனுயிருக்கிருனென்றும், சிறியவன் அதிகபுத்திசாலியாயிருந்தாலும் அவன் தேகம் நாளுக்குநாள் மெலிந்துபோகிறதென்றும் சொன்னுர். காரணந்தெரியாமையால் அதைக்கண்டறியவேண்டுமென்று பிரபு பிள்ளைகளிடத்திற்போய் அங்கு ஒருநாள் தங்கினுர். அவர்கள் நடவடிக்கையை முற்றும் பார்த்து ஒருகுற்றமுங்காணுது கடைசியில் அவர்கள் சாப்பிடும்போது தாமும் பக்கத்திலுட்கார்ந்தார். இளையவன் வெகுவேகமாய் அன்னத்தை விழுங்குவதையும் மூத்தவன் நின்றுநிதானித்துப் புசிப்பதையுங்கண்டார். ஜீரணத்துக்கு அவசியமாகவேண்டிய உமிழ்நீரில் இளையவன் உண்ணும் அன்னம் சிறிதுங்கலந்து உள்போக இடமில்லையாதலால் அவன் தேகம்மெலிந்ததாக



அறிந்தார். நாம் ஒவ்வொருவரும் புசிக்கும்போது நாம் புசிக்கும் அன்னம் வாயுமிழ்நீரில் கலக்கும்படி குதப்பி உண்ணுவது அவசியம்

☞ அடுத்தமாதமுதல் ஒவ்வொருமாதமும் மனிதர்க்கு இன்றியமையாதனவாகிய சுகாதாரவிதிகள் தக்கசுதேச வைத்தியர்களாலும் இங்கிலீஷ் வைத்தியர்களாலும் ஒவ்வொரு சஞ்சிகையிலும் எழுதப்பட்டுவரும்.

---

## சமயத்துக்குத்தக்க புத்தி.

கல்வி மனிதரிடத்துள்ள எல்லாப்பொருளிலும் சிறந்தது. "கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ்சிறப்பு" என்பதால் கல்வி ஒருபோதும் வீண்போகாது. எவ்வளவு கல்வியிருப்பினும் அதைச்சமயத்துக்குத் தக்கபடி யுபயோகிக்கத்தக்க புத்தியில்லாவிடின் கற்றவனும் கற்றதனுலாகிய பயனையடையமாட்டான். இந்தச்சிறந்தகுணம் ஒவ்வொருவரிடத்துமிராது. இது கடவுளனுக்கிரகமென்றேகூறவேண்டும். சமயத்துக்குத்தக்க புத்திதோன்றினுல் எவ்வித இடையூறுகள் நேரிடினும் அதைச்சுலபமாக நாம் நிவிர்த்திசெய்துகொள்ளலாம். அது பின்வருங் கதையால் விளங்கும்.

தெற்கே, தாம்பிரவர்ணி தீரத்தில் பாளையங்கோட்டையென்றொரு பட்டணமுளது. அதில் கிருஷ்ணகவி என்றொரு வித்வானிருந்தார். அவர் நான்குவேதமும் ஆறுசாஸ்திரமுங் கற்றுத் தமிழிலும் பூர்ணபாண்டித்தியம் பெற்றிருந்தார். கவி செய்வதில் நிபுணர். அதற்குச்சமீபத்தில் உடையார் பாளையமென்று ஒரு கிராமமுளது. அக்கிராமத்தில் நாராயணவுடையார் என்றொரு சுரோத்தியதாரிருந்தார். அவருக்குச் சாதாரணமாய் உடையார் என்றே பெயர் வழங்கும். அவர் தானதர்மங்கள் விசேஷமாய்ச் செய்து வித்வான்களுக்குச் சம்மானம் அளித்து வந்ததால் அந்த ஜில்லாமுழுமையும் வெகுபிரசித்தி பெற்றிருந்தார். கிருஷ்ணகவியும் அவரைக்கண்டு வெகுமானம் பெறவேண்டுமென்னு மெண்ணத்துடன் அவ்வூருக்குச்சென்றுர். உடையாரை எவ்வாறு காணலாமென்று வித்வான் அங்குள்ளவர்களை வினவவும் அவர்களும் எலுமிச்சம்பழத்தையாவது வேறெந்த வஸ்துவையாவது மரியாதைக்குக்கொண்டுபோய்க் கொடுத்துக் காணலாமென்றுர்கள். வித்வானும் அவ்வாறே அவ்வூர்க்கடைமுழுமையும் தேடியும் எலுமிச்சம்பழம் கிடைக்கவில்லை ஆயினும் அங்குள்ள ஓர்கடையில் தேங்காய் கிடைத்தது. அதையெடுத்துக்கொண்டு உடையார்வீட்டுக்குச்சென்று அவரைக்கண்டு நல்லவண்ணப்பாவினுல் அவருடைய உதாரகுணத்தைப்பற்றிப் புகழ்ந்துபாடிக் கடைசியில் தேங்காயை

அவரிடங்கொடுத்தார். அந்தவேளை அவர் போஜனம்செய்து தாம்பூலம் தரித்திருந்தார். தாம்பூலத்தில் சிறிது சுண்ணும்பு அதிகமாயிருந்ததால் தேங்காய்தின்ருல் சுண்ணும்பின் குணம் மாறுமென்றெண்ணித் தேங்காயை யுடனே யுடைக்கச்சொன்னர். வேலைக்காரர்கள் உடைத்தார்கள். ஆனல் அது அழுகலாயிருந்தமையால் அவர் அதை யுடனே வெளியிலெறியும்படி சொல்லி வித்வானைப்பார்த்து இப்படியும் அழுகியதேங்காய் கொண்டுவரலாமா என்று கேட்டார். அவரும் சிறிதநாணினரேனும் காரியம் மிஞ்சிப்போனபடியால் அதற்கு ஏதாவது போக்குச்சொல்ல வேண்டுமென்றெண்ணி உடையாரைப்பார்த்து, "ஐயா, ஜனங்களெல்லாந் தங்கள்பெயர் உடையார் என்றுசொன்னர்கள். அதனல் தேங்காயை உடைக்கமாட்டீர்களென்றெண்ணி நான் நல்லதேங்காயா அல்லவா வென்பதைப்பாராது வாங்கிக்கொணர்ந்தேன். முன்னமேயே உடைப்பாரென்று தெரிந்தால் நல்ல தேங்காய் கொணர்ந்திருப்பேன்" என்ருர். உடையாரும் வித்வானது சாதுரியவசனத்தைக்கேட்டு மகிழ்ந்து ஒரு முத்தாஹாரத்தை அவருக்கு வெகுமதியாக அளித்தார். சமயத்துக்குத்தகுந்த யுக்தி தோன்றியதாலல்லவோ இவர் அவமானம்பெருது வெகுமானத்தோடு வீடு திரும்பினர்.

---

## விடுகதைகள்.

[இவைகளுக்கு யாரேனும் விடை எழுதியனுப்பினல் மறுசஞ்சிகையில் பிரசுரம் செய்யப்படும்.]

1. ஆனையசைந்தவர, அரிமிளகுசிந்திவர, கொத்தமல்லிப் பெண்களெல்லாருங்கூடிக்குமைந்தவர.

2. அம்பையின் கீழிருந்தவரே! பம்பரம்போலச் சுழன்றவரே! அத்தைதடிக்க அய்யாதடிக்க யார்யார் வீட்டிற்குப்போனீரோ?

3. அதிர்புதர்போட்ட மன்னப்பன் தாயாருக்கு முதுகிலே மூந்நூறடி.

4. ஆழக்குழிவெட்டி அதில் ஒருமுட்டையிட்டு அண்ணாந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை.

5. ஐந்துபேர் குண்டுருட்ட பதினறுபேர் தாங்க உள்ளே யொருவன் தள்ள டும் என்றுபோய் டுங் என்று வீழ.

6. சஞ்சலசலசல, சலநீர்விழவிழ, விழுந்தால் வெளுக்கும், வெயில்பட்டால் கறுக்கும், வறுத்தால் மணக்கும், வாயிற்போட்டால் தித்திக்கும்.

7. தளதள தட்டுப்போல, தாமரை மொட்டுப்போல, இந்திரனெழுத்தைப்போல, இராவணன் சாடிபோல.

8. ஓரகப்பைமாவில் ஊரெல்லாங் கலியாணம்.

---



## வர்த்தமானக் குறிப்பு.

சமுத்திரத்தின்பேரில் கப்பல் ஓடுவது போலவே தண்ணீரின் உள்ளும் போகும்படி ஒருயந்திரம் கண்டுபிடித்திருக்கிருர்கள். 8- மணிக்கொருதரம் காற்றுக்காகவெளிவரவேண்டுமாம்.

---

பூனவிலிருந்து சுமார் $8\frac{1}{2}$ அடி உயரம் உள்ள ஹநுமந்தராவு என்னும் ஒரு மராட்டியர் மைசூர் விவாகத்துக்குப் போயிருக்கிருர். இது ஒரு விநோதக்காட்சியே.

---

அமெரிக்காவில் ஓல்ட்ரீவ் என்பவர் ஹட்சன் என்னும் நதியில் ஜலத்தின்மேல் ஒருநாளைக்கு 24- மைல் வீதம் 150- மயில் நடந்து சென்றனராம். காற்றுப் புகமுடியாத பூட்ஸ் தரித்திருந்தாராம். அதற்கு விசித்திரமான 2- இறகு கட்டியிருந்ததாம்.

---

மைசூர் மஹாராஜாவுக்கு நாளது ஜூன்௴ 6௳ விவாகம் நடக்கிறது. சம்பந்திகள் தங்குவதற்குப்புதிதாய்க்கட்டின கட்டடம் அவசரமாய்க்கட்டப்பட்டமையால் குண்டு சப்தந்தாளாது இடிந்து விழுந்ததாம். இனி கொஞ்சம் ஜாக்கிரதையாய் இருப்பார்கள் போலும்.

---

பிளேக் என்னும் மஹாமாரிநோய் இன்னும் பம்பாயைவிடவில்லை. தினத்துக்கு சராசரி 25 பேருக்கு குறையாமல் அந்நோய்க்கு இரையாகிருர்கள். இந்தபஞ்சக்கொடுமையில் இப்போ இந்தவியாதி நமது ராஜதானியை விட்டகன்றது கடவுளின் பெருங்கருணையே.

---

ஸாமிநாதய்யர் என்னும் சென்னைப்பிராமணர் ஒருவர் ஸ்காட்லாந்து போய் எடின்பர் நகரத்தில் நன்ருய்ப் படித்துத் தேர்ந்து அமெரிக்காசென்று பாஸ்டன் நகரத்தில் 3. மாதம் படித்து தத்துவசாஸ்திரத்தில் நடந்த உயர்ந்த பரீட்சையில் தேறினர். அமெரிக்கர் அனைவரும் வியப்படைந்தார்கள்.

---

மைசூர் மஹாராஜாவின் விவாகம் நாளது ஜூன்௴ 6௳ மிகவைபவத்தோடு நடந்தது. அதற்கு நாலாபக்கங்களிலுமிருந்து அநேக பிரபுக்கள் வந்திருந்தார்கள். அவர்களுக்குக் களிப்பையுண்டாக்க நடந்த காட்சிகளில் டேவால் சர்க்கசும் ஒன்று. இதை நான்கு நாளைக்கு மஹாராஜாவின் செலவிலேயே ஏற்பாடுசெய்தார்கள்.

---

போவர்களுக்கும் இங்கிலீஷ்காரர்களுக்கும் நெடுநாளாக சண்டைநடப்பது எல்லாருக்குந் தெரிந்தவிஷயமே. போவர்கள் எவ்வளவுதான் வீரத்தோடு எதிர்த்தும் பயன்படாது கடைசியில் அவர்கள் முக்கியஸ்தானமாகிய பிரிடோரியாவும் இங்கிலீஷ்காரர் கைவசப்பட்டு மஹாராணியின் வெற்றிக்கொடி கோட்டையின்மீது பறந்துக்கொண்டிருக்கிறது. மஹாராணியின் எல்லாமுக்கிய நகரங்களிலும் அன்று திருவிழா கொண்டாடினார்கள்.

---

போவர்கள்சண்டையில் சிலநாளுக்குமுன் முன்னணியிலிருந்த படைத்தலைவனை அவன் பெண்சாதி யுத்தகளத்தை விட்டு அப்புறம் போகச்சொல்லி தான் புருஷவேஷம்பூண்டு போர்க்கோலங்கொண்டு வெகுவீரத்தோடும் ஊக்கத்தோடும் போர்செய்துவந்தாள். அவள் ஸ்திரீயென்று இப்பொழுதுதான்தெரியவந்தது. போவர் ஸ்திரீகளின் வீரமே வீரம்.

---

அமெரிக்காவில் அற்புதமான யந்திரம் ஒன்று செய்யப்பட்டிருக்கிறதாம். அதற்குள் இரவிலாவது பகலிலாவது எப்போதாயினும் ஒரு காகிதத்தை வைத்தால் அது உடனே வருஷம், மாதம், தேதி, வாரம், மணி, நிமிஷம், விநாடி, என்னும் காலஅளவை ஒரு இமையும் பிசகாமல் அச்சிட்டுவிடுகிறதாம். அதற்கு ஒருதடவை சாவிகொடுத்தால் குறைந்தது 30- நாளைக்குத்தானே போய்க்கொண்டிருக்கிறதாம். வேறுபஞ்சாங்கமும் வேண்டுமோ?

---

நமதுதேசத்தில் இப்பொழுது திரளாய்க்கிடைக்கும் மாம்பழம் சீமையில் கிடையாதாம்; மிகக்குளிர் தேசமானதால் நமது உஷ்ணதேசத்திலுண்டாகும் பழங்கள் அங்கு உண்டாவதில்லை. சிலர்க்கு மாம்பழம் இன்னவிதமாயிருக்குமென்றுகூடத் தெரியாதாம். சிலர்மாம்பழம் பந்து போலிருக்குமென்றும் சிலர் அதின் தோல் பல்லியின் தோல்போலிருக்குமென்றும் எண்ணியிருக்களாம். இந்தவியாபாரம் நம்மவர்கள் செய்தால் வெகு இலாபம் கிடைக்கும்போலும்.

---

மூட்டைப்பூச்சிக்கு மருந்து.—மிகதொந்தரையுள்ள இப்பூச்சிகள் வீட்டிலுள்ள சாமான் தட்டுமுட்டுகளில் பற்றிக்கொள்ளும் போது, அவற்றை நீக்குவது அடிக்கடி வெகு பிரயாசையான காரியமாகையால், கீழே கண்ட மருந்துகளைப் பிரயோகித்தால் அனுகூலமுண்டாகும்.

க. (Oil of Turpentine) ஆயில் ஆப் டர்பென்டைன் என்னும் கர்ப்பூரத் தயிலத்தை மூட்டைப்பூச்சியுள்ள தட்டுமுட்டுகளில் தடவினால் அவை உடனே மாண்டுபோம்.

உ. சுண்ணாம்பு, கர்ப்பூரம், பெருங்காயமாகிய இம்மூன்று சரக்குகளையும் கொஞ்சத்தண்ணீரில் சேர்த்து மூட்டைப்பூச்சியுள்ள சாமான்களில் பிரயோகித்தால் பூச்சி மாண்டுபோம்.

Printed at the Royal Victoria Press, Madras.

# ஜனப்பிரியன்.

மாதம் ஒருமுறை பிரசுரம் செய்யப்படும்.

புஸ்தகம். 1] சென்னை 1900௵ ஆகஸ்டுமீ [இலக்கம். 2

## பெண் கல்வி.

மாந்தர்க்குக் கல்வி இன்றியமையாததென்றும் பெண்களுக்கும் கல்வி அவசியமென்றும் அவர்களுக்குப்படிக்கத்தெளிவான நடையில் தகுந்த புத்தகங்களின்மையால் அவர்களின் உபயோகத்தின் பொருட்டே நாம் இப்பத்திரிகை துவக்கினதாகவும் சென்ற சஞ்சிகையில்கூறினோமல்லவா? இம்மாதத்துச்சஞ்சிகையில் பெண்கல்வி எவ்வாறு அவசியமென்பதையும் பெண்கல்வி தகாதென்போர் ஆக்ஷேபனைக்கு ஏற்றசமாதானத்தையுங் கூறுவோம்.

பெண்கல்வியைப்பற்றிப்பலர் இதுவரையில் எல்லாப்பாஷைகளிலும் எழுதியிருப்பினும் இன்னும் பெண்கல்வி விசேஷமாய்ப் பரவாததுபற்றி "அடிமேலடி யடித்தால் அம்மியும் நகரும்" என்பதால் நாமும் அதைப்பற்றிச் சிறிதுகூறுவோம்.

பெண்கள் அதிகசுறுசுறுப்பும் விநயமு முள்ளவர்களாயும் புருஷர்கள் ஆழ்ந்த கருத்தும் விசேஷ சிந்தனாசக்தியு முள்ளவர்களாயுமிருப்பதால் இயற்கையாகவே புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் விசேஷவித்தியாசம் உண்டென்று அநேகர் கூறுகின்றார்கள். அது எமக்கு அவ்வளவு வாஸ்தவமாகத்தோற்றவில்லை. இப்போது இவ்வுலகில் பெண்களுக்கும் புருஷர்களுக்கும் ஞானவிஷயத்தில் விசேஷபேதங்காண்பது வாஸ்தவமே. அது நெடுநாளைய பழக்கத்தினால் வந்ததே தவிர இயற்கையாய் உண்டானதன்று. நமது பெண்களும் பிள்ளைகளும் சிறுவயதில் விளையாடுவதிலும்

படிப்பதிலும் ஒருபேதமும் தோன்றவில்லை. பெண்களை ஒருவிதமாயும் பிள்ளைகளை ஒருவிதமாயும் நாம் நடத்திப்பழக்குவதனாலேயே அவர்களின் உணர்வு மாறுபடுகிறது. கடவுள் இருபாலார்க்கும் ஒரேவிதமான ஞானசக்தியைக் கொடுத்திருக்கும்போது ஏன் பெண்களுக்கும்புருஷர்களுக்குப்போல கல்விக் கற்பிக்கக்கூடாது என்பதை நாம்ஆலோசிக்கவேண்டியது அவசியம். ஆதலால் புருஷர்கள் அறிந்துகொள்ளும் எல்லாவிஷயங்களும் பெண்கள் கற்கலாமென்று நாம் சொல்லவரவில்லை. நாற்பது வயதுக்கு மேற்பட்ட ஸ்திரீ பன்னிரண்டு வயதுள்ள பாலகனைவிட ஏனோ மதியீனையாயிருக்கவேண்டும்.

பெண்கள் கல்விகற்க அவகாசமிருக்கிறதா என்பதைச் சற்று விசாரிப்போம். புருஷர்கள் பலவிதத்தொழிலிலமர்ந்திருப்பதால் அவர்களுக்குக் கல்விகற்க ஓய்வில்லை. வக்கீலுக்கும் உத்தியோகஸ்தனுக்கும் பள்ளிக்கூடத்து உபாத்தியாயருக்கும் உள்ள அவகாசங்களைவிட அவர்கள் பத்தினிமாருக்கு ஓய்வு அதிகமே. வீட்டுவேலைகளைச்செய்வதும் பிள்ளைகளைப்பெறுவதும் அவர்களுக்கு முலைப்பாலளிப்பதும் தவிர அவர்களுக்கு வேறென்ன வேலையிருக்கின்றது? கூலிவேலைசெய்து ஜீவிக்கும் இழிகுலத்தாருக்கு அவகாசம் அதிகமென்று யாம்கூறவரவில்லை. கல்வியினால் ஏதாவது பயனுளதாயின் மேற்குலத்தாரது பெண்கள் தாங்கள் சோம்பலாய்க்கிடக்கும் ஒழிந்த வேளைகளில் ஏன் கல்வி கற்கக்கூடாது?

பெண்களுக்குக் கல்விகற்பிப்பது புதிய வழக்கமென்றும் ஆகையால் அது விருத்தியாவது அசாத்தியமென்றும் பலர் கூறுவர். சில நூறுவருஷங்களுக்குமுன் பிராமணர்தவிர மற்றையசாதியாரிடத்தில் வித்தை பரவுமென்று யாராவது எதிர்பார்த்தார்களா? இப்போது எல்லாச்சாதியாருந் தேர்ந்திருக்கவில்லையா?

பெண்களுக்குக் கல்வி முக்கியம் என்பதைச் சிலர் ஒப்புக்கொண்டாலும் அனேகர் பெண்கள்படித்து அவர்கள் உத்தியோகஞ்செய்து பொருள் சம்பாதிக்கப்போகிறார்களோ என்றும் அவர்களுக்குப் படிப்பிப்பது வீண்தான் என்றும் ஆக்ஷேபம் செய்கிறார்கள். தெய்வபக்தி, நற்குணம், விவேகம், இம்மூன்றையும் உண்டாக்குவதற்குக்கல்வி கற்பிப்பதேயல்லாமல் பணம்சம்பாதிக்கிறதற்காக



வோ? அல்லவே. நல்லோர் பொருட்டுப் பெய்யும்மழை தீயோருக்கும் உபயோகப்படுகிறதுபோலப் புத்தியின் விருத்திக்காகக் கற்கும் கல்வி உத்தியோகங்களுக்கும் உபயோகப்படுகிறதே தவிர, படிப்பதற்கு உத்தியோகங்காரணமென்று சொல்வது, சாப்பிடுகிறதற்கு வாசிக்கிறதேயல்லாமல் வாசிக்கிறதற்குச் சாப்பிடுகிறதல்லவென்று சொல்லுதற்குச் சமானமாயிருக்கின்றது.

படிப்பினால் பெண்கள் கர்வமும் இறுமாப்பும் அடைகிறார்கள் என்று கூறுவர் சிலர். பெண்கள் தங்களுக்கு இயற்கையாயுள்ள நாணத்தைவிட்டுக் கல்விச்செருக்கால் தமது கல்வித்திறத்தை ஆடம்பரத்தோடு காண்பிப்பதானால் அது அருவருக்கத்தக்கதே. ஆனால் இது ஒரு ஆக்ஷேபனையாகமாட்டாது; கற்றபெண் மற்றையபெண்களைவிடத் தன்னிடத்தில் விசேஷகுணம் இருப்பதாகவே கர்வமடைகிறாள். எல்லாப்பெண்களும் கல்விகற்பதானால் அவர்கள் கர்வமடைய இடமிராதே. எனக்கு இரண்டுகையுளவென்று எவளாவது பெருமைபாராட்டுகிறாளா? சமையல்செய்யத்தெரியாதது இழிவாயிருப்பினும் எனக்கு நன்றாய்ச் சமையல் செய்யத்தெரியுமென்று எந்தஸ்திரீயாவது பெருமையாய்ச் சொல்லிக்கொள்வாளா? பெண்களிடத்துக் கல்விபரவச்செய்தால் அவர்களுக்குள்ள அகந்தையும் பறந்துபோம். மூடத்தனத்தாலன்றோ கர்வமுண்டாகின்றது? கல்வியால் அந்த மூடத்தனமும் நீங்கினால் அகந்தையும் அழிந்துபோமன்றோ? பெண்களுக்குள்படிப்புசாதாரணமானால்படித்த பெண்கள் கர்வமடைவதும் ஒழியும். வீட்டுவேலையைச் செய்வதும் குழந்தைகளை இளம்பிராயத்தில் பாதுகாப்பதும் பெண்கள் தொழிலே. பெண்களுக்குக் கல்விகற்றுக்கொடுத்து அவர்கள் அந்தஸ்தைச்சிறிது உயர்த்தினோமேயானால் வீட்டுவேலைகள் செம்மையாய் நடத்தப்படமாட்டாவென்றும் குழந்தைகளைத் தாய்மார் சிறிதுங்கவனியார்களென்றும் அநேகர் பயப்படுகிறார்கள். அவர்கள் வீட்டுவேலைகளைச்செய்வதும் குழந்தைகளை ஆதரிப்பதும் மூடத்தனத்தாலும்சோம்பலினாலுமன்று; அவ்வாறுசெய்யாது அலட்சியம் செய்வாராயின், அதனால் அவர்களுக்குக் கஷ்டமும் தரித்திரமும் வருமென்கிற பயத்தாலன்றோ, அவர்கள் தங்கள் வேலையைக்கருத்தாய்ச்செய்வது. கல்வியினால் விசேஷகெடுதி நேரிடுவதாயின் கற்ற மேற்குஜாதியாரில் நாம் ஏன் அதைக்காணவில்லை. இன்னம்ஆலோ

சித்துப்பார்த்தால் கற்றபெண்களே கல்லாதவர்களைவிட வீட்டுவேலையைச் செம்மையாய்ச் செய்கிறதாகப் புலப்படும். பெண்கல்விக்குண்டாகும் ஆக்ஷேபனைகளைப் பொதுவாய் மாந்தர்கல்விக்கே கூறலாம். கல்வியினால் கர்வமுதலிய தீக்குணங்கள் பெண்பாலார்க்குண்டாவதாயின் ஆண்பாலார்க்கும் ஏன் அத்தீக்குணங்களுண்டாகாது? படிப்பினாலேயே கர்வமுண்டாகுமென்று கூறுவது தவறு. ஒவ்வொரு தொழிலாளிகளும் தங்கள் தொழிலின் திறமையால் கர்வமடையவில்லையா? கம்மாளர், வைத்தியர், பாடகர், சித்திரவேலை செய்வோர் முதலிய எல்லோருக்கும் இந்தத்தீக்குணம் உண்டு. ஆனால் வித்துவான்களுக்கே உரியதாய்க் கல்விச்செருக்கு என்றே உலகில் வழங்கி வருகின்றனர்.

சிலர், ஸ்திரீகள் புஷ்பச்செடிகள்வைப்பது, பட்சிகளைச்சீராட்டி வளர்ப்பது முதலிய நுட்பமான வேலைக்கே தகுந்தவர்களென்றும் படிப்புமுதலிய கடினவேலை அவர்களுக்குத்தகாதென்றும் எண்ணுகிறார்கள். சிலபெண்கள் கடினவேலைக்கு உதவார்களென்பது வாஸ்தவமே. ஆனால் கற்றுத்தேர்ந்து ஞானமடையக்கூடிய பெண்கள் ஏனைமௌட்டியத்திலேயேயிருக்கவேண்டும். பெரியவனுக்கு, குழந்தைக்குக்கொடுக்கும் ஆகாரம் சரிப்படாமைபோல, அற்பத்தொழில் அவர்களுக்குப்பயன்படாது. மேலும், படியாதசிலபுருஷர்கள் தாங்கள் படியாததால் பெண்கள்படித்தால் தங்களுக்கு அவமானமென்று வீணெண்ணங்கொண்டு பொறாமையால் பெண்கல்வியை ஆக்ஷேபிக்கிறார்கள். ஞானமுள்ள புருஷர்களோ கற்றறிந்த பெண்ணை எப்போதும் மரியாதையோடே நடத்துவார்கள். மேலும்பெண்கல்விபரவினாலும் எல்லாப்பெண்களுமே படியார்கள். பலகாரணங்களால் படிக்கமுடியாத பெண்கள் இருப்பார்கள். படியாதமூடர்கள் இதனால் திருப்தியடையட்டும்.

பெண்கள் மூடர்களாயிருப்பதனாலேயே வீட்டுக்காரியங்களைச்செய்கிறார்களென்றும் அவர்கள் கற்பதானால் எல்லாவற்றையும் அலட்சியம் செய்வார்களென்றும் சிலர்நினைக்கிறார்கள். அதுதவறு. நன்றாய் படித்துத் தேர்ந்த பெண்ணே எல்லாராலும் கொண்டாடப்படுகிறாள். மேலும் அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு இவை பெண்கள் குணமாதலால் அவர்களுக்குப்படிப்புக் கூடாதென்று வேறுசிலர் வாதிப்பார்கள். இதனாலே பெண்கல்வி முற்காலத்திலில்லையென்று கூறுவார்பலருளர்.



முற்காலத்தில் பெண்கல்வி யிருந்ததென்று சிலதிருஷ்டாந்தங்கள் கூறுவோம்.

ப்ருஹதாரணிய உபநிஷத்தில் வாசக்நுவின் குமாரத்திகார்கி என்னும் பெண்மணியின் ஞானத்தைப்பற்றி விசேஷமாய்க் கூறப்பட்டிருக்கின்றது. ரிக்வேதத்தில் மைத்திராயணி என்னும் ஸ்திரீ சிலயாகங்கள் செய்ததாகக்கூறப்பட்டிருக்கின்றது. மேலும் ஜனகர் என்னும்ராஜரிஷி அந்தக்காலத்திலிருந்த யாஜ்ஞவல்கியர், ஆசுவலர், ஆர்த்தபாகர் முதலிய தத்துவ சாஸ்திரிகளை வரவழைத்துச்சபைகூட்டியபோது மேற்கூறிய கார்கி என்னும் உயர்குலஸ்திரீ மிக அரிதான சில அம்சங்களை தெளிவாயுரைத்தாள். அகஸ்தியர் பாரியையான லோபாமுத்திரை தபசிலும் ஞானத்திலும் மேம்பட்டிருந்தாள். வசிஷ்டர்பாரியையான அருந்ததி தன்புருஷனுடன் கூடயாகம் செய்வது வழக்கமாம். அத்திரியின்மனையாளான அநசூயை தன் கணவனுக்கும் மேலானபதவி பெற்றிருந்தனள். இன்னம் மகாபாரதத்தில் துரௌபதி, சத்தியபாமைக்கு ஆசாரம்கற்பு இவைகளைப்பற்றி வெகுசாதுரியமாய் உபந்நியசித்ததாகப் பாரதத்தில் கேட்டிருக்கிறோம். இன்னும் கோதை என்னும் ஆண்டாள், வைஷ்ணவபக்தர்களில் உயர்ந்தபதவி அடைந்திருக்கிறாள். இவ்வாறு ஞானத்தில் தேர்ந்த பெண்மணிகள் இன்னம் எத்தனையோ பேரிருந்ததாக நாம் புராணங்களிலிருந்து அறிகிறோம். ஆகையால் பெண்கல்வி நமதுமுன்னோர் வழக்கத்துக்கு விரோதமன்று.

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாமென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு

என்று பழைய தமிழ் நூலாசிரியர் கூறுகிறார் இதனால் முற்காலத்திலும் பெண்களுக்குக்கல்வி முக்கியமேயென்பதுதெரியவருகிறது. மேலும் மனைவியானவள் கணவனுக்குத் தாதிபோலப் பாதபணிவிடை செய்பவளும், மந்திரிபோலச் சமயமறிந்து நல்லாலோசனை சொல்பவளும், ஸ்ரீமகாலட்சுமிபோலப் பெண்ணைப்பெண் இச்சிக்கத்தக்க அதிரூபசௌந்தரியவதியும், பூமிதேவிபோலச் சலியாத பொறுமையுடையவளும், வேசைபோலப் பர்த்தாவைச்சரசகேளி விநோதத்தாற் பிரியப்படுத்துகின்றவளும்,

அன்புள்ள தாய்போல இனிய உணவுகளாற் போஷிக்கின்றவளுமாயிருக்கவேண்டும் என்று நீதிசாஸ்திரத்தில் கூறப்படுகின்றது. இதனால் கணவனுக்கு மனைவியானவள் மந்திரிபோலச் சமயமறிந்து ஆலோசனை கூறவேண்டுமென்று அறிகிறோமல்லவா? பெண்களுக்குக் கல்வியில்லையாயின் அவள் புருஷனுக்கு எவ்வாறு ஆலோசனை கூறுவது. கல்வியினாலன்றோ ஞானமுண்டாக வேண்டும். இதனாலும் கல்வி பெண்களுக்கு அவசியமாயிருந்ததென்று புலப்படுகின்றது.

எவ்வித துர்எண்ணங் கொள்வதற்கும் காரணம் ஓய்வேயாம். இந்த ஓய்வினால் சோம்பல் உண்டாகிறது. சோம்பலினால் மனம் எண்ணத்தகாததெல்லாம் எண்ணுகிறது. ஆகையால் பெண்களுக்குக் கல்வியிருக்குமேயாயின் அவர்கள் ஒழிந்த வேளைகளில் மனம் கெட்டவழியில் செல்லாதிருக்க நல்ல நீதிகளைப் படித்தறியலாம். சிலர் பெண்களுக்கு இராகஞானம் நடனம் முதலியவை நல்லவையென்பார்கள். பாட்டும் அழகும் எதுவரையிலும் உதவும். தேகந்தளர்ந்து முகத்தினழகுமாறிக் குரலின் இனிமையும் போய்விடுகிற தள்ளாத கிழப்பருவத்தில் முன்னிருந்த அழகும் குரலும் பயன்படுமோ? அவ்வாறு வயதுசென்ற கிழவியை ஒருவரும் இலட்சியம் செய்யார்கள். கல்வி அவளிடத்திலிருக்குமேயாயின் தான் சந்தோஷிப்பதோடு மற்றவர்களையும் கல்வியால் களிப்பூட்டுவாள். நாம் சம்பாஷணையாலடையுங்களிப்பே விசேஷகளிப்பு. சம்பாஷணையின் களிப்பும், கல்வியும் ஞானமும் உளதாயினதிகரிக்கும். ஆகையால் கல்வி பெண்களுக்கு அவசியமானது.

சிலர் பெண்கள் கல்வி கற்றால் அவர்கள் துர்நடத்தையுள்ளவர்களாவார்களென்றும் நமது மதக்கொள்கைகளை அவமதித்து நமது ஆசாரங்களையும் விட்டு விடுவார்களென்றும் பயப்படுகிறார்கள். நமது ஆசாரங்கள் சுகாதாரத்தைப் பற்றினதாகவும் ஆழ்ந்த ஆலோசனையின் பேரில் ஏற்பட்டதாகவும் வைத்துக்கொள்வோம். அவ்வாறு இருப்பின் கல்வியினால் மேற்கூறிய ஆசாரங்கள் உறுதிப்படவேண்டுமேயொழிய ஆசாரங்களை அவர்கள் அவமதிக்க நேரிடாது. துஷ்டர்கள் கல்வியுளதாயின் தங்கள் துஷ்ட செய்கைகளைச் சிறிதும் பயமில்லாமல் செய்யலாகும். இதனால் கல்விக்



குந் தோஷமுண்டோ? நெருப்பினால் வீடு எரிந்துபோகிறது. அதனால் நெருப்பை உபயோகிக்கக் கூடாது என்பார்களோ? அதுபோலக் கல்வியால் சில துஷ்டர்களின் தீச்செயல் அதிகரிப்பதாதலால் கல்வி கூடாதென்னலாமோ? கல்வியால் ஒழுக்கமும் நல்லதாகுமேயொழியக் கெடாது.

கற்றுணர்ந்தவர்கள் கள்ளப்புருஷனுக்குக் கடிதமெழுதுவார்களென்று சிலர் ஆக்ஷேபிக்கிறார்கள். முதலில் கள்ளப்புருஷனைத் தேடிக்கொண்டு பிறகுதானே கடிதமெழுதுவார்கள். அப்படியிருக்க, கள்ளப்புருஷனைத் தழுவுவதில் குற்றமில்லை; கடிதமெழுதுவதில் தான் குற்றமென்று சொல்லுவாருமுண்டோ? தற்காலத்துக் கற்றறியாப்பெண்கள் தங்கள் கற்பு நிலை தவறாமல் கற்புடனே இருக்கிறார்களா? சுபாவத்திலேயே கற்பு நிலை தவறும் பெண்களைக் கற்பித்தாலென்ன? ஆயிரம் காவலில் வைத்தால் தானென்ன?

“சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.”

அவர்களைப் பூட்டிப்போட்டால் தானென்ன? ஒரு பிரயோசனமுமில்லை. சிலர் ஆண்பிள்ளைகளைவிடப்பெண்பிள்ளைகளுக்குப் புத்தி குறைவென்று சொல்லுகிறார்கள். ஆண்பிள்ளைகளைவிடப் பெண்பிள்ளைகள் அதிக புத்திசாலிகளென்பது பின்வரும் திருஷ்டாந்தங்களால் விளங்கும். ஆண்பிள்ளைகளுக்குத் தக்க வயது வந்து சமுசாரத்தில் ஊடாடியபிறகும் அதை இனிது நடத்த வகை தெரியாதவர்களாக விருக்கிறார்கள். சில பெண்பிள்ளைகளோ அதிபாலியத்திலேயே பெற்றோரைவிட்டு அந்நிய குடும்பத்திற்குப் போய் மாமியார், ஓரகத்தி முதலியவர்களுக்குக்கிஞ்சித்தும் மனஸ்தாபம் வரவொட்டாமல் அதிக சாமர்த்தியத்தோடு சமுசாரத்தை நடத்தி வருவதைக் கண்டும், கேட்டும் வருகிறோம்.

அன்றியும் நமது மனம் திடப்படுவதும் ஒழுக்கம் ஆசாரம் முதலியவை உறுதிப்படுவதும் இளம்பிராயமன்றோ? அந்த இளம்பிராயத்தில் நம்மை வழிக்குக்கொண்டுவருபவள்தாயன்றோ? தாய்க்கு ஞானமிராதேல் எவ்வாறு அவள் குழந்தைக்கு நன்னடக்கையைக் கற்பிப்பள்? மேலும் சிறு குழந்தைகளுக்குத் தானே

பார்த்துக் கற்கும் ஊகம் மிகவும் அதிகம். தாய் கற்றவளாய் நன்னடக்கையிலிருந்தால் குழந்தையும் அவள் கற்றுக்கொடாமலே தானே அவள் நடக்கையைப் பார்த்துக் கற்றுக்கொள்ளும். எவ்வித உயர்ந்த பதவிக்கு வரவும் அஸ்திவாரம் இந்த இளம் பருவத்திலேயே போட வேண்டுமென்றால் பெண்களுக்கு கல்வி மிக்க அவசிய மென்பது புலப்படும்.

பெண்கள் வீட்டினுள்ளேயே யிருத்தலால் அவர்கள் படிப்பது அவசியமில்லை யென்றும் புருஷர்களே எல்லாக் காரியங்களையும் நடத்துவதால் அவர்கள் படிப்பு மாத்திரம் போதுமென்றும் அநேகர் எண்ணுகிறார்கள். ஆனால் வாஸ்தவத்தில் இவர்கள் வீட்டுக்குப் போனால் இவர்கள் எண்ணப்படி ஒன்றும் நடப்பதில்லை. தங்கள் தங்கள் ஸ்திரீயின் இஷ்டப்படியே நடக்கவேண்டியிருக்கிறது. அவ்வாறே நடக்கிறார்கள். அப்படி யிருக்கும்பொழுது பெண்கள் கல்வி கற்றாலல்லவோ அவர்கள் கிரமமாக நடத்த முடியும்.

மேலும் கல்வியினால் பயனுளதென்று வைத்துக்கொள்வோம். ஆண் பெண் இருவர்க்கும் ஏறக்குறையச் சரியாகவே கடவுள் ஞானத்தைத் தந்திருப்பதாக வைத்துக்கொள்வோம். அவ்வாறாயின் உலகத்தில் பாதி ஜனங்கள் (பெண்பாலார்) கல்வியினாலாயபயனை அடையக்கூடாதென்று ஆக்ஷேபிப்பது என்ன மதிகெட்ட தனம். அதனால் நமது தேசத்துக்கு எவ்வளவு நஷ்டம். எல்லாரும் உழைப்பதால் எவ்வளவு நன்மையுண்டாகும். அதை ஊகித்து ஒவ்வொருவரும் பெண் கல்வியைத் தம்மாலியன்றளவுபரவச்செய்வாராக.

---

## பக்தர்கள் கதை.

### ஆளவந்தார் சரித்திரம்.

(10-ம் பக்கம் தொடர்ச்சி.)

---

இரண்டாவது கேள்வி. "இந்த அரசனைத் தர்மவானென்கிறேன். உம்மால் கூடுமானால் அல்லவென்று மறுக்கலா" மென்றார் சிறுவரும். அந்தக் கேள்வி காதில் விழுந்ததும் வித்வஜ்ஜன கோலாகலன் மிக்கதிகிலடைந்தான். அரசன் அதர்மவானென்று அவன் எதிரிலேயே எவ்



வாறு கூறுவது: என்னுயிர்வாங்க இச்சிறுவன் நல்ல சூழ்ச்சி தேடினான். நான் சும்மாவிருந்தாலோ தோற்றவனாகிறேன். பதிலுரைப்பதோ அபாயத்துக்கிடமாகிறது. ஏனெனில் என் தலை அரசனாலுடனே வெட்டுண்டுபோம். இன்னும் ஒரு கேள்வியிருக்கிறது. அதற்காவது பதில் சொல்லமாட்டுவேனா என்று எண்ணிக்கொண்டு சும்மாவிருந்தான். அரசியின் முகம் மலர்ந்து சந்தோஷத்தால் உடம்பு பூரித்தது. ஜனங்களும் பேரானந்தமடைந்து பேரொலி செய்தார்கள்.

மூன்றாவது கேள்வி. சிறுவரும் 'இந்தராஜபத்தினியை பதிவிரதை என்கிறேன். உம்மால் கூடுமானால் அல்ல வென மறுரையும்' என்றார். அது வித்துவான் செவியில் நுழைந்ததும் அவன் அடிவயிற்றில் இடிவிழுந்ததுபோல ஒன்றுந் தோன்றாமல் வெட்கத்தினால் தலை குனிந்து இத்தனைகாலமாய் மகாவித்துவான்கள் அனைவரையும் அவர்கள் காலுக்குப்போட்டால் தலைக்கும் தலைக்குப்போட்டால் காலுக்குமாகப் போட்டு ரசாபாசப்படுத்தி அவர்கள் விருதுகளையும் பட்டங்களையும் பிடுங்கிக்கொண்டு ஜயித்து வந்தோமே! இப்பொழுது ஒரு குழந்தையின் கேள்விக்கு உத்தரம் சொல்ல வகை தெரியாமற் கற்றறி மூடனாய் விட்டோமே. முதற் கேள்வி ஒன்றுக்காவது உத்தரம் சொன்னோமா? இல்லையே. ஆயினும் அது ஒருவேளை "ஆனைக்கும் அடி சறுக்கும்" என்பதாகத் தவறியதென்று நினைக்கவுங் கூடும். ஆதலாற் பெரிதன்று. இரண்டாவதற்காவது சொல்லவேண்டுமே அதுவும் ஈடேறாமற் போயிற்றே! போகட்டும். மூன்றாவதற்காவது சொல்லலாமென்றால் ராஜபத்தினி விபசாரி என்றல்லவோ சொல்லவேண்டும். எவ்வாறு சொல்வது? நேரில் கையும் மெய்யுமாகக் கண்டு பிடித்தாலுங் கூட வெளியில் சொல்லத் தக்கதல்லவே. களங்கமற்ற அரசன் மனைவிமேல் எவ்வாறு தோஷங் கற்பிப்பது. ஒருவரும் நம்பார்களே. பாபமும் வந்து சேருமே. இந்த வுலகத்தில் மறுக்கக்கூடாத விஷயங்கள் பல வுண்டென்கிற இந்த அற்பவிஷயந் தெரிந்துகொள்ளாது முன்பின் யோசியாமல் எதையும்மறுப்பேனென்று கூறியது என்ன மூடத்தனம். மேலும் என்னைவென்ற இச்சிறுவன் தவிர இவ்விதகேள்விகள் யார்தான் கேட்பார்கள். "தன்வினை தன்னைச்சுடும்" என்பதால் என்னுடைய மதமே என்னை அழித்தது. சிறிதேனும் அடக்கமின்றி நானே பெரியவன் என்று அகங்காரங்கொண்டு ஒருவரையும் மதியாமல் அரசனது சலுகையால் வித்துவான்களனைவரையும் அவமானப்படுத்திவந்த அந்தக்கொடுமையன்றோ இப்படி விளைந்தது. என்னுடைய நாசத்துக்கு நானே காரணனானேன். அல்லாவிடில் பள்ளியில் படிக்கும் சிறுவனோடு நான் தர்க்கிப்பது தகாதென்று ஏன் கட்டாயமாய்ச் சொல்லியிருக்கக்கூடாது. அவ்வாறு செய்யாததால் அவனோடு சரிசமான ஆசனத்திலுட்கார அனர்களாய்ச் சமஸ்தான வித்துவானுக்குரிய எனது விருதுகளைத் தந்து இச்சிறுவன்காலில் விழவேண்டியவனாயினேன் என்று சொல்லி சிவுக்கென்றெழுந்து 'துடைப்பக் கட்டைக்குப் பட்டுக்குச்சு' போல வித்துவஜ்ஜன கோலாகல னென்னும் இத்

தனை பெரிய பெயர் எனக்கு ஏன்? என்திறமைக்கு விருதுகளும் வேண்டுமா? வென்று சலிப்புற்றுத் தன் விருதுகளெல்லாம் வாங்கி அவருக்கு முன்பாக வைத்து அவரை வணங்கி நின்றான். ராஜபத்தினியாரும் சிறுவனைக் கண்டு பெருமகிழ்ச்சி கூர்ந்து ஆனந்தக் கண்ணீர் பெருக அக்குழந்தையாகிய யாமுனரியரைத் தன்னிருகையாலும் இறுகத் தழுவிக்கொண்டு நீர் உண்மையாக ஆளவந்தவரே என்று கூறினள். அன்று முதல் ஆளவந்தார் என்கிற திருநாமம் அவருக்கு வழங்கத் தலைப்பட்டது.

அரசனும் தன் வித்வானது நிலைமையைக்கண்டு பரிதபித்து, ஆளவந்தாரைநோக்கி 'நீர் வென்றது வாஸ்தவமே, நீர் அவதாரபுருஷரே, உம்மிடத்தில் எனக்குப் பேரானந்தமுண்டாயிருக்கின்றது. ஆயினும் நீர் கேட்டகேள்விகளில் ஒன்றையாவது உம்மால் மறுக்கக்கூடுமோ' என்றான். ஆளவந்தாரும் மூன்றையு மறுக்கக்கூடுமென்று பின்வருமாறு கூறுகிறார்.

1-வது. வித்துவானது தாய் புத்திரவதியென்பதற்கு உத்தரம் இந்தவித்துவானது தாய் இவரொருவரைமாத்திரம் பெற்றதனால் 'ஒருமரமும் தோப்பல்ல ஒருபிள்ளையும் பிள்ளையல்ல' என்னும்பழமொழிப்படி வாழை மலடியாதலால் அவள்புத்திரவதி யல்லள் என்றார்.

2-வது. "ராஜா ராஷ்ட்ர கிருதம் பாபம்" என்னும் நீதி வாக்கியப்படி குடிகள் செய்த பாபமெல்லாம் அரசனைச் சேருமாதலால் அரசன் தருமவானல்லன்" என்றார்.

3-வது. ஒவ்வொரு ஸ்திரீயும் விவாக காலத்தில் சந்திரன் கந்தருவன் அக்கினி முதலிய தேவதைகளுக்கு முதலில் சமர்ப்பிக்கப்பட்டுப் பிறகு மணஞ் செய்து கொள்ளப்படுவதால் பதிவிரதாதர்ம பங்கம் வருகிறது என்றார்.

இவ்வண்ணமாய் ஆளவந்தார் கோலாகலனைக் கேட்ட மூன்று கேள்விகளையும் பின்பு தாமே சாஸ்திர சம்மதமாக மறுத்துரைக்கக் கேட்டு, பாண்டிய வரசனும் சிறுவனாகிய இவர் இவ்விசேஷக் கேள்விகளை எவ்வாறு உணர்ந்தார். தாமுரைத்தவைகளைத் தாமே மறுக்கவும் மறுத்தவைகளைப் பின்னிட்டு ஸ்தாபிக்கவும் தக்க சக்தி இவருக்கு எவ்வாறு உண்டாயின? அன்றியும் இந்த வித்துவான் தாய்க்கு ஒரே பிள்ளை யென்று எவ்வாறு உணர்ந்தார். சோதிடத்தாலறிந்தார் என்பதற்கு அவர் பிறந்த நாளும் அறிந்தவரல்லரே என்று எண்ணி எண்ணி ஆச்சரிய வெள்ளத்தில மூழ்கி பிரமானந்த மடைந்து தான் இரகசியத்தில் ராணியாருக்கு வாக்களித்தபடி சிறுவனுக்குப் பாதி ராச்சியத்தைப் பகிர்ந்து கொடுத்து, கோலாகலனையும் அவன் வசம் ஒப்புவித்தான். சிறுவரோ கோலாகலனை அவன் இஷ்டப்படி போக விட்டு அரசாட்சியை ஒத்துக் கொண்டார்.

ஆளவந்தார் அறியாத பாலகனாயினும் அரசை வகித்துக் குடிகளெல்லாராலும் கொண்டாடப்பட்டுக் கண்ணியத்தோடும் நியாயத்தோடும் தம் நாட்டைப் பரிபாலித்து வந்தார். இவ்வாறு இவர் நெடுநாள் அரசாண்டு வருகையில் இவரிலும் கற்ற வித்துவான்கள், மேம்பட்ட அரசர்கள் பலர் பெயர் இந்தப் பூமியில் நிலையாது அழிந்தது போலவே இவர் பெயரும் மறையாது என்றும் நிலை பெற்றிருக்க ஒரு சங்கதி நடந்தது. அந்த வைபவம் இவர் சிறுபிள்ளையாயிருந்து மகாவித்துவானை வென்று அரசாட்சி யடைந்ததை விட அதிக ஆனந்தகரமாயிருக்கும்.



இவருக்குச் சுமார் 35 - வயதானகாலத்தில் ராமமிச்ரர் என்றும் மணக்கால் நம்பி என்றும்பெயர்வழங்கிய ஒருபிராமணன் இவரைக் காணவேண்டி, தாம்ஏழையாதலால் நேரேகாணின் மதியாரென்றும், தாம்கொண்ட எண்ணம் நிறைவேறாதென்றுங் கருதித் தம் வரவைத்தெரிவிக்க ஒரு சூழ்ச்சிதேடினார். சத்துவகுணமுள்ளதும் யோகிகள்விசேஷமாய் விரும்புவதுமான தூதுளங் கீரையை எங்கிருந்தாலும் தேடிக்கொய்து அரசனுடைய சமையற்காரனிடம் கொடுத்துவந்தார். அவனும் அதனைச் சமையல்செய்து பரிமாற அரசனும் தினமும் களிப்போடு உண்டுவந்தான். இந்தமாதிரி சிலமாதங்கள் சென்றதும் ஆளவந்தார் யாதொன்றும்விசாரியாததால் ஒருநாள் மணக்கால்நம்பி அதைக்கொண்டுவந்து கொடாதிருந்தார். ஆளவந்தாரும் சமையற்காரனை ஏன் அந்தக்கீரை இன்றுபரிமாறவில்லை என்றுங்கேட்க, அவனும் அதைத்தினமுங் கொண்டுகொடுத்த பிராமணர் இன்றுவரவில்லை என்று சொல்ல, ஆளவந்தார் "பிராமணரா? ஓ ஓ அவர்யாரோ தெரியவில்லை" என்று அநுதாபப்பட்டு உடனே தமது பரிசனங்களை நோக்கி அந்தப்பிராமணர் நாளைவந்தால் தம்மைக் கண்டுபோகச் சொல்லுங்களென்று நியமித்தார். நம்பியாரும் வழக்கம்போலவே மறுநாள் கீரையைக்கொணர்ந்ததும் அவர் எதிர்பார்த்தபடியே அரசனிடம் ராஜபரிவாரங்கள் அவரை அழைத்துக்கொண்டு போனார்கள்.

ஆளவந்தாரும் நம்பியாரைக் கண்டதும் நெடுநாள் பிரிந்த பழைய சிநேகிதரைக் கண்டாற் போல உள்ளக்கிளர்ச்சியும் உணர்வு முடையவராய்த் தமது ஆசனத்தினின்றும் எழுந்து அவரை உபசரித்து "யாது வேண்டி இக் கீரையைக் கொணர்ந்து தந்தீர். எம்மாலுமக்காகவேண்டியது யாதுளதோ, தயை புரிய வேண்டும்" என்று கேட்டார். மணக்கால் நம்பியாரும் "உம்மாலாக வேண்டிய காரியம் ஒன்றுளது. உமது பாட்டனார் இறக்குங் காலத்தில் அவர் தேடிப்பெற்ற பொருள் நிதியை என்னிடத்தி லடைக்கலமாக வைத்து இதை நமது பேரனிடத்தில் நீர் ஒப்புவிக்க வேண்டுமென்று நியமித்துப் போனார். அதை உம்மிடத்தில் ஒப்புவிக்கும் பொருட்டே இவ்விடம் வந்தேன்" என்றார். ஆளவந்தாரும் தன் பாட்டனாராகிய நாதமுனிகள் மிகப் பிரக்கியாதியா யிருந்தமையாலும் தன் பேரில் அதிக ஆசையாயிருந்தமையாலும் அவர் இறந்தகாலத்தில் தான் குழந்தையா யிருந்தமையாலும் தான் யுக்த வயது வந்து அடைய ஏதாவது தனம் சேர்த்து வைத்திருக்கலாமென்று கருதி நம்பியார் சொன்னது வாஸ்தவமா யிருக்குமென்று நினைத்தார். அயல் நாட்டு அரசனோடு சண்டை செய்ய வேண்டி பணம் அவருக்கு அவசியமா யிருந்து

பற்றி தனம் எவ்விடத்துள்ளதென்று மிக்க ஆவலோடு கேட்டார்." நம்பியா
ரும் "நீர் என்னோடுவருவதாயிருந்தால் காண்பிக்கிறேன். அது இரண்டாற்
றுக்கு நடுவில் ஏழு சுற்றுக் கோட்டையால் சூழப்பட்டுள்ளது. ஒரு பெரிய
சர்ப்பம் ஒன்று எப்பொழுதும் அதை காத்துக்கொண்டிருக்கின்றது. இராக்ஷ
ஸனொருவன் தென் கடலினின்று 12 வருஷத்துக் கொருதரம் அதைப்பார்க்
துப் போகிறான். அது மந்திரத்தால் கட்டுப்பட்டிருக்கிறது. ஆகையால் மந்
திரத்தாலேயே அதைத் திருப்பி யெடுக்கவேண்டும். மற்ற தனங்களைப் போல
மிருகபலி வேண்டாது ஒருவித விசேஷ பச்சிலையை வேண்டியிருக்கும். அது
அழியா நிதியாயிருப்பதால் நீர் அதைப்பெற்றால் உலகத்தரசர்களெல்லாரிலும்
சிறந்தவராவீர். அது உமக்குக்கிடைத்தால் உமது சத்துருக்கள் பஞ்சாய்ப்
பறந்துபோவார்கள். யாராலும் உம்மை வெல்லமுடியாது. நாதமுனிகள்
உம்மிடத்துள்ள விசேஷப்பிரியத்தால் பிதிரார்ச்சிதமாய் அத்திரவியத்தை உம
க்காக பாதுகாத்துவரும்படி எனக்கு ஆஞ்ஞாபித்தார். இனி நீர் அன்புடன்
வந்து அதைக் கைப்பற்றிக்கொள்ளவேண்டுமென்றார். ஆளவந்தாரும் அத
விசேஷதிரவியமோ, என்பாட்டனாருக்கு என்னிடத்தில் எவ்வளவு அன்பு!
தாங்களும் அதையபகரியாமல் எனக்காக இதுவரையில் பாதுகாத்தது என்ன
நற்குணம்? என்பரிசனங்களுடன் உடனே புறப்படுவேன்' என்றார். நம்பியாரு
ம் "நீர் எவ்வளவுசீக்கிரத்தில் புறப்படுகிறீரோ அவ்வளவும் நல்லது. ஆனால் நீ
மாத்திரம் தனியேவரவேண்டும். இவ்வாறே உமது பாட்டனாரின் கட்டளை" என்
றார். 'அவ்வாறே யாகுக' என்று கூறி ஆளவந்தாரும் ராச்சியத்தை மந்திரிகள்
வசம் ஒப்புவித்து மறுநாளே நம்பியாருடன் புறப்பட்டார். நம்பியாருப
ஆளவந்தாருடன் மதுரையிலிருந்து புறப்பட்டு நெடுந்தூரஞ்சென்று வழியி
தங்கித் தான் தினமும் பாராயணம்செய்துவந்த பகவத்கீதையைத்திறந்து அ
ல் 9-வது அத்தியாயத்தைப்படித்தார். ஆளவந்தாரும் அதை உற்றுக்கேட்
அதை உபதேசம் செய்யும்படி வேண்டினார். ஏனெனில் அக்காலத்தில் எதை
கற்கவேண்டுமானாலும் குருமுகமாகவே உபதேசஞ்செய்துகொள்வது வழக்க
இப்பொழுதுபோல அவரவர்கள் இஷ்டப்படி தப்பர்த்தம் அந்நாளில் செய்ய
ர்கள். உபநிஷத்துக்கள், கீதை, வேதாந்தசூத்ரம் இவைகளை அந்நாளில் கு
முகமாவே கற்கவேண்டும். நம்மவர் இதைக்கேட்டு நகைப்பார்கள் என்றாலு
அக்காலத்தில் கற்கவேண்டுமென்கிற எண்ணமே தவிர அவரவர் இஷ்டப்ப
பொருளுரைக்கவேண்டுமென்பதன்று. ஆளவந்தாரும் தனக்குக் கீதையை உ
தேசிக்க வேண்டவும் நம்பியாரும் மிகப் பிரியத்துடன் உபதேசித்தார். ஆ
வந்தாரும் பூர்வ ஜன்ம கரும விசேஷத்தால் சுலபமாகவே எல்லாவற்றையு
தெரிந்து கொண்டு இந்தச் சடமாகிய தேகத்தில் இச்சையை விட்டவராய் ப
வத்கீதையில் 2-வது அத்தியாயத்தில், 16-வது ஸ்லோகத்தில்.

"அஸத் வஸ்துவான தேஹத்துக்கு நித்யத்வமில்லை. ஸத் வஸ்துவா
ஆத்மாவுக்கு அநித்யத்வமில்லை; இந்த இரண்டினுடைய நிச்சயம் தத்துவ
ஞானிகளால் சித்தாந்திக்கப்பட்டிருக்கின்றது" முதலாய்



இந்த ஆத்மாவை சஸ்த்ரம் பேதிக்காது, நெருப்புச்சுடாது, நீர் நனைக்காது, காற்று உலர்த்தாது.

இந்த ஆத்மா, சேதிக்கவும், தஹிக்கவும், நனைக்கவும், சோஷிக்கவும் அசாத்தியம். ஆகையால், இது நித்யமாகவும், ஸர்வ வ்யாபியாகவும் ஸ்திரமானதாகவும் சலிக்காததாகவும் எப்பொழுதும் உள்ளதாகவுமிருக்கின்றது.

இந்த ஆத்மா அவ்யக்தன், சிந்திக்கத்தகாதவன், விகாரமில்லாதவன் என்று சொல்லப்படுகிறானாதலால் இப்படிப்பட்ட இந்த ஆத்மாவைத்தெரிந்துகொண்டு, நீ துக்கிக்காமலிருக்கவேண்டும்.

வரையில் பாராயணம் செய்தபோது தான் நெடுநாளாய் மறந்தவிஷயம் திடீரென்று ஞாபகத்துக்கு வந்ததுபோலத் தோன்றிற்று. அந்த சுலோகங்களெல்லாம் தான் படித்தவையாகவே தோன்றின. அவைகளைத்தான் மறந்ததற்காக நிரம்பத் துக்கித்தார். அற்ப மண்ணின் ஆசை நாடி நிலையான ஆத்துமத்தைத் தான் கைவிட்டதற்காகத் துயரடைந்தார். நேத்திரங்களால் காணக்கூடாததும் மனதினால் நினைக்கக்கூடாததும் வஸ்துத்துவம் மாறாததுமான அந்த வஸ்துவை அடையவருந்தினார். நீர்க்குமிழிபோன்ற தன்மேலிருந்த உடைகளையும் தான் அலங்கரித்திருந்த ஆபரணங்களையுங்கழற்றி எறிந்து நம்பியாரை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துத்தனக்கு ஞானமார்க்கத்தை உபதேசிக்கவேண்டினார். தன் பாட்டனார் தேடிவைத்த நிதி எவ்வளவு விலைபெற்றதாயிருந்தாலும் தனக்கு அதில் சிறிதும் பிரியமில்லையென்றும் தான் இனி தன்னாட்டுக்குத் திரும்புவதில்லையென்றும் தன்னுள்ளே மறைந்துள்ள அழியா நிதியைத்தான் அறியும்வரையில் பிச்சைக்காரனாய்த்திரிவேனென்றுங் கூறினார். நம்பியாரும் அவரது ஆவலைச்சிலாகித்து "சந்நியாசித்துவமென்பது எல்லா ஆசையும் விடுவதன்றோ? நீர் தனத்தையும் அரசையும் விடுவதால் பிச்சைக்காரனாயிருக்க விரும்புகிறீர் அது கூடாது. இப்போதுள்ள வெளித்தோற்றத்துடனேயிரும். ஆனால் உமது மனம் மாத்திரம் அதில் செல்லாதிருக்கட்டும். இதுதான் சந்நியாசித்துவமென்பது. உமது பேரிலுள்ள அன்பால் உமது பாட்டனார் தந்த பிதிரார்ச்சிதத்தை அவமதியாதேயும். ஆனால் நாம் சிறிது நாள் இங்கேயே தங்கி கீதையைப்பாராயணம்செய்து முடித்துவிட்டுப் பின்னால் நிதியை அடையச்செல்வோம்" என்றார். ஆளவந்தாரும் அவ்வாறே சம்மதித்துக் கீதை முழுவதும் சாவதானமாய்ப்பாராயணம் செய்துவந்தார்.

கீதை முடிவதற்குள்ளாகவே அவர் மனமுழுமையும் அதன் கருத்தில் சென்றது; தான் உண்பதிலேயும் யாகஞ் செய்வதிலும், தருமம் செய்தலிலும் தபசிலிருத்தலிலும் தவிர மற்று எதிலும் பற்றற்றவராய் எல்லாம் பகவானுக்கே அர்ப்பிதம்பண்ணி எல்லா வஸ்துக்களிலுந் தன்னையும் தன்னில் எல்லா வஸ்துக்களையுங் கண்டவராய் இதரர்களின் இன்பதுன்பங்களைத் தம்முடையனவாகவே பாவித்தவரானார்.

ஒரு பத்ரத்தையாகிலும், ஒரு பூவையாகிலும், ஒரு பழத்தையாகிலும், நீரையாகிலும், பக்தியோடு எவன் கொடுக்கிறானோ அந்தப்பரிசுத்த மனமுள்

ளவனுடைய பக்தியால் ஸமர்ப்பிதமான அந்த வஸ்துவை நான் புஜித்துக் கொண்டிருக்கிறேன். (கீதை அத். ௯, 26).

என்னிடத்திலேயே மனசை நிறுத்துவாயாக. என்னிடத்திலேயே புத்தியை வைப்பாயாக, அதன் பிறகு என்னிடத்திலேயே நீ வாசம் பண்ணுவாய் சந்தேகமில்லை. (கீதை அத். ௰௨. 8).

என்னிடத்திலேயே நினைவுள்ளவனாயிரு, என்னிடத்திலேயே பக்தியுள்ளவனாயிரு, என்னை யாராதி, என்னை நமஸ்கரி. என்னையடைவாய், நீ எனக்குப்பிரியமாயிருத்தலால் உனக்கு வாக்களிக்கிறேன் (௧௮, 65), முதலிய சுலோகங்களைப்படித்தபோது அவர் மனது அந்த பகவானிடத்தே சென்றது.

கீதை முடிந்ததும் நம்பியாரும் பிதிரார்ச்சித நிதியை நாடிச்செல்கையில் ஆளவந்தாரும் நிதியில் தனக்குச்சிறிதும் விருப்பமில்லாமலே பின்தொடர அநேக அக்கிரஹாரங்களைக்கடந்து காவிரியாற்றைத் தாண்டி ஸ்ரீரங்கத்தின் கோவிலுக்குள்போய் ஸ்ரீரங்கநாதசுவாமி பள்ளிகொண்டிருக்கும் விக்கிரஹத்தைக்காண்பித்து "உமது பாட்டனார் தேடிவைத்த நிதியை உம்மிடம் ஒப்புவித்து என்னுடைய பாரம் தீர்த்துக் கொண்டேன்" என்றார்.

ஆளவந்தாரோ அடக்க முடியாத வானந்தங் கொண்டார். உலகத்திலுள்ள வஸ்துக்களெல்லாவற்றிலும் மேலான பிதுரார்ச்சிதத்தைத் தன் பாட்டனார் தேடி வைத்திருப்பாரென்று அவர் சிறிதும் நினைக்கவில்லை. தனக்குண்டான சந்தோஷத்தை வெளியில் சொல்லமாட்டாத[illegible]ய் நம்பியார் பாதங்களை மேலும் மேலும் சேவித்து ஆனந்த பாஷ்பத்தால் அதை நனைத்தார் இரங்கநாதரைப் பார்த்து "ஓ ஸ்வாமி, தாங்கள் என் பாட்டனார் உரிமையாயிருந்தீர். அவர் என்னிடம் ஒப்புவித்ததால் என் சொத்தாய் விட்டீர். என் மூதாதை தேவனே, என் குலதேவதையே, என் ஸ்வாமி! கடைசியாய் உம்மை யறிந்தேன். இனி ஒரு போதும் நீங்கேன். உம்மை யடைந்தால் இந்நிலவுலகரசரெல்லாரினும் யான் செல்வவானாவேன் என்று நம்பியார் கூறியது வாஸ்தவமே. எப்படிப்பட்ட நிதி! காலம், வரம்புகடந்து ஏகாந்தமாயிருக்கிறது. உன்னில்எல்லா வஸ்துவுமிருத்தலால் உன்னை அடைந்தால் எல்லாவஸ்துவையும் அடைந்தவனாகிறேன். உன்னை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்தவனாகிறேன். "அந்த தனத்தை அடைந்தால் நீ எல்லாரையும் ஜெயிப்பாய், உன்னை ஒருவரும் வெல்ல முடியாது" என்று குரு கூறியது உண்மையே. உன்னைக் கண்ட மாத்திரத்திலேயே என் பகைவர்களாகிய ஆசை, அகங்காரம், மமதை முதலியவை அடங்கி விடுகின்றன. நான் வேறு, மற்றவை வேறாயிராமல் எல்லாம் நானாகவே விளங்குகிறேன். சாதாரண நிதியென்று நினைத்து புதையலைப் பூதங் காக்குமாதலால் அது என்ன உபாயத்தாற் கிடைக்குமென்ன பலியிட வேண்டுவதில்லை. ஒருவித பச்சிலையால் கைக்கொள்ளலாமென்றார். அக்குறிப்பு அப்பரமாத்துமன், துளசியால் அர்ச்சித்தவர்களுக்குச் சுவாதீனப்படாமற் போகானென்பதாயிற்று. காடோ மலையோ அது இருக்குமிடமென்



றெண்ணி, நான் எவ்விடத்துள்ளதென்ன, இரண்டாற்றுக்கு நடுவேயென்றார். அது தென் காவிரி, வட காவிரியாகிய உபய காவிரிக்குமத்தியமென்றும், ஏழு சுற்றுக்கோட்டையென்பது சப்த பிரகாரங்களாற் சூழப்பட்ட அரங்கன்கோயிலென்றும், பாம்பு காக்கிறதென்பது ஆதிசேஷ சயனமென்றும் பன்னிரண்டு வருஷத்துக் கொருதரம் இராக்ஷதன் வருகிறானென்பது விபீஷணாழ்வார் இலங்கையிலிருந்து சேவித்துப் போகிறானென்றும் இப்பொழுதல்லவோ எனக்குப் புலப்பட்டது. இனி உன்னை யொருபொழுதும் விட்டுப் பிரியேனென்று விக்கிரகத்தை ஆலிங்கனம் செய்து கொண்டு போன்பால் மூர்ச்சித்துப் போயினார். பின்பு கண்தெளிந்து நம்பியாரைப் பார்த்து "என்னைத் தேடி வந்து அஞ்ஞானக் கடலிலாழ்ந்திருந்த என்னைத் தப்பவைத்து பரமார்த்தம் சித்திக்கச் செய்ததற்கு உமக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன். என்னைக் கடைத்தேறச் செய்வதே பாரமாக எண்ணிய உம்மை நான் எவ்வாறு புகழ்வேன் என்று கூறினார்.

ஆளவந்தார் பிறகு தன் செங்கோலை மந்திரிகள்வசம் ஒப்பித்துவிட்டு பகவத் நிஷ்டையிலிருந்ததாகவும், வசிஷ்டாத்வைதத்தின் திருமூர்த்தி ஸ்வரூபமாகிய **சித், அசித், ஈஸ்வரன்,** என்பவற்றைப்பற்றிச் சிலகாவியங்கள் எழுதினதாகவும், தான் இறக்குங்காலத்தில் நிறைவேறாத மூன்றுவிருப்பங்கள் இருந்ததாகவும், அதற்கு அறிகுறியாகவே வலக்கையில் மூன்றுவிரல் மூடினபடியே யிருந்ததாகவும் தகனகாலத்தில் அவ்விடம் அகஸ்மாத்தாய் ராமானுஜாசாரியர் வர அங்கிருந்தசிஷ்யர்கள் நடந்த சங்கதிசொல்லவும் ராமானுஜாசாரியர் அந்தவேண்டுகோளைத் தான்பூர்த்தியாக்குவதாக வாக்களித்ததின் மேல் விரல் பழயபடியானதாகவும் கர்ணபரம்பரையாகத் தெரியவருகிறது. மூன்றுவேண்டுகோளாவது உபநிஷத்து, வேதாந்தசூத்திரம், கீதை இவைகளுக்கு வசிஷ்டாத்வைதத்துக்கு ஒத்தவியாக்கியானம் எழுதவேண்டுமென்பதும் வேதாந்தசூத்திரத்துக்கு வைஷ்ணவியாக்கியானம் எழுதினவராகிய பராசரர் நாமம் வேறுயாருக்காவது தகுந்தவர்களுக்கிட்டுப் பூமியில் வழங்கவேண்டுமென்றும் நம்மாழ்வார் திருவாய்மொழிக்கு வ்யாக்கியானம் எழுதவேண்டுமென்பதுந்தான்.

உ

# காஞ்சனமாலை.

(16-ம் பக்கம் தொடர்ச்சி.)

## அத்தியாயம் - 2.

*அறிவாருமில்லையோ வையா—என்னை—யாரென்றறியாத*
*வங்கதேசத்தில்—வறிதே—காமதத்வி ற்சிக்கி—உள்ள—யான்*
*பொருட்டாற்கவோ வந்தேனான்தோழி—சங்கரசங்கரசம்பு.*

**தாயுமானவர்.**

ஓடம் கண்மறைவாய்ச் செல்லவும் காஞ்சனமாலை தைர்யமடைந்தவளாய்ச்சம்பகத்தின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு சற்றுநேரம் அங்குத்தானே நின்றனள். சுமதி எவ்விதமா யவளிடம் பேசவாரம்பிக்கலாமென்றுலோசித்துக்கொண்டே மெதுவாய் அவளிருக்குமிடம் நோக்கிவந்தனன்.

கதாரஸிகர்காள்! இந்தச்சுமதி யாரென்பீர்களோ? இவன் கோகுலம் தேவகீநந்தன பட்டாசார்யரென்பவரது ஒரே குமாரன். இவனது தாய் பதியிழந்து நான்கு வருஷம் சென்ற பின்னரே யிவன் பிறந்தவனாதலாலும் சுந்தரவடிவுள்ள ஷேக்தாஸ் என்னும் வர்த்தகன் அவளிடம் மிதமிஞ்சி வரத்துப்போக்கா யிருந்ததனாலும் கோகுலவாசிகளான பிராமணர்கள் நமது சுமதியை அவர்கள் கோஷ்டியில் சேரவிடுவதில்லை. சுமதிக்குப் பனிரண்டாம்வயதில் அவன்தாய் விஷமருந்தியிறந்தனள். பிதுரார்ஜிதமான தனத்தையெல்லாம் ஷேக்தாஸ் சுமதியின் தாயை எளிதில் வஞ்சித்துத் தனதாக்கிவிட்டான். தாய்தந்தையற்றுத் தனமிழந்து தவிக்கும் சுமதி ஊரார் வம்பைச் சகியாதவனாய் பிரயாகை தீர்த்தத்தில் விழுந்து பிராணனை விடுவதாய் நிச்சயித்து ஒருவருக்கும்சொல்லாமல் ஓரிரவில் கோகுலத்தினின்று புறப்பட்டுச் சிலநாட்களுள் பிரயாகை நகர்வந்து சேர்ந்தான்.

வந்த அன்று நடுநிசியில் சனச்சந்தடியற்ற மார்க்கங்களால் நகரினின்று வெளிப்பட்டு கங்கையும் யமுனையும் சங்கமிக்குமிடம் வந்து கரையோரமாய் சென்குத்தாய்நின்ற ஒரு பாராங்கல்மீதேறி விழுவதற்குச் சன்னத்தனாய்த் தன்னிஷ்டதெய்வத்தைத் தியானித்து நின்றான். திடீரென்று மணிநாரவம் காதில் படவே கலங்கினான்.

சில விட மித்திரர்களுடன் ஒரு துஷ்கிருத்தியநிமித்தம் தற்செயலாய் அவண்வந்த குரூபன் இவனது வரலாற்றை விசாரித்துத் தேற்றித் தன் மித்திரர்களுள் முக்கியனாக்கினன். அதுமுதல் குரூபனது குடிலவிஷயங்கட்கு மந்திரியாய் அவனிஷ்டங்களை நிறைவேற்றப் பலதந்திரங்களையும் செய்பவனாய்க் காலம்கழித்து வந்தனன்.



இக்கதையின் காலத்தில் நமது சுமதி மிகவும் வியாபகனா யிருந்தான். பிரயாகை நகரிலுள்ள பரத்தையர் யாவரும் முதற்கும்பிடு அவனுக்குத்தான் போடுவார்கள். புத்திசாதுர்யமும் ஆலோசனைத் திறமையும் தாரதம்யஞ்ஞானமு முடையவனாதலின் விலாஸினிகளுக் கிவன் வார்த்தைகளைக் கேட்பதில் அவா மிகுந்திருந்தது. காஞ்சனமாலை நம் சுமதியினிடம் பரதசாஸ்திரம் பயின்றவளாதலின் அவனிடத்தில் பக்தி விசுவாசம் நிறைந்தவளாய் இருந்தனள்.

காஞ்சனமாலையினருகில் வந்ததும் சுமதி, காஞ்சனம், "உனக்கு வயதென்னை?" என்றான்.

"திடீரென்று என் வயதை நீர் கேட்க வேண்டிய காரண மென்னை?" என்றாள் காஞ்சனம்.

"உன்னைப் பார்த்தால் யுவதியாய்த் தோற்ற வில்லை" என்றான் சுமதி.

"மெத்தவும் சந்தோஷமே" என்றாள் காஞ்சனம்.

"மன்மதனை வென்றவள் நீயே" என்றான் சுமதி.

"என்ன வம்பு இது" என்று வெறுப்புடன் சொல்லி முகத்தைத் திருப்பிக் கொண்டாள் காஞ்சனம்.

என்னை "நமக்குப் பேச இடம் தரவில்லை இவள்" என்று தனக்குள்ளேயே பேசிக்கொண்டு சில நிமிஷங்கள் பேசாது நின்று மறுபடியும் சுமதி,—

"காஞ்சனம், நீ என்ன ஜாதி, எனக்குத் தெரியச் சொல்" என்றான்.

புன் சிரிப்புடன் "நானா, நான் ஸ்திரீஜாதி" என்றாள் காஞ்சனம்.

"நல்லது, வீண் வார்த்தைகளா லென்ன? நான் சொல்வதைச் சற்று கவனமாய்க் கேள். நீ ஸ்திரீஜாதி யென்பது மாத்திரமல்ல. ஆகாயத்திலுள்ள பல நக்ஷத்திரங்களுள் ரோகிணி போல உலகிலுள்ள, பெண்களுக்கெல்லாம் நீயே யரசி. ஆயினும் ஜாதியில் வேசியாகின்றாய். ஆதலின் உன் ஜாதியின் முறைமைப்படி நீ ஒழுகுதல் அவசியம். ஜாதி தர்மத்துக்கு விரோதமாய்ச் செல்வதே தோஷமாகும். சந்திரன் பிராமண சிரேஷ்டர்கள் மாளிகைகளில் பிரகாசிப்பது போல் சண்டாளன் வீட்டிலும் பிரகாசிக்கின்றான் பார்த்தனையா? தனத்தைக் கொடுத்து ஆசையுடனுன்னை நாடுவோரை யெல்லாம் உயர்வுதாழ்வென்னும் பேதம் பாராட்டாது அங்கீகரித்தலே உனக்கழகாகும். உத்தம வருணத்திலுதித்த வித்வான்கள் நியமத்துடன் நீராடும் குளங்களில் தாழ்ந்த ஜாதியிற்றோன்றிய மூடனும் முழுகுவான். அழகிய மயில்கள் அன்புடன் அணைக்கும் பூங்கொடிகளைக் காக்கைகளும் சுதந்தரமாய் வந்தடையும். ராஜாதிராஜர்கள் ஏறிச்செல்லும் ஓடங்களில் நீசனும் ஏறிச்செல்வான். அது போலவே பொதுமகளாதல் பற்றி உன்னை விரும்பு மாடவரை நீ தடையின்றி நேசித்தல் வேண்டும். இந்தக் குரூபன் உயர் குலத்தினன். நமது அரசன் மைத்துனன். குபேரன் போல் தனாதிபன். நீயாய் இத்தகைய பிரபுக்களை விரும்ப வேண்டியிருக்க, உன் பாக்கியத்தால் அவனே உன்னைத்தேடி இவண் வந்தனன். நீ யோசியாமலே அவனது வேண்டுதலை மறுத்தனை. இப்

பொழுதும் ஒன்றும் மோசம் போக இல்லை. என்னுடன் வா, போகலாம்" என்றான் சுமதி.

"ஸ்வாமி, நீர் சொல்லியவெல்லாம் சரியே. ஆயினும் ஸ்திரீகளின் நேசத்தின் தன்மையை நீர் சரியாய் அறிந்திரல்லீர். நேசத்திற்குத் தனம் காரணமல்ல. அழகும் காரணமல்ல குணமொன்றே காரணமாகும். இந்தப்பையனிடத்தில் என்னகுணத்தைக்கண்டு நானாசைப்படுவது. முன்பின் ஒட்டாமல் தாறுமாறாய் பெண்களும் பரிகசிக்கும்படி எனக்குக் கடிதமெழுதியிருக்கின்றான். ஒரு வார்த்தைபேசுவதற்குள் ஆயிரம் பிதற்றுகின்றான். இம்மூர்க்கனை யிவ்வளவு பெருமைப்படுத்தி நீர் பேசுவது எனக்கே யாச்சரியமாயிருக்கிறது." என்றாள் காஞ்சனம்.

"நல்லது, காஞ்சனம்" என்று பதிற்சொல்ல வாரம்பித்த சுமதி குதிரை வீரர்கள் சிலர் அதிவேகமாய் வடக்கிலிருந்து வருவதைக்கண்ணுற்று யாவரெனவறிய விச்சையுடன் பேச்சை நிறுத்தினான். காஞ்சனமாலையோ பெருங்காற்றிலடிபட்ட இளம்வாழையையொத்துக் கலங்கிநின்றாள்.

மத்திமவயதுள்ள ஐந்துமனிதர்கள் குதிரைகள்மீது காணப்பட்டனர். பயங்கரமான மீசையும் கூரியநாசியும் செந்தணல்பொழியும் நயனமுமுடைய அவ்வீரர்கள் நடுவில் உச்சைசிரவஸ்ஸைப் பழிக்கும் லக்ஷணம் வாய்ந்த ஓர் வெள்ளைக்குதிரைமீது ஆழ்ந்தகண்ணும் நீண்டநெற்றியும் கோணற்கழுத்தும் தொப்பைவிழுந்த மார்புமுடையனாய் ஐந்தடியளவுள்ள ஒரு குள்ளன் ராஜவேஷத்துடன் தோற்றினான்.

இவ்வாமனப்பிரபுவே நாம் கூறிய துருபராஜதுரை. இவரது யோக்யதையோ அபாரம். ராமாயணபாரதபாகவத மிவையெல்லா மிவற்றுக்குத் தலைகீழாயும் தாறுமாறாயும் வரும். ஒரே அர்த்தமுடைய பலவார்த்தைகளை யலுப்பில்லாமல் அடுக்கக் கற்றவர். ஒன்றுமுதல் பத்துவரையில் அதிகப்பிசகில்லாமல் வெகுசாட்டியாய் எண்ணவல்லவர். ஸ்திரீகளில் நூறுபெயரானாலும் தனித்தனியாய்வந்தால் ஒரேவெட்டாய் வெட்டக் கூடிய சிப்பாய். முரட்டுத்தனத்திலும் புரட்டுசெய்வதிலும் தேர்ந்த வித்வான்.

சுமதியை, காஞ்சனமாலையை யழைத்து வரச்சொல்லிப்போன இக்காட்டுராஜர் இவ்வளவு சீக்கிரத்தில் திரும்பிவரக் காரணமென்னவென்று இக்கதை வாசிப்பவரில் சிலர் கேட்கக்கூடும். "எட்டாவது பிள்ளையை வெட்டக்கொடுத்தாற் போதும் அவன்தா னெனக்குச்சத்துரு" என்றுசொல்லி வசுதேவரிடம் அவர் முதற்குழந்தையைத் திருப்பிக்கொடுத்த கம்ஸன் மறுபடி சற்றுநேரத்திற்கெல்லாம் காராக்கிரகம்சென்று வசுதேவர்கையினின்றும் பலாத்காரமாய் சிசுவைப்பிடுங்கி பாராங்கன்மீதறைந்து உயிர்மாய்த்தகதை யறிந்திருப்பீர்கள். துஷ்டர்களது இயற்கை யிது. இயற்கைய பாபிகள் ஒருவரிடத்தும் விசுவாசம் வையார்கள். நாரதர்போன்ற கலகக்காரர்கள் இவ்வகையான நராதமர்களைத் தீச்செயல்களிலேவக் காத்திருப்பது சகஜமே.

(இன்னும் வரும்.)



## சோபாமணி.

கலாவான்:—(மிகுந்தகோபத்தோடு) "அடே! பஞ்சை! நீ கொடுங்கோன் மன்னன் கீழ்த்தான் வாழற்குரியன். அரசனாணைக்கு அமைந்து நடத்தலே தகுதியென்கிறாய். என்ன! அவன் கட்டளை காரணமற்றதும், நீதியற்றதும், தயையற்றதுமாயிருக்க, அரசன் ஆணைக்கு அமைந்து நடத்தலாவது, துஷ்டா! என்னவார்த்தை சொன்னாய்!" இங்ஙனம் கலாவான் உரத்தகுரலோடு பேசவே, சோபாமணி தவிர அங்குள்ள மற்றையோரெல்லாம் அப்பேச்சைக்கேட்டு வியப்புற்று உளம் நடுங்கி அசைவற நின்றுவிட்டனர்.

சோபாமணியினது முகத்தில் ஒரு புதிய ஒளிதோன்ற ஓடிவந்து கலாவான் காலின்கீழ் கொடி மின்னல் போல வீழ்ந்து, "நீரே என்னைக் காப்பாற்றவேண்டும். நீரே ஆண்மகன்; அரசனுக்குச் சொல்லவல்ல பிராஜ்ஞரே. என்னை எவ்விதமேனும் அந்தப்பாழும் ப்ரஷ்டனுக்குத் தாரைவார்த்து விடாமல் பாதுகாப்பீர் துரையே." என்று மன்றாடி வேண்டினள். இவ்வமயத்து அடுத்த கூடத்திருந்த பிரபுக்கள் இங்கே வேலைக்காரர் ஒருங்கு திரண்டதற்குக் காரணமென்னவென்று அறியுமாறு சோபாமணியிடம் குறுகினர். இவர்கள் வருதலைக்கண்ட அப்பெண்மணி மெல்லச்சென்று முன்போலத் தனது வேலையிலிருந்து விட்டனள். கலாவான் ஆங்கிலனை மிக்க ஆத்திரத்தோடு கையைப்பற்றி யீர்த்துத் தொழிற்சாலையின் புறத்தே போந்து "நீகூறியது உண்மையே; ப்ரெடரிக் மிகக்கொடியன்; அதனை இப்பொழுதெடுத்துரைத்து, ஆவதியாது; யான் இச்சிறுமியைக் காப்பாற்றும் உபாயங்கூறாய்" என்றான். இவனது சீற்றத்தை ஆற்றற்குப் பின்தொடர்ந்து சென்ற ஆபத்தரன் எனுமொருவாலிபன் "அன்பனே! நீ விரும்பும் செய்கை கோபத்தாலும் கொடுஞ்சொல்லாலும் இயலாது. யோசனையின்றிப் பேசுகின்றாய். இதனால் அப்பெண்ணைப் பாதுகாக்க நினைக்கின்றாய். இஃதுனக்கு அபாயமாமேயன்றி உபாயமாகாது. இது விவேகமன்று." என்று நயம்படக் கூறினன்.

கலாவான்:—(சினத்தோடும் வெறுப்போடும்) "நீ மிக விவேக

சாலி! விவேகத்தைக் கைவிடாதொழுகு யான் தைரியத்தைக் கைவிடேன்; தைரியமே எனக்குமுக்கியம்."

ஆபத்தரன்:—"நன்று! நன்று!! விவேகமும் தைரியமும் ஒன்றற்கொன்று ஒவ்வாப்பொருள்களோ?"

கலாவான்:—இவையெல்லாம் யான் அறியேன்; உனக்குத் தர்க்கஞ் செய்வதில் நோக்கம். அந்தப்பாழ்ந் தருக்கநூற்படி எவ்விஷயத்தையுங் குறித்து நியாயவாதஞ் செய்ய யான்வரவில்லை. நீ உனக்குத் தெரிந்த தருக்கமெல்லாவற்றினையும், சாதுரிய மனத்தையும் பேசு. ஏனெனில், நீ உன் நாவைக்கொண்டும் இறைக்கொண்டுமே ஜீவிப்பவன். ஆகவே, நீ அங்ஙனம் பேசுதல் உனக்கு ஒத்ததே. யானோ போர்வீரன். இப்போழ் தல்லாவிடினும் இன்னுஞ் சில நாட்களில் போர் வீரனாவேன். நினக்கு நாவும் பேனாவும் படைக்கலமானால் எனக்கும் படைக்கலங்களும் கருத்துக்களும் வேறிருக்கின்றன.

ஆபத்தரன்:—அவ்வாறேஇருக்க. நினது ஆயுதப்பெருமையை யானொன்றும் இழித் துரைக்க வந்தேனலன். ஆனால் யான் நின்னை வேண்டிக் கொள்வதியாதெனின் நினக்கு அவசியமான காலத்தில் என் கருவிகளும் துணை புரியுந் திறத்தன [illegible]மன நீ அறியக் கடவை யென்பதன்றி பின்றொன்றுமில்லை.

இங்ஙனம் அமைதியோடும் அன்போடும் ஆபத்தரன் அஞ்சாதறைந்த உத்தரம் கலாவானது வாயை யாதும் பேசவொட்டாது, பூட்டிட்டது. அப்பொழுது கலாவான் ஆபத்தரனது கையைப் பற்றிக் கொண்டு "உன்போல் உற்ற விடத்து உறுதிகூறும் உத்தம நண்பனில்லாவிடின், உள்ளங் கவர்ந்தெழுந்தோங்கிய சினத்தால் இக்கலாவானுக்கு யாது தீது நேருமோ? நல்லது; அன்பனே, இவ்வெளியபெண்ணின் திறத்தில் என் செய்யலாம்? இவளுக்கு நேர்ந்துள்ள இடுக்கணை எவ்வாற்றானேனும் யாம் ஒழித்து நலஞ்செய்ய நாடவேவேண்டும்" என்றான்.

பின்னர்ச்சிறிது ஆலோசித்து அவ்விருவரும், மிகத் தாழ்நிலையளாயினும் அன்னோன் எழுத்திற் செய்யும் விண்ணப்பத்தை அரசன் உடனே கவனித்து முடிவு செய்கின்றானென்னும் உண்மை அறிந்து, சோபாமணியின் பொருட்டு வேந்தனுக்கு ஒருவிண்ணப்பமெழுதி அதனையவன்பால் விடுத்து விடையை எதிர்பார்த்திரு



ந்தனர். ப்ரெடெரிக் மன்னன், போதஸ்தானத்து வதிந்தகாலையில், கலாவானுடைய தாயை அடிக்கடி போய்ப்பார்த்துச் சம்பாஷித்து வருவதுண்டு. அவள் கல்வி கேள்விகளால் மிகுந்து பலவிஷயங்கள் அறிந்து பெருமைபாராட்டற் குரியளாயிருந்தனள். அத்துணைக்கற்றுத் தேறிப் பெண்பாலாரில் சிறப்புவாய்ந்த மாதர் ப்ரஷியாவில் அக்காலத் திருந்ததில்லை. ஆகவே, அவளுடையகல்வி கேள்விகட்கு வியந்து அரசன் அவளிடத்து மேன்மைபாராட்டி வந்தான். அன்றியும், தான் அவளைக் கனப்படுத்தலால் அந்நாட்டு மற்றைப்பெண்களும் கல்விற் பயில முயலுவரென்று அரசன் அங்ஙனஞ் செய்து வந்தனன். இவ்வாறு காவலனும் கலாவான் தாயும் சம்பாஷிக்கும் அமையங்களிலெல்லாம் வேறு சிலகனவான்களும், முக்கியமாய் அப்பொழுது அவ்வேந்தன் சபையைச் சார்ந்திருந்த பிரான்ஸ்தேசப் புலவரும் உடனிருப்பதுண்டு.

இவ்வாறிருக்க, ஒருநாள் சோபாமணியின் விண்ணப்பம் மன்னன்பாற் சென்ற சின்னாட்பின்னர், வேந்தன் கலாவான் வீட்டிற்குச் சென்றிருந்தனன். அத்தருணத்து அங்குக்குழீஇ யிருந்த பலர் கல்வியைப்பற்றி உரையாடியவற்றை யெல்லாம் உற்றுக்கேட்டுக் கொண்டிருந்த ப்ரெடரிக்ராஜன் பொள்ளென ஆங்குடனிருந்த ஆங்கிலப் பிரயாணியைக் கிட்டி அவனைநோக்கி "நுந்தேயத்தராய விஜயவித்தன் என்பார் போர்ட்லாண்ட் (Portland) தேசத்தின் மட்கலம்போலவே மற்றொன்று செய்திலரா? என வினவினன்." அதற்காங்கிலன் 'ஆம் அவ்விரண்டிற்கும் வேற்றுமைதோற்றாது இயற்றியுளார்' என்றுரைத்துப் பின்னும் அதனைப்பற்றி ஒரு பெயற்ற ஆங்கிலக்கவி ஒரியற்றிய சிலபாடல்களைச் சொல்லக் கேட்ட ப்ரெடரிக்ராஜன், தானும் கவிஞனும் கவித்திறம் அறியவல்லவனும் ஆயினமையின், "ப்ரஷ்யதேச மட்கல வேலைப்பாட்டைக் குறித்து, யானோ சிலசெய்யுட்கள் இயற்றுவேன்" என்றியம்பினன்.

ஆங்கிலன்:—'ப்ரஷ்ய மட்கலமோ! யான் இப்பெர்லின் நகரம் விட்டேகுவதன்முன் அதனைப் பார்ப்பேனாக.''

ப்ரோடரிக்:—நீர் இன்னும் ஒரு திங்கள் இங்குறைவீரேல் அங்ஙனமே பார்ப்பீர். "ப்ரஷ்யா பீங்கான்" என இன்னுஞ் செய்யப்படவில்லை. ஆயினும், அதனைச் செவ்விதிற்செய்து முடிப்பார்க்குத் தக்க பரிசளிப்பதாக இன்றுயான் உறுதி செய்திருத்தலின்

அதனை எவரேனும் செய்வரே யன்றிச் செய்யாதொழியார். பொருளிலும் புகழிலும் நசையற்றோர் யாவர்? மனிதனுக்கு மனவலிமைகளும், அவயவங்களும் பரஷ்யாவி லுள்ளனபோலவே யன்றோ இத்தலி, இங்கிலாந்து முதலிய தேயங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன? அந்நாடுகளி லுள்ளார்க்கு ஒன்றின் முக்க தலைகளும் பத்தின் மிக்க விரல்களும் உளவோ? இலவே. அங்ஙனமாக, இந்நாட்டினுள்ளும் அவ்விதவேலைகள் செய்தலாகாமை என்னை? பார்ப்பேன். (லானிஸ்காவை உற்று நோக்கி) பெர்லின் நகரத்துள்ள சிறுமட்கல வேலைச்சாலையில் அதிபுத்தி யுக்திசாலினியாகிந ஒரு பெண்மணி யிருக்கின்றாள். அவளோ தனது ஆசைக்கினியாத நாயகனொருவனை உடன்கொண்டு ஸாக்ஸனிக்குச்செல்ல ஆவல் கொண்டுளாள். பொறிப்பிடிபட்ட மற்றைச்சிறைநளைப் போல அவளும் தன்னைச்சிறைப்படுத்திய மன்னனுக்குப் பொருளை யிட்டியோ புத்தியைக்காட்டியோ, இவ்விரண்டி லொன்றினால், திருப்தி செய்து செல்லற்குரியள். ஈதன்றி உரிமையடைய உபாயம் வேறிலது. அரசனுக்குத்தனது ஆணையைநடாத்த ஆற்றலுளதோ இலதோ? அவனுக்கு அடங்கியே ஒழுகவேண்டும்.

இவ்வாறு ப்ரெடரிக் அரசன் சதிதியிலுரைத்திட்டுத் தக்கணமே அவ்விடம்விட்டுப் பெயர்ந்து செல்ல, லானிஸ்கா பெர்லின் நகரத்திருக்கையில் அவன் ஆராய்ச்சியின்றி அரசனைப்பழித்துரைத்த இழிமொழி அவன்றன் செவிக்கெட்டியதெனவும், அதனால் லானிஸ்காவுக்குப் பெருந்துன்பம் விளையுமெனவும் அவன்றன் நண்பர் கூறினர். ஆயினும், அதனைச் சிறிதும் பாராட்டாது, வேந்தன் பெருந்தகைமையோடு லானிஸ்காவை மற்றைநாள் ஸான்ஸூஸியில்வருவித்து, முன்போல அன்பும பெருமையுங் காட்டி ஆதரஞ்செய்தான். அதுகண்டு வெள்ளைமனமுடைய லானிஸ்கா தனது ஒழுக்கத்தால் மனம்புண்பட்டு வேந்தனடிமீது வீழ்ந்து தொழுதெழுந்து "என் ஆண்டவனே அடியேன் நுந்தம்மைத் தாமதமேலிட்டாற் கொடுங்கோன் மன்னனென்று கூறியிருப்பினும் அக்குற்றங்கொண்டு குணக்குன்றாகிய நீர் அடியேனை ஒறுத்திடாது பொறுத்தருளவேண்டுமென்கின்றேன். "வேந்தன் சீறினுந் துணையில்லை." அரசன் சினத்திற் காளாயினனுக்கு அடைக்கலமேது? கடல்பெருகி மேலிட்டால் அதற்குக்கரையுண்டோ? பழைக்குக்குடைபிடிக்கலாம்: இஷக்குக்குடையுளதோ? "சிறியரானவர் தமக்குரியவே யல்லவோ தீமை நன்னூலறிஞரானவர் தமக்கல்லவோ பொறைபிறர்க் காகுமோதான்," "சிறுத்தவர்க ளறியாமற்செய்த பிழையத்தனையுஞ் செவ்வியோய் நீ பொறுத்தருளாய்," "வாரிகாய்ந்து கொதித்திடின்மாறறத் தண்-ணீரி யாவர் தருவாந் நீதியிற் - சீரியாயெனை நீயிகச்சீறிடின் - யாரியாரினியஞ் சலென்றுளவரோ" என்றிங்ஙனம் பலவாறு பணிந் திரந்தனன்.

(இன்னும்வரும்.)



## காலத்தின் அருமை.

"ஒவ்வொருநாளு முயிரின் பகுதியே."

உலகத்திலடையக்கூடிய எல்லா நன்மையும் காலத்தைப்பற்றியதே. அநுபவிப்பதற்குக் காலமில்லாவிடின் சிநேகிதராலேனும், புத்தகங்களினாலேனும், சவுக்கியத்தினாலேனும், தேசசஞ்சாரவின்பத்தினாலேனும், என்ன பயனையடையலாகும். காலத்தைப்பணத்திற்கொப்பிடுவது வழக்கம். உயிரிற்கு ஒப்பிடுவதே மேன்மை. நாம் பயனின்றிகழிக்கும் க்ஷணங்களை யுகங்கள் புரளினும் மறுபடியும் அடையலாகுமோ. தேகப்பயிற்சியிற் காலத்தைக் கழிப்பின் வீண் என்று பலர் சொல்லுகின்றனர். அவ்வாறு கூறுதல் மிகவும் மூடத்தனமே. தேகப்பயிற்சியினால் நீடித்த வாழ்வையடைவதுடன் நோயற்றவாழ்வையுமடையலாகும்.

சிலர்க்கின்பமும் சிலர்க்குத்துன்பமும் ஒரேகாலவளவையைச் சிலர்க்கதிகமாகவும் சிலர்க்குக்குறைவாகவும் குற்றத்தைச்செய்வித்தும் அதனை வெளியிட்டும் ஆகிய இத்தகைய மாறுதலையுடைய குணங்களுக்குத் தலைவன் காலம். மற்றும் காலம் மனிதர்களுக்குத் தகுந்தாற்போல நடக்கின்றது. சிலரிடத்ததன் செலவு நடிப்பதைப்போலும். சிலரிடத்து மெதுவாகப்போகின்றது. சிலரிடத்துத்தாழ்கின்றது. கல்லாத மூடனிடத்து நடிக்கின்றது. காதலால் வருந்துபவரிடத்து மிகவும் மெதுவாகப்போகின்றது. விடுமுறை காலங்களில் நியாயவாதிகளிடத்துத்தாழ்கின்றது.

சோம்பேறிகளே ஒரு காரியத்தைச்செய்யக்காலமில்லையென்பார்கள். "வேண்டுமென்று நூற்றால் வெண்ணெய்போல் நூற்கலாம்." இஷ்டமிருந்தால் எதுவும் முடியும், "கணக்கன் கணக்கறிவான்

தன் கணக்கைத்தானறியான்" என்றாற்போல முயற்சி செய்யாமலே காலத்தின்மேற் பழியிடுவாரனேகர். வீணே காலத்தைக்கழிக்காமல் வாழும் வாழ்க்கையே மேலானதெனப்புகழலாம்.

ஒரு பொருளை யின்றைக்குச் செய்யலாம் நாளைக்குச் செய்யலாம் என்று நினைத்தல் மடைமை. செய்யவேண்டியதை யுடனே செய்யவேண்டும். காலமாகிய செம்படவன் மனிதர்களாகிய மீன்களைப்பிடிக்க அவரவர்களுக்குப்பிரியமான உணவைத் தூண்டிலில் வைத்துப்பிடிக்க முயலுகின்றான். சோம்பேறிகளே சீக்கிரத்திலவன் தூண்டிலிற் சிக்கிக் கொள்கின்றார்கள். அவன் வெறுந் தூண்டில் முள்ளையும் விழுங்குகின்றார்களாகலின். மாந்தர்தம் மனத்தைத் திரிகைவட்டத்திற்கு ஒப்பிடலாம். அத்திரிகைவட்டத்தில் அரிசியைப்போட்டால் மாவாக்குகின்றது. வீணே சுற்றினால் தானே அறைந்து குறைந்து அழிகின்றது.

காலம் பறப்பதாகப்பலர் கூறுவார்கள். காலத்தை வீணே கழிக்கும் நம்மினும் அது ஓடவில்லை. ஆங்கில மகா கவி ஷேக்ஸ்பியர் "முதலில் யான் காலத்தைக்கழித்தேன்; இப்பொழுது காலம் என்னைக்கழிக்கின்றது" என்று கூறுகின்றார். மனிதர்களுக்கு வயது எழுபது என்னலாம். இவ்வெழுபது வருஷங்களில் நம்முடையதென எவ்வளவைப்பாவிக்கலாகும். உறங்கவேண்டிய காலத்தையும், உண்ணுங்காலத்தையும், உடுக்குங்காலத்தையும், தேகப்பயிர்ச்சிக்கு வேண்டிய காலத்தையும் கழித்துவிட்டால் எத்தனை காலம் மிஞ்சுகின்றது! சில காலம் நம்மிடத்தினின்று எடுத்துக்கொள்ளப்படுகின்றது. சிலகாலம் நம்மிடத்தினின்றுந்திருடப்படுகின்றது. சிலகாலம் நம்மிடத்தினின்றும் நழுவிவிடுகின்றது. காலத்தை எவ்விதத்தில் செலவழித்தாலும் மறுபடியுமடைதல் முடியாது. நாம் அடையக்கூடிய இன்பவாழ்க்கையை மிகுதியும் வீணாக்குகின்றோம். தெய்வசங்கற்பத்தால் ஒருவனடையும் துன்பத்தை நீக்கினாலும் தானாகவே மேற்கொண்ட துன்பத்தையொருகாலும் ஒழிக்கலாகாது.

'ஒவ்வொரு நாளுமுயிரின் பகுதியே.' இச்சென்னையில் வசிப்பதன் நன்மையை யிவ்வளவெனற்பாலதோ? இவ்வுலகிற் பயிலப்படும் நூல்களையெல்லாம் எளிதில் அடையக்கூடுமன்றே! அனேகர் பலபொருட்காட்சிச்சாலையை (Museum) நன்றாய்ப்பார்த்ததில்லை என்று திண்ணமாய்க் கூறலாம். அக்காட்சிச்சாலையில்



என்னென்ன இருக்கின்றன! நாம் சாதாரணமாகக் காணும் மிருகங்களினுருவங்களும், ஊழி ஊழி காலங்களுக்கு முன் உயிருடனிருந்து இப்பொழுது கல்லாகிய பொருள்களும், அழகுறும் பட்சியுருவங்களும், தங்கம், செம்பு முதலிய உற்பத்தியாகும் மணல்களும், இன்னும் பலவகைப்பொருள்களும் காணலாகும். மற்றும் நம் பழைய அரசர்கள் உபயோகித்த படைக்கலங்களும், நாணயங்களும் பார்க்கலாகுமன்றே.

பிரம்மமேதாமென்று பாசாங்கு செய்துகொண்டு திரிபவர் பயனின்றிக்காலங்கழிக்கின்றனர். மேலான வேறுலகக்கனவுகண்டுகொண்டு இவ்வுலகவாழ்விற் பயனில்லையென்கின்றனர். அவர்கள் கொள்கை நகையாடுவதற்கேற்றதாகும். பயனின்மை உலகத்திலில்லை அவர்களிடத்திற்றானிருக்கின்றது. அல்லியினுருவமெவ்வாறுண்டாயதென்றும், நீலோற்பலத்தில் வர்ணமுண்டாயவாறும் ரோஜாமலரின் வாசனையுண்டான தன்மையும் அறியாமையினாலும், விஷத்தின் கொடுமைக்குக்காரணமுணராததனாலும் அவர்கள் அவ்வாறு கூறுகின்றனர். எப்பொ[illegible]கயரசியோ தன்னை யாவருமெளிதிலுணருமா[illegible]வோயிருக்கின்றனள். பேதை மனிதர் சிறி[illegible]ற்றி வருந்த வேண்டியதே. ஏ! மாந்தர்கா[illegible]ர்களுங்கள். எதையேனும் செய்யுங்கள். எதையு[illegible] பயனின்மையைப்பற்றி யினிக்கூறாதேயுங்கள்.

காலமோ இளமையின் விரோதி. அதனை இளமையிற் பயன்படுத்தாமற்போனால் துன்பத்தைப்பின்னர் விளைக்கும் என்பதற்குச்சந்தேகமேயில்லை.

சருக்கை-இராமசாமி ஐயங்கார், பி. ஏ.

---

## நீலா.

---

அடேயண்ணா, எத்தினை நாளாச்சுடா நாம்போ ஊரே விட்டு புரப்பட்டு. இவன்தான் என்னமோ பொம்மனாட்டி பொண்ணுக்கு திரியரான். நமக்கென்னடா லாபம்.

தம்பி, அப்படி செல்லாதடா. நமக்கு கஞ்சிவாக்கிரான். நாம் சொன்ன வேலையை செய்யணும்.

யண்ணு, இன்னம் கொஞ்சம் கள்ளு குடிக்கலாம் வரயா.

தம்பி, நீ சொல்லரது சரிதான். "கையிலே காசுயில்லே மொவத்திலே பொலிசில்லே" என்னற மாதிரி பணமில்லையே.

யண்ணு, நம்ம எசமா இருக்கிற இடத்துக்கு போவலாம்வா. நம்மை தேடினால் என்ன செய்யரது. போவோம்வா.

இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டு போகையில் மயக்கம் விஞ்சினமையால் தங்களுடைய புத்தி ஸ்வாதீனத்தில் இல்லாமல், ஒருவருக்கொருவர் வித்தியாசமாய்த் திட்டிக்கொண்டு சண்டையிட்டார்கள். இவர்களுடைய சண்டையைப் பார்க்க ஜனங்கள் திரளாய்க் கூடி விட்டார்கள். இதனை யறிந்த கிராமாதிகாரிகள் இவ்விரண்டு பேரையும் சிறையிலிட்டார்கள். வேலையாட்களும் போய், தான் கோரிவந்த எண்ணமும் நிறைவேறாமல் போய் விடவே, ஏகாம்ரம் சித்தப்பிரமை கொண்டு ஊர் ஊராய்த் திரிந்து கொண்டிருக்கிருன்.

## இரண்டாவது அத்தியாயம்.

இஃதிங்ஙனமிருக்க மாணிக்கத்தினுடைய தாய், விருத்தாப்பியத்தில் பொறுக்கமுடியாத வியாதியால் தேகதொந்திரவுபட்டுத் தன்னுடைய புருஷன்சென்ற "முதலில் யாரேனும் சென்றனள். மாணிக்கம் தன்னுடைய தாய்க்கு நடனைக்கழிக்கின்றது" சடங்குகள் யாவையும் குறைவில்லாமல் நடத்தினன். தாய் எழுபது என்னலாம். யுடன் கூடிய அன்னம்அளிப்போர் யாருமில்லை தாய்க்குப்பின்தாரம்", என்றபடி விவாகமாக யதென எவ்வளவைப்பா ஆகாரம்கிடைக்கும் அதுவும் இல்லையே யென்று துக்கிப்பான். படிப்பாவது நிறைவேறுமோவெனில் ஆதரிப்போர் யாருமில்லையே, எப்படி நிறைவேறுமென்று வியசனப்படுவான். ஏதாவது ஒருவேலையில் அமர்வோமெனில், தெரிந்த மனுஷ்யர்கள் யாருமில்லையேயென்று அழுவான். தன்னுடையகதி திக்கதியாய்விட்டதேயென்று வியசனாக்கிராந்தனயிருக்கும் வேளையில், தன்னுடைய பிராணசிநேகிதன் சங்கரன் திடீரெனவந்து, 'மாணிக்கம்! என்செய்கிறாய்? உன்னைப்பார்த்தால் வியசனத்தில் ஆழ்ந்தவனாகத் தோன்றுகிறது. தாய் இறந்துவிட்டாளே என்று வியசனப்படாதே. என்ன, நீ படியாதவனா உனக்குதெரியாதது என்ன இருக்கிறது, தாயுமானஸ்வாமிகள் சொல்லியிருக்கிறது உனக்கு ஞாபகமில்லாவிடில் சொல்லுகிறேன் கேள்.

> தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
> சந்தையிற் கூட்டமிதிலோ
> சந்தேக மில்லைமணி மாடமா ளிகைமேடை
> சதுரங்க சேனையுடனே
> வந்ததோர் வாழ்வுமோ ரிந்த்ராஜா லக்கோலம்
> வஞ்சனை பொறாமை லோபம்



> வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
> வாஞ்சனையிலாத கனவே
> யெந்தநா ளுஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
> யிரவுபக லில்லாவிடத்
> தேகமாய் நின்ற நின்னருள்வெள்ள மீதிலே
> யானென்ப தறவுமூழ்கிச்
> சிந்தைதான் றெளியாது சுழலும்வகை யென்கொலோ
> தேடரிய சத்தாகியென்
> சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
> தேசோ மயானந்தமே.

நீ யொன்றுக்கும் வியசனப்பட வேண்டாம். நானிருக்கிற வரையில் உன்னைக் கைவிட்டு விடுவேனென்றெண்ணுதே. எதற்கும் ஈச்வரனிருக்கிருன். அவனில்லாமல் யாதொன்றும் நடவாது. நான் உனக்குச் சந்தோஷ சமாசாரம் சொல்லப் போகிறேன். அதாவது எனக்குக் கலியாணம் நிச்சயஞ்செய்து எல்லாரும் போவதற்குப் பிரயாணமா யிருக்கிருர்கள். உன்னை அழைத்துக்கொண்டு போக ஓடிவந்தேன். ஆகையாலுடனே புறப்பட வேண்டும்.

மாணிக்கம். அப்பா சங்கரா! நிரம்ப சந்தோஷமாச்சு, கலியாண மெவ்விடத்தில்? யாருடைய பெண்? பெண்ணின் தகப்பனுருக்கு என்ன வேலை?

சங்கரன். பெண்ணின் தகப்பனுருக்கு சுமார் முப்பது ஏகரா நிலமிருப்பதாயும், பத்தாயிர ரூபாய் வெளியில் லாவா தேவி யிருப்பதாயும், ஒரே பெண், வேறு பிள்ளை கிடையாது என்றும் சொல்லுகிருர்கள். கலியாணம் வேலூரில் நடக்கிறது. வெகு பெயர் வருவார்கள். நிரம்பவும் விமரிசையாய் நடக்கும் போல் தோன்றுகிறது. நீ வராவிடில் எனக்கு மனக்குறையாயிருக்கும், நீ அவசியமாய் வரவேண்டும், மறுக்கக்கூடாது.

மாணிக்கம். ஐ. சங்கரா! நீ என்னை ஒருபொருட்டாய் நினைத்துக்கூப்பிடும் பொழுது வரமுடியாதென்று எவ்விதமுரைப்பேன். மேலும் நீ தவிர எனக்கு இஷ்டமுள்ளார் யாவரிருக்கின்றனர். யானுமிதோ வந்துவிட்டேன்.

என்று சொல்லிக்கொண்டே தனக்கு வேண்டிய உடுப்புக்களை எடுத்துக்கொண்டு சங்கரனுடன், அவன் வீட்டிற்குச்சென்ருன். அங்கிருந்தெல்லோரும் பிரயாணமாய் வேலூர் சேர்ந்தார்கள். பெண்வீட்டுக்காரர் இவர்கள்வருகிற சங்கதியறிந்து, மேளவாத்தியத்துடன் எதிர்கொண்டழைத்துப்போய் நியமித்திருந்த விடுதியில் இறக்கினுர்கள். மறுநாள் கலியாணம் வெகு சிறப்புடன் நடந்தது. கலியாணத்திற்குப் பந்துஜனங்களும், மித்திரர்களும் வந்திருந்தார்கள். ஐந்துநாள் கலியாணச்சடங்குகளும் நிறைவேறி ஆறுநாள்

ஊருக்குத்திரும்பப் பிரயாணமானார்கள். மாணிக்கமும் சங்கரனும் ஓர் தனி வண்டியில் உல்லாசமாய்ப் பேசிக்கொண்டுவருகையில், சங்கரன் மாணிக்கத்தைநோக்கி, "உனக்கு சீக்கிரத்தில் கலியாணமாகவேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை" என்றனன். அதற்கு மாணிக்கம் "ஏ சங்கரா, நான் பரமஏழை, நித்யதரித்திரன்; எனக்கு யாரும் மனுஷ்யர்கள் இல்லை. உண்ணச்சோற்றுக்கும், உடுக்கத்துணிக்கும், இருக்க வீட்டுக்கும் கதியில்லாமலிருக்கிற எனக்கா கலியாணம். முடவன் கொம்புத்தேனுக்கு இச்சிப்பதுபோலிருக்கிறது. நீ இல்லாமற்போய்விட்டால் என்னுடையகதி தாய்இறந்தபிறகு எம்மாதிரியாயிருக்குமென்பதை நீயே சற்று ஆலோசித்துப்பார்" என்று சொல்லிவிட்டுக் கண்ணில் தாரைதாரையாய் நீரொழுகப் புலம்பினன். சங்கரன் பார்க்கச்சகிக்காமல் தானும் வியசனப்பட்டுப் பிறகு சிறிதுதெளிந்து, மாணிக்கத்திற்குத் தேறுதல்சொல்லி, அவனை வியசனத்திலிருந்து மாற்றுவித்தான். இதற்குள் ஊருக்கும் வந்துவிட்டார்கள். ஊர்சேர்ந்ததும் மாணிக்கம் தன்னுடைய குடிசைக்குச்சென்று சமையல்செய்து சாப்பிட்டு உறங்கினன். சங்கரன் மறுநாட்காலையில் எழுந்து தன்னுடையதகப்பனுருக்கு வழியில் தனக்கும் மாணிக்கத்திற்கும் நிகழ்ந்தவைகளைச்சொல்லி, அவனுக்கு ஒரு வீடுவிடும்படியான ஏற்பாடுசெய்தான். மாணிக்கமும் அவர்கள்கொடுத்த இல்லத்தில் வசித்துவந்தான்.

இது இப்படியிருக்க, நீலா என்ன நிலைமையி லிருக்கிறாளென்பதைச் சற்றுக் கவனிப்போம். திருவத்தியூரில் பிரதிதினமும் அந்திவேளையில் வேதபுரீசர்கோயிற்குச் சென்று, அவரைத்தரிசித்துப்பிறகு பாலகுசாம்பாள் சந்நிதிக்குச்சென்று அம்மனைக்கண்டு யான் இவ்வண்ணமாக எத்தனைநாளைக்கு இருப்பதென்று எண்ணி:

"பூரணிபுராதனி சுமங்கலைசுதந்தரி
புராந்தகிதிரி யம்பகியெழில்
புங்கவி விளங்குசிவ சங்கரிசகஸ்ரதள
புஷ்பமிசை வீற்றிருக்கும்
நாரணிமனோதீத நாயகிகுணாதீத
நாதாந்த சக்தியென்றுன்
நாமமேயுச்சரித் திடுமடியர்நாமமே
நானுச்சரிக்க வசமோ
ஆரணிசடைக்கடவு ளாரணியெனப்புகழ
வகிலாண்டகோடி யீன்ற
அன்னையே பின்னையும் கன்னி யென மறை பேசு
மானந்த ரூபமயிலே,
வாரணியு மிருகொங்கை மாதர் மகிழ்கங்கைபுகழ்
வளமருவு தேவையரசே
வரைராஜனுக்கிருகண் மணியாயுதித்தமலை
வளர்காதலிப் பெண்ணுமையே."



ளைப் பிரார்த்தித்து, தான் வசிக்கும் மனைக்குச் செல்லுவாள். இவ்வண்ணம் சிலநாள் கழித்துப் பின்னர் தான் கோரிய நகரத்திற்குச் செல்லப் பிரயாணமாகி, காஞ்சீ எவ்வளவு தூரமிருக்குமென்று விசாரித்ததில், சுமார் இரண்டு காதமிருக்குமெனத் தெரிந்து, செல்லுகையில் குறுக்கே திரிபுவனங்காடு தோன்றியது. அக்காட்டிலோ, மயில்கள் தோகைகளை விரித்து நடனம் பண்ணிக்கொண்டு தங்களுடைய அநேக கண்களாலேயும் நீலாவினுடைய அழகைப் பார்க்கின்றன. மான்கள் அருகில் வருகின்றன. ஓர் மயில் சாந்தன் புஷ்பத்தின் அரும்பைக் கண்டு பாம்பென்று கவ்வ, அதைக் கண்டிருந்த பெண்மயில் பரிகாசமாக நகைப்பதையும், யானைக்குட்டிகளும், சிங்கக்குட்டிகளும் ஒருங்கு சேர்ந்து விளையாடிக்கொண்டிருப்பதையும், புஷ்பித்திருக்கிற கொம்புகள் நதியின் அலையிலே தோய்ந்து தோய்ந்து முழுகுகிற ஸ்திரீகள் போல விருக்கின்றதையும், கொங்குப் புஷ்பத்தில் வண்டுகள் நித்திரை பண்ணுகிறது, பொற்றட்டிலே நீலரத்தினம் பதித்திருப்பது போல இருப்பதையும் பார்த்துக் கொண்டே நடுக்காட்டில் வந்தார்கள். இவர்கள் வந்தது வசந்தகால மாகையால், புத்தியீனர்கள் சேரும் வேசைகள் மனம்போலப் பசையற்று இலைகளுதிர்ந்து மொட்டையாய் அனேக மரங்களிருந்தன. ஓர் பக்கத்தில்தளிர்த்தும், புஷ்பித்தும் இருந்த சிலமரங்களிடத்தில் நானாவிதமான பக்ஷிகள் தங்கி, தம்முடைய இனிய குரலினால் பாட்டுக்கள் பாடிக்கொண்டிருந்தன. மற்றோர் பக்கலில் காட்டு மிருகங்கள் அங்கு மிங்கு மோடித் திரிந்து கொண்டிருந்தன. இவைகளை யெல்லாம் கண்ணாரக்கண்டு ஆனந்தமடைந்து காட்டைக்கடந்து செல்லுகையில் க்ஷீரநதியைக்கண்டு அதில் நீராடி, போஜன முண்டு, வெயிலுக்குச் சற்று இளைப்பாறி, ஆற்றைக் கடந்து செல்லுகையில் ஸ்ரீ ஏகாம்பரநாதருடைய கோபுரத்தைக் கண்டு தியானஞ் செய்து வணங்கி அப்புறம் நடக்கையில் வேகவதி ஆற்றைக் கண்டு அதையுங் கடந்து ஊர்க்குச் சென்றார்கள். இராக்காலமானதால் ஓர் சத்திரத்தில் தங்கி அன்றிரவை யோர் யுகமாகக் கழித்து விடிந்தவுடன் தன் அத்தை மகன் வாழ்மனை தேடி, அதற்கடுத்தாற்போலொரு குடியிருப்புவீடு வாடகைக்கு அமர்த்திக்கொண்டார்கள். அவ்வகத்தில் வாசஞ்செய்துகொண்டு பிரதிதினமும் கோயிற்குச்சென்று கடவுளைக்கண்டு தன்னபீஷ்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று பிரார்த்தித்து வீட்டிற்குத் திரும்புவார்கள்.

(இன்னும் வரும்.)

## சுகவிதிகள்.

நமது தேகத்தின் அவயவங்கள் ஒவ்வொன்றும் தன் தன் தொழிலைச் செம்மையாய்ச் செய்ய அவசியமானவை நான்கு. அவை வாயு, ஆகாரம், சரீரப்பயிற்சி, சுத்தம். இவை ஒவ்வொன்றும் சரியான நிலைமையிலிருக்கவேண்டும்.

நம்மைச்சுற்றிலுமுள்ள வாயுவில்போல ஐந்தில் ஒருபங்கு பிராணவாயு இருந்தால் தேகத்தைப் போஷிக்கத்தக்கதென்று வாயுவை எண்ணலாகும். நன்றாய்க்காற்றுநுழைந்துலாவமாட்டாத அறையிலுள்ள பிராணவாயுவோ சீக்கிரத்தில் குறைந்துபோகிறது. இப்படிப்பட்ட சமயங்களில் நாம் விடும் ஒவ்வொருசுவாசமும் நமது சுகத்துக்குக் கேடானதே.

ஆகையால் நாம் தங்கியிருக்கும் இடமும் நித்திரைசெய்யும் இடமும் விசாலமாய் உயர்ந்த கூரைகளுள்ளதாகவாவ திருக்கவேண்டும், அல்லாவிடில் வெளியிலிருந்து காற்று தாராளமாய் வரும்படியாகவாவது இருக்கவேண்டும். பள்ளிக்கூடங்களிலும் பலர் கூடுமிடங்களிலும் காற்று நன்றாய் உலாவவேண்டும். காற்று வெளிப்புறங்களில் சுத்தமாயிருப்பதுபோல் வேறெங்குமிராததாலால் அவ்விடங்களில் ஒவ்வொருவரும் பிரதிதினமும் சிலமணிகாலம் போயுலாவவேண்டும்.

ஆரோக்கியமான ஆகாரம் வாயுவுக்கு இரண்டாவதாய் சரீரத்துக்கு அவசியமானது. நாம் சாப்பிடும் உணவுகளில் சில எண்ணெய் கலந்தபதார்த்தங்களாயும், பழங்கள் பருப்பு முதலியன போல சீக்கிரம் ஜீரணமாகாத கடின பதார்த்தங்களாயு மிருக்கின்றன. இவைகளால் வயிற்று நோவுண்டாய் ஜீரணத்துக்குக் குறைவுண்டாகு மாதலால் இவைகளை நீக்க வேண்டியது, அல்லது மிதமாய் உபயோகிக்கவேண்டியது.

சாதாரணமாய் உபயோகிக்கும் பானவகைகளில் சாராயம், கள், இவை போன்ற லாகிரி பதார்த்தங்கள் ஜீரணசக்திக் கருவிகளைச் சேதப்படுத்தும். பானவகைகளிலும் உணவிலும் சரியான பதார்த்தங்களை யுபயோகிப்பதோடு மிதமாயுண்ணவேண்டும். பொய்ப் பசியால் ஏமாந்து நம்மைப் போஷிக்க வேண்டிய அளவுக்கு மிஞ்சி உண்போமேயானால் நமது ஆகாரப்பையை அளவுக்குமிஞ்சி நிரப்புவதோடு பலவித தீங்குகளுண்டாகும்.

மிதமான சரீரப் பயிற்சி சுகத்துக்கு அவசியம். நாம் உள்ளுக்கு உண்ப தெல்லாம் கழிய இடந்தரவே. புதிதாய் ஆகாரம் உள்ளே போனதும் அதற்குச் சமமான வஸ்து வெளியே கழிகின்றது. ஆகையால் மறுபடியும் ஆகாரம் புதிதாய் வேண்டியிருக்கிறது. உள்கொள்ளுவதும் கழிவதும் சில சமயங்களில் குறைந்து விடுகிறது. அது சரியான நிலையிலிருக்க மனதுக்கு உற்சாகமும் சரீரத்தில் ஊக்கமும் வேண்டும். ஏனெனில் நமது தேகத்தின் நரம்புகள் உற்சாகத்தோடு உழைப்பதால் இரத்தத்திலிருந்து மேலும் மேலும் சாராம்சத்தை அடைகின்றது.



நமது நெற்றிவேர்வை நிலத்தில்விழ உழைத்து உண்ணக் கடவுள் ஏற்பாடு செய்திருக்கிறார். ஆகையால் உழைப்புக்கேற்க நமக்கு அங்கங்கள் அமைந்திருக்கிறது. கடவுளால் எதற்காக இந்த அங்கங்கள் ஏற்பட்டனவோ அந்தவழியில் மிதமாய் நாம் அவைகளையுபயோகித்தால் ஏற்படுத்திய எண்ணமும் நிறைவேறுகிறது, சுகத்தையும் அடைகிறோம். சோம்பலினாலாவது துர் அப்பியாசத்தினாலாவது நமது அவயவங்களை நாம் உபயோகியாததால் பலவீனமும் வியாதியும் உண்டாகின்றன.

சரியான சரீரப்பயிற்சியில்லாது சுத்தவாயுவுமில்லாவிடின், சுகத்துக்குநேரிடும் இடையூறுகள் அதிகரிக்கின்றன; என்றாலும் மனமும் சரீரமும் அளவுக்கு மிஞ்சி உழைக்கப்படாது. அளவுக்கு மிஞ்சினால் அவை சேதமடைந்து மரணமும் நேரிடும்.

சுகத்திற்குத் தேவையானவைகளில் நான்காவது சுத்தம். தினமுங் கழுத்துவரையிலுமாவது தலைக்குங்கூடவாவது ஸ்நானம் செய்வதும் நாம் உடுக்கும் உடைகளை மாற்றுவதும் நமது தேகத்தின் மேலுள்ள தோல் தன் தொழிலைச் செய்ய அநுகூலமானவை. இது தெரியாததினாலோ, கெட்ட வழக்கத்தாலோ அநேகர் குளிப்பதில்லை. இதனால் தங்கள் சுகத்தைக் கெடுத்துக்கொள்வதோடு பக்கத்தில் வருபவர்களுக்கும் அருவருப்பை உண்டாக்குகிறார்கள். நமது உடைகள் எவ்வளவு கந்தையாயிருந்தாலும் சுத்தமா யிருப்பது அவசியம். நமது அறைகளில் ஓதமில்லாமலும் குப்பையில்லாமல் விளக்கப்பட்டு காற்றுலாவவும் வேண்டும். நமது தேகத்தையும் வீட்டையும் எவ்வாறு சுத்தமாய் வைக்க வேண்டுமோ அவ்வாறே நாமிருக்கும் தெருவும் பட்டணமும் தினமும் சுத்தஞ் செய்யப்பட்டு சாக்கடைத்தண்ணீரையும் பட்டணத்துக்குச் சமீபத்தில் தங்கவிடாது அப்புறப்படுத்தவேண்டும். இளம்பிராயத்திலேயே சுத்தியாயிருத்தல் அவசியம். அவ்வழக்கம் ஒருவனுக்குண்டானால், பிறகு ஒரு நாளும் அதைக் கைவிடான்.

## சமயத்துக் கேற்ற புத்தி.

### (ஒரு கதை).

திருவண்ணாமலைக்கும் போளூருக்கும் மத்தியில் முன்னாட்களில் தக்க பாதையில்லாமல் பெருங்காடாயிருந்தது. அக்காலத்தில் ஒருநாள் ஒருவித்துவான் போளூரைவிட்டு திருவண்ணாமலைக்குப் பிரயாணமாய் அக்காட்டுவழியாகப்போனார். அக்காட்டில் நுழைந்ததும் நான்குபேர் திருடர்கள் ஏகோபித்து அவர்மேல் விழுந்து தங்கள் தடியால் மேலும்மேலும் அவரையடித்து அவர் கட்டிக்கொண்டிருந்த வஸ்திரங்களைப் பறித்துக்கொண்டு தாங்கள் காடி

வந்த பொருள் சிறிதும் அவரிடத்தில்லாது தாங்கள் பட்ட கஷ்டம் வீணாய்ப் போனது கண்டு கோப மதிகரித்தவர்களாகித் தாங்கள் ஒவ்வொருவரையும் தன் முதுகின்மேல் தூக்கிக் காட்டிற் கப்புறங் கொண்டுவிடும்படி அவ்வித்துவானைக் சட்டாயப்படுத்தினார்கள். வித்துவானும் அவ்வாறே ஒருவனைத் தூக்கிக்கொண்டு கொஞ்சதூரங் கொண்டுபோய்விட்டு மற்றவர்களையும் அவ்வாறே அந்தவிடத்தில் கொண்டுசேர்த்தான். காலையில், அவர்களிடத்தில் பட்ட அடியின் உபத்திரவத்தாலும் அவர்களைத் தூக்கிக்கொணர்ந்த பிரயாசையாலும் வித்துவான் களைத்தவனாய்க் கீழேவிழுந்தான். உடனே திருடர்கள் அங்கிருந்த ஒணாக்கொடியால் அவர் கைகால் முழுமையுங்கட்டிவிட்டுத் தாங்களும் அங்கிருந்த மரத்தடியில் படுத்தார்கள். வித்துவானும் ஒன்றுந்தோன்றாதவனாய்ச் சிறிது நிதானித்துத் தனக்குள் ஒரு யுக்திதோன்ற, ஆகாயத்தை அண்ணாந்துபார்த்து "ஆ தெய்வமே, என்னை அடித்துவருத்தும் இந்தப்பாவிகள் தங்கள் கண்ணைத்திறந்து செய்யக்கூடாத சாகஸங்களெல்லாம் நான் இவ்வாறு கட்டுண்டிருக்கும்போதும் என் கண்ணை மூடிக்கொண்டே செய்யத்தக்க திறமை எனக்கிருந்தும் இவர்கள் கையில் அகப்பட்டு நான் வருந்துவது என்ன காலக்கொடுமையோ; என் திறமையெல்லாம் என்னவாயிற்று?" என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த திருடர்களும் ஆச்சரிய மடைந்தவர்களாய் "நாம் கண்திறந்து செய்யக்கூடாத காரியம் இவன் கண் மூடியிருக்கையில் எப்படிசெய்வான் பார்ப்போம்" என்று அவனிடம்போய் "நாங்கள் கண் திறந்துகொண்டே செய்யமுடியாத காரியம் நீ கண்ணை மூடிக்கொண்டே செய்வாயானால் உன் கட்டை அவிழ்த்து, நாங்கள் ஒவ்வொருவரும் உன்னைச் சிறிதுதூரம் தூக்கிக்கொண்டு போய் இக்காட்டுக்கு வெளியில் சேர்ப்போம்" என்றார்கள். உடனே வித்துவானும் தன் கண்ணை மூடிக்கொண்டு பிடி மண்ணைஅள்ளி அதின்மேல் போட்டான். கண்ணைத்திறந்துகொண்டே மண்ணைப் போட்டுக்கொள்வது அசாத்தியமாதலால் திருடர்கள் வெட்கித் தாங்கள் பந்தயம் தோற்றதாய் ஒத்துக்கொண்டு வித்துவானை மிக்க கௌரவத்தோடு தூக்கிக்கொண்டு போய் காட்டிற்கு அப்புறம்சேர்த்தார்கள். வித்துவானும் தனது யுக்தி புத்தியால் க்ஷேமமாய் வீடுபோய்ச்சேர்ந்தான்.

### சென்ற சஞ்சிகையிலுள்ள
## விடுகதைகளின் விடை.

1. மழை.
2. சட்டிப்பானை.
3. சல்லடை.
4. தேங்காய்.
5. சோறு.
6. இலுப்பைப்பூ.
7. பாம்பு.
8. சந்திரன் (நிலா.)

1900௵ ஆகஸ்டு௴ 7௳

இங்ஙனம்,
ஸ்ரீ வேதம்மாள்.
திருவல்லிக்கேணி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
15 OCT. 1900
MADRAS.

# ஜனப்பிரியன்.

மாதம் ஒருமுறை பிரசுரம் செய்யப்படும்.

புஸ்தகம். 1] சென்னை 1900௵ செப்டம்பர்௴ [இலக்கம். 3

## அன்பு.

அன்பானது நமது உயிர்வாழ்க்கையாகிய இருண்மாலைக்கு ஒரு பேரொளியென விளங்குகின்றது. நம் அன்பை மேற்கொண்டாரும் நம்முடன் சந்தோஷப்பட்டாலொழியத் தனியே இன்பமடைதல் அசாத்தியம்.

அன்பு நம்பருவத்திற் கேற்றாற்போல உருக்கொள்கின்றது. குழந்தைப்பருவத்தில் தந்தைதாயிடத்திலும், யௌவனபருவத்தில் மனைவியிடத்திலும், வயோதிகபருவத்தில் தம் குழந்தைகளிடத்திலும், எப்பருவத்திலும் தம் பிராதாவிடத்திலும் சினேகிதர்களிடத்திலும் மக்கள் அன்பு பாராட்டுகின்றார்கள்.

நட்பினரிடத்துள்ள அன்பு ஸ்திரீகள்மீதுள்ள அன்பினும் மேன்மையானது. எப்பொருளையும் ஏற்கும்படியான நாணயங்கொண்டு வாங்கிவிடலாம். ஆனால் உண்மையான நட்பினரையடைதல் முடியாது. நம்முடைய வாழ்நாள் முழுவதும் நண்பர்களாலேயே ஆக்கப்படுகின்றது. "உன்னுடைய நண்பர்களைச் சொன்னால் உன்னை யின்னனென்று சொல்லுகின்றேன்" என்ற பழமொழியுண்டு. ஒரு விஷயத்தை நண்பர்களுடன் ஆலோசியாத மனிதன் சிறைப்பட்டவனென உண்மையாகக் கூறலாம்.

இறைவனது அருளினைத் தந்தைதாய் தம் மக்கள்மீது பாராட்டும் நட்பினை யொக்குமென்று கூறுதல் வழக்கம். அனேகர் தம் தந்தைதாய்க்கு இன்பம் விளைக்குமென்று தாம் ஒரு செயலைச் செய்து சந்தோஷம் அடைகின்றார்கள். ஸ்ரீ ராமபிரான் தன் தாயாகிய கைகேயிக்கு இன்பமுண்டாகுமென்று மிகவும் சந்தோஷத்துடன் கொடுங்கானஞ் சென்றனர்.

சிலசமயங்களில் மிருகங்களிடத்து நாம் பாராட்டும் அன்பை நீக்கிவிடலாகாது. பாண்டவர் பரமபதத்தை யணுகலும் தம் நன்றியுள்ள நாயும் பின் வரமுடியாமையின் திரும்ப யத்தனிக்க மறுபடியும் நாயுடன் அவர்களைப் பரமன் ஆட்கொண்டனனென்பது மகாபாரதத்திற் சொல்லியிருக்கிறது. "அஹிம்ஸா பிரதமதர்மஃ" என்ற சொல்லைப் பலமுறையுங் கேட்டிருக்கின்றோமல்லவா? இது சைனர்களுடைய முக்கியமான கொள்கை. இக்கொள்கை மிகவும் மெய்ச்சத்தகுந்ததானாலும் முழுது மேற்றுக்கொள்ளுதல் முடியாது. க்ஷணந்தோறு மிவ்வுலகத்தில் நடக்கும் போரில் பலமுள்ள பொருளே நீடூழிகாலந்தங்கி நிற்குமென்பது நிச்சயம். மானுட சிருஷ்டியைக் காக்கும்பொருட்டு இறைவன் அனேக சிறிய உலகங்களைப் படைத்திருக்கின்றான். இதன் உண்மை சிறிது ஆழ்ந்து ஆலோசித்தாற் றெரியவரும்.

எல்லாவற்றிற்கு மேலானதெனப் பாவிக்கப்படும் காதலைப் பற்றிச் சிறிது விரிப்பாம். காதல்தான் நம்வாழ்க்கையின் பயனையடையச்செய்கின்றது; நாம் காதலுற்றவர் நன்மைக்காக இறக்கவுஞ் செய்கின்றது. காதலே நம் மனத்தில் எப்பொழுதுங் குடிகொண்டிருக்கும் பகைமையை நீக்கிப் பிரியத்தை யுண்டுபண்ணுகின்றது. ஒரு ஸ்திரீயின்மீது யாம் பாராட்டும் காதலால் வழக்கமாகச் செய்யுந் தீச்செயலையும் விட்டுவிட நேரிடுகின்றது. கோபம் மிகுதியுமுடைய ஒருவன் மணஞ்செய்ததும் சாத்விகத்தன்மையையடைகின்றான். இதை நாம் அனேகமுறை பார்த்திருக்கின்றோம். காதல் இவ்வுலகில் இல்லாவிட்டால் இன்பமென்பதே யில்லாமற் பாழடையும்.

காதலின் உற்பத்தி தீமையின் உற்பத்தியைப்போல அனேக உளநூற்புலவரை மருட்டுகின்றது. காதலின் உற்பத்தியைப்பற்றி



ஒரு விநோதமான கதை சொல்வது வழக்கம். முற்காலத்தில் மனிதனுக்கு நான்கு கால்களும், கைகளும், திரண்ட உடலும், மாறான இரண்டு தலைகளும் இருந்தனவாம். ஞெண்டுகளைப் போலத் திரும்பாமலே முன்னும்பின்னும் நடக்க முடியுமாம். அவர்களுடைய வல்லமை மிகவும் அசாத்தியமாயிருந்தமையால் தேவர்களுடனும் போர்புரியத் தலைப்பட்டார்கள். இறைவன் இவர்கள் கர்வத்தையொழிக்க இரண்டாய்ப் பகிர்ந்துவிட்டனன். இரண்டு பாகங்களும் ஒன்றுடன் ஒன்றுசேர எப்பொழுதும் ஆவல் கொண்டிருக்கின்றதென்பதாம்.

கண்டவுடன் கொள்ளுங் காதலே மேன்மைத்து. பழக்கத்தினால் உண்டாகும் பிரியமே வலிமையாகத் தொடரும். மணந்தபிறகு வருந்துங் காதலர் அனேகர். சிலர் தந்தைதாயரால் ஆராய்ந்தெடுக்கப்படு மனைவியே உண்மையான காதலியென்று பாராட்ட வேண்டுமென்கின்றார். அப்படியாயின் நியாயாதிபதிகளை ஏற்படுத்தல்போல ஓர் உத்தியோகஸ்தனை அரசனே இவ்வேலையைச்செய்ய ஏன் ஏற்படுத்தலாகாது? மனத்திற் றானாகவே உற்பவிக்குங் காதலே நீடூழிகாலந் தங்கும். காதல் சிறையிலிருப்பினும் இன்பத்தை யுண்டாக்கும். "என் பிரியநாயகியுடன் ஒரு நிர்மானுஷ்யமான காட்டில் வசிப்பேனாயினும் மாநுடர்களையே மறந்து எவரையும் வெறுக்காது இனிமையாய் வாழ்வேன்" என்று ஆங்கிலப்புலவராகிய பைரன் கூறுகின்றார்.

உடலின் பயனாகிய அன்பையடையாமல் இடம் பொருள் ஏவல் இருந்தும் பிரயோஜனமில்லை. மேலும்,

"ஆதர வுடையான் செய்யு மல்லவு நல்ல வாகு
மாதர விலாதான் செய்யு நல்லவு மல்ல வாகு
மாதர வதனா லாவிக் கருந்துணை யின்ப முத்தி
யாதர வலாது வேறொன் றளித்திடக் கண்ட துண்டோ."

அன்பிலார்க்கு ஆக்கம் (செல்வம்) உண்டாகாதாகலான் யாவரும் அன்பைப் பூண்டொழுகுதலே முக்கியம். அன்புடன் ஏவப்படும் செயல்களெல்லாம் பணிவுடன் செய்யப்படுகின்றன. கொடுமையாயிடப்படுங் கட்டளையெல்லாம் அவமதிப்பை யடைகின்றன.

இதை யாம் தினமும் அநுபவத்திற் கண்டிருக்கின்றோம். இச்சந் தர்ப்பத்தில்,

"அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு"

என்னுங் குறள் கவனிக்கத்தக்கது.

சருக்கை - இராமசாமி ஐயங்கார்.

---

## இராமாயண ஸங்கிரகம். *

### அத்தியாயம். I. (பாலகாண்டம்)

ஜ்ஞாநாநந்த மயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதிம்||
ஆதாரம் ஸர்வவித்யாநாம் ஹயக்ரீவ முபாஸ்மஹே||

"அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று றாக ஆரியர்க் காக வேகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக்கண் டயலா ரூரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவனம்மை யளித்துக் காப்பான்"

இந்தியாவின் வடபாகத்தில் பூர்வீகம் கோசல மென்னும் பெயர் பூண்ட ஒரு நாடிருந்தது. அதன் பிரதான நகரத்திற்கு அயோத்தி யென்று பெயர். அந்நாட்டை ஆண்டு கொண்டுவந்த அரசர்களில் அதிக சிலாக்கிய குணமுள்ளவன் தசரதன். எட்டுத் திக்குகளிலு மாத்திரமே யன்றி ஆகாயம் பாதலம் என்னு இரண்டி டங்களையுஞ் சேர்த்துப் பத்துத்திக்கிலும் தன்னிரதத்தைச்செலுத்த வல்லவ னென்பது தசரதனென்னும் பதத்திற்குப் பொருள். இந்தி யாவிலுள்ள ஐம்பத்தாறு தேசத்தரசர்களுக்கும் இவன் அரசன். எனவே இவனே சக்கிரவர்த்தி என்றாயிற்று. இவனுக்கு பட்ட மகிஷிகள் கௌசல்யை, சுமித்திரை, கைகேயி என்னு மூவர். இவர் களில் மூத்த மனைவியாகிய கௌசல்யையி னிடமாகப் பிறந்தவன் இராமன். குணமே ஓர் உரு வெடுத்து வந்த தென்று சொல்லத்தக்க குணக்குன்று. தனது தமையனாகிய இராமனிடத்து எப்போதும் பக்தியும் விசுவாசமும் மரியாதையும் வகித்தவன் பரதன். இவன்

---

* ADAPTED FROM "BALARAMAYANAM."



கைகேயினிடமாகப் பிறந்தவன். பரதனையும் இராமனையுந்தான் சகோதர வாஞ்சைக்கு உதாரணமாக அடிக்கடி எடுத்துச்சொல் வது வழக்கம் :—

"தெஞ்சுடரின் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே—விஞ்சு
விரதமே பூண்டிந்த மேதினியை யாண்ட
பரதனையும் ராமனையும் பார்"—இதனாலும்

மேற் சொன்னது இனிது விளங்கும். சகோதர வாஞ்சையிற் பேர் பெற்றவர்களில் பரதனுக்குச் சமானமானவர் இலர். இலக்கு மணனும் சத்துருக்கனும் சுமித்திரையினிடமாகப் பிறந்தவர்கள். இராம லக்ஷ்மண பரத சத்துருக்கினர் என்னும் நால்வரும் நா ளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண் டு வந்தார்கள். இவர்களுக்குத் தக்க காலத்திலேயே * சௌளம், ‡ கர்ணவேதனம், † உபநயனம் முதலிய சடங்குகள் நிறைவேற்றப் பட்டன. தகுந்த ஆசிரியர்களை வைத்து [illegible]லகலைகளையும் இவர் களுக்குக் கற்பித்தார்கள். ஒருநாள் [illegible]வாமித்திர முனி தசரதரிடம் போய், "முனிவர் ஆரம்பித்த[illegible]னும் மற்றவர்கள் செய்யும் யாகத்திற்கு இடை[illegible]ரும் இராக்கதர்களை நாசம் செய்து யாகத்தைக் காக்கும் வண்ணம் இராம லக்ஷ்மணர் களைத் தருதி" யென்று அவரை யாசித்தார். குழந்தைகளை விட்டுப் பிரிய மனமில்லாதவரா யிருந்தபோதிலும் விசுவாமித்திரர் சபித் து விடுவாரோ என்னும் பயமானது பிடிக்கவும், "பிள்ளைகளுக்கு க்ஷேமமுண்டாகும் அநுப்பலாம்" என்று வசிஷ்டர் சொன்னதின் பேரிலும் இராம இலக்குமணரை அவருடன் அநுப்புவிக்கத் துணிந்தார். முனிவர் சிறுவரிருவரையுந் தன்னுடன் கொண்டு அவர்களுக்கு வழியின் சிரமம் தெரியாதிருக்கும் வண்ணம் பற்பல இனிய கதைகளைச் சொல்லிக் காட்டு வழியைக் கடிதினிற் கடந்து சென்றார். அப்போ தவர்களுக்கு பலாம், அதிபலாம் என்னு மிரண்டு மந்திரங்களையும் உபதேசித்தார். காட்டின் மத்தியில் இவர்கள் போய்க் கொண்டிருக்கும் போது தாடகை யென்னும் ஓர் இராக்ஷஸி இவர்களை வழிமறித்தாள். அவளுடைய உபத்திர வம் பொறுக்க முடியாமற் போகவே இராமனை நோக்கி "உன் பாணத்தை இவள் பேரில் பிரயோகிப்பாயாக" என்றார். ஆரம்

---

* குடுமிவைத்தல். ‡ காதுகுத்துஞ்சடங்கு. † பூணூல்தரித்தல்.

பத்திலேயே 'ஒரு பெண்ணையா என் பாணத்திற்கு இலக்காக்குவது' என்னும் எண்ணமானது இராமருடைய மனத்திலெழவே, முனிவர் அதையறிந்து "ஸ்திரீயா யிருந்தபோதிலும் பாதகமில்லை. ஸ்திரீ ரூபமே தவிர வாஸ்தவத்தில் ஸ்திரீயல்லள். அவளோ ஒரு பெரிய நீலி. எடு வில்லை விடு கணையை" என்றார். உடனே விட்டார் பாணத்தை. இராமபாணத்தின் வேகத்தைச் சொல்லவும் வேண்டுமோ?

"சொல்லொக்குங் கடிய வேகச் சுடுசரங் கரிய செம்ம
லல்லொக்கு நிறத்தி னாள்மேல் விடுதலும் வயிரக் குன்றக்
கல்லொக்கு நெஞ்சிற் றங்கா தப்புறங் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற் றன்றே."

ஜ்ரும்பகமென்னும் பாணம் பாய்ந்தமாத்திரத்தில் தண்டாகாரமாய்த் தரைமீது வீழ்ந்திறந்தனள் தாடகையும். பிறகு விசுவாமித்திரர் இராமலக்ஷ்மண ரிருவரையுங்கொண்டு தான் வேள்விச் சாலையை யடைந்ததும் அவ்விருவரும் அதைக் காக்கும்படிசெய்து தான் வேள்வியைக்குறித்த கிரியைகளி லிறங்கிவிட்டார். யாககுண்டத்திலிருந்த அக்கினியின் அணைவின்றி யெழும்பியமாத்திரத்தில் யாகஞ்செய்யும் ரிஷிகளையும் அழித்து யாகத்தையும் நாசஞ்செய்யும்பொருட்டு இராக்கதர்கள் இரத்தவருஷம் பொழிவதுபோல் ஆகாயத்தி லெழும்பி யாகஞ்செய்யு மிடத்துத் தோன்றி சரக்கூடம்போல் அவ்விடத்தை வளைத்துக்கொண்டார்கள். அந்த யாகமோ இராமலக்ஷ்மணர்களால் மிகவும் விசேஷமாய்க் காக்கப்பட்டது. இதைக்குறித்து கம்பநாட்டாழ்வாரும் மிகவும் விநோதமா யெழுதியிருக்கிறார்.

"எண்ணுதற் காக்கரி திரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்."

இப்படிச் சரக்கூடம்போல் வளைந்த இராக்கதர்களுக்குத் தலைமை பூண்டவர் தாடகையின் புத்திரர்கள். சுபாகு, மாரீசன் என்னும் பெயர் பூண்டவர்கள். இராமபாணத்தினால் எழுந்த வாயுவின் வேகமானது இவர்களில் முன்னவனைக் கொன்று மற்றவனாகிய மாரீசனைக் கடலின்கண் கொண்டுய்த்தது.



விசுவாமித்திரருடைய வேள்வி இனிது முடிந்த பின்னர், ஜனகன் புத்திரியாகிய ஜானகிக்கு விவாகம் நடக்கப் போகிறதென்னும் சமாசாரம் விசுவாமித்திரர்க்கும் தெரிவிக்கப்படவே அவர் இராம லக்ஷ்மணர்களையுந் தன்னுடன் கொண்டு மிதிலையை நோக்கிச் சென்றார். போம் வழியில் முன்னொரு காலத்து இந்திரனது வஞ்சனைக்குடைந்து அவனிடம் இன்பந் துய்த்த கௌதமர் பத்தினியாகிய அஹல்யை தனது கணவன் சாபத்தால் கல்லுருவாய் இதுவரையிலிருந்து இராமபிரானது காலின் துகள் கதுவுதலும் கல்லுருத் தவிர்ந்து முன் தன்னுருவாகிய பொன்னுரு விளங்க நின்றாள்.

"அஞ்சன வண்ணத் தானின் னடித்துகள் கதுவா முன்னம்
வஞ்சிபோ லிடையா ளுன்னை வண்ணத்த ளாகி நின்றாள்."

இரகுராமருடைய ஸ்ரீ பாதரேணுவின் மகிமையோ இவ்வளவு பெருமையுடையது. இதனை விசுவாமித்திரர் பார்த்ததும் அதிக ஆனந்தமடைந்து ஸ்ரீராமருடைய மகிமையைக் குறித்துப் பற்பல விதமாய்ப் புகழ ஆரம்பித்தார்.

"இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ண மினியிந்த உலகுக் கெல்லாம்
உய்வண்ண மன்றி மற்றோர் துயர்வண்ண முறுவ துண்டோ
மைவண்ணத் தரக்கி போரில் மழைவண்ணத் தண்ண லேயுன்
கைவண்ண மங்கு கண்டேன் கால்வண்ண மிங்கு கண்டேன்."

அஹல்யை இடையிலிக்கதியுற்றபோதிலும் ரிஷிபத்தினியென்னும் மகிமையும் அவளதுபூர்வீக நற்குணமும் அவளைவிட்டுப்பிரியவேயில்லை. ஸ்ரீராமரும்அவள் பொன்னடிவணங்க அவள் அவ்விடம்விட்டுப் பெயர்ந்துபோனாள். அவளை அவள் பர்த்தாவாகிய கௌதமரிடம் சேர்த்து இவர்கள் மேற்சென்றார்கள்.

இவர்கள் மிதிலையை யுற்றதும் ஜனகன் தந்த உறை விடத்திருந்து பிறகு அரண்மனையை அடைந்ததும் முனிவருக்கு அரசன் சோடசோபசாரம் செய்து அவரை ஓராசனத்திருத்தி யோக க்ஷேமங்களை விசாரிக்கையில் இவர் பக்கத்திருந்தவர்களை நோக்கி "இவர்கள் யாவர்? தயை செய்து உரைத்திடுக" என்று முனிவரைக் கேட்க, அவர் "நின்னுடைய வேள்வி காணும் பொருட்டு வந்தவர்கள். வில்லுங் காண்பார். இவர்கள் தசரதச் சக்ரவர்த்தியின்

புதல்வர்'' என்றுகூறி மேலே இவர்குலப்பெருமையையுஞ் சொல்லத் தொடங்கினூர். சொல்லி முடிந்ததும், ''இப்புத்திரர்களிலெவரேனும் இங்கிருக்கும் சிவதனுசை எடுத்து வளைப்பார்களாயின் என்னை இடர்க்கடலினின்றும் கரையேற்றுவார்கள்'' என்றான் ஜனகன். பிறகு அவ்வில்லை கிங்கரர்கள் அறுபதினாயிரவர் அளவிலாற்றலர் தண்டுகயிறுகொண்டு கட்டி தண்டிற்றூங்கி இவர்கள்முன் கொண்டு வைத்தனர். அதை அநாயாசமாய்த் தனது இடதுகை ஓர் விரலால் எடுத்து வலதுகையால் நாணேற்ற முயன்றதும் ஒருநொடியில் வில்லானது இற்று இரண்டுதுண்டமாய் விண்ணிடிந்துவீழ்ந்ததென அதிக சப்தத்தோடுங் கீழே வீழ்ந்தது.

''தடுத்திமை யாமலிருந்தவர் தாளின்
மடுத்தது நாணுதி வைத்தது நோக்கார்
கடுப்பினின் யாரு மறிந்திலர் கையால்
எடுத்தது கண்டன ரிற்றது கேட்டார்.''

இந்தச் சப்தத்திற்குப் பயந்து ஆதிசேஷனும் பூமியதிர்ச்சி பொறுக்கமாட்டாது தன்றலை யசைத்தனன். இவ்வதிசயத்தைப்பார்த்த விண்ணவர் மண்ணவர் மற்றுமேளோர் எல்லோரும் ஆச்சரியமடைந்து ஆசிகூறி ஆனந்தங்கொண்டார்.

''பூமழை சொரிந்தார் விண்ணோர் பொன்மழை பொழிந்த மேகம்
பாமமா கடல்க ளெல்லாம் பன்மணி தூவி யார்த்த
கோமுனிக் கணங்க ளெல்லாம் கூறின ஆசி கொற்ற
நாமவேற் சனகற் கின்று நல்வினை பயந்த தென்னு.''

ஆகாயத்தில், தேவதுந்துபிமுழங்கின; பற்பலவாத்தியங்களும் பற்பலவிடங்களில் கோஷித்தன.

''வயிரியர் மதுர கீதம் மங்கைய ரமுத கீதம்
செயிரியர் மகர யாழின் றேம்பிழி தெய்வ கீதம்
பயிரியர் வேயின் கீதம் என்றிவை பருகி விண்ணோர்
உயிருடை யுடம்பு மெல்லா மோவிய மொப்ப நின்றார்.''

அனைவரும் ஆனந்தத்தேனுண்டு களிகொண்டு கண்டவாறு வில்லிறுத்த இராமனை வியந்து பேசத்தொடங்கினர்.

''தயரதன் புதல்வ னென்பார் தாமரைக் கண்ண னென்பார்
புயலிவன் மேனி யென்பார் பூவையும் பொருவு மென்பார்



மயலுடைத் துலக மென்பார் மானுட னல்ல னென்பார்
கயல்பொரு கடலுள் வைகும் கடவுளே காணு மென்பார்.

மிதிலை நகர் வீதிவழியாய் இராமர், அவர்தம் தம்பி இலக்ஷ்மணர், விசுவாமித்திரர் என்னுமூவருமபோய்க்கொண்டிருந்தபோது ஜானகி இராமனைக் கண்ணுற்றதும் மதனதுகணையால் எற்றுண்டு தன் வசமற்றுச் சிலநாள் அங்கிலேயிலேயே யிருக்கும்போது சிலையை வளைத்திறுத்தவன் கோமுனியுடன்வந்த கொண்டலென்று தான்கேட்டவுடன் ''ஆம், அவனே இராமன்'' என்று தேர்ந்து தன் சந்தேகத்தை நிவிர்த்திசெய்துகொண்டாள். உடனே அவளும் அதிக ஆனந்தத்தில் ஆழ்ந்துவிட்டாள். தன் புத்திரிக்கு வாய்த்த வரன் பெருமையும் திறமையுங்கண்ட ஜனகனுக்கிருந்த சந்தோஷத்திற்கு ஓரளவுமுண்டோ? சுபதினத்தில் முகூர்த்தம்வைத்து தசரதமகாராஜாவிற்கும் மற்றெல்லாத்தேசத்தரசர்க்கும், ஒல்லையில்வந்து மிதிலையைச் சேரும்படி 'ஓலையும் தூதும் போக்கினுன்.' எல்லாரும் விரைவில்வந்து சேர்ந்தனர் மிதிலைமாநகரம். நகரிலும் நகர்ப்புறத்தும் நான்கு யோசனைதூரம் வரையிலும் நால்வகைத் தானைசூழ அரசர் குழாங்களும் பரிசனங்களும் நிரம்பி நின்றன. தசரதரும் வந்து சேர்ந்தார். இருபக்கத்திலும் பலவாத்தியங்கள் முழங்கின.

''மந்திர கீத வோதை வலம்புரி முழங்கு மோதை
அந்தண ராசி யோதை யார்த்தெழு முரசி னோதை
கந்துகொல் களிற்றி னோதை கடிகையர் கவிதை யோதை
இந்திர திருவன் செல்ல வெழுந்தன திசைக ளெல்லாம்.''

ஜனகர் எதிர்கொண்டு தசரதரைத் தந்நகர்க்கு அழைத்துவரத் தான் தன் நால்வகைத் தானையோடுஞ் சென்றார். மனிதர்கூட்டமும் மாக்கள்தங் கூட்டமும் மிகவும் நெருங்கிநின்றன.

''முருக்கிதழ் முத்த மூரல் முறுவலர் முகங்க ளென்னும்
திருக்கிளர் கமலப் போதிற் றீட்டின கிடந்த கூர்வாள்
நெருக்கிடை யறுக்கு நீர்க ணீங்குமி னீங்கு மென்றெண்
றருக்கனி லொளிரு மேனி யாடவ ரகலப் போனார்.''

நகர்முழுதும் நயம்பெற அலங்கரிக்கப்பட்டன. முகூர்த்த தினமும் நெருங்கிவிட்டது. இராமரும் அந்தத்தினத்தில் பவனிவரப் புறப்பட்டார். அவருடைய அழகைக் காணும்பொருட்டு அந்தந்த வீட்டு வாயிலில் வந்து நின்றார் ஆடவர் மகளிர் அனைவரும். இரா

மருடைய அழகிற்கு ஓரளவுமுண்டாமோ?

"தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கைகண் டாரு மஃதே
வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்
ஊழ்கொண்ட சமயத் தன்னா னுருவுகண் டாரை யொத்தார்."

உலா முடிந்ததும் மணச்சாலையைத் தன் தமரோடும் மற்றையரோடும் அடைந்து கலியாண மண்டபத்தைச் சென்று சேர்ந்தார். தாரைவார்த்துக் கொடுத்தல், அம்மி மிதித்தல், கற்பினருந்ததிகாண்டல் முதலிய மற்றைச் சடங்குகளும் ஆகமவிதிப்படி அன்று நிறைவேறின. தாசரதிக்கும் ஜானகிக்கும் திருமணம் அதிகமுழக்கத்துடன் இனிது முடிந்தது.

"ஆர்த்தன பேரிக ளார்த்தன சங்கம்
ஆர்த்தன நான்மறை யார்த்தனர் வானோர்
ஆர்த்தன பல்கலை யார்த்தபல் லாண்டு
ஆர்த்தன வண்டின மார்த்தன வேலை."

அன்றைத்தினமே அவர் தம்பியர்க்கும் அதேவிடத்தில் திருமணம் முடிந்தது. இலக்குமணனுக்கு ஜநகன் புத்திரியாகிய ஊர்மிளையென்பவளும், பரதசத்துருக்கினருக்கு குஜத்துவஜன் எனும் பெயர் பூண்ட ஜனகனது தம்பியின் புத்திரிகளாகிய மாண்டவி, சுருதகீர்த்தி என்பவர்களும் முறையே நாயகியரானார்கள். இது முடிந்தபிறகு சில நாளங்கிருந்து பிறகு தம்மூர்க்குத் தசரதரும் அவர் புத்திரரும் அவர்களுடைய மனைவியரும் சகுன முதலியவைகளைப்பார்த்துக் கொண்டு புறப்பட்டுவருகையில் சில துர்ச்சகுனங்களிடையுற்றன. அரசன் அவற்றைக்கண்டு மனங்கலங்கி வசிட்டரை வினவலும் அவர் "இன்றேவரு மிடையூறு அது நன்றாய் விடுமென்றார்."

இவர் இப்படிச் சொன்னவுடன் மின்னல்போன்ற பிரகாசத்தையுடைய சடையையும் மார்பிடம் வீழ்ந்து புரளும் தாடியையும் உடையவரும் மழுவாயுதத்தைத் தரித்தவரும் க்ஷத்திரிய வைரியுமாகிய பரசுராமர் எதிரில்தோன்றினார். இடுக்கண் நேரிடுமே என்று நடுக்கங்கொண்டார் தசரதர். பரசுராமர் விஷ்ணுவின் தசாவதாரங்களில் ஓரவதாரம். செருக்குக்கொண்டிருந்த க்ஷத்திரியவம்சம் அஃதழிந்து நற்கதியுறுமாறு தோன்றியவர். இவர் பிரமகுலத்தவர். இவ்வாறு கர்வங்கொண்டிருந்த க்ஷத்திரியர் குலங்கள் இவருடைய



மழுவாயுதத்திற்கு இரையாயின. இவர் இராமருக்கெதிர் நின்று "ஏ இராம! முன்னமே பழுதுற்றிருந்த சிவதனுசை வளைத்திறுத்ததாகக் கர்வங் கொண்டிருக்கிறாயல்லவா, என்னுடைய தனுசை வளைத்தால் நீ புருஷன் தான்" என்றார். இராமர், எதிர்நின்ற பரசுராமர் தந்த வில்லையு மிறுத்து அவரது ஆவியுந் தன்னுட் கொண்டார். அதைப் பார்த்திருந்த மற்றவர்களும் பிரம்மானந்தங் கொண்டார்கள். பிறகு அனைவரும் அயோத்தியாகிய தம் நகரமும் கண்டார்கள்.

பாலகாண்டம் முற்றிற்று.

சல்தளம். குப்புசாமி முதலியார்.

---

## நீலா.

### மூன்றாவது அத்தியாயம்.

மாணிக்கமோ எனில் தன்னுடைய ஸ்திதியைக்குறித்து நினைந்துருகிக் கொண்டிருக்கும் நாளையில் தன்னுடைய சிநேகிதன் சங்கரனுடைய தகப்பனார் மாணிக்கத்தை அவ்வூரிலேயே ஓர் ஜவுளிக்கடையில் ஐந்துரூபாய் சம்பளத்திற்கு கணக்குப்பிள்ளையாக அமர்த்தினார். வேலைபார்த்துவரும் நாளையில் சங்கரனுடைய தங்கைக்குக்கலியாணம் என்று ஓர் கடிதம் வந்தது. அக்கடிதத்தைக் கண்டதும் அவனுக்கு அடக்க முடியாத சந்தோஷமுண்டாகித் தன் எஜமானனிடஞ்சென்று, ஐயா, நான் கலியாணத்திற்குப் போகவேண்டியிருக்கிறது, நான் போய்வருவதற்கு விடைகொடுக்கவேண்டும் என்று கேட்க, அதற்கு யஜமானன், அப்பா கர்ணம்! யாருக்குக் கலியாணம், உனக்கா, உன்னுடைய பந்துக்களிலொருவர்க்கா, அல்லது உன்னுடைய சிநேகிதற்கா என்றான். அதற்கு மாணிக்கம் என்னுடைய சிநேகிதன் சங்கரனுடைய உடன்பிறந்தாளுக்கு என்றனன். இதைக்கேட்டதும் எஜமானன் நகைத்து உனக்கு என்ன பயித்தியமா, பார்ப்பார் வீட்டுக் கலியாணத்திற்கு நீபோய் என்ன செய்கிறது. உன்னைக் கிட்ட நெருங்கவொட்டார்கள். சாப்பாடோ அவர்கள் எல்லோரும் உண்ட பிறகு உனக்கிடுவார்கள். மெத்த கஷ்டப்படுவாய், நீயோ சிறுவன், "தாதாசாரிக்கும் பீரல்பண்டிகைக்கும் என்ன சம்பந்தம்" என்று சொல்ல, மாணிக்கம்-ஐயா! தாங்கள் அப்படி நினைக்கக்கூடாது, அவர்கள் தான் எனக்கு உற்றதுணை, ஆதியிலிருந்து இதுவரையில் காப்பாற்றினவர்கள். நான் வசிக்கும் வீடும், உண்ணும் சோறும், உடுக்கும் வஸ்திரமும், அவர்களுடையன.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று."

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."—திருவள்ளுவர்.

ஆகையால் நான் அவசியம் போகவேண்டு மென்றனன். அதற்கு எஜமானன் கணக்குக்களையெல்லாம் முடித்துவிட்டுப் போய் உடனே திரும்பி விட வேண்டுமென்றனன். இவ்வண்ணமே கணக்குக்களையெல்லாம் சரியாக முடித்துவிட்டுக் கலியாணத்திற்குச்சென்று அங்கு நடக்கும் சடங்குகளைப் பார்த்துக்கொண்டிருக்குந் தருவாயில், அவ்வீட்டின் கூடத்தில் படுத்திருந்த சங்கரனுடைய மனைவி யணிந்திருந்த காசிமாலையை யாரோ எடுத்துக்கொண்டார்க ளென்ற சப்தம் கேட்டது. உடனே அவ்விடத்தில் ஊர் கூட்டங்கூடி இதென்னவதிசயம், நன்றாயிருக்கு, காசிமாலையை யாரெடுப்பா, அடி சாவத்திரி, லக்ஷ்மி, மீறு நீங்கபார்த்திகளா? ஐயோ! இதென்னனியாயம் என்றாள் சங்கரன் தாயாரும். அவன் தகப்பனாரும் சேடவாரம்பித்து, வீட்டிலுள்ளோ ரனைவரையுங் கேட்க, யாரும் பார்க்கவில்லையென்று சொல்ல, அவர்கள் பரிதபித்துக் கொண்டிருந்தார்கள். இது இப்படியிருக்க, அவ்வூரில் சிறுவயதிலேயே புருஷனை இழந்த சேஷியென்பவள் திடீரெனவந்து, அடி காமு! குழந்தே எங்கடி படுத்திருந்தா?

**காமு.** அக்கா! குழந்தை கூடத்துலே படுத்திருந்தது. நகையிட்டுக்கொண்டது கண்பிடிக்காமே யாரோ எடுத்துக்கொண்டா. அவா கையை பாம்பு புடுங்க.

**சேஷி.** நன்றாயிருக்கு (முகத்தைச்சுளித்துக்கொண்டு) யார் எடுத்திருப்பா. ஒண்ணு மின்னு யாருவது எடுத்திருக்கா ளோன்னமோ வெருமே வையாதே.

**காமு.** இல்லக்கா, நான் எல்லாரையும் கேட்டாச்சு. எங்களவரும் கேட்டா. யாரும் நானறியேன் நானறியேன் என்னு சொல்லரு. உங்களுக்கு என்னமாறு தெரியுமா அக்கா.

**சேஷி.** அடி, நன்றுசொன்னே. நீ என்னமோ "வாபுளிச்சிதோ மாங்கா புளிச்சிதோ"ன்னு சொல்லிபிட்டே. நல்லது ஆகட்டும். உன்பணக் கொழுப்பென்னு இப்படி யெல்லாம் சொல்லரது.

**காமு.** அக்கா! நீங்க அப்படி கோபிச்சுக்கக்கூடாது. ஏதோன்னமோ தெரியாமே சொல்லிவிட்டேன்.

**சேஷி.** அடி! நீ பணக்காரி "செல்வம் சொல்லுக்கஞ்சாது" போறு போரது உக்காத்துக்கா ரெங்கே?

**காமு.** நகையை காணமின்னு விசனப்பட்டுண்டு எங்கேயிருக்காரோ. அத்தொட்டு உங்களுக்கென்ன. என்றோடே சொல்லப்படாதா.

**சேஷி.** அதுக்கன்னு, இந்தவூரிலே ஒரு மந்திரவாதி யிருக்கான். அவன் பொருள்கெட்டிக்காரனும். போனதெல்லாம் கண்டு பிடித்துக் கொடுக்கிறானும். அவனை அழைத்துவந்து பார்க்கிறதுதானே.



**காமு.** எனக்கு யாரும் தெரியாது. நீங்கதான் சொஞ்சம்போய் அழைத்துக் கொண்டு வரணும்.

**சேஷி.** நான் அழைச்சுண்டுவரேன். ஆனா அவன் பெரிய ஆசை பிடிச்சவனாச்சே. காசிமாலையென்னுதெரிஞ்சிட்டா இன்னும் கேட்கவேணுமோ.

**காமு.** அக்கா! உங்களுக்கு புண்ணியமாபோரது. அவன் என்ன கேட்டாலும் கொடுத்துவிடரேன். அசப்பட்டாபோரும். சேஷி. எல்லாத்துக்கும் உங்களவருடன் ஒரு வார்த்தை சொல்லிட்டாநன்றாயிருக்கும்.

உடனே காமம்மாள் தன்னுடைய புருஷனிருக்குமிடந்தேடி அவரைக் கண்டுசொல்ல, அவர் இசைகாமல் போடிபோ பயித்தியக்காரி சொம்பு வைக்கிறதாவது எடுத்துக்கொடுப்பதாவது. குதிரை செத்ததுமல்லாமல் குழி தோண்டக்காற்பணம், என்பதுபோல் இதெல்லாம் வீண்—இல்லேலங்கோ அவள்சொல்லரதைத்தான் கொஞ்சம்கேட்போம். அதனால் என்ன நஷ்டம் "முற்றநனைந்தவனுக்கு ஈரமில்லை"—ஆனால் சரி. உம்பாடு நீ என்ன வேணுமின்னு சேசுகோ என்றுசொல்லிக்கொண்டே சேஷியம்மாளிடம்வந்து அடி சேஷி என்னமோ சொன்னயாமே என்னடி—நான் என்ன சொன்னேன். ஒண்ணுமில்லையே—இல்லடி நீ யாரையோ மந்திரவாதியை யழைத்து வரதா சொன்னயாமே—அதவா, அதுக்கென்ன, ஒணும்னு அழைச்சுவரேன் என்று சொல்லி அவ்வூர்ப் பூசாலி யிருக்குமிடம் சென்று அவனைக்கண்டு, அடேபூசாலி, நான் ஒண்ணுசொல்ரேன் கேட்கிறையா—அம்மா, தாங்கசொன்னு நான் கேக்காமேபோவேனு. நீங்க காலாலேயிட்டவேலையை தலையாலே செய்வேனம்மா—ஆனாக்கா சரி. நம்ம காமுயிருக்காளன்னோ அவளாத்திலே மருமவ கழுத்திலேபோட்டிருந்த காசிமாலையை காணுமே தேடறா. நீ சொம்புவைத்துபார்த்து அடுப்பிலே யெடுத்தவா வைச்சிருக்கா இன்னுபிட்டுசொல்லிடு. உனக்கு ரூபா 50 வாங்கித்தாரேன். நீயும் நானும் பாதியாக எடுத்துக்கொள்ளலாம். அம்மா அப்படி செய்ய எனக்கென்ன ஆக்ஷேபம்? நாலு நாளா சஞ்சிக்கி இல்லாமே மெத்த கஷ்டமாயிருக்குது. இந்தவேளையில் நீங்க ஒத்தாசை பண்ணரேங்களே. உங்களுக்கு மெத்த புண்ணியமுண்டு. இவர்கள் ஒருவருக்கொருவர் பேசி முடிவு செய்து கொண்டு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு காமு அம்மாவுடைய வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள்.

சேஷியம்மாள் இளவயதிலேயே மணம்செய்யப்பட்டுத் தன்னுடைய கணவன் வீட்டிற்குச் சென்று கெட்டபெண்ணென்று மாமியார் நாத்திமார் என்னும்படியாய் நடந்துவந்ததும் தவிர, அவர்களை வேலையாட்களாக எண்ணி, தானே அவ்வீட்டிற்கு எஜமானி என நடந்துவந்தாள். தன் கணவனைக் கைவசப்படுத்த மருந்துகள்கொடுத்து, தன் இஷ்டப்பிரகாரம் ஒழுகும் படியாகச் செய்துவிட்டனள். மாமியாருக்கும் கணவனுக்கும் சண்டை மூட்டிவிட்டு, அவனை வீட்டினின்றும் துரத்தி விட்டனள். அந்த அம்மாளெண்ணமோ "எட்டி மரமானாலும் பச்சென்றிருந்தால் போது"மென்பது. "பெற்

ற மனம் பித்து பிள்ளைமனம் கல்லு" என்பதுபோல அந்த அம்மாள் வெளியில் பிச்சையெடுத்து ஜீவித்து, அடிக்கடி அவ்வூருக்குவந்து தன்னுடையபிள்ளை தெருவில் போய்க்கொண்டிருக்கும்பொழுது அவனிடம் பேசச் சென்றால் அவன் திரும்பிப்பாராமல் போய்விடுவான். அந்த அம்மாளோ அழுதகண்ணும் சிந்தியமூக்குமாய் அயலூர் போய்விடுவாள். சேஷியம்மாளோ சர்வாதிகாரமும் தானே வகிக்க, கணவனும் வேலையாள்மாதிரி ஒழுகிவந்தனன். எவராவது மாமியாரை ஆதரவுசெய்யாமல் துரத்திவிடலாமாவென்று கேட்டுவிட்டால், அவர்களை தாறுமாறாகவைது (திட்டி) மருட்டுவாள். இந்த அம்மாளைக்கண்டால் எல்லாரும் பயப்படுவார்கள். தான்கொடுத்தமருந்து தன்கணவனை யமலோகம் அழைத்துக்கொண்டது. அவன் தனக்கு மக்கட்பேறில்லையென்றும், தன்னுடையதாயை மனைவியின் பேச்சைக் கேட்டுத் துரத்திவிட்டோமே யென்றும் சாகுந்தறுவாயில் கண்ணீர்விட்டுக் கலங்கினான்.

அவ்வக்கிரகாரத்திலுள்ள பெண்கள்யாவரும் இவளுடையவீட்டில் பிரதிதினமும் சபைகூடி வம்புவார்த்தைகள்பேசி, அவரவர்களுக்கு விரோதமானவர்களைத் தூறி, அவர்களுக்குத் தீங்குசெய்யயோசனைசெய்வார்கள். சேஷியம்மாள்சொல்லுக்கு மாறுசொல்பவர் யாரும் இல்லை. இப்பேர்ப்பட்ட புண்ணியவதி பூசாரியுடன் காமுஅம்மாவுடைய வீடுசேர்ந்து அவர்களுக்குப் பூசாரியைக் காண்பித்தாள். அவர்கள் இவனுக்கு, குறிபார்ப்பதற்கு வேண்டிய சாமான்கள் கொடுத்தார்கள். குறிசொல்வோன் செம்பு ஒன்றை எடுத்து நன்றாய்த்துலக்கி அதில்நிறைய சுத்தஜலம் எடுத்துக்கொண்டு, கூடத்தின் மத்தியில் சாணங்கொண்டு மெழுகி, மொக்கிட்டு, வாழையிலையில் அரிசிபரப்பி அதில் குறுக்கும் நெடுக்கும் கோடுகள்போட்டு, கோடு ஒன்றுக்குநாலு அணுவும் மஞ்சள்சேர்த்த அரிசி (அக்ஷதை) கொஞ்சமும், புஷ்பமுமாகச் சேர்த்து வைத்து, செம்பில் மாவிலையைச்செருகி அதன்மேல் தேங்காயொன்றைவைத்துப் புஷ்பங்கள் சாத்தி கலசஸ்தாபனம்செய்து சாம்பிராணிப்புகை காட்டிய தேங்காயை உடைத்து, சூடம்கொளுத்தி அம்மனை ஸ்தோத்திரஞ்செய்ய ஆரம்பித்து:—

"குடலைப்பிடுங்கி ரத்தத்தைக் குடியடி
சண்டாளி என்பேர் சொல்லாதே
சகஜிவார் தேவர்களெல்லாம்—சண்டி
சாமுண்டி நித்தியகல்யாணி நெஞ்சிலே யமர்ந்தவளே
நெஞ்சக்கருத்தை அறிந்திருப்பவளே
இந்தப் பஞ்சக்கூடத்தில் அமர்ந்திருப்பவளே
பரகுறையெல்லாம் தீர்க்கவந்தவளே
சிவ - சிவா - என்னும் தரிசனப்பொருளே
ஆற்றும்பொருளே ஏத்தும்பொருளே
என்னம்மணி - என்னைக்காப்பவளே



ஐயாவிட்சி, அமிர்தவிட்சி ஓம் செய்யும்வினையை தீர்க்கவந்த
திரிகோணத்தில் அமர்ந்த மவுனசிவாயா—தவுனசிவாயா
ஆசாரசெயலே—ஆ-கிருஷ்ணா—ஆ-கிருஷ்ணா
ஆயிநின்றவளே-சகலலக்ஷ்மியே-ஓம்பழனி
உத்தாரமத்தியே—எங்கும்குருவாயிருக்க உபதேசம்தந்தருள
வேணும்—தெய்வசகாயம்—தெய்வசகாயம்
நாதஜோதிரூச்சவா—வாசி மோசலைவல்லவா—வருகமனநாடிவா
காசமாலை கொண்டோடிவா."

என்று துதித்த பிறகு சிறிதுநேரம் மவுனமாயிருந்து கண்ணைமூடிக் கொண்டு ஒரு கூச்சலிட்டான். அங்குள்ளோரனைவரும் திடுக்குற்று யாது சொல்லப்போகிறானோ என எதிர்பார்த்திருந்தார்கள். பூசாரியோ அடியில்வருமாறு சொல்லத்தொடங்கினான்.

ஆ! இந்தக் கலியாணத்திக்கு வந்தவங்கள்ளே ஓரம்மா புண்ணியவதி-நம்மகுழந்தைக்கு நெருங்கினபாத்தியஸ்தி செகப்பு சேலைகட்டியிருக்காங்கோ, அந்தம்மா, சோயந்த அங்கும்பொயுது மொள்ளசுழட்டிகினு போகையில் நம்மஅய்யா அப்போவந்தாங்கோ, அந்தம்மா உடனே சோறுவடிக்கிற ஆட்டுக்குள்ளே பொழுஞ்சு (பல்லை நறநறவெனகடித்து) சோறுவடிக்கிற அடுப்பிலே வச்சிருக்காங்கோ.

இச்சொல் அவனிடவாயினின்று வருமுன்னரே சேஷியம்மாள் எழுந்துவிட்டாள். காமுஅம்மாளும் இவன்சொன்னவுடனே எழுந்து இரண்டுபெயருமாய்ச்சென்று பார்க்கையில், பூசாரிசொல்லியவண்ணம் இருந்தது. அதை எடுத்து எல்லாருக்கும் காண்பித் தடக்கமுடியாச் சந்தோஷத்தில் மூழ்கினார்கள். ஆனால் சேஷியம்மாள் பூசாலிக்குச்சொல்லியவண்ணம் ரூபாயை வாங்கி அவனிடம் கொடுத்தனுப்பி, தானும் பின்னே சென்று, தாங்கள் முன்னர் செய்த ஏற்பாட்டின்படி ரூபாயை பகுத்துகொண்டார்கள். மாணிக்கம், தன்னுடைய நண்பன் நகை போய்விட்டதைக்குறித்து வியசனத்துடனிருந்தவன் அகப்பட்டதைக் கண்டவுடன் அவனுக்குண்டான சந்தோஷத்தைச் சொல்லிமுடியாது. சங்கரனும் இவனும் நகைவிஷயத்தைப்பற்றிச் சிறிதுநேரம் பேசியபிறகு சங்கரனால் அளிக்கப்பட்ட அறுசுவையுடன்கூடிய உண்டியை உட்கொண்டு சந்தனுதிதாம்பூலங் கைக்கொண்டு அவர்களிடம் விடைபெற்று வீட்டிற்கு வந்துசேர்ந்தான்.

நீலாவோ பிரதிதினமும் அந்திவேளையில் ஸ்ரீ ஏகாம்பரநாதருடைய கோயிற்குச்சென்று வணங்குவது வழக்கம். மாணிக்கமும்அந்திப்பொழுதில் நிவேதனம் ஆகு முன்னர் நடக்கும் ஆராதனைக்குத்தப்பாமற் பிரதிதினமுஞ் சென்று திருவாசகம், தேவாரங்களிலிருந்து சில பாடல்களைப் பாடுவான். இவ்வண்ணம் நடந்துவருவதை நீலா கண்டு ஆச்சரிய மடைவாள், அவனுடன்

பேசச் சந்தர்ப்பப்படவில்லையே யென்று எண்ணியிருக்கையில், மாணிக்கம் சந்நிதியில்:

கற்புறு சிந்தை மாதர் கணவரை யன்றி வேறோர்
இற்புறத் தவரை நாடார் யாங்களு மின்ப வாழ்வும்
தற்பொறி யாக நல்குந் தலைவனின் னலதோர் தெய்வம்
பொற்புறக் கருதோங் கண்டாய்.

என்று சொல்லித் திரும்புகையில், புருடவேடத்துடனிருக்கும் நீலா அவனைக்கண்டு, பேச விரும்பி, கடவுளுடைய செய்கைகளைக்குறித்து பேசத் தொடங்கினார்கள்.

கடவுளுடைய செய்கைகளைப் பார்த்தனையா, உலகத்திற் குறுதுணை, எல்லாப்புண்ணியமும் பிறந்த இடம். ஒரு நொடியாவது உபகார மில்லாமல் வேறெதையும் செய்ய இசையாத பெரியவர். கோடைக் காலத்தில் நல்ல நடுவெயிலில் கிடந்து வாடும் உயிர்க்குத் தண்ணீர் அளித்துக் காப்பவர். அப்படியே பிறப்பு இறப்பு என்னும் வெயிலிற் கிடந்து வெதும்பி, என் செய்வது, எங்குச் செல்வது, என்றறியாமல் வருந்தும் ஆன்மாக்களுக்கு அருள்புரியும்அருளே வடிவாயுள்ளவர். அவரை யறியாமலும், மதியாமலும்பிறப்பின் பயனை அடையாமலும் வேதாந்தங்களிற் சொல்லிய கட்டளைகளை மீறிக் கெடுகின்ற ஆன்மகோடிகளிடத்தும் அதிக பெருமையோடிருந்து, அவர்கள் வெறுக்கவெறுக்கச் செயினும் நன்மையேசெய்துவரும் சத்தியமூர்த்தி. எது அழிந்தாலும் எக்காலத்தும் தானழிவதில்லையாகிய பெருமையுள்ள நித்தியன். சராசரமாயுள்ள யாவற்றுள்ளும் யாவருமறியாமல் அததற்குத் தகுந்தபடி பொருந்திக்காரியம் நடத்தும் சகல வியாபகர். உண்மையான அன்பர்கள் மனதில் அவர்களுக் கின்பமான உருவோடு திருநடனஞ் செய்யும் தயாபரர். அவரவர்கள் மனதின் நிலைமைக்குத் தக்கபடி வழிபட்டுய்யவேண்டு மென்று யாவரிடத்தும் கருணையோ டிருந்து பலபல மதங்களை யுண்டு பண்ணி அந்தந்த மதத்திலும் வேறுவேறுபெயரால் விளங்குந்தெய்வம். எவ்வளவோ பல்கோடி அண்டங்களையமைத்து அந்தந்த ஆன்மகோடிகளுக்குத் தகுந்தபடி தநுகரண போகாதிகளைக்கொடுத்து கடைத்தேறுவதற்கான மார்க்கங்களையும் ஏற்பாடு செய்து யாவரிடத்தும் கருணையோடு விளங்கும் அரிய பொருள். பேரின்பமாகிய மோக்ஷத்தை அடியார்க்கே தரும் நன்னலத்தவன். முக்காலத்திலு முள்ளவன். கள்ளன், வஞ்சகன், காமுகன், தெளிவில்லாதவன், ஈகையற்றவன், அறிவிலி, சிறிதும் உயிர்களிடத்து இரக்கமில்லாதவன் என்று யாரையும் தள்ளாமல் ஒவ்வொருவருக்கும்மெள்ள மெள்ள, பருவமறிந்து ஞானத்தை ஊட்டுகின்ற கருணைமுகில். இவ்வுலகமே எல்லா மாயை என்னும் அறிவோடிருந்தபின்பு சற்றுத் தேறி நான் என்ற முதலுண்மையைக் கடைப்பிடித்து அதுவே எல்லா மென்று துணிந்த ஆன்மாக்கள் வெட்கமடையும்படி



அவர்களுக் குள்ளிருந்து உணர்வைத்தந்து, அவ்வுணர்வு காரணமாக ஒப்பில்லாத ஆனந்த வெள்ளத்திலழுத்தி அறிவை மாற்றி எல்லாம் சிவமென்றுணரவும், அப்படி யுணர்ந்ததையு முணராமல்பேச்சு மூச்சற்றுக் கிடக்கவும், எல்லா ஞானமும் ஒடுங்கவும் செய்பவன்.

"புல்லாகிப் பூடாய்ப்புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாய்க்
கல்லாய்மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாமனின்ற இத்தாவர ஜங்கமமாய்"

என்று பெரியோரால் சொல்லப்பட்டபடியே உள்ள பல்வகைப்பிறப்பையும் அறுத்து, பிறப்பென்னும் ஆழ்ந்தகன்ற கடலில் பலபல ஆசையாகிய அலைகளால் எற்றுண்டு யாதொரு பற்றுமில்லாமல், காமம், வெகுளி, மயக்கமென்னும் காற்றால் மிகவுங் கலங்கி ஒருசாண் வயிற்றின் கொடுமையாகிய பெரிய சுறுமீனின் வாயிலகப்பட்டு உய்ய வகையற்ற ஏழைகட்குத் திருவடியென்னும் புணையைக்காட்டி அதனால் மெள்ளமெள்ளக் கரையேற்றும் தயாபரர். இவருடைய செய்கைகளையும், அவதாரத்தையும் சொல்ல யாரால்முடியும் என்று சிறிதுநேரம் பேசியபிறகு அவரவர்கள் வீட்டிற்குச் சென்றனர்.

ஏகாம்பரம் ஊரூராய் அலைந்து திரிந்து கடைசியாய்க் காஞ்சிவந்து சோற்றுக்கும் துணிக்கும் கதியில்லாமல் ஸ்ரீ ஏகாம்பரநாதருடைய கோயிலே வீடாகவசித்துவந்தான். இவனுக்கு ஊரில் என்னகுறைவு? உற்றார் பெற்றோர் உறவினர் நிறைந்தும், தன தான்யாதிகள் குறைவறப்பெற்றும், எத்தனைபேர் ஏழைகள் இவன்வீட்டிற்குவந்தாலும் அவர்களைக் காப்பாற்றும்படியான செல்வமும், வேண்டுமென்றால் நீலாவைப்போன்ற அநேகபெண்களைக்கலியாணஞ் செய்துகொள்ளும் சக்தியும், நினைத்ததை முடிக்கும் படியான வேலையாட்கள் நிறைந்துள்ள அநேக வீடுகளும்பெற்று, தாய்க்கொரு பிள்ளையாயுமிருக்கு மிவனுக்கு என்ன கதி நேரிட்டது!

"வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரந் தாநினைந்து
அஞ்சுவதே மாந்தர் தொழில்" என்றும்,

"ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகு
மன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கு
மெனையாளு மீசன் செயல்"

என்றும் பெரியோர் சொல்லி யிருத்தலால் வருவது வழித்தங்காது.

இஃதிங்ஙனிருக்க ஏகாம்ரத்தின் தகப்பனாரும் நீலாவினுடைய தகப்பனாரும், இவர்களை ஊர் ஊராய்த் தேடி எங்குமகப்படாமல், வீணே காலத்தைக் கழிப்பது யாது பிரயோசனம்? நமக்கு பிரபஞ்சமே முழுகி விட்டது போலாய் விட்டது. நாம் தேடாத இடம்கிடையாது, ஆகையால் இனியவர்கள் ஆசையை ஒழித்து நல்ல ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்வோமேயாகில் நாம் செய்த பாபங்களாவது ஒழிந்து விடும். மேலும் நம்மனதிலுள்ள வியசனங்களும் சற்று ஆறும், என்று ஒருவருக்கொருவர் ஆலோசனை செய்து, கடைசியாய்க் காஞ்சிய இப்பிரதேசங்களுக்கு முக்கிய நகரமாய், கோவில் குளங்களுள்ளதலால் அந்த ஊருக்கே போக வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அவர்களுக்கு வேண்டிய சாமக்கிரிகள் யாவற்றையும் சேகரித்து இரண்டுவண்டி நிறைய அவைகளை யேற்றி, தாங்களும் ஒரு வண்டியில் ஏறிப் பிரயாணமாகிக் காஞ்சி வந்துசேர்ந்து தங்களுக்குத்தகுதியான வீடொன்று ஏற்படுத்திக் கொண்டார்கள்.

நீலாவோ பிரதிதினமும் மாலையில் மாணிக்கத்துடன் கோயிற்குச் சென்று சுவாமி தரிசனஞ்செய்து, நெடு நேரம் வரையில் ஒருவருக்கொருவர் பேசிய பிறகு வீடு திரும்புவார்கள். இப்படி யிருக்கும் நாளையிலோர் நாள் இருவருமாய்க் காட்டிற்குச் சென்று அவ்விடத்திய அதிசயங்களைக் காண வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

அவ்வண்ணம் மறுநாட் காலையில் இருவருமாய்க் காட்டிற்குச் சென்றார்கள். அம்மகத்தான காட்டில்,

மந்தாரங் கச்சோலம் வாகைவே வெட்பாலை
சந்தார் பிடாவகுளஞ் சண்பகங்கூவிளநாக
நந்தாத வேங்கைஞெமை நமைவருக்கை முருக்ககில்யா
சிந்தாத வழைபுன்னை சிந்துவா ரஞ்செருந்தி.

சிந்தூரமா மராவரசு செங்கடம்பே ழிலைப்பாலை
குந்தமா தளைஞாழல் குங்குமமுந்திரிகையா
கந்திகளா விளா தென்னை கடுக்கைதேக் கோங்குமுத
லந்தில்பல செழுந்தருக்க ளடர்ந்தொளிருவதுவல்லால்.

விளங்கனியு மாங்கனியு மினிர்பாகற்செழுங்கனியுங்
களங்கனியும் விளங்கருணைக்கனியு நாந்தக் கனியும்
வளங்கனியுமிவைமுதல வாஞொரும்வாழுதி
யுளங்கனியும் வகைபழுத்த வொண்சினையதருக்களெல்லாம்.

சந்தநறு மலர்ச் சேக்கைச் சதுமுகனு ருகுநாளு
மிந்தவனக் கழிவின்றென் றியாவருநன் கெடுத்துரைப்பக்
கந்தமலர் தளிர் துழமிக்காய் கனி பிஞ்சுகடேக
மந்திகளுமறியாத மரங்கள் பலவோங்கியவால்.



இவைகளை யெல்லாம் கண்ணாரக் கண்டு செல்லுகையில், நீலா தனிமையாய் ஒரு பக்கஞ் சென்று நினைத்தளவில் வருவதாய் வாக்களித்த கிழவியை நினைத்தாள். அவளுமுடனே தோன்றி, யாதுவிசேடமென்று வினவ, நீலா தான் காட்டில் கண்டது முதல் இதுவரையில் நிகழ்ந்தவைகள் யாவையும் சாங்கோபாங்கமாக அவளுடன் சொல்லி எப்படியாவது மாணிக்கத்தையே வரிக்க வேண்டுமென்று சொல்ல, கிழவி; ஏ நீலா! இக்காட்டின் நடுவில் யாரும் உள்ளே நுழையக் கூடாத அவ்வளவு செடிகளாலும் முட்புதர்களாலும், கொடிகளாலும் பின்னப்பட்டது போல் ஓர் இடமிருக்கின்றது. அதற்கருகாமையில் புலி, சிங்கம், கரடி, யானை, வேங்கை முதலிய துஷ்டமிருகங்கள் வசிக்கும்படியான ஒரு குன்றிருக்கின்றது. அக்குன்றில் அநேகயோகிகள் வசிக்கும்படியான குகைகளிருக்கின்றன. அவ்விடத்திற்கு யோகிகளும் யானும் தவிர மற்று யாவரும் உட்செல்லக் கூடாது. அப்பேர்க்கொத்த விடத்தில் மலையடிவாரத்திலேயே ஓர் அரசமரமிருக்கின்றது. அதற்கடுத்தாற்போல் ஒருகுகையிருக்கின்றது. அதனுட்சென்றால் சுமார் 2000-அடி ஆழம் வரையில் செல்லலாம். அதற்கடியில் ஓர் அரண்மனையும், அதைச்சுற்றிலும் புஷ்பச்செடிகளும், கனிவிருக்ஷங்களும், பளிங்குபோன்ற தடாகங்களுமுள்ளனவாய், பார்த்தவர்கள் அதைவிட்டு நீங்க மயங்குவார்கள். அப்பேர்க்கொத்த இடத்திற்கு நீயும் மாணிக்கமும்சென்று அவ்விடத்திலுள்ள அதிசயங்களைக் கண்டு ஆனந்தங்கொண்டு, பின்புன்னுடைய நிஜஸ்வரூபத்தைக் காட்டி உன் மாயவலையில் மாட்டி, அவனுக்கு முளைக்குமுள்ள பாந்தவியத்தை எடுத்தூட்டிக்கோரிய எண்ணத்தை முடிவு செய்து வருவாய். தவிரவும் அக்குகைக்குட் செல்வதற்குச் சில மந்திரங்களையும், உபாயங்களையும் சொல்லிக் கொடுத்து, தான் நினைத்தளவில் வருவதாய் வாக்களித்துச் சென்றனள். உடனே நீலா மாணிக்க மிருக்குமிடம் சென்று, தாங்கள் கொண்டு வந்த ஆகாரத்தை ஓர் குளக்கரையில் உண்டுதண்ணீரருந்திச் சற்றிளைப் பாறிய பிறகு மேற்செல்லப் புறப்பட்டார்கள். நடுப் பகலில் இவ்விடங்களில் போகக்கூடாது, சற்று வெயிலுக்கு இங்கேயே யிருந்து ஊருக்கு திரும்பிப் போகலாம் என்றான் மாணிக்கம். நீலாவோ கிழவி சொல்லிய இடத்திற்குச் சென்று தான் கோரி வந்த எண்ணத்தை முடித்துக் கொள்ளாமல் போகக்கூடாது என்று நினைத்து, நமக்கு முன்னிருக்கப் பெற்ற குன்றினுடைய அதிசயங்களைக் கண்டு பிறகு ஊருக்கு திரும்பலா மென்று கேட்டுக் கொள்ள, மாணிக்க மதற்கிசைந்து செல்லுகையில் கிழவி கூறியவண்ணம் கொடிகளால் பின்னப்பட்ட இடத்தைக்கண்டு, அதனுட்பிரவேசிப்பதற்கு முயலும் தறுவாயில் ஓர் பூதம் தோன்ற அதைக்கண்டு பயங்கொண்டான் மாணிக்கம். நீலாவோ சற்றும் அச்சமில்லாமல் கிழவி உபதேசித்த மந்திரத்தை உச்சரித்தமாத்திரத்திலப் பூதம் அடிபணிந்து விடைபெற்றுச் சென்றது. மாணிக்கம் ஊருக்குத் திரும்பி விடவேண்டுமென்று சொல்ல; பார்த்தாயா, தோன்றிய பூதமெங்கே; நானி

ளுகிற வரையில் நீ எதற்கும் பயப்படவேண்டாம். எதுவந்தாலும் அவை களைத் தவிர்க்க யானிருக்கிறேன் என்று சொல்லி மேல்நடந்தார்கள். நீலா வாயை மொணமொணென்றுசொல்ல, அப்புதரவர்களுக்கு வழிவிட, அதே மார்க்கத்தில்சென்று குன்றைக்கண்டு குகையை அடைந்தார்கள்.

(இன்னும் வரும்.)

கா. அருணசல அய்யர்.

---

ஸ்ரீ

# ஆசாரியர்கள் சரித்திரம்.

## வணக்கம்.

### 1. நம்மாழ்வார்.

வெண்பா.

ஆசிரியர் மாசரித மந்தமிழாற் றந்திடவே
ஆசிரிய வென்னு ளமர்ந்தருளும்—பேசரிய
மாறனிரு வண்புகழை வான்றமிழ்ப்பா வாலணிந்த
மாறனிரு வண்டார் மலர்.

### 2. ஞானசிரியர்.

மழிசைநகர் வாழ்வுபெற வந்தகந்தா டைக்கோன்
அழகியசிங் கன்றன டிபூண்—டொழுகு மியான்
நேயமொடு சொல்வேனிந் நீணிலத்தி லாரியர்தம்
தூயசரி தத்தைத் துணிந்து.

### 3. தமிழாசிரியர்.

சந்தமர்கா ரப்பனகர் தன்னில்வரு தண்ணிரவி
செந்தமிழா லென்னைத் தெருட்டிய நல்—அந்தணர் கோன்
சீரியகோ பாலகுரு சேவடிசிந் தித்துரைப்பேன்
ஆரியர்த நற்சரிதத் தை.

—:o:—

## ஆசாரியர்கள் பரம்பரை.

1—பெரிய பெருமாள். 2—பெரிய பிராட்டியார். 3—சேனை முதலிகள். 4—நம்மாழ்வார். 5—ஸ்ரீமந்நாத முனிகள். 6—உய்யக் கொண்டார். 7—மணக்கால் நம்பி. 8—ஸ்ரீ ஆளவந்தார். 9—பெரியநம்பி. 10—எம்பெருமானார்*. 11—எம்பார். 12—பட்டர். 13—நஞ்சீயர். 14—நம்பிள்ளை. 15—பெரிய வாச்சான் பிள்ளை. 16—வடக்குத் திருவீதிப்பிள்ளை. 17—பிள்ளை லோகாசாரியர். 18—திருவாய்மொழிப்பிள்ளை. 19—ஸ்ரீ மணவாள மாமுனிகள்.

---

* எம்பெருமானரிடத்திலிருந்து இருவகையாகப் பிரியும். அதன் விவரத்தை மேற் கூறுவாம்.



### 1. பெரிய பெருமாள். *

எல்லாவுலகங்களினும் மேம்பட்டுப் புராதன மறைக்கும் எட்டாத நித்திய விபூதியான ஸ்ரீ வைகுண்டம் என்னும் திவ்விய லோகத்து, அனந்த கோடி சூரியப் பிரகாசமாய் விளங்கும் செம்பொன்செய் கோயிலினுள்ளே திருமாமணி மண்டபத்துக் கோப்புடைய சீரிய சிங்காதனத்து வீற்றிருந்து எழுலகும் தனிக்கோல் செல்ல ஸ்ரீ பூமி நீளை என்னும் தேவிமார் மூவரும் தன் மருங்கில் வசிக்க,

"சிறைப்பறவை புறங்காப்பச் சேனையர்கோன்பணிகேட்ப" என்றபடி, அனந்தகருட விஷ்வக்ஸேனர் முதலான அடியவர் பணிசெய்ய, அமரர்களுக்கதிபதியாயும், அனந்தகலியாணகுணக்கடலாயும், தனக்குஒத்தாரும் மிக்காரும் இல்லாதவனுயுமுள்ள ஸ்ரீமந்நாராயணன், அநாதிமாயையினாற் கட்டுண்ட ஆன்மாக்கள் கன்மவயத்தராய் இந்த இருள்தருமாஞாலத்தில் மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து சமுசாரமாகிய பெருங்கடலிலே விழுந்து நோவுபடுவதைக் கண்டு, "இவ்வுயிர்கள் நம்மையடைந்து கடைத்தேறுமுபாயம் அறியாமல் வருந்தியாடுவதே!" என்று திருவுள்ளமிரங்கி, நடுக்கடலில் திசைதப்பி மயங்கி அலைபவனுக்கு [illegible] நணிகனை ஒருவன் ஒருதோணியை உதவினாற்போல, அ[illegible]லேவிழுந்து அல்லற்படுபவர்க்கு உய்யலாம்படி சரீர[illegible]ங்களையும் கொடுத்து உபகரிக்க, அவர்கள் அவற்றிற்கு[illegible]தோன்றியவாறே பொருளுறைத்துக் காற்கடைகொண்டு, [illegible] இவ[illegible]டுத்ததோணியையே பற்றுகக் கொண்டு அக்கடலிலேமேய வீழ்வாரைப்போலவும், தருப்பை கொய்யக் கொடுத்தகத்தியால் பசுவினதுவாலையறுப்பாரைப் போலவும் வாணாளை வீணாளாக்கி,

"உண்டிராக் கிடக்குமப்போ துடலுக்கே கரைந்து நைந்து"
"உண்டியேயுடையே யுகந்தோடி",

இந்திரியங்களாகிய ஐவரால் அடர்ப்புண்டு திரிந்துவருந்தா நிற்க, இவர்கள் படும்பாட்டைக்கண்டு மீளவுங்கருணைகொண்டு, கிணற்றினுள்வீழ்ந்த குழந்தையை எடுக்க அதனுள்தானும் உடன்குதிக்கும் தாயைப்போலத் திருமால்தானே † பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்னும்

---

* திருமாலின் திருக்கலியாணகுணங்களும், அவன்றன் அவதார விவரமும் அனந்தமாதலின் அவை இங்கு ஒருவாறு சுருக்கமாய்க் கூறப்படும்.

† 1. பரமாவது—வைகுண்டத்திருக்கும் நிலைமை. 2. வியூகமாவது—பாற்கடலுள் உலகக்காப்பின் பொருட்டு யோகநித்திரை செய்யும் நிலைமை. 3. விபவமாவது—மற்சாவதாரம்முதலிய வெவ்வேறு அவதாரங்கள் கொண்ட நிலைமை. 4. அந்தர்யாமியாவது—ஒவ்வொருபொருள்களுள்ளும் தான் அணுவுக்குள் அணுவாயும் மகத்துக்குள்மகத்தாயும் சென்று அவற்றிற்றோய்ந்தும் தோயாமலும் நிற்கும் நிலைமை. 5. அர்ச்சையாவது—கோயில்களில் விக்கிரகரூபியாய் நிற்கும் நிலைமை.

ஐவகை நிலைகொண்டு ஆதியஞ்சோதிபுருவை அங்குவைத்துப் பாற்கடலுள் யோகநித்திரை செய்தருளிப் பின்னர் பலவகை அவதாரங்கள் செய்யக்கருதி, மற்சாவதாரத்தால் வேதங்களை யெல்லாங்கவர்ந்து சென்ற சோமகன் என்னும் அசுரனைக்கொன்று மீட்டுக்கொணர்ந்து அவற்றைப்பிரமனுக்கு அன்ன வடிவமெடுத்து உபதேசித்துத் தனது திவ்ய சக்தியை உலகினர்க்கு அறிவித்தும்; கூர்மாவதாரத்தால் இந்திரன் முதலோர் உய்யும் வண்ணம் பாற்கடலைக் கடைந்து அமுதளிக்கக்கருதி, அதில் நாட்டிய மந்தரமலையானது அக்கடலில் ஆழ்ந்துவிடாதபடி தான் அதைத்தாங்கியுதவியும்; வராகாவதாரத்தால் பூமியைப் பாயாகச்சுருட்டிச் சென்ற இரணியாக்ஷனைக் கொன்று பூமியை முன்நிலையில் நிறுத்திக்காத்தும்; நரஸிம்மாவதாரத்தால் இரணியகசிபு என்பானைக்கொன்று,

“சாணிலுமுளனோர் தன்மையணுவினைச் சதகூறிட்ட
கோணினுமுளன்மா மேருக்குன்றினு முளனிந்நின்ற
தூணினுமுளன் நீ சொன்னசொல்லினு முளன்” என்ற

தனது ‘எங்குமுளனொருவன்’ எனும் பெயர்ப்பொருளை வெளியிட்டும், அடியாரைக்காக்கும் அருட்பண்லர். வானமை விளக்கியும்; வாமனாவதாரத்தால் மகாபலிசக்கரவர்த்தியினிடம் உ ஞானசிரியர். வர்க்குதவும் நன்னெறியையும், தனது பரத்துவ ஸௌ றவந்தகந்தா டைக்சேர்ப்பும்; பரசுராமாவதாரத்தால் துஷ்டரைப்போக்கி பூண்—டொழுக மிராதாரமனாகவும், லக்ஷ்மணபரத சத்துருக்கர்களாகவும் எடுத்த அவதாரங்களால் அரக்கர்களைச் சங்காரஞ் செய்ததோடு சாமானிய தருமம், விசேஷ தருமம், விசேஷதர தருமம், விசேஷதம தருமம் * என்ற இவற்றை வெளியிட்டும்; கிருஷ்ணவதாரத்தால் பூபாரத்தைப் போக்கியதோடு சகலவேதாந்த சாரார்த்தமான கீதையினை உலகினர்க்கு உபகரித்தும்; இவையன்றி, வதரியாச்சிரமத்துத்தானே ஆசிரியனும் சிஷ்யனுமாய் அவதரித்துக் குருசிஷ்யக்கிரமத்தை வெளியிட்டும் அருளினன்.

இவற்றோடு நிற்காமல் அர்ச்சாவதாரஞ்செய்து பல திவ்யதேசங்களிலும், ஒவ்வொரு கிரகங்களிலும் வீற்றிருந்து அவரவர் அபீஷ்டங்களை அளிக்கத்திருவுள்ளங் கொண்டு ஸ்ரீரங்கம் முதலிய க்ஷேத்திரங்களில் வீற்றிருக்கின்றான். [திருமாலின் நக்ஷத்திரம்—திருவோணம் ஆம். இந்த நக்ஷத்திரத்திற்கு உரிய தேவதையே விஷ்ணு.]—

* சாமானியதருமமாவது—தாய்தந்தையரின் சொற்களைக் கேட்டொழுகல். விசேஷ தருமமாவது—தமயனைத் தந்தைக்கொப்பென்றெண்ணி [தெய்வபக்தியோடு] யொழுகல். விசேஷதம தருமமாவது—தான் உரிமை சிறிதும் பாராட்டாமல் பெரியோர் சொற்களைப்பணி யொழுகல். விசேஷதர தருமமாவது—அடியார்களையுபசரித் தொழுகல்; என்பர்.



## 2. பெரிய பிராட்டியார்.

இப்படித் திருமால் உலகுய்யுமாறு பல அவதாரங்களைச் செய்தமையே போலத் திருமகளும் “அகலகில்லேனிறையுமென்றலர்மேல் மங்கையுறைமார்பா”! என்றபடி அவன் பிரிவைத் தரியாளாதலின் பல அவதாரங்களிற் தானு பிறக்கக் கருதிப் பிறவித்துன்ப மடையாவண்ணம் திருப்பாற்கடலிற் றோன்றியும், அவ்வாறே ஜனகன் யாகசாலை யமைக்கும்பொருட்டு உழுத கலப்பையின் அடியில் பூமியினகண்டோன்றிச் சீதை என்னும் பெயருடன், கற்பின் நலம்முதலிய நல்லொழுக்கங்களை வெளியிட்டும், பின், ஸ்ரீ உருக்குமணிப்பிராட்டியாராயவதரித்து உபகரித்தும், ஸ்ரீ வில்லிபுத்தூரில் பெரியாழ்வார் என்ற ஸ்ரீ விஷ்ணுசித்தர் திருத்துழாய்க்குப் பாத்தியமைப்பதற்குக் கொத்துகையில், அக்கொத்தினவிடத்தில் தோன்றி ஆண்டாள் சூடிக்கொடுத்தாள் என்னும் திருநாமங்களுடன் பற்பல நீதிகளை வெளியிட்டும், உயிர்களிடம் பெருங்கருணைகொண்டு திருமால்பக்கம் அவ்வுயிர்கட்கு அப்போதைக்கப்போது புருஷகாரஞ்செய்துவந்தார். [இவர் திருநக்ஷத்திரம் பங்குனிமாதத்தில், உத்திரம்.] இவரிடம் ஆச்சிரியத்தவர்கள்—அனந்த கருட விஷ்வக் சேநாதி நித்திய முக்தர்கள்.

## 3. சேனைமுதலிகள்.

இவர், “சேனையர்கோன் பணிகேட்டப” என்றபடி திருமாலின் ஸேநாநாயகராய் நின்று காவல்புரிகின்றவர். இவரது அவதாரநாள் ஐப்பசி பூராடநக்ஷத்திரமாம். இவர் தம்மனைவியார் சூத்திரவதியார் என்பவர். இவரிடம் ஆச்சிரயத்தவர்கள்—ஆழ்வார்கள் பதின்மரும்*. இவர் செய்தருளிய நூல் விஷ்வக் சேநசம்ஹிதை முதலியன.

## 4. நம்மாழ்வார்.

இவர், பாண்டியநாட்டில் தாம்பிரபரணி நதிக்கரையில் திருக்குருகை என்னும் திவ்யக்ஷேத்திரத்தில் பொற்காரியாரது குமாரரான காரியாருக்கு, திருவண்பரிசாரத்துத் திருவாழ்மார்பருடைய புத்திரியாரான உடைய நங்கையாரிடம் அவதரித்தார். இவர் அவதரித்தகாலம் இக்கலியுகம் பிறந்த நாற்பத்துமூன்றாநாளாகிய பிரமாதி வருடம் வைகாசிமாதம் பன்னிரண்டாந் தேதி பவுரணமி திதி வெள்ளிக்கிழமை, விசாக நக்ஷத்திரத்தில் கடகலக்கினம் என்பவர்.

ஆழ்வார்களெல்லாரையும் அவயவ பூதராகவுடைய இவ்வாழ்வார் அவதரித்தவிவரம் யாதெனில், வேளாள வருணத்தில், திருவழுதி வளநாடர் என்று

* ஆழ்வார் பதின்மர் :—1. பொய்கையாழ்வார், 2. பூதத்தாழ்வார், 3. பேயாழ்வார், 4. திருமழிசையாழ்வார், 5. குலசேகராழ்வார், 6. பெரியாழ்வார், 7. தொண்டரடிப்பொடி ஆழ்வார், 8. திருப்பாணாழ்வார், 9. திருமங்கையாழ்வார், 10. நம்மாழ்வார்.

ருவர் இருந்தார், அவர் குமாரர்—அறந்தாங்கியார், அவர்குமாரர்—சக்கிரபாணியார்; அவர்குமாரர்—அச்சுதர், அவர்குமாரர்—செந்தாமரைக்கண்ணர், அவர்குமாரர்—செங்கண்ணர், அவர்குமாரர்—பொற்காரியர்; அவர்குமாரர் * மாறன் என்றும் நம்மாழ்வார். இத்தகைய சிறந்தகுலத்தில் அவதரித்தவர்.

இம்மரபில் பொற்காரியார் என்பவர், தம்புத்திரருக்கு விவாகஞ்செய்விக்கக் கருதி, திருவண்பரிசாரத்தில் வைஷ்ணவசமயத்திற் சிறந்த திருவாழ்மார்பரது திருமாளிகையில் காரியாருடன் எழுந்தருளி, 'தேவரீர் புத்திரியான உடைய நங்கையாரைக் காரியாருக்கு விவாகஞ்செய்விக்கவேண்டும்' என்று கேட்க, திருவாழ்மார்பரும் திருவுள்ளமுகந்து உடைய நங்கையாரைக் காரியாருக்குக் கொடுக்க, காரியாரும் பாணிக்கிரகணம் பண்ணினார். பின்பு, திருவண்பரிசாரத்தில் திருவாழ்மார்பனை எம்பெருமானைத் தொழுது, திருக்குருகூர்க்கு எழுந்தருளி நெடுநாள் இல்லறவாழ்க்கையில் இருந்தார்.

இப்படி இருக்கையில் காரியார் ஒருநாள் தம்மாமனார் வேண்டுகோளின்படி தமது மனைவியுடனே திருவண்பரிசாரத்தையடைந்து அங்குச் சிலநாள் வாசஞ்செய்து கொண்டிருந்தனர். பிறகு, தமது வாழ்க்கைத்துணைவியுடன் தம்மூர்க்கு வருகையில், திருக்குறுங்குடி என்னும் க்ஷேத்திரத்தையடைந்து ஆங்கு எழுந்தருளியிருக்கும் 'நம்பி' என்ற பெருமானைத் தரிசனம்பண்ணித் தமக்குப் புத்திரசம்பத்து உண்டாகுமாறு வேண்டினர். அவ்வெம்பெருமான், 'நாமே உமக்குப் புத்திரராகவந்து பிறப்போம்' என்று அர்ச்சகர்மூலமாய்ச் சொல்லியருளித் தம்முடைய தீர்த்தம், திருமாலை முதலியவற்றை அருளினார்.

(இன்னும் வரும்.)

ஸ்ரீரங்காசாரியர்.

---

## மோகனாம்பாள்.

நீலாவதி உன்னுடைய மிருதுவான வசனங்களைக் கேட்க்க எனக்கு உண்டாகும் ஆனந்தம் அளவிடக் கூடவில்லை.

அடி மோகனா,—நான் அவ்விதமாக வசனிப்பது உனது ஸாமீபத்தால் எனக்கு உண்டாகும் ஒருவித உற்சாகத்தாலல்லது வேறல்ல. ஏனெனில் மற்றக் காலங்களில் எனக்கு இவ்வளவு சந்தோஷம் உண்டாவதில்லை. எனது கணவனிடத்திலும் நான் இவ்வளவு சந்தோஷமாகப் பேசினதில்லை. அப்படியான் வசனித்தாலும் அவர் மகா பாண்டித்தியராதலால் நான் சொல்லும்

* இஃது இவர்க்கு வழங்கும் பெயர்களுள் ஒன்று; அவை:—சடகோபன், வகுளாபரணர். காரிமாறன், பராங்குசன், குருகூரன், திருவழுதிவளநாடன் என்பன.



மொழிகளைக் கேட்டு அவர் சிரக்கம்பனம் கூட செய்வதில்லை. ஆதையால் எனக்கு ஆத்மபந்துவாகிய உன்னையும் என் கணவனையும் தவிர வேறு யாரிடத்தில் நான் சரசமாகப் பேசுகிறது?

நீலா,—உன்னைப்போல் எனக்கு வேகமாகப் பேச முடியவில்லை. ஆனால் மனதில் தோணினாலல்லவோ வெளியிடுவது என்றாலோ என் மனதில் இருக்கும் விஷயங்களைச் சொல்ல என் வாழ் நாள்முழுவதும் போதாது: பின்னை ஏன் என்பையோ உன்னளவு நான் வாசிக்காத தோஷம்.

மோஹனா,—நேற்றிரவு தான் என் புருஷன் கம்ப ராமாயணத்தை வாசித்து அதிலுள்ள ஒவ்வொரு பொருள் நயத்தையும் அவர் சொல்லச் சொல்ல ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி தன்னை யறியாது மருண்டு பிறகு ஒருவாறு தெளிந்து, கனவோ நனவோ என ஐயுற்றுத் திகைத்துப் பின்னால் உறங்கி விட்டேன். பொழுது விடிந்து சற்று நேரம் பொறுத்துத் தான் எழுந்தேன்.

நீலா—நீ பூர்வஜன்மத்தில் நல்ல பூஜையைச் செய்தவள். ஸர்வகுணலம்பன்னரான புருஷனை அடைந்தாய், உனது முகத்தில் விழித்தாலும் எனது பாபம் நீங்கி மற்றொரு ஜன்மத்திலாகிலும் நல்ல புருஷனை அடைவேன். என்னகத்திலோ முரட்டுத்தனமும் பிடிவாதமும் அதிகமாக விருக்கிறது. பேதையாகிய ஸ்திரீஜாதி சொல்லுகிறதை நாம் கேட்க்கிறதா என்று என் புருஷன் நினைக்கிறார். அது என்னுடைய பூஜாபலன் என்று வருத்தத்தோடு சொன்னாள் மோஹனாம்பாள்.

மோஹனாம்பாளுடைய புருஷனை ஸீதாராமய்யர் என்று கூப்பிடுவார்கள். அவர் தனது பத்தினி 'பொற்பினுக் குறைப்புளாம் பொன்னம் கொம்பனாள்' என அறிந்தவராயினும், இன்பம் அநுபவிக்கும் தன்மை சிலர்க்கே சிறப்புற்றுள்ள தாதலின் அச்சிறு பகுப்பினரோடு இவர் நன்றாய்க் கலந்தவரல்லர். மோஹனாம்பாள் என்ற இப்பூமகளோ, மோஹினியென்றே யாவரும் திகைக்கத்தக்க உருவத்தையும் மகா நற்குண நற் செய்கைகளையும் ஸம்பூர்ணமாய் கடவுளால் அளிக்கப் பெற்று பொற்பினுக்கேற்ற கற்பின் அமைவாய் யாவரும் இவளைப்போல் மற்றொரு பெண் உலகத்திலில்லை எனக் கீர்த்தி பெற்று விளங்கி வருகிறாள்.

நீண்டு, சுருண்டு, திரண்ட மேகம்போல் கறுத்து, மயிலினது தோகையோ என ஐயுறத்தக்க கூந்தலின் முன்னர், "அக்கண் வானத்தரவுப்பகையஞ்சித் திங்களு மீண்டு" த் திரியுங்காலை வெங்கணரவம் விரட்டியும் பிடித்ததோ என அமைந்த முக மண்டலத்தையும் சண்பக மலரைப் பழித்த நாசியினையும் உடையாள். இவளது நயனங்களோ முருகக் கடவுளது வேலைப் பழித்துக் கர்ணபரியந்தம் நீண்டவை. அந்நயனங்களினின்றும் கிளம்பும் கிரணங்கள் திக்குகளனைத்தையு மளந்து முடி விடத்தைக் கண்டு பின்னம் போக இடமில்லையே என வருந்தப்படுகின்றன. முல்லையரும்புகள் கட்டப்பட்டன

போல விளங்கும் பல் வரிசைகளை பவளச் செப்புப்போல குவிந்திருக்கும் அதரங்கள் மூடிக்கொண்டு அவளிடத்துண்டாகும் புன்னகையை வழிமறிக்கின்றன.

(இன்னும்வரும்.)

ஆர். ஸி. கிருஷ்ணசாமி.

---

## சோபாமணி.

—:o:—

அரசன்:—"என்றன் காதலனன்பனே! நீ இன்னும் இளைஞனாயிருக்கின்றாய். இளைஞரும் மூடரும் என்னைப் பழிகூறின் யான் அதனைப் பொருள் செய்வதில்லை. நீ பெரியனாகி வியவகார தசையடையுங்கால் விஷயங்களை நன்காராய்ந்தே பேசுவாய். அதுநிற்க. இதுவே சோபயா மான்ஸ்பீல்டின் விண்ணப்பத்திற்கு உத்தரவு." (அவனிடத்து ஆல்பர்ட் எழுதிய விண்ணப்ப பத்திரிகையைக் கொடுத்தான்.) அதனுட்கண்ட உத்தரமாவது:—வருமாதம் இந்நாளினுள், பெர்லின் நகரத்துச் சிறுமட்கலத்தைக், கண்டோர் வியக்குமாறு மிக்க தொழிற்பாடமைந்ததாகச் செய்து முடித்துக்காட்டுவோர் எவரேயாயினுமாகுக, அவர் யாரை மணக்க விரும்புவரோ அவரை மணக்கவும், யாரை மணவாதொழிய வேண்டுவரோ அன்னாரை மணவாதொழியவும் செய்வேன். அஃதன்றியும், அத்திறமமைந்த சிற்பியின் விருப்பின் வண்ணம் வேண்டிய அமைப்புக்களோடு அவரை ஸாக்ஸனிக்கு ஏகுமாறு விடுக்கவும் விடுப்பேன். மற்றும், அவர் இந்நகரத்தே வதிய விரும்புவரேல் அன்னவர்க்கு ஐஞ்ஞூறு பொன்னும்பரிசில் அளித்து அவரது நல்வாழ்க்கைக்கு அடுத்த நலனெல்லாம் அமைத்துத் தருவேன். இம்மட்டேயோ? அத்தகைய தொழிற்றிறம் வல்ல சிற்பியின் பெயரும் அக்கலத்தின் மீதே பொறிக்கப்படும். அக்கலத்துக்கு ப்ரஷ்யாப் பிங்கான் எனப் பெயரும் இடப்படும்."

இதனைப்படிக்கக் கேட்டதும், ஸோபையாவுக்கு உண்டாகிய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் என்னென்றியம்பலாம்! களிப்பெனும் அளக்கரிற் குளித்தெழுந்தான். ஆயினும், அவன்போலவே சித்திரவேலையிற் றிறமமைந்த வேறு சிலரும் இருந்தனர். ஆதலின், அரசன் அளித்த உத்தரவை அறிந்த அக்கணமே அத்



தொழிற்சாலையிலுள்ள ஆடவர் மகளிரனைவரும் முனைந்து வேலை செய்ய முயன்றனர். சிலர் சிறை நீங்கிச் சுதேயஞ் சென்று சுகம் பெற நினைந்தனர். சிற்சிலர் ஐஞ்ஞூறு பொன்னுக்காசைகொண்டனர். சிலச் சிலர் தம்பெயர் கலத்தின்மீது பொறிக்கப்படுமென்று அப்பெருமைக்கு அவாக் கொண்டனர். எனினும், நம் ஸோபையாவைப்போல அத்துணை ஊக்கமும் உற்சாகமுங் கொண்டாரொருவருமிலர். இறுதியில் ஸோபையா இயற்றிய சித்திர மட்கலனையும் ஏனையோர் செய்த மட்கலன்களையும் ஸான்ஸ-ஸூஸியிலுள்ள சித்திரசாலைப் படிக்கட்டின் மீது நிரலுற அடுக்கி வைக்குமாறு அரையன் ஆணைசெய்ய, அங்ஙனமே அவையனைத்தும் ஒருசேர ஒழுங்காக அச்சோபான்மிசை வைக்கப் பட்டன. பிரடரிக் வேந்தன் தான் பகற்கட் புரியலாகுந் தொழிலனைத்தையும் முடித்துக்கொண்டு மாலையில் அவற்றைப் பார்வையிட ஆண்டுச் சென்றனன். அவனோடு லானிஸ்காவும் மற்றுஞ் சிலரும் போயினர். மன்னவன் மட்கலன்களைக் கண்ணுணியிட்டு அவற்றின் தரங்களைப் பார்த்து வருதலை நோக்கி எவரும் உரையாடாது அமைதியோடிருந்தனர். அவ்வமயத்து, "இதுவே ப்ரஷ்யாமட்கலன்" என்று ஒன்றினைக் கையிலெடுத்தனன். அதுவோ நம் ஸோபையாவினது. அதனைக்காணலும். லானிஸ்கா அதனடியிற் பொறிக்கப்பட்ட அவளது பெயரை அரசனுக்குக் காட்டுவான் அங்ஙனே சிறிதுபொழுது தங்கியிருந்து, அக்கணமே, அம்மகிழ்ச்சியை ஸோபையாவுக் குரைத்திட ஓடினான். அப்பொழுது, தனது கதி யாதாகுமோவென் றேக்கங்கொண்டு விதியை நினைந்து, போட்ஸடத்தில் லானிஸ்காவின் தாய் வீட்டிற் காத்திருந்த ஸோபையாவினது வாட்டத்தைக் கண்ட அப்பெரியாள் "பெண்ணே! அருட்பெருங் கடலான ஆதிபகவன் நினது வேண்டுகோளை அளித்திடுவன். அவனது திருவருட்டிறத்தைச் சிந்தைசெய்து தேறியிராய். "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்பது அறியாயோ? தன்னையேபற்றினார்க்கு அவன்றன் பொன்னடிப் போதே மன்னிய துணையென் றுன்னுவாய்.

### ஆசிரிய விருத்தம்.

வீட்டினுற்றுணை வெளியினுற்றுணை
விண்ணினுற்றுணை மண்ணினிற்

காட்டினுற்றனை மேட்டினுற்றனை
கடலினுற்றனை யுடலெனுங்
கூட்டினுற்றனை சாற்றினவ்விறை
சோதினுற்றனைப்பாதமே
நாடினுற்றனை கூடவேறிலை
நாடுவாய் நலனிடவே.

மழை பொழிவதும், காற்று வீசுவதும், சூரியன் முதலியவை ஒளி செய்வதும், மக்கள் தத்தமக்கு விதித்தநெறியி னிற்பதும் ஆகிய இவ்வுலகியல்கள் நிகழ்வது எவருடைய ஆணையினால்? அம்முழுமுதற் கடவுளது திருவாணையினாலன்றோ? ஒவ்வொரு காலத்தில் மழைபொழியாதொழியவும், காற்று வீசாது நீங்கவும், சூரியன் முதலிய ஒளிகள் விளக்கஞ் செய்யாது மறையவும் செய்பவர் யாவர்? அவர்தாமே. அவருடைய பரமசக்தியின்றி எப்பொருளும் எதனையும் இயற்றவல்லதாகாது. "அவனன்றி யோரணுவு மசையாது கண்டாய்" என்றிங்ஙனம் தேற்றலும், அப்பெண்மணி பின்வருமாறு அவ்வருட் பெருங்கடலான இறைவனைத் துதிப்பாளாயினள்: "அகிலநாயகனே! ஆதியந்த மில்லாதானே! இனைத்தென் றறிவரிய பொருளே! ஈறிலின்ப மூர்த்தியே! உள்ளுவாருள்ளத்தூறுமோர் தெள்ளமுதே! ஊனுமுயிருமானவனே! எய்ப்பில் வைப்பே! ஏத்துவா ரிடர் கெடுக்கு மீசனே! ஐந்தவித்தவர்தம் அரும் பெறன் மணியே! ஒப்புயர் வற்ற நற்பொருளே! ஓதியோதியுணருந்தோறு முணர்ச்சியுதவு மொண்சுடரே! ஔவியமவித்தார்க் கரும்பெருஞ் செல்வமே! நினது கண்ணிடங்கொண்ட திருவருள்வெள்ளத்தி லொரு சிறுதுளியை யென்மீது சிதறவிடலாகாதோ?

'கடலமுதே தேனேயென் கண்ணே கவலைப்
படமுடியா தென்னைமுகம் பார் நீ பராபரமே.'
'பாராயோ வென்னைமுகம் பார்த்தொருகா லென்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே.'
'ஓயாதோ வென்கவலை யுள்ளேயா னந்தவெள்ளம்
பாயாதோ வையா பகராய் பராபரமே.'
'உள்ள மறியா யுழைப்பறிவாய் நானேழை
தள்ளி விடின் மெத்தத் தவிப்பேன் பராபரமே.'



'கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போலவெனக்
கென்றிரங்குவாய்கருணை யெந்தாய் பராபரமே.'
'என்னுடைய வெண்ணமெலா மெண்ணியெண்ணி யேழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே.'
'துன்பக்கண் ணீரிற் றுளைந்தேற்குன் னருணந்த
வின்பக் கண்ணீர் வருவதெந்நாள் பராபரமே.'
நீங்காத வின்ப நிறைவே யெனையருளித்
தாங்காய்நீ யிந்தத் தருணந் தயாகரனே!
உன்னையே நற்றுணையா வுற்றடைந்தே னுள்ளமுவந்
தென்னைநீ காத்தருளா யெந்தாய் தயாகரனே!
வந்தித் துன்பாசம் வாழ்த்தி யடுத்தேனென்
சிந்தைப் பிணிதீரச் செய்யாய் தயாகரனே!"

என்றின்னவாறு பன்னிப் பரவி உள்கரைந்துரைத்து, வேந்தன் கட்டளையை எதிர்பார்த்திருக்கு மெல்லையில், லானிஸ்கா விரைந்தோடிவந்து அவளது மங்கலம் அரசனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மகிழ்ச்சியை உரைத்திடவே, அவளுக் குண்டான ஆனந்தத்தை அளந்துரைக்க யாரால் ஆகும்? எழுதினும் அடங்காது மொழியினு மடங்காது. நடுக்கடலிற் றிசைதப்பி அலைந்தல்லற் படுவானொருவன் தற்செயலாய் ஒரு துறையைக் கண்டதுபோலவும், கைப்பொருளையிழந்து கலங்குமொருவன் அதனை மீளவும் கைப்பெற்றாற்போலவும், கவலைபாற் கலங்கி நின்ற சோபையா 'தனது கவலையொழியும் உபாயங் கைபுறப் பெற்றாள்' 'கரை செயவரியதொருபெருவகைக்கடன் மூழ்கி' ஆனந்தக் கண்ணீருகுத்தாள். உள்ளங் குளிர்ந்தாள். ஓடினாள். ஆடினாள். பாடினாள். தனக்குச் சந்தோஷங் கூறிய லானிஸ்காவினது பாதத்து வீழ்ந்தாள். எழுந்தாள். புகழ்ந்தாள். தன்னுடன் அங்குக் காத்திருந்த தன் காதல் நண்பனைக் கிட்டினாள். அவனுக்கு அக்களிப்பினை யுரைத்திட்டாள். அவனும் அக்களிப் பென்னும் அளக்கரிற் றிளைத்தெழுந்து, "தேமொழீ! நின்பங்கில் இறைவன் செய்த திருவருட்டிறத்தை யென் சொல்வேன்? ஆபத்பந்து, ஆநாதரக்ஷகன், அடைந்தாரைக் கைவிடான் என்று ஆன்றோர் கூறும் மொழித்திறத்தினது உண்மையைக் கண்டாயே.

### கலி விருத்தம்.

கவலை யாழியுட் பட்டுக் கலங்கிய
அகல நீங்கி யகமகிழ்ந்தார்ந் திவள்
தவல ருஞ்சுகந் தான்பெறச் செய்தனை
குவல யத்துன் குணஞ்சொலலாவதே"

என்றிங்ஙனம் உரையாடித்தன் காதலியுந் தானுங் களியாட்டயராநிற்க, ஸோபையா தன் நண்பனை பிற்றைநாட் காலையில் மணஞ் செய்துகொண்டு அவர்களுடைய தந்தைதாயாருடையும் ஸாக்ஸ்னிக்குப் போகலாகுமென்று காவலனது கட்டளையையுற, அதனைப் பெற்ற அவ்விருவரும் தமது வேண்டுகோள் முற்றும் ஈடேறப் பெற்றவராகிக் கொண்டடங்காத ஆநந்தவாரியிற் குளித்தெழுந்து, லானிஸ்காமாட்டும் அவன்றன் தாய்மாட்டும் விடைபெற்றுத் தம்மூர்க்குச் செல்லப் புறப்படுங்காலையில், சடிதியில் மாடப்படிக் கட்டில் ஓராரவாரம் எழுந்தது கேட்டுத் திடுக்கிட்டனர்.

(இன்னும்வரும்.)

கே. எஸ். கோபாலாசாரியர்.

## கெடுவான் கேடுநினைப்பான்.

ஒருநாட் காலையில் ஒரு சேவலானது ஒரு வீட்டுக் கூரையின்மேல் நின்று உரக்கக் கூவியது. அப்பொழுது ஒரு நரி இந்தச்சேவலைப் பக்ஷிக்கவெண்ணி அதனருகிற் சென்றது.

பின்பு கோழியைநோக்கி "ஓ கோழியே! சமாசாரத்தைக் கேட்டையா?" என்று வினவியது.

கோழி "என்ன சாமசாரம்? ஏதாவது விசேஷம் உண்டா என்ன?" என்றது.

நரி. "உனக்குத் தெரியாதுபோலிருக்கிறது! பக்ஷிகளும் மிருகங்களுமாக சண்டையை நிறுத்திவிடவென்று சபதஞ் செய்துகொண்டிருக்கின்றனவே. நமக்கு இனி பகலென்றும் இரவென்றும் வித்தியாசமில்லை. நமக்கு எப்பொழுதும் க்ஷேமமே. இனி



மேற்பட்டு ஓனாய் ஆட்டைக்கொல்லாது. நரி கோழிக்கூண்டைத் தொடாது. பூனை எலிகளைப் பிடிப்பதை ஒழித்துவிடவேண்டுமாம். நாயானது ஆட்டைப்பார்த்து குலைப்பதையுங்கூட நிறுத்திவிடவேண்டும். ஆகையால் சீக்கிரம் கூரையைவிட் டிறங்கிவந்து எனக்குவந் தனோபசாரம் செய்வது உனது கடனாகும்" என மறுமொழி யளித்தது.

சேவல் ஒன்றுஞ் சொல்லாமல் வெகுதூரத்தில் எதையோ பார்ப்பதுபோல் கழுத்தை நீட்டியது.

அப்போது நரி "என்ன! பார்க்கிறாய்?"

சேவல் "என்னவா? ஒன்றுமில்லை. சில வேட்டைநாய்கள் தானே வேறென்ன? அவைகளும் இந்த க்ஷேமசமாசாரத்தை எனக்கறிவிக்கத்தான் இங்கே வருகின்றன."

நரி "வேட்டைநாயா! அப்படியானால் நான் பறக்கவேண்டு"மென்று ஓட்டமெடுத்தது.

அப்பொழுது சேவல் "நரியாரே, கொஞ்சம் பொறும் புதிய கட்டுப்பாட்டுப்படி உமக்கு ஓனாயைக்கண்டு ஓடவேண்டிய நிமித்தமில்லையே" என்று கேட்டது.

அதற்கு நரி "ஐயோ! நானிங்கேயிருத்தல் கூடாது. அந்த நாய்கள் க்ஷேமசமாசாரத்தைக் கேட்டவில்லையோவும்" என்று சொல்லிக்கொண்டே காட்டின்வழியாய் ஓடியது.

இந்த நரி அந்தக் காட்டின்வழியாய்ப் போய்க்கொண்டிருக்க வேட்டைக்காரருடைய பார்வைக்குத் தென்படவே அவர்கள் சில நாய்களை யேவ அவைகள் வெகு துரிதமாய் ஓடிவந்து நரியைக் ஓட்டி அதைப் பிடித்துச் சின்னாபின்னமாய்க் கிழித்தெறிந்து விட்டன.

இந்தக் கதையினால் நாம் மேலெடுத்துக்கொண்ட பழமொழி நன்றாய் விளங்குகிறது. நமது சாஸ்திரங்களில் நாம் வேறொருவருக்குத் தீங்கு நினைப்பது கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியல்லாமல் நாம் தீங்குநினைத்தாலோ அந்தத் தீங்கு நமக்கே விளைவதுமன்றி அந்தத் தீங்கை ஒருவன் செய்தால் அவன் எவ்வளவு பாவத்துக் குள்ளாவானோ அவ்வளவு பாவத்துக்கு நா

மும் உள்ளாவோம். நரி கோழியைத்தின்ன நினைத்தது சிறிது நேரத்திற்கெல்லாம் அதுவே சின்னாபின்னமாய்க் கிழிக்கப்பட்டதைப்பார்த்தீர்கள்.

## கலகமில்லாமல் வாழ்நாட்கழிக்க மருந்து.

I. முதலில் உமது சொந்தவேலையைச் செய்யும்.

II. நமது வாயினின்றும் ஒரு கெட்டவார்த்தையும் வரப்படாது.

III. உமது சொந்தமானாலுஞ்சரி. அல்லது உமது அபிப்பிராயத்துக்கு மாறானதானாலுஞ்சரி. அற்பவிஷயங்களுக்கெல்லாம் வீண் உதண்டை வேண்டாம்.

IV. வேறொருவர் உமக்குச் செய்யக் கடமைப்பட்டிருக்குமவைகளைச் செய்யாவிடினும் அவர்களுக்கு நீர் செலுத்தவேண்டிய கடமைகளைக் குறைவறச் செலுத்திவிடும். நம்மை அவமதித்த ஒருவரை நாமும் அவமதிப்பது அவரைப்போல் நாமும் தீத்தொழில் புரிவதாகும்.

V. உமது விரோதிகள் நீர் அவர்கள்மேல் வைத்திருக்கும் பக்ஷத்தையும் அபிமானத்தையும் அறிந்துணரும் பொருட்டு உம்மாலியன்றவளவில் அவர்களிடம் பக்ஷமாய் நடந்துகொள்ளல் தகுதி.

VI. பொறுமை, சாந்தம், தாழ்மை இவை உமது மனதை வீடாக்கிக் கொள்ளட்டும்.

VII. முடிவாக எந்தக்காரியத்தை தொடக்கும்போதும் முதலில் பகவானைத் தோத்திரஞ்செய்து பின் தொடங்கல்வேண்டும். அக்காரியம் தவறாது சித்திபெறும்.—கூபம்.

ROYAL VICTORIA PRESS,—LINGHI CHETTY STREET.

# ஜனப்பிரியன்.

( * )

மாதம் ஒருமுறை பிரசுரம் செய்யப்படும்.

புஸ்தகம். 1] சென்னை 1900 ௵ அக்டோபர் ௴ [இலக்கம். 4

## நட்பு.

இரவியின் ஒளியைப் போலும் நட்பு. மனிதர்களுக்கு நண்பரில்லாவிடின் அவர் தம் வாழ்நாளில் இன்பம் அடையார்கள். புத்தகங்களை நண்பர்களுக்குச் சமானமாகச் சொல்வது வழக்கம். புத்தகங்களோ நாமே விரும்பி வார்த்தையாடினாலொழியப் பேசா. நண்பர்கள் நம் இஷ்டத்தை எதிர்நோக்காது பிழைத்த விடத்துப் புத்திமதி கூறுவார்கள்.

அவரவர்களுக்குப் பிரியமான பொருள்களோ வனேகம். சிலர்க்குக் குதிரைகள் மீதும், நாய்கள் மீதும், பணத்தின் மீதும், கவுரவத்தின் மீதும், பிரியம். பணத்திற்காக எத்தகைய கொலைப்பாதகத் தொழிலையும் அஞ்சாமற் செய்கின்றார்கள். கவுரவமடைவதற்குத் தம் மூதாதையர் தேடிவைத்த பொருளையும் அழிக்கின்றார்கள். இவைகளைப் பார்க்கிலும் உண்மையான நண்பனே மேன்மையானவன். அவனைத் தேடிபடைதலே அரிய செயல். தன்னிடத்துள்ள எப்பொருளும் அமிதமாயினும் அதனைக் கணக்கிடலாகும். இத்தனைபேர் என் நண்பர் என்று மாத்திரம் கூறுதலியலாது. பிற பொருள்களின் அருமையைப் பற்றிப் பலர் பலவாறு கூறுகின்றனர். ஆனால் நண்பரின் அருமையைப் பற்றி எல்லோரும் ஒரே மாதிரியாகவே சொல்கின்றனர்.

ஒரு குதிரையை வாங்கவேண்டுமாயின் அதன் சுழிகள் நன்றாயிருக்கின்றனவா வென்று மிகவும் சாக்கிரதையாய்ப் பார்க்கின்றோம்: நண்பரை யாராய்தலாகிய முக்கியமான செயலைக் கவனிக்கின்றோமில்லை.

சூரியன் ஒளியினாலும், உஷ்ணத்தினாலும் புஷ்பங்களின் அழகும் வர்ணமும் எப்படி மேன்மைப் படுத்தப் படுகின்றனவோ அப்படியே நண்பரோடு பழகுதலால் நம் வாழ்க்கையும் அவ்வாழ்க்கையாலடையும் இன்பமும் மேன்மைப் படுத்தப் படுகின்றன.

நண்பனும் ஒருகாலத்திற் பகைவனாவானென்றும், பகைவனும் ஒருகாலத்து நண்பனாவானென்றும் அவர்களிடத்திற் றகுந்தாற் போல நடத்தலே மேன்மை யென்றும் சிலர் கூறுகின்றனர். முற் கூறிய மொழிகளின் முதற் பாகத்தின் உண்மை எப்படியாயினும் பிற் பாகத்தின் உண்மை மிகவும் மேன்மை யெனப் பாராட்டத் தக்கது.

எவனேனும் ஒரு வழிப்போக்கன் சைதாப்பேட்டைக்கு வழியெப்படி என்று கேட்டால் அவனை நண்பனெனப் பாவித்தல் அனேகருடைய வழக்கம். பல நண்பர்கள் இருப்பினும் அவர்களை நாம் அடிக்கடி சந்திப்பதில்லை. ஒரு பகைவனிருப்பினும் அவனை நாம் உலகத்தில் எங்கும் சந்திக்கின்றோம். பகைமையே யில்லாமற் போனால் நட்பு இருத்தல் அசாத்தியம்.

சில நண்பர்களிடத்து நாம் கிரகிக்க வேண்டிய பொருள் ஒன்று மில்லாவிடினும் அவர் நம்மைக் கேட்கும் கேள்விகளால் நம் புத்தி தூண்டப்படுகின்றது. நாம் வாழ்க்கையால் அடையக்கூடிய இன்பம் நல்ல சிநேகிதரை ஆராய்ந்து கொள்ளுதலிற்றானிருக்கின்றது. அப்படி ஆராய்தலிற் பிழைத்தால் நாம் கீழ்மையடைய வேண்டியதுதான். நட்பினை அடிக்கடி யடைதலி லவாக் கொள்ள வேண்டும். அப்படி நாம் அடையாமற் போனால் நடவாத வழியில் முட்கள் அடர்ந்து வளருமாறுபோலச் சிநேகம் பாழடையும்.

நட்புச் செய்தலை விட அவர்களை நட்பாளராயிருக்கச் செய்தல் அருமை. இதனாலன்றே திருவள்ளுவரும்

“செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.”

என்று கூறினார்.

அருமையான ஒரு நூலைப் படிக்குந்தோறும் புதிய நயங்கள் புலப்படுதல்போலப் பழகுந்தோறும் இருவர்க்கும் மகிழ்ச்சி யுண்டாக்குவதே நட்பு. சிலர் நட்பினை யிழக்கும்வரையும் அதன் பெருமையை யறிவதில்லை. உண்மையான சிநேகத்தைக் கூற்றுவனாலேயும் பிரிக்க முடியாது. சிநேகர் ஓர் இடத்திலேயேயிராமற் போனாலும் இருக்கின்றார்கள்? வறியர்களேனும் செல்வர்கள்; பலஹீனர்களேனும் பல முள்ளவர்கள்; இறந்தார்களேனும் உயிருள்ளவர்கள். இவ்விஷயங்கள் முழுமையும் மாறுதலாகத் தோற்றும். அவ்வளவு தான். நண்பன் இறந்தானாயினும் அவன் அரிய குணங்கள் என்றென்றும் நம்மனத்தை விட்டு அகலா வன்றே.



சருக்கை – இராமசாமி ஐயங்கார்.

---

## இராமாயண ஸங்கிரகம்.

(75-ம் பக்கத்தொடர்ச்சி.)

### அத்தியாயம். II. (அயோத்தியா காண்டம்.)

தசரதர் முதலானவர்கள் மிதிலையை விட்டு அயோத்திக் திரும்பி வருகையில் பரதன் சத்துருக்கினனோடு அவர்களினின்றும் பிரிந்து தன்னுடைய அம்மான் வீட்டிற்குப் போம் நிமித்தம் கேகய நாட்டிற்குச் சென்றான். இராமரும் லக்ஷ்மணரும் தம் தந்தையோடு அயோத்தியை யடைந்தார்கள். பிறகு சில நாள் சென்றதும் இராமர்க்குப் பட்டாபிஷேகம் செய்வதற்குரிய ஏற்பாடுகளெல்லாம் நடந்து கொண்டிருந்தன. ஒரு நாள் தசரதர் இராமலக்ஷ்மணர் இருவரையும் அழைத்து இராமரை நோக்கி “என்கண்மணியே! இனியாயினும் என்னுயிர்க் குறுதி பயக்கும் காரியத்தை நான் ஆரம்பிக்க வேண்டாமா? திருமகளை யொத்த ஜானகிக்கு நாயகனே! பூதேவியையும் நீ சீக்கிரமடைய வேண்டுமென்பது எனது கோரிக்கை. அரசை உனக்குத் தந்து நான் வனத்திற் சென்று தவம் செய்ய விரும்புகிறேன். உனது கருத்து யாது?” என்றார்.

* “நிவப்புறு நிலனெனு நிரம்பு நங்கையும்
சிவப்புறு மலர்மிசைச் சிறந்த செல்வியும்

---

* செய்யுள்களின் பொருளறிந் தானந்தங் கொள்ளக்கூடாத சிறுவர் சிறுமியர்முதலானோர் அவற்றை நீக்கி வசனமேவாசித்துக்கதையினை யறியலாம்.

உவப்புறு கணவனை யுயிரி னெய்திய
தவப்பயன் றுய்ப்பது தரும மன்றரோ."

"ஆசலா லிராமனுக் கரசை நல்கியிப்
பேதமைத் தாய்வரும் பிறப்பை நீக்குவான்
மாதவந் தொடங்கிய வனத்தை நண்ணுவேற்
கியாது மங்கருத் தென வினைய கூறினன்."

இராம லக்ஷ்மணரிருவரும் இதைக் கேட்டுத் தம் தந்தை தம்மை விட்டுப் பிரிந்து போகவேண்டியிருக்கிறதே யென்னும் ஏக்கத்தினால் ஆவினை விட்டுப் பிரியுங் கன்றைப்போற் காணப்பட்டார். பிறகு இராமர் தம் தந்தையர் பாதபங்கயத்தைப் பணிந்தெழுந்து விடை பெற்றுச் செல்ல வெண்ணுகையில் தசரதர் தனது தநயன்மீது உள்ள ஆசை அதிகரிக்க இராமனைத் தன் மார்புறத் தழுவி முத்தமிட்டார். இது எப்படி இருந்ததென்றால் தானிதுகாறும் பொறுத்தளித்து வந்த பூபாரத்தைத் தன் தநயனும் தாங்கவல்லனோ என்று தனது தோளையும் மார்பையுங் கொண்டு அவனுடைய அவ்வங்கங்களை அளவு பார்த்ததை ஒத்திருந்தது.

"நலங்கொள் மைந்தனைத் தழுவின னென்பதென் னளிநீர்
நிலங்கள் தாங்குறு நிலையினை நிலையிட நினைந்தான்
விலங்க லன்னதுண் டோளையு மெய்த்திரு விருக்கும்
அலங்கன் மார்பையுந் தனதுதோண் மார்புகொண் டளந்தான்."

தசரதர் இராமனைப்பார்த்து "நீயினி மணிமுடி தரித்து இம் மண்ணிலுள்ளாரை நின்னுயிர் போற் காத்தளித்தல் வேண்டு" மெனச் சொல்லி விடை கொடுத்தனுப்பி விட்டு, பிறகு வசிட்டரைத் தருவித்து, பட்டாபிஷேகத்திற்கு எல்லா மங்களமும் பொருந்திய ஓர்தினம் தேடிச் சுபமுகூர்த்தம் ஒன்றுவைத்துத் தரச் சொன்னார். அவருக்கு அகப்பட்ட நாளோ 'நானு மறியேன் அவளும் பொய் சொல்லாள்' என்பதற்கேற்ப வந்து முடிந்தது. அது இன்னதென்பது மேலே தெரியவரும். நாள் வைத்து முடிந்ததும் இராமருடைய மாளிகையை வசிஷ்டரடைந்து இராமருடைய பல்வகை யுபசாரங்களையு மேற்று அவரைநோக்கி, "குழந்தாய்! உனக்கு முடி சூட்டுவதற்குரிய நாள் நாளை" என்றார். பிறகு உறுதி பயத்தற்குரிய பற்பல நீதிகளையும் புகன்றார். முதலில் அந்தணர்தம் சிறப்பை விரித்துக் கூறினார்:—அறுதொழிற்குரிய அந்தணர், திரு



மால், முக்கண்ணன், அம்சவாகனன், என்னு மிவர்களினும் பெரியரெனவும் சொல்லலாம். அவர்களுக்கு யாதொரு குறைவும் வராமல் இனிது காத்துப் பூஜித்தல்வேண்டும். அவர்கள் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்று சொல்லப்பட்ட ஐம்பெரும் பூதத்தினும் பெரியவராகவும் எண்ணப்படுகின்றார்கள். அவர்களுடைய பெருமைக்கோ ரளவில்லை. அவர்களிடத்தில் அதற்குத் தகுந்தபடி நீ நடந்துகொள்ளல் வேண்டும்.

"கரிய மாலினுங் கண்ணுத லானினும்
உரிய தாமரை மேலுறை வானினும்
விரியும் பூதமொ ரைந்தினும் மெய்யினும்
பெரிய ரந்தணர் பேணுதி யுள்ளத்தால்."

அன்றியும், மனம் நொந்து தேகம் தளர்ந்தவர்களாய்த் தன் தேசத்திற்கு வந்தவர்களைக் காக்கவேண்டுமெனவும், முப்பத்திரண்டு அறங்களையும் கூடியவரையில் ஓம்பவேண்டுமெனவும், அமைச்சர் சொல்வழி யறிந்து நடத்தல் மிக்க உறுதி பயக்கத்தக்கதெனவும் சொன்னார்.

"உமைக்கு நாதற்கு மோங்குபுள் ளூர்திக்கும்
இமைப்பி னூட்டமொ ரெட்டுடை யானுக்கும்
சமைத்த தோள்வலி தாங்கின ராயினும்
அமைச்சர் சொல்வழி யாற்றுத லாற்றலே."

இன்சொல், ஈகை, நடுவுநிலை தவறாத செய்கைகள், பெருந்தன்மை, வெற்றி முதலாய நீதிகளைத் தனக்குப் பொருந்திய குணங்களாகக் கொண்ட அரசனுக்கு ஒருகாலத்தும் அழிவில்லை எனவும் எடுத்துரைத்தார்.

"இனிய சொல்லின னீகைய னெண்ணினன்
வினையன் றூயன் விழுமியன் வென்றியன்
நினையு நீதி நெறிகட வானெனில்
அனைய மன்னற் கழிவுமுண் டாங்கொலோ."

மாதர் மீது நிகழும் காதல் ஒருவனுக்கில்லை யாயின் கேடு என்ற பெயரும் நரக மென்னும் நாமமும் இவ்வுலகிலிரா வென்றார்.

"தூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வரும்
காம மில்லையெ னிற்கடுங் கேடெனும்
நாமமு மில்லை நரகமு மில்லையே."

JL
Rm211,N00JP
N00.1
161300

இதைப்போன்ற மற்ற நீதிகளும் எடுத்துரைத்துப் பிறகு தம தில்லத்திற்குச் சென்றார்.

தசரதர் இதற்குள் நகர் முழுதும் இராமர் பட்டாபிஷேகத்திற்கு மிகவும் விநோதமாய் அலங்கரிக்கப்படல் வேண்டுமென ஆஞ்ஞாபித்தார்.

"ஏவின வள்ளுவ ரிராம னாணையே
பூமகள் கொழுநனாய் புனையு மௌலியைக்
கோநக ரணிகெனக் கொட்டும் பேரியத்
தேவருங் களிகொளத் திரிந்து சாற்றினர்."

உடனே வீதிகள் தோறும் பந்தரிட்டு, கமுகு தெங்கு வாழை முதலிய மரங்களாலும் அவற்றின் குலைகள் கொண்டும் அந்நகரும் நகர்ப்புறமும் அதிக அழகுபெற அலங்கரிக்கப்பட்டன. பற் பல மாலைகள் தொங்க விடப்பட்டும் அவ்வவ்வீட்டு வாயிலில் பூரண கும்பங்கள் முதலியன நிறுத்தப்பட்டு மிருந்தன. வீதிகளெல்லாம் வெகு விநோதக் காட்சியுடையனவா யிருந்தன.

"பூமழை புனல்மழை புதுமென் சுண்ணத்தின்
தூமழை தரளத்தின் தோயில் வெண்மழை
தாமழை நெரிதலிற் றகர்ந்த பொன்மழை
மாமழை நிகர்த்தன மாட வீதியே."

இவ்வாறு நகர் முழுதும் அமராவதி போன்று விளங்கும்படி அலங்கரிக்கப் படுகிறதைப் பார்த்த மந்தரை யென்னும் மறு பெயருடைய கூனி மனம் பொறாது "இராமனுக்கு நடக்கப்போகிற பட்டாபிஷேகம் எப்படியாவது நின்று போம்படியான ஏற்பாடு நான் செய்கிறேன்" என்று சபதம் கூறிக்கொண்டு இராவணன் இழைத்த தீமையின் பலனே யென்னத் தோன்றினாள்.

"அந்நக ரணிவுறு மமலை வானவர்
பொன்னக ரியல்பெனப் பொலியு மெல்லையில்
இன்னல்செ யிராவண னிழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்."

இவளுடைய நெஞ்சமோ படபடவென்று துடிக்கிறது; கண்களோ நெருப்புப் பொறி பறக்கிறது. என் செய்வாள் இவள்! இராமருடைய குழந்தைப் பருவத்தில் அவரது உண்டை வில்லினின்றும் ஒரு குண்டு கூனியின் முதுகிற்படவே அவளுடைய கூனும் நிமிர்ந்தது. வலியுந் தந்தது. துன்பத்தை மாத்திரம் கவனித்தாளே யொழிய நன்மை புரிந்ததை நினைத்தாளில்லை. அதை யொரு காரணமாக வைத்துக் கொண்டு கோபமே ஓ ருருவெடுத்து வந்தாற் போல் அதிக வீராவேசத்துடன் தன் உதட்டைக் கடித்துக் கொண்டு கைகேயினது மாளிகைக்குட் சென்று அவளது படுக்கையறையுட் புகுந்து நித்திரை செய்து கொண்டிருப்பவளுடைய கால்களைத் தன் கைகளாற்றீண்டினாள். இராகு என்னும் கரும் பாம்பு தன்னை யந்தணுகும் வரையும் தன் குணமானது கெடாமல் குளிர்ந்த கிரணம் வீசும் வெண்டிங்கள் போன்றிருந்தவளைக் கூனி யென்னும் கொடும் பாம்பு தீண்டிற்று. தீண்டியும் இவள் குணம் உடனே மாறவில்லை. தூக்கத்தினின்றும் விழித்தெழுந்தவளை நோக்கி "வெள்ளம் வீட்டினருகில் வந்தும் நீ என்ன இப்படித் தூங்கிக் கொண்டிருக்கிறாயே!" என்றாள் கூனி. உடனே திடுக்கிட்டு எழுந்து கூனியைப்பார்த்து, "என்னவிசேஷம், என் மக்களனைவரும் அவரவர் நடக்க வேண்டிய தரும மார்க்கத்தினின்றும் தவறவில்லையே! இராமனைப் பெற்ற எனக்கு எப்படிக் கெடுதி சம்பவிக்கும்" என்று இராமனிடத்து அன்னையினும் அதிக அன்புள்ள கைகேயி சொன்னதும் "உன் சக்களத்தி பிள்ளைக்கு நாளை முடிசூட்டப் போகிறார்களாம்" என்று இவள் சொல்லி முடிக்கிறதற்கு முன் தன் கழுத்திலிருந்த ஒரு முத்துமாலையை இந்த மங்கலமொழி கொணர்ந்த கூனிக்குப் பரிசாக அவள் கழுத்திற் போட்டாள். அவள் அதைக் கையிற் கொண்டு அதிகக் கோபத்துடன் பூமியிலறைந்து சிதறும்படி செய்தாள்.

"தெழித்தன ளுரப்பினள் சிறுகண் டீயுக
விழித்தனள் வைதனள் வெய்து யிர்த்தனள்
அழித்தன ளழுதன ளம்பொன் மாலையால்
குழித்தனள் நிலத்தையக் கொடிய கூனியே."

இம்மாதிரியான தீச்செயலுக்குக் காரணம் யாதெனக் கைகேயிக்கு இன்னும் புலப்படவில்லை.

கூனி அவளை வெகுண்டு நோக்கி, "பரதன் பாரினிற் பிறந்தும் பிறந்ததிற் சேர்க்கையில்லை. அவனுடைய கல்வி, இளமை, அழகு, வீரம், எண்ணிலா நற்குணங்களெல்லாம் தரையிற் கவிழ்த்து விட்ட அமுதம் போலும் ஆயின. அரசகுலத்திற் பிறந்து

அரசரில்லத்து வளர்ந்து அரசரில்லிற் புகுந்து அரச மங்கையர்க்கரசியாய் விளங்கும் நீ இராமன் நாட்டையாளவும் பரதன் அவனுக்குப் பணிவிடை செய்யவும் பார்த்துக் கொண்டிருக்கலாமோ? பரதனுக்கல்லவோ பட்டம்வரும்படியாய்ப் பார்க்கவேண்டும்" என்று சொல்லிய வளவில், அச்கொடிய வார்த்தைகளைக் கேட்ட கைகேயி அவளைக்கோபக்குறியுடன் உற்று நோக்கி, "என்ன சொன்னாய் தீயோய்! இன்னொரு தரம் சொல்! நான் பிறந்த குலத்திற்கும் புகுந்த குலத்திற்கும் அவதூறு வரும்படியான சொற்களையா சொல்கிறாய். இப்படிச் சொல்வதனால் உன்னிடத்தில் அதிக பிரியம் வகிப்பேனென்று எண்ணினாயோ?

> "எனக்கு நல்லையு மல்லைநீ யென்மகன் பரதன்
> தனக்கு நல்லையு மல்லையத் தருமமே நோக்கில்
> உனக்கு நல்லையு மல்லைவந் தூழ்வினை தூண்ட
> மனக்கு நல்லல சொல்லினை மதியிலா மனத்தோய்."

"இம்மையிலும் அம்மையிலும் ஒருவர் விரும்புவது கீர்த்தியன்றோ? நியாயமென்பது நிலையற்றுப்போனாலும் போகலாம், ஒருவர் செய்யுந்தவம் பிழைத்துப்போனாலும் போகலாம். சந்திர சூரியர் தமது தொழிலியற்றாது போய்விட்டாலும் போய்விடலாம். மற்று எவை தான் தலை கீழாய்ப் புரண்டு போய்விட்டாலும் வரன் முறை தவறுதல் மன்னர் குலத்திற் கடுக்குமோ? நன்று சொன்னாய்.

> "பிறந்தி றந்துபோய்ப் பெறுவது மிழப்பதும் புகழ்தல்
> திறந்தி றம்பினும் நியாயமே திறம்பினு நெறியின்
> திறந்தி றம்பினும் செய்தவந் திறம்பினுஞ் செயிர்தீர்
> மறந்தி றம்பினும் வரன்முறை திறம்புதல் வழக்கோ."

"அடி துஷ்டே! என்னெதிரில் நில்லாதே. உன் சொல்லிற்கு உன்னுவைச் சேதியாது விட்டதே நீ செய்த புண்ணியமென்று நினைத்துக் கொள்."

> "போதி யென்னெதிர் நின்றுநின் புன்பொறி நாவைச்
> சேதி யாதிது பொறுத்தனென் புறஞ்சில றதியின்
> நீதி யல்லவு நெறிமுறை யல்லவு நினைந்தாய்
> ஆதி யாதலி னறிவிலி யடங்குதி யென்றாள்."

கைகேயி எவ்வளவு வைதும் அவற்றிற் கஞ்சாது ஒதுங்கி நின்று சற்றுக் கோபமாறினவுடன் அவள் தாளில் வீழ்ந்து அவளை நோக்கி "இராமனுக்குப் பட்டங்கட்டுவதினால் எனக்கொரு



குறைவு மில்லை. அப்போது உனக்குத் தான் வரும் கேடெல்லாம். கௌசலை செய்த பாக்கியமே பாக்கியம். ஐயம் புகுவோர் ஈவோர் கையை ஏக்கங்கொண்டு எதிர்பார்ப்பது போல் நீயும் அவள் கையைத் தான் எதிர்பார்க்க வேண்டிவரும். இராஜ்யாதிகாரம் கௌசலையி னுடையதானால் எங்களுக்குப் பிழைப்பேது? உன்னை மதிப்பவர் யார்? இப்போது எல்லோரும் உன்னைச்சிரமேற்றாங்கிக் கொண்டிருக்கிறார்கள். பொருள் அவள் கைக்கெட்டி விடின் உன் மீது அன்புபாராட்டும் மற்றெல்லாருடைய நல்லெண்ணமும் மாறிப்போய் விடும். நீ மயக்கமுற்று மதியையிழக்க வேண்டாம். காரியம் முடிந்தபின் சிந்திப்பதினால் யாது பயன்? பிறகு நீ உன் உயர்ந்த பதவியினின்றும் இழிந்தால் உன்னூற்றார் பெற்றாரும் உன்னை யிகழ்வார். இவ்விடம் சிறிதேனுஞ் அனுகார். உனக்கு வரப்போகிற கதி மிகவும் பரிதபிக்கத்தக்கதே. இவற்றையறிந்து தடுக்கும் வண்ணம் சிநேக விஷயத்திற்காக நான் உனக்கு முன்னதாய்ச் சொன்னேன். என் மீது ஆயாசம் வேண்டாம். இனி உன் யுக்தப்படி செய்யலாம்." என்றாள் கூற்றுவனெனத் தோன்றிய கொடிய கூனி. கைகேயி குணசாலியா யிருந்தபோதிலும் சக்களத்தியின் உயர்வும் தன் தாழ்வும் கேட்கையில், தேவர்கள் பிரயத்தனத்தினாலும், அவர்கள் பெற்ற வரம் பொய்த்துப்போகக் கூடாதானபடியாலும், அருமறை யறையும் அந்தணர் செய்த அருந்தவத்தாலும், அவளுடைய மனமும் நன்மார்க்கத்தினின்றும் திரும்பியது. அல்லாவிடில் இவ்வளவு சீக்கிரத்தில் இவள் மனந்திரும்புவ தசாத்தியம்.

> "தீய மந்தரை யிவ்வுரை செப்பலுந் தேவி
> தூய சிந்தையுந் திரிந்தது சூழ்ச்சியி னிமையோர்
> மாயை யும்மவர் பெற்றநல் வரமுண்மை யாலும்
> ஆய வந்தண ரியற்றிய வருந்தவத் தாலும்."

> "அரக்கர் பாவமு மல்லவ ரியற்றிய வரமும்
> துரக்க நல்லரு டுறந்தன டூய்மொழி மடமான்
> இரக்க மின்மையன் றோவின்றிவ் வுலகங்க ளிராமன்
> பரக்கு நீ தொல்புக ழமுதினைப் பருகுகின் றதுவே."

சிந்தை இவ்வழித் திரும்பினவுடன் கைகேயி "பரதன் பாரினை ஆளுதற்குரிய சூழ்ச்சி எதுவேனும் எடுத்துச் சொல்லாய்" என்று கூனியைக் கேட்க அவள், "தசரத மகாராஜா சம்பர

னைக் கொன்று வெற்றி பெற்ற காலத்திலுனக்களித்த இரண்டு வரங்க ளிருக்கின்றன வல்லவா? அவைகளை இப்போது வாங்கிக் கொள். ஒன்றினால் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்து மற்றொன்றால் இராமனைப் பதினான்கு வருஷகாலம் வனவாசியா யிருக்கும்படி செய்'' என்றனள்.

"நாடி யொன்றுனக் குரைசெய்வெ னளிர்மணி நகையாய்
தோடி வர்ந்ததார்ச் சம்பரன் தொலைவுற்ற வேலை
ஆடல் வென்றியா னருளிய வரமவை யிரண்டும்
கோடி யென்றனள் உள்ளமுங் கோடிய கொடியாள்."

"இருவ ரத்தினி லொன்றினா லரசுகொண் டிராமன்
பெருவ னத்திடை யேழிரு பருவங்கள் பெயர்ந்து
திரிதரச் செய்தி யொன்றினாற் செழுநில மெல்லாம்
ஒருவ னிப்படு முன்மகற் குபாயமி தென்றாள்."

இவள் சொல்லிய உபாயத்தைக் கேட்டு உவப்படைந்து கைகேயி மந்தரைக்கு வேண்டியன வெல்லாம் விருப்புடன் தந்து அவளுக்கு விடை கொடுத்தனுப்பினாள்.

அவள் போனதும் தான் நினைத்ததை முடிக்கவெண்ணித் தானிதுவரையிற் படுத்திருந்த அம்ஸதூளிகா மஞ்சத்தினின்று மிழிந்து தன் கூந்தலில் வைத்திருந்த மலர்களை எடுத்துத் தரையில் சிதறவீசி கையிலுள்ள வளையல், காலிலுள்ள சதங்கை, இன்னு மற்று முள்ள சகல ஆபரணங்களையுங் கழற்றி எறிந்துவிட்டாள். சந்திரனிடத்துக் களங்கத்தைத் துடைப்பது போல் தன் நெற்றியி லிருந்த திலகத்தை யழித்து விட்டனள். இவ்விதமாய்த் தலையையும் மற்றை அவயவங்களையும் அலங்கோலமாக்கிக் கொண்டு பூவுதிர்ந்த கொம்பைப் போன்று புவிமீது புரண்டுருண்டு அழ ஆரம்பித்துவிட்டாள். ஜானகியாகிற ஸ்ரீதேவியானவள் இன்னுங் கொஞ்சக்காலத்திற்குள் இந்த அயோத்தி நகரை விட்டேகப்போகிறாள். அவள் இருந்த இடம் தனக்குரியது என்னும் முறைமை கொண்டு வரும் அலக்ஷ்மி தன் தமக்கை எழுந்தருளியது போன்றிருந்தது இந்தக் கைகேயி கொண்ட கோலம். இவள் தன் புருஷன் தயரதன் தன் மாளிகைக்கு வரும் வரவை மிக்க ஏக்கத்துடன் எதிர்பார்த்தவண்ணமா யிருந்தாள்.

(இன்னும்வரும்.)

கல்தளம், துப்புசாமி முதலியார்.

## சோபாமணி.

(90—ம் பக்கத் தொடர்ச்சி.)

சிலர் தம்மை வீட்டினுள் விட்டிடுமாறு 'லானிஸ்கா' வின் வாயில்காப்போருடன் வீரங்காட்டி வாதுசெய்தனர். அப்பேரிரைச்சலைக்கேட்ட லானிஸ்கா அஃதென்னை யென்றறியும் வண்ணம் வெளியேவந்திடலும் தடதடவென்று அக்கூடமுழுதும் போர்வீரர் நிறைந்து விட்டனர். அவர் தம்முள் ஒருவன் 'லானிஸ்கா'வை முகநோக்கி, "லானிஸ்கா என்பான் நீயேயோ?" என்று சீறிக்கேட்டனன்.

லானிஸ்கா.—(சிறிதுங் கலங்காத தைரியத்தோடு) "யானே கண்டாய். என்னை எதன்பொருட்டு வினவுகின்றாய்? இவ் வகாலத்தில் எம்மில்லத்தினுட்புக்கு ஏனிந்தப் பேராரவாரஞ் செய்கின்றீர்?"

போர்வீரன்.—"யாம் வேந்தனது ஆணையை மேற்கொண்டு ஈண்டிவ்விடம் போந்தோம். ஸோபையா மான்ஸ்பீல்ட் என்னும் பெயரிய ஒரு சிறுமி இங்கிருக்கின்றனளல்லளோ?"

லானிஸ்கா.—"ஆம்; இருக்கின்றனள். அவளைச்சுட்டி ஏன் வினவுகின்றனை?"

போர்வீரன்.—"அன்னாள் இக்கணமே எம்முடன் வரற்பாலள். நீ எமக்குச்சிறை."

அவனை யாது கேட்பினும் அவன் "எமக்கு வேறொன்றும் தெரியாது; அரசன் அப்பெண்ணினை மீஸ்பனுக்குக் கொண்டுபோகவும், நின்னை ஸ்டாண்டா என்னும் அரசர் சிறைச்சாலையிலடைக்கவும் கட்டளையிட்டுள்ளார். இதுவே யாம் அறிந்தது" என்று ஓரேவிடை பகர்ந்தான்.

லானிஸ்கா.—(மிகச்சினந்து) "எனது குற்றம் இன்னதென்று யான் அறிவதன்முன் எங்ஙனம் சிறையாவது?" என்றுரைத்து, தன் தாய் வருதல் கண்டு சீற்றத்தைமாற்றி; அவள் கூறியதன்மேல் "இதுவும் விதியேயோ?" என்று வாய்திறவாது அப்போர்வீரன் கைவயப்பட்டான். அப்பொழுது அவன்தாய் அவனை நோக்கி,

"குழந்தாய்! நீ குற்றமற்றவனுகுவை யென்றும், அரசன் உன்னைத் தண்டனைக்குத் தப்பச்செய்வா னென்றும், நம்பியிருக்கின்றேன்" என்று சொல்லிவிட்டு, தன் கண்ணினின்று நீரைச்சிந்தாமல் வேந்தன் மாளிகைக்கண் சென்று, தன் மகனது தண்டனைக்குக் காரணமின்னதென்று அரசனிடம் நேரிற் கேட்டறியும் பொருட்டு வெளியே சென்றிருந்த வேந்தன் மீண்டுவருமளவும் காத்திருந்தனள். கோமகன் குதிரைவிட் டிறங்கினவுடன் லானிஸ்காவின் தாய்க்கு முதலிற் காட்சியளித்தான். அப்பொழுது அவன் அவளைநோக்கி, "நும்புதல்வன் என்பாற் காட்டிய பேதைமையிலும் நன்றிகொன்ற இழிதகைமையிலும் நீர் தலையிட்டுக்கொண்டு சங்கடமுறு தொழிவீரென்று நம்புகின்றேன்" என்றுரைத்தலும்; அவள் என் மகன் நன்றிகொன்றவ னென்றெண்ணுதல் தகாது. "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்னும் அரியநீதியை அறிந்தொழுகும் இயல்புடையனே. ஆயினும், இளைஞனாதலின் ஒரு காற் குணந்தவறிக்குற்றம்பட ஏதேனுஞ் செய்திருத்தல் கூடுமென்பது திண்ணம்" என்று கெம்பீரமாகச் சொல்லினள். அதுகேட்ட அரசன் "நன்று. இன்றுமாலை ஸான்ஸ—ஸௌஸியின்கணுள்ள வன்னச்சாலையில் என்னைச் சந்திப்பின் நும்புத்திரனது குற்ற மின்னதென்று அறிவிப்பேன்" என்றறைந்தனன்.

அவ்வாறே அவள், குறித்தபொழுதில் ஸான்ஸ—ஸௌஸியின் வன்னச்சாலையிற்போய் இறைமகன் வரவை யெதிர்பார்த்திருந்தனள். பிறகு சிறிதுநேரத்திற்குள் சடிதியில் அரசன் வந்தமையறிந்து அசைவற்று மௌனத்தோடு நின்றாள். அரசன் அவளது முகத்தை உற்றுநோக்கி, "அம்மா! நும்புத்திரன் செய்தகுற்றம் இன்னதென நீர் அறிந்திலீர்போலும்" என்றிங்ஙனஞ் சொல்லிக்கொண்டே இறைமகன் சோபையாமான்ஸ்பீல்ட் என்னுஞ் சிறுமி இயற்றியமட்கலத்தைக் கையிலெடுத்தான். அதனை லானிஸ்காவின் தாய் பார்த்தவளல்லள்.

பின்னர், பிரிடரிக் வேந்தன் அவளைநோக்கி, "இம்மட்கலத்தை நீர் இதற்குமுன் பார்த்திருக்கலாமே. இதன் அடிப்புறத்து வரைந்திருப்பதையும் பார்த்திருக்கக்கூடுமே' என வினவ, அவள்



"ஆம், பார்த்ததுண்டு. அவ்வெழுத்துக்கள் என்மகன் எழுதியவை" என்றனள்.

அரசன்.—இவை நும்புதல்வன்கையினால் பொறிக்கப்பட்டவைதாமே?

லானிஸ்காவின்தாய்.—ஆம், அந்த ஸாக்ஸனிப்பெண் அழகுபெற வன்னங்களெழுத அறிவாளேனும் எழுத்துக்கள் எழுதவறியாள். ஆதலின் அவளது வேண்டுகோட்கிணங்கி என் சிறுவனெழுதினான்.

அரசன்.—இதனை உற்றுநோக்குக. இம்மொழிகள் புகழ்வனபோற் றோன்றி இகழ்வைக்குறித்து நிற்கின்றன.

லானிஸ்காவின்தாய்.—என் சிறுவன்செய்த பிழை யாதாயினுமாகுக. அவன் எவரையும் பொய்ப்புகழ்ச்சி செய்பவனல்லன். அவன் அத்துணை இழிகுணமுடையனென மகாராஜா திருவுளம் பற்றத்தகாது. ஏனெனில், சின்னாள் முன்னர்த்தான் அவன் தமது திருவுளங்கன்று மாறு உய்த்துணராது வஞ்சனையின்றி ஏதோ தகாமொழிகூறினனென்று அவனது குற்றத்தை யெடுத்துக்காட்டி அதனைப் பொறுத்தருளினீர்கள். அவன் கவிபாடிப்பிழைப்பவனல்லன். துதிநிந்தையான இரண்டோருவரி வரையப்பட்டிருத்தலால் தமது சித்தங்கலங்கி அவனைச் சிறைப்படுத்தினீர்களென்று யான் நினைத்திலேன்.

அரசன்.—நீர் தாயாயினமையின் தநயனுக்குப் பரிந்துரைத்தல் தக்கதே. துதிநிந்தையாக இரண்டோருவரி யெழுதியனிமித்தம் நும்மகனைச் சிறைப்படுத்தினே னல்லன். புகழ்ச்சியும் இகழ்ச்சியும் பார்த்தாலே புலப்படுமே. இவ்வரிகளில் பழிமொழி மிகுந்திருத்தலால் பொறுத்தல் அரிதாயிற்று. சிறிது பொறுமையோடு இங்ஙனே எழுதியிருக்கும் இரண்டுவரிகளைப் படித்துவிட்டுப் பின்னர் நும்புத்திரன் பக்கற் பரிவினாற் கூறத்தகுவனவற்றைக் கூறுவீராயின் கேட்பேன். இதனைப்படிக்குமுன் ஒரு வார்த்தை. யான் இவ்வழகிய மட்கலத்தைப் பாரிஸ் நகரத்திலே ஒரு சீமானுக்கு அனுப்பவிருந்தேன். அவனை நீரும் அறிந்திருத்தல்கூடும். இதனைக் கட்டியனுப்பும்படி ஒருவனுக்குக் கட்டளையிட்டேன். அவன் இக்கலத்தை நன்குறத் துடைத்துக் கொண்டிருக்கையில்

அடிப்புறத்து யாதோ பொறிக்கப்பட்டிருந்தமை யறிந்து அதனைப் படித்துப்பார்த்துவிட்டு என்பால் விரைந்தோடிவந்து அதனைக் காட்டினான். யான் அந்தப் புகழ்மொழியைப் படித்துப் பெருங் களிகொண்டது மன்றி, "இதனை இயற்றிய கவிஞனுக்கு யாது பரி சளிக்கலாம்" என்று என் பேதைமையால் எண்ணமிட்டுக்கொண் டிருக்கையில், அம்மனிதன் இக்கலத்தின் ஒருபுறத்தைத் தேய்க்க அதன்மீது பூசியிருந்த நீலவர்ணம் திடீரென்று கலைந்துபோக அத னைக்கண்டு வியந்து என்னோடு சில வார்த்தைகள்பேசி என தெண் ணத்தைக் குலைத்துவிட்டான். யான் இந்தக்கலத்தை அவன் கையி னின்று வாங்கிப்பார்த்தேன். பார்த்தலும், பார்த்தவிடத்தின் மாத் திரம் நீலவர்ணம் பூசியிருந்தது. அதன்கண் 'பிரடரிச் வேந்தன் மகிமைக்குறி' என்றெழுதப்பட்டிருந்தது. அதனையடுத்துள்ள பதம் அப்பொழுது வன்னத்தின் மறைந்திருந்தது. அப்பதம் இப் பொழுது, பாரும் அம்மா, நன்று விளங்குகின்றது" என்று 'கொடி யன்' என்ற பதத்தை அரசன் அவளுக்கு எடுத்துக்காட்டி "பார் த்தீரோ! 'கொடியனாய பிரடரிக்வேந்தன் மகிமைக்குறி' என வரை யப்பட்டுளது. யான் கொடுங்கோன் மன்னனாயின் ஆகுக. தந யன் குற்றத்திற்குத் தாயைத்தண்டியேன். நும்முடைய ஏனைய நண்பரோடு செவ்வாய்க்கிழமை மாலையில் நும்மில்லத்தின்கண் என்னைக்காண்பீர்" என்று பகர்ந்தனன்.

இதுகேட்டு, 'லானிஸ்கா'வின் தாய் மாறேதுங்கூறாது அர சன்பானின்று அப்பால் அகன்றனள். தன் மகனது கையொப்பத் தோடு அம்மொழிகள் அவனாலே யெழுதப்பட்டிருக்கு மாயின் அவன் அரசதண்டத்திற்குத் தப்ப வகையில்லையென்று அவள் எண்ணினாள். இவ்விஷயத்தில் அவளுக்குத் தீரா ஐயம் செனித் தது. ஆகவே, அதனைக்குறித்து நினைக்கலாற்றாது முதலில் அவள் சிந்தைகலங்கித் திகைத்தனள். தன்புதல்வன் அத்தகைய தீயொ ழுக்கத்தினுட்படான் என்ற துணிவு அவளுக்குண்டு. உண்டெனி னும், முன்னம் அவன் பேதைமையால் பேசிய மொழிகளும் செ யல்களும் இடையிடையே அவளது எண்ணத்தில் வந்துதோன்றி அவளைக்கவற்றின. கலத்தின் மீதெழுத்துக்கள் காண்போர்க்கு லானிஸ்காவின் கையெழுத்துப் போலவே தோன்றின. அன்றி



யும், சீனாமட்கலத் தொழிற்சாலையின் கண் நிகழ்ந்த சம்பாஷணை யும், அக்கலத்திற் பொறிக்கப்பட்டவை அவனுடைய மொழிக ளென்பதை அறிதியிட்டது. லானிஸ்காவின்தாய் தனதில்லிற்கு மீண்டுசென்றகாலையில், அரசனைக் கண்டு பேசி லானிஸ்காவினது செய்தியின் முடிவையறியும்வண்ணம் ஆதரத்தோடு காத்திருந்த ஆல்பர்ட் என்பான்பால் மேற்போந்த விஷயங்களனைத்தையும் அ மைதியோடு எடுத்து விடுத்துரைத்தாள். அதுகேட்ட ஆல்பர்ட் அகந்திகைத்தனன். தன் நண்பன் குற்றமற்றவனென்று ரூபிக்கத் தனக்கு உபாயம் யாதும் புலப்படாவிடினும் குற்றஞ்செய்திருப் பானென்னுமளவில் லானிஸ்கா நம்பினானிலன். அதனால், அவன் வீண்யோசனையிலும் ஆழ்துயரத்திலும் காலம்போக்காமல் மட்க லத்தைக் கட்டியனுப்பும் மனிதன்பால் அக்கணமே ஓடினான். ஓடி, அவனை மிகுதந்திரமாகப் பல கேள்விகள்கேட்டு உண்மையு ணர்ந்து; ஸோபையா மான்ஸ்பீல்டுக்காக 'லானிஸ்கா' இரண்டு வரி யெழுதியபோது அவனுடன் வேறெவரேனும் இருந்தனர் கொலோவென்று அறியுமாறு பெர்லின் நகரத்துச் சீனாமட்கலத் தொழிற்சாலைக்குச் சென்றனன். இங்ஙனம் பல்விடங்களிலும் உழன்று சங்கதிகளை உள்ளவாறே யுணர்ந்து லானிஸ்கா குற்றவா ளியல்ல னென்பதைத் தன்னுள் துணிவுகொண்டனன்.

அரசவள்ளல் லானிஸ்காவின் தாய் வீட்டிற்கு வருவதாகக் குறித்தல் செவ்வாய்க்கிழமையன்றோ. ஏந்தல் அவ்வயினெய்து தன் முன் அப்பெருமாட்டியும் ஏனையோரும் குழீஇயிருந்து லா னிஸ்காவின் ஊழினை நினைந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது, "குற்றவாளிக்கு அவன் செய்த குற்றத்தை யெடுத் துக் காட்டாது தண்டியாத அரசாட்சியில் வாழும் உயிர்களின் அ திர்ஷ்டமே அதிர்ஷ்டம். விசாரணையின்றி ஒருவன் மேற் குற்றம் சுமர்த்தாததும், குற்றஞ் செய்தவனுக்கு அவனது குற்றத்தை யெ டுத்துக் காட்டியன்றித் தண்டனை விதியாததும், குற்ற விசாரணை செய்யு மளவில் யாவருமறியப் பகிரங்கமாக விசாரிப்பதும், அங் ஙனம் விசாரிக்குமிடத்தும் குற்றவாளியின் தேயத்தார் முன்னும் பிரபுக்கள் முன்னும் அவனோடொத்த நிலையினர் முன்னும் நீதி விசாரணை நிகழ்த்தப் படல் வேண்டுமென்னும் ஒழுங்கினையுடை

யதுமான அரசுமுறையில் வாழும் மன்பதையின் சுகமே சுகம்" என்றிவ்விதமாக ஆங்கில யாத்திரிகன் தமது நியாயவிசாரணை முறையினையே மேலாக வெடுத்துச் சிறப்பித்துப் பேசும் அமையத்து, எப்போழ்தும் வருகிற வழக்கம்போல் ஏந்தல் அவ்விடத்தெய்தினன். ஆண்டுக் குழுமியிருந்தோ ரனைவரும் ஆங்கிலன் வாயை ஆணியிட்டு ஆர்வமுடன் பார்த்துக்கொண்டிருந்தனரே யன்றி அரையன் ஆங்கடைந்து தம்முள் அவனும் ஒரு கேட்போனாகியிருந்தமையை அறிந்தாரிலர். ஆங்கிலன் தனதுரையினை முடிக்குந்தருணத்து லானிஸ்காவின் தாய் "என் புதல்வனும் அத்தகைச் சீரிய விசாரணைக்குட்படும் பாக்கியத்தை யடையுமாறு ஆண்டவனருள்புரிக" என மிக்கதோ ராதரத்தோடுரைத்தலும் "அங்ஙனமே அகிலாக்ஷகன் அருள்புரியின் யானும் என் ஆருயிர் நண்பனுக்குப் பரிந்து நியாயவாதஞ்செய்யும் பேறடைவேன்" என ஆல்பர்ட் கழறினன். இவ்வாறிவர்கள் உரையாடா நிற்புழி "அதன்கண் ஒரு சங்கதி' என அரசன் அறைந்தனன். அதனைக்கேட்டலும் அனைவரும் திடுக்கிட்டனர்.

(இன்னும்வரும்.)

கா. ஸ்ரீ. கோபாலாசாரியர்.

---

## ஆசாரியர்கள் சரித்திரம்.

(88–ஆம் பக்கத் தொடர்ச்சி.)

### நம்மாழ்வார்.

இவ்வாறு தீர்த்தம் முதலியபெற்ற காரியார், திருநகரியிற் சென்று வாழ்ந்துகொண்டிருக்கையில் 'உடையநங்கையார்' என்பார் கர்ப்பங்கொள்ள அவருடைய திருவயிற்றில் திருமாலினது அமசமும் ஸ்ரீ கௌஸ்துபத்தின் அம்சமும் சேனைமுதலியாரின் அம்சமுமாக ஒருகுமாரர் அவதரித்தார்.

இப்படிப்பகவான் அவதாரஞ்செய்வதன்முன்னே, அவருக்கு எப்பொழுதும் கைங்கரியம் பண்ணிக்கொண்டு அவரைவிட்டுப்பிரிதலில்லாத 'திருவனந்தாழ்வான்' என்னும் ஆதிசேஷன் இவர்மேல் வெயில் முதலியன படாதிருக்கும்படி பெரியதொரு புளியமரமாக அவதாரஞ் செய்திருந்தனர். திருக்குறுங்குடிநம்பி தந்தருளிய வரத்தின்படி பிறந்தகுமாரர், பிறந்தகாலம்முதல் அழாமலும் பாலுண்ணாமலும், உலகத்தில் குழந்தைகள் செய்யும் காரியமொன்றுமில்லாமலுமிருக்கையில் சரீரம் சிறிதும்வாடாமல் செழுமையுடையவராயிருந்தார். இதுகண்ட அவர்தாய்தந்தையர், "அவனன்றியோரணுவுமசையாது" என்று, எல்லாப்பாரத்தையும் பகவான்மீது வைத்துவிட்டுத் தாம் மனக்கவலை சிறிதுங்கொள்ளாமல் பிறந்த பன்னிரண்டாநாள் அக்குழந்தையை அந்தத் திருநகரியில் உள்ள கோயிற்கண் கொண்டுசென்று அங்கு வீற்றிருக்கும் 'பொலிந்துநின்றபிரான்' என்ற திருமாலைத் தரிசனஞ்செய்வித்து அவ்விடத்திலேயே அக்குழந்தைக்கு 'மாறன்' என்று நாமகரணஞ் செய்தார்கள்.



இப்பெயருக்கு, உலகவழக்கத்திற்கு மாறான செய்கையுடையவன் என்பது பொருள். இனி, 'சடம்' என்ற வாயு இவரைப் பிறந்தகாலத்தில் பற்றவர, இவர் அதனை அப்பொழுது தன்னைச் சாராதபடி போக்கியகாரணத்தால் வழங்கும் 'சடகோபர்' * என்ற பெயர்போல, அவ்வாயுவை மறுத்தமையால் [தடுத்தமையால்] 'மாறன்' என்ற பெயர்பெற்றார் எனவும் சிலர் கூறுவர்.

பிறகு அவரை, அங்குச் சமீபத்திலிருந்த அப்புளியமரத்தடியில் ஒரு தொட்டிலில்விட்டு வளர்த்துவந்தார்கள்.

இவர், மற்ற ஆழ்வார்கள் போலன்றி மிக்க உயர்வுபெற்றிருந்தா ராதலால் 'நம்மாழ்வார்' என்றும் கொண்டாடப் பெற்றார். இவர் பதினாறுவயதளவும் கண்விழிக்காமல் மவுனமாயே இருக்க, இவருடைய தாய் தந்தையர் 'இவர், தமக்கு ஒப்பானவர் இவ்வுலகத்தில் எவரையும் காணப் பெறுமையால் இங்ஙனம் எவரோடும் பேசாமலிருக்கின்றார்' என்றெண்ணாமல், 'நாம் எம்பெருமான் விஷயத்தில் ஏதேனும் அபசாரஞ்செய்தோமோ' என்று சற்று மனம் வாடியிருந்தார்.

அக்காலத்தில், பரமபதநாதனுடைய கட்டளைப்படி சேனைமுதலியார் தனியே ஏகாந்தத்தில் எழுந்தருளி இவர்க்குச் சமாச்ரயணம் செய்து, எல்லா மந்திரங்களையும், மந்திரார்த்தங்களையு மோதியருளினார்.

இப்படியிவர், பதினாறு கலைகளாலும் நிறைந்த சந்திரன்போலப் பதினாறு வயது நிரம்பி அப்புளியமரத்தடியில் † பதுமாசனத்துடன் வீற்றிருந்து பரமாத்துமாவான கடவுளை தியானித்துக்கொண்டு ‡ ஞானமுத்திரையோ

---

* குழந்தைகள் தாயினுடைய கர்ப்பத்தில் இருக்கையில் ஞானமுடையனவா யிருக்கின்றன; பூமியிற் பிறந்தவுடன் சடவாயு அஞ்ஞானத்திற்கு ஆளாக்கும். [இது பற்றியே, பிறந்தகுழந்தை-க்வா? க்வா? என்றழுகின்றது; இதன் பொருள்:—(கடவுள்) எங்கே? (கடவுள்) எங்கே? என்பது என்ப.]

† பதுமாசனமாவது.—சப்பளங்கூட்டிக்கொண்டு என்று வழங்கும் சப்பணமிட்டுக்கொண்டு உட்கார்தல். ‡ ஞானமுத்திரையாவது—பெருவிரலையும் சுட்டுவிரலையும் ஒன்றுசேர்த்து, மற்றை விரல்களை மடக்காதிருப்பது. இதற்குச் சின்முத்திரையென்னும் வேறு பெயருமுண்டு.

டிருக்கையில் திவ்யதேசயாத்திரை செய்தற்பொருட்டுச் சென்றிருந்த ஸ்ரீ மதுரகவியாழ்வார் இவருடைய பேரொளியைக்கண்டும், இவருடைய மேன்மைகளைக் கேட்டும் அயோத்திமாநகரத்தினின்றும் புறப்பட்டுவந்து சமீபத்தில்நின்று இவர்க்கு 'ஞானம் உண்டோ? இல்லையோ?' என்று ஆராய்ந்தறிதற் பொருட்டு இவரது எதிரில் நின்று ஒருகல்லையெடுத்து வீச, அது விழுந்த அதிர்ச்சியைக்கேட்டவுடன் திருக்கண்களைத்திறந்தார். பின்பு, மதுரகவிகள் 'இவர், பேசவல்லவரோ? இலரோ?' என்று அறிதற்பொருட்டு, ‡ "செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால்——எத்தைத் தின்று எங்கே கிடக்கும்"? என கேட்க, ஆழ்வார் § "அத்தைத்தின்று அங்கேகிடக்கும்" என்று மறுமொழிகூறி யருளினார். அதுகேட்ட மதுரகவியார் பேரானந்தங்கொண்டு அச்சடகோபரைக் கொண்டாடி அவரைச்சாஷ்டாங்கமாய் நமஸ்காரஞ்செய்து அவரிடம் அதிக பக்திகொண்டு அவருக்குச்சிஷ்யராகக் கருதி 'அடியேனுக்கு ஞானநூல்களை யோதியருளவேண்டும்' என்று பிரார்த்தித்தார்.

இப்படி இருக்கையில், ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் திருமால் ஆழ்வாருக்குப் பிரத்தியக்ஷமாய்ச் சேவைதந்தருளத் திருவுள்ளங்கொண்டு, ஒரு கருமையான முகிலானது தாமரைக்காடுபூத்தத் திருவோடு விளங்க ஒரு செம்பொன் மலைமேல் ஏறிவருவதுபோலக் கருடன்மேல் ஏறிக்கொண்டு அவ்வாழ்வாருக்கு எதிரில்வந்து தோன்றினார். அப்படித்தோன்றின அளவில் அந்த நீலமேகவண்ணனது கண்ணழகிலும், வாயழகிலும், குழலழகிலும், பூவழகிலும் ஈடுபட்டு ஆனந்தக்கண்ணீர்சொரிய, உடம்பு புளகிக்கப் பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கினார்.

பின்பு, மற்றைத்திவ்ய தேச எம்பெருமான்கள் யாவரும்வந்து சேவை தந்தருள அவர்களையும் தருசனஞ்செய்து அவர்பக்கல் உண்டானபக்தியின் மிகுதியைப் பிரமாநந்தரூபமாய்வெளியிடத் திருவுள்ளங்கொண்டு, ருக்குவேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம் என நான்குவேதங்களின் சார

‡ செத்தது—ஜடம்; சிறியது—அணுரூபமான ஆத்மா; எனவே, 'செத்ததின்வயிற்றில் சிறியது பிறந்தால்' என்றது—ஜடமான சரீரத்தோடு சித்தான ஆத்மாவுக்குச் சம்பந்தம் உண்டானால் என்றபடி. 'எத்தைத்தின்று எங்கேகிடக்கும்' என்றது—அவ்வாத்மா எதனையுண்டு எங்கேயிருக்கும் என்றதென்க.

§ 'அத்தைத்தின்று அங்கே கிடக்கும்' என்றது—அச்சரீரத்தைச்சேர்ந்த இன்பதுன்பங்களை யனுபவித்து, அதனுள்ளேயே இருக்கும் என்றதாயிற்று.

இனி, இவ்விரண்டாவதற்கு வேறுபொருளும் கூறுவதுண்டு; அது: அத்தைத் தின்று——அகாரத்தாற் குறிக்கப்படுபவனை கடவுளைத்தியானித்துக் கொண்டு—என்பது.



த்தையும் முறையே * திருவிருத்தம், திருவாசிரியம், திருவாய்மொழி, பெரிய திருவந்தாதி என்ற நான்குப் பிரபந்தமாக அருளிச்செய்தார்.

அப்பொழுது, நித்தியசூரிகளாயும் சுவேதத்தவீபத்தில் வசிப்பவர்களாயுமுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் காரிமாறரது மேன்மைகளைக்கேட்டு அவரிடம் வர, அவர்களைத் தமது திருவாய்மொழிப் பிரபந்தத்தில் "பொலிக", "பொலிக" என்று பாடியருளினார்.

இவ்வாறு பலவருடங்கள் செல்ல, இப்பால் சோழநாட்டில் வீரநாராயணபுரத்தில் 'ஈசுவரபட்டர்' என்பவர்க்குத் திருக்குமாரரான 'நாதமுனிகள்' என்னும் பெரியார் வடநாடுசென்று யமுனாதீரத்தில் கோவர்த்தனபுரம் என்னும் ஊரில் ஸ்ரீ யமுனைத்துறைவனை எம்பெருமானுக்குக் கைங்கரியம் செய்து கொண்டு அங்கிருக்கையில், இவர் முன்னே வழிபட்டு வந்த வீரநாராயணபுரத்தெம்பெருமானை மன்னனார் மீண்டும் அவரைத்தம்மிடம் வரும்படி கனவில் நியமித்தருள அவரும் அவ்வாறே தம்மூருக்குத் திரும்பிவந்தபோது அங்கு ஸ்ரீ வைஷ்ணவர்கள் இந் நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியில், "ஆராவமுதே" என்ற பாசுரத்தைப்பாடக்கேட்டு மகிழ்ச்சிகொண்டு அவர்களை நோக்கி, "இப்பிரபந்தம் உமக்கு முற்றும் வருமோ?" என்று கேட்க, அவர்களும் 'இப்பத்துப்பாட்டுமே தெரியும்! இதுவும் பிறர்க்குத்தெரியாது, எங்களுடைய நாட்டில் புத்தகமும் கிடைக்காது' என்றுசொல்லக்கேட்டு அத்திருவாய்மொழியின் இறுதிப் பாட்டில் "குருகூர்ச்சடகோபன்——குழலின் மலியச்சொன்ன வோராயிரத்துளிப்பத்தும்"—என்றதை நோக்கி 'இப்பிரபந்தம், ஸ்ரீசடகோபன் அவதரித்த திருக்குருகூர்ப் பிரதேசத்தில் உண்டாகவேண்டும்' என்று அவ்விடஞ்சென்று ஸ்ரீ மதுரகவிகள் சிஷ்யரான பராங்குசதாஸரைப்பணிந்து அவரால் ஸ்ரீ மதுரகவிகள் ஆழ்வார் விஷயத்தில் அருளிச்செய்த 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்னும் பிரபந்தத்தைப்பெற்று அதனைப் பக்தியோடு பன்னீராயிரம் உருச்சபித்து ஆழ்வாரையும் பிரத்தியக்ஷமாய்த் தரிசனம் பண்ணி, பலவருடங்களாய் மறைந்திருந்த பிரபந்தம் நாலாயிரம்பாடல்களையும் அவர் அருளைப் பெற்றுப் பண்ணிசை தாளங்களில் அமைத்துத் தேவகானத்திற் பாடித் தாம் அநுபவித்துய்ந்தமையேபோல ஊரும் நாடும் உய்யலாம்படி அவற்றைத் தம் பின்னோர்க்குமருளி உலகத்தை வாழ்வித்தார்.

இப்படிப்பட்ட மேன்மைவாய்ந்த நம்மாழ்வாரைத் திருமால் என்றே கூறுதலுமுண்டு; அதற்கு ஆதாரமாக ஒரு விருத்தாந்தமும் கூறுவர்; அது வருமாறு:— திருக்குருகூரிலும் மற்றைத்திருப்பதிகளிலும் இவ்வாழ்வாரை அர்ச்சையில் எழுந்தருளப்பண்ணிக் கோயில்களிலும் வீதிப்புறப்பாடுகளிலும் அவர்க்கு

* திருவிருத்தம் முதலிய நூல்களிற் பெரும்பாலு மிவ்வாழ்வார், தன்னை, நாயகியாகவும், ஈச்வரனை நாயகனாகவும் அமைத்து இரங்கல்முதலிய துறைகளால் அருளிச்செய்துள்ளமை காண்க.

'வேதம் தமிழ்செய்த பெருமாள் வந்தார்!', 'திருவாய்மொழிப் பெருமாள் வந்தார்!', 'திருநகரிப்பெருமாள் வந்தார்!', 'திருவழுதிவளநாடர் வந்தார்!', 'குருகூர்நகர் நம்பிவந்தார்!', 'காரிமாறர் வந்தார்!', 'சடகோபர் வந்தார்!', 'பராங்குசர் வந்தார்!'.—என்று இன்னம் பல விருதுகள் கூறித் திருச்சின்னம் முதலிய ஊதி வராநிற்க, அதனைக்கண்ட மதுரைத்தமிழ்ச்சங்கப் புலவர்பொறாமைகொண்டு செருக்கடைந்து, 'இவ்வாழ்வார் பக்தரேயன்றிப் பாவலரல்லரே! இவர்க்குவிழாவேன்? விருதுகளேன்? இவர் பாடிய பிரபந்தமேன்? அது சங்கமேறியதேயோ? அதனைத்தமிழ்வேதமென்பதும், இவரை 'வேதம் தமிழ்செய்த பெருமான் என்பதும் வீணே' என வாய்மதம்பேசி ஆழ்வாரையும் அவரது பிரபந்தத்தையும் இகழ்ந்து உரைத்தனர். அதனையறிந்த சில ஸ்ரீ வைஷ்ணவர்கள் மனம் பொறாமல் திருக்குருகூரில் ஆழ்வார் சந்நிதியின் முன்பே சென்று அவரை நமஸ்கரித்து, 'ஆழ்வாரே! உம்மையும் உமது பிரபந்தத்தையும் இகழ்ந்து பேசியசங்கத்தாரை நீர் வென்றாலொழிய அடியோங்கள் உயிர்வாழமாட்டோம்; என்று பூமியில் விழுந்தபடியே கிடக்க, ஆழ்வாரும் ஒரு விருத்தவேதியராய்வந்து அவர்களது குறியையறிந்து இவர்களை நோக்கி 'அர்ச்சையாயுள்ள ஆழ்வார் எழுந்தருளிச் சங்கத்தாரை வாதுசெய்து வெல்லல் இக்கலியுகத்தில் கூடாதகாரியம்' என்று, 'திருவாய்மொழியில் ஒரு பாசுரத்தைச் சொல்லி இதனையொருசீட்டில் எழுதிச் சங்கப்பலகையின் மேல் வைத்தாலும் அதுவே அவர்களைவென்று உங்கள் விருப்பத்தை யளிக்கு'மென்று கூறி மறைந்தனர். உடனே அவர்கள் அந்தச்செய்யுளை யொருமுறியில் வரைந்து சங்கப்பலகையின்மீது வைக்க, உடனே அது தன்மீது ஏறியிருந்த புலவர்களையெல்லாந் தள்ளிவிட்டு அச்சீட்டொன்றைமாத்திரந் தாங்கிப் பொற்றாமரைத் தடத்தில் மிதந்தது. பிறகு தள்ளுண்ட புலவர் 'இஃதென்னபுதுமை!' என்று கலங்கி அம்முறியினை யெடுத்துப்பார்க்க அதிலுள்ள,

"கண்ணன் கழலிணையை
நண்ணும் மனமுடையீர்
எண்ணுந் திருநாமம்
திண்ணனர் நாரணனே."

என்னும் பாசுரத்தை யுற்றுநோக்கி, வியந்து உலகெலாம் உள்ளடியடக்கிய கண்ணனது கழலிணையைத் தன்னிடத்தடக்கிய இச்சிறுமுறிக்கு இடங்கொடுத்த பலகை, இதனோடு ஒரு கோவையாயிருக்க எங்கட்கு இடங்கொடுக்குமோ? கொடாதே! என்று செருக்கடங்கி ஆழ்வார் விஷயத்தில் தாம் செய்த அபராதத்தைப் பொறுத்தருள அவர் விஷயமாக அப்புலவர் யாவரும் தனித்தனி ஒருசெய்யுள் பாடினர். அது:

"சேமங் குருகையோ செய்யதிருப் பாற்கடலோ
நாமம் பராங்குசனோ நாரணனோ—தாமம்



துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கோ
உளவோ பெருமா னுனக்கு"— என்பது.

இதில், ஆழ்வாரையும் திருமாலையும் அபேதப்படுத்திக் கூறியிருத்தல் காண்க.

இனி, இவ்வாழ்வார் உத்தமவருணத்திலன்றி நான்காம் வருணத்திற் பிறந்ததென்னை? எனின், "உனக்கே நாமாட்செய்வோம்" என்றபடி தனக்குரியனாகாமல் அவனுக்கே யுரியனாகுந் தன்மையுடைய ஆத்மாவின் நலத்துக்கு அடுத்ததாதலின், அத்தன்மையை உலகினர்க்கு விளக்கிக் காட்டும்பொருட்டுத் தண்ணிய வருணமே அநுகூலமாதல்பற்றி அவ்வருணத்தில் அவதரித்தார் என்பர்.

இவர், மற்றை ஆழ்வாரைத் தமக்கு அவயவமாக வுடையவர் என்னுமிடத்து, பூதத்தாழ்வாரைச் சிரசாகவும், பொய்கை பேயாழ்வார்களைக் கண்களாகவும், திருமழிசைப்பிரானைக் கழுத்தாகவும், குலசேகர ஆழ்வாரையும் திருப்பாணாழ்வாரையும் கைகளாகவும், தொண்டரடிப்பொடியாழ்வாரை மார்பாகவும், திருமங்கையாழ்வாரைக் கொப்பூழாகவும், மதுரகவியாழ்வாரைத் திருவடியாகவும் கூறுவது ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயம்.

இங்ஙனம் சழிபெருமேம்பாடுடைய இவ்வாழ்வார் திருமாலின் திருவடிகட்கு மிகவும் அந்தரங்கரா யிருந்தமையால் அத்திருமாலினது பாதுகையை 'ஸ்ரீ சடகோபம்' என இவரது திருநாமத்தைக் கொண்டு வழங்குவர்.

(இன்னும்வரும்.)

ஸ்ரீரங்காசாரியர்.

---

# நீலா.

(84-ம் பக்கத்தொடர்ச்சி.)

நீலா அக்குகையைத் தொட்டமாத்திரத்தில் அதனுடைய கதவுகள் திறப்புண்டன. உடனே அதனுள் நுழைந்து படிக்கட்டுமார்க்கமாய்ச் செல்லுகையில் மாணிக்கம் இதென்ன அதிசயம், நாம் ஒரு இருண்ட குகையில் போய்க்கொண்டிருக்கிறோமே. எனக்கோர் மயக்கமாயும், திகிலாயு மிருக்கிறது. என்னுடையமார்பைத் தொட்டுப்பார், குதிரைவேகத்திற்கு மதிகமாய்த் திடீர் திடீரென்று அடிக்கிறது. இனி யான் ஓரடியும் எடுத்துவைக்க மாட்டேனென்று அவ்விடத்திலேயே சோர்ந்து படுத்துக்கொண்டான். நீலா தான் கோரிய எண்ணம் முடிவுபெறாமல் போய்விடுகிறதேயென்று யோசிக்கையில் கிழவி கூறியது ஞாபகத்திற்குவர, உடனே மேல்சென்று அவ்விடத்திலுள்ள விளக்கு ஒன்றைக் கொளுத்தி ஒரு செம்பில் ஜலம் எடுத்துக்கொண்டுவந்து மாணிக்கத்திற்குக் கொடுத்து அவனை யழைத்துக்கொண்டு படிக்கட்டுமார்க்கமாய்க் கீழே

சென்றார்கள். அவ்விடத்திலிருக்கப்பெற்ற அதிசயங்களையும், விசித்திரங்களையும், புதுமைகளையும் பார்த்துக்கொண்டு அரண்மனையில் நுழைந்து ஒவ்வோர் அறையையும் சோதித்துவருகையில், ஓரறையில் வாயினால் சொல்வதற்கரிய திரவியங்களும், நவரத்தினங்களும் அம்பாரம்போல் ராசிராசியாய்க் குவித்து வைத்திருந்தன. மணிவிளக்கு ஒன்று அவ்விடத்தில் எரிந்துகொண்டிருந்தது. "பணமென்றால் பிணமும் வாய்திறக்கு" மென்பதை மனத்திற்கொண்டு நீலா மாணிக்கத்தை நோக்கி 'உனக்கு வேண்டுமளவு திரவியங்களும், நவரத்தினங்களும் மூட்டைகட்டி எடுத்துக்கொள்' என்று சொல்ல, மாணிக்கம் 'பணம் ஆள்கொல்லி, அதை நான் தீண்டேன். அதற்கோர் திருஷ்டாந்தம் சொல்லுகிறேன் கேள்' என்று அதைக்கூறத் தொடங்கினான்.

---

## நான்காவது அத்தியாயம்.

ஓரேழை விறகுவெட்டி தன் மனைவியுடன் கூடி வாழ்ந்துவந்தான். அவன் பிரதிதினமுங் காட்டிற்குச்சென்று விறகு வெட்டி சமீபமிருக்கும் பட்டினங்களுக்குக் கொண்டுபோய் விறகு விற்று, அதில் கிடைப்பதைக்கொண்டு உபாய காலக்ஷேபஞ்செய்துவந்தான். இங்ஙனமிருக்கும் நாளில் கடவுள் அவனுடைய செய்கைக்கு மெச்சி, இவன் விறகுவெட்டவருங் காட்டில் எங்கேயும் உலர்ந்த மரங்களில்லாமல் செய்துவிட்டு, நடுக்காட்டில் யாரும் செல்லக்கூடாத இடத்தில் ஓர் மூங்கிற்புதரில் ஓர் கழியை உலரச்செய்து அதனுள் தங்கநாணயங்களை யிருக்கச்செய்தார். விறகுவெட்டியோ காடெங்கும் திரிந்து உலர்ந்த மரமெங்கும் கிடைக்காமல் மூங்கில் புதரைக்கண்டு சோதிக்கையில் அதில் ஓர் கழி உலர்ந்திருக்கக்கண்டு கோடரிகொண்டுவெட்ட, அத்தறுவாயில் அதனிடமிருந்து தங்கநாணயங்கள் கலகலவென்று விழுந்தன. அதைக்கண்டதும் ஏழை 'ஆ! மோசம்போனேனே, இத்தனம் நமக்குக்கிடைத்தது விபரீதமன்றோ? தனம்வேண்டுமென்று நாம் கனவிலும் நினைத்ததில்லையே. தெய்வம் நம்மை இவ்வாறு சோதிப்பது ஏனோ? என்செய்வேன்!' என்று வியாகூலமடைந்து, செய்வது இன்னதென்று ஒன்றுந் தோன்றாதவனாய் ஓடுகையில், இரண்டு பிராமணர்கள் வழியிலே போய்க்கொண்டிருந்தவர்கள் அவனைக்கண்டு, 'ஏனப்பா ஓடுகிறாய் சற்று நில், சங்கதி என்னசொல்' என்றார்கள்.

விறகுவெட்டி. ஐயமாரே, நீங்க என்னத்துக்கு கேக்கிறீங்கோ. அங்கே ஆள்கொல்லியிருக்குது.

பிராமணர். அடா! ஆள்கொல்லி யாவது என்ன.

விறகுவெட்டி. சாமிங்கோ, நான் என்ன சொல்றது. நான் விறகுவெட்டப் போனேனுங். விறகு அம்படாமல் மூங்கேபொதரைக் கண்டு, ஓர் கொம்பு பட்டுப்போயிருஞ்சு அத்தை வெட்டினேன். அதிலேந்து சும்மா பணம் கொட்டிச்சு.



பிராமணர். அடே! அது எவ்விடத்தில்? சற்று காட்டு பார்ப்போம்.

விறகுவெட்டி யவர்களை யழைத்துக்கொண்டு அவ்விடத்தைக்காட்டிவிட்டு தான் மறைவாய் ஓரிடத்தில் பதுங்கியிருந்தான். அவ்விப்பிராமணரிருவரும் அதைக்கண்டதும் சொல்லமுடியா மகிழ்ச்சியில் மூழ்கி 'ஓய் ஸ்வாமி பார்த்தீரா அப்பேதைக்கு கைக்கெட்டினது வாய்க்கெட்டாமற் போய்விட்டது. நாம் இன்று நரிமுகத்தில் விழித்தாற்போலிருக்கிறது. நடுப்பகலில் எடுத்துப் போனால் யாராவது பார்ப்பார்கள். ஆகையால் சாயங்காலம் எடுத்துப் போகலாம். மேலும் நாமிருவருஞ் சாப்பிடவில்லை. வீணே இவ்விடத்திலிருவருமாய்ப் பட்டினியாயிருப்பதும் சரியன்று. ஆகையால் நம்மிலொருவர் வீடுசென்று புசித்து கொஞ்சமாகாரங்கொண்டுவந்தால் நலமாயிருக்கு' மென்று தீர்மானித்தார்கள். அவ்வாறே ஒருவன் உணவுகொண்டுவர வீட்டுக்குச்சென்றனன். அவனும் "இதென்ன அநியாயம் நாம்போய் உணவுகொண்டுவருவது, அவன் பணத்தண்டையே ராஜாபோல உட்கார்ந்திருப்பதா? நன்றாயிருக்குது! எவ்வாறாவது அவனைக் கொன்றோமேயானால் எல்லாப்பணத்தையும் நாமே வீட்டுக்குக்கொண்டுபோய் எந்நாளு மனுபவிக்கலாம். இல்லாவிடில் மற்றவனுக்கும் வீணே பங்கு கொடுக்கும்படி நேரிடும், என்செய்வது,' என்று எண்ணுவதெல்லாம் எண்ணி நெடுநேரம் ஆலோசித்துக் கடைசியாய் அவனுக்குக் கொணர்ந்து தரும் உணவில் விஷங்கலந்து கொடுப்பதென்று தனக்குள் தானே தீர்மானித்து வீடுசென்றான். பிறகு தான் வேண்டுமளவு உண்டு கடைத்தெருவுக்குப்போய்ப் பாஷாணம் வாங்கிக் கொணர்ந்து அன்னத்தில் கலந்து கட்டுசாதம் எடுத்துக்கொண்டுத் தன் நண்பனைவிட்டு வந்த காட்டிற்குச் சென்றனன்.

மற்றவனோ 'உணவுகொண்டுவரப் போனவன் திரும்பிவந்தால் அவனுக்கு இக்குவியலில் பங்குதரும்படி நேரிடுமே! என்செய்வது நமக்கோ பசியதிகமாயிருக்கிறது, இக்குவியலைவிட்டுச் சிறிதுநேரம் விலகவும் திகிலாயிருக்கிறது. அவனைக் கொல்லும் உபாயம் தேடுவதே நேர்மை. உணவு கொணர்ந்ததும் தாகம் அதிகமாயிருக்கிறதென்று அவனைப் பக்கத்திலுள்ள கிணற்றிலிருந்து தண்ணீர்கொண்டுவரச் சொல்வோம். அவ்வாறு அவன்போய் நீர் மொள்கையில் அவனறியாது பின்சென்று கிணற்றில் தள்ளிவிடலாம்' என்றெண்ணியிருந்தான். வீடுசென்றவன் வந்ததும் அவனை அதிகதாகமென்று தண்ணீர் கொண்டுவரும்படிச் சொல்ல கிணற்றிற்குச் சென்று நீர் எடுக்குந்தறுவாயில் அவனுக்குப்பின்சென்று அவனுடைய இரண்டுகாலையும்பற்றி தூக்கிக் கிணற்றில் தள்ளிவிட்டான். ஐயோ பாபம்! அவன் கிணற்றில் முழுகிமுழுகிக் கடைசியில் வாய்த்திறந்தவண்ணம் ஜலத்தில் மிதந்துகிடந்தான். மற்ற

வனோ வெனில் ஆகாரத்தை உட்கொண்டதும், மயக்கம்போலிருக்க, சற்றுப்படுத்தான். அவனும் கூரே உறக்கங்கொண்டான்." பணத்தின்கொடுமை இப்பேர்ப்பட்டது. ஆகையால் பணம் எனக்கு வேண்டியதில்லை.

"பாடுபட்டுத் தேடி பணத்தைப் புதைத்துவைக்குங்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே யனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம்."

என்று ஆன்றோர் கூறியிருத்தலால் நாம் இவ்வுலகிலிருக்கிறவரையில் நம்மால் இயன்றவளவில் நன்மையே செய்யவேண்டும். நம்முடையதல்லாததற்கு நாமிச்சைப்படுவது பிசகு. நாமுழைத்துச் சாப்பிட்டால் அது மிகவும்நன்மை. அப்படிக்கில்லாமல் பிச்சையெடுத்துச் சாப்பிடுவதும் பிசகு. இன்னும் இதைக்குறித்து பேசத்தொடங்கினால் பொழுதுபோய்விடும். நாம் ஊருக்குத் திரும்புவதைப்பார்' என்றனன். நீலா அவனை வெளியிலழைத்து வந்து ஒரு மேடைமீது உட்காரவைத்துத் தான் அரண்மனைக்குட்சென்று விலையுயர்ந்த சேலையொன்றை உடுத்து, ஆபரணதிகளைப்பூண்டு, அங்குள்ள நிலைக்கண்ணாடியில் தன்னழகைக்கண்டு, சந்தோஷத்துடன் வெளியில் வந்தாள். மாணிக்கம் இவளைக்கண்டு, பிரமித்து, ' இவள் யாரோ, தேவகன்னிகையோ, இருடிகள்மாதோ, இலக்குமியோ, ஸரஸ்வதியோ, அல்லது இம்மாளிகைக்குரியவளோ, மற்றெவளோ யானறிகிலேன். தோழனெங்குச்சென்றானோ? இவள் என்னையே பார்த்தவண்ணம் வருகிறாள், யாரெனில் என் சொல்வது. எல்லாவற்றிற்கும் ஈசனிருக்கிறான்', என்று எண்ணி யாதும் தோன்றாது திப்பிரமையால் நின்றான். இதற்குளவள் அருகில்வந்து இவனுடைய கையைப் பிடித்தாள். பிடித்தமாத்திரத்தி லிவனுக்கு அச்சமுண்டாகி, மயக்கத்தால் சோர்ந்து விழுந்து விட்டான். உடனே அவள் அவனை யெடுத்து மார்பிற் சார்த்தி, சைத்தியோபசாரங்களால் மயக்கத்தைத் தெளிவித்தாள். மாணிக்கம் மயக்கம் நீங்கிப் பார்க்கையில் அவளுடைய மடியிலிருந்தான். அவனுக்குச் சொல்லமுடியாத ஆனந்தமும் ஆச்சரியமு முண்டாகி ' நீயார்? என்னை உன்மடியில் சாயும்படி அவ்வளவு புண்ணியம் நான் செய்ததில்லை. நான் பாபி, என்னைத் தொடுவதும் நீ கூடாது ' என்று எழுந்து அவளை விட்டுச் சற்று தூரத்தில் நின்றான். அதற்கு நீலா, நான் புருடவேடம் தரித்து, யாருக்கும் தெரியாமல் நானும் என் தாதியுமாய்க் குதிரைமேல் வந்து, இக்காட்டிலுள்ள ஓர் தடாகத்தில் நீரருந்தி மூர்ச்சையடைந்தோம். எங்கள்குலதெய்வம்போல்வந்த கிழவியினால் எழுப்புண்டு, சில மந்திரங்கள் அவளால் தெரிந்துகொண்டு காஞ்சிக்கு வந்தோம். அவ்வூரில் ஒரு வீட்டில் குடியிருந்து, பிரதிதினமும் ஸ்ரீ ஏகாம்பரநாதருடைய தரிசனஞ்செய்து வருநாளையி லோர் நாள் உம்மைக்கண்டு வார்த்தையாடினோன். பிறகு நிகழ்ந்தவைகள் தங்க



ளுக்கே தெரியவரும் என்றனள். மாணிக்கம், ' இதென்னதிசயம், இப்படியுமெங்காவது நடந்ததுண்டா, பெண்களையொருபொழுதும் நம்பப்படாது என்பது சரியாய்விட்டது. ' அறைகாத்தான் பெண்டிழந்தான் ' என்னும் பெரியோர்வாக்கும் சரியாகத்தானிருக்கும். ஆனாலும் இவளுடைய பூர்வோத்தரத்தைச் சரியாய் விசாரிப்போம் ' என்று அவளை வினவலானான்.

மாணிக்கம். நீ தனிமையாய் வரவேண்டிய காரணம் யாது.

நீலா. என்னுடைய தகப்பனார், நான் என்மனதில் நினைத்திருந்த புருடனை விட்டு வேறொருவருக்குப் பாணிக்கிரஹணம் செய்து கொடுப்பதாய் நிச்சயித்து விட்டபடியால்.

மாணிக்கம். நல்லது, நீ நிச்சயித்தபுருடனை அவருக்குச் சொல்லக்கூடாதா?

நீலா. அவர் என்னுடைய அபிப்பிராயத்தைக் கேளாமல் நிச்சயஞ்செய்துவிட்டார். நானே யாரைப் புருடனாக நினைத்தேனோ அவரைத் தவிர வேறொருவரையும் மணந்துகொள்ளேன். என்னுடைய தகப்பனார் நிர்ப்பந்தத்தின்பேரில் கலியாணஞ் செய்துகொண்டாலும், அது எப்பொழுதும் சண்டையும் சச்சரவுமாக இருக்குமே தவிர மனதுக்குச் சந்தோஷமிராது. தவிரவும் நான் நினைத்தபுருடனைத் தவிர வேறொருவரைக் கலியாணம் செய்துகொண்டால் நான் கற்புமாதாக மாட்டேன்.

மாணிக்கம். ஸ்திரீகள் பால்ய தசையில் தாய் தகப்பனுடைய ஆதீனத்திலும், யௌவனதசையில் கணவன் ஆதீனத்திலும், விருத்தாப்பியத்தில் பிள்ளைகள் ஆதீனத்திலு மிருக்கவேண்டுமே தவிர அவர்களுக்கெப்பொழுதும் சுயேச்சைகிடையாது என்பது உனக்குத் தெரியாததா.

நீலா. நீர் சொல்வது சரிதான். அது முற்காலத்தில் நடந்தது. இப்பொழுதோ எல்லாம் தலைகீழ்ப்பாடம். அது உமக்குத் தெரிந்திருக்குமே. மேலும் நானென்ன புத்தியீனயா, படிப்பில்லாதவளா, இவனைப் புருடனாக வரிக்கலாம், வரிக்கக்கூடாது என்பது தெரியாதா? பெண்களுக்குப் புத்திதெரிந்தபிறகு அவர்களுடைய இஷ்டப்பிரகாரம் புருடனைத் தேர்ந்து கொள்ளும்படியான சுவாதீனமிருந்தால்தான் நலமாயிருக்கும்.

மாணிக்கம். சரி, நீ, கோரியபுருடன் யாவன்?

நீலா. ஆ! நான் கோரியபுருடனா, அவர் தற்காலம் என்னுடன் பேசிக்கொண்டிருப்பவர்தான்.

மாணிக்கம். இதென்ன, நீ பரிகாசம் செய்கிறாய். நானோ பரம ஏழை. எனக்கு யாதொரு ஆதரவுமில்லாமல் அநாதையாயிருக்கிறேன்.

• 4

மேலும் நான் இன்னாரென்று உனக்குத் தெரியுமா? ஒருவேளை நீ கோரிய மனுஷ்யன், வேறு யாராவதிருக்கலாம். நீ ஆள் மாருட்டமாய்ப் பேசுகிறாய். நன்றாய் யோசனை செய்துபார்.

**நீலா.** நான் கோரி நாடிவந்த மகா புருடர் நீரே தவிர மற்றெவருமல்லர்.

**மாணிக்கம்.** நான் இன்னாரென்று உனக்குத் தெரியுமா, மேலும் நீ எந்த ஜாதியோ, உற்றார், பெற்றார் யாரோ இவைகள் ஒன்றும் எனக்குத் தெரியாதே.

**நீலா.** நான் வசிப்பது காஞர். என் தகப்பன் உம்முடைய தாய்க்குத் தமையன் என்பார்கள்.

**மாணிக்கம்.** ஆ! நீலா. இதென்ன, நீயாவது, தனிமையாக வருவதாவது.

**நீலா.** யான் கோரிய புருடனை அடைவதற்காகத்தான் இப்படியும் வர நேரிட்டது.

(இன்னும்வரும்.)

கா. அருணசல அய்யர்.

---

# மோகனம்பாள்.

(90-ம் பக்கத் தொடர்ச்சி.)

சங்கத்தை ஒத்த இவளது கழுத்தில் உயர்ந்த விலையுள்ள ஒரு முத்தாரம் போடப்பட்டிருந்தது. இவளது ஸ்தனபாரத்தை இச்சிற்றிடை தாங்க மாட்டாமல் முறியும் முறியும் எனக் கதறுவனபோல ஒலிக்கின்ற நூபுரங்களை அணிந்தகால்களை உடையாள்.

இத்தன்மையளாகிய மோகனம்பாள் நீலாவதியைப்போல மிகக் கற்றவளல்லளாயினும், குணமேம்பாடு பற்றி அதிக மதிப்புடையாள். இவள் மேற்கூறிய வண்ணம் நீலாவதியோடு பேசிக்கொண்டிருக்கையில் கதவு ஓசைப் பட்டது. கதவைத்திறந்து பார்க்க மோகனம்பாளுடைய பெண்ணாகிய சுந்தரம் என்பவள் ஓடிவந்து,—

"என்னடீம்மா :—நீவந்து எத்தன்னாழியாச்சு அப்பா உன்னே கையோடே கூப்பிட்டுக்கிண்டு வரச்சொல்றா"

"நீலா! நான் போய் வரட்டுமா, வந்தும் கொஞ்சம் நாழி ஆய்விட்டது;' என்றாள் மோகனம்பாள்.

"என்னடீ மோகனு! மிகவும் அவசரப்படுகிறதாக தோற்றுகின்றதே" என்றாள் நீலாவதி.



"ஆமாம் உன் புருஷனைப்போல் எனக்கும் வாய்த்திருந்தால் நானும் அப்படித்தான் சொல்லுவேன். என் புருஷன் கோபிஷ்டரென்று உனக்குத் தெரியாதா? எள் என்பதற்கு முன் எண்ணெயாய்க் காத்திருக்கும் பொழுதே நான் இந்தப்பாடு படுகிறேனே: ஊரிலிருக்கும் ஸ்திரீகளைப்போல் நான் இருந்தால் அப்புறம் நான் வீட்டிலேயே இருக்க முடியாது." என்று சொல்லி விட்டு மோகனம்பாள் தன் வீட்டை நோக்கிப் போனாள்.

---

## இரண்டாவது அத்தியாயம்.

சீதாராமய்யருக்கு வேதவதி என்று ஒரு தாயாரிருந்தாள். மோகனம்பாள் வெளியிற் போயிருந்த காலத்தில் சுமார் பத்தொன்பது நாழிகை இருக்கும். சீதாராமய்யரோ ஆபீஸிலிருந்து இரண்டாவது வேளை சாப்பிடுவதற்கு வந்திருந்தார். வந்தவுடன் கை கால்களைக் கழுவிக்கொண்டு மடைப்பள்ளியிற் போய்ப் பார்க்கவும் தன் மனைவியைக் காணமல் திரும்பி வந்து விட்டார். அடுத்த வீட்டிலிருந்து சுப்பலட்சுமி என்ற அம்மாள் சீதாராமய்யர் வீட்டுக்கு வந்து வேதவதியோடு பேசிக்கொண்டிருந்தாள். ஒழிந்த சமயங்களில் இவர்கள் ஓயாமல் வம்பளப்பது வழக்கம். அன்றைய தினம் பலவிஷயங்களைப் பற்றிப் பேசியானவுடன் சீதாராமய்யர் உள்ளிருந்து வந்ததைப் பார்த்த சுப்பலட்சுமியம்மாள் "ஏண்டீ, உன் நாட்டுப் பெண் எங்கே" என்றாள்.

"என்னமோம்மா போய் நாலு நாழி ஆச்சு. அவன் வந்து சாப்பிடரத்துக்கு நிக்கறான், இந்தப்படி ஓடி ஓடிப் போயிடறாள், நான் இத்தையெல்லாம் அவங்கிட்டே சொல்றதில்லே நமக்கென்ன ஆகணம்." என்று, ஏதோ மோகனம்பாள் பிரதிதினமும் வெளியில் போவது வழக்கம் போல், சொன்னாள்.

இதைக் கேட்ட சுப்பலட்சுமி, "இந்தக் காலத்தில் எங்கும் அப்படித்தான் அம்மா இருக்கு" என்றாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த சீதாராமய்யர் கோபங்கொண்டு தன் பெண் சுந்தரத்தை அனுப்பியது.

சுந்தரம் நீலாவதி வீட்டில் வந்து கூப்பிட்டதாக மேலே சொன்னோமல்லவா. போய் பத்து நிமிஷத்திற்கெல்லாம் இருவரும் வந்து விட்டார்கள்.

வந்தவுடன் புருஷன் சாப்பிட வந்திருப்பதை குறிப்பாலறிந்த மோகனம்பாள் அதி சீக்கிரமாக உள்ளே சென்று இலையைப் போட்டு வேண்டியவைகளைப் பரிமாறி சுந்தரத்தைக் கொண்டு தன் புருஷனை கூப்பிடச் சொன்னாள்.

சீதாராமய்யர் அதிக கோபங் கொண்டிருந்தவராயினும் தன் மனைவி வந்ததும் வெகு சீக்கிரமாய் தான் உண்ண ஏற்பாடு செய்து விட்டதாலும்

தன் பெண்ணினது அழகிய பார்வையினாலும் சிறிது கோபம் நீங்கி உண்ணுவதற்கு உள்ளே சென்றனர்.

"தினம் வம்புக் கச்சேரி பலமாய் இருக்கிறாப்போல் இருக்கிறது" என்று சற்றுக்கடிந்தார் சீதாராமய்யர்.

பூ நூலில் குல்லாய் பின்னுவதற்கு "நீலாவதி சொல்லிக் கொடுக்கிறேன் என்று கூப்பிட்டாள், நீங்களும் நாலு ஐந்து நாளாய் மத்தியானமும் சாப்பிட வரக்காணமே யென்று போனேன். போய் கால் மணிக்குமேல் ஆகவில்லை அதற்குள் சுந்தரம் வந்து கூப்பிட்டாள் வந்து விட்டேன்" என்று வி யத்தோடு சொன்னாள் மோகனம்பாள்.

"ஆனால் ஹானான் க்யாப் வியாபாரம் வைத்து விடலாம் போலிருக்கிறது' என்று பரிகசித்தார் சீதாராமய்யர். "இல்லாமற்போனால் நீங்கள் தான் ஏதாவது சொல்லிக் கொடுத்து ஒரு உத்தியோகம் பண்ணும்படியாய் செய்யுங்களேன்" என்று அவளும் பரிகாசமாகச் சொன்னாள்.

"அதற்கில்லை. நான் வேடிக்கையாகச் சொன்னேன்" என்றார் சீதாராமய்யர்.

"நானும் வேடிக்கையாகத் தான் சொன்னேன் என்று வைத்துக் கொள்ளுகிறதானே" என்று சற்று மெதுவாக, பக்கத்தில் திரும்பிக்கொண்டு சொன்னாள் மோகனம்பாள்.

"நீ வேடிக்கையாக சொன்னதாக நான் நினைத்துக்கொள்ள வேணுமே தவிர வாஸ்தவத்தில் நீ கொஞ்சம் உ[illegible]ணத்தோடு தான் சொல்லியிருக்கிறாய்" என்று மோஹனம்பாள் மனதைச் சோதிக்க விரும்பியவர் போல் உரைத்தார் சீதாராமய்யர்.

"ஆனால், எனக்கு உங்களோடு பேசத் தெரியாது. வார்த்தைக்கு வார்த்தை குற்றம் கண்டு பிடித்தால் ஆரால் முடியும். இதற்குத் தான் இன்னங் கொஞ்சம் படிக்கவைத்து விட்டீர்களானால் ஜாக்கிறதையாய்ப் பேசலாம். ஆனாலும் உங்களோடு பேசுகிறது மகாகஷ்டம்" என்று சற்றுப் பிணக்குடன் வசனித்தாள் மோகனம்பாள்.

"அடே யப்பா, இப்பவே இவ்வளவு பாட்டில் இருக்கிறதே இன்னம் நான் உனக்கு இங்கிலீஷ் தெலுங்கு முதலானதுகள் சொல்லிக் கொடுத்து விட்டால் கேட்க வேண்டியதில்லை. ஸ்திரீகளிடத்தில் படிப்பு குரங்கிடத்தில் கொள்ளி போல் ஆகும்" என்றார் சீதாராமய்யர்.

"தாங்கள் இவ்வளவு படித்தும் என்னிடத்தில் இவ்வளவு நாள் பழகியும் மனுஷியர்களுடைய நிதானம் தெரியாமல் போய் விட்டதே அது என்னுடைய பூஜாபலன். ஆனால் உங்களுக்கு தெரியாதது ஒன்று மில்லை" என்று அவசரமாக இன்னும் பலவார்த்தைகள் சொல்ல வந்த மோகனம்பாளைத் தடுத்து "இல்லையடி உனக்குப் படிப்பு சொல்லிக் கொடுத்தால் நீ கெட்டு



போய் விடுவா யென்று நான் சொல்ல வரவில்லை. பொதுவாக இப்படி ஆகிற தென்று சொன்னேன்" என்று கொஞ்சம் சமாதானம் செய்தார் சீதாராமய்யர்.

"எப்பொழுதும் நீங்கள் குயுக்தியாக கெடுதலை நினைக்கிறதே யொழிய நல்ல விஷயம் உங்களுக்குப் படுகிறதில்லை. நீங்கள், டிரான்ஸ்வாலில் சண்டை நடக்கிறது, மற்றொரிடத்தில் பேசும் யந்திரம் கண்டுபிடித்திருக்கிறார்கள், என்று இப்படி யெல்லாம் சொல்லுகிறீர்களே, இவைகளை நான் கதைபோலக் கேட்க வேண்டியிருக்கிறதே யல்லாமல் வேறு என்ன தெரிகிறது. இந்த விஷயங்களை உங்களைப் போல எனக்கும் பத்திரிகைகள் பார்க்க யோக்கியதை இருந்து உங்களுக்கு முன் நான் சில சங்கதிகளைச் சொல்லும்படியான நிலைமையிலிருந்தால் அது உங்களுக்கு எவ்வளவு உற்சாகத்தை விளைவிக்குமென்று நீங்கள் க்ஷணம் யோசிக்கக் கூடாதா" என்று வெகு உருக்கமாகச் சொன்னாள் மோகனம்பாள்.

"படிப்பு அதிகமானால் கர்வ முண்டாகி விடும். கர்வ முண்டானால் புருஷனை அலட்சியம் செய்யும்படியான எண்ணம் உண்டாகி விடும். அமெரிக்காவில் இந்த மாதிரி தான் ஸ்திரீகளைப் படிக்கவைத்து உத்தியோகங்களையும் கொடுத்து விட்டார்கள். அதிலிருக்கும் கெடுதல் இப்பொழுது தான் கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிகிறது." என்று சொன்னார் சீதாராமய்யர்.

"கர்வம் ஏன் உண்டாகும்? படிக்கப்படிக்க அமரிக்கை உண்டாகுமென்று சொல்வதுண்டு சந்திரஹாஸ்யனுக்கு விஷத்தைகொடுக்கச்சொல்லி எழுதி இருந்ததை விஷையைக் கொடு என்பதாக மாற்றி அவருடைய இனிய உயிரை காப்பாற்றி தன்னுடைய இஷ்டத்தையும் அவ்விஷை பூர்த்திசெய்துகொள்ளவில்லையோ இதுவும் தங்களுக்குத் தெரியாத விஷயமல்லவே" என சீதாராமய்யருக்கு இரக்கமுண்டாகும்படி வற்புறுத்தினாள் மோஹனம்பாள்.

உடனே சீதாராமய்யர் "யாரோ கூப்பிடுகிறார்களே யாரென்று சற்றுப் பார்த்துவா" என்றார்.

இதைக்கேட்ட மோஹனம்பாள் "இந்தமாதிரி விஷயங்களை மறக்கச் செய்யும் தன்மை உங்களிடத்தில் நிரம்ப உண்டென்பது எனக்கு முன்னமே தெரியுமே. இப்பொழுது நீங்கள் எனக்கு இங்கிலீஷ் சொல்லிக்கொடுப்பதாக ஒப்புக்கொள்ளாவிட்டால் இங்கே யார் உங்களுடன் பேசப்போகிறார்கள்," என்று சொல்லிக்கொண்டே சற்று தூரத்தில் நகர்ந்தாள்.

## மூன்றாம் அத்தியாயம்.

சீதாராமய்யர் வந்து கதவைத்திறந்து பார்க்க அவர் குல புரோஹிதராகிய கேசவ வாத்தியார் வந்திருந்தார். அவரைப் பார்த்தவுடன் "வாருங்கள் சாஸ்திரிகளே" என்றார் சீதாராமய்யர்.

இருவரும் உள்ளே சென்றவுடன் தாழ்வாரத்தில் இருந்த நாற்காலிகள் ஒன்றில் புரோஹிதரை அமரச் செய்து சீதாராமய்யரும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு "கடுமையான வெயிலில் வந்திருக்கிறது போல் இருக்கிறது" என்றார்.

"இல்லை, கோபாலய்யர் கிரகம் வரையில் போயிருந்தேன். அப்படியே வழியில் இங்கேயும் ஸாவகாசமிருந்தால் பார்த்து விட்டு போகலாமே யென்று வந்தேன். மஹாளயம் என்றைக்கு, ஸௌகரியமாய் செய்யலாமோ?" என்றார் வாத்தியார்.

சீதாராமய்யர் உடனே தாயாரைக் கூப்பிட்டு "அம்மா! வாத்தியார் வந்திருக்கிறார்; மஹாளயம் என்றைக்கு செய்யலாம் என்று கேட்கிறார்," என்றார்.

உடனே அந்த வேதவதி அம்மாள் "ஏங்காணும் சாஸ்திரிகளே உமக்கு இந்தாந் தெரிஞ்சுவந்திரா? சாஸ்திரிகளுக்குக் காரியமிருந்தா அப்போ வரது; ஒரு மங்கிலியச் சரடு குடுங்கணும் இன்னு சொல்லி ஆறுமாஸம் ஆச்சு, இன்னங் கொடுக்கப் போறார்" என்றாள்.

"மாங்கலிய ஸூத்திரம் தயாராய் முறுக்கி வைத்திருக்கிறது, கொண்டு வந்து கொடுக்க ஸாவகாசம் இல்லாமற் போய் விட்டது. இப்போ ஸாயந்திரம் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போகிறேன்" என்றார் சாஸ்திரிகள்.

"ஆகட்டும், ஜலத்திலே எழுதி வைக்கிறேன்" என்றாள் அந்த வேதவதி அம்மாள்.

(இன்னும் வரும்.)

ஆர். ஸி. கிருஷ்ணசாமி.

## சங்கீதம்.

கல்வி, செல்வம், நாகரீகம் முதலியனவற்றாற் சிறந்து விளங்கும் சாதியாரெவரோ அவர்களெல்லாம் கேட்போர் மனதைக் கவர்ந்து ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய சங்கீதத்தை நன்குகற்று அதை வளர்த்துவருகின்றார்கள். பண்டைக்காலத்தில் நமது ஆரியர் உன்னத நாகரிக தசையை யடைந்து சிறப்புற்று வாழ்ந்தபோது இயலிசைநாடகமென்னும் முத்தமிழையும் நன்கு பரிபாலித்து அவைகளில் அதிக தேர்ச்சியடைந்திருந்தார்கள். இயற்றமிழை யெவ்வளவு கவனமாகக் கற்றார்களோ அவ்வளவு கவனத்துடனேயே சங்கீத வித்தைக்குரிய இசைத்தமிழையும், நாடகத்தமிழையும் சற்று வந்தார்கள், ஆனால் நமதுநாடு வேற்றரசர் கைப்பட்டபின்னே கல்வி செல்வம் நாகரீகம் குன்றக் குன்ற சங்கீதமும் கைவிடப்பட்டது. இசைத்தமிழ் நாடகத்தமிழைக்குறித்து எழுதப்பட்ட நூல்கள் பல இப்பொழுது அழிந்துபோயின.



சங்கீதம் அதிக பிரயோசனமுடையது. மிருகங்களுக்கு மதிப்பிரீதியுண்டாகின்றதென்றால் அதின்மாட்சியைக் குறித்து வேறுசொல்வதென்? அந்த துக்கத்திலாழ்ந்திருப்பவர்களை அதினின்றும் மீட்கவல்லது. கோழை நெஞ்சனுக்கும் உற்சாகத்தைக் கொடுக்கவல்லது. கல்நெஞ்சையு முருக்கத் தக்கது. இப்படிப்பட்ட சங்கீதத்தை நம்மவரு ளனேகர் அசட்டைபண்ணுகிறார்கள். சிலரதை கூத்தாடிகள் நட்டுவர் தாசிகள் முதலியோர்க்குரிய இழியதொழிலென நினைந்து எள்ளுதல் செய்கின்றனர்.

ஐரோப்பியர் தங்கள் பிள்ளைகளுக்குப்—பெரும்பாலும் பெண்பிள்ளைகளுக்குச்—சங்கீதத்தை அதிக சாக்கிரதையோடு கற்பிக்கிறார்கள். வீணை, பியானோ, ஹார்மோனியம் முதலிய சங்கீதக் கருவிகள் இல்லாத வீடுகளையும், சங்கீதம் பாடப்படாத வீடுகளையும் இங்கிலாந்திலாவது அல்லது மற்றைய மேலைத்தேசங்களிலாவது காண்பதரிதாகும். தூரப்போவானேன்? இத்தேசத்திலுள்ள ஆங்கிலேயர் பறங்கிக்காரராதியோரை நாமுதாரணமாக எடுத்துக்கொள்ளமே. நாமேன் நமது பெண்பிள்ளைகளுக்கு சங்கீதம் கற்பித்து நம்மில்லைச் சிறப்பிக்கக்கூடாது? * * *

இங்கே பெண்கள் வாயைத்திறந்து அயல்வீட்டிற்குக் கேட்கத்தக்கதாய் ஓர் கீர்த்தனத்தைச் சொல்லிவிட்டால் பெரிய அவமானமுண்டாகின்றது. ஆனால் சாவீடுகளுக்குச் சென்று மார்பிலடித்து ஒப்புச்சொல்லி அழ மாத்திரம் விடப்படுகிறார்கள்.

ஆடவன் புறம்போந்து தனது கருமத்தை முடித்து வீட்டிற்கு வரும்போது அவனது மனைவி அவனுக்குச் சந்தோஷத்தை யுண்டாக்கி ஆறுதலைக் கொடுக்கக்கூடியவளா யிருக்கவேண்டியது. இல்லின்கண்ணே மனதிற்குவந்த பெண்ணில்லாவிட்டால் ஆடவர்களுக்கு மனத்தைரிய முண்டாகாது. எப்போதும் மனக்கவலையி லாழ்ந்து மனவலியும் சரீரவலியுமிழந்து தங்கள் கருமங்களைச் செவ்வனே செய்து முடிக்க இயலாதவர்களாவார்கள். இதுபற்றியே "மனமகிழ்ந்த இல்லிலார்க்கில்லை யேறுபோற்பீடுநடை" யெனத் திருவள்ளுவநாயனாரும் சொல்லியிருக்கின்றனர். பெண்ணானவள் தன்வீட்டிற் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் உண்டாக்குவதற்கு கல்வியறிவும் நற்குண நற்செய்கையு முடையவளா யிருத்தலோடு சங்கீதஞான முடையவளா யிருத்தல் மிகவும் நன்றாகும்.

சங்கீதம் செல்வமில்லாத விடத்தில் வளர்ந்தோங்கமாட்டாது. * மிடியினால் வருந்துஞ் சனங்களுக்கு சங்கீதத்திலதிக மனஞ் செல்லாது. இந்தியா வேற்றரசர் கைப்பட்டபின் மிடியினாலும் இராசபயத்தினாலும் அதிககாலமாக வருந்தியதால் சங்கீதத்திற் சனங்களுக்கு மனஞ் செல்லாது அது அசட்டை பண்ணப்பட்டது. இப்பொழுது எமது காருண்ணிய மகா இராணியவர்க

* தரித்திரம்.

ளின் ஆளுகைக்குக் கீழ் நாம் அதிக சுயாதீனத்தை யடைந்து வர வர நல்ல ஸ்திதியை யடைந்து வந்தாலும் தேசத்தில் மிடி நீங்கிச் செல்வப் பெருக்கின்னு முண்டாகவில்லை. அதிக செல்வ முண்டாகும்போது சங்கீத அறிவு விர்த்தியாகும். நம்மவர்களும் இதிற்சற்று கவனம் வைத்து சங்கீத ஞானம் விருத்தியடையத்தக்க மார்க்கங்களைத் தேடுவார்களென நம்புகின்றோம்.

இ. சா.

### சரீரப்பயிற்சியின் அவசியம்.

சரீரப்பயிற்சி இருவகைப்படும். ஒன்று தனக்கு வேண்டிய உணவைச் சம்பாதிப்பதற்காக உழைப்பது; மற்றொன்று இன்பத்தை நாடிச்செய்வது. அடியில் கூறப்பட்டுள்ள கதையானது சரீரப்பயிற்சியின் விசேஷத்துக்குத் தக்க திருஷ்டாந்தமா யிருக்கிறது.

ஒரு அரசன் (சுல்தான்) நெடுங்காலமாய் வியாதியினால் பிடிக்கப்பட்டு மிக்க அபாயகரமான ஸ்திதியி லிருந்தான். அவன் எவ்வளவு தான் செலவழித்து எவ்விதமருந்து உட்கொண்டும் சிறிதுங் குணமாகவில்லை. கடைசியில் ஒரு வைத்தியன் அந்நோயைத் தான் எவ்விதமாவது தீர்ப்பதாகச்சொல்லி பின்கூறியஉபாயந்தேடினான். பந்துபோ லுருண்டையான ஒரு மரத்துண்டை எடுத்து அதை நன்றாய்த் தொளைத்து அத்துவாரத்தில் அநேகவித மூலிகைகளை நிரப்பி வெளியில் ஒன்றும் தெரியாதபடி வாயை நன்றாய் மூடிவிட்டான். பிறகு பந்தடிக்கும் சாட்டை (bat) ஒன்றெடுத்து அதின் பிடியையும் பந்து அடிபடும் தலைப்பாகத்தையும் அதே மாதிரி நன்றாய்த்தொளைத்து அவற்றிலும் அவ்வாறே மூலிகைகளை நிரப்பிவைத்தான். பிறகு நோயாளியான சுல்தானை ஒவ்வொரு நாளும் காலையில் தேகத்தில் வியர்வை உண்டாகும் வரையில் மேற் கூறிய ஆயுதங்களால் பந்தடிக்கச் செய்தான். மரத்திலிருந்த மூலிகைகள் அவன் உடம்பில் ஏறினதாகவும் அதனால் எந்த மருந்தினாலுந் தீராத நோயானது தீர்ந்ததாகவும் ஒரு கதை உண்டு. ஆனால் வாஸ்தவம் யாதெனில் சுல்தானது வியாதி தீர்ந்தது மருந்தினாலன்று. வைத்தியர் தந்திரமாய் நோயாளியை தேகப்பயிற்சி செய்யும்படி அமைத்ததினாலேதான்.

Royal Victoria Press, 322. Linghi Chetty Street Madras.

# ஜனப்பிரியன்.

மாதம் ஒருமுறை பிரசுரம் செய்யப்படும்.

புஸ்தகம். 1] சென்னை 1900௵ நவம்பர்௴ அ. [இலக்கம். 5

## தேகசௌக்கியம்.

மனிதர்களுக்குத் தேக சௌக்கியம் முக்கியமானது. அழகு, நல்வழியிற் சம்பாதித்த பொருள், நண்பர்களுடன் செலவழிக்கத் தக்க இளமை ஆகிய இவையனைத்தும் தேகசௌக்கியத்திற்குப் பிற்பட்டனவே. தேகசௌக்கிய மில்லையாயின் அழகினாலும், பொருளினாலும், இளமையினாலும் என்னபயனை யடையலாகும்?

சௌக்கியமில்லாவாழ்வு நம் உயிர்க்கொரு சுமையாகும். திறமையுள்ள வைத்தியனை, வியாதிகளை நீக்குவதனாற் சிருஷ்டி கர்த்தனது அம்சமெனல்வேண்டும். புத்தியுள்ள மாந்தரே வியாதியை யுணர்ந்து வைத்தியனைக்கொண்டு நீக்குகின்றார்கள். சாதாரண மனிதர் எவ்விதவியாதியையும் தெய்வக்குற்ற மென்றெண்ணுகின்றார்கள். ஒருவன் வியாதியாற் பீடிக்கப்பட்டால் வைத்தியனீந்த மருந்தைத் தானுட்கொண்டு தீர்த்துக்கொள்வதைக் கேட்டிருக்கின்றோம். ஒருவர் நோய்தீர வேறொருவர் மருந்து உட்கொள்வ தென்றால் நமக்கு மிகவும் ஆச்சரியமாகத் தோன்றும். சில விடங்களில் ஓர் இலையில் மந்திரமெழுதி அதை நீரிற்கழுவி அந்நீரை யுட்கொள்வதனால் நோய் தீருமென்று நம்புகின்றனர். இவ்விஷயங்களில் எவ்வளவு நம்பலாகுமோ அவ்வளவு நம்பலாம். வைத்தியர் உதவியின்றி நாமே நம் சௌக்கியத்தைத் தேடிக் கொள்ளலாம்.

தேக சௌக்கியத்தின் நன்மையை யாவரும் ஒப்புக்கொண் டாலும் அதை யடைவதற்கு வேண்டிய சிறிய ஏற்பாடுகளைப் பலர்

செய்வதில்லை. ஆகையினாற்றான் அநேகர்கள் அற்பாயுளரா யிறக்கின்றார்கள்; அன்றேல் வயோதிக பருவத்தில் நோயுண்டு வருந்துகின்றார்கள்.

சிலர் பிறவிக்காலந்தொட்டு வியாதியுடையவர்களாய் ஆயுள் முழுவதையும் இன்பமின்றிக் கழிக்கின்றார்கள். இவர்களைத் தவிர்த்து அநேகர் வேண்டுமென்று சிறிது பிரயாசைப்பட்டாற் சௌக்கியத்தை யடையலாகும். நோயுறுதல் எப்பொழுதும் நம்பிழையே. செய்யவேண்டியவற்றைச் செய்யாமையாலும் செய்ய வேண்டாதனவற்றைச் செய்வதனாலும் நாம் நோயுறுகின்றோம். தாமாகவே மேற்கொள்ளும் வியாதி வேறு காரணங்களாலுண்டாகும் நோயினும் மிகவுஞ் சிறிதே. இதனால் ஒவ்வொருவரும் நோய்களைப் பற்றிக் கூறும் நூல்களையும் அவைகளை நிவர்த்திக்கும் விதத்தைப்பற்றிக் கூறும் நூல்களையும் நன்றாகப் படித்துணரவேண்டுமென்று யாம் கூறவில்லை. தேக சௌக்கியத்தை யடையச் சாதகங்கள் தேடவேண்டும். ஒருவன் நாற்பது வயதினனாயின் அரை வைத்தியனாகின்றான்.

சிலர் நோயுள்ளவர்களானாற் கடுகடுப்பான முகத்தை யுடையவர்களாகின்றார்கள்; நல்லவார்த்தையை மறக்கின்றார்கள்; கடுஞ்சொற்களைப் பேணிப் பாராட்டுகின்றார்கள். உடலுறுபிணியால் வருந்துவோர்கள் மனநோய்க்கு இடங்கொடுக்க லாகாது. உடற்பிணி நீங்கினும் உளப்பிணி நீங்குமோ? எவ்விடயத்தில் திறமையுற்றவர்களேனும் அவர்கள் சீக்கிரத்தி லிறக்கின்றார்கள்; அவ்விடயத்தைத் தவிர்த்து வேறு தன் சௌக்கியத்திற்கு வேண்டியவற்றைக் குறித்துக் கவனிக்கின்றில ராகலின்.

தேக சௌக்கியத்தை யடையவேண்டுமாயின் ஒழுங்கான வழக்கங்களும், தேகப்பயிற்சியும், பரிசுத்தகுணமும், எதிலும் மிதமும் இருக்கவேண்டும். கள் முதலியவற்றைக் குடிப்பதனால் வரும் துன்பங்க ளிவ்வளவென்றுரைத்தலியலாது. அதனால் நேருந் தீமைகளைக் கூறப்புகின் மற்றொன்று விரித்தலென்னுங் குற்றத்திற் காளாவோம். நீடித்த வாழ்வை யடையவேண்டுமாயின் மிதமான ஆகாரத்தைக் காலத்தி லெடுத்துக்கொள்ளல் வேண்டும். நாம் உண்ணும் உணவை நன்றாய் மென்று தின்பதனாற் சீரணம்



சீக்கிரத்தில் ஆகின்றது. செந்தமிழுரையாசிரியருட் சிறந்து நிற்கும் உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் இவ்விதம் உண்டதனாற்றான் நீடித்தவாழ்வை யடைந்திருந்தனரென்ப. மிதமாக உண்பவன் உணவினினிமையை அமிதமாக வுண்பவனினும் அதிகமாயறிவான். சிலர் ஆகார விஷயத்திற்றான் அவசரம் பாராட்டுகின்றார்கள். அதனால் விளையுந் தீமையை இவ்வளவினதென்று எடுத்துரைத்தலுங் கூடுமோ? தேகப்பயிற்சியினாற் றசைகள் வலிமையை யடைகின்றன. நம் சீரணசக்தியும் அதிகரித் தோங்குகின்றது. மனிதர்களுக்கு உண்டாகும் நோய்களுட் பெரும்பாலன விளைதல் தேகப்பயிற்சி யின்மையினாற்றான் என்பதற்கு ஐயமேயில்லை.

உழைத்தபிறகு உண்ணும் உணவே தேகத்திற்கு நன்மையைப்பயக்கும். மடியாளராயிருந்து உண்பவர்களுக்கே நோய் அதிகம். உறவினருடன் வினோதமாக வார்த்தையாடிக் கொண்டு உண்பவர் தெகசௌக்கிய மடைகின்றார்கள். எவ்வாறு உப்பு உணவிற்குச் சுவையைக் கொடுக்கின்றதோ அவ்வாறேயாம் தேக சௌக்கியத்திற்கு இனிமையான வார்த்தைகள். இது சிறந்த உளநூற் புலவர்களின் கருத்து. சிலர் உண்ணும்பொழுது மௌனமாயிருத்தல் வேண்டுமென்கின்றார்கள். இது முக்கியமாய்ப் பிராமணரி லொருபகுதியாரிடத்திற் பெரு வழக்கமாயிருக்கின்றது.

சிலர் உறங்கும்போது சாளரங்களை யடைத்துவிடுகின்றார்கள். காற்றுப் போக்குவரவில்லாத விடத்தில் நாம் இருத்தலினாலேயே பல வியாதிகள் கிளைக்கின்றன. வைகலும் வெளியிடத்திற் சஞ்சரிப்பதனாற் சௌக்கிய முண்டாகும். "பருவங்களைப் பற்றிக் கவனியாமல் யான் வெளிச்சென்றதனால் வைத்தியர்களைக் கவனிக்க வில்லை" என்றார் ஒரு புலவர்பிரானும். ஒரு பொழுது காண் கருவியில் ஒரு யந்திரங் கெட்டுப்போனால் அஃதெப்படி முழுவதும் இயங்காது நின்று விடுகின்றதோ அப்படியே நம் உடலின் ஓர் அங்கம் நோயின் வருந்தினால் முழுவதுந் துன்பத்தை யடைகின்றது.

சநக்கை – இராமசாமி ஐயங்கார்.

# இராமாயண ஸங்கிரகம்.

அஞ்சிலே யொன்று பெற்றா னஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்றா றாக வாரியர்க் காக வேகி
அஞ்சிலே ஒன்று பெற்ற வணங்கைக்கண் டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தா னவனெம்மை யளித்துக் காப்பான்.

## அயோத்தியாகாண்டம்.

(106—ஆம் பக்கத் தொடர்ச்சி.)

தசரதன் தன் கோயில்விட்டுத் தனது ஆசை நாயகியினந்தப்புரத்தை அடைந்து, அவள் மிகுதியாய் ஆசைபாராட்டும் இராமனுடைய பட்டாபிஷேகத்தைக் குறித்து அவளுக்குச் சொல்லலாமென்னும் எண்ணங்கொண்டு அவளது பள்ளியறைக்குட் சென்றான். சென்றதும் அவள் தலைவிரிகோலத்தைக் கண்டான். இவ்வலங்கோலத்திற்குக் காரணம் தோன்றாது கலக்கங்கொண்டு அவளைத் தரையினின்றும் எடுத்து நிறுத்த முயலலும் அவள் தன்னாயகன் கைகளை நீக்கிக்கொண்டு மறுபடியும் மின் போன்று துவண்டு மண்மீது வீழ்ந்து புரண்டழுதாள். தசரதன் அவளை நோக்கி "இதற்கு யாதுகாரணம், உனக்கென்ன குறை, நீ யாது வேண்டினுங் கொடுப்பதற்கு யானில்லையோ? உன் மைந்தன் இராமனில்லையோ?" என்று சொல்லித் தேற்றலும், அவள் அரசனை நோக்கி, "தாங்கள் இப்போது சொல்லியவழி நின்றால்போதும். எனக்கு முன்னம் அளித்த வரத்தை இப்போது கொடுத்தல்வேண்டும்." என்று சொல்லி முடியாததற்கு முன் காமவலையிற் பட்டவனாதலின் தான் சிறிதும் யோசியாமல் கொடுத்தேனென்றான் தசரதன். அவள், 'ஒரு வரத்தால் என்மகன் பரதன் நாடாளல்வேண்டும், மற்றொன்றால் இராமன் வனமாளவேண்டு'மெனச் சொல்லி யொருபுறமாய் ஒதுங்கி நின்றாள். இக்கொடியசொல் விஷம்போற் சென்று பரவி அவனை ஒருநொடியளவில் கீழே சாய்த்துவிட்டது.

* இதிலாங்காங்கு எடுத்தாளப்பட்ட செய்யுளின் பொருளறிந் தானந்தங் கொள்ளக் கூடாத சிறுவர் சிறுமியர் முதலாயினோர், செய்யுளைக் கவனியாது வசனத்தையே வாசித்துக் கதையினை யறியலாகும்.



அவன் நாவுமுலர்ந்து போய்விட்டது. ஆவியும் வெளியே எட்டிப்பார்த்துக்கொண்டிருந்தது. அவனது உள்ளமும் வாடியது. கண்களும் பஞ்சடைந்தன. ஏதேனும் சொல்வதற்கும் நாவெழவில்லை. அவனது ஐம்புலன்களும் அவ்வவற்றின் வேலையை நிறைவேற்றுவது அருமையாயிற்று. இவன் பூமியில் வீழ்ந்ததைக் கேட்ட தேவரும் நடுங்கினர். இவன் இப்படி வருந்தி வாடுவதைப் பார்த்திருந்தும் தன் மனமோ சற்றேனு மிளகாது இவள் எதிர் நின்ற வண்ணமா யிருந்தாள். இவனுக்குச் சற்றுப்பொறுத்துச் சுவாசம் வந்தது. அவளை நோக்கி "உனக் கிந்த வஞ்சனையாகிய எண்ண மூட்டுவித்தவர் யாவர்? சொல்" என்னலும் அவள் "எனக்கு ஒருவரும் உபதேசம் செய்யவில்லை. வாக்களித்த வரத்தை உமக்கிஷ்டமிருந்து தந்தால் பெற்றுக்கொள்ளுகிறேன். சொன்ன சொல்லைக் காப்பாற்றத் திறமில்லாவிடின் என்னுயிரையும் நீத்து பழிப்புச் சொல் நும்மைப் பொருந்துமாறு செய்வேன்" என்று சொன்னதைக் கேட்டுங் கேளாததற்கு முன், இராமனுயிரைத் தவிரத் தனக் கோருயிரிலை யென் றிருந்த மன்னன் மறுபடியும் மனமயங்கி மூர்ச்சித்துச் சிறிதுநேரஞ் சென்றபின் தெளிந்து அவளைக் கொன்றாயினும் விடுதல் நலமெனத் தேர்ந்து பிறகு மனந்தளர்ந்து அவ்வெண்ணத்தையும் விட்டு அவளை நோக்கி "உன் னெண்ணப்படி நடத்தினால் அதை நலமென விண்ணவரும் கொள்ளார், மண்ணவரும் அதற்குப் பிறகு இங்குய்யார். அதைத் தவிர வேறென்ன வேணுங் கேள். என்னுடைய கண்களை வேண்டுமெனினுந் தருவேன். என்னுயிர் வேண்டுமெனினும் இப்போதே தந்தேன். இரண்டிலொன்றாகிய மண்ணையேனுங்கொள். மற்றதை மறந்துவிடு" என்று அநேகவிதமாய்ப் பரிந்துகேட்டான்.

"இன்னே யின்னே பன்னி யிரந்தா னிகல்வேந்தன்
தன்னே ரில்லாத் தீயவ ளுள்ளந் தடுமாறாள்
முன்னே தந்த விவ்வர நல்காய் முனிவாயேல்
என்னே மன்னா யாருளர் வாய்மைக் கினியென்றாள்."

அப்படிக் கேட்டபின்பும் அவள் மனம் மாறவில்லை. "என் மகன் என் கண்ணினின்று மறைவானாயின் என்னுயிரும் உடல் தனைவிட்டுச் சென்றுவிடும்" என்றான் தசரதன்.

"மெய்யே யென்றன் வேழ நூறும் வினைநோக்கி
நையா நின்றே னாவு முலர்ந்தே னனிலம்போல்
கையா நின்றென் கண்ணெதிர் நின்றுங் கழிவாளேல்
உய்யே னெங்கா யுன்னப யம்மென் னுயிரென்றான்."

இப்படிச் சொல்லியும் அவள் கவனிக்கவில்லை. தசரதன் மேலும் அவளை நோக்கி "இதுவரையில் உலகத்தில் மாதர்கள் தாம் சுமங்கலியாய்ச் சாதல் வேண்டுமென்று எண்ணி, தன் கணவனுக்குமுன்னிறத்தலையே சிறந்ததெனக் கொண்டார்களே யொழிய, உன்னைப்போன்று என்னைக்கொன்று எனக்குப்பின் வாழ நினைப்பதுபோல் யாவருமிருந்ததில்லை" என்று சொல்லி வருந்தி "மண்ணிலுள்ளோரையும் விண்ணிலுள்ளோரையும் வென்ற எனக்கு என் வீட்டிலுள்ள ஒருத்தியால் உயிர்போம்படி வந்ததென்று சொல்லி உலகத்தார் பழியார்களா?" என்றரற்றிப் புரண்டு கொண்டிருக்கையில், "விதிவயத்தால் என்னெண்ணம் தவறிப்போமாகில் இன்றே என்னுயிர் விடுவேன், உம்முரை பொய்க்காதென்றெண்ணுகிறேன்," என்று கைகேயி சொல்லலும், "அடி பாவி! ஈந்தேன் போ. என் கண்மணி காட்டிற்குப்போனால் என்னுடல்விட்டு உயிரும் போய்விடும். நீயும் நின் மகன்பரதனும் வசைக்காளாகி மிக்க சுகத்துடன் வாழுங்க" ளென்று சொல்லி முடிப்பதற்குமுன் கீழ் வீழ்ந்து துயர்க்கடலு ளாழ்ந்துவிட்டான்.

"வீய்ந்தா ளேயிவ் வெய்யவ ளென்னா மிடல்வேந்தன்
ஈந்தே னீந்தே னிவ்வர மென்சேய் வனமாள
மாய்ந்தே நான்போய் வானுல காள்வேன் வசைவெள்ளம்
நீந்தாய் நீந்தாய் நின்மக னோடு நெடிதென்றான்."

பட்டாபிஷேகத்தைக் குறித்த விவாதமும் இவ்வாறாய் முடிந்தது. பொழுதும் விடிந்தது. நகரிலுள்ளோர்க்கு இதன் விருத்தாந்தம் ஒன்றுந் தெரியாததனால் ஆடவர் மகளிரனைவரும் அதிகாலையி லெழுந்திருந்து தங்களை அலங்கரித்துக்கொண்டு இராமபிரானைத் தரிசிக்கும் பொருட்டுப் பட்டாபிஷேக முகூர்த்தம் எப்போதெப்போதென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அஃறிணைப் பொருள்களு மப்படியே யிருந்தன.

"மூல ராய்முத லாகி மூலம தாகி ஞாலமு மாகியத்
தேவ தேவர்பி டித்த போர்வி லொடித்த சேவகர் சேணிலம்



காவ லர்மாமுடி சூடு பேரெழில் காண லாமெனு மாசைகூர்
பாவை மார்முக மென்ன முன்ன மலர்ந்த பங்கய ராசியே."

குழந்தைகள், குமரர், வயோதிகர் எல்லோரும் சித்தமாய் வீதியிற் புறப்பட்டு அரண்மனை நோக்கிச் சென்றார்கள். எல்லோருடைய வதனமும் ஆனந்தமென்னும் வஸ்துவினா லாக்கப்பட்டனபோல் விளங்கின.

"மாதர்கள் கற்பின் மிக்கோர் கோசலை மனத்தை யொத்தார்
வேதியர் வசிட்ட னொத்தார் வேறுள மகளி ரெல்லாம்
சீதையை யொத்தா ரன்னா டிருவினை யொத்தா ளவ்வூர்
சாதகை மாந்த ரெல்லாந் தயரதன் றன்னை யொத்தார்."

நாழிகையு மாயின. நாற்புறமும் வாத்தியகோஷமு மதிகரித்தன.

"விண்ணவர் விசும்பு தூர்த்தார் விரிதிரை யுடுத்த கோல
மண்ணவர் திசைக டூர்த்தார் மங்கல மிசைக்குஞ் சங்கம்
கண்ணகன் முரசி னோதை கண்டவர் செவிக டூர்த்த
எண்ணருங் கனக மாரி யெழுதிரைக் கடல்க டூர்த்த."

பட்டாபிஷேகத்திற்கு வேண்டியனவெல்லா சித்தமா யிருந்தன. வசிட்டரும் வந்துவிட்டார். சோதிடர்கள் முகூர்த்தம் நெருங்கிற்றென்னலும் அவர் சுமந்திரரை அழைத்து "நீவிர்போய் அரசனை அழைத்துக்கொண்டு சீக்கிரம் வந்துசேர்க" என்றார். அவரும் அப்படியே சென்று அரசன் மாளிகையில் வினவியவளவில் அங்கில்லை யெனத் தேர்ந்து கைகேயியினது மாளிகைக்குட் செல்லலும் அவள் எதிர்சென்று அவரை மேற்செல்லாமற் றடுத்து "நீவிர் இராமனை இங்கு அழைத்துக்கொண்டுவருக" வென்றாள். பிறகு இவர் இராமரிடஞ்சென்று அன்னை சொல்லியதைக் கூறி அவரை யிட்டுக்கொண்டுவந்தார். வரும் வழியில் இராமனுக்காசி கூறியவர் பலர். வாயாற் றுதித்து மனத்தாற் சிந்தித்து மனமுருகிநின்றவ ரனேகர்.

"மீன்பொருவு தேரின்மிசை வீரன்வரு போழ்தில்
தன்பொருவில் கன்றுதனி தாவிவரல் கண்டாங்
கன்புருகு சிந்தையொடு மாவுருகு மாபோல்
என்புருகி நெஞ்சுருகி கஞ்சுருகி நிற்பார்.

இராமன் கைகேயியினது அந்தர்ப்புரஞ் சென்று அவளைக்கண்டு அவள் தாளில்வீழ்ந்து வணங்கி, காலையிற்சென்ற பசு மாலையில்

வரக்கண்ட கன்றைப்போன்று அதிக ஆசையுடன் அருகில் துவண்டுநின்றான். அப்படி நின்றவனை நோக்கி "தம்பி, உன் தகப்பனாருனக் குரைக்கவேண்டுவது ஒன்றுளது. அவர் இளைப்புடன் படுத்துறங்குகின்றார்" என்றவளவில் "தாய்சொற் றுறந்தொரு வாசகமில்லை', 'தந்தைசொன் மிக்க மந்திர மில்லை' என்றதற் கேற்ப இராமன் தனது அன்னையை நோக்கி "அன்னாய், தாங்கள் சொன்னாலென்ன? தந்தைசொன்னாலென்ன? இரண்டுமொன்றுதானே எனக்கு, தாங்களதைச்சொன்னபோதிலும் அதை உடனே நிறைவேற்றச் சித்தமாயிருக்கின்றேன். பணித்தருளுக" என்றான்.

"எந்தையே யேவ நீரே யுரைசெய வியைவ துண்டேல்
உய்ந்தன னடியே னென்னிற் பிறந்தவ ருளரோ வாழி
வந்ததென் றவத்தி னாய வருபயன் மற்றொன் றுண்டோ
தந்தையுந் தாயு நீரே தலைநின்றேன் பணிமி னென்றான்."

கைகேயி இராமனைப்பார்த்து "உலகமுழுதும் உன் தம்பி பரதனாள, நீ மான்றோல் மரவுரிதரித்து சடைமுடிதாங்கிக் காட்டிற்சென்று நல்ல புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நாநம்செய்து பதினான்காண்டு கழிந்து திரும்பிவரல் வேண்டும். இதுதான் உன் தந்தை உனக்குச் சொல்லென்று எனக்குச் சொன்னது" என்று சொல்லி முடித்தாள்.

"ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைக டாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப் புண்ணியத் துறைக ளாடி
ஏழிரண் டாண்டின் வாவென் றியம்பின னரச னென்றாள்."

இதைக்கேட்டபொழுது இராமனது முகம் அன்றலர்ந்த தாமரையினு மதிக விளக்கம்பெற் றிருந்தது. அவன் தன் தாயை நோக்கி "அன்னாய்! இத்தகைய உத்திரவு உன்னுடையதேயாயினும் அதைச் செய்யாது மறுப்பனோ யான்? என்தம்பிபெற்ற செல்வம் நான்பெற்றதுபோலன்றோ? உன் சொற்படி நடவாவிட்டால் நானுனக்குப் பிள்ளையென்பதிற் பயனென்? உன் சொல்லை யுடனே நிறைவேற்றும் வண்ணம் எனக்கு விடைகொடு. உடனே காட்டிற்குச் செல்கின்றேன்" என்று மிக்க விநயத்துடன் செலவுபெற்றுக்கொண்டு தந்தை படுத்திருந்த திக்குநோக்கித் தெண்டனிட்டு அவனுடைய அந்தர்ப்



புரம்விட்டு வெளியேவந்து தன் தாய் கோசலையின் அந்தர்ப்புரம் நோக்கிச் சென்றான்.

"குழைக்கின்ற கவரி யின்றிக் கொற்றவெண் குடையு மின்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம்பின் னிரங்கி யேக
மழைக்குன்ற மனையான் மௌலி கவித்தனன் வருமென் றென்று
தழைக்கின்ற உள்ளத் தன்னாள் முன்னொரு தமியன் சென்றான்."

தன் குழந்தை வருகிறதைக்கண்டு, அவன் கிரீடம் தரித்திலன், தலைமயிர் புனிதநீரால் நனைந்திலன், இதற்கு யாதுகாரணமென அறிவதற்கில்லாது தன்னை வணங்கி நின்ற இராமனைநோக்கி "என் கண்மணி! முடிபுனைதற் கேதேனும் இடையூறு நேர்ந்ததோ?" என்னலும் "நின்காதற் றிருமகனாகிய என் தம்பி பரதனுக்கு முடிசூட்டப் போகிறார்கள்" என்று இராமன் சொல்லலும், 'இப்படிச் செய்தல் முறைமை யன்றென்ப தொன்றுண்டு. அதுதான். ஆயினும் அவன் சகலகுணமும் நிறைந்தவன். நின்னைப்பார்க்கினும் நல்லவன். நிலத்தை நின் தம்பிக்குத்தந்து நீயும் அவனுக் குதவிபுரிந்து சமாதானத்துடன் வாழுங்கள்' என்று வாழ்த்தினாள். இராமன் அன்னையைநோக்கி, "எனக்குறுதி பயத்தற் குரிய ஓர் நெறியுங் காட்டினார் என்றந்தை. அதாவது, நான் காட்டிற்சென்று தவமுனிவர்களுடனிருந்து காலங்கழித்துப் பதினான்குவருடஞ் சென்றதும் திரும்பிவர வேண்டுமென்பதுதான்." என்றது காதிற்படுமுன் ஏங்கினாள், இளைத்தாள், திகைத்தாள், மனம் வீங்கினாள், விம்மினாள், விழுந்தாள் பூமியில். மூர்ச்சைதெளிந்து பலவாறாக அரற்றினாள், அழுதாள், பிறகு தன்னையும் உடன்கொண்டு போம்படிப் பிள்ளையை வேண்டினாள். இராமன் கோசலையைநோக்கி "அன்னாய்! நான் வனத்திற் கேகினால் தந்தை துக்கசாகரத்திலல்லவோ மூழ்கிவிடுவார். அவருடனிருந்து அவருக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டிராது என்னுடன் வருவது தருமமாகுமா? பரதனுக்குப் பட்டஞ்சூட்டிப் பிறகு தான் தவஞ்செய்யப் போம்போது நீயுமவருடன் சென்று அருமையான நோன்புகளெல்லா மாற்றுவாய். இதற்குள் நான் காட்டிற் கழிக்கவேண்டிய பதினான்கு வருஷமும் பதினான்குநாளைப்போற் போய்விடாதா? சூரியவமிசத்துதித்த கோசிகருக்கு வந்தபேறெல்லாம் தவத்தால் வந்தனவல்லவா? நான் தந்தைசொன் மிக்கதோர் மந்திர முண்டென நினைக்கலாமா?

மழுவாயுத பாணியாகிய பரசுராமரும் தன் தந்தைசொல் காப்பாற்று நிமித்தம் அவர் சொற்குடன்பட்டுத் தாயையும் தலைகுறைக்கவில்லையா? பிதிர்வாக்கிய பரிபாலனம் செய்வதல்லவோ சிலாக்கியம்" என்னும் இத்தகைய பற்பல நீதிக ளெடுத்துரைத்துத் தனது அன்னையை ஆற்றமுயன்றான். அவள் "இவனுக்குப் பட்டமில்லாமற் போனாற் போகிறது. கானகத்திற்கேகாவண்ணமாயினும் நாம் முயற்சி செய்யலா" மென்ற எண்ணத்துடன் கைகேயியினது அந்தர்ப்புரம் நோக்கிச் சென்றாள். இராமன் பிறகு தனது சிற்றன்னையாகிய சுமித்திரையினது மாளிகைக் கேகினான்.

**கல்துளம். துப்புசாமீ முதலியார்.**

---

## சோபாமணி.

—:o:—

(88–ஆம் பக்கத் தொடர்ச்சி.)

அரசன்.—நன்று. அங்ஙனமே நீ யுன் ஆருயிர் நண்பனுக்குப்பரிந்து நியாயவாதஞ் செய்யலாம். ஆனால் ஒரு சங்கதி. உன் நண்பன் குற்றவாளியல்லனென்று நீதியதிபர் ஒப்புமாறு நிரூபிக்கத் தவறுவையாயின் அவனுக்கு விதிக்குந் தண்டனையில் நினக்கும் ஒரு பாகம் உரித்தென்று நினைத்திடு. ஸ்பாண்டா சிறைச்சாலையில் ஓராண்டு இருக்க அவனுக்குச் சிக்ஷைவிதிக்கப்பட்டுளது. நீ யின்று மேற்கொள்ளும் கக்ஷியைத் தாபிக்கத்தவறுவாயேல் அச்சிறைச்சாலையில் அவனுக்குத் துணையாவாய். நாம் அறிவீனராலே அபாயத்திற்கேதுவாம். அறிவீனனோடு நட்பாடல் அதனினுங்கொடியதோர் அபாயமாகும். "ஸம்ஸர்க்கஜா தோஷகுணாபவந்தி" "நல்லிணக்கமல்ல தல்லற்படுத்தும்" என்பன கேட்டிலையோ? லானிஸ்கா தன்னோடொத்த மனிதரால் விசாரணை செய்யப்படுதலில் எனக்கு ஆக்ஷேபமிலது. அங்ஙனம் விசாரிப்போரும் பன்னிருவராயிருக்க; அவர்க்கு (வேண்டுமாயின்) பஞ்சாயத் என்று பெயருமவைத்துக்கொள்க. இவற்றில் எனக்கு எத்துணையும் இடர்ப்பாடில்லை. நமதுவாதங்களைச் செய்ய நாமே ஒரு நியாயவாதியை நியமித்துக்கொள்வாம். நீயோ லானிஸ்காவுக்கு நியாயவாதியாய்



நிற்கின்றனை. நியாயத்தை நாட்டுந்திறத்தில் காட்டிய நிபந்தனை நீயறிவாயே. அதன்கண் நினக்கேதேனும் ஆக்ஷேபம் உளதோ?

ஆல்பர்ட்.—மிகநன்று. அங்ஙனமே ஆகுக. தாங்கூறிய நிபந்தனையில் எனக்கு எட்டுணையும் இன்னலில்லை. பாண்டாவிற் சிறைப்பட்டிருக்கும் என் சிநேகனைக்கண்டு பேசும்படிமட்டும் கட்டளை யளிக்கவேண்டும்

அரசன்.—நீ கூறும் இந்நிபந்தனை உடன்படிக்கையிற் சேர்ந்ததன்றே. புதிதாயினும் இதற்கும் உடன்படுகின்றோம். குற்றவாளியைக் கண்டுபேசும்படி ஐந்து நாழிகைக்காலம் தந்திருக்கின்றனம். அவனைக்கண்டு நீ ஸம்பாஷித்தபிறகு அவனைப்பற்றி நீ கொண்டுள்ள கருத்து மாறுமாயின் யாம் நிபந்தனையை நிறைவேற்றத் தவறோம். அதுகொண்டு எம்மைக்குறை கூற வொண்ணாது.

ஆல்பர்ட்.—அத்துணையே தனக்குச் சாலுமென்றான். லானிஸ்காவின் தாயும் மற்றும் ஆண்டுக் குழீஇயிருந்தோரும் அரசனது பெருந்தகைமையினையும், ஆல்பர்ட் தன் நண்பன்திறத்துச் செய்யப்புகுந்த கைம்மாறு வேண்டாத பேருதவியினையும் வியந்து புகழ்ந்தனர். பெர்லின் நகரத்திலும் போட்ஸ்டம் நகரத்திலும் ஆங்காங்குக்கூடும் அவைகளில் சனங்கள் லானிஸ்காவினது விதியைக் கதையாகப் பிரசங்கித்து வந்ததுமன்றி, ஸான்ஸ-ஸூஸியில் அரையனது அரண்மனைப்புலவரும் மன்னவன் மனத்தி லூன்றுமாறு அதனைக் குறித்து ஆக்ஷேபஸமாதனங்கள் பன்னிப் பகர்ந்துகொண்டிருந்தனர். அவ்வாங்கிலயாத்திரிகனும் லானிஸ்காவின் செய்திகளையறிந்து அவன் விதி யிங்ஙனமாயிற்றே! யென மனம் வருந்தினன். பிரிடரிக் மன்னன் தன்னைக்குறித்து அந்நியர் தன் பெருமைக்குப் புறம்பாகப்பேசினால் அதனைப் பொருள்செய்யான். அவ்விஷயங்களை யெழுதி வெளியிடின்மட்டும் அவன் சம்மதியான்.

ஆல்பர்ட்'ஸ்பாண்டா சிறைச்சாலையில் லானிஸ்காவைக்கண்டு பேசிய பின்னரே அரசனுடன் தான் செய்துகொண்ட பிரதிஜ்ஞைக்குப் பின்னிடாதிருக்க அவனுக்குத் துணிவுண்டாயிற்று. லானிஸ்காவோ. தன்திறத்தில் தன் மித்திரன் வேந்தனோடுசெய்துகொண்ட சூளினையறிந்து துணுக்குற்றான்.

லானிஸ்கா—எனது உயிரினுமினிய உத்தமநண்ப! நிருபன் கேட்ட நிபந்தனைக்கு நீயேன் உடன்பட்டாய்? ஐயோ! ஆழமறியாமல் அடியிட்டுக்கொண்டாயே! நம்மித்திரன் யாதுகுற்றமுஞ் செய்திரானென்று நினக்குத் துணிவிருக்கலாம். நீ அங்ஙனமே துணிவுகொண்டிருக்கின்றனை யென்பதில் ஐயப்பாடில்லை. ஆனால் அதனைத் தாபித்தன்மட்டும் உன்னாலாகாதசெயல். ஆகவே, எனக்கு நேரும் அவமானம் நின்னையும் பற்றுமே! ஏன் நீ இவ்விடரிற்றலையிட்டுக்கொள்கின்றாய்? இது 'வேலிக்கு முட்போடக் காலுக்குள் தைப்பது' போலாகும்.

ஆல்பர்ட்—நிரபராதியான என் அருமைத்தோழனுக்கு நேரும் அவமானத்தில் நானும் கூட்டாளியாயின் அஃதெனக்கு இழிவாகுமோ? உடலுக்கு உளதாம் உறுகண்ணினை அவ்வுடலோடு கூடிய உயிரும் உறுகின்றது :

"அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்கண்
அல்ல லுழப்பதா நட்பு.

எனவும்,

"முட்டுற்ற போதே முடுகியென் றாருயிரை
நட்டானொருவன்கைநீட்டேனேல்—நட்டான்
கடிமனை கட்டழித்தான் செல்வுழிச்செல்க
நெடுமொழி வைய நக"

எனவும் ஆன்றோர் கூறினரன்றோ? ஆதலினால், நினக்கு நேர்ந்த இடுக்கணொழிப்பேன்; இன்றேல், நின்னோடு உறுதுயர் நுகர்வேன். பிதியஸ் எனும் ஓர் உத்தமன் தாமன் எனும் தன் நட்பாளனுக்குப் பிணை நின்றுதன தாருயிரையுங்கொடுக்கத் துணிந்து தன் துணைவனை மரணதண்டனையினின்று மீட்ட செய்தியறியாயோ? அங்ஙனமே யானும் என் துணைவன் திறத்திற் செய்யநின்றேன். உற்றவிடத் துதவுவோனே உயிர்த்துணைவனெனப்படுவன். சிறுமட்கலத் தொழிற்சாலையைப் பார்த்துத் திரும்புகாலையில் உனதாயுதத்தை நீ வியந்துரைத்திட, யான் எனதாயுதமும் நினக்கொருகாலுதவுமென்றேனே. நீ அதனை மறந்தனையோ? அதனுதவி நினக்கு இத்துணை விரைவில் வேண்டுவதாகுமெனயான் நினைத்திலேன். இது நிற்க. அஃதுனக்கு வெற்றிபுரிவதாக.



லானிஸ்காவினது விசாரணைக்குக் குறித்ததினத்தில் அக்காட்சியைப் பார்க்கப் பல்லிடங்களினின்றும் வெகு பெயர்கள் ஆண்டுத்திரண்டுவந்திருந்தனர். போட்ஸ்டம் நகரத்திற் படைவீரர் குடியிருப்பான பெரியதோர் கட்டடத்தை நியாய விசாரணைத் தலமாக அமைத்துக்கொண்டனர். பார்க்கவந்தவர் தங்கியிருக்கும் வண்ணம் அவ்வமயத்திற்கேற்க ஒரு படிக்கட்டு அமைக்கப்பட்டது. அம்மண்டபத்தினிடை உயர்வாகிய மேடையொன்று செய்து நீதியதிபர் வீற்றிருக்க அதன்மீது அரியணையும் நிறுத்தப்பட்டது. அதன் வலத்தில் பஞ்சாயத்தாரிருக்க இடனும், இடத்தில் அக்காட்சியைக் காணவந்தோர்க்குத் தலமும் வகுக்கப்பட்டன. நீதியதிபர்க்கு முற்புறத்தில் மரத்தாலியன்று உயர்ந்துபரந்து அழகிதான பீடமும் (மேசை) அதன் இருபுறத்தும் நியாயவாதிகளும் சாக்ஷிகளுமிருக்க, நாற்காலிகளும் பலகைகளும் போடப்பட்டிருந்தன. அரசன்பக்கத்து நியாயவாதிக்கு வலப்புறமும் குற்றவாளியின் பக்கத்து நியாயவாதிக்கு இடப்புறமுமாக இவ்வாறு ஆங்கில நீதித்தல ஏற்பாட்டின்படி அரசன் கட்டளையால் அனைத்தும் அழகுற அமைக்கப்பட்டன. லானிஸ்காவின் தாய் தன்னுடனிருந்த சில நண்பரோடு நியாயத்தலத்தினுட்புக்குப் படிக்கட்டின் கீழ்ப்புறத்திருந்தனள். ஆண்டுக்குழுமியிருந்தா ரனைவரும், புதல்வன் கதி யாதாகுமோ! வென்று புந்திவருந்திச் சிந்தனை செய்துகொண்டிருந்த தாயின் முகத்தை உற்றுநோக்கி உரையாடுவாராயினர். ஒவ்வொருவரும் லானிஸ்காவின் விசாரணையைக்குறித்துத் தத்தமக்குத்தோற்றிய அபிப்ராயங்களை வெளியிட்டுக்கொண்டிருந்தனர். "லானிஸ்கா இழைத்த தீங்கோ மிகப்பெரியது; அங்ஙனமாக, வீணே இந்த ஆல்பர்ட் குற்றவாளிக்குப் பரிந்துபேச வந்தமை பேதைமையாம்" என்றனர் சிலர். சணப்பன் வீட்டுக்கோழி தானே தலைப்படுவது' போல, இந்த ஆல்பர்ட் தன்னைத்தானே இடர்ப்படுத்திக்கொள்வன்" என்றுரைத்தனர் வேறு சிலர். "ஒரு நண்பன்திறத்திற்பரிவுகொண்டு, அவன் குற்றமற்றவனென்று வற்புறுத்திச் சாதிக்கத்தவறின் அவனுக்கு விதிக்கும் சிக்ஷையைத் தானுமடைய உடன்பட்டானே. ஆ! ஆ!! இந்த ஆல்பர்ட்டினது தைரியமே தைரியம்!" என வியந்தனர் மற்றுஞ் சிலர்.

'உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு'

'முட்டிகை போல முனியாது வைகலுங்
கொட்டியுண் பாருங் குறடுபோற் கைவிடுவர்
சுட்டுக்கோல் போல வெரியும் புகுவரே
நட்டா ரெனப்படு வார்'

"என்ற பெரியாருரையை உறுதிப்படுத்தும் உத்தம நண்பன் இவனே" யென உவந்துரையாடினர் இன்னுஞ் சிலர். 'லானிஸ்கா சிக்ஷையுறுவனேல் அதனை அவன்தாய் எவ்வாறாற்றி உயிர்தரிப்பாள்' என்றிரங்கினர் பின்னுஞ் சிலர். 'மெய்யே வெல்லும் பொய்யல்ல' என்று உச்சரித்தனர் பிறர் சிலர். அங்குள்ளாரிற் பெரும்பான்மையோர் அரையன் முகத்தை ஊன்றி நோக்கி அவனது எண்ணத்தைக் குறிப்பாலறியத் தொடங்கினர். இப்படிப் பலரும் பலவாறு தத்தங்கருத்தினை வெளியிட்டுக்கொண்டிருந்த தருணத்து, நீதியதிபர் நியாயத்தானத்தில் தமது ஆஸநத்தின்மீது வீற்றிருத்தலும், போட்ஸடம் நகரத்துப் பிரபுக்களிற் பன்னிருவர் பஞ்சாயத்தாக நியமிக்கப்பட்டனர். அப்பொழுது பிரிடரிக் வேந்தன் பெயராற் குற்றஞ்சுமத்தப்பட்ட லானிஸ்காவென்னுங் குற்றவாளிக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அக்கட்டளை கண்ட அக்கணமே லானிஸ்கா இரண்டு சேவகர்வசமாக நியாயத்தலத்திற் கொணரப்பட்டான். அவன் நீதியதிபர் முன்னர் நடந்து சென்ற தோற்றமே அவனது பெருந்தன்மையினையும் பிழைபாடின்மையினையும் தெளிவுறத் தெரித்தது.

"முகனுரைக்கும் உள்நின்ற வேட்கை"
"அகத்தினழகு முகத்திற்றெரியும்"
"முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்
காயினுந் தான்முந் துறும்"

என்றவாறு லானிஸ்காவின் உளத்தின்கண் நிகழும் உணர்ச்சியெல்லாம் பொங்கி வெளியே வழிவதுபோல அவனது முகத்தினிடத்தோன்றி விளங்கின. அப்பொழுது தலைகுனிந்திருந்த லானிஸ்கா ஏறெடுத்து நோக்குதலும், தன் உயிர்த்தோழனான ஆல்பர்ட் சலியாத மனவுறுதியோடு எதிரே நிற்கக்கண்டான்.

(இன்னும்வரும்.)

கா. ஸ்ரீ. கோபாலாசாரியர்.

# ஆசாரியர்கள் சரித்திரம்.

(*)

## 5–ஸ்ரீமந்நாதமுனிகள்.

(117-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

இவ்வாறு ஆழ்வார் பெருங்கருணையோடு திவ்யப்பிரபந்தங்களை யாவரும் ஓதி உய்யும் வண்ணமாக அருளிச்செய்து பரமபதம் எழுந்தருளியபின்னர், நெடுங்காலங்கழித்து வீரநாராயணபுரத்திலே மன்னாரை ஸேவித்து அங்கேயே வீற்றிருந்து அவ்வெம்பெருமானுக்கே தொண்டுபூண்டு கைங்கரியம் பண்ணிவந்த ஈசுவரபட்டாழ்வாரும், அவர்தம் திருக்குமாரர் நாதமுனிகளும் அவர் குமாரர் ஈசுவரமுனிகளும், ஒருநாள் மன்னார் திருமுன்பே சென்று வணங்கி, 'தேவரீர் சிஷ்டரைக்காக்கவும், துஷ்டரை அழிக்கவும் அவதரித்து விளையாடியருளிய ஸ்ரீமதுரை, திருவாய்ப்பாடி, ஸ்ரீபிருந்தாவனம், யமுனாதீரம், ஸ்ரீ கோவர்த்தனம் முதலிய வடதிசை க்ஷேத்திரங்களிற்சென்று ஆங்காங்குள்ள எம்பெருமானைத் திருவடிதொழுதுவரவேண்டு'மென்று விண்ணப்பஞ்செய்ய, மன்னாரும் 'அப்படியேசெய்க' என்று அர்ச்சகர்முகமாக விடைதந்தருளினார்.

அப்பால், இவர்களும் குடும்பஸமேதராய்ப் புறப்பட்டுப்போய் வடதிசையிலுள்ள திவ்யதேசங்களைத் திருவடிதொழுதபின், மிக்க கெம்பீரமாய்ப் பல சுழிகளை யுடைத்தாய்ப் பெருகாநின்ற யமுனாதீரத்திலே கோவர்த்தனபுரம் என்ற கிராமத்திலே * "தூயபெருநீர் யமுனைத்துறைவன்" என்ற எம்பெருமானை வணங்கிப், பேரானந்தமுடையராய் ஆங்கே 'எப்பொழுதும் வாழக்கடவேம்' என்று நிச்சயம்பண்ணிக்கொண்டு கைங்கரியம் செய்துவரும் நாளில், மன்னாரும், 'நம்முடைய வீரநாராயணபுரத்து வரவேண்டும்' என்று நாதமுனிகளுக்குச் சொப்பனத்திற்சொல்லியருள, அவரும் இஃது என்ன ஆச்சரியம்! என்று தங்களுக்குள் விசாரித்து, இனி யாம் செய்யத்தக்கது யாது? என்று யமுனைத்துறைவர் திருமுன்புநின்று தண்டனிட்டு விண்ணப்பஞ்செய்ய, அவரும் அர்ச்சகர் மூலமாய் 'அப்படியே செய்யத்தக்கது' என்று தீர்த்தம்முதலிய தந்து விடைகொடுத்தருளினார்.

பிறகு, இவர்களும் குடும்பத்தோடு புறப்பட்டு ‡ வாரணசிவழியாக எழுந்தருளிப் பின்பு எல்லாவுலகங்களிலும் மேம்பட்டதாகச் சொல்லப்படுகின்ற 'ஸ்ரீ புருஷோத்தம்' என்னுமிடத்துச் சென்று, ஸ்ரீ ஜகந்நாதனையும் நமஸ்கரித்து அங்குநின்று புறப்பட்டுச் சிம்மாத்திரிவழியாக அகோபிலம்வந்து அங்கு

* திருப்பாவை.
‡ வாரணசி—காசி.

நின்றும் போந்து * "பரன்சென்று சேர் திருவேங்கடமாமலை" என்றபடி திருமலையாழ்வாரையும் சேவித்து, உலகமாகிய நாடகசாலைக்குச் சூத்திரதாரியான திருமால், பரமபதத்தையுந்துறந்து இந்த லீலாவதியிலுள்ளாரை ரக்ஷிப்பதிலுண்டான ஆசையால் நீருக்கோனேரிக்கரையிலே திருமகளுடன், பக்தி என்னும் கயிற்றுற் கட்டத்தக்க சௌலப்பியம் என்ற சட்டையைப் பூண்டு எழுந்தருளிய திருவேங்கடத் தப்பனையும் திருவடிதொழுது அவ்விடத்தே நித்தியவாசஞ்செய்வோம் என்றால் மன்னார்க்குத் திருவுள்ளமில்லையே! என்று மிகவிரைவாக அங்குநின்றும் புறப்பட்டுக் கடிகாசல வழியாய்ப் போந்து வேகவதியின் வடகரையிலே உத்தமமாங்கச்சிதனில் அத்திகிரியின்மீது புண்ணியகோடி விமானத்தே எழுந்தருளியிருந்து, எவராலும் போற்றிவணங்கப்படும் பேரருளாளரையும் சேவித்து மீண்டு திருவயிந்திரபுரத்தில் தேவநாயகனையும் திருவடிதொழுது அப்பால் திருக்கோவலூர் வழியாய்ச்சென்று,

¶ "வண்டினமுரலுஞ் சோலை மயிலினமாலுஞ் சோலை
கொண்டல்மீதணவுஞ் சோலை குயிலினங் கூவுஞ் சோலை
அண்டர்கோ னமருஞ் சோலை யணிதிரு வரங்கம்"

என்ற திவ்யதேசம் போந்து அங்கெழுந்தருளியிருக்கும் அரங்கனையும்; பின்னர்,

‡ "நடந்த கால்கள் நொந்தவோ நடுங்க ஞால மேனமாய்
இடந்த மெய்கு லுங்கவோ இலங்கு மால்வ ரைச்சுரம்
கடந்த கால்ப ரந்தகா விரிக்க ரைக்கு டந்தையுள்"

என்று திருமழிசைப்பிரானால் மங்களா சாஸனம் செய்யப்பட்ட திருக்குடந்தை யாராவமுதாழ்வாரையும் திருவடிதொழுது அங்குநின்று மீண்டு வீரநாராயணபுரத்து மன்னார்கோவில் எழுந்தருளினார். ஆங்குள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாவரும் பூரணகும்பமுடன் எதிர்கொண்டுவரச்சென்று மன்னாரையும் வணங்கியிருக்கையில் மன்னார் திருவுள்ளமுவந்தருளி, இவர்களை நன்கு ஆதரிக்குமாறு அவ் வைஷ்ணவர்கட்கு ஆஞ்ஞாபித்தருள, அவர்களும் அங்ஙனமே இல்லம் முதலிய அளித்து, † "நாளும பைங்கொனமீ தெல்லா முனதேயாக" என்றபடி நடத்திவருகையில் அவர்களும் அம்மன்னார்க்குப் புஷ்ப கைங்கரியஞ்செய்து வந்ததுமல்லாமல், சாஸ்திரப்பிரவசனங்களும் செய்து வந்தார்கள்.

இவ்வாறு இருக்கையில், மேல்நாட்டினின்றும் சில ஸ்ரீ வைஷ்ணவர்கள் எழுந்தருளி மன்னாரைச் சேவித்து அவர் தந் திருமுன்பே நின்று,

* திருவாய்மொழி.
¶ திருமாலை.
‡ திருச்சந்தவிருத்தம்.
† திருநெடுந்தாண்டகம்.



* "ஆரா வமுதே யடியே னுடலம் நின்பா லன்பாயே
நீரா யலைந்து கரைய வுருக்கு கின்ற நெடுமாலே
சீரார் செந்நல் கவரி வீசும் செழுநீர் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய் கண்டே னெம்மானே."

என்ற பதிகத்தைச் சொல்லியருளினார்கள்; அதுகேட்ட நம் நாதமுனிகள் பேரானந்தமுடையராய் அவர்களை நோக்கி, 'இப்பிரபந்தம் முற்றும் உங்கட்குத் தெரியுமோ'? என்று கேட்க, அவர்களும் 'இப் பத்துப்பாட்டுமேவரும்' என்று விண்ணப்பஞ்செய்தனர். அப்பால் ஸ்ரீமந்நாதமுனிகள் 'உங்கள் நாட்டில் புத்தகமாவது உண்டோ? பாடமுடையவருண்டோ'? என்று கேட்டார்; அவ்வைஷ்ணவர்கள் இவ்வளவும் எமக்கே தெரிவதன்றி வேறெவர்க்கும் தெரிவது அருமை என்றனர். அதுகேட்ட அந்நாதமுனிகள், ஸ்ரீ சடகோபன் அவதரித்த திருக்குருகூரில் உண்டாகவேண்டுமென்று ஆங்கெழுந்தருளி ஆழ்வாரையும் பொலிந்துநின்ற பிரானையும் மங்களாசாஸனம்பண்ணி, அங்கே ஸ்ரீமதுரகவிகளுடைய சிஷ்யரான ஸ்ரீ பராங்குசதாசரையும் நமஸ்கரித்து 'இவ்விடத்துத் திருவாய்மொழி கற்றுவல்லார் உண்டோ'? 'புத்தகம் ஏதேனுமுண்டோ'? என்று வினவ அவர்களும், "திருவாய்மொழி யொன்றுமே யல்லாமல் மற்றைப் பிரபந்தங்களும் இங்கு நெடுநாளாய் மறைந்துள்ளன; எங்களுடைய ஆசாரியரான மதுரகவிகள் அடியேனுக்கு, "கண்ணி நுண் சிறுத்தாம்பு" என்ற பிரபந்தத்தை உபதேசித்தருளி, ஒரேமனத்தோடு ஆழ்வார் திருவடிகளையே தியானித்துக் கொண்டு நியமத்துடன் பன்னீராயிரமுருச்சபிக்க ஆழ்வார் நமக்குப் பிரத்தியக்ஷமாவர் என்றருளிச் செய்தார்" என்றனர்.

பின்பு, நாதமுனிகளும் அப்பிரபந்தத்தை அடியேனுக்கும் உபதேசிக்க வேண்டுமென்று வேண்ட, அவரும் இவர்க்கு உவப்புடன் ஓதியருளினார். அதுபெற்ற இவர், திருப்புளி மரத்தடியிற்சென்று ஆழ்வார் திருமுன்பே பன்னீராயிர முருச்சபித்து நிற்கையில், பெரிய பிராட்டியாருடைய கட்டளையினால், மிகவும் மனமகிழப் பெற்ற நம்மாழ்வார் இந்நாதமுனிகளைக் குறித்து அசரீரி சொல்வதுபோல 'யாதுபற்றி நம்மை இதுகாறும் உபாசித்தீர்' என்று கேட்டவாறே இவர், 'திருவாய்மொழி முதலிய பிரபந்தங்களை அடியேனுக்கு உபதேசிக்கவேண்டும்' என்று பிரார்த்திக்க, அங்ஙனமே அவர்க்குச் சிறந்ததோர் ஞானக்கண்ணைத் தந்தருளி ஸமயக்கோட்பாடுகளையும், மற்றுமுள்ள நாலாயிரப்பிரபந்தம் முதலியவைகளையும் அஷ்டாங்கயோகங்களையும் உபகரித்தார்.

அதுபெற்ற நாதமுனிகள் பேரானந்தப் பெருங்கடலு ளாழ்ந்தவராய்,

* திருவாய்மொழி.

"மிக்க வேதியர் வேதத்தி னுட்பொருள்
நிற்கப் பாடியென் னெஞ்சுணி றுத்தினன்"

என்றபடி சடகோபன் பக்கல் மிக்க பக்திகொண்டு பொலிந்துநின்ற பிரானையும், அவ் ஆழ்வாரையும் சேவித்து வாழும்நாளில், மன்னனர் அப் பிரபந்தங்களைத் தம் முன்னிலையில் ஒருகால் சொல்லுமாறு நாதமுனிகட்குச் சொப்பனந் தந்தருளினர்.

இவரும், இச்செய்தியை மற்றைநாள் ஆழ்வாரிடத்தும், பொலிந்து நின்ற பிரானிடத்தும் விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வார் அர்ச்சகமுகமாய் 'ஆகில், நீவிர் வீரநாராயணத்து இப்பிரபந்தங்களை நல்லொழுக்கமுடைய ஸ்ரீ வைஷ்ணவர்கட்கு உபதேசிக்கக் கடவீர்' என்று நியமித்துத் தீர்த்தம் பிரசாதம் முதலிய அளித்து விடைதந்தனுப்பினர். நாதமுனிகளும் அவ்விடத்தினின்று மீண்டு வீரநாராயணபுரத்தேசென்று அப்பிரபந்தங்களைத் தாம் பெற்றபடியை மன்னனரிடம் விண்ணப்பஞ்செய்தார். மன்னனரும் மிகத் திருவுள்ளமுவந்தருளி, 'சமுசாரிகளை நல்வழிப்படுத்த நாம் அவர்கட்கு அவயவங்களையும், சாஸ்திரங்களையும் கொடுத்தும் பயன்படாமையால், நாமேவந்து பிறந்தோம்; அதுவும் காரியகரமாகவில்லை. பின்பு, ஆழ்வார்களுடைய திவ்ய பிரபந்தத்தாலே திருந்தியது. இப்படிப்பட்ட பிரபந்தங்கள் மறைந்து கிடக்கவொண்ணா'தென்று வியந்து இந் நாதமுனிகளைக்கொண்டே இப்பிரபந்தங்களைப் பிரசுரஞ்செய்யவேண்டும் என்றுகருதி, 'நீர் இவற்றிற்கு இயலுமிசையுமமைக்க வேண்டும்' என்று அர்ச்சகர் முகமாய் நியமித்தருள, நம் நாதமுனிகளும் தம்முடைய மருமக்களான கீழையகத்தாழ்வாரையும், மேலையகத்தாழ்வாரையும் அழைத்து இச்செய்திகளையெல்லா முரைத்து, * "செஞ்சொலாலெடுத்த தெய்வநன்மாலை" யான இப்பிரபந்தத்தைத் திவ்யகானத்திற் பாட அவர்களையுங் கூட்டிக்கொண்டு, ஸ்ரீ வேதவியாஸபகவான் வேதங்களை வரையறுத்தாற்போல நம் நாதமுனிகளும் அவற்றைத் தக்க இராகங்களிலமைத்துப் பாடுவித்தருளினர். இஃது உலகெங்கும் பரவியது.

பிறகு, அந்நாட்டிற்கு அரசனான சோழனது அரண்மனை வாயிலில், கங்கைகொண்ட சோழபுரத்தினின்றும் தேவகானம் பாடுவாளொருத்தியும், மனுஷ்யகானம் பாடுவாளொருத்தியும் தங்களுள் விவாதப்பட்டு, அரச ஸமுகத்தில் அநேகவித்துவான்களைத் திரட்டிப்பாட, அதுகேட்ட அரசனும், மற்றை வித்துவான்களும் மனுஷ்யகானஞ் செய்வாளைக் கொண்டாடி, அவளுக்கே யானை முதலிய சிறப்புத்தந்து தேவகானம் பாடுபவளை அசட்டைசெய்தனர். அவளும், 'எனது பாட்டும், கானமும் தேவர்களறியத்தக்கனவேயன்றி எளிய மனிதர் அறிவாரோ' என்று தேவாலயங்கள்தோறும் பாடிக்கொண்டு அப்பால் மன்னனர்கோயிலிலே வந்து பாடினள். அதுகேட்ட நாதமுனிகளும்

* திருமொழி.



உள்ளமுவந்து அவளுக்கு மன்னனருடைய தீர்த்தம் முதலிய கொடுப்பித்துப் போற்றிவந்தார்.

அவளும், இவரைத் தண்டனிட்டு இவர்க்குச் செய்திதெரிவித்துப் பின், அரசனிடம் சென்று, 'நான்பாடும் தேவகானத்தை யறியவல்லார் ஒருவர் மன்னனர் கோயிலிலே இருக்கின்றார்' என்ன, அரசனும், நாதமுனிகளை அழைப்பிக்க அவரும், விருத்தாந்தம்யாவும் அறிந்தவராதலின், "திருவாய்மொழி முதலிய திவ்யப்பிரபந்தங்களைத் தேவகனத்தில் அமைத்துப் பாடினேம்; நாட்டார் இதன் சுவையறியார்; இதை நாம் அறிவிக்கவேண்டும்" என்று திருவுள்ளங்கொண்டு அரசனது அவைக்கண்வந்தார். அரசனும்எழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணிக் கைகழுவு நீர் முதலியதந்து சிங்காதனத்தில் வீற்றிருக்கச்செய்தான். அவரு மவ்வாறே வீற்றிருந்து அரசனை யாசிர்வதிக்கச் சோழனும் பேரவாவுடன் 'இவள்பாடும் தேவகானத்தைத் தேவரீர் அறிவீரோ?' என்று கேட்க, இவரும், மனுஷ்யகானம் தேவகானம் இரண்டையும் கேட்டருளி அரசனைநோக்கி, 'உமக்கு மனுஷ்யகானம் தெரியுமே யன்றித் தேவகானம் தெரியாது; அதனையறிவார் தேவர்களே' என்றார். அதுகேட்ட அரசன், 'நுமக்குத் தெரியுமென்பதை யாம் அறிவதெப்படி'? என்ன, நாதமுனிகள் நாற்பதுநூறு [நாலாயிரம்] தாளத்தைச்சேர வொற்றச்சொல்லி', 'இஃது இத்தனை எடை'; 'இஃது இத்தனை யெடை' என்றுகூற, அரசனும் அவற்றைத் தனித்தனியே நிறுத்துப்பார்க்க அவையனைத்தும் ஒரு முந்திரியளவும் எட்குறைவில்லாமலிருக்கக்கண்டு பெருவியப்படைந்து நாதமுனிகளுடைய திருவடிகளில்வணங்கி அவர்க்குப் பெரும்பொருள்களைக் கொடுத்தான். இவர் ஒன்றையும் சட்டைசெய்யாராதலின் அவற்றை வெறுத்து நீக்கி அரசனைப் போற்றி மீண்டுவந்தார்.

பின்பு, இவர் முன்போல மன்னனர்க்குக் கைங்கரியம்செய்து வரும்நாளில், இவரைச் சரணடைந்த சிஷ்யரான உய்யக்கொண்டார், குருகைக்காவலப்பன், நம்பி கருணாகரதாஸர், ஏறு திருவுடையார், திருக்கண்ண மங்கையாண்டான், வானமாதேவியாண்டான், உருப்பட்டூர் ஆச்சான் பிள்ளை, சோகத்தூராழ்வான் என்ற எண்மருக்கும் வைஷ்ணவக் கோட்பாட்டுநூல்கள் யாவற்றையும் உபகரித்துத் திருவாய்மொழி முதலிய திவ்யப்பிரபந்தங்களையுமுபதேசித்து வேதநூல்களையும் அறிவித்ததுமல்லாமல் எல்லா வுலகங்கட்குங் காரண பூதனான புருஷோத்தமன் இவன் என்ற தத்துவத்தையும் ஓதியருளித் தாம் * "கரியகோலத் திருவுரு" என்றபடி நீர்கொண்ட மேகம்போன்ற திருநிறமுடைய திருமாலையே தியானித்துக்கொண்டு யோகத்தில் வீற்றிருந்தார்.

* கண்ணிநுண் சிறுத்தாம்பு.

அதன்பின், சோழன் இவருடைய யோகவைபவங் கேட்டு, ஆங்குச் சென்று மன்னாரையும் சேவித்து இவர்யோகத்தே இருந்தபடியைக் கண்ணாரக்கண்டு மீள்கையில் நாதமுனிகளும், † "திருவுடைமன்னரைக் காணற்றிருமாலைக் கண்டேனே" என்றபடி அவ்வரசனைக் கிருஷ்ணனாகப் பாவித்து அவர்கள் பின்னே கங்கைகொண்ட சோழபுரத் தெழுந்தருளினார். இது கேட்ட உய்யக்கொண்டார்முதலோர் பின்தொடர்ந்து சென்று 'தேவரீர் இப்படிச்செய்யலாமோ'? என்ன, அவரும், 'அரசனைக் கிருஷ்ணனாகவே நினைத் துவந்தேன்' என்று மறுமொழிகூறி மீண்டுசென்றார். இங்ஙனம் சிலநாள் கழிந்தபின் மற்றொருமுறை அரசன்வந்து மன்னாரைச்சேவித்து மீண்டுபோகிறவன் தன் சாமந்தன் [சிற்றரசன்] தலையிலே அடிவைத்து யானைக்கழுத்திலேறக்கண்ட நாதமுனிகளும், திருமால் கருடன்மீது ஏறிச்செல்லும் திருக்கோலமுமிதுவாகும் என்றார் எனவுங் கூறுவதுண்டு. பின்னையும் சிறிதுகாலம் யோகத்தி லெழுந்தருளியிருந்து குருகைக்காவலனைப்பார்த்து நீர் யோகரகசியத்தைக் கற்றுக்கொள்ளும், என்று அஷ்டாங்கயோகத்தையும் அவர்க்கு அருளிச்செய்தார்.

(இன்னும்வரும்.)

தி. கோ. ஸ்ரீ ரங்காசாரியர்.

---

# மோகனாம்பாள்.

ஸீதாராமய்யர் ஞாயிற்றுக்கிழமை ஆபீஸில்லாத தினமாதலால் அன்றைத்தினம் செய்யலாமென்று சொல்ல சாஸ்திரிகளும் சரி என்று ஒப்புக்கொண்டு மற்றைப் பிராமணர்கள் யாவர்களை நியமனம்செய்வதென்று விவகரித்து விட்டுச் சற்று சும்மா இருந்தார்.

ஸீதாராமய்யர் அன்றைத்தினம் காலமே பத்திரிகை பார்த்ததில் கொஞ்சம் பாக்கியிருந்ததால் அதைப் பார்த்து விட்டு ஆபீஸுக்குப் போவதாய் நினைத்துப் பத்திரிகையை வாசிக்க ஆரம்பித்தார்.

"அந்த ட்ரான்ஸ்வால் சண்டை என்கிறார்களே, அதென்னாச்சய்யா" என்று கேட்டார் சாஸ்திரிகள்.

"ட்ரான்ஸ்வாலை இங்கிலீஷ்காரர்கள் சேர்த்துக்கொண்டு விட்டார்கள். அந்தப் போவர்கள் காடுகளுக்குள் போயிருக்கிறார்களாம்" என்றார் ஸீதாராமய்யர்.

---

† திருவாய்மொழி.



சாஸ்திரிகள் வெகுநாள்களாய் சண்டையைப் பற்றிப் பலர் பேசக் கேட்டவராயினும் ட்ரான்ஸ்வால் என்பது எவ்விடத்தில் உள்ள தென்று அறியாரானதால் அவ்விஷயத்தைப்பற்றி கொஞ்சம் ஸீதாராமய்யரை சொல்லும்படி கேட்டார்.

உடனே ஸீதாராமய்யர் சொன்னதாவது,—

"இந்த இந்தியாவுக்குத் தென் மேற்கிலும் மேற்கிலும் ஸமுத்திரத்தில் வெகு தூரம் போனால் ஆபிரிக்கா என்று ஒரு கண்டம் இருக்கிறது அதின் தென் பாகத்தின் மத்தியில் ட்ரான்ஸ்வால் என்பது ஒரு தேசம். அவ்விடத்தில் இங்கிலீஷ்க்காரர்களுக்கும் அந்த தேசத்தைக் குடியரசு நாடாக ஆண்டு வந்த போயர்களுக்கும் சண்டை".

"அமெரிக்கா என்று சொல்றேளே; அது எங்கே இருக்கு" என்றார் சாஸ்திரிகள்.

"அமெரிக்கா என்பது ஒரு பெரிய கண்டம். அது வட அமெரிக்கா தென் அமெரிக்கா என இரண்டு பெரிய பிரிவுகளையும், நடு அமெரிக்கா, மெக்ஸிகோ என இரண்டு சிறு பிரிவுகளையும் உடையது வட அமெரிக்காவின் வட பாகமாகிய கனடா என்பது ஆங்கிலேயர் ஆளுகைக்குள்ளும், யுனைடெட் ஸ்டேட்ஸ் என்ற கூட்டு சமஸ்தானங்கள் குடியரசு நாடாகவும், ஆளப்பட்டு வருகின்றன. தென் அமெரிக்காவின் பல பிரிவுகள் குடியரசு நாடுகளாகவேயிருக்கின்றன. மெக்ஸிகோ முன் ஸ்பெயின் தேசத்தார்களிடத்திருந்து இப்பொழுது குடியரசு நாடாக இருக்கிறது." என ஸீதாராமய்யர் உத்தரம் செய்து கொண்டிருக்கும் இடையில், சாஸ்திரிகள் "அடேயப்பா, வெகு ராஜ்யங்கள் இருக்கிறாப்போலே இருக்கே" என அதிசயித்தார்.

"அந்த அமெரிக்காவுக்குப் போக வேணுமானால் இரண்டு மார்க்கங்கள் உண்டு; கிழக்கு வழியாய்ப் போனால் அமெரிக்காவின் மேல் கரையை அடையலாம். மேற்கே போனால் அதின் கிழ்கரையை அடையலாம்" என்று ஸீதாராமய்யர் சொன்னவுடன் சாஸ்திரிகளுக்கு மிக கலக்கம் உண்டாய் விட்டது. ஏனெனில் கிழக்கேயும் போகலாம் மேற்கேயும் போகலாமென்றது விரோதாபாஸமாகத் தோற்றியது. ஆனது பற்றி இது எவ்வாறென்று மறுபடியும் சாஸ்திரிகள் கேட்டார்.

உடனே ஸீதாராமய்யர் "அய்யா சாஸ்திரிகளே, இந்தப் பூமியானது ஒரு கிச்சிலிப்பழத்தைப் போல உருண்டையாக இருக்கிறது. ஒரு கிச்சிலிப் பழத்தைச் சுற்றி ஒரு எறும்பானது ஊர்ந்தால் அதற்கு நேரெதிரில் உள்ள ஒரு இடத்திற்குப் பல வழிகளாய்ப் போகலாமல்லவா? அது போலத் தான் நாம் கிழக்கிற் போனாலும் மேற்கிற் போனாலும் அமெரிக்காவுக்குப் போகிறோம். ஏனெனில், நாம் இருக்கும் இடத்தில் பூமியை ஒரு தூக்குண்டைக்கு நேராக குடையும் பக்ஷத்தில் தென்னமெரிக்காவில் பெரு வென்ற ஒரு தேசத்

திற்குப் போய்ச் சேருவோம். பெருவிலுள்ளோர்களை இந்தக் காரணம் பற்றிச் சென்னை வாசிகளுக்கு 'அண்டிபோடீஸ்' அதாவது எதிர்ப்பாதர்கள் என ஆங்கிலேயர்கள் சொல்லுவார்கள். பெருவிலுள்ளோர்களும் சென்னையோர்களும் மேற் கூறியபடி குடைந்த வழியே பூமியின் மத்திவரையில் இறங்குவாராயின் இருவர் பாதங்களும் தொட்டுக் கொள்ளும்" என்று சொல்லி முடித்தார்.

"ஆனால் அவர்கள் தலை கீழாகவா நிற்கிறார்கள்" என்று திகைத்தார் சாஸ்திரிகள்.

"இல்லை, இல்லை, அங்கும் அவர்கள் பாதங்கள் பூமியைத் தொட்டுக் கொண்டு தானே இருக்கின்றன அவர்களுக்கு அவ்விடத்தில் அது தான் சரியான நிலைமை. இவ்விடத்திலிருந்து பார்ப்பதற்கு அது தலை கீழாக இருப்பது போல் இருக்கும்" என்று ஸீதாராமய்யர் சொல்வதை சாஸ்திரிகளுக்கு நம்பவு முடியவில்லை நம்பாமலு மிருக்க முடியவில்லை.

"ஆனால் அவர்கள் கீழே விழுந்து விடமாட்டார்களோ" என்று சாஸ்திரிகள் கொஞ்சம் யோசித்துக் கேட்டார்:

இவ்விதம் கேட்ட கேசவ வாத்தியாரைப் பார்த்துக் கொஞ்சம் புன்னகையடைந்த ஸீதாராமய்யர் "அய்யா, அவர்கள் பாதம் எப்பொழுது பூமியைத் தொட்டுக் கொண்டிருக்கிற தென்று சொன்னேனோ அப்பொழுது அவர்களுக்குக்கீழே ஆதாரம் ஏற்படவில்லையா? நம்முடைய தலையை நம்முடைய இடைக்கு மேல், இருக்கிற தென்று எதனால் சொல்லுகிறோம்; பூமியிலிருந்து எது அதிக தூரத்திலிருக்கிறதோ அதை மேல் என்று சொல்லுகிறோமல்லவா? நாம் எவ்விடத்திற்குப் போனாலும் இந்த சம்மந்தங்கள் மாறுமா? நாம் அங்கே போய்ப் பார்த்தால் நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமு மில்லை" என்று சாஸ்திரிகளின் அறிவின்மைக் கேற்றபடி அவர் தெளிவாய் அறியும் வண்ணம் போதித்தார். ஆயினும் இவருக்குள்ள சந்தேகங்களோ அளவற்றனவாயின.

ஆகையால் "அய்யா இந்த உதயகிரி, அஸ்தகிரி இவைகளைத் தாண்டி விட்டால் பிறகு சூரியனேது. சூரியஸ்மரணை இல்லாமல் அவர்கள் எப்படி ஜீவிக்கிறார்கள்" என்றார்.

அதற்கு ஸீதாராமய்யர் "இந்தப் பூமியானது இருபத்து நாலு மணிக்கொருதரம் தன்னைத் தானே சுற்றுகிறது. பனிரெண்டு மணி நேரம் நாமும் நம்மோடு பூமியின் கீழ் பாதியில் இருப்போர்களும் சூரியனுக் கெதிரே இருக்கிறார்கள். அதாவது நமக்குப் பகல். பிறகு மேற்பாகத்துள்ளவர்களுக்குப் பகல் அப்பொழுது நமக்கு இரவு. இப்படியாகப் பூமியிலுள்ள யாவருக்கும் இரவு முண்டு பகலு முண்டு." என்று சொல்லவும் புரோஹிதருக்கு இன்னும் பற்பல சந்தேகங்கள் உண்டாய் விட்டன. இதைக் குறிப்பால் அறிந்த ஸீதாராமய்யர் தான் வீட்டிற்கு வந்து வெகு நேரம் ஆய்விட்டபடி



யால் இந்த விவகாரத்தைப் பற்றிப் பேசப் பேச விரிதலின்றி ஓய்வுக்கு இடமில்லாமையின் பிறகு ஸாவகாசமாய்ப் பேசுவோமென்று கேசவ உபாத்தியாயரை யனுப்பி விட்டு ஆபீஸுக்குச் சென்றார்.

## நான்காம் அத்தியாயம்.

லீலாவதியின் புருஷர் பத்மனபய்யர் எனப் பெயர் பெற்று இச்சென்னை மாநகரின்கண் மனு நீதிவழுவாது நியாய விசாரணைக்கு முடி விடமாயுள்ள ஹைகோர்ட்டில் வக்கிலாக சில வருஷங்களாய் நியமனம் செய்யப்பட்டு அத்தொழிலைப் பூண்டு வருகின்றனர்.

(இன்னும் வரும்.)

ஆர். ஸி. கிருஷ்ணசாமி.

# இலட்சுமணசிங்கின் வீரச்செய்கை.

## பார்வதீபுரத்தில் நடந்த அபவாதத்தின் துணிகரம்.

இலட்சுமணசிங்கு அவளை "ஸ்திரீ" யென்றே சொல்வது வழக்கம். அவன் அவளை வேறு பெயரிட்டழைக்க நான் ஒருநாளும் கேட்டதில்லை. அவள் பெண்களுக்கெல்லாம் மேம்பட்டவளாக அவன் கண்ணுக்குத் தோன்றுகிறாள். அவன் அவ்வாறு இருப்பது "அலமேலு" வினிடத்துள்ள காமத்தினாலாவது ஆசையினாலாவது அன்று. சுகதுக்கங்களை இலட்சியம் செய்யாமல் சிறிதும் மனோவிகாரமில்லாது தராசுபோல நடுவு நிலைமையிலுள்ள அவன் மனதில் காமம் எவ்வாறு உண்டாகும். இந்த உலகம் இதுவரையிலும் காணாத மகாயூகமுள்ள நல்ல (இயந்திரம்) மெஷினென்றே அவனைச் சொல்ல வேண்டும். பிரிய நாயகனாகவோ அவன் ஒருநாளும் உதவான். இகழ்ச்சியும் ஏளனமுந் தவிர வேறு மென்மை உணர்ச்சிகளைப் பற்றி அவன் சிறிதும் பேசுவதில்லை. அவ்வுணர்ச்சிகள் எவனுக்கிருப்பினும் அவன் எண்ணத்தையும் செய்கையையும் எளிதிலறியலாமன்றோ? தார்க்கிகத்தில் மிகப் பழகித் தேறி மிக நுட்பத்தையுடைய அவன் குணத்துக்கு இவ்வுணர்ச்சி யுண்டாவது அவன் மனதினால் களங்கமில்லாமல் யூகிப்பதற்கு ஒருதடையேயாகும். அவன் ஆயுதங்கள் சிறிது தேய்ந்தாலும் அவன் கண்ணாடி சிறிது உடைந்தாலும் அவன் குணத்துக்கு மனக்கலக்கத்தினாலுண்டாகு மவ்வளவு தொந்தரவில்லை. என்றாலும் அலமேலு என்னும் ஒரு ஸ்திரீயைமாத்திரம் அவன் ஒரு போதும் மறவான்.

சிலநாளாக நான் இலட்சுமணசிங்கைப் பார்க்க அவகாசப்படவில்லை. என் கல்லியாணத்துக்குப் பிறகு நாங்கள் பிரிந்து விட்டோம். விவாகமாய்

புதுக்குடித்தனம் வைத்து சம்சாரத்திலிருப்பவனுக்கு முதலிலிருக்கும் கவலையாலும் பரிபூர்ணானந்தத்தாலும் எனக்கு சிறிதும் ஓய்வில்லை. ஆனால் சங்கமென்பதில் சிறிதும் விருப்பில்லாத இலட்சுமணசிங்கோ தன் பழைய புத்தகங்களை கதியாய்ச் சுருட்டு குடித்து அம்மயக்கத்தால் சிறிது உறங்குவதும் தன் இயற்கையான விசேஷ ஊக்கத்தால் பிரக்கியாதியடைய வேண்டுமென்னும்பேராசையோடும் நாங்கள்முன்னிருந்த ரொட்டிக்கிடங்குத்தெருவிலேயேயிருந்தான். குற்றங்களவுகளை ஆழ்ந்து நோக்குவதிலும் தன் அளவற்ற சக்தியால் அவைகளைக் கண்டு பிடிக்க வழிதேடுவதிலும் போலீசுகாரரும் இனி தங்களால் முடியாது என்றெண்ணிக்கைசோரவிட்ட அநேககேசு(விஷயங்)களை ஆராய்ந்து உண்மையை யறிவதிலும் இன்னமும் அவனுக்குப் பிரியம். மஹாந்து கொலைக்கேசுக்காக அவன் திருப்பதி போனதும், சிவஞானபிள்ளையின் முடிவை விவரமாய் வெளிப்படுத்தினதும், அநந்தசயனம் மஹாராஜாவுக்காக இவன் போன தூதில் காரியத்தைக் குறைவின்றி முடித்துவந்ததும் என் காதுக்கு அப்போதப்போ தெட்டிக்கொண்டிருந்தன. பத்திரிகைகளைப் படிக்கும் மற்றவர்களைப் போல இந்த சங்கதி மாத்திரம் எனக்குத்தெரியுமே யொழிய என் தோழனைப் பற்றி வேறொன்றும் எனக்குத் தெரியாது.

சர்வஜித்து௵ பங்குனி௴ 2-ஆம் ௳ ஒருநாள் இராத்திரி ஒரு நோயாளியின் வீட்டுக்குப்போய் வைத்தியம்செய்து திரும்புகையில் ரொட்டிகிடங்கு வீதிவழியாய் வந்தேன். நான் முன்னிருந்த வீட்டின் கதவைப்பார்த்ததும், இப்போது நான் களிப்போடு விவாகம்செய்து கொண்டிருக்கும் ஸ்திரீயை முதலில் சந்தித்தது முதலாகிய பழைய ஞாபகம் எனக்கு வந்துவிட்டது. உடனே இலட்சுமணசிங்கைப் பார்க்க வேண்டுமென்னும் ஆவலினால் தூண்டப்பட்டவனாய் உள்ளே நுழைந்தேன். அறையில் விளக்கு வெகு பிரகாசமாய் எரிந்து கொண்டிருந்தது. நான் பார்க்கும்போதே படுதாவின் மறைவில் உயர்ந்த வடிவுடைய அவன் உருவத்தைக் கண்டேன். அவனோ தன் இருகையையும் கோர்த்துப் பின்னால் கட்டிக்கொண்டு தன் தலையை மார்பின்மேல்தொங்கவிட்டுக்கொண்டு அவ்வறையில் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கம் மிக்க ஆவலோடும் வேகமாயும் உலாவுவதைக் கண்டேன். அவன் குணமும் நடக்கையும் அறிந்தவனாதலால் அவன் அவ்வாறு உலாவுவதின் காரண மறிந்தேன். மறுபடியும் ஏதோ ஒரு கேசைப்பற்றி மனதில் ஊகிக்கின்றான் போலும். அவன் புகைக்குடியினின்றும் புதுமோப்பம் ஏதோ கண்டு பிடித்தாப் போல திடீரென்றெழுந்தான். நானும் வெளியிலிருந்த மணியை யடித்தேன். அவனிருந்த அறைக்குக் கொண்டு போய் விட்டார்கள்.

என்னைக்கண்டதும் அவன் என்னை உபசரித்தழைக்கவில்லை. அவ்வாறு செய்வதும் ஒருபோதும் அவன் வழக்கமன்று. ஆனால் என் வரவினால் அவன் களிப்படைந்ததாக எனக்குத் தோன்றிற்று. சிறிதும் வாயைத்திறவாமல்



ப்ரியமான கண்பார்வையால் என்னை நாற்காலியில் உட்காரச்சொல்லிச் சைகைசெய்து தான் குடித்துக்கொண்டிருந்த சுருட்டை அப்பாலெறிந்துவிட்டு நேரே நின்றுகொண்டு அவன் வழக்கம்போல் உள்நோக்கால் என்னை உற்றுநோக்கினன்.

'ஹே ராம்கோபால், இந்த விவாகம் உன்மனதுக்குப் பிடித்தது தானே? நான் பார்த்ததற்கு அப்புறம் 110 ரூபாய் சம்பாதித்துவிட்டாயே' என்று என்னைப் பார்த்துசொன்னான்.

'100 ரூபாய்தான்' என்று நானும் பதில் மொழிந்தேன்.

'மெய்யா? நான் ஜாஸ்தியிருக்குமென் றெண்ணியிருந்தேனே! நல்லது, உனக்கு வைத்தியம் ரொம்ப இருக்காப்போலிருக்கு, 'இவ்வளவு அதிகமாய் வைத்துக்கொள்வேன்' என்று நீ என்னுடன் சொல்லவில்லையே'.

" அப்படியானால் உனக் கெப்படி தெரியும்?'

'நான்பார்க்கிறேன், எனக்குத் தெரிகிறது. இல்லாவிட்டால் இப்போ 2-3-நாளைக்கு முன்னேதான் நீ ரொம்ப நனைந்திருக்கிறாயென்றும் உன் வேலைக்காரி அநுபோக மில்லாதவ ளென்றும் வேலையில் கருத்தில்லாதவ ளென்றும் எனக் கெப்படி தெரியும்"?

'இலட்சுமண சிங்கு, ஆனாலும் இது அதிசயமாயிருக்கிறது. இன்னம் இரண்டு தலைமுறைக்குமுன் நீ பிறந்திருந்தையோ, உன்னைக் கொளுத்தியே யிருப்பார்கள். நேற்று வியாழக்கிழமை நான் நாட்டுப்புறத்துக்கு சேற்றில்போனது வாஸ்தவந்தான். ஆனால் என் துணிகளையெல்லாம் மாற்றிவிட்டேனே, நீ எப்படி அறிந்துகொண்டாயோ எனக்குத் தோன்றவில்லை. என் வேலைக்காரியோ சொன்னாலும் தெரிந்துகொள்பவ ளல்லள். அவளை வீட்டைவிட்டுப் போகும்படி நோட்டீசும் கொடுத்தாய்விட்டது. இதையும் நீ எவ்வாறு அறிந்துகொண்டாயோ அறிகிலேன்' என்றேன். அவனும் கைகொட்டிக் கொக்கரித்தான்.

"இது ரொம்ப சுலபம், உனது இடதுகால் சோட்டின் உள்பக்கத்தில் வெளிச்சம்படும் இடத்தில், தோலில் ஆறு ஏழுகோடுகள் நெருக்கு நேராயிருப்பதாகக் கண்டேன். அங்கு அடைந்திருந்த மண்ணை விலக்க முயலுகையில் யாரோ அஜாக்கிரதையால் பாதத்தின் ஓரத்தில் கீற்று உண்டாக்கினதாக உடனே எனக்குத் தோன்றிற்று. இதனால் நீ காற்றுமழையில் நனைந்து வந்தாயென்றும் உன் வேலைக்காரி அஜாக்கிரதை மனுஷியென்று மறிந்தேன். மேலும் நீ என் அறைக்கு வரும்போதே மருந்துவாசனை வீசவும், உன் வலக் கைப் பெருவிரலில் காடிக்காரத்தின் (Nitrate of silver) கருநிற மறையவும், சுவாசாசயஸ்திதி யுணர்த்துங்கருவி வைத்ததினால் தலைப்பாகையின் மேல்பக்கத்தில் தடித்திருக்கவுமா யுள்ளதைப்பார்த்து உனக்கு வைத்தியவேலை இப்போ அதிகமென்று நான் கூறாவிட்டால் என்னை மடையனென்றல்லவோ சொல்லவேண்டும்' என்று அவன் மொழிந்தான்.

தான் அறிந்தவித்தை மிக எளிதாக அவன் எடுத்துக்காட்டினதும் எனக்குண்டான சிரிப்பை யடக்கமுடியவில்லை. "நீ காரணங்களைக் கூறுவதை நோக்கின் நான் அம்மாதிரி சொல்லக்கூடும்போல் வெகு சுலபமாகத் தோன்றுகிறது. என்றாலும் நானே சொல்ல முயலின், நீ எனக்கு விவரித்துச் சொல்வதற்குமுன் தோன்றவில்லையே, என் கண்ணைப்போல தானே உன் கண்ணும் இருக்கிறது' என்றேன்.

அவனும் ஒரு சுருட்டைப் பற்றவைத்துக்கொண்டு நாற்காலிமேல் சாய்ந்துகொண்டே "வாஸ்தவந்தான், நீ பார்க்கிறாய், ஆனால் நிதானிப்பதில்லை. வித்தியாசம் நன்றாய்த் தெரியவில்லையா? வேண்டுமானால், கூடத்திலிருந்து (Hall) இந்த உள்ளுக்குவரும் படிக்கட்டுகளைப் பலதரம் பார்த்திருக்கிறாயல்லவா?" என்று கேட்டான்.

"அநேகந்தடவை" என்றேன்.

"எத்தனைதரம்?"

"சரி, நூற்றுக்கணக்காயிருக்கும்?"

"அப்படியானால் மொத்தம் எத்தனைபடிக்கட்டுகள்?"

"எத்தனையா? எனக்குத் தெரியாது."

"அதுதான். நீ நிதானிக்கவில்லை. ஆனால் பார்த்திருக்கிறாய். அதுதான் நான்செய்வது. 17 படிகள் இருக்கின்றனவென்று எனக்குத் தெரியும். ஏனெனில் நான் பார்த்துமிருக்கிறேன், நிதானித்துமிருக்கிறேன். இந்த பிரச்னைகளில் உனக்குப் பிரியமிருந்தபோதிலும் அவைகளில் எனது அனுபவத்தை நீ எழுதிவைப்பதாலும் இதிலேயும் உனக்குப் பிரியமிருக்கும்' என்று சொல்லி மேசையின் மேலிருந்த ஒரு தாமிரவர்ணக்கடிதாசியை எறிந்தார். அந்தக் கடிதாசியில் விலாசமுமில்லை. எழுதினவர் கையெழுத்துமில்லை. தேதியுமில்லை.

'ஒரு விசேஷகாரியத்துக்காக உன்னோடு யோசிக்கவேண்டி இன்றிரவு 7¾-மணிக்கு ஒரு பிரபு உன்னிடம் வருவார். நீ மேல்நாட்டு ராஜாவம்சங்களுக்காக நடத்தினகாரியங்களை யோசித்தால் எவ்வித பிரமாதமான காரியமாயிருந்தாலும் உன்னை நம்பலாம். உனது இச்சரித்திரத்தை நாம் நாலாபக்கங்களிலிருந்தும் கேட்டோம். அந்த வேளையில் உமது வீட்டிலேயேயிரும். உம்மைப் பார்ப்பவர் மாறுவேஷம் பூண்டிருந்தால் அதனால் குற்றமாய் நினையாதேயும்.'

"இது பரமரகசியமாயிருக்கிறது. இதைப்பற்றி உனக்கென்ன தோன்றுகிறது' என்று நான் கேட்டேன்.

'எனக்கு இன்னம் ஒன்றும் ஏற்படவில்லை. ஒன்றுந் தெரியாமல் கற்பனை செய்வது தப்பு. அவ்வாறு செய்தால் தெரிந்த சங்கதிகளைக்கொண்டு ஊகிப்பதற்குப் பதிலாகச் சமாசாரங்களைத் தமது கற்பனைக்குத் தக்கபடி மாறுபாடாக்க வேண்டிவரும். ஆனால் கடிதம் ஒன்று இருக்கிறதே! அதினின்று என்ன அறியலாம்?'



எழுத்தையும் அது எழுதியிருந்த கடிதத்தையும் நன்றாய் ஆராய்ந்து பார்த்தேன்.

'இந்தக் கடிதம் எழுதினவன் மிகுந்த செல்வவானாயிருக்கவேண்டும். ஒரு குயர் (24 கடிதாசி) 2½ ரூபாய்க்குக் குறைந்து இம்மாதிரி நோட் பேபர் அகப்படாது. இது விசேஷ உறுதியாயும் சுலபத்தில் கிழியாததாயுமிருக்கிறது' என்று கூறி, என் தோழன் மாதிரி ஊகித்துச்சொல்ல எத்தனித்தேன்.

"விசேஷம்—அது ஞாபகமிருக்கட்டும், அது நமது தேசத்திலுண்டான நோட்பேபரல்ல. வெளிச்சத்தில்பார்'.

நான் அவ்வாறே வெளிச்சத்தில் பார்த்ததும் "ஸ"என்னும் பெரிய எழுத்தோடு 'ம்'என்னும் ஒரு சிறு எழுத்தும், 'ப'என்னும் வேறொரு எழுத்தும் 'நா' என்னும் எழுத்து பெரியதாய் அதோடு 'பு' என்னும் எழுத்து சிறியதாகவும் அமைந்து கடிதாசியோடு கடிதாசியாய் நெய்யப்பட்டிருந்தது.

'அதனால் நீ என்ன அறிகிறாய்?' என்று இலட்சுமணசிங்கு கேட்டான்.

'கடிதாசி செய்கிறவன் பெயராகவாவது அல்லது அவன் (மார்ச்) குறியாகவாவது இருக்கவேண்டும்' என்றேன்.

'இரண்டுமன்று. 'ஸ' என்னும் எழுத்துடன் 'ம' பர்வத பாஷையில் கூட்டம் என்று பொருள்கொள்ளும் 'ஸங்கத்'துக்காக நிற்கிறது. 'ப'என்னும் எழுத்து பத்திரிகை அல்லது கடிதாசிக்காக நிற்கிறது. நா + பு. இனி அயல்நாட்டு அகராதி கெஜெட்டை எடுத்துப் பார்ப்போம்; "நாரணவனம, இதோ நாராயணபுரி. இது பர்வத ராஜ்ஜியத்தில் பத்மநாபபுரத்துக்குச் சமீபத்திலுள்ளது. இந்த கண்ணாடி வேலைகளும் கடிதாசி யந்திரங்களும் விசேஷம். வித்தியாரண்ணிய சுவாமிகள் மரித்த இடம்'. ஆ! ஆ!! என்ன அய்யன்'என்று சொல்லிக்கொண்டே அவன் கண் சிவக்கவும் புகைச்சுருட்டைக் குடித்து குதூகலத்தொடு புகையை வெளியில் விட்டான்.

"காகிதம் பார்வதிபுரத்தில் செய்தது" என்றேன்.

அப்படிதான். அந்தக்காகிதம் எழுதினவனும் பர்வதபாஷைபேசுபவனே. அவன் வாக்கியத்தின் இலக்கணநடையைப்பாரும். 'உனது இச்சரித்திரத்தை நாம் நாலாபக்கங்களிலிருந்தும் கேட்டோம்'. பர்வதநாட்டான் தவிர வேறுயாரும் இந்தமாதிரி எழுதார்கள். பகிரங்கமாய் வரப்பிரியப்படாது பொய்க்கோலம் பூண்டுவரும் இந்தப் பர்வதநாட்டானுக்கு என்னவேண்டுமோ ஊகிப்போம். நமதுசந்தேகத்தைத்தீர்க்க இதோ அவனும் வந்து விட்டான்".

அவன் அவ்வாறு பேசிக்கொண்டிருக்கையிலேயே குதிரைகளின் குளம்புச் சப்தமும் சக்கிரங்கள் உராயும் சப்தமும் மணிச்சப்தமும் கேட்டன. இலட்சுமணசிங்கும் சங்கேதம் செய்தான். "தொனியால் இரட்டைக்குதிரை வண்டியென்று தெரிகிறது". பிறகு ஜன்னல்வழியாய் வெளியில் எட்டிப்பார்

த்து, 'நல்ல குதிரைகள்; ஒவ்வொன்றும 2,500 ரூபாய் தானும். இந்தப்பெட்டியில் கண்டிப்பாய்ப் பணம் இருக்கிறது' என்று சொன்னேன்.

"நான் அப்புறம் போவது நல்லது" என்றேன்.

'வைத்தியரே! கூடாது, இருக்கிற இடத்திலேயே இரும். நீர் இல்லாவிட்டால் எனக்குச்சரிப்படாது. இது ரொம்பவிநோதமாயிருக்கும்போலிருக்கிறது, ஆகையால் நீர் அவசியம் இருக்கவேண்டும்."

"ஆனால் உன் கட்சிக்காரன் —"

"அவனைப்பற்றி என்ன? உன் உதவி எனக்கு வேண்டியிருக்கிறது, இதோ அவனும் வருகிறான்; அந்த நாற்காலியில் உட்காரும்; வைத்தியரே, சற்றுக்கவனமாயிரும்.'

படிக்கட்டிலும் வழியிலும் கேட்ட காலடிச்சப்தமும் கதவுவரையிலும் வந்துநின்றது, உடனே உரத்துக் கம்பீரமான தட்டல் கேட்டது.

பீமசேனன்போல் கை கால்கள் உருண்டு திரண்டு விரிந்தமார்பும் ஆறு அடிக்கு அதிகப்பட்ட உயரமுமுள்ள ஒருவர் உள்ளேநுழைந்தார். அவர் உடைகளோ அதிகவிலையுயர்ந்தனவாயும் சாதுக்கள் அருவருக்கும்படி அவ்வளவு ஆடம்பரமானவையாயுமிருந்தன. அவர் போட்டிருந்த உடைக்குவெளியில் குறுக்காகப் பட்டுக்கச்சை கட்டியிருந்தது; அவர் இடுப்பினின்றும் உயர்ந்த கற்கள் தங்கத்தில் பதிந்து பட்டாவில் தொங்கவிட்டிருந்தது. முழங்கால்வரையிலும் அவர் தரித்திருந்த பூட்சின் தலைப்பக்கம் கத்தரிக்கப்பட்டுப் பட்டுகுச்சு தொங்கியிருந்ததைநோக்கின் காடுமனுஷன் செய்து கொள்ளும் டம்பவேஷத்தையொத்திருந்தது. உயர்ந்த சரிகைகளுள்ள தலைப்பாகையை சிரசில் தரித்திருந்தார். மேல்முகம்வெளியில் தெரியாதபடி கன்னம்வரையில்பொய்வேஷத்தால் மறைத்திருந்தார். முகத்தின் அடிப்பக்கத்தை நோக்கின் திடமுள்ளவராகவும், தடித்துத்தொங்கிய உதட்டையும் நேராய்நீண்ட மோவாய்க்கட்டையையும் நோக்கின் பிடிவாதமான மனவுறுதியுள்ளவராகவும் தோன்றிற்று.

'என்கடிதம்வரவில்லை? நான் வருவேனென்று எழுதியிருந்தேனே!' என்று கனத்தகுரலுடன் கேட்டார். எங்களில் தான் நாடிவந்தவர் யாரென்று திரும்பித் திரும்பிப் பார்த்தார்.

உடனே இலட்சுமணசிங்கும் "ஐயா, உட்காரும், இவர் என் தோழர், வைத்தியர், என்னிடத்தில்வரும் கேசுகளில் எனக்கு உதவிசெய்வார். தங்கள் நாமதேயம் என்ன" என்று கேட்டான்.

"என்னை 'லாட் நாராயணதாசு' என்றழையும்." 'உம்முடைய தோழராகிய இவரும் கண்ணியஸ்தர் தானே, பிரமாதமான காரியங்களிலும் அவரை நம்பலாமன்றோ! அல்லாவிடின் உம்மோடு தனிமையாய்ப் பேசுவதில் தான் எனக்குப் பிரியம்'.



உடனே நான் வெளியில்செல்ல எழுந்தேன். சிங்கோ என் கையைப் பிடித்து மறுபடியும் நாற்காலியில் உட்காரவைத்து 'நாங்கள் இருவரும் இருக்கவேண்டும், இல்லாவிடில் ஒருவரும் கூடாது. என்னோடு சொல்லும் எந்த சங்கதியும் இவர் முன்னிலையில் சொல்லலாம்' என்று மொழிந்தார்.

வந்தவரும் தோளைக் குலுக்கி, 'அப்படியானால் இரண்டு வருஷம் வரையில் நான் சொல்லும் சங்கதியை இரகசியமாய் வைத்திருப்பதாக உங்களிடத்தில் உறுதிமொழி வாங்கிக்கொண்டு சொல்லவேண்டியதுதான். அப்புறம் தெரிந்தால் அவசியமில்லை. இப்போது ராஜ்ஜியங்களுக்கே விபத்துவரக்கூடிய அவ்வளவு பிரமாதமானது' என்றார்.

'நான் வாக்களிக்கிறேன்' என்றார் சிங்கும்.

'நானும்' என்றேன்.

வந்தவரும் 'நான் இம்மாதிரி வேஷம் மாறுதலாயிருப்பதற்காக மன்னிக்கவேண்டும். என்னை அனுப்பிய கனவான் தன் மனிதனை ஒருவரும் அறியக்கூடாது என்று பிரியப்படுகிறார். நான் தங்களுக்குச் சொன்னபெயர் எனது உண்மையான பெயரல்ல' என்று சொன்னார்.

'எனக்கு முன்னமேயே தெரியும்' என்று உடனே மொழிந்தான் சிங்கும்.

'நான் சொல்லப்போகும் சங்கதிகள் விசேஷமானது. ஆகையால் அதிக எச்சரிக்கையோடு இருக்கவேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் ராஜாவுக்கு அபவாதம் உண்டாகும். நான் சொல்லும் சங்கதி பார்வதி நாட்டின் அரசனாகிய பர்வதகேசன் சம்மந்தப்பட்டது.

'அதுவும் எனக்கு முன்னமேயே தெரியும்' என்று நாற்காலியில் சாய்ந்து கண்ணைமூடிக்கொண்டே மெதுவாக சிங்கும் சொன்னான்.

வந்தவரும் "அதிக வேலையுள்ளவனென்றும் கெட்டிக்காரனென்றும் தான்கேள்விப்பட்ட ஒருவன் தளர்ந்த உருவமாய் ஊக்கமற்றிருப்பதுபோல் தோன்றுவதைக்கண்டு ஆச்சரியங்கொண்டான். இலட்சுமணசிங்கும் மெதுவாகக் கண்திறந்து ராக்ஷஸாகாரமாய்த் தன் எதிரில் நிற்பவனை ஆத்திரத்தோடுபார்த்து,

'மஹாராஜா அவர்கள் தயைபுரிந்து சங்கதி இன்னதென்று சொன்னால் நான் யோசனை சொல்லமுடியும்' என்று மொழிந்தான்.

அவரும் திடீரென்று நாற்காலியை விட்டெழும்பி தன்னால் அடக்கமுடியாத மனக்கலக்கத்தோடு அவ்வறையிலேயே அங்குமிங்கும் அலைந்தான். பிறகு நம்பிக்கையொழிந்து மனமுறிந்தவனாய்த் தன் முகத்தை மூடியிருந்த பொய் உடையைக் கிழித்து பூமியின்மேல் விட்டெறிந்தார். 'நீ சொல்வது வாஸ்தவமே, நான் ராஜா தான்; அதை நான் ஏன் ஒளிக்கவேண்டும்' என்று அலறினார்.

'அது ஏன் அப்படி? என்முன் நிற்பவர் பழைய ராஜவம்சத்தில் பிறந்த பர்வதகேச ராஜனென்று நான் அறிந்த பிற்பாடல்லவோ தாங்கள் என்னுடன் பேசினீர்கள்'.

எங்களைக் காணவந்தவரும் மறுபடியும் உட்கார்ந்துத் தன் கையைத் தலைமேல் வைத்துக்கொண்டு சாதாரணமாய் இப்படிப்பட்ட காரியங்களை நானே செய்வது வழக்கமன்று என்று உங்களுக்குந் தெரிந்திருக்கும். என்றாலும் வேறு எவன் மூலமாய் நான் சொல்லியனுப்பி வித்தாலும் அவன் கட்டுக்குள்ளாவே னாதலால் நானே துணிந்துவந்தேன். பார்வதீபுரத்திலிருந்து உம்மோடு ஆலோசிப்பதற்காகவே மாறு வேஷத்துடன் வந்தேன்" என்று சொன்னார்.

சிங்கும், மறுபடியும் கண்ணை மூடிக்கொண்டு, "அப்படியானால் சொல்லும்" என்றார்.

"நடந்த சங்கதி இது. சுமார் 5-வருஷங்களுக்கு முன்னால் நான் பத்மநாமபுரம் போயிருந்தபோது பேர்போன அலமேலு என்பவளைக் கண்டேன். உமக்கும் அப்பெயர் தெரிந்திருக்குமே".

சிங்கும் "வைத்தியரே, தயவுசெய்து என் அகராதியை எடுத்தப்பாரும்' என்று கண்ணை மூடிக்கொண்டே சொன்னான். பல வருஷங்களாக ஒவ்வொரு மனிதனைப் பற்றியும் வஸ்துவைப்பற்றியும் பெரிய புத்தகம் எழுதி அதற்கு அகராதி அட்டவணையும் சிங்கு வைத்திருந்தான். ஆகையால் அவனுக்குத் தெரியாத மனிதனாவது விஷயமாவது இராது.

'இரு, நான் பார்க்கிறேன். சுக்ல வருஷத்தில் அமராபுரியில் பிறந்தாள். பத்மநாபபுரத்தில் கூத்தாடிகளுடன் சேர்ந்து ஆடிக்கொண்டிருந்தாள். பிறகு ஆட்டக்காரனை விட்டு விட்டாள். இப்போது சென்னையில் வசிக்கிறாள். மஹாராஜா அவர்கள் அவளோடு கலந்திருந்து ஆசைக் கடிதங்கள் எழுதினதாகவும் அக்கடிதங்களைத் திருப்பி தம் வசப்படுத்த முயற்சிப்பதாகவும் எனக்குத் தெரிகிறது' என்றான் சிங்கும்.

"அதே மாதிரிதான், ஆனால் எப்படி—"

"ஏதாவது இரகசியமான விவாகம் நடந்ததா"?

"ஒன்றுமில்லை".

"ஏதாவது நியாய சம்பந்தமான கடிதங்களாவது ஸர்டிபிகெட்டுகளாவது உண்டா?"

"ஒன்றுமில்லை."

அப்படியானால் மஹாராஜா அவர்கள் எண்ணம் எனக்குத் தெரியவில்லை. பண ஆசையைக் கொண்டாவது வேறு எந்த எண்ணத்தைக் கொண்டாவது அவள் அந்த கடிதங்களைக் கொணர்ந்தால் அது தங்கள் கடிதங்கள் தானென்று ருசுப்படுத்த அவளால் எவ்வாறு முடியும்".

"என் கையெழுத்திருக்கிறதே."

"இது தானே! தப்பு கையெழுத்து."

"என் ராஜாங்கத்து கடிதமாயிற்றே."



"திருடிக்கொண்டு போய்விட்டாள்."

"என் சொந்தமுத்திரை யிருக்கிறதே."

"மாதிரி பார்த்து செய்தது."

"எனது படம் போடோகிராப் பிடித்தது இருக்கிறதே."

"வாங்கினது".

"எங்கள் இருவரையும் அந்த படத்தில் எடுத்திருக்கிறது."

"அடே அப்பா! அது ரொம்ப தப்புதான், மகாராஜா அவர்கள் முட்டாள்தனம் செய்து விட்டீர்கள்."

"நான் ஆசையில் ஆழ்ந்திருந்தேன். காமப்பயித்தியம்."

"நீங்கள் அகப்பட்டுக் கொள்ளும்படியான தப்பு செய்து விட்டீர்களே."

"அப்போ நான் இளைய ராஜா, ரொம்ப பால்லியம். இப்போ எனக்கு வயசு முப்பது தான்."

"அதை எப்படியாவது கொணர்ந்து விடவேண்டும்."

"நான் பிரயத்தினம் செய்தேன். முடிய வில்லை"

"மஹாராஜா அவர்கள் விலை கொடுத்து வாங்கவேண்டும்."

"அவள் விற்கிறதில்லை."

"அப்படியானால் திருடிக்கொணர்ந்து விடுகிறது."

"ஐந்து தரம் பிரயத்தினப்பட்டேன். இரண்டு தரம் பணங்கொடுத்து கொள்ளைக்காரரை ஏற்பாடு செய்து அவள் வீட்டைத் தாக்கச் செய்தேன். மூன்றுதரம் அவள் பிரயாணஞ் செய்கையில் அவள் சாமான்களை அப்புறப்படுத்தி சோதனை செய்வித்தேன். இரண்டு தரம் வழி மறிக்கச் செய்தேன். ஒன்றும் அகப்பட வில்லையே.

"அது இருக்கிறதாக ஒன்றுந் தெரிய வில்லையா."

"கொஞ்சங்கூட தெரிய வில்லை."

சிங்கும் நகைத்து "ஏது; இது நல்ல பிரசனைதான்" என்றார்.

'ஆனால் எனக்கு ரொம்ப விபத்தானது' என்று அரசனும் வெறுப்புடன் கூறினார்.

"ரொம்ப வாஸ்தவம், அந்த படத்தைக் கொண்டு அவள் என்ன செய்யப் போகிறாள்."

"என்னை அநீதாகதியாக்க."

"ஆனால், எப்படி?"

"எனக்கு விவாகமாகப் போகிறது."

"அப்படித்தான் நானுங் கேள்விப் பட்டேன்."

"மைசூர் மஹாராஜாவின் இரண்டாவது புத்திரியாகிய ஜயலக்ஷிமியை எனக்குக்கொடுக்கப் போகிறார்கள். அவாள் மரியாதையும் அந்தஸ்தும் உமக்குந் தெரிந்திருக்கும். அவளைக் கற்பரசி யென்றே சொல்லலாம். என் நடத்தையில் அவளுக்கு ஏதாவது சந்தேகந் தோன்றிற்று, கல்லியாணம் நின்று விடும்."

"அலமேலு?"

"இந்த படத்தை அவாளுக்கு அனுப்பிக்கிறாளாம். அவள் செய்வள், எனக்குத் தெரியும். உமக்குத் தெரியாது அவள், அவள் மனசு கல்லாச்சே. ஸ்திரீகளுக்குள்ளே ரொம்ப அழகு. ஆனால் புருஷர்களைக் காட்டிலும் துணி

வஞ்சானிதி. நான் அவளைக் கல்லியாணம் செய்து கொள்ளா விட்டால் எந்தை வேறு மானால் செய்வள். இந்நை செய்ய மாட்டாளென்று சொல்ல கூடாது."

"இன்னம் கருப்பவில்லையென்று உமக்கு நிச்சயமாய்த் தெரியுமா?"

"நிச்சயந்தான்."

"அது எப்படி?"

"முகூர்த்தத்தன்று அருப்புவதாக சொல்லி யிருக்கிருள்; முகூர்த்த நாள் திங்கட்கிழமை."

"ஓ! அப்படியானால் இன்னம் நமக்கு மூன்றுநாளிருக்கிறது; நான் பார்க்க வேண்டியது இன்னம் சில முக்கியகாரியங்கள் இப்போ இருக்கிறபடியால் அதுவும் நமது அதிர்ஷ்டந்தான். மஹாராஜா அவர்கள் இப்போ சென்னையில்தானே இருப்பீர்கள்?" என்று சிங்கும் மொழிந்தான்.

"ஆமாம். லாட் நாராயணதாசு என்னும் பெயருடன் சரஸ்வதிவிலாஸில் என்னைக் காணலாம்."

"அப்படியானால் காரியம் எப்படியாகிறதோ தெரியப்படுத்துகிறேன்."

"அப்படிதான் செய், எனக்கு அதேகவலைதான்."

"அப்புறம் ரூபாய்க்கு."

"எவ்வளவு வேணுமென்ற அவ்வளவு."

"நிச்சயமா"?

"நான் நிச்சயமாய்ச் சொல்லுகிறேன். அந்த படத்திற்காக என் ராஜ்ஜியத்தில் ஒரு ஜில்லாவைக் கூடக் கொடுத்துவிடுவேன்."

"இப்போ வேணுமென்ற செலவுக்கு?"

அரசனும் தன் உடுப்பினிடையிலிருந்து ஒரு பெரிய பணப்பையை மேஜையின்மே லெடுத்துவைத்து,

'இதில் மூவாயிர ரூபாய்க்கு மோகருக்களும் ஏழாயிர ரூபாய்க்கு நோட்டுகளும் இருக்கிறது' என்று சொன்னார்.

சிங்கும் தன புஸ்தகத்திலிருந்து ஒரு காகிதம் கிழித்து அந்தத் தொகைக்கு ரசீது எழுதிக்கொடுத்தார்.

'அந்த அம்மாளின் விலாசம்?' என்றுகேட்டார் சிங்கும்.

'புரசையில் சுந்தரவனம்.'

உடனே சிங்கும் அதை எழுதிக்கொண்டார். இன்னம் ஒரு சந்தேகம். அந்த படம் ரொம்ப பெரிசுதானே' என்று கேட்டார்.

"ஆமாம்".

"சரி, மஹாராஜா அவர்களுக்கு வந்தனம். சீக்கிரத்தில் உமக்கு சுப (நல்ல) சமாசாரம் தெரியப்படுத்துவேன். ராஜாவின் ரதம் அப்புறம் சென்றதும் சிங் தன்னைப்பார்த்து 'நாளை மத்தியானம் நீ இவ்விடம் வந்தால் நாம் இருவரும் இதைப்பற்றி வேடிக்கையாய்ப் பேசலாம்' என்று சொன்னார்.

**க. கிருஷ்ணசாமிஅய்யர். B. A.**

* முதலத்தியாயம் முற்றிற்று.

---

* இங்கிலீஷில் Detective Novels என்று சொல்லும் களவு குற்றங் கண்டுபிடிக்கும் கதைகளின்று தமிழ் வாசிப்போர்க்கு உபயோகமாக மொழி பெயர்க்கப்பட்டது.


# ஜனப்பிரியன்.

மாதம் ஒருமுறை பிரசுரம் செய்யப்படும்.

புஸ்தகம். 1] சென்னை 1900ஞு டிசம்பர்மீ [இலக்கம். 6


## இயற்கையு மிறைவனும்.

(*)

முற்காலத்திலும் இக்காலத்திலும் சாதாரணமாக அவரவர் அநுபவ வழிப்பட்ட பொருள்களை யூன்றிப் பார்த்தற் றன்மை மனிதரிடத் திருக்கின்றது. இஃதோர் ஆச்சரியமான விஷயமன்று. நாம் வாழு மிவ்வுலகின் கண் கவனத்தைக் கவரத்தக்கனவும், வியப்பு விளைப்பனவு மானவை எண்ணில. நம் இந்திரியங்களை யடக்கித் தக்க வழியில் விடுத்தோமாயின் இன்பத்தையும் அறிவையுங் கொடுக்கத்தக்க பொருள்கள் பலவாகும். தூய குளிர்ந்தகாற்றும், மலர்மணமும், புற்கள் மரங்க ளிவைகளுடைய அழகும், கடல் மலை யிவையிற்றின் பெருமிதவுணர்ச்சியும், சந்திரசூரிய நட்சத்திரமாகியவைகளின் ஒளியும், இயற்கையிற் பார்க்கக் கேட்கக் கூடியவைகளும் நம்மை அணுகி வாழ்க்கையின் பகுதியவாகி ஒழுக்கத்தை மேன்மைப்படுத்துகின்றன. இவ்விஷயத்தை யுதாகரித்துக் காட்டலாகாது; அவரவர் அநுபவமுறையிற் கண்டறியவேண்டும். அனேகர்க்குத் தம் இல்லம், அதைச்சுற்றிய பலபொருள்கள், கடல், நதி, மலை, வெளி, மரங்கள், தெருக்கள், தோட்டங்கள், வசிக்கும் வீடு, தரிக்கு முடைகள், உண்ணும் உணவு, வழக்கமாய்க் கேட்கும் சத்தம் ஆகிய இவைகளே தங்கள் அநுபவத்தின் பெரும்பாகமாகும். இவர்கள் மேற் கூறியவைகளை யடைதலே வாழ்க்கையின் பயனெனக் கருதுகின்றனர்.

சாதாரண அனுபவங்களினின்றும் இயற்கைப் பொருள்களை யூன்றிப் பார்த்தோமானாற் புதிய அழகுகளைக் கண்டு வியப்பினையும் அடைவோம். நம்மைச் சுற்றிலுமுள்ள பொருள்கள் நாளும் ஒருவிதமாக ஒழுகுதலைக் கண்டிருந்தால் அவைகளை யாளும் முறைகளும் உள்ளவெனத் தெளிவோம். மேலும் இப்பொருள்கள் பல பாகுபாடுகளாகப் பிரிக்கப்படுவனவன்றி அப்பாகுபாட்டிலொவ்வொரு பொருளுஞ் சம்பந்தமுற் றிருக்கின்றது. இச் சம்பந்தங்களை யெல்லா முற்றுநோக்குழி வேறு புதிய சம்பந்தங்கள் வெளியாகின்றன. இப்படியாகக் கடைசியில் ஒரேவித சம்பந்தத்தைக் காண்கின்றோம்.

தங்கள் வாழ்நாள் முழுவதிலும் பிரகிருதி தத்துவசாஸ்திரங்களையே ஆராய்தற் றொழில் கொண்டார் பலரும் எல்லா விஷயங்களையும் வகுத்துக் கூறுவதற் காதாரமாயிருப்பது இயற்கைப்பொருள்கள் என்கின்றனர். இக்கொள்கையை யுடையவர் 'பொருள்' என்றால் என்ன அர்த்தத்தைக் கிரகிக்கின்றனர்? இயற்கை என்றால் என்னை? நாம பார்க்கின்றோம், கேட்கின்றோம், தொடுகின்றோம் என்றால் என்ன உணர்ச்சியை யறிகின்றோம்? ஒரு மாங்கனியைக் காண்டலின்கண் என்ன உணர்ச்சிகளை யடைகின்றோம்? உண்மையாக நாம் அக்கனியிற் காண்பன, ஒருவகைப் பருமனும், உருவமும், வர்ணமுமே யாம். அதன் சுவை முதலானவை வெறுங்காண்டலினின்று மறிதல் கூடுமோ? கனியைக் கண்டவுடன் மனத்தின்கண் உண்டாகும் விஷய ஞானங்கள் தனி இந்திரியங்களால் மட்டுமே அறியப்படா. மனத்தின்கண் நிகழும் விஷய ஞானம் எத்தகைய இந்திரிய ஞானத்திற்கும் மேற்பட்டது. பழைய அநுபவங்களால் ஒரு வித வர்ணம் உருவத்துடன் தோன்றுவதைக் கண்டிருக்கின்றோம். இவ் வநுபவத்தை அடிக்கடி அடைந்ததனால் ஒருவகை வர்ணமும் உருவமும் கண்டவுடன் மாங்கனியென்றும் அதன் சுவை முதலியவும் உண்ணுவதன் முன்னேயே மனத்தில் உறுதிபெறுகின்றன. இப்பொருள் நமது எண்ணங்களினும் வேற்றுமையுடைத்து. பொருளிற்கு நிலைத்தற் றன்மையும் எண்ணங்களுக்கு மாறுந் தகைமையும் இன்றியமையாதன. மக்கள் சுவை வேட்கை (விருப்பம்) தனித்தனி வேறுபடும். எமக் கினிமையா யிருப்பது



உமக்குக் கைப்பாயிருக்கும். இவைகள் அவரவர், வழக்கத்தினாலும் பழக்கத்தினாலும் ஏற்படுகின்றன.

மாலைப் பொழுதில் ஆகாயத்தை யூன்றி நாம் பார்ப்போம். கருமையான மேகங்கள் சூரிய காந்தியாற் சிவந்த நிறத்தையடைகின்றன. சிறிதுநேரம் ஆகாயத்தையே பார்ப்போமானால் அவ்வர்ணம் மாறுதலடைகின்றது. இத்தகைய நிறத்திரிவு மிகவுஞ் சிறிது சிறிதாக நிகழ்தலினை அப்பொழுது அறிய முடியாமலிருக்கின்றது. சிவப்பு நிறம் இப்பொழுது தான் கருமையாயிற்றென்று சொல்ல முடியாது. இவ்விஷய ஞானத்தின் உண்மையானது மற்றைய எல்லா விஷய ஞானத்தினிடத்துங் காணலாகும். ஆதலின் இவ்வுலகிற் றோன்றுபவை எவையும் பொய்யெனக் கொள்ளும் வேதாந்திகள் கொள்கை ஸ்தாபிக்கப் படுகின்றது.

எப்படித் திரைக்குப் பின் சூத்திரதாரன் தான் மறைந்திருந்து மற்றைய பாத்திரங்களை நடிப்பிக்கச் செய்கின்றானோ அப்படியே நாம் காணும் உலகத்தை யாட்டுவிக்கும் இறைவனொருவனுளனென்பது எலலாத் தேயத்தாராலும் நம்பப்படுகின்றது. சூத்திரதாரனைச் செய்கைகளாலன்றி அவனை அறிய முடியாதாகலான் இறைவனை யவன் செய்கைகளாலேயே நிர்ணயிக்க வேண்டியிருக்கின்றது. ' இறைவனை யனேகர் கண்டதாகக் கூறுபவை அவரவர் மனத்தின் உருவெளித் தோற்றமேயன்றி மற்றொன்று மில்லையெனக் கொள்ளவேண்டியும் வருகின்றது. இறைவனுளனென்னும் நம்பிக்கையினின்றுமே அனேக சமயங்கள் பிறந்தன. இப்பொழுது நாம் அறியவேண்டியது யாதெனின் இறைவனுக்கும் இயற்கைக்கு முள்ள சம்பந்தமே. இச்சம்பந்தத்தை யுணர்வதினின்றுமே அனேக விதக் கொள்கைகள் உற்பத்தியாயின.

நம்மவரிற் பலர் இயற்கையே இறைவனென்பார். இதை அத்துவிதம் என்பர். ஒரு குழந்தைக்கு நீராவி யந்திர மெப்படி வியப்பினை யுண்டாக்குமோ அப்படியே சாதாரண இயற்கைப் பொருள்களின் மாறுதல் முதலிய குணங்கள் வியப்பினை விளைக்கும். மனத்தின் கண் நிகழும் அன்பை, காற்றுத் தேரும், மலர்க்கணையும் உடைய கடவுளென்று நம்மவர் தொழுகின்றனர். மாந்தர் தம் அறிவினாலும், தர்க்க சாஸ்திர உணர்ச்சியாலும் இயற்கை

யிற் காணும் பொருள்கள் ஒருவகை யொழுங்கிற் குட்பட்டனவென்று உறுதியாக நம்புகின்றனர். ஆகலின் அறிவுடையாரெவரும் இறைவ னொருவனுளனென்றே கொள்வார்.

இவ்வாறாகச் சிலர் துவித வுணர்ச்சியைக் கைக்கொள்கின்றனர். இறைவனை வேறாகவும் அவனினின்றும் மற்றைப் பொருள்கள் உற்பத்தியாயின வென்று முரைக்கின்றனர். இதற்கொரு காட்டாகப் புருஷ சூக்தத்தில் இறைவன் முகத்தினின்றும், கைகளினின்றும், தொடைகளினின்றும் பாதங்களினின்றும் மாந்தர் முறையே உற்பத்தியாயினர் என்ற சுலோகத்தைக் கூறுகின்றனர். செய்யுட்டன்மை வாய்ந்து புனைந்துரைவகையாற் கூறிய பொருளை நேரிய பொருளெனக் கொண்டு ஏற்றுக்கொள்ளுதல நம் மூடத்தனமே யன்றிமற்றொன்று மில்லை.

நாலைந்து மனிதர் ஒரு குகையிற் பிறவி முதல் இருக்கின்றனரெனக் கொள்வோம். அவர் கால்கள் குகைக்கு வெளியே செல்ல முடியாமற் கயிற்றினாற் கட்டுண்டிருக்கின்றன வெனவுங் கொள்வோம். இத்தகையோர், சூரியன் ஒளி குகை வாயிலாகப் பிரதிவிம்பிப்பதையும் அங்கு நடக்கும் வேறு மனிதரின் சாயைகளையும் மரங்கள் முதலியவைகளின் நிழலையும் உண்மை யுருவெனவே நம்புவார்களன்றோ. அந்நாலைந்து மக்களு ளொருவன் காலின் கயிறு அறுபட்டுக் குகைக்கு வெளிச் செல்வானாயின் முதலிற் சூரியன் ஒளியில் எப்பொருளையுங் காண முடியாமற் குருடனைப் போலச் சில காலம் ஒழுகுவான். பிறகு சிறிது சிறிதாக உலகப் பொருள்கள் அவன் காட்சிக்கு வெளியாகின்றன. இம்முறைக் கிணங்கியே புராதன மனிதர் உணர்ச்சியாகிய பாசத்தாற் கட்டுண்டு பொய்யை மெய்யென மதித்தனர்; அறிவாகிய ஒளியை நாளடைவிற் கண்டதும் பொருள்களின் உண்மைத் தன்மையை யறிகின்றனர்.

இறைவன் வேறான இடத்திலிருக்கின்றனனெனவும் அவ்விடத்தை நாமும் அடைய முயலுவதே வாழ்க்கைத் தொழிலென்றுங் கொள்கின்றார் சிலர். அவ்விடத்தை மோட்ச மென்றும் சாயுஜ்ஜிய பதவி யென்றும் பெயரிட்டுப் பிதற்றுகின்றனர். அந்தோ! தங்கள் கண்கள் முன்னரேயே எங்குங்காணு மிறைவனைப்



பிரித்து வேறாயிருக்கின்றனனென உரைத்தல் எவ்வளவுமடமை! பிரகலாதன் இரணியனுக்கு இறைவன் தூணிலுமுளன் துரும்பிலுமுளன் என்ற கொள்கையை அறிவுடைய மாந்தர் எவரும் ஆலோசித்தால் ஏற்றுக் கொள்வார் என்பதிற் சந்தேகமில்லை.

சருக்கை - இராமசாமி ஐயங்கார்.

---

ஸ்ரீ

## ஆசாரியர்கள் சரித்திரம்.

(*)

(148-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

### ஸ்ரீமந்நாதமுனிகள்.

அப்பால், உய்யக்கொண்டாரை நோக்கி, 'நீவிரும் யோகரகசியத்தை அறிந்துகொள்ளக்கடவீர்' என்ன, அவரும், 'பிணங் கிடக்கையில் மணம் புணரலாமோ? இச்சரீரம் முடியுங் காலத்தே யோக முயலத்தக்கது' என்றனர். அதுகேட்டு, நம் நாதமுனிகள் 'ஆயின் நீர் சாஸ்திரத்தையும், திருவாய்மொழி முதலிய பிரபந்தத்தையும் வெளியிட்டு உலகத்தை வாழ்வியும்' என்று, தம் புத்திரரான ஈசுவர முனிகளை நோக்கி 'உமக்கொரு குமாரர் உண்டாவர்;' 'அவர்க்கு யமுனைத்துறைவர் என்றே நாமகரணம் செய்யும்' என்றருளிச்செய்த பின், உய்யக்கொண்டாரையும் குருகைக்காவலனையுங் குறித்து 'உங்கட்கு யான்சொன்ன யோகம்முதலிய அரும்பொருளை யமுனைத்துறைவர்க்கு உபதேசிக்கக்கடவீர்' என்று திருவாய்மலர்ந்தருளி மீட்டும் முன்போலவே யோகத்தி லெழுந்தருளி யிருந்தார்.

அதன் பின்னர், அச்சோழன் தன் படைகளுடன் வேட்டையாடக் காட்டகத்தே சென்று மீட்டுஞ் செல்லாநிற்கையில், இவருடைய பெண்பிள்ளைகள் ஆங்குவந்து 'ஐயா! நம் அகத்தில் ஒரு குரங்கும், இரண்டுவில்லிகளும், ஒரு பெண்பிள்ளையுமாக வந்து 'நாதமுனிகள் எங்கே' எனத் தேடினார்கள் என்றவாறே நாதமுனிகளும், அவர்களை இராமலக்குமண சீதைகளாகவும், குரங்கை அந்த அனுமானாகவும் நினைத்துப் பின்தொடர்ந்து சென்று வழியில் சந்தித்தவர்களை 'இவ்வாறு செல்கின்றவர்களைக் கண்டீர்களோ? என்று கேட்டருள அவர்களும், 'கண்டோம்' என்றனர். அதுகேட்ட இவர் கடுநடையிட்டு நெடுந்தூரஞ்சென்று கங்கைகொண்ட சோழபுரத்தின் கீழ் வாசலளவாக வெழுந்தருளி ஆங்குள்ளவர்களை அவ்வாறு கேட்க, அவர்கள் 'யாம் கண்டிலேம்' என்றார். பின், அவர்களும் காணக்காண மறைந்திடக்கண்ட நாத

முனிகள் ஏங்கிச் சோர்ந்து வீழ்ந்து அயர்ந்தார். அப்பால் அதுவே காரணமாக * "அடியார் நிலாநின்ற வைகுந்தம்" ஆன கலங்காப் பெருநகரடைந்தார்.

[இந் நாதமுனிகளும் கம்பநாட்டாழ்வாரும் ஒரே காலத்தவர் என்றும், கம்பராமாயணத்திலொரு பாட்டிற்கு நாதமுனிகள் விவாதமில்லாமற், பொருளுரைத்தார் என்றுஞ் சொல்வதுண்டு.]

அதன்பின், இச்செய்திகேட்ட உய்யக்கொண்டார் முதலோர் மிக மனம் வருந்தி அங்குச் சென்று சரமகைங்கரியத்தை ஈசுவரமுனிவரைக்கொண்டு செய்வித்துப் பின்னர் அவர்களும் பள்ளிபடுத் தருளினார்கள். பின்பு, மறுநாள் வீரநாராயணபுரத்திற் சென்று மற்றுஞ் செய்யவேண்டுஞ் சடங்குகள் யாவற்றையும் நிறைவேற்றி, நாதமுனிகள் எப்பொழுதும் யோகத்தில் வீற்றிருக்குமிடத்தே குருகைக் காவலனும் யோகத் தமர்ந்திருந்தார்.

## 6—உய்யக்கோண்டார்.

பின்பு, உய்யக்கொண்டாரும் நாதமுனிகள் திருவடியில் ஆச்சரயித்த முதலிகளையுங் கூட்டிக்கொண்டு மதக் கோட்பாட்டு நூல்களையும், திவ்யப் பிரபந்தங்களையும் அருளிச்செய்து கொண்டிருக்குங்கால், இவரிடம் ஆச்சரயித்தவர்கள் மணக்கால்நம்பி, திருவல்லிக்கேணிப் பாண் பெருமாளரையர், சொட்டைப்பூச் செண்டலங்காரர், ஸ்ரீ புண்டரீகாக்ஷதாஸர், உலகு பெருமாள் நங்கை என்ற இவ் வைவர்.

இவர்களுள், மணக்கால் நம்பி பன்னிரண்டாண்டு, தம்மாசிரியரான உய்யக்கொண்டார் திருவடிகளிலே இளைய பெருமாளைப்போல எல்லாக் கைங்கரியங்களையும் பண்ணி வருகையில், உய்யக்கொண்டார் தேவியரான ஆண்டாள் திருநாட்டுக் கெழுந்தருள, அவர் தம் திருமாளிகைக் கைங்கரியம் யாவற்றையும் தாமே செய்துவந்தார். இவ்வாறு வருகையில் ஒருநாள், உய்யக்கொண்டாருடைய பிள்ளைகள் இருவரையும் நீராட்டி அழைத்துச்செல்லும் வழியில் ஒரு வாய்க்கால் சேறு யிருக்கக்கண்டு அவர்கள் திகைத்துநிற்க, தாம் படியாய்க்கிடந்து அவர்கள் தம்முதுகில் அடியிட்டுச் செல்லுமாறு செய்தார். இது கேட்ட உய்யக்கொண்டார் 'இவர் இவ்வாறு செய்வதேன்'? என்று அவர் பக்கல் அழிவிலா அன்புடையராய், அவர் திருமுடியில் தம் திருவடியை வைத்து 'நமக்கு யாம் செய்யத்தக்கது யாது'? என்று கேட்டருள,

* திருவிருத்தம்.



* "உற்றேனுகந்து பணிசெய் துனபாதம்
பெற்றேனீதே யின்னும் வேண்டுவதெந்தாய்"!

என்று 'தேவரீர் திருவடிகளின் தரிசனமே வேண்டுவது' என்ன, உய்யக்கொண்டார் உவப்பின் மிகுதியாலே, வீடு பயப்பதான விழுப்பொருளையே மீட்டும் ஓதியருளினார்.

அப்பால், சின்னாள் கழியப் பின்னால், உய்யக்கொண்டாரும் திருநாட்டிற் கெழுந்தருள்கையில் 'இனி, மதப்பற்றுடையாராவர் யாரோ'? என்று வினவ அவரும், 'இங்குள்ள சிலரும் நீருமே' என்றருளிய தல்லாமலும், 'பின்பு ஈசுவரமுனிவர்கள் திருவயிற்றில் சொட்டைக்குலத்திலே, ஸ்ரீமந்நாத முனிகட்கு ஒரு திருப்பேரனார் அவதரிப்பர்; அவர்க்கு 'யமுனைத் துறைவர்' என்று திருநாமமிட்டு யோக ரகசியம் முதலிய யாவற்றையும் உபதேசிக்கக் கடவீர்; இதனை யான் செய்யுமாறு நாதமுனிகள் எனக்கு ஆஞ்ஞாபித்தார்; யான் அது செய்யப் பெற்றிலேன்; நீரவரைப் பற்றி எனது விருப்பத்தைப் பூர்த்திசெய்யும்' என்று தமது ஆசிரியரான ஸ்ரீமந் நாதமுனிகளுடைய திருவடியையே தியானித்துக்கொண்டு பதுமாஸனத்துடன் அணையிலே சாய்ந்தருளித் திருநாட்டுக் கெழுந்தருளினார்.

## 7—ஸ்ரீ மணக்கால்நம்பி.

இங்ஙனம் உய்யக்கொண்டார் திருநாட்டிற் கெழுந்தருளிய படியைக் கண்ட மணக்கால்நம்பி முதலோர் மிகுதியும் மனம் வருந்தப் பெற்றுத் தங்களிலே தேற்றரவுசெய்துகொண்டு அவர்க்குச் செய்யவேண்டும் சடங்குகள் எல்லாவற்றையுஞ் செய்து முடித்து மதப்பிரவர்த்தர்களாயிருக்கையில் பின்பு சிலகாலங் கழிந்தவாறே ஈசுவரமுனிகளுக்கு ஒரு குமாரர் ஆடிமாதத்தில் உத்திராடநக்ஷத்திரத்தில் திருவவதாரஞ் செய்தார்.

அதுகேட்டமணக்கால் நம்பிகளும் ஆனந்தக்கடல் படிந்து, அக்குமாரருக்கு, ஈசுவரமுனிகளைக்கொண்டு ஜாதகன்மச் சடங்கு செய்வித்து † "பத்துநாளுங் கடந்த விரண்டாநாள்" திருவிலச்சினை முதலாக நாமகரணத்தையும் ஸ்ரீமந் நாதமுனிகளின் நியமனப்படி யமுனைத்துறைவர் எனச் சாத்தியருளினார்.

* திருவாய்மொழி.

† பெரியாழ்வார் திருமொழி.

[இனி, 'யமுனைத்துறைவர்' என்ற ஸ்ரீ ஆளவந்தார் வைபவங் கூறவேண்டுமாயினும், அது முன்னமே எழுதி வெளியிடப் பட்டமையாலும், யாம் "ஞானபோதினி" என்ற மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையில் எழுதி வெளியிட்டுவரும் இளையாழ்வார்வைபவத்திலேயே ஒருவாறு அடங்கி யுள்ளமையாலும் இங்கு மீட்டு மெழுதப்படவில்லை.]

தி. கோ. ஸ்ரீ ரங்காசாரியர்.

---

## விடுமுறை நாட்களைக் கழிக்கும் விதம்.

:o:

விடுமுறையா லுடையப்படும் முக்கியப் பயன் என்னையெனின் மனச்சஞ்சல மின்மையே. சாதாரணமாக மாணாக்கர் விளையாடுவதிலும், காலத்தைச் சோம்பேறித்தனமாய்க் கழிப்பதிலும், நல்ல உடைகளை யுடுத்துக்கொண்டு தெருத்தெருவாய்த் திரிவதிலும் விடுமுறைக்காலங்களைக் கழிக்கின்றனர். இப்படிச் செய்வதனால் நல்லொழுக்கமெய்துவதும் தேகசௌக்கிய மடைவதும் அசாத்தியமாகின்றன.

சிலர் விடுமுறைக்காலத்தை வேலைநாளாக மாற்றுகின்றார்கள். அவர் வாழ்நாள் முழுவதும் ஓயாது சுற்றுந் திரிகைவட்டம் என்னலாம். இப்படி விடுமுறைக்காலத்திலும் வேலைசெய்து தங்கள் தேகசௌக்கியத்தை யழித்துக்கொள்வதுடன் அகால மரணத்தையு மடைகின்றார்கள். தொழிலும் ஓய்வும் மாறிமாறி வருமாயின் இன்பமுண்டாகும். இல்லையேற் றீமைவிளையும்.

ஓய்வு என்றால் சோம்பேறித்தனம் அல்லது உறங்குதல் என்று எண்ணுதல் கூடாது. விடுமுறைநாட்களைச் செவ்வையாய்க் கழிக்கவேண்டுமாயின் அவரவர்களுக்குப் பிரியமானவழியிற் செலவிடக்கடவர். அவரவர் சுவை மாறுபடும். சுவையானது அவரவர் நண்பர்களாலும், வழக்கத்தையாலும், இயற்கை தன்மையாலும் அமைக்கப்படுகின்றது. காவியங்களைப் படிப்பதிற் பிரியப்பட்டவராயின் விடுமுறைநாட்களை அவ்வழியிற் செலவிடல்வேண்டும். கதைகளைப்படிக்கப் பிரியமுடையவராயின் அவைகளை வாசிக்கவேண்டும். உயிர்நூலிற் பிரியமுடையவராயின் காடுமுதலிய இடங்களிற்போய்ச் சீவராசிகளையும் அவைகளின் கூடுகளையும் சேகரித்தலில் நாட்களைச் செலவிடல்வேண்டும். பெரிய நகரங்களில் வசிப்பவர் பொருட்காட்சிச்சாலை, பூந்தோட்டங்கள், கைத்தொழிற்சாலை மைபங்கூழ் விருத்தி செய்யுமிடங்கள் ஆகிய இவைகளைப் போய்ப் பார்ப்பதிற் காலத்தைக் கழிக்கக்கடவர். சிலர் நாடகசாலைக்கும், பிரசங்கங்களுக்கும் போதல்வேண்டும். இப்படி நல்வழியில் விடுமுறைக்காலத்தைச் செலவிட்டால்தான் உண்மையான கல்வியை யடையலாகும்.



விடுமுறை நாட்களின் சில பாகத்தைத்தேகப்பயிற்சியிலும், விளையாட்டிலும் செலவிடல்வேண்டும். எப்படித்தினமு மொரே மாதிரியான உணவு உருசியைத்தருவதில்லையோ அப்படியே ஒரே விதமானவாழ்க்கை இன்பத்தை யுண்டுபண்ணுவதில்லை. அடிக்கடி எதிலும் மாறுதல் இருக்கவேண்டும். சதுரங்கம், சொக்கட்டான் முதலியன ஆடுவதனால் மனத்தளர்ச்சி நீங்குகின்றது. மேலும் பின்னர்க் கடினமும் புத்தி சாலித்தனமு முள்ள வேலையைச் செய்வதற்கு ஊக்கத்தைக் கொடுக்கின்றது.

எத்தகைய தேகப்பயிற்சியாயினுந்தினமுஞ் செய்யவேண்டும். தேகப்பயிற்சியாற்றசைகள் வலிமை யுறுவதுடன் இரத்தம் உடலெங்குஞ் செவ்வையாய்ப் பரவுகின்றது. எப்பொழுதும் வேலை செய்யும் நாட்களுக்கும் விடுமுறைக் காலத்திற்கும் போதுமான வேற்றுமை யிருக்கவேண்டிய தவசியம்.

விளையாட்டில் விடுமுறையைக் கழிக்கவேண்டுமென்றாற் படிப்பினை முழுவதும் மறந்து அதிலேயே கவனத்தைச் செலுத்த வேண்டுமென் றெண்ணக் கூடாது. நீடித்த காலவளவையை ஒரே விளையாட்டிற் செலவழித்தால் வியாதியால் வருந்துவார்கள். 'அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் விடமாம்' என்றபழமொழியு மிருக்கின்றது. சிலசமயங்களில் மாணாக்கர் பாடங்களையே முழுவதும் மறந்து விடுமுறைக் கால மொழிந்ததும் தம் கலாசாலைக்கு வருகின்றார்கள். அவர் வழக்கத்தை மாற்றுமாறு உபாத்தியாயன் அனேக நாட்கள் (மாதங்களும்) கஷ்டப்படவேண்டி யிருக்கின்றது.

ஒரு மாணாக்கன் பள்ளிக்கூடநாட்களில் மிகவுங் கஷ்டப்பட்டு உழைத்தானாயின் விடுமுறைக் காலத்தின் முதற்பாகத்திற் சில நாட்களை விளையாட்டிற் கழித்தல் வேண்டும்; மரங்கள் அடர்ந்திராத வெளியிடங்களில் அடிக்கடி விடுமுறைக் காலங்களில் நடந்து செல்ல வேண்டும்; புத்தகங்களைப் படிப்பதைச் சிறிது நிறுத்தி நண்பர்களுடன் வார்த்தையாடுவதிற் செலவிடவேண்டும். சிலகாலம் பழைய பாடங்களைப் படிப்பதிலும், புதியபாடங்களைப் பார்ப்பதிலும் கழிக்கவேண்டும். காலையிலெழுந்து சாப்பிடுவதன் முன் மூன்று அல்லது நான்குநாழிகைவழித் தூரம் நடத்தல் நலம். விடுமுறைக் காலங்களில் இரவில் அதிகநேரம் படிக்கக் கூடாது.

பள்ளிக்கூடத்தில் ஒருமாணாக்கன் படிக்காமல் வீணே காலத்தைச் செலவிட்டனனாயின் விடுமுறையில் நன்றாய்க் கஷ்டப்பட்டு வாசிக்கவேண்டும். பிள்ளைகள் அவரவர்களுக்குப் பாராட்டும் பொறுமையும் உபாத்தியாயன் உதவியும் இக்காலத்தி லெய்தலாகாவெனினும் சிறிது நன்மையையேனும் அடைவான். பிள்ளைகள் கல்வியில் அவரவர்களுக்குப் பொறுமை பாராட்டவேண்டியதவசியம். பொறுமை பாராட்டாத படிப்புப் பயனின்றாகும்.

எப்படி ஒரு நீராவியந்திரம் ஓர் இடத்திற்றங்கி வல்லமை முழுவதையும் அடைந்து பிறகு ஓயாமல் வேலைசெய்ய முயலுகின்றதோ அப்படி விடுமுறைக் காலங்களில் மாணாக்கர் ஓய்வடைந்து பின்னர்ப் பள்ளியில் நன்றாய்ப் பாடங்களைப் படித்து யாவருக்கும் திருப்தியை யுண்டாக்க வேண்டும்.

அரங்கநாதன்.

---

## சோபாமணி.

---

(142-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

அதன் பின்னர், குற்றவாளியை நோக்கி, "இப்பொழுது பஞ்சாயத்தாக ஏற்படுத்தப்பட்ட பன்னிருவரில் நீ ஆக்ஷேபித்தற் குரியார் எவரேனும் உளரோ?" என்று நீதியதிபர் கேட்க, அவன் "ஒருவருமிலர்" என்று உடன்பட்டான். அப்பால், பஞ்சாயத்தார், "ஸர்வவல்லமையுள்ள கடவுளின் முன்பாக நாங்கள் பிரமாணஞ் செய்கின்றோம். பிறரெல்லாஞ் சொல்லும் வார்த்தைகட்கு நாங்கள் தாக்ஷிணியத்தால் சிறிதும் உடன்படோம். நியாயத்தையே பேசுவோம். நாங்கள் சொல்லுவது சத்தியமே. முழுதும் சத்தியமே. சத்தியமன்றி வேறில்லை" என்று உறுதிகூறி யிருந்தனர். உடனே நியாயாதிபதி யெழுந்து பஞ்சாயத்தாரை நோக்கி, பின் வருமாறு உபந்யாஸித்தனர் :—

"பெரியீர்! அஹஸ்கலாவான் என்னும் இக்குற்றவாளியைப் பற்றி நுமது கருத்தைத் தெரித்தற்பொருட்டு அரசனதாணையினால் நீவிர் ஈண்டு வந்தனிரன்றே. இவன்மீதேறியுள்ள குற்றங்களையும் அவற்றின் தன்மைகளையும் வேந்தன்றிறத்து நியாயவாதஞ்செய்ய வந்து இங்ஙனே நம் வலப்புறம் நிற்கும் வார்த்தாகரர் என்னுங் கனவான் முகமாய் அறியலாகும். அபராதியின் திறத்திற் கேட்கத்தகும் எதிர்வாதமெல்லாம் அவனுக்காக வலிதின் வந்து வாதஞ் செய்யத் துணிந்து இங்ஙனே நம் இடப்புறம் நிற்கும் ஆபத்ரர் என்னும் புலவர் முகமாயறியலாகும். இவ்வாறு உபயவாதிகளின் நியாய வாதத்தையும் சாக்ஷி விசாரணையையும் கேட்ட பின்பு, மேன்மக்காள்! நீவிர் செய்யவேண்டுவதியாதெனின், நீர் செய்த சத்தியத்தை உறுதியாகக் கைக்கொண்டு



நுமது உள்ளத்தை நிஜத்திற்கும் நியாயத்திற்கும் மாத்திரம் உட்படுத்தித் தீர்மானஞ் சொல்லவேண்டும். அங்ஙனஞ் செய்தலில் நுமது தீர்மானத்தை நும்மிற் பெரியராயுள்ளவர் 'குற்ற முள்ளவன்' அல்லது 'குற்ற மற்றவன்' என்னும் இரண்டிலொரு வசனத்தை நமக்குத் தெரிவித்தல் வேண்டும். நுமது அபிப்பிராயத்தை நாம் அறிதலும், அவ்வாறே அரசன் பெயராற் றீர்ப்புச் சொல்லச் சித்தமாயிருக்கின்றோம். இப்புருடன் குற்றமற்றவனென்று நீர் ஒருமுகமாய்க் கூறுவிரேல் அதுமுதலாக இவன் சுயேச்சையாயிருக்கவும், இப்பொழுது சாற்றப்பட்டுள்ள குற்றத்தினாலேனும் விசாரணைக்குட்பட்டமை யாலேனும் சிறையிருந்ததனாலேனும் கலாவானது பெருமைக்குயாதும் குறையாகாதென்று பிரசித்தஞ் செய்வோம். இங்ஙனன்றி, இவன்குற்றஞ் செய்தவனென்றே தீர்மானிப்பரேல் இன்று முதலாக ஓராண்டளவு பந்தனகரத்துச் சிறைச்சாலையின்கண் காவலிலிருக்கவேண்டு மென்றும், இக்கலாவான் நிரபராதியென நுமதுள்ளத்தில் உணர்த்தத் தவறுவராகில் இதே சிறைச்சாலைக்கு இவ்வாபத்ரர் உட்படவேண்டு மென்றும் தீர்ப்புச்சொல்ல உடன்பட்டிருக்கின்றோம். இந்நிபந்தனையின்படியேதான் இவரும் தமது மித்ரன்திறத்தில் வாதிக்க ஒப்புக்கொண்டிருக்கின்றனர். பெருந்தகையீர்! இவ்விஷயத்தில் நீர் நிஷ்பக்ஷபாதிகளாயிருந்து மிக்க கவனத்தோடு விசாரணையை நடத்துமாறு நுமது இராசனுக்கும் இராச்சியத்திற்கும் கடமைப் பட்டிருக்கின்றீர்."

இந்த விதமாகப் பஞ்சாயத்தாரை நோக்கி உபந்யஸித்த பின்னர், நீதியதிபர் தமது ஆசனத்திருந்தனர். அப்பொழுது அரசன் பக்கத்தில் நியாயவாதியாய் வந்த வார்த்தாகரன் என்பவன் எழுந்து பேசத் தொடங்கினன். அது வருமாறு :—

"நீதி செலுத்தும் பிரபுவே! பஞ்சாயத்துப் பெரியோரே! இன்று நடக்கும் விசாரணையில் மகாராஜரவர்கள் பக்கமாய் வாதித்து நியாயத்தைக் காட்ட யான் கடப்பாடுடையேன். ஒரு புருடன்மீது குற்றங் கூறத்துணிதல் சாமானியமான காரியமன்று. அங்ஙனமாக நீர் மதித்திருப்பதுபோலவே யானும் ஒரு காலத்தில் நல்லனென்று மதித்திருந்த இவ்வஹஸ்கலாவான் என்

னும் புருடன்மீது குற்றத்தை நாட்டவருதல் இளகிய மனமும் சீவகாருண்ணியமும் உள்ள எத்தகையோர்க்கும் வருத்தமும் விசனமும் செய்யும் காரியமன்றோ? இவ்வாறு யான் கூறியதனால் ஏனையோரினும் யான் இளகிய மனமும் சீவகாருண்ணியமும் அதிகம் உடையேனென்று தெரிக்க வந்தேனல்லேன். ஆனால், பெரியீர்! நும்மை ஒன்று வேண்டாநின்றேன். நும்மிலெவரேனும் இக்காலம் யான் எத்தொழிலிற் புகுந்துளேனோ அத்தொழிலைக் கைக்கொண்டதாகச் சிறிது கருதுக. மனிதனுக்குரிய குணங்களையும் வாதிக்க வரும் ஒருவனுக்கிருக்கத்தகும் குணங்களையும் ஊன்றி யோசிக்குங் காலையில், இந்நிலைக்கண் என்றனுள்ளமும் உணர்ச்சியும் எத்துணைக் கலங்கித் தடுமாறுகின்றன என்பதை நீவிர் உணரல் வேண்டும். அஹஸ்கலாவான் என்னும் பெயரைப் பரலீனத்திலும் போதஸேநத்திலும் ஸகலஜனங்களும் விரும்பிக் கொண்டாடுகின்றனரென்பதையும் யான் அறிந்துளேன். பெருந்தக்கீர்! அஹஸ்கலாவான் என்னும் இவ்விளைஞன் நும்மோடு கலந்துறவாடி நண்புகொண்டு நுமது நன்கு மதிப்பையும் பெற்றவனென்பதையும் யான் தெளிவாக அறிந்துளேன். இவனுக்கு இயற்கையினமைந்த நற்குணமும் நல்லொழுக்கமும் நுமக்கு இவன்மாட்டு நன்கு மதிப்பைச் செய்திருத்தல் வேண்டுமென்பதையும் யான் மறந்தேனல்லேன். இத்தகைய புருடனுக்கு எதிராய் இவன்றன் நேசரும் பார்த்திருக்க யான் வாதிக்க நேரிட்டதே!—அந்த அம்மையோ தமது புதல்வனினும் பலரால் மிக்க கௌரவமும் தக்க நேயமும் பெற்றுளார்.”

“இவ்வாறே நீங்கள், தமது மித்திரனைக் குற்றத்தினின்றும் நீக்கத்தவறின் அவனடையும் தண்டனையைத் தாமும் அடையவுடன்பட்டு இவ்வபாயத்தில் தலையிட்டுக் கொண்ட அவ்வுத்தமகுண பூஷணரான ஆபத்த்ரரிடத்தும் நல்லபிப்பிராயங் கொண்டிருத்தல் வேண்டுமென்று எண்ணுகின்றேன். அவருடைய ஸ்வபாவமும் சாமர்த்தியமும் வியக்கத்தக்கவையேயாம். அவர் தமது நண்பனைப் பாதுகாத்தற்குத் தைரியத்தோடு முன்னிற்பதைக் கண்டு யான் மிகவும் அகமகிழ்கின்றேன். ஆனால், இந்நண்பன் புறத்தில் தக்க நியாயங்களை யெடுத்துக் காட்டி இவன் குற்ற மற்றவனென்று இந்த ஆபத்த்ரரும் ஸ்தாபிக்கத் தவறுவரேல் என் செய்வதென்று கவலாநின்றேன். ஆயினும் பயமில்லை. இவரை யாவரும் மேலாக மதித்திருப்பதும் இவர் தமது முயற்சியின்கண் ஊன்றி நிற்கும் நிலையும் இவர் பக்ஷத்தில் நலஞ் செய்யுமென்று நம்புகின்றேன்.”



பெருந்தகையீர்! யானும் என்றன் சிநேகிதனுக்கு நியாயவாதியாயிருக்க உடன்பட்டேன். பிரதாபராஜன் எனக்குச் சிநேகிதனே. அவ்வரசன் ஏனைய வேந்தர் போல, ‘வானத்தரசே! வையகத்திறைவா! மன்னுயிரின் இன்னுயிரே! ஆதித்யரின் நிரூபகனே! கால நியந்தாவே! வண்மைக்குவள்ளலே! கண்டுமுதற்கர்த்தனே! சுரகணப் பிராணேசா! உன் பொற்கரத்தால் எங்கட்கு உயிரும் உயிர்ப்புந் தந்தருள்’ எனப் புகழும் இவ்வகைப் பொய்ப்புகழ்ச்சியில் ஆவல் கொண்டவனல்லன். தனது செங்கோலின்கீழ் வாழுங் குடிகள் தனது ஆணைக்கு அமைந்து நடத்தல் வேண்டுமென்பதும் தன்பால் நட்புப் பாராட்டுமவர் அந்தரங்க விசுவாசமுடையரா யிருத்தல் வேண்டுமென்பதுமே அவனுடைய கருத்து.

(இன்னும்வரும்.)

கா. ஸ்ரீ. கோபாலாசாரியர்.

---

## மோகனாம்பாள்.

(151-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

அவரது இல்லமானது நாற்புறங்களிலும் தோட்டங்களமைக்கப்பெற்ற மாளிகையாயுள்ளது. அதற்குச் சாலையினின்றும் செல்லும் வழிகள் இரண்டுள்ளன. அவ்வழிகளில் நுழையும் இடங்களில் “பத்மனாபய்யர், பீ. ஏ. பீ எல். ஹைகோர்ட் வக்கீல்”, என்று வன்னத்தில் எழுதப்பெற்ற ஒரு பலகை ஒரு பக்கத்திலும் மற்றொரு பக்கத்தில் “உள்ளே போகும்வழி” என்று எழுதப்பட்டுள்ள ஒரு பலகையும் முற்பக்கத்துச் சுவற்றில் தொங்கப்பெற்றுள்ளன. அம்மாளிகைக்குச் செல்லும் வழியின் இருபக்கங்களிலும் ஓங்கி வளர்ந்துள்ள கமுகங்கள் மரகதங்களைக் காய்த்துப் பவளங்களை உகுக்கின்றன. இக்கமுகங்களின் பக்கங்களில் வேய்ங்கால்கள் நிறுத்திச் சிப்புகளாலமைக்கப்

பெற்ற தட்டிகளில் அருகிலிருந்து படர்ந்துவந்த மல்லிகை, முல்லை, சாதி, சம்பங்கி முதலிய பூங்கொடிகள் சுற்றி வளர்ந்து தத்தம் மலர்களைப் புஷ்பிக்க அவைகளினின்றும் காலிற்கலந்த மகரந்தங்கள் வெளிவழியே செல்வோர்களைச் சற்று மயங்கித் திகைக்கச் செய்கின்றன. மற்றும் தனி யிடங்களில் அமைக்கப்பெற்ற லதாக்கிருகங்களிற் படர்ந்துள்ள மனோரஞ்சிதம், கொடிச் சண்பகம் முதலிய செடிகளின் நறுமலர்கள் இருடிகளின் மனத்தையுங் கவர்ந்து சிற்றின்ப வாசனையைப் புகட்டுவனவாய் நின்றன. இடை யிடையே தனிச் செடிகளாயும் மரங்களாயும் நின்ற இருவாக்ஷி, மந்தாரம், பாரிசாதம், புன்னாகம், பன்னீர், பாதிரி, சண்பகம், கொன்றை, ரோஜா, அலரி முதலிய புஷ்பஜாதிகள் அவைகளின் மலர்களை உகுத்துப் பூமகளை அலங்கரிக்கின்றன. மேற்புறத்திருந்து வந்து, படத்தி லெழுதிய பாவையைப்போலக் கட்புலனை மாத்திரம் திருப்திசெய்யக் கூடிய, சில செடிகளால் அமைக்கப்பெற்ற சில செய்குன்றுகளும் மன்மதனும் ரதியும் மறைந்து விளையாடக்கூடிய இடமெனப் பொருந்தின.

இவைகளினும் வேலிப்புறத்தே பயிரிடப்பெற்ற மருதோன்றியின் பூங்கொத்துகளும் கமுகம் பாளைகள் வெடித்து அலர்ந்த மலர்களும் தத்தம் வாசனையால் தென்றலை நிரப்பிப் பரிமளிக்கின்றன. மாளிகையின் பிற்புறத்தில் வாய்ந்த தடாகத்தில், தாமரை, அல்லி, குமுதம் முதலிய பூங்கொடிகள் நிரம்பி அவைகளால் சுவையூட்டப்பெற்ற புனல் அமுதத்தின் மிகுந்தது. இப்பொய்கையைச்சுற்றி, தெங்கு, மா, பலா, நாரத்தை, கிடாரை, எலுமிச்சை, மாதுளை, ரம்பா, நாகை, விளா, இலந்தை, வாழை, முதலிய பல விருக்ஷங்கள் பழுத்துத் தேனைப் பெருகவிடுகின்றன. ஆனது பற்றி இச் சிறு வனத்தில் பக்ஷிசாதிகள் பலவைகள் தங்கிக் களிப்புடன் வாழ்நாளைக் கழிக்கின்றன என்று பிறர் சொல்லலும் வேண்டுமோ? கோகிலங்கள் வசந்த காலங்களில் மென்றளிர்களை உண்டு நீலாவதியின் யாழிற் கேற்பப் பாடி சங்கீதத்தின் சுருதி நயத்தை அவளுக்குக் கற்பிக்கின்றன. புறாக்கள் ஆணும் பெண்ணுமாக கும், கும், என்ற சப்தத்தோடு ஒன்றின் மூக்கை ஒன்று பிடித்துச் சுழற்றிவிளையாடுகின்றன. மயூரங்கள் காலையில் சூரியனுக் கெதிரே தோகையை விரித்துத் தனது அழகால் கருவங்கொண்ட பெண்மகளைப்போல் நாற்புறமும் நோக்க மெல்ல மெல்ல நடந்து ஆடுகின்றன. மரத்தில் வசிக்கும் சில புறாக்கள் தங்களை அடித்துக் கொல்லும் எதிரியாகிய 'சவளன்' உயர வட்டமிடுவதைக் கண்டு நடுங்கி பூமியில்வந்து செடிகளின் பக்கங்களில் பதுங்கி அச்செடிகளுக்கு ஒரு விநோதமாகிய அழகைக்கொடுக்கின்றன. நீரும் நிழலும் விசேஷித்துப் பொருந்தினமையால் தெங்குகளில் கூட்டங் கூட்டமாய் அந்திப்பொழுதில் வந்து ஆவாரிக்கும் பசுங்கிளிகளின் சமூகங்கள் பார்ப்போர் மனதைக் கவர்ந்து பரவசப்படுத்துகின்றன. இன்னும் நாகாலி, மரங்



கொத்தி, மீன்கொத்தி, நாகணவாய், தூக்கணான், ஊர்க்குருவி முதலியவைகளின் இயக்கங்கள் பரம்பொருளின் சிருஷ்டி விநோதத்தைத் தெள்ளிதிற் புலப்படுத்தி நாஸ்திகனையும் தம்மாற்றங்கொள்ளச் செய்தன. விளையாடும் பொருட்டு அத்தோட்டத்தில் வளர்க்கப்பெற்று வரும் மான்பேடுகள் அவைகளின் மருண்ட பார்வையினாலும் துள்ளிக் குதித்தலினாலும் அவ்விடத்து இயங்கும் சிறுமியர்க்கு உற்சாகத்தை விளைத்தன. மா, பலா, வாழை முதலியவைகளின் கனிகள் முற்றப் பழுத்துக் கிழிந்து ஊடே வழியும் மதுவை உண்ட கவிகள் பரவசத்தால் ஓடியும் உலாவியும் கூடியும் களித்தும் ஆர்ப்பதைப் பார்த்தோர் ததிமுகனால் காக்கப்பட்ட சுக்கிரீவனது மதுவனம் கலிகாலத்தும் உளதோ என ஐயுற்றனர். இத்தகைய தோட்டத்துள் நடுநாயகமாக அமைந்த மாளிகையோ இந்திரவிமானமோ, விசுவகர்மா என்ற தேவ சிற்பியால் அமைக்கப்பெற்ற குபேரனது கொலுமண்டபமோ, புஷ்பக விமானமோ, அல்லது முன்னர் ஆதிசேஷனுக்கும் வாயுவுக்கும் தத்தம் வலிமையைக் குறித்து உண்டான விவாதத்தில் ஆதிசேஷன் தனது ஆயிரம் படங்களினாலும் இமயகிரியை மறைக்க வாயு தனது வலிமையினால் அணுவளவேனும் அசைக்க முடியாது மீட்டும் பிடிவாதத்தோடு சண்டமாருதமாக அடிக்கவும் அதனால் அண்ட சராசரங்கள் வருந்தவும் அதுகண்டு தேவர்கள் ஆதிசேஷனிடத்து ஒருமித்துவந்து "நீரே பலவான் என்று எங்களுக்குத் தெரிந்தவிஷயம். தாங்கள் இவ்விதமான விவாதத்தில் ஏற்பட்டால் ஸப்தலோகங்களும் நாசமடையு மல்லவோ; ஆகையால் வாயுவுக்குத் திருப்தி உண்டாகும்படி தாம் கொஞ்சம் இடங்கொடாவிடில் அகோராத்திரம் அவர் ஓயாது காற்றை வீசி ஸர்வத்தையும் நாசமாக்கிவிடுவர்", என வேண்ட அதற்கு ஆதிசேஷன் இணங்கி ஒரு படத்தைச் சற்றுத் தூக்கவும் வாயுவால் பிடுங்கியெடுக்கப்பட்ட கொடிமுடிகளில் ஒன்றோ இம்மாளிகையெனவும் தோற்றியது. அக்கட்டடத்தில் வருவோர்களை அமர்த்திப்பேச அமைந்த மண்டபமானது எட்டுக்கோணங்களை யுடையதாய் பிரப்பம்பாய்கள் பல்வகைக் கம்பளங்கள் முதலியன விரிக்கப்பெற்று நானாவித நாற்காலிகள் மேசைகள் முதலியன நிறைந்து விளங்கிற்று. சுவற்றோரங்களில் கண்ணாடிக் கதவுகளால் மூடப்பட்ட மர அலமாரிகளில் சட்டங்களும் மசோதாக்களும் அடங்கிய பல்வகைப் புஸ்தகங்கள் நிறைந்தன. இவ்விடத்தில் ஒருநாட் காலையில் ஒரு நாட்டுக்கோட்டைச் செட்டியாரும் அவரைச்சேர்ந்த சிலரும் பத்மநாபய்யர் உள்ளிருந்து வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

(இன்னும்வரும்.)

ஆர். ஸி. கிருஷ்ணசாமி.

## இலட்சுமணசிங்கின் வீரச்செய்கை.

### அத்தியாயம்-2

(160-ம் பக்கத் தொடர்ச்சி.)

சரியாய் 3-மணிக்கு ரொட்டிகிடங்கு வீதிக்கு நான் சென்றேன். அப்பொழுது லட்சுமணசிங்கு இன்னும் திரும்பிவரவில்லை. காலை 8-மணிக்கு அவன் வீட்டைவிட்டு வெளியில் போனதாக வீட்டுக்காரி சொன்னாள். என்றாலும் அவன் வர எத்தனை நாழிகை சென்றாலும், அவன் வரும் வரையில் காத்திருப்பதாகத் தீர்மானித்து அங்கேயே யிருந்தேன். அவன் ஆராய்ச்சியில் எனக்கு முன்னமேயே அதிகப் பிரியம் உண்டாயிற்று. நான் வேறு இடங்களில் கூறியுள்ள குற்றங்களின் குரூரத்தன்மை சிறிதேனும் இந்த கேசி லில்லாவிடினும் இந்த கேசின் இயல்பினாலும் கட்சிக்காரனின் உயர்ந்த அந்தஸ்தினாலும் அதற்கு ஒரு விசேஷ மகிமை யுண்டாயிற்று. இப்பொழுது என் சிநேகிதன் முயன்றிருக்கும் கேசில் விசேஷமிருந்தாலும் இல்லாவிட்டாலும், காரியங்களின் நிலைமையை உடனே கிரகித்துக்கொள்ளும் அவனது அபாரமான சக்தியும், அவன் காரியங்களை நடத்தும் முறைமையைக் கற்பதும், எளிதிலறியக்கூடாத பரமரகசியமா யிருப்பினும் மிக்க தீவிரத்தோடும் நுட்பத்தோடும் அவன் கண்டுபிடிப்பதை அறிந்துகொள்வதும் எனக்குப் பரமானந்தத்தை உண்டாக்குகின்றன. அவனது ஆராயும் சக்தி விசேஷமாய்க் கொண்டாடத் தக்கதே. எப்பொழுதும் எந்த விசாரணையிலும் அவன் வெல்வதையே கண்டு வழக்கப்பட்டவனாதலால் அவன் தவறக் கூடு மென்னும் சந்தேகமே என் மனதைவிட்டு நீங்கிற்று. நான்குமணி யடித்ததும் கதவு திறந்த சப்தம் கேட்டது; உடனே கந்தை உடையோடும் தழும்பிய முகத்தோடும் கிருதாவை விட்டுக்கொண்டு குடியனைப்போலக் காணப்பட்டவனாய் ஒரு வேலைக்காரன் உள்ளே நுழைந்தான். அடிக்கடி என் சிநேகிதன் பூண்டுகொள்ளும் ஆச்சரியகரமான மாறுவேஷங்களுக்கு வழக்கப்பட்ட நானும் அவ்வாறு வந்தது என் தோழன்தானென்று உடனே அறிய முடியவில்லை. அவனும் தலையை அசைத்துக்கொண்டே படுக்கையுள்ளே போய் வழக்கம் போல உயர்ந்த உடைகளை உடுத்துக் கொண்டு சிறிது நேரத்துக் கெல்லாம் வெளியே வந்தான், தன் இரு கைகளையும், தான் தரித்துக்கொண்டிருந்த சொக்காய் ஜேபி (பை) களில் போட்டுக்கொண்டே என் எதிரில் நின்று சிறிது நேரம் வயிறு புடைக்கச் சிரித்தான்.

'நல்லது, வாஸ்தவமாய்!' என்று கூறி உடனே வாயை மூடிக்கொண்டு மறுபடியும் சிறிதுநேரம் ஓயாது சிரித்துக் கைகால் ஓய்ந்தவனாய் நாற்காலியின்மேல் சாய்ந்தான்.



'அதென்ன ?'

'அது ரொம்ப பரிகசிக்கத்தக்கது. காலையில் நான் என்னசெய்தேனென்பதும், என் காரியம் எவ்வாறு முடிந்ததென்பதும் உன்னால் அநுமானிக்கவும் முடியாதென்று உறுதியாய்ச் சொல்வேன் ?'

'என்னால் நிதானிக்கமுடியாது. அலமேலுவின் நடவடிக்கைகளையும் அவள் வீட்டையும் வேவுபார்த்துக்கொண்டிருந்தாய் என்று நினைக்கிறேன்.'

'அப்படித்தான். முடிவோ மிக விநோதமானது. என்றாலும் உனக்குச் சொல்லுவேன். வேலை கிடைக்காத கூலிக்காரன்போல் வேஷந்தரித்து காலையில் 8-மணி அடித்ததும் வீட்டைவிட்டு வெளிக்கிளம்பினேன். குதிரைக்காரர்களுக்குள் ஒருவருக்கொருவர் விசுவாசமும் பட்சமும் அதிகம். நீ அவர்களிலொருவனாய்விட்டால் அறியவேண்டிய எதுவும் அறியலாம். சீக்கிரமே சுந்தரவனத்தைக் கண்டுபிடித்தேன். அது முன் பக்கத்தில் வீதிவரையிலும் வந்து இரண்டு அடுக்கு மெத்தையுள்ளதாய்க் கட்டப்பட்டுப் பின் பக்கத்தில் விசாலமான தோட்டமுள்ளதா யிருந்தது. மேஜை அலமாரி நாற்காலி முதலியவைகள் நிரப்பப்பட்டனவாய் அகன்ற பலகணிகளை யுடையதாய் விருந்தினரைக் கண்டு களித்து சம்பாஷிக்கும் வசன மண்டபம் வாயிலின் வலது பக்கத்திலிருந்தது. பின்னும் வண்டிகள் தங்குமிடத்திலிருந்து கூரை வழியாய் ஜன்னல்களை அணுக வேறு வழியுமிருந்தது; நான் அங்குச்சென்று பரிசோதித்துப் பார்த்ததில் வேறு ஒன்றும் எனக்குப் புலப்படவில்லை.

'தோட்டத்தின் ஒரு சுவரின் பக்கத்திலிருந்த சிறு தெருவில் நான் நினைத்தபடியே வண்டிகள் விடப்பட்டிருந்தன. அங்கிருந்த குதிரைகளைத் தேய்த்துக் குதிரைக்காரர்களுக்குச் சிறிது உதவிபுரிந்தேன். அதற் கீடாக இரண்டணாவும் அரைபுட்டி சாராயமும் சிறிது புகையிலையும் கிடைத்ததோடு அலமேலுவைப் பற்றியும், இன்னும் அந்த அக்கம்பக்கங்களில் எனக்குப் பிரியமில்லாவிடினும் காதுகொடுத்துக் கேட்கும்படி நேர்ந்த பலரைப்பற்றியும், எனக்கு தேவையானதற்கு அதிகமாகவே பல விஷயங்கள் அறிந்துகொண்டேன்.'

"அலமேலுவைப் பற்றி என்ன?" என்று கேட்டேன்.

'அவளா! அந்தப்பக்கத்திலுள்ளவர்களெல்லாம் அவளைப் பார்த்து மயங்கிப்போனார்கள். அவளினும் அழகுள்ளவள் இந்த பூமண்டலத்திலேயே இராள். வாத்தியம் வாசிக்கிறாள், ரொம்ப சுகஜீவி; தினமும் சாயங்காலம் 5-மணிக்கு வெளியில் சவாரிசெய்து 7-மணிக்குள் வீட்டுக்குத் திரும்பிவிடுவாள். பாடுங் காலங்களில் தவிர மற்றெப்பொழுதும் வெளியில் செல்லாள். ஒரே ஒரு புருஷன்தான் அவள் வீட்டுக்கு வருவான். என்றாலும் அவன் அதிகமாக வருகிறான். அவன் சிறிது மாநிறமாயும் அந்தமாயும் தாஷ்டீகமாயு மிருக்கிறான். ஒருநாளைக் கொருதரமாவது அவன் வராது போவ

இல்லை. ஒவ்வொருநாள் இரண்டு மூன்று தரமும் வருவான். அவன் லா (சட்டப்) பரிக்ஷையில் தேர்ந்த நாராயண னென்பவன். வண்டியோட்டுபவன் தோழனாவதிலுள்ள அநுகூலத்தைப் பாரும். அங்கிருந்து அவன் பங்களாவுக்கு எத்தனையோதரம் அவர்கள் வண்டியோட்டி யிருக்கிறார்கள் அவர்கள் சொன்னதையெல்லாம் கவனமாய்க் கேட்டு என்ன செய்யலாமென்று ஆலோசித்துக்கொண்டே சுந்தரவனத்துக்குச் சமீபத்தில் உலாவிக்கொண்டிருந்தேன்.

"நாராயண னென்பவன் இந்த கேசில் ரொம்ப முக்கியமானவன். அவன் ஒரு வக்கீல். அது சந்தேகத்துக்கு இடமாயிருக்கிறது. அவர்கள் இருவருக்கும் என்ன சம்பந்தம்? அவன் அடிக்கடி வரவேண்டிய காரணமென்ன? அவள் அவனது கட்சிக்காரியா, நட்பினளா, அல்லது வைப்பாட்டியா? கட்சிக்காரியா யிருந்தபட்சத்தில் அந்த பொடகிராப் படத்தை முன்னமேயே அவனிடத்தில் கொடுத்திருக்கவேண்டும். வைப்பாட்டியா யிருந்தாலோ அவ்வாறு செய்திருக்கமாட்டாள். இதில் இரண்டிலொன்று தெரிந்தால்தான் நான் சுந்தரவனத்தி னருகிலேயே தங்கி என் வேலையைப் பார்ப்பதும் அல்லாவிடின் அந்த லாயருள்ள காட்டுக்கோவிலுக்குச் செல்வதும் தீர்மானிக்கலாம். அது வெகு நுட்பமான விஷயம் ஆதலால் நான் பரிசோதனை செய்ய வேண்டிய இடமும் அதிகமாயிற்று. இம்மாதிரி ஒவ்வொரு விஷயங்களையும் விடாது சொல்வதை உனக்குச் செவி சாய்க்கப் பொறுமை யுளதோ இல்லையோவென்று பயப்படுகிறேன். என்றாலும் என்செய்வது, அந்நிலைமையை நீ அறியவேண்டுமானால் எனது சிறு கஷ்டங்களும் உனக்குத் தெரியவேண்டு மல்லவா?"

"நீ சொல்வதை ஒன்றும் விடாது கவனத்தோடு கேட்கிறேன்" என்று மொழிந்தேன்.

"நான் என்ன செய்வதென்று என் மனதிலேயே ஆராய்ந்துகொண்டிருக்கையில் ஒரு வண்டி சுந்தரவனத்துக்கு வந்தது. அதிலிருந்து ஒரு கனவான் இறங்கினான். அவன் மாநிறத்தையும், விசேஷ அழகையும் நீண்ட மூக்கையும் கிருதாவையும் நோக்கின் நான் கேள்விப்பட்ட மனுஷனாகவே தோன்றினான். அவன் வெகு அவசரமாக வந்தவனாகக் காணப்பட்டான். வண்டிக்காரனை வெளியில் காக்கும்படி இரைந்து கூறி கதவைத் திறந்த வேலைக்காரியையும் தான் வந்த வேகத்தால் அப்பால் தள்ளி அவன் சொந்தவீடுதானோ வென்று அவனைப் பார்ப்பவர் எண்ணும்படி உள்ளே சென்றான்.

"அவன் அரைமணி நேரந்தான் அவ்விட மிருந்தான். அவன் மிக ஆத்திரத்தோடு பேசிக்கொண்டும் கை வீசிக்கொண்டும் முன் பக்கமிருந்த மண்டபத்தில் அவன் உலாவியதை ஜன்னல்களின் வழியாய் நான் கண்டேன்



அவளோ என் கண்ணுக்குப் புலப்படவில்லை. சிறிது நேரத்துக்கெல்லாம் முன்னைவிட வெகு ஆத்திரத்தோடு அவன் வெளியில்வந்தான். வந்து வண்டியினுள் காலை வைத்ததும் தனது ஜேப்பியிலிருந்த தங்கக் கடியாரத்தை எடுத்து ஆவலோடு பார்த்தான். வாயுவேகமாய் ஓட்டு, முதலில் பரங்கிமலைச் சாலையிலுள்ள புஷ்பக்கடைக்குச்சென்று அங்கிருந்து திருவான்மியூர் தியாகராஜ சுவாமிகள் ஆலயத்திற்குச் செல்லவேண்டும். 20-நிமிஷத்தில் செல்வாயானால் உனக்கு அரை மோகரா தருவேன் என்று வண்டிக்காரனுக்கு இரைந்து கூறினான்.

அவர்கள் வேகமாய்ச் சென்றார்கள் அவர்கள்பின் செல்வது யுக்தமா அல்லவாவென்று நான் நிதானித்துக் கொண்டிருக்கையில் அருகிலுள்ள சந்தினின்றும் ஒருசிறு பொட்டிவண்டி வந்தது. வண்டிக்காரனும் தான் போட்டிருந்த சொக்காயின் பொத்தான்களைப்பாதி மாட்டினதும் மாட்டாததாயுமிருந்தான். குதிரையின்மேலிருந்த சேணத்தின் வளையங்களும் வார்ப்பூட்டைவிட்டு விலகியிருந்தன. அவன் அதைப் பூட்டும் பூட்டாததற்கு முன்னமே அவளும் வாயிற்கதவைத் திறந்து வண்டியில் ஏறினாள். அப்பொழுது சிறிதுதான் என் கண்ணுக்கு அவள் தென்பட்டாள். கண்டவர் உயிரைக்கவரத்தக்க முகத்தையும் அழகையும் உடையவளென்று நான் அறிய அதுபோதுமானதாயிருந்தது.

"ராமசாமி, திருவான்மியூர் தியாகராஜர் ஆலயம். அரைமணியிற்சென்றால் உனக்கு அரைசவரன்" என்று கூறினார்.

"ராம்கோபால், இது நல்ல சமயமாயிற்றே. நான் கைவிடலாமோ? வண்டியின் பின்னாலேயே ஓடுவதா, வண்டியின் பின்தட்டில்போய் உட்காருவதா என்று நான் சற்று ஆலோசித்துக்கொண்டிருக்கையில் அவ்வீதியில் ஒரு குதிரைவண்டி வரக்கண்டேன். வண்டிக்காரனும் நான் சொன்ன வண்டிவாடகை மிகக் குறைவென்று சற்று மயங்கினான். அவன் வாய்திறப்பதற்கு முன்னமே நான் வண்டியில் குதித்தேறிக்கொண்டேன். 'திருவான்மியூர் தியாகராஜர் கோவில் - 20-நிமிஷத்தில் சென்றால் உனக்கு அரைசவரனென்று நானும் மொழிந்தேன். அப்போ 12-மணி அடிக்க 25-நிமிஷம். என்ன நடக்கப்போகிறதோ அது விசதமாயிருந்தது.

என் வண்டி வெகு வேகமாய்ச் சென்றது, அவ்வளவு வேகமாய் நான் ஒரு நாளும் சென்றதில்லை. ஆயினும் எனக்கு முன்னமேயே மற்றவர்கள் போய்ச் சேர்ந்தார்கள். ஆலயத்தின் எதிரில் நான் செல்கையில் பெரிய வண்டியும் சிறு பொட்டி வண்டியும் குதிரைகள் வாயினின்றும் நுரையைத்தள்ள, அங்கு நின்றன. அந்த மனிதனுக்கு வாடகையைக் கொடுத்து விட்டு கோவிலுக்குள் சென்றேன். நான் பின் தொடர்ந்த இருவரையும், அவர்களோடு வாதாடிக்கொண்டிருந்த ஒரு வாத்தியாரையும் தவிர வேறு ஒரு பிராணியையும் அங்குக்காணிலேன். சந்நதிக் கெதிரில் அவர்கள் மூவரும் ஒரு கூட்டமாய்

நின்று கொண்டிருந்தார்கள். பொழுது போக்குக்காக உலாவுவன்போல கோவிலின் வெளிப் பிராகாரத்தில் நான் நின்றிருந்தேன். திடீரென்று, சந்நதிக்கெதிரில் நின்றிருந்த மூவரும் நான் ஆச்சரியப்படும்படி என் பக்கமாய்ப் பார்க்க, நாராயணனும் வெகு தீவரத்தோடு என்னிடம் ஓடி வந்தான்.

'இது நல்ல காலம். நீ போதும், வா, வா' என்றென்னைக் கூவி யழைத்தான்.

'எதற்காக' என்று கேட்டேன்.

'வா ஐயா வா, மூணு நிமிஷந்தான் இருக்குது. இல்லாவிட்டால் அது நியாயமாகாது.'

"என்னைச் சந்நதிக்கெதிரில் இழுத்துக் கொண்டு போனார்கள். நான் இருந்த இடத்தை நான் அறியு முன்னமே என் காதில் என்னமோ மொண மொண வென்று மந்திரங்கள் கேட்டன. எனக்குத் தெரியாத அநேக விஷயங்களை நான் 'ததாஸ்து' என்று சொல்ல வேண்டியிருந்தது. நாராயணன் என்னும் பிரமசாரி கையில் அலமேலு வென்னும் கன்னிகையை நான் கைப்பிடித்துக் கொடுக்க வேண்டியிருந்தது. எல்லாம் ஒரு நிமிஷத்தில் நடந்தன. அந்தப் பிரபு ஒரு பக்கத்தில் என்னை நமஸ்கரிக்கவும், மற்றொரு சார் அந்த அம்மாள் வந்தனமளிக்கவும் வாத்தியாரும் என்னைக் கண்டானந்திக்கவுமா யிருந்தேன். அன்று என்னை அவர்கள் கொண்டாடினமாதிரி வேறெவரும் ஒரு நாளும் என்னைக் கொண்டாடினதில்லை. அதை நினைக்க நினைக்க எனக்கு இன்னம் சிரிப்புண்டாகிறது. வாத்தியாரும் பிரம்மத்துவம் மூன்றும் பேர் யாருமில்லாமல் தான் விவாகத்தை நடத்த மாட்டேனென்று கண்டிப்பாய்க் கூறி விட்டமையாலும் மூன்றும் பேரைத் தேடிக்கொண்டு வெளியில் போக வேண்டியது அவசியமா யிருந்தமையாலும் என்னைக் கண்டது அவர்களுக்கு அதிர்ஷ்டவசமா யிருந்தது. கல்யாணப் பெண்ணும் எனக்கு ஒரு சவரன் வெகுமதியாகக்கொடுத்தாள். அந்தவிசேஷத்தின் அறிகு அதை கடியாரத்தில் போட்டு தரிக்க நினைத்திருக்கிறேன்."

"இது நாம் எதிர்பார்க்காத விதமாய் நடந்தது. அப்புறம்?" என்றேன்.

"சரி, என் ஏற்பாடுகளுக்குக் குறைவு நேரிடும்போல் தோன்றுகிறது. தம்பதிகள் உடனே இந்நாட்டைவிட்டுச் செல்வார்கள் போல் தோன்றினர். ஆதலால் உடனே நான் தக்க யத்தனங்கள் செய்ய வேண்டும். ஆயினும் கோயில் வாசற்படியண்டை அவர்கள் பிரிந்தார்கள். அவனும் தனது கர்ட்டுக் கோவிலுக்குச் சென்றான். அவளும் தன் வீட்டுக்குத் திரும்பினான். 'வழக்கம் போல 5-மணிக்கு நந்தவனத்துக்கு வருகிறேன்' என்று அவளும் அவனை விட்டுப் போகையில் சொன்னாள். வேறொன்றும் என் காதில் படவில்லை. அவர்கள் வெவ்வேறு திக்கு நோக்கி வண்டியில் சென்றார்கள். நானும் என் ஏற்பாடுகளை உத்தேசித்துத் திரும்பினேன்."



"அதை யென்ன?"

சத்திரக்காரியைக் கூப்பிட்டுக் கொண்டே, "கொஞ்சம் பழஞ் சோறும் புளிச்ச தண்ணியும் கொண்டுவா. நான் அதிக வேலையா யிருந்ததால் எனக்குச் சாப்பாட்டுக் கியாபகமில்லை. இன்று சாயந்திரம் வேலை இன்னம் அதிகமாயிருக்கும். உனது உதவியும் எனக்கு வேணும்."

"எனக்கு நிரம்ப சந்தோஷம்."

"சட்டத்துக்கு விரோதமா யிருந்தால் அதைப்பற்றி உனக்கு அக்கரையில்லையே."

"கொஞ்சங்கூட யில்லை."

"ஒரு வேளை நாம் அகப்பட்டுக் கொள்வோம் போலிருந்தால்."

"நல்ல காரியமா யிருந்தால்"

"ஓ! காரியம் ரொம்ப நல்லது."

"அப்படியானால் நான் உன் மனுஷன் தான்."

"நான் உன்னை நம்பியிருக்கலாமே!"

"ஆனால் உனக்கென்ன வேண்டும்?"

"ஹோட்டல்காரி உணவு கொணர்ந்ததும் உனக்கு விவரமாய்ச் சொல்லுகிறேன்." உணவு வந்ததும் அதின் பக்கந் திரும்பி "நான் சாப்பிடுகையிலேயே சொல்ல வேண்டும். அப்புறம் சாவகாசமில்லை. இப்போ கிட்டத்தட்ட 5-அடிக்கப் போகிறது. இன்னம் 2-மணிக்குள் நாம் அங்கிருக்க வேண்டும். அலமேலுவும் 7-மணிக்கு வெளியிலிருந்து திரும்பி வருவாள். அவள் வருவதற்குள்ளேயே நாம் சுந்தரவனத்திலிருக்க வேண்டும்" என்று சிங்கும் கூறினான்.

"அதற்கு அப்புறம் என்ன?"

"அதெல்லாம் எனக்கு விட்டு விடு. நடக்க வேண்டியவைப்பற்றி முன்னமேயே ஏற்பாடு செய்திருக்கிறேன். உன்னை நான் கட்டாயப் படுத்துவதெல்லாம் ஒரே விஷயத்தைப்பற்றி தான். எது நடந்தாலும் நீ வாய் திறவாது சும்மாவிருக்க வேண்டும். தெரிஞ்சுதா?"

"நான் ஒருவரோடும் சேராது சும்மா யிருக்கவேண்டுமா?"

'ஒன்றுமே செய்யக்கூடாது. மனதுக்கு துக்கத்தை யுண்டாக்கத்தக்க காரியங்கள் ஏதேனும் நடக்கும், நீ அதில் சேரக்கூடாது. அது வீட்டுக்குள் என்னைத் தூக்கிக்கொண்டு போவதாய் முடியும், நாலைந்து நிமிஷத்துக் கெல்லாம் வசனமண்டபத்தின் ஜன்னல்கள் திறந்திருக்கும், அந்த ஜன்னல்களுக்கு எதிரில் நீ நிற்கவேண்டும்.'

"சரி."

"நான் நீ பார்க்கும்படியான விடத்திலேயே யிருக்கிறேன். நீ என்னைப் பார்த்துக் கொண்டே யிருக்கவேண்டும்."

"அப்படியே."

"நான்—இந்தமாதிரி கையைத் தூக்கும்போது நீ எறியும்படி நான் உனக்கு இப்பொழுது கொடுக்கிறதை எறிந்துவிட்டு தீ! தீ!! என்று கூச்சலிட வேண்டும். தெரிகிறதா?"

"நன்றாய்த் தெரிகிறது."

"அதுவும் அதிக பளுவானதன்று, சாதாரண பாணக்குழாயில் தானே பற்றும்படி இருபக்கமும் காது வைத்துள்ளது. உன் வேலை அவ்வளவு தான். நீ 'தீ' என்று கூச்சலிட்டதும் அநேகர் அதே மாதிரி இரைச்சலிடுவார்கள். உடனே நீ வீதியின் கோடிக்குப் போய் விடலாம். நானும் பத்து நிமிஷத்துக்கெல்லாம் உன்னண்டை வந்து சேர்வேன். நான் சொன்னது உனக்கு நன்றாய் விளங்கி யிருக்குமென்று எண்ணுகிறேன்" என்று தன் ஜேப்பியிலிருந்த புகைச் சுருட்டுகளை எடுத்துக் கொண்டே சொன்னான் சிங்கும்.

"நான் ஒருவரோடும் சேராதிருந்து சாளரத்துக்குச் சமீபமாய் நின்று உன்னைப் பார்த்துக் கொண்டே யிருந்து உன்னுடைய சைகையைக் கண்டதும் இந்த வஸ்துவை விட்டெறிந்து தெருவின் கோடியில் உனக்காகக் காத்துக் கொண்டிருக்க வேண்டும்."

"அப்படியே தான்."

"அப்படியானால் நீ என்னை முழுவதும் நம்பலாம்."

"அது சரி, நான் இன்றைக்கு நடிக்க வேண்டியதற்குத் தக்க வேஷத்தைத் தரிக்க சமயமாயிற்றென்று நினைக்கின்றேன்."

"அவன் தனது பள்ளியறைக்குச் சென்று சிறிது நேரத்திற்கெல்லாம் பார்ப்பவர் கண்டுகளிக்கும்படியாய், கபட மற்ற மனதுடையவனாய் எல்லாப் பிராணிகளையும் சமமாக நினைக்கும் சுத்த சன்னியாசியாய்த் திரும்பினான்.

அவனது காஷாய வஸ்திரமும், கைதண்டமும், அன்புநோக்கும் பார்த்தால் 'சங்கராசாரி திரும்பி வந்தனரோ' என்னும்படியாயிருந்தது. அவன் தனது வஸ்திரங்களை மாத்திரம் மாற்றினானென்று சொல்லக் கூடாது. அவன் பார்வையும் நடவடிக்கையும் அவனுடைய ஆத்துமமுமே அவன் பூண்ட நூதன வேஷத்துக்கு அமைந்திருந்தது என்னலாம். அவன் குற்றங்களவுகளைக் கண்டு பிடிப்பதில் கவனத்தைச் செலுத்தும் போதெல்லாம் நன்றாய் நடிப்பவன் ஒருவனை நாடக மிழந்ததென்றும், நல்ல ஞானமுள்ளவன் ஒருவனை சாஸ்திரமிழந்ததென்றும் சொல்லலாம்.



6¼-அடித்ததும் நாங்கள் ரொட்டி கிடங்கு வீதியை விட்டோம். நாங்கள் சுந்தரவனத்தினருகில் செல்லுகையில் 7-அடிக்க 10-நிமிஷமிருந்தது. அப்பொழுதே எங்கும் இருட்டாய்ப் போயிற்று. பங்களாவுக்குடையவர்கள் வரவை எதிர் நோக்கி சுந்தரவனத்தண்டை நாங்கள் செல்லுகையில், எல்லாரும் விளக்கேற்றிக் கொண்டிருந்தார்கள். சிங்கு எனக்குச் சொன்னதிலிருந்து வீடு எவ்வாறு இருக்குமென்று நினைத்தேனோ அவ்வாறே இருந்தது. ஆனால் இடம் மாத்திரம் நான் நினைத்தபடி இராமல் சற்று ஒதுக்கிடமாகவேயிருந்தது. எனினும் விசேஷ சப்த மில்லாத அச்சிறு தெருவில் அந்த வீட்டில் உற்சாக ஆரவாரம் அதிகமென்றே சொல்ல வேண்டும். பேதை உடைகளைத் தரித்திருந்த சிலர் ஒரு பக்கமாய் நின்று சுருட்டைப் பிடித்துக்கொண்டும் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தார்கள். சாணைபிடிப்போன் ஒருவன் தன் சக்கிரத்துடனும், இரண்டு காவற்காரர்கள் தாதிப்பெண்ணுடன் விளையாடிக் கொண்டும் நகைத்துக் கொண்டும், நன்றாய் ஆடைகள் தரித்த சிறுவர் பலர் தங்கள் வாய்ப் புகைச் சுருட்டுடனே இங்கு மங்கும் உலாவிக்கொண்டும், இருந்தார்கள்.

சிங்கும் அந்த வீட்டுக் கெதிரில் இப்படியும் அப்படியும் உலாவிக் கொண்டே "நீ பார், இந்த விவாகத்தால் நமது காரியம் எளிதில் அனுகூலமாகும். அந்த புகைப்படம் இருதலைப்பாம்பு போல் ஆகிறது. தனது ராணி கண்ணுக்கு அந்தப்படம் எங்கே தென்படுகிறதோ என்ற திகில் நமது கட்சிக்காரனாகிய அரசனுக் கெவ்வள விருக்கிறதோ அவ்வளவு திகில் நாராயணன் எங்கே அதைப் பார்த்து விடுகிறானோ வென்று அலமேலுவுக்கும் இருக்கும். ஆகையால் இப்பொழுது இருக்கும் சந்தேகம் அந்தப்படத்தை நாம் எங்குக் காணலாமென்பதே" என்று சொன்னான்.

"ஆமாம், எங்கே?"

"அதைத் தன்னோடு கூட கொண்டு போக மாட்டாள். ஏனெனில் அது மிகப் பெரியதென்று முன்னமே கேள்விப்பட்டிருக்கிறோம். பெரிதானதால் ஒரு ஸ்திரீ தன் ஆடையில் மறைத்து வைத்தல் முடியாத காரியம். மேலும் அரசனும் தன்னை வழி மறித்து அப்படத்தைத் தேடுவான் என்பதும் அவளுக்குத் தெரியும். அவ்வாறு இரண்டு தரம் முன்னே அரசன் முயன்றிருக்கிறான். ஆகையால் அவள் அதைத் தன்னோடு வெளியில் கொண்டு போவதில்லையென்று நிதானிக்கலாம்."

"அப்படியானால் அது எங்கே?"

அவளுடைய பாங்கியிலாவது வக்கீலிடத்திலாவது இருக்கலாம். ஆனால் அப்படி யிருக்குமென்று எனக்குப் புலப்படவில்லை. ஸ்திரீகளுக்கே சாதாரணமாய் எதையும் ஒளிக்கும் குணமுண்டு. அதுவும் இரண்டாம் பேர் அறியாத

படி தாங்களே மறைப்பார்கள். யாரிடத்திலாவது ஏன் அவள் அதை ஒப்புவிக்க வேண்டும்? அவள் தன்னைத் தானே சுலபமாய் நம்பக்கூடும். ஆனால் வியாபாரி யார் செல்வார்க்குக் குட்படுவாளோ அதை அவளால் சொல்ல முடியாது. மேலும் இன்னம் சிறிது நாளைச் செல்லாம் அதை அவள் உபயோகிக்கத் தீர்மானித்ததை ஞாபகப் படுத்திக்கொள். ஆகையால் தான் வேண்டுமென்று விரும்பும்போது எடுக்கக் கூடிய விடத்திலே யிருக்க வேண்டும். ஆகையால் அது அவள் வீட்டிலேயே யிருக்கவேண்டும்."

'ஆனால் இரண்டு தரம் கொள்ளைக்காரர்கள் வீட்டைத் தாக்கித் தேடினார்களே.'

'சே! அவர்களுக்கு அதைத் தேடத் தெரிய வில்லை.'

"ஆனால் நீ எப்படிக் காண்பாய்?"

"நான் தேடப் போகிறதில்லை."

"ஆனால் எப்படி?"

"அவளை எனக்குக் காண்பிக்கும்படி செய்வேன்."

"ஆனால் அவள் மாட்டேனென்கிறாள்."

"அவளால் முடியாது, சக்கிரங்களின் முழக்கங் கேட்கிறது. அது அவள் வண்டி தான். நான் சொன்னபடி ஒன்று கூடத் தப்பாமல் நடக்கவேண்டும்."

(இன்னும்வரும்.)

க. கிருஷ்ணசாமிஅய்யர்.

## * இராமாயண ஸங்கிரகம்.

அஞ்சிலே யொன்று பெற்றா னஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்றா றாக வாரியர்க் காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற வணங்கைக்கண் டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தா னவனெம்மை யளித்துக் காப்பான்.

### அயோத்தியா காண்டம்.

(138-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கௌசல்யை கைகேயியினது அந்தப்புரஞ் சென்று அரசன் பூமியில் வீழ்ந்திருந்த வலக்கோலங்கண்டு அதைப் பார்க்கப் பொறாது அலமந்து ஆற்றி உயிர் விட்டுப்போன உடல் போன்று கீழே வீழ்ந்து ஸ்மரணை தப்பிப்

* இதிலாங்காங்கு எடுத்தாளப்பட்ட செய்யுளின் பொருளறிந்து கொள்ளக் கூடாத சிறுவர் சிறுமியர் முதலாயினோர், செய்யுளைக் கவனியாது வசனத்தையே வாசித்துக் கதையினை யறியலாகும்.



பிறகு மூர்ச்சை தெளிந்தெழுந்து பலவிதமாய் அரசனை நோக்கி அவன் தன் சுதன் இராமனுக்கிழைத்த தீங்கைக் குறித்து துக்கமும் ஏக்கமுங் கொண்டு காரண மின்ன வென்றறியும் பொருட்டுப் பலவாறாக அரற்றுவாளாயினாள்.

"திரையார் கடல்சூ ழுலகின் றவமே திருவின் திருவே
நிரையார் கலையின் கடலே நெறியார் மறையின் னிலையே
கரையா வயர்வே னெனைநீ கருணை யினோ டினிதென்
றுரையா யிதுதா னழகோ வுலகே முடையா யென்னும்."

"மின்னின் றனைய மேனி வெறிதாய் விட நின் றதுபோல்
உன்னுந் தகைமைக் கடையா வுறுநோ யுறுகின் றுணரான்
இன்னொன் றுரையா னென்னே யிதுதான் யாதென் றறியேன்
மன்னன் தகைமை காண வாராய் மகனே யென்னும்."

பட்டாபிஷேக மகோற்சவத்தைக் கண்டு களிக்க வந்த நிருபர் முனிவர் முதலானவரும் இவ்வழுகுரலோசையைக் கேட்டு இதற்கு யாதுகாரணமென யோசித்துக் கொண்டிருக்க வசிட்டர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு அரசனிருந்த இடத்திற்கு வந்து பார்க்குமளவில் அவன் இருந்த நிலைகண்டு, மேலே என்ன சம்பவிக்குமோ வென்று ஐயுற்று அரசனருகிற் சென்று பார்க்கையில் "அரசனுக்கு உயிர் இதுவரையில் இருக்கிறது. இனி அவன் இறவாதிருப்பது அருமை. உணர்வு மறந்திருக்கிறான்" என்று தேர்ந்து, அங்கழுது கொண்டிருக்கும் கோசலையை இதற்குக் காரணம் யாதெனக் கேட்பதரிதாகலின், இதயமென்பது சிறிதேனு மிலாது போற்றோன்றிய கைகேயியை இவ்வாறு அரசனிருப்பதற்குக் காரணம் யாதென வினவியபோது நடந்ததை நடந்த வாறு சொல்லி முடித்தாள். வசிட்டர் இதைக் கேட்டு மனம் வருந்தி அரசனைத் தரையினின்று எடுத்து நிறுத்தி இனிய வார்த்தை சொல்லலும் கைகேயினது தீச்சொல்லாகிய விஷம் நீங்கித் தன் காதற் புதல்வனாகிய 'ஸ்ரீராம'ருடைய பெயரே அவன் வாயிலெழக் கேட்டு அரசனுயிரோடிருக்கிறானெனத் தேர்ந்து, அரசன் சற்றே தெளிந்ததும் அவனை நோக்கி "அரசே! இத்துக்கத்தை யொழித்துவிடு, நம்பிராமனே நாடாள்வான். அச்சம் வேண்டாம்; அதற்குத் தகுந்த ஏற்பாடு உடனே செய்தல் நல"மென்று சொல்லி, பக்கத்திலிருந்த கைகேயியைப் பார்த்து, "இனியாயினும் தயை கூர்ந்து உன் செல்வப் புதல்வனாகிய இராமனுக்கு அரசும், இவனுக்குப் பட்டமில்லாவிடில் உயிர்துறக்க வெண்ணியிருக்கும் சனங்களுக்கும் உன் கணவற்கும் உயிரும் உதவி, உனக்குண்டாகும் வசையையும் தீர்த்துக்கொள்" என்று புத்திமதி சொல்லியும்,

"மொய்ம்மாண் வினைவே றறவென் றொழிவான் மொழியா முன்னம்
விம்மா வழுவா ளரசன் மெய்யிற் றிரிவா னென்னில்

இம்மா வுலகத் துயிரோ டினிவாழ் வுகவே னென்சொல்
பொய்ம்மா ணாமற் கின்றே பொன்று தொழியே னென்றாள்."

அவள் முனிவரை நோக்கி, "ஐயா! அரசன் சொன்ன சொல்தவறினால், யான் உயிரோடிரேன். உயிரை உடனே மாய்த்துக்கொள்வேன்" என்னலும் அவர், "இது உனக்கு முறையன்று. கொழுநன் இறந்துபடுவானென்பதும், உலகம் உன் செயலை ஒப்பாதென்பதும், பாவச்செய்கையின் பயனாகிய பழியும் உலகெங்கும் பரவுமென்பதும் நீயறியவில்லையே! யான் சொல்லியும் நீ கொள்ளவில்லையே! இச்செய்கை உனக்குத் தகுதியன்று,"

"கொழுநன் றுஞ்சும் மெனவுங் கொள்ளா துலகம் மெனவும்
பழிநின் றுயரும் மெனவும் பாவம் முளதா மெனவும்
ஒழிகின் றிலையன் றியுமொன் றுணர்கின் றிலையா லினிமேல்
மொழிகின் றனவென் னென்று முனியும் முறையன் றென்பான்.

என்று சொல்லியும் மனமிரங்காததனைக் கண்ணுற்றுக் கோபமூண்டு அவளை நோக்கி "இவ்வளவு நிர்த்தாக்ஷண்ணியமாயிருக்கிறாயே, நீ பெண்தானோ! பேயோ! குலத்தை யெரிக்குந் தீயோ! பத்ரகாளியோ! மகனை வனத்திற்குப் போவென்று சொல்வதற்கு வாய் கூசி, மன்னவன் மனநொந்து மெய் தளர்ந்திருக்கையில், வனத்திற்குப் போம்படி நீயோ சொன்னாய்! அவனோ போகாதிருப்பன். குலத்திற்குரிய புகழையும் மற்றவர்களுடைய உயிரையும் மாய்க்கவந்த தீயோய்! உலகத்திலுன்னைப் போன்றவர்களும் உளரோ!" என்றுபடித்ததைக் கேள்வியுற்று, மனந்தளர்ந்து நின்றமன்னனும் கைகேயியைப்பார்த்து "ஏ பாவி, வேண்டுமாயின் காட்டிற்கு நீ போகலாமே! என்னுயிர்க்குயிராகிய இராமனை அகப்புவித்து விட்டாயோ! அவனும் உன் சொற்படிபோய் விட்டானே. இதற்கெல்லாம் காரணம் நானேயொழிய இப்போது உன்னை நோவதில் யாது பயன்!

"கண்டே னெஞ்சங் களிவாய்க் கனியாய் விடநா னெடுநாள்
உண்டே னாதலி னீயென் னுயிரை முதலோ டுண்டாய்
பண்டே யெரிமுன் னுன்னைப் பாவீ தேவி யாகக்
கொண்டே னல்லேன் வேறோர் கூற்றந் தேடிக் கொண்டேன்."

யமனே யிப் பெண்ணுருவாய் எனக்கு வாய்த்ததின் பயன் இது! இதற்கு யான் செய்வது யாது." எனப் புலம்பலானான்; பின்பு வசிட்டரை நோக்கி "ஐயா! இவள் எனக்குத் தாரமல்லள். கூற்றுவனைப் போன்றவள். இவள் கழுத்தினாண் இவள் மகன் பரதனுக்கு காப்பிணைகப் போகிறது. பரதனும் என் உத்தரக்கிரியைக் குரியவனல்லான்" என்று சொல்லித் திரும்புகையில் பக்கத்திருந்து அலமந்தழலுங் கோசலையைக் கண்டு துன்புற்று "உன்னையும் வைத்துக் காணவில்லையோ மகன்!" என்று தளர்ந்து அயிர்த்தான்.



இவற்றையெல்லாங் கண்ட கோசலை கணவன் மீது யாதொரு குற்றமுமின்றெனத் தெளிந்து சக்களத்தியே காரணமென்றோர்ந்து கணவனைத் தேற்றுவாளாயினாள். அவனும் தன்னைத் தானே வெறுத்துக்கொண்டு தானும் தன் மகன் காட்டிற்கேகு முன்னம் உயிர் துறப்பது உண்மையென்பது கண்டான்.

"பொன்னின் முன்னம் மொளிரும் பொன்னே புகழின் புகழே
மின்னின் மின்னும் வரிவிற் குமரா மெய்யின் மெய்யே
என்னின் முன்னம் வனநீ யடைதற் கெளியே னல்லேன்
உன்னின் முன்னம் புகுவே னுயர்வா னகம்யா னென்றான்."
"அள்ளற் பள்ளப் புனல்சூழ் தகன்மா நிலமும் மரசும்
கொள்ளக் குறையா நிதியின் குவையும் முதலா மெவையு
கள்ளக் கைகே சிக்கே யுதவிப் புகழ்கைக் கொண்ட
வள்ளற்றன மென்னுயிரை மாய்க்கும் மாய்க்கும் மென்றான்."

அரசன் தான் இறந்துபடுவானென்னு மெண்ணம் அதிகரித்து அலமந்து கிடத்தலைக் கண்ட வசிட்டர் அரசனை நோக்கி "அரசே, அயர்தல் வேண்டாம். அவன் காட்டிற் கேகாவண்ணம் நான் போய் ஏற்பாடு செய்து விட்டு வருகிறேன்" என்று சொல்லிப் போய் விட்டார் வசிட்டர்.

தசரதன் கோசலையை நோக்கி "இராமன் காட்டிற்கேகா வண்ணமிரான். என்னுயிரோ போகாதிராது. இதற்கெல்லாங் காரணம் முன்னொரு முனிவரெனக் கிட்ட சாபந்தான்." என்று

"பொன்னார் தோளான் சானே புகுதப் புகுத றவிரான்
என்னா ருயிரோ வகலா தொழியா திதுகோ சலைகேள்
முன்னா ளொருமா முனிவன் மொழியுஞ் சாபம் முளதென்
றந்நா ளுற்ற தெல்லா மவளுக் கரசன் னறைவான்."

அதன் வரலாற்றையும் விவரமாகச் சொல்ல ஆரம்பித்தான் :—

"ஒருமுனிவன் * வயோதிக பருவமடைந்தும் தேசயாத்திரை செய்ய விருப்புற்ற தனது தாய் தந்தை † யரிருவரும் கண்ணொளியிழந்ததனால் அவர்களைத்தான் ஒரு காவடி செய்து அதிற்றூக்கி வைத்துக்கொண்டு அவர்கள் விரும்பிய பற்பல தேசங்களுக்கும் அவர்களைக் கொண்டேகினான். ஒரு நாள் அவர்களுக்கிருந்த நாவறட்சியினால் தம் மகனைத் தங்களுக்குத் தண்ணீர் கொண்டுவந்து கொடுக்கும்படி வேண்டினார்கள். அவன் அப்படியே காவடியை இறக்கி வைத்து விட்டு அருகிலிருந்த ஓர் குளத்திற்குத் தண்ணீர் கொணர்வதற்காகச் சென்றான். இஃதிப்படி நிற்க நான் தற்செயலாய் அன்றைத்தினம் அந்த பக்கத்தில் வேட்டையாடச் சென்றேன். முனிவர் புதல்வன் மொள்ளும் ஜலவோசையை யானை ஜலமருந்தும் சப்தமென்றுன்னி யானையைக்

* சுரோசனன், † சலபோசனன்.

பிடிக்கும் நிமித்தம் ஒரு பாணம் எய்தேன். அப்பாணம் முனிபுத்திரன் மீது பாய்ந்தது. அதன் வேகம் பொறுக்க மாட்டாது அவன் அலறுவதைக் கேட்டு யானை யென்று நினைத்தது பிழை யெனத் தேர்ந்து போய்ப் பார்க்குமளவில் முனி புத்திரன் வருந்துவதைக் கண்ணுற்று யானும் வருத்தப்படுவதைக் கண்ட அவன், "ஐயா நீர் தெரிந்து செய்ததல்லவே. யானை நீருண்ணும் சப்தமென மயங்கி இப்படிச் செய்து விட்டீர்! துக்கிப்பதனாற் பயனென்! வினையின் பயன் எனக்குச் சித்தித்தது. அதிக தாக விடாயி

"இருகண் களுமின் றியதாய் தந்தைக் கும்மீங் கவர்கள்
பருகும் புனல்கொண் டேகல்வான் படர்ந்தேன் பழுதா யினதால்
இருகுன் றனைய புயத்தா யிபமென் றுணரா தெய்தாய்
உருகுந் துயரந் தவிர்நீ யூழின் செயலீ தென்றே."

னால் வருந்தும் என்னுடைய தாய் தந்தையர்க்கு இப்பாத்திரத்திலுள்ள ஜலத்தைக் கொண்டு போய்க் கொடுத்து எனக்கு மரணம் சம்பவித்த சமாசாரத்தையும் அவர்க்குச் சொல்வீராக" என்று சொல்லித் தன்னுயிர் துறந்தான். நான் வருத்தத்துடன் மட்பாத்திரத்துள்ள ஜலத்தைக் கொண்டு தாவடி வைத்திருந்த இடத்திற் சென்று அவர்கள் எதிரில் நான் நின்ற மாத்திரத்தில் அவர்கள் என்னைத் தமது ‡புத்திரனென நினைத்து மார்போடணைத்து முத்தமிட வெண்ணி "அவர் தம் மருகே வா" வென்றார்கள். பிறகு அவர் தம் பிள்ளைக்குச் சம்பவித்த குறையை யெடுத்துச் சொன்னேன். அதிக வருத்தப் பட்டுச் சோர்வதைக் கண்டு "தளராதீர்கள். என்னையே இனி உங்கள் புத்திரன் போற்பாவிக்கலாம். வேண்டிய பணிவிடை செய்து வருவேன். அரசனாயிருத்தலின் உங்களுக்கு வேண்டிய சௌகரியங்களெல்லாம் எளிதிலமைத்து விக்கக் கூடும்" என்று சொல்லியும் ஆறாதவர்களாய், அவர்கள் "நீயுயிர் துறக்கும் போது உனது புத்திரனும் உனக்குப் பிரயோசனமாகான்" எனச் சபித்துவிட்டுத் தாங்களும் உயிர் துறந்தார்கள்.

"கண்ணுளன் மணிபோன் மகனை யிழந்து முயிர்கா தலியா
உண்ணு வெண்ணி யிருந்தா லுலகோ ரென்னொன் றுரையார்
விண்ணின் றலைசே ருதும்யா மெம்போல் விடலை பிரியப்
பண்ணும் பரிமா வுடையா யடைவாய் படர்வா னென்றே."

அச்சாபத்தின் பயனைச் சிறிதேனும் அக்காலத்திற் கவனிக்கவில்லை. அதனுண்மை இப்போது தான் தெரிய வருகிறது. இராமன் காட்டிற்கேகுதலும் என்னுயிர் போதலுந் தவறாது" என்று சொல்லி ஏக்கமுற்று வீழ்ந்தனன்.

‡ சிரவணன்.



வசிட்டர் அரசனிடமிருந்து பட்டாபிஷேக மண்டபத்திற்கு வந்தவுடன் அரசர்களனைவரும் அவரை நோக்கி "இராமர் பட்டாபிஷேகத்திற்கு யாதேனும் தடை நேரிட்டதோ? அவ்விடமிருந்து வந்த அழுகுரற்கு யாது காரணம்?" என்று வினவலும் அவர் கைகேயியினால் நடந்த வர்த்தமானத்தைச் சுருக்கச் சொல்லி விளங்க வைத்தார்.

"கொண்டாள் வரமிரண்டு கைகயர்கோன் கொம்பவட்குத்
தண்டாத செங்கோற் றயரதனுந் தானளித்தான்
ஒண்டார் முகிலேவனம் போகென்றொருப் படுத்தாள்
எண்டாலும் வேறில்லை யீதடுத்த வாறென்றான்."

இதைக் கேட்ட அரசர்களும் மற்றவர்களும் ஆற்றாது அழவாரம்பித்து விட்டார்கள். அஃறிணைப் பொருள்களுமேக்க முற்றுகின்றன.

"கிள்ளையொடு பூவை யழுத கிளர்மாடத்
துள்ளுறையும் பூசை யழுத வுருவறியாப்
பிள்ளை யழுத பெரியோரை யென்சொல்ல
வள்ளல் வனம்புகுவா னென்றுரைத்த மாற்றத்தால்."

"ஆவு மழுதவதன் கன்றழுத வன்றலர்ந்த
பூவு மழுதபுனற் புள்ளழுங் கள்ளொழுகும்
காவு மழுத களிறழுத கால்வயப்போர்
மாவு மழுதனவம் மன்னவனை மானவே."

இக்கொடிய விஷயத்தைக் கேள்வியுற்ற அந்நகர் ஜனமெல்லாம் அடைந்த வருத்தத்திற் கோரளவில்லை. இராமன் காட்டிற்குப் போனால் தாங்களும் உடன் செல்லல் வேண்டு மென்றும், அவன் போனால் புற்றுடைய காடெல்லாம் நாடாகிப்போ மென்றும் அயோத்தி ஆரணியமாய்ப் போய் விடு மென்றுஞ் சொல்லி அதிக துன்பமுற்றார்கள்.

இராமன் சுமித்திரையினது மாளிகைக்குப் போனதும் முதலில் இலக்குமணனைக் கண்டான். அவன் கைகேயினது செயலைக் கேள்வியுற்று கோபம் மூண்டு ஆலகால விஷம்போற் சீறி எழுந்து உலகத்திலேயே பெண்ணெனும் பேரு மிருத்தல் தகாதென்றும் அவர்களை யழித்தல் வேண்டு மெனச் சூளுரைத்து எழுந்தான்.

"விண்ணாட் டவர்மண்ணா வர்விஞ்சையர் நாகர் மற்றும்
எண்ணாட் டவர்யாவருநிற்க வோர் மூவ ராகி
மண்ணாட் டுநர்காட்டு நர்வீட்டுநர் வந்த போதும்
பெண்ணாட் டமொட்டே னினிப்பேருல கத்து ளென்றே."

"அத்தகைய கைகேயியின் முன்பாக உன்னை மகுடஞ் சூட்டிப்பார்த்தல் வேண்டும் யான்; அதற்கு யார் இடையூறுண்டாக்கின போதிலும் அவர்களை

அக்கினிக்கு ஆகுதி செய்யத் துணிந்து விட்டேன்" என்றான் இளையவன். "'தந்தை சொன் மிக்க மந்திரமில்லை,' 'தாய் சொற்றுறந் தொருவாசகமில்லை' என்பதற்கேற்ப நான் நடந்து வருகிறேன். எல்லா மியங்குவதற்குக் காரணம் ஒன்றிருக்க இவர்களை யெல்லாம் நோவது எதற்கு? வினையின் பயனல்லவா இது. ஏன் வீணாய்க் கோபங் கொள்ளல் வேண்டு" மென்றான் இராமன்.

"நதியின் பிழையன்று நறும்புன லின்மை யற்றே
பதியின் பிழையன்று பயந்துநமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று மகன்பிழை யன்று மைந்த
விதியின் பிழைநீ யிதற்கென்னை வெகுண்ட தென்றான்."

அப்படிச் சொல்லியுங் கோபமாறாதவனாய் தன் வில்லிற்குமுன் விதியும் பறந்துபோ மென்றான். இராமன் இளையவனை நோக்கி, "தம்பி! நீ இப்படி கோபித்தல் தகுதியன்று. தாய் தந்தையர் மேற் சலித்தல் தருமமோ. பரதன் பாராளுவான் என்னக் கேட்டநாம் படைக்குஞ்செல்வமேசெல்வம். இதனினும் மேலான தொன்றுமுண்டோ? என்னைப் பாதுகாத்து வளர்த்துவந்த தாய்தந்தையருடையசொல்லை மீறியான் அரசாள்வது தக்கதன்று. என் சொல்லைக்கடந்து நீ நடக்கலாமா?" என்று இவ்வளவு சொன்ன பிறகு அவனும் கோபத்தைத் தணித்து விட்டான்.

"சீற்றந் துறந்தா னெதிர்நின்று தெரிந்து செப்பும்
மாற்றந் துறந்தான் மறைநான்கென வாங்கல் செல்லா
நாற்றெண் டிசைவேலையி னம்பித னாணை யாலே
ஏற்றந் தொடங்காக் கடலிற்றணி வெய்தி நின்றான்."

இராமனையும் இளையவனையுங் கண்ட சுமந்திரர் சங்கதி தெரிந்து ஏக்கங் கொண்டு வுணர்வற்றிருப்பதைக் கண்ட இராமன் அவரை ஒருவாறு தேற்றி விடை பெற்றுக்கொள்ள விரும்பியபோது இலக்குவனை நோக்கி, "அப்பா! உன் தமயனிருக்கு மிடந்தான் அயோத்தி யெனக் கொள். சீதையை உனக்குத் தாயென மதிப்பாய். அவனுக்கடிமை யென்று மற்றவர் மதிக்கும்படி ஏவல் செய்வாய்" என்று பற்பல விதமாய்ப் புத்தி சொல்லி யனுப்புவித்தாள். அவர்களிருவரும் பட்டு பீதாம்பரம் தவிர்த்து மான்றோல் மரவுரி தரித்து அவ்விடம் விட்டு வரும்போது வழியில் வசிட்டரைக் கண்டு தண்டனிட்டு எதிர்நின்றார்கள். அவர் இவர்களிருவருடைய முகப்பொலிவும் அகப்பொலிவும் அரையிலுள்ள சீரையின் பொலிவுங் கண்டு எல்லா முணருந் தன்மையராயிருந்தும் எடுத்திவர்களுக் குரைப்பது இன்னதென்று தோற்றாது மதிமயங்கி நின்றார். பிறகு தெளிந்து இராமனை நோக்கி "தம்பி! அரசன் உயிருடனிரான் நீ காட்டிற்குப் போய்விட்டால்; அப்படிச் செய்தல் வேண்டாம்" என்னலும் இராமன் "தந்தையின் சொற்படி நடத்தல் யெனது கடமை.



அப்படி நடத்தலால் துயரப்படும்பக்ஷத்தில் அவரை யாற்றுதல் நுங்கள் கடன்" என்று மற்றவையாவும் விவரமாய்ச் சொல்லவே முனிவர் வேறொன்றுஞ் சொல்வதற் கில்லாது அயர்ந்து நிற்க, அவரை வணங்கி மேலே சென்றார்கள். இவர்தம் கோலத்தைக் கண்டவூரார் பெருந் துக்கமுற்று வாய் விட்டரற்றினர். அந்நகர் முழுதும் தயரதனைப்போன்று உயிர்போகுந் தருணத்திருப்பதை யொத்திருந்தது.

"ஓவி னல்லுயி ருயிர்ப்பிறே டுடல்பதைத் துலைய
மேவி நல்லழ கெழில்கெட விம்மலோடு விம்மத்
தாவி லைம்பொறி மறுகுறத் தயரத னென்ன
ஆவி நீக்கின்ற தொத்ததவ் வயோத்திமா நகரம்."

இராமன், பிறகு தனது நாயகியினது அந்தப்புரஞ் சென்றான். நாயகன் கோலத்தைக் கண்டு மனம்நொந்து எழுதும் அவள்தம் மாமியரும் கண்ணீர் பெருக்கியும் வருந்தவும் அவள் அதிக வருத்தத்துடன் இதற்கு யாதுகாரண மென வினவலும், இதனது விருத்தாந்தத்தைச் சுருக்கிச் சொல்லி "யான் போய் வருகிறேன், நீ வருத்த மடையாதே" என்னலும் நாயகன் காட்டிற் கேக வேண்டியிருக்கிறதே யென்பதற்கும், அரசுரிமை போய்விட்ட தென்பதற்கும் அவ்வளவு வருந்தாது தன்னைத் தனியே விட்டுப் போய் வருகிறே னென்பதற்கு மாத்திரம் ஆராத்துயரடைந்தாள்.

"துறந்து போமெனச் சொற்றசொற் றேறுமோ
உறந்த பாற்கடற் சேக்கை யுடனொரீஇ
அறந்திறம் புமென் றையன யோத்தியி
லிறந்த பின்பும் பிரிவில ளாயினாள்."

அரு நெறியும் வெயிலும் அன்புடை நாயகன் பிரிவினைக் காட்டிலுங் கொடியதாகுமோ வெனச் சொல்லித் தானும் மான்றோல் மரவுரி தரித்து ஐயன்பின் தயாராய் வந்து நின்றாள். அவளை நோக்கி "நீ எல்லாவற்றையுங் குறித் தெண்ணுவாய். உன்னால் எனக்கும் மற்றவர்க்கும் அனேக துன்பம் நேரிடும்" என்று இராமன் சொல்லலும் சிறிதேனும் வேறெண்ணாது பின் செல்லலே தனக்குச் சுகமும் தருமமுமென்று துணிந்தாள். இராமனும் வேறொன்றுஞ் சொல்வதற்கில்லாது பிறகு அவள்தன்னோடும் அரசனிருந்த மாளிகையை நோக்கிச் சென்றான். அங்கிருந்ததாய்மாரை வந்தித்து அரசனை ஆற்றும்படிச் சொன்னான். இவன் கோலத்தைக் கண்டு அங்கிருந்தவர்களும் வீழ்ந்து மயங்கினார்கள். பிறகு அவர்கள் தம்மகனைத் தழுவி, மருகியை வாழ்த்தி, இளையோனை வழுத்தி இவர்களைக் காக்கும்படித் தெய்வங்களைப் பிரார்த்தித்து அனுப்புவித்தார்கள். அவர்களை விட்டுப் பிறகு எதிர் நின்ற முனிவனைத் தொழுது தானும் தனதுயிர்த் தம்பியும் மயிலும் சுமந்திரன் செலுத்திய தேர்மீது வனம் நோக்கிச் சென்றார்கள்.

(இன்னும்வரும்.)

கல்தளம், திப்புசாமி முதலியார்.

## கட்டுக்கதைகள்.

### I. ஓநாயும் ஆட்டுக்குட்டியும்.

கோடைக்காலத்தில் ஒருநாள் ஒருமலையின்பக்கமாய் ஓடியதோர்தெள்ளிய வோடையில் ஓர் ஓநாயும் ஆட்டுக்குட்டியும் தமது தாகத்தைத் தணித்துக்கொள்ளும்படி ஒரேவேளையில் வருமாறு நேரிட்டது. ஓநாய் உயர்ந்தவிடத்திலும், ஆட்டுக்குட்டி அதற்குக் கொஞ்சத் தூரத்திற்கப்பால் தாழ்ந்தவிடத்திலும் நின்றன. அவ்வாறு நவும் ஓநாய் அதனோடு சண்டையிட [illegible] "தண்ணீரைக்கலக்கி யான் குடிக்கமுடியாதவாறு மண்ணீராக்கியது [illegible] என்கருத்து யாது சொல்? [illegible] செய்வாய்" என்று [illegible] கேட்டது. இங்ஙனம் பயமுறுத்தித்தன்மீது சாட்டியகுற்றங்கேட்டு ஆட்டுக்குட்டி நடுநடுங்கி அமைந்த குரலிற்பணிந்தசொற்களில் "யான் குடிக்குந் தண்ணீர் தும்மிடத்திலிருந்து வருவதனால் அஃதெப்படி நேரும்? ஆதலின் அவ்வளவு உயரத்திலுள்ள தண்ணீரைக் கழிருக்கும் யான் [illegible] முடியாது" என்று சொல்லிற்று. அதுகேட்ட ஓநாய் "அஃதெப்படியாயினுமாக; நீ ஒரு கள்வன்; ஏறக்குறைய ஆறுமாதத்திற்கு முன்னே நீ என்னை இழிந்த சொற்கள் வழங்கிப் புறங்கூறி வைததனை யான் கேள்விப்பட்டேன்" என்று அதட்டிற்று. அவ்வளவில் ஆட்டுக்குட்டி "ஐயோ! யான்பிறந்து இன்னும் ஆறு மாதமாகவில்லையே!" என்றுகூறி [illegible]. வாய்மையைத் [illegible] ஒருகாலமும் தீயவுஞ்சொல்லி நின்றிருந்த [illegible] அவ்வோநாய் உறுமி, வாயில் நுரைத்தப் [illegible] பெருஞ்சினங்கொண்டது. அதன்மேல் ஆட்டுக்குட்டியினருகிற்சென்று "போகாய்! நீயல்லாவிடில உன் தாய்ப்பறுதல் அங்ஙனஞ்செய்திருப்பாள்; எல்லாமொன்றே" என்று சொல்லிக்கொண்டே ஒரு பாவமுமறியாத அவ்வெளிய உதவியற்ற ஆட்டுக்குட்டியின்மீது பாய்ந்து சின்னபின்னமாய்க் கிழித்துத் தின்றது. அந்தோ! இஃதென்ன அநியாயம்!

**நீதி:**—தீயோன் தனது தீச்செயல்கட்கு எவையேனும் சாக்குப்போக்குகளை எப்பொழுதுந் தேடுவான்.

**அமைத்தமாறு:**—சிங்காதனத்தில் வீற்றிருக்குமோர் அரசனாயினும் பள்ளிக்கூடத்திற் பழகுஞ்சிறுவனாகினும் [illegible] நாட்டின் தலைவனாகினும் இருக்குமொரு [illegible] யோனுக்கு அவனது [illegible] ஒழுக்கத்தை நாட்ட ஒருவிதஅநியாயமும் அகப்படாமற்போகாது. இச்சிந்தையோன் யாதேனும் தீமை செய்ய விரும்பும்போது வழுக்கிழுக்கும்பொருட்டு எளிதில் யாதாயினுமொரு நிமித்தக் [illegible] கற்பித்துக்கொள்வான். [illegible] திருந்த [illegible] வாய் நடந்துகொள். [illegible] பிறர் [illegible] யாயிரு [illegible] பால [illegible] மிருக்கவேண்டும்.

> பொரு[illegible] திய மனமின்றித் தீங்கு புரிபவ
> வருந்தி[illegible] ரென்றென்றும் பொறுக்கிலார் மற்றப்
> [illegible] திய நல்லுளப் பொறுமை யென்பது
> [illegible] மக்கட்கே யுரிய யாண்டரோ.

ம. கு. கோவிந்தசிவன்.

# ஜனப்பிரியன்.

மாதம் ஒருமுறை பிரசுரம் செய்யப்படும்.

புஸ்தகம். 1] சென்னை 1901 ௵ ஜனவரி ௴ [இலக்கம். 7

## நீடித்தவாழ்க்கை.

—:o:—

தீர்க்காயுளே ஒரு பெருமையன்று. வயோதிக காலமெல்லாம் துக்கமும் வருத்தமும் அநுபவிப்பதானல் நெடுநாள் உயிர்த்திருப்பதும் விரும்பத்தக்கதன்று. ஆயினும் நாம் ஒவ்வொருவரும் முதுமைப்பருவத்தில் பலவகைப் பிணிகளால் பீடிக்கப்பட்டு வருந்துவதெல்லாம் இளமைப் பருவத்தில் நமது தேகசௌக்கியத்தைச் சிறிதேனுங் கவனியாது அலட்சியமா யிருந்ததனாலுண்டாவதல்லவா? "விரை யொன்று போட்டால் சுரையொன்று முளைக்குமா?" நாம் இளமைப் பருவத்தில் விதைப்பதையெல்லாம் முதுமைப் பருவத்தில் நாம் தாமே அநுபவிக்க வேண்டும். நம்மெல்லோருக்கும் ஒரேவிதமான சரீரபலமும் மனோசக்தியும் இல்லாவிடினும் தக்க பிரயத்தனங்கள் செய்தோமாயின் சரீரசுகத்தையும் புத்தியின் அபிவிருத்தியையும் ஒவ்வொருவரும் அடையலாகும். சுகமான சரீரத்துடன் அமைதியான மனவுறுதி யுண்டாவதற்கு வேண்டிய உபாயங்களைச் சிறிது கூறுவதே எமது முக்கியமான கருத்து. நமது தேகம் வலியுள்ளதாயும் மனம் அமைதியாயுமிருந்தாலல்லவோ உயிர்த்திருப்பது நமக்குப் பரமானந்தத்தை யுண்டுபண்ணுகிறது. அவ்வாறிருப்போமாயின் முதுமைப் பருவம் வீண்பூபாரமா யில்லாமல் அமைதியான சந்தோஷத்தையும் மனத்திருப்தியையும் உண்டாக்குகிறது. நாம் யாதொரு பிணியுமின்றி சுகமாயிருக்குங் காலத்தில் கற்பதற்கும் பலவீனத்

துடனிருக்கையில் கற்க முயல்வதற்கும் வித்தியாசம் நன்றாய்த் தெரியவில்லையா? நாம் எந்த வேலையையும் சரியாய்ச் செய்ய வேண்டுமானால் கவனத்துடன் செய்யவேண்டும். நாம் அஜீர்ணத்துடன் அவஸ்தைப்படும்போதும் தலைநோவுடன் வருந்தும்போதும் கவனத்தைச் செம்மையாய்ச் செலுத்த வாய்க்காதே. நம்மை நாமறிவதே ஞானம். 'உன்னை நீ அறிவாயாகில் உனக்கொரு கேடுமில்லை' என்றார் புலவரும். நமது தேகமோ அநேக வுறுப்புக்களமைந்த ஒரு பெரிய யந்திரம். இதில் ஒவ்வோருறுப்பும் நல்ல நிலைமையிலிருந்தால் யந்திரமும் சரியாய்வேலைசெய்யும். இதைச் சிறிதேனுங் கருதாது மாணாக்கரும் வேறு வியாபாரமுள்ள பலரும் தாங்கள் சரீரப்பயிற்சி செய்யவேண்டியவேளையையும் நித்திரை செய்யவேண்டிய காலத்தையுந் தவிர்த்துத் தங்கள் தங்கள் தொழிலேகதியாயிருந்து சிறிதேனும் வேலைசெய்யத் தம்மாலியலாது தமது பலம் முற்றும் குறைந்தபோதன்றோ தமது மூடத்தனத்தை யுணர்கின்றனர். சுகாதாரவிதிகளைப்பற்றிக் கிராமங்களில் எத்தனைதரம் பறையறைவித்தும் நகரங்களில் முனிசிபாலிடியார் எவ்வளவு கவலையெடுத்துக் கொண்டும் ஜனங்கள் இன்னும் சிறிதேனு மறியாதிருக்கின்றனர். ஆதலின் அவைகளைப் பற்றி ஒவ்வொருவருக்கும் வற்புறுத்திக் கூறுவது அவசியம். தேகமும் அதற்குத் தேவையானவைகளும் ஒவ்வொருவருக்குந் தெரியும் வரையிலும், காற்று, வெளிச்சம், உணவு, உடை இவை [illegible] கவனிக்கப்படும் வரையிலும் இவைகளை யுணர்ந்தவர்கள் தம்மாலியன்றவளவு அனைவர்க்கும் உணர்த்தவேண்டும்.

விபீஷணாழ்வார் ஸ்ரீராமபிரானை சரணாகதியாக வடைந்தபோது ஸ்ரீராமரும் அவரைச் சிரஞ்சீவியா யிருக்கும்படி வரந்தந்து வாழ்த்தினார். மார்க்கண்டேயர் யமபாதைக்குப் பயந்து சிவபிரானைத் துதித்தபோது அவரை 'என்றும் பதினாறுவய'தாயிருக்கும்படி சிவபிரானும்வாழ்த்தினார். வேதவித்தாய் புத்தியில் சிரேஷ்டரான வியாசரும் சிரஞ்சீவிகளிலொன்றாயது தேவதாவரப் பிரசாதமன்றோ? இன்னும் ஒருவரையொருவர் நமஸ்கரிக்கும்போது "தீர்க்காயுஷமான் பவ," 'நீடூழி வாழ்க' என்று ஆசீர்வாதம் செய்யவில்லையா? இதனால் ஒவ்வொருவரும் முற்காலமுதல்



நீடூழி வாழப் பிரியப்பட்டாரென்பது தெளிவாக விளங்கும். விசேஷமாய் மனச்சஞ்சலமும் சரீரப்பிணியு முடையாராயிருந்தால் விருத்தாப்பியம் ஒரு பாரமாகவே தோன்றும். 'சிரஞ்சீவி' என்பது சரியான ஆசீர்வாதமாயின் இவ்வுலகில் நாமடையக் கூடிய சுகங்களில் மேம்பட்டதாகிய சரீரசுகமும் மனக்களிப்பும் வேண்டும். தனவான் எவ்வளவு செல்வவானாயினும் சக்கிரவர்த்தி எவ்வளவு திறமை பெற்றிருந்தாலும் வேதாந்தி எவ்வளவு ஞானம் பெற்றிருப்பினும் சரீரசுக மிலனாயின் அவன் சுகமுள்ள பேதையினும் பயனற்றவனாகின்றான்!

சுகாதார விதிகளையும் சரீரத்திலுண்டாகும் பல வியாதிகளை நிவர்த்திக்கும் வழிகளையும் முற்றும் சொல்ல இப்பத்திரிகை யிடங்கொள்ளாது. பொன்னினும் சிறந்த நமது தேகத்தைப் பாதுகாக்கவேண்டிய வகையையும், நாம் எப்பொழுது ஏமாந்திருக்கிறோம் என்பதே கண்ணுய்க்காத்து மும்முரமாகவோ அல்லது மெதுவாகவோ, எல்லாம் ஒன்றுசேர்ந்தோ அல்லது தனிமையாகவோ, நம்மைச் சேர்ந்து அனறேயோ அல்லது நாளடைவிலேயோ நமது பலத்தைக் குறைத்து நம்மைக் கொல்லும் பலவித வியாதிகளை யறிந்து அவைகளினின்றும் தப்பச் சில பொதுவிதிகளையே கூறமுடியும்.

நமது மாற்றாந்தாயாகிய இயற்கையின் தவறா விதிப்படி நாம் உயிர்த்திருப்பதும் சுகமாய் வாழ்வதும், இடைவிடாது தேகத்தைப் பாதுகாத்துக்கொண்டு, மாந்தர்களை முற்றும் அழிக்கமுயலும் பற்பல சக்திகளோடு சண்டைசெய்து வெல்வதனாலேயே யுண்டாகின்றன. இந்தச் சக்திகள் நம்மை இப்போது ஒன்றும் செய்யாதிருந்தாலும் நாமறியாமலே நமது சரீரத்துள்ளிருந்து வாழ்வாகிய அஸ்திவாரத்தைப் பலவீனப்படுத்தி நாம் அறியாமையினாலும் அசாக்கிரதையினாலும் சுகாதாரவிதிகளில்தவறுவதையெல்லாம் துணையாகக்கொண்டு நமக்கோ அல்லது நமது வம்சத்தினர்க்கோ தக்க தண்டனையை யுண்டுபண்ணும்.

நாம் ஜனனமரண கணக்கைப் பார்ப்போமாயின் விசேஷ நாகரிகம்பெற்ற ஜாதியாரில்கூட முதுமைப்பருவம் வரையில் உயிர்த்திருந்து அநாயாசமாக மரணமடைபவர்கள் 100-க்கு 5-பேரே

என்று அறிகிறோம். மற்ற 95-ம் க்ஷயம் முதலிய வியாதிகளினால் கால்பங்கு மரணமும்; சுரம், சுகஜனி, வாந்திபேதி, வைசூரி, நீர்வியாதி முதலிய வியாதிகளினால் முக்காற்பங்கு மரணமுமேயாம். ஜன்மவியாதியன்றி மற்ற வியாதிகள் முழுமையையும் ஜன்மவியாதியில் விசேஷபாகத்தையும் சுகவிதியைச்சரியாய் அநுஷ்டித்தலால் நிவர்த்திக்கலாகும். அதாவது சுகாதாரவிதிகளைக் கவனத்தோடு அநுஷ்டிப்பதால் எல்லாத்தேசங்களும் எல்லாஜனங்களும் தங்கள் இளமையிலும் பால்லியத்திலும் இப்பொழுதைப்போல பலவகைக் குரூரப்பிணிகளால் உண்டாகும் மாணத்துக்குத் தப்பி அனைவர்க்கும் பயன்படும்படியாய் ஆயுள் முழுவதும் ஜீவித்திருந்து அநாயாசமாய்ப் பிராணனைவிடலாகும்.

இவ்வித நிலைமை யுண்டாவதற்கு சுகாதார சாஸ்திரத்தில் நமக்கு இன்னம் ஞானம் விருத்தியாகவேண்டும். தீராவியாதிகளென்று இப்போது நாம் எண்ணும் பல வியாதிகளுக்கு மருந்து கண்டுபிடித்தல் வேண்டும். இதுவரையில் வைத்திய சாஸ்திரத்தில் உண்டான அபிவிருத்தியே இன்னுமுள்ள தீராப்பிணிகளுக்கு மருந்துதேட ஒரு தூண்டுகோலாகிறது.

அநேக வியாதிகளைத் தீர்க்கத்தக்க மருந்துகளிருந்தும் அவற்றைக்கவனியாமல் எத்தனையோ ஜனங்கள் வருஷாவருஷம்மாண்டு போகிறார்கள். வாந்திபேதி, ப்ளேக் என்னும் மஹாமாரி முதலிய கொள்ளை நோய்களாலன்றி மற்ற வியாதிகளாலிறப்போர்க்குத்தகுந்த ஔஷதங்கள் கொடுக்கப்பட்டிருக்குமாயின், இறந்தவர்களில் நூற்றுக்கு 20-பேர் வீதம் பிழைத்திருக்கக் கூடும். மனிதர்களின் களிப்பை விருத்தியாக்கி அவர்களின் வருத்தத்தைக் குறைக்கச் சுகாதாரவிதிகளையும் அவைகளை உபயோகிக்கும் வகையையும் சிறிது கூறுவோம். சுகாதார சாஸ்திரமென்பது நாம் குடியிருக்கும் வீடாகிய இந்தச் சரீரத்தைப் பாதுகாக்கவேண்டிய முறைமையைக் கூறுவது. வைத்திய சாஸ்திரமென்பது அஜாக்கிரதையினாலாவது அறியாமையினாலாவது அந்த வீட்டுக்குக் கேடு வருமாயின் அதைச் செப்பனிடும் விதத்தைக் கூறுவது. விலையுயர்ந்த மாளிகையுள்ள ஒருவன் மும்முரமாய் மழைக்காற்று அடிக்குங்கால் மண்ணும் ஜலமும் வீட்டுக்குள் வந்து பாழடையும்



படி கதவுகளையும் பலகணிகளையும் திறந்திருப்பானாயின் அவன்புத்தியை என்னவென்று நினைப்பாய்? தற்செயலாய் நேரிட்ட புயல் காற்றினால் வீட்டின் மேற்கூரை பிரிந்து அப்பால் தள்ளப்பட அதைச் சிறிதுங் கவனியாமல் வெய்யிலில் தீய்ந்து மழையில் நனையும்படி ஒருவன் விடுவானாயின் அவன் ஞானத்தை என்னவென்றெண்ணுவாய்? இப்படிப்பட்டவனை முழுமூடனென்று நீ நினைக்கமாட்டாயா? ஆயினும் தன்வீடு அழிந்தாலும் வேறுவீடு அவனுக்குக் கிடைக்குமாதலால் அவன் அவ்வளவு மதியீனனன்று. தானே எப்பொழுதும் குடியிருக்க வேண்டியதாயிருக்கிற இந்தச் சரீரத்தைச் சரியாய்ப் பாதுகாப்பின்றிப் பாழடைய விடுகிறவனையே முழு மூடனென்று கூறவேண்டும். சுகத்தின் ஒப்பற்ற மதிப்பு வியாதிஸ்தர்களோடு பழகுகிற வைத்தியர்களே அறிவார்கள். மற்றவர்களோ தங்கள் சுகதேகத்தைத் திரும்பியடையக்கூடாத முதுமைப்பருவத்திலேயே துரதிர்ஷ்டவசத்தா லுணர்கிறார்கள். தெளிவான மனத்துடன் சுகமான தேகமிருத்தலே வரங்களில் சிரேஷ்டமானது. இவ்வரத்தைச் சிறிது சிரமப்பட்டால் நாம் ஒவ்வொருவரும் அடையலாகும். ஆனால் பேதை ஜனங்களோ அன்றைய சுகத்தையே நாடினவர்களாய் அதற்கதிகமாக நாளை வருந்தவேண்டிய துன்பத்தைச் சிறிதேனுங் கருதாதிருக்கின்றனர். பிணிவந்தவுடன் நாலுபங்கு வருந்துவதைவிட வருமுன் கால்பங்கு ஜாக்கிரதையை நாடுவதைக்கூறுவதே சுகாதாரசாஸ்திரவிதி. அந்த நான்குபங்கு ஜாக்கிரதையாயிருப்பதும் அதிக வருத்தமன்று. பின்னால் நான்கு பங்கு வருந்தவேண்டியதை ஒவ்வொருவரும் நினைப்பார்களாயின் முன்னால்கால்பங்கு சிரமப்படவே ஒவ்வொருவரும் பிரியப்படுவார்கள்.

மேலும் சில விதிகள் கஷ்டமாயிராமல் முதலிலிருந்து அவைகளை அநுஷ்டித்தலே களிப்பையுண்டாக்கும். சுகமென்பது தேகத்தின் ஒவ்வொரு அங்கமும் தன் தன் தொழிலைச் செம்மையாய்ச் செய்வது. இந்த ஒழுங்குக்குக் குறைவு நேரிடுமாயின் அதுவே வியாதியாம்.

முற்காலத்தில் வைத்தியர்களும் மற்றுமுள்ளோரும் ஒவ்வொரு வியாதியை ஒவ்வொரு துஷ்ட.தேவதை என்றும் அவை

களை அவைகளினும் வலிமையுள்ள மருந்துகளாலும் மந்திரங்களாலும் ஓட்டவேண்டுமென்றும் எண்ணியிருந்தார்கள்.

இக்காலத்தில் வைத்தியர்கள் அவ்வாறு நினைப்பதில்லை. ஒவ்வொரு வியாதியும் ஒவ்வொரு காரணங்களாலுண்டாகிறதென்றும் தேகத்தின் அவயவங்கள் தங்கள் தங்கள் தொழிலைச் செம்மையாய்ச் செய்யாததனாலேயே வியாதிகள் உண்டாகிறதென்றும் எண்ணப்படுகிறது. ஐரோப்பாவிலுள்ள தேசங்களில் ஆயுளைப்பற்றி 300-வருஷத்துக்கு முன்னும் இப்போதுள்ளதற்கும் விசேஷ வித்தியாசம் உண்டு. முன்னால் பட்டணங்களில் ஒரு வருஷத்தில் 20-பேர்க்கொருவர் வீதம் மாண்டார்கள். இப்பொழுதோ நாற்பதுக்கு ஒன்றே நேரிடுகின்றது. நமது தேசத்திலும் அவ்வாறே மரணம் குறைவாகவே யிருக்கின்றது. சிறைச்சாலைகளிலும் குற்றவாளிகள் குடியேறியுள்ள அந்தமான் முதலிய தீவுகளிலும் சுகவிதிகளைத் துரைத்தனத்தார் சரியாய் பராமரித்து வருவதால் மரணம் அவ்வளவு நேரிடுகிறதில்லை. பலவந்தமாய் சுகவிதிகளை அனுஷ்டிக்க நேரிடுகிற காவல் கிடங்குகளிலேயே அவற்றாலிவ்வளவு குணமிருக்குமாயின் ஒவ்வொருவரும் பிரியத்துடன் அனுஷ்டிப்பதானால் ஏன் விசேஷ நன்மையுண்டாகக் கூடாது? பலவகை வியாதிகள் உண்டாகும் காரணங்களையும் அவைகளை நீக்க வேண்டிய விதிகளையும் பின்னர்க் கூறுவோம்.

---

## நவநாகரிகர்கள்.

(ஒரு பிரஹஸநம்.)

[கோபாலசாமி அய்யரும் ராமகிருஷ்ண சாஸ்திரியும் பிரவேசிக்கின்றார்கள்.]

கோபா. சாஸ்திரீ! எங்கே, தர்சனமே கிடைக்கவில்லை. இங்கிலீஷ் படியாதவர்களெல்லாம் சுத்தமாய் சூபர்ஸ்டிஷனில் முழுகிப்போய் விட்டார்கள். அவர்களுக்கு சுத்தமாய் ஞானம் கிடையாது. நீ அடிக்கடி எங்களிடம் வந்து பழகுவதால் உனக்கு சூபர்ஸ்டிஷன் அவ்வளவாயில்லை.



ராம. நீங்கள் அடிக்கடி சூபர்ஸ்டிஷன் என்கிறீர்களே, அந்தப் பதத்துக்கு அர்த்தம் என்ன? கொஞ்சம் தயவுபண்ணுங்கள்.

கோபா. சூபர்ஸ்டிஷன் என்றால் மூடபக்தி. பைத்தியக்கார நம்பிக்கை என்றர்த்தம். அதனாலேயே நம்மவரெல்லாம் இல்லாத 'சாநதவ' மெல்லாம் வைத்துக்கொண்டு தேகத்தைக் கெடுத்துக் கொண்டு அநேக வித நஷ்டங்கள் அடைகிறார்கள்.

ராம. தங்களுக்கு மாத்திரம் அந்த சூபர்ஸ்டிஷன் இல்லையா என்ன? தாங்கள் உடம்பைக் கெடுத்துக் கொள்வதில்லையோ?

கோபா. நீ சொல்கிறவார்த்தை எனக்கு தெரிந்தது. என் விஷயத்தில் அது சூபர்ஸ்டிஷனில் சேர்ந்த தன்று. பெண் பிள்ளைகளின் இஷ்டமில்லாமல் இளம் பிராயத்தில் தாய் தகப்பன்மார் செய்த * மாரேஜ் பைண்டிங் ஆகமாட்டாது. எனக் கிஷ்டமில்லாதவளைக் கொண்டு வந்து என் தகப்பனார் எனக்கு கட்டி வைத்தால் நான் ஒப்புக் கொள்வது தர்மமன்று. அவளை யாள்வது என் தகப்பனா, நானா? ஆகையினால் நான் அவளை விட்டு விட்டு தாஸியை வைத்துக் கொண்டால், அதில் ஒன்றும் தப்பிதமில்லை. வயது வந்த பிற்பாடு ஸம்போகமில்லாமலிருந்தால் அநேக ரோகங்கள் உண்டாகிறதென்று டாக்டர்கள் பலர் சொன்னார்கள். நான் இப்பொழுது தேகத்தைக் காப்பாற்றிக் கொள்வதினிமித்தமே வேசையை வைத்துக் கொண்டேனே தவிர வேறில்லை.

ராம. நான் என்னதான் இங்கிலீஷ் படிக்காமல் போனாலும் பகவான் கொடுத்த ஞானம் எனக்கு கொஞ்சம் இருக்கிறது. உங்களுக்கு இஷ்டம் இல்லா விட்டால் முதல் முதல் உங்கள் பிதா கலியாணம் செய்யும் பொழுதே வேண்டாமென்று ஒரே பிடியாய் நின்று ஏன் கலியாணம் பண்ணிக் கொள்வதை நிறுத்தாமல் விட்டு விட்டீர். நீங்கள் சமாதானப்பட்டு விவாகம் பண்ணிக்கொண்டதனால் பாரியை குரூபியானாலும் மூர்க்கையானாலும் மற்றெவ்வித குறைவுள்ளவளானாலும் வைத்துக் கொண்டாள வேண்டியது கடமை. அப்படி செய்யாமல் போனால் தகப்பனார் செய்தாரென்ற தப்பிதத்தை வைத்துக் கொண்டு நிர்த்தோஷியான பாரியையை நிஷ்காரணமாய் சிரமப் படுத்துவது பாபமல்லவா? நீங்கள் முதல் முதலே கலியாணம் பண்ணிக் கொள்ளா திருந்தால் அந்தப்பெண் தன்னை சுகப்படுத்தும் வேறு யாரையாவது கட்டிக் கொள்வாளே.

---

* விவாகம் நியாயமாக மாட்டாது.

கோபா. நான்சென்சு. நீ * ரீஜன் இல்லாமல் பேசுகிறாய். இங்கிலீஷ் தெரியாமையால் நல்லது கெட்டது அறியாய். அதெல்லாம் உன்னைவிட எனக்கு நன்றாய்த் தெரியும். என் † ஹெல்த்துக்காகவும் ‡ ப்ளெஷருக்காகவும் நான் தாஸியை வைத்துக்கொண்டதினால் நான் என்ன அவளுக்கு அன்னவஸ்திரம் லோபம் செய்கிறேனா?

ராம. அன்னவஸ்திரம் இல்லாமல்போனால் ஸ்திரீகளுக்கு முக்கியமாய் எது வேண்டுமோ அதில் லோபம் செய்து விடுகிறீர்கள். நீங்கள் சொன்ன ப்ளெஷர் தங்கள் ஒருவருக்கேயன்றி ஸ்திரீகளுக்கில்லையோ? தகப்பன் மாத்திரம் பெண்ணின் அநுமதி பெற்றுக்கொண்டு மறுபடி கல்யாணம் பண்ணுகின்றானா? என் அநுமதியின்மேல் விவாகம் செய்யவில்லையாகையால் பலவந்தமாய்க் கட்டின புருஷனைத் தள்ளிவிட்டு என் இஷ்டமானவனுடன் சுகப்படுகிறேன் என்றுபாரியைசொன்னால் நமக்கு எப்படி இருக்கும்? லோகத்திலே எல்லாருமே நல்லவர்களாயிருக்கமாட்டார்கள். பெண்டாட்டி நல்லவளாயிருந்தால் புருஷன் குரூபியாயிருக்கிறான். புருஷன் நல்லவனாயிருந்தால் பெண்டாட்டி குரூபியாயிருப்பாள். யாருக்கு எது தடஸ்திக்கிறதோ அதனுடன் திருப்தி யடைய வேண்டும்.

கோபா. நீ அதிகப்பிரஸங்கம் செய்கிறாய். என்னைப் போன்ற § ரிபைன்ட் ஜென்ட்ல்மென் னுடன் வாதம் செய்வதற்குத் தகமாட்டாய் என்று முன்னேயே சொல்லி யிருக்கிறேன். நீ வேறெதாவது விஷயம் பேசு.

ராம. இங்கிலீஷ் படித்த உங்கள் நாகரிகத்துக்கும் இங்கிலீஷ் படியாத எங்களைப் போன்றவர்கள் நாகரிகத்துக்கும் என்ன பேதமோ எனக்குப் புரியவில்லை. எனக்குத் தெரியாமல் கேட்கிறேன். அநுஷ்டானத்தில் என்ன வேற்றுமையோ சொல்லுங்கள். உங்களுக்கும் எனக்கு மிருக்கும் சிநேகத்தினால் கேட்கிறேன். மனசில் கோபமில்லாமல் சொல்லுங்கள்.

கோபா. பைத்தியக்காரா! தெரியாதவர்கள் புத்தியற்ற கேள்விகள் கேட்டால் என்னைப் போன்ற தெரிந்தவர்களுக்குக் கோபம் வருமென்று நினைக்கிறாயா என்ன? நீ கேட்டபடியினால் எங்களுக்கு மூங்களுக்கு முள்ள பேதத்தை சொல்லுகிறேன் கேள். நீங்கள் புண்ணியம் வருகிறதென்று நதிகளிலும் குளங்களிலும் சேறான தண்ணீரிலும் முழுகுகிறீர்கள். நாங்கள் சுத்தமான நீரிலேயன்றி மற்றெதிலும் ஸ்நானம் செய்யோம். நீங்கள் தெய்வமென்று கட்டை

* பகுத்தறியும் சக்தி. † சுகம். ‡ இன்பம். § நாகரிகமுள்ள கனவான்.



யையும் கல்லையையும் வணங்குகிறீர்கள். நாங்கள் ஒரே தேவனை தியானம் பண்ணுகிறோம். நீங்கள் சூத்திரர் முதலானவர்களைத் தொட்டால் தீட்டென்று தூரமாய் விலகுகிறீர்கள். நாங்கள் சுசியாயிருக்கும் யாரையும் தொட்டுக் கொள்கிறோம். நீங்கள் சாஸ்திரத்தினால் இதுகள் தின்னலாமென்றும் இதுகள் தின்னக்கூடாதென்றும் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். நாங்கள் தேகாரோக்கியத்துக்கு அநுகூலமானதெல்லாம் கிரகிக்கிறோம். நீங்கள் நோன்புகள் விரதங்கள் உபவாசங்களெல்லாம் செய்கிறீர்கள். நாங்கள் அவையெல்லாம் பைத்தியம் என்று விடுகிறோம். நீங்கள் செருப்பு போட்டுக்கொண்டு பின் கோவணம் கட்டுகிறீர்கள். நாங்கள் பூட்ஸ் கோட்டுகள் முதலியவை போட்டுக்கொண்டு துரைகளைப் போல் இருக்கின்றோம். இம்மாதிரி வித்தியாசங்கள் உங்களுக்கு மெங்களுக்கும் லக்ஷமிருக்கிறது.

ராம. உங்களுக்குள்ள நாகரிகம் எல்லாம் பூட்ஸிலும் கோட்டுகளிலுமன்றி மனதிலும் நடத்தையிலும் ஒன்றையும் காணோம். நீங்கள் எது பிடித்தால் அதைக் கொள்ளுகிறோம் என்று சொல்லி பூராய்க் குடிக்கிறீர்கள். இரகசியமாய் மாம்சம் தின்கிறீர்கள். அப்படி யிருந்தும் மேலுக்கு பத்துபேர் மத்தியில் அதுகளை ஒன்றும் ஒப்புக்கொள்ளாமல் எங்களைப் போலிருப்பதாகவே நடிக்கிறீர்கள். இவ்வளவு டம்பம் பேசும் நீங்கள் சிராத்தங்களை விட்டு விட்டீர்களா? சமயம் வரும் பொழுது விக்கிரகாராதனையை விட்டு விட்டீர்களா? சூத்திரர்களின் மேல் படுகிறோமென்று பப்ளிக்காய் அவர்களுடன் போஜனம் செய்கிறீர்களா? வெளிக்குத் திருட்டுப் பேச்சு எவ்வளவானாலும் பேசுகிறீர்கள்.

கோபா. காலம் நேர்ந்தால் கிரமமாய் எல்லாம் செய்கிறோம். இப்பொழுது நாங்கள் சொல்லுகிறபடி எல்லா விஷயங்களிலுமே செய்தால் அதிக நஷ்டங்கள் உண்டாகிறது. இங்கிலீஷ் படித்தவர்கள் குடிக்கிறார்களென்று நீ மகா ஆக்ஷேபம் பண்ணுகிறையே, குடிப்பது கெடுதி என்றெண்ணுகிறாயா என்ன? மிதமாய்க் குடித்தால் தேகத்துக்கு மிகவும் நல்லது; அன்னம் ஜீர்ணமாகிறது. உடம்பில் குசாலாயிருக்கிறது. நாங்கள் குடித்தால் பத்து நூறு செலவு செய்து சீமைச் சாராயம் குடிப்போமேயன்றி நாட்டுச் சாராயம் குடியோம்.

ராம. நீங்களே நீங்கள் சொல்வதை யெல்லாம் செய்யச் சக்தியற்றிருக்க, எங்களை ஆக்ஷேபிப்பது எதுக்கு? எதோ சாராயம்குடிக்கிறேனென்று பப்ளிக்காய் வந்து சொல்லுங்கள். உங்கள் தைரியத்தைப் பார்ப்

போம். நீங்கள் சொல்லும் வார்த்தையில் உங்களுக்கு நம்பிக்கையிருக்குமானால் எதோ உங்கள் விதவைத் தங்கைக்கு மறுபடியும் கலியாணம் பண்ணுங்கள் பார்க்கலாம். அல்லது, உங்கள் இரண்டாந் தங்கைககு புஷ்பவதியாகும் வரை கல்யாணம் செய்யாமல் அப்படியே வைத்திருங்கள். இப்பொழுது பேசும் ஞானமெல்லாம் வெளிப்படுகிறது. படிக்கிறது ராமாயணம்; இடிக்கிறது பெருமாள் கோவில என்றபடி புகுந்து பார்த்தால் எல்லாருடைய பண்டவாளங்களும் வெட்ட வெளிச்சமாகும். ஊரைகள் மெய்ச்சிக் கொள்ளும் பொருட்டு அவர்களெதிரில் நீங்கள் மனது போனபடியெல்லாம் குடிக்கிறீரகள். அதைவிட உங்களுக்கும் எங்களுக்கும் யாதொரு பேதமும் தெரியவில்லை.

கோபா. அப்படியல்ல. நாங்கள் ரீஜன் இல்லாது ஒன்றும் செய்யோம். நாங்கள் எப்பொழுதும் பொதுவாய் பிரபஞ்சத்தின் சர்வசுகத்தையும் ஆலோசித்துக் கொண்டிருப்போமே யன்றி பிரத்தியேகமாய் ஒருவர் சுகத்தைப் பாரோம். பிரபஞ்சத்தில் ஜனத்தொகை அதிகரித்தால் கஷ்டங்கள் சம்பவிக்கும். ஆகையால் விதவா விவாகங்களில் நாங்கள் பிடிவாதம் செய்யமாட்டோம். பாலிய விவாகத்தை நிறுத்துவதே தற்காலத்தில் செய்ய வேண்டிய முக்கியமான கடமை. ஆயிரம் குடும்பங்கள் ஒரே பிடியாய் என் பக்கம் வரட்டும். நானும் என் தங்கைக்கு புஷ்பவதியான பிறகு கல்யாணம் செய்கிறேனோ இல்லையோ பார்.

ராம. உங்கள் வரைக்கும் நீங்கள் வராமல் போனால் ஆயிரம்பேர் எப்படி வருவார்கள். அவர்களும் உங்களைப் போலவே ஆலோசிக்கிறார்கள். முதல் முதல் ஒருவன் வழிகாட்டினால், பிற்பாடு ஒருவனைப் பார்த்தொருவராக எல்லாரும் அதே வழியில் நடப்பார்கள். காரியமில்லாத வெறும் பேச்சுகளினால் என்ன பிரயோஜனம். லக்ஷம்பேர் என்னுடன் வந்தால் ஜாதியை விட்டு விடுகிறேனென்று நானும் சொல்லுகிறேன். அதுவும் இல்லை இதுவுமில்லை. எதிலிருந்தாலும் சொன்னபடி நடப்பவர் யாரோ அவர்களை நான் மெச்சுகிறேன். சொல்வதொன்று செய்வதொன்றாயுமிருக்கிற திருடர்கள் எதிலேயிருந்தும் பிரயோஜனமில்லை. உங்களிடம் 'புட்டி' நாகரிகம் தவிர மற்றொன்றும் காணவில்லை. இங்கிலீஷ் படித்தவர்களுக்குள் குடியாமலிருப்பவர்களுக்கு சாராயத்தின் ரஹஸ்யதத்துவம் உங்களுக்குத் தெரிந்தவாறு தெரியாதா என்ன?

கோபா. அவாகளுக்கு தெரியவே தெரியாது. தெரிந்தால் தங்கள் கந்விக்ஷன்படி ஏன் நடக்க மாட்டார்கள்?



ராம. நீங்கள் என்னமோ இங்கிலீஷ் வார்த்தைகள் மகா போடுகிறீர்கள். அதுகளின் அர்த்தம் எனக்கு தெரியாது. நீங்கள் சொல்லும் கந்விக்ஷனெல்லாம் பயனில்லாத குடிப்பதிலும் தின்பதிலும் காட்டாமல், லோகோபகாரமான காரியங்கள் எதுகளிலாவது காட்டக் கூடாதா? நீங்கள் குடிப்பதில் என்ன லாபங்கள் இருப்பதாகச் சொன்னாலும் இப்படியே பேசிக்கொண்டு நல்லவயதில் செவ்வைப் படுங் காலத்தில் அகாலமரணம் அடைபவர்களை நான் குடிப்பவர்களில் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது பேரைப் பார்க்கிறேன்.

கோபா. மிதமாய் குடியாவிட்டால் அம்மாதிரி சம்பவிக்கிறது. நான் உத்தியோகம் பண்ண ஆரம்பித்த மூன்று வருஷமாய்க கொஞ்சமாகவோ அதிகமாகவோ பிராந்தி முதலானவை குடித்துக்கொண்டே இருக்கிறேனல்லவா? நான் இன்னும் சாசாமலிருப்பேன்?

ராம. எனக்கும் அதே ஆச்சரியமாயிருக்கிறது. பீத்வா ஆரம்பித்த பிறகு உங்கள் சிநேகிதன் 4-வருஷம் வரையில் பிழைத்திருந்தான். முதல் முதல் மிதமாய் குடிக்கிறோமென்று ஆரம்பிக்கிறவர்களெல்லாம் சில நாள்களுக்குள் மிதமென்ற வார்த்தை மறந்து போய் விடுகிறார்கள். உங்களுடைய முதல் தடவை மிதத்துக்கும் இப்பொழுதுள்ள மிதத்துக்குமே மிகவும் பேதம் இருக்கிறது.

கோபா. ஆமாம் தப்பாமல் பேதம் இருக்கிறது. மனிதர்களுக்கு கிரமேண அபிவிர்த்தியாய்க் கொண்டு வருதல் ஸஹஜகுணம். அதையெல்லாம் உனக்கு இப்பொழுது எக்ஸ்ப்ளெய்ந் பண்ணுவதற்கு எனக்கு அவகாசம் இல்லை. கச்சேரிவேளை ஆயிற்று. மறுபடியும் வா சொல்லுகிறேன்.

ராம. நீங்கள் சொல்லப் போகும் அபிவிர்த்திக்கும் உங்க்ளுக்கும் கூட பதினாயிரம் நமஸ்காரம். எனக்கு நீங்கள் ஒன்றும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அந்த அபிவிர்த்தி இல்லாமலே நான் வெகு சுகமாய் வாழ்வேன்.

[நிஷ்கிரமிக்கின்றார்கள்.

கிரிஜாகுமார சர்மா.

## * இராமாயண ஸங்கிரகம்.

அஞ்சிலே யொன்று பெற்றா னஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்றா றாக வாரியர்க் காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற வணங்கைக்கண் டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தா னவனெம்மை யளித்துக் காப்பான்.

### II - ஆம் அத்தியாயம்.

### (அயோத்தியா காண்டம்.)

(191–ஆம் பக்கத்தொடர்ச்சி.)

சுமந்திரன் செலுத்திய தேர்மீது இராமலக்ஷ்மணரும் சீதாபிராட்டியாரும் வனத்திற் கேகினார்கள். சூரியாஸ்தமனத்திற்கு முன் நகர்க்கு இரண்டுயோசனை தூரஞ் சென்றார்கள். அந்திமாலையும் வந்தது. சூரிய வம்சத்தின் கீர்த்திகெட மந்தரையினது சொல்லால் கைகேயியினது நெஞ்சம் எவ்வாறு மயங்கிற்றோ, அதுபோல ஆகாயமானது சந்தியாகாலச் செந்நிறம் மாறிச் சூரிய கிரணம் அடியோடே நீங்க அந்தகாரமடைந்தது.

“ அந்தியில் வெயிலொளி யழிய வானகம்
நந்தலில் கைகயன் பயந்த நங்கைதன்
மந்தரை யுரையெனுங் கடுவின் மட்கிய
சிந்தையி னிருண்டது செம்மை நீங்கியே.”

இராமன் தேரினின்று மிறங்கி அருகிருந்த சோலைக்குட் தானும் தனது தம்பி, பத்னி என்பவர்களுடன், முனிவர்கள் சூழச் சென்றிருந்தான். இவனைச் சுற்றிலும், நகரினின்றும் பின்றொடர்ந்த ஜனங்கள் ஒரு யோஜனை தூரம் நாற்புறமும் வளைந்து கொண்டிருந்தார்கள். அவர்களிலனேகர் ஊணையும் உறக்கத்தையும் தவிர்த்துத் துக்க சாகரத்தில் மூழ்கினவர்களாயிருந்தார்கள். சிலர் அழுத இளைப்பினால் அயர்ந்து நித்திரை செய்தார்கள். கள்ளிருளில் மற்றவர்களும் இவ்விதமாய்த் துயருற்று நித்திரைசெய்ய

* இதிலாங்காங்கு எடுத்தாளப்பட்ட செய்யுளின் பொருளறிந் தானந்தங் கொள்ளக் கூடாத சிறுவர் சிறுமியர் முதலாயினோர், செய்யுளைக் கவனியாது வசனத்தையே வாசித்துக் கதையினை யறியலாகும்.



இராமனும் சுமந்திரனைத் தன்னருகழைத்து “அப்பா சுமந்திரா! உன்னாலினி நடக்க வேண்டிய காரியமொன்றிருக்கிறது. நம்மிடத்தில் பேரன்பு பூண்டு நம்முடன் வந்துவிட்ட ஜனங்களைத் திரும்பிப்போகச் சொல்வதுங் கடினம்; அப்படிச் செய்யாமல் இவ்விடத்திலேயே நிறுத்தி விட்டு நான் மேற்செல்லலும் தகுதியானதன்று. நீ தேரை ஊர்நோக்கித் திருப்பிச் செல்லுவாயாகில் தேர்ச் சக்கிரச் சுவட்டைப் பார்த்து நான் ஊருக்குத் திரும்பிப் போய்விட்டேன் என்னும் எண்ணங்கொண்டு ஒருவேளை ஜனங்கள் திரும்பிப் போய் விடுவார்கள். ஆகையால் இவ்வாறு செய்யும்படி உன்னை வேண்டுகிறேன்” என்றான்.

“ பூண்டபே ரன்பி னாரைப் போக்குவ தரிது போக்கா
தீண்டுநின் றேகல் பொல்லா தெந்தைநீ யிரத மின்னே
தூண்டினை மீள நோக்கிச் சுவட்டையோர்ந் தென்னை யங்கே
மீண்டன னென்ன மீள்வ ரிதுநின்னை வேண்டிற் றென்றான்,”

சுமந்திரன் இராமனை விட்டுப்பிரிய மனமில்லாதவனாய்ப் பலவாறு புலம்பி இராமனுடைய பாதாரவிந்தத்தை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு இடியுண்ட நாகம்போல் துடிதுடித்துப் பூமியிலே விழுந்து புரண்டழுதான். அவனை ஸ்ரீ இராமபிரான் தன் கைகளால் மெல்லத்தூக்கி ஆலிங்கனஞ் செய்து கண்ணைத் துடைத்துப் பக்கத்தி லிருத்திவைத்து அவன் முகத்தை உற்று நோக்கிச் “சுமந்திரா! தர்மமானது முன்னின்று கீர்த்தியைத்தந்து அதன்பயன் முற்றுமனுபவித்த பின்னரும் க்ஷேமத்தைத் தரும்; சுகம் வருமாகில் அதனைச் சந்தோஷமாய் அநுபவித்து துக்கம் வந்து சம்பவித்தால் வருத்தப்படலாமோ? தாம் படைத்த செல்வமும் உயிரும் துறக்க நேரிடினும் அறத்தை விட்டிலர் என்னுங் கீர்த்தியுடையவரே சூரத்தன்மை யுடையவராவர். நான் வனத்திற்குச்செல்வதில் உனக்கும் மற்றவர்க்கும் வருத்தமிருப்பதனால், என்றும் அழிவிலாக் கீர்த்திபெற்ற சூரியவம்சம் நான் பிறந்து தர்மத்தினின்றும் பிறழ்ந்ததென்று சொல்லலாகுமா? அரசன் சத்தியத்தில் அரிச்சந்திரற்கு ஒப்பாவன். தன் சொல்லைக் காப்பாற்று நிமித்தம் தன்னருமைப்புதல்வனையும் காட்டிற்கேகும்படி செய்தான் என்னுங் கீர்த்தி யரசனுக்கு அப்போது உண்டாகுமே! அவனது

உத்தரவை யென் சிரமீது தாங்கி நடத்தல் எனக்குப் புண்ணியம். அப்பா! நீ வியசனப்படல்வேண்டாம். நீ திரும்பிப்போய் வசிட்ட முனிவரைக் கண்டு என்னுடைய வணக்கமுதலான விசேஷஞ் சொல்லி, அவருடன் எனது தந்தையிடஞ் சென்று எனக்கிப்போதுள்ள சித்தத்தைத் தெரிவிப்பாய்! என்னருமைத்தம்பியாகிய பரதனைக் கிரமமாயிருந்து தென்புலத்தார் முதலான ஐம்புலத்தாரையுமோம்பச் செய்து, என்னைப்பிரிந்து தனியாயிருக்கிறோமென்று பரதன் துக்கிக்காமல் வசிட்டரிடம் சொல்லி அவரது வேதாந்த உபதேசத்தால் உறுதிகூறும்படி சொல்வாய். எனது தாய்மார் மூவருக்கும் என் வந்தனைகளைச் சொல்லிப் பின்பு அரசனுடைய துன்பத்தை யொழித்து அவன் பக்கத்திலேயே யிருப்பாயாக" என்றான் இராமபிரான். பிறகு சுமந்திரன் இலக்குவன், சீதை என்னுமிவர்களிடம் செலவுபெற்றுக்கொண்டு இராமருடைய உத்தரவின்படி தேரைத்திருப்பி ஒருவரும் அறியாதவண்ணம் ஊர் முகமாச் செலுத்திக்கொண்டு போனான்.

"கூட்டினன் தேர்ப்பொறி கூட்டிக் கோன்முறை
பூட்டினன் புரவியப் புரவி போநெறி
காட்டினன் காட்டித்தன் கல்வி மாட்சியால்
ஓட்டின னொருவரு முணர்வு றாமலே."

சீதையினுடைய பதிவிரதா குணமும் தன்னுடைய கெம்பீரமும் தம்பி லக்ஷ்மணனும், களங்கமற்ற தனது காருண்யமும், சாமர்த்தியமும் சத்தியமும் கோதண்டமென்னும்வில்லுந் தனக்குக் காவலாகக்கொண்டு இராமனும் அந்த நள்ளிருளில் தக்ஷிண திசையை நோக்கிச் சென்றான். சற்றுநேரம்பொறுத்துச் சந்திரோதயமுமாயிற்று. அஃது இராக்கதர்க்குதவியாயிருந்த அந்தகாரத்தைச் சற்றே யொழித்தது. சூரியோதய மாவதற்கு முன் இராமன் இரண்டு யோசனைதூரஞ் சென்றுவிட்டான்.

சுமந்திரன் ஐந்துநாழிகையில் அயோத்தி சேர்ந்து வசிட்டரைத் தரிசித்து நடந்ததைச் சொல்லலும் அவர் மிக்க வருத்தமடைந்து சுமந்திரனோடும் அரசனிருக்கும் அந்தப்புரஞ் சென்றார். இரதம் திரும்பிவந்ததென்று அறிந்த அனைவரும் இராமன் வரவை எதிர்பார்த்த வண்ணமாயிருந்தார்கள். தேர் வந்தது என்று சொல்



லலும் அரசன் பிரக்ஞை தெளிந்து இராமன் வந்து சேர்ந்தானென்று கண் விழித்துப்பார்த்து வசிட்டரைக் கண்ணுற்று 'மகன் வந்தானோ?' என்றான். இல்லையென்று சொல்வதற்கஞ்சி ஏக்கங்கொண்டு இருஷி நின்ற கோலங்கண்ட அரசன் ஆசங்கித்து மூர்ச்சித்து விழுந்தான். பிறகு மூர்ச்சைதெளிந் தெழுந்து சுமந்திரனைக் கண்ணுற்று அரசன் தன் பிள்ளை தூரமாய்ப் போய்விட்டானோ? அல்லது சமீபத்திலிருக்கின்றானோ என்று கேட்கவும் இராமனும் இளையோனும் சீதாபிராட்டியும் தக்ஷிணதேசத்தை நோக்கிச் சென்றார்களென்று சுமந்திரன் சொல்லலும் உடனே ஆவி துறந்தான் அரசன்.

"நாயகன் பின்னுந் தன்றேர்ப் பாகனை நோக்கி நம்பி
சேயனோ வணிய னோவென் றுரைத்தலு மனையான் செய்ய
வேயுயர் கானந் தானுந் தம்பியு மிதிலைப் பொன்னும்
போயின னென்றா னென்ற போழ்தத்தே யாவி போனான்."

கௌசல்யை தன் பர்த்தாவை விட்டு நீங்கியதனால், தேவாமிர்தம் கிடைத்துப் பின் அது நீங்கியதுபோலும் பொருமி, இரத்தினம் பறிகொடுத்த நாகம்போல் திகைத்து இணைநீங்கிய அன்றிற் பெடையைப் போற் கதறிக்கதறியழுது மெய்தடுமாறிக் கீழ்வீழ்ந்து புரண்டுருண்டு அழுதாள்.

"தானே தானே தஞ்ச மிலாதான் றகைவில்லான்
போனான் போனா னெங்களை நீத்திப் பொழுதென்னா,
வானீர் சுண்டி மண்ணற வற்றி மறுகுற்ற
மீனே யென்ன மெய்தடு மாறி விழுகின்றாள்."

நண்டு, பாம்பு, வாழை, மூங்கிலிவற்றின் தன்மைபோலாயினா னரசனென்றாள். சுமித்திரையும் மற்றவர்களும் உடன்சேர்ந்து அழுகுரலை அதிகரித்தார்கள்.

சுமந்திரன் அரசனது நிலைமையைப் போய் வசிட்டருக்குச் சொல்ல அவர் தம் விதியின் செய்கையை நினைத்துத் துக்கித்துச் 'செய்யவேண்டிய சடங்குகளை முடிப்பதற்குரிய பிள்ளைகள் இங்கேயில்லை. பெறவேண்டிய பொருளும் பெறுதற்கரிது. அவையில்லாமற் கிரியை முடியாது. பரதன் வந்தபிறகுதான் உத்தரக்கிரியை நடத்தல் வேண்டும். அதுவரை அரசனது உடலைத் தைலத்

திற் போட்டுவைத்தால் நல'மென்று அதிலிட்டு, பரதனை அழைத்துவருவதற்கு வேவுகாரரை விரைவிற் செலவிடுத்தார்.

இஃதிப்படியிருக்க அரண்யத்திற்கு இளவரசுடன் சென்ற சேனைவெள்ளம் அன்றிரவு அயர்ந்துநித்திரைசெய்து உதயத்தெழுந்து அரசனைக்காணாது புத்தி மயங்கித் தங்களைக் கொல்லவந்தது தூக்கமென்றுதங்களையே நிந்தித்துக்கொண்டு பலவாறு புரண்டழுது தற்செயலாய்த்தேரடிச்சுவடு கண்டுமகிழ்ந்து இராமன் அயோத்தியையடைந்தானென்று அனைவரும் ஆரவாரித்துக் குதூகலமடைந்தார்கள். அயோத்தி சேர்ந்ததும் மன்னன் இறந்தானென்பதும் மகன் திரும்பினானில்லை யென்பதுங் கேட்டு மனோதைரியம் இழந்தார்கள்.

இராமபிரானோ தான் ஓர் அஞ்சனக் குன்றோ, மரகத மலையோ, அழகா முருவோ வென ஐயுறக்கூடிய அதிக காந்தியுடையவனாய்ச் சூரிய காந்தியும் தன் தேககாந்தியால் மறைய, வழியில் அனேக விதமான விருக்ஷ விநோதங்கள் பக்ஷிசாதிகள் முதலியவற்றைக் கண்டு களிகொண்டு, புள்ளாங் குழல் போலும் அமுதம் போலும் வீணைகானம் போலும் வசனிக்கும் மைதிலியோடும், இளையானோடும் தன்னாட்டைக் கடந்து போய்க் கொண்டிருந்தான்.

“கால்பாய்வன முதுமேதிகள் கதிர்மேய்வன கடைவாய்
பால்பாய்வன நறைபாய்வன மலர்வாயளி படரச்
சேல்பாய்வன கயல்பாய்வன செங்கான்மட வன்னம்
போல்பாய்புனன் மடவார்படி நெடுநாடவை போனார்.”

பிறகு மூவரும் கங்கைக்கரையை யடைந்தார்கள் ஸ்ரீராமரைப் பார்க்கும் பொருட்டு அநேகம் பெரியோர்கள் அங்கு விஜயஞ் செய்தார்கள். அவர்கள் இராமனைத் தங்களாச்சிரமத்திற் கொண்டேகிக் கண்ணிலுண்டாம் புதுப்புனலாட்டி இன்சொலாகிய மலர் சூட்டி அன்பெனும் ஆரமிர்தூட்டி வழி நடந்து வந்த வருத்தத்தையும் வாட்டினர். முனிவர்களுடன் போஜன மருந்தும் பொருட்டு நீராடிவரக் கங்கைக்குச்சென்றான் இராமன். சீதையுமுடன்சென்றாள். ஸ்நாநம் பூஜை முதலியன முடிந்ததும் திருப்பாற் கடல் கடைந்து அண்டர்களுக்கு அமுதந்தந்த அண்ணல் இப்போது அருந்தவருடன் அடகுண்டு தன்பசிதணித்தான்.



அத்தருணத்தில் ஆயிரந்தோணிகட்கு எஜமானனாகிய குகன் என்பவன் இராமபிரானைப் பார்க்கவந்தான். இவனோ இருண்டயாக்கையன், கறுத்தகுஞ்சியன், பருத்தமார்பினன், கண்டைக்கழலினன், நெரிந்தபுருவத்தன், உருவியவாளினன், நச்சரவுநடுக்குறுநோக்கினன், வச்சிரயாக்கையன், கூற்றனு மஞ்சக் குமுறுங்குரலினன், திரண்டதோளினன், கங்கைக் கரையிலுள்ள சிருங்கிபேரமென்னும் நகரத்துஉறைபவன். இவன் தன் சுற்றத்தாரைத் தூரத்திலே நிறுத்திவிட்டு தன் வில்லும் வாளும் ஒழித்து தூயசிந்தையும் அன்பு முடையவனாய் அண்ணலை அணுகினான். இளையவன் இவனை யாரென வினவலும் தானொரு ஓடம் ஓட்டி யென்றும் இராமனைச் சேவிக்க வந்ததாகவுஞ் சொன்னான். இதை இராமசந்திரற் கறிவிக்க அவனும் அவனை அழைத்து வரும்படி உத்திரவு செய்தான். அவன் முன்வந்து வேர் மாண்ட விருக்ஷம் போன்று கீழே வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து கைகட்டி வாய் பொத்தி நின்றான். அவனை யொருபுறமா யிருத்தியென்னலு மிராது தான் இராமனுக்கென்று சேகரித்து வைத்திருக்கு முணவை அவரைப் புசிக்கும்படி வேண்டினான். அதற்கொருவாறு சமாதானஞ் சொல்லி விட்டு அவனை “கங்கையைத் தாண்டுவதற்கு வேண்டிய தோணிகளையும் அவற்றைச் செலுத்த வல்லவர்களையும் கொணர்தி” யென்னலும் குகன் இவர்களை விட்டுப் பிரியமில்லாததைத் தெரிவிக்க, இளையான், தேவி இவர்களுடைய சம்மதம் தெரிந்து தன்னுடனிருக்கும்படி உத்திரவு செய்தானிராமன்.

“கோதைவிற் குரிசிலன்னான் கூறிய கொள்கை கேட்டான்
சீதையை நோக்கித் தம்பி திருமுக நோக்கித் தீராக்
காதல னாகு மென்று கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினு மினிய நண்ப விருத்தியீண் டெம்மோ டென்றான்.”

குகன் இராமனுக்குற்ற இடையூறைக் கேட்டு கண்ணீர் தாரை தாரையாய் பெருகத் துக்கித்தான். ஆதவனும் மேற்றிசை அடைந்தான். அந்திமாலையும், அந்தகாரமு மொன்றின்பினொன்றாய் வந்து சேர்ந்தது. சீதையுமிராமனும் பன்னகசாலையிற் படுத்துறங்கினார்கள். இலக்குவன் இடையூறு நேராவண்ணம் இமையா நாட்ட

முடையனாய் வில்லும் வாளும் கையிலேந்திக் காத்துக்கொண்டிருந்தான். இதைக் கவனித்த குகன் கண்ணின் மலையருவிபோலச் சலம் பெருக நின்றான். பொழுதும் விடிந்தது. சீதையினுடைய முகக்கமலமும் இராமனென்னும் ஆதித்தனைக்கண்டு அலர்ந்தது. இராமன் குகனையழைத்து சீக்கிரம் தோணியைக் கொண்டுவாவென்றான். அதற்கவன் மிக்கவினயத்தோடு இராமலக்ஷ்மணர் முதலானவர் தன்னிடமே சுகத்துடனிருக்கலாமெனச் சொல்லலும் இராமபிரான் "ஏ சூர! யாம் அனேக புண்ணிய நதியில் மூழ்கி, பெரியோர்களை வணங்கி யூரிலிருந்து நினைத்துப் புறப்பட்ட கெடுவானவுடன் உன்னிடம் வருகிறேன்" என்றான். இராமனெண்ணத்தை அறிந்து குகன் சீக்கிரஞ் சென்று தோணி கொணர்ந்து அவர்களுடைய பாதபங்கயத்தை ஜலங்கொண்டு சுத்தி செய்து அவர்தம்மைத் தோணியிலேற்றி சுகமாய் அக்கரை கொண்டு போய்ச் சேர்த்தனன். அதனைச் சேர்ந்ததும் ஸ்ரீராமர் சித்திரகூடத்திற்குப் போம் வழியைக் காட்டும்படி குகனைக் கேட்டார்; அவனுக்கோ 'இராமபிரானை விட்டுப்பிரிய மனமில்லை. அவருடன் தானும் தன் சேனைமுதலியவற்றுடன் வரவேண்டுமென விருந்தான். இராமபிரான் குகனைநோக்கி, "நாம்வேண்டும் பணிவிடை செய்வதாய் எம்மை இவ்விடத்திலேயேயிருக்கும்படிக்கேட்கின்றாய்! நாம் ஆ ணிபடு சென்று சஞ்சரித்து துன்பமடைந்தாற்றான்பின்பு சுகமுண்டாகும். உனக்குமெனக்கு முண்டாகிய நட்புநடுவிலநீங்கிப்போமோவென்றெண்ணற்க. முன்னம் நாங்கள் நான்கு பேர்தான் சகோதரரென்று நினைத்திருந்தோம். உன் குணத்தை நினைக்க உன்னுடன் ஐந்து சகோதரர்களானோம். என் கூடவருவதற்கு இலக்குவனிருக்கிறான். என்னைப்போல நீயாதலின், என் சொல்லைத் தள்ளலாகாது. வடதிசை வரும்போது உன்னிடம் வருகின்றேன். அயோத்தியிலுள்ளவர்களைப் பாதுகாக்க உன் தம்பி பரதனிருக்கிறான். இவ்விடத்துள்ள சுற்றத்தாரைப் பாதுகாப்பதற்கு யாவரிருக்கிறார்



கள். உன்னுடைய ஜனங்கள் என்னுடையதல்லவோ! அவர்கள் வருத்தப் படலாகுமோ. இவர்களும் எம்மவர் தாம். எனது ஆணை மேற்கொண்டு நீ யிங்கிருந்து அவர்களைக் காத்துக்கொண்டிருப்பாய்." என்னலும் அதன்படி நடந்தான் குகனும். சீதையோடு இராமனும் இளவலும் மேலே நடந்து சென்றார்கள்.

"பணிமொழி கடவாதான் பருவரலிகவாதான்
பிணியுடை யவனென்னும் பிரிவினன் விடைகொண்டான்
அணியிழை மயிலோடும் ஐயனு மிளையோனும்
திணிமரை நிறைகானிற் சேணுற நெறி சென்றார்."

(இன்னும்வரும்.)

கல்தளம். துப்புசாமி முதலியார்.

---

ஸ்ரீ

## ஆசாரியர்கள் சரித்திரம்.

(168-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

### 12. * ஸ்ரீ பட்டர்.

மன்மதன்கையில் அரும்புபாணமும் கரும்புவில்லு மேந்தி, செந்தமிழ் பிறந்த சந்தனப் பொதிய மந்தமாருத மகாரதத்தேறி, அந்தியாகிய யானையோடும், சுந்தரப்பெண்களாகிய சேனையோடும், கொந்தளிக்கும் கடலாகிய முரசம் குமுறிக்கோஷிக்கக் காலத்தை வசந்தமாக்கி, கற்றவர்க்கும் நற்றவர்க்கும், மற்றெவர்க்கும் காதலுண்டாக்கி, நலமிகுந்த குலமாதர் முதற்பல மாதர்கட்கும் நாணத்தை நீக்கி, மல்லிகைப் பூவாகிய வெண் சங்குசளை வண்டுகள் ஊத, முல்லைப் பூமாலை அசைய, மெல்ல மெல்ல மாலையிலே மலர்ச் சோலையிலே பிரவேசித்தான். இங்ஙனந் தோன்றும் வசந்தருது

* இங்குப் பதினொன்றாம் இலக்கமிடப்பட்ட எம்பாரது வைபவம் கூற வேண்டுமே யாயினும், ஸ்ரீ இளையாழ்வார் என்ற இராமாநுஜர் சரிதத்தின் இரண்டாம் பகுதி கூறிய பின்னரே கூறவேண்டுதலின், அதனுட்பட்ட ஸ்ரீ பட்டர் வைபவம் கூறப்படுகின்றது. [இளையாழ்வார் வைபவம் அச்சில் உளது. விரைவில் வெளிவரும்.]

வான வைகாசி மாதத்தில், ஒருநாள் ஒருவர்க்கு நல்வினைவந்து தோன்றுங் காலத்து, அதன் முன் தோன்றி நின்ற தீவினை அகலுமாறு போல உலகம் பகற் பொழுதைப் பெறவேண்டிச் சூரியன் கடலில் தோன்றிய காலத்து இருள் அகன்றது. அச்சூரியன், குணதிசைக் குன்றில் நின்று விளங்குகையில் அவனது ஒளி உலகெங்குஞ் சென்று வீசல், பொன்னை யுருக்கிப் புவிமுழுதும் ஊற்றியதொக்கும். அன்றியும் அவனது கரம் தேவாலயங்களின் கவாடங்களில் தாக்கல், பூசை செய்யக் கருதி அவ்வாலயக் கதவுகளைத் திறத்த லொக்கும். அவ்வமயத்து, பிரமசாரி முதலோர் தத்தம் ஆச்சிரமங்கட்குத் தக்க தினச்செய்கடன்களைச் செய்தொழுகுவாராயினர். இவ்வாறாக ; நம்பெருமாளது பேரருளால் 'ஆழ்வான்' என வழங்குங் கூரத்தாழ்வானுக்கு ஆண்டாளம்மங்கார் திருவயிற்றில் ஒருகுமாரர் அவதரித்தார்.

அக்குமாரர்க்கு நாமகரணஞ் செய்ய உடையவரே கடவர் என்று ஆழ்வானும் வாளாயிருக்க, நம்மிராமாநுசரும் அவ்வாழ்வானது இல்லங்குறுகிக் குழந்தையைத் தம் தாமரைக்கண்களால் முகவொளி திகழநோக்கி வியந்து, ஸ்ரீபராசரபகவான் திருநாமமாகப் 'பராசரபட்டர்' என நாமகரணஞ் செய்தார். அதனாலிறே நம் யமுனைத் துறைவரது ஏனைக் குறைகளிரண்டும் நீங்கின.

அதன் பின்னர், எம்பார் திருத்தம்பியாராகிய சிறியகோவிந்தப் பெருமாளுக்கு ஒரு குமாரர் அவதரிக்க, அதைக் கேட்ட இளையாழ்வார் களிப்பெனும் அலைக்கடலிற் குளித்தெழுந்து அக்குமாரரையும் போரக்கடைக்கணித்து அவர்க்குப் 'பராங்குசநம்பி' என்று பெயரிட்டனர். அப்பால், பெரிய பெருமாள் பட்டரைத் தம் புதல்வராய் அங்கீகரிக்கவும் திருமணத் தூணருகே தொட்டிலிட்டு நாய்ச்சியார் சீராட்டி வளர்க்க வளர்கிறவர், பெருமாள் அமுது செய்வதற்கு முன்பே தாம் தவழ்ந்து சென்று உண்பது வழக்கம். இன்னும் அவர், தாம் இளமைப் பருவத்துப் பல விளையாட்டயர்ந்து வந்தார். அதற்கப்பால், அவ்வக்காலங்களிலே உபநயனமும், விவாகமும் செய்யப்பட்டன. இஃது இங்ஙனம் நிற்க.

நம் இராமாநுசர் துறவறம் பூண்ட அக்காலத்து மற்றையோரை யொழித்து, முதலியாண்டானை மாத்திரம் கைவிடாது தொடர்பு கொண்டு ஒழுகுவாராயினர். பின்பொருகால், பெரிய பெருமாள் திருவிழாக் கொண்டாடிக் காவேரிக் கரையில் தீர்த்தவாரி கண்டருள்கையில், நம் இளையாழ்வாரும், நீராடச் செல்லுங்கால் முதலியாண்டானையும் நீராடி வருங்கால் பிள்ளையுறங்காவில்லிதாசரையும் கைத்தலம்பற்றிச் செல்ல, ஏனைய சீடர்கண்டு இஃதென்னை! என்று வினவ, உடையவரும் 'ஒருவர் ஒழுக்கத்தாற் சிறந்தவராவரேயன்றிக் குலத்தாற் சிறந்தவராகார்' என மொழிந்தனர்.



பெரியநம்பி திருமகளார் புக்ககத்திலே வாழுங்காலத்து ஒருநாள், தாம் நீராடத் துணைவருமாறு மாமியாரை வேண்ட அவளும், 'உன் சீதனப் பெண்ணை யழைத்துச் செல்' என்று கடுகடுத்துச் சொல்லியவளவில் தந்தைபாற் குறுகி நிகழ்ந்ததைக்கூற, 'அவரும் யாம் ஒன்றும் அறிகிலோம், உங்கள் ஜீயருக்கு அறிவி' என்ன அக்குமாரத்தியாரும் அங்ஙனே செய்தனர். உடையவரும் நம் முதலியாண்டானைத் துணைக்கொடு செல்லுமாறு அனுப்பினர். அவரும் அவ்வாறே யொப்பி அடிமைத் தொழில் புரிய, திருமகளாரது புக்ககத்தவர் யாவரும் 'இஃதென்னை ஆண்டான் குற்றேவல் புரிவது!' என்ன, அதற்கு நம்மிளையாழ்வாரும் 'பெரிய நம்பிகளின் திருக்குமாரத்தியாரான அத்துழாய்க்குச் சீதன வடிமையாகத் தந்தோம்? நுமக்கு விருப்பின்றேல் அங்குவாரது இங்கு நின்றே செய்கின்றார்' என்று முதலியாண்டானை அழைப்பித்துக் கொண்டருளினார்.

மற்றொருகால் பெரிய நம்பிகளும், 'மாறனேர் நம்பி' என்பவர்க்கு நூல்விதிப்படி உத்தரக்கிரியை செய்ய, அது கேட்ட எம்பெருமானார் 'இது சாலுமோ?' என்று வினவப் பெரியநம்பிகள் உடையவரை நோக்கி, 'இரகுகுலத்துதித்த இராமனிலும் யான் பெரியேனோ! * பெரிய உடையாரைக்காட்டிலும் இவர் தண்ணியரோ! தருமபுத்திரரிலும் யான் பெரியனோ! விதுரரைக் காட்டில் இவர் தண்ணியரோ!' என்றின்னோரன்ன பல உதாரணங்களை யெடுத்துரைத்து ஒழுக்கத்தின் சீர்மையை விளக்கியருளினார்.

வேறொருநாள், இளையாழ்வார், ஒரு ஊமையை ஏகாந்தத்திலழைத்துச் சென்று தமது திருமேனியை அவயவக்குறிப்பால் தொட்டுக் காட்ட அவனும் அதுவே தனக்குப் பற்றுக்கோடு என்று பத்திசெய்தனன். இது கண்ட கூரத்தாழ்வானும் 'யாம் புத்தகச் சும்மை பொறுத்தலாற் பயன் என்னே! இவ்வூமையாய்ப் பிறந்திலனே!' என மோகித்தார். இங்ஙனம் இராமாநுசர் முதலோர் உலககத் திருத்திவாழ்விக்குங் காலத்து, அரவிந்தம், ஆம்பல், நெய்தல் முதலிய புட்பங்களும், மா, மலா, வாழை என்ற முப்பல விருக்ஷமும், ஏனை மிருதுள, வகுள, குரவக, விகுச, பநஸ, பாடல, நாக, புன்னாக, தால இந்தால, தமால தக்கோலம் முதலிய பரிமளமரங்களும் மிகப்பெற்று, அவ்விருக்கத்தின் கிளைகள் ஒன்றோடொன்று அணைந்து பந்தலிட, கொம்புகளில் குயில்கள் இனிய குரலோடுபாட, மயில்கள் கலாபத்தை விரித்தாட, வண்டுகள் ரீங்காரசுருதிகூட்ட, மதகொலிகள் மிருதங்கத்தொனி செய்ய, கிளைகள்தோறும் மந்திகள் தாவுவது தக்ஷிணைக்கு நாற்புறமும் ஓடும் யாசகர் தன்மைகாட்ட, பலசாதிப் பட்சிகள் கூவுதல் கல்யாணவைபவங் கூற, மல்லிகை மலர்கள் மலர்ந்து நகைக்க, மன்மத ராசனுக்கு முடிசூட்டி

* பெரிய வுடையார்—இது வைணவ ஸம்பிரதாயத்தில் சடாயுவைக் குறிக்கும்.

‘ஈசுவரன் கோபத்திற்கு அஞ்சன்மின்’ என்று கூறுவதுபோலும் தன்மையுடைய சோலைகளைப்பெற்றதும்; காவிரிநன்னதி பாயப்பெற்றதும், * ‘நேரி’ எனும் மலைதலைவப்பெற்றதும்; பல விட்டுணுவாலயங்களும், சிவாலயங்களும் விளங்கப்பெற்றதும்; நான்மறையும், நாகரீகமும், மற்றும் இசைநூல் முதலிய பலநூலும் பொலியப்பெற்றதும்; பல படக்குறியென்? பலப்பல வண்டமிழ் வாணராலும் வடமொழி வல்லாராலும் இத்தன்மைத்தெனக் கூறவொண்ணா வியல்பினையுடையதுமான சோழமண்டலத்தை ஆட்சி செய்துவரும் சோழனொருவன் மதவேறுபாட்டால் முரண்பட்டுப் பற்பல புலவர்களைக்கூட்டிச் ‘சிவபிரானே பரம்பொருள்’ எனக் கையொப்பம் வைக்கும் வண்ணம் அவர்களையுறுத்த, சிலர் ஆணைக்கஞ்சியும், வேறு சிலர் பொருள் கருதியும் அவன் விருப்பிற் கிசைந்தனர். இதனையறிந்த ‘நாலூரான்’ என்பான் ‘இவர்கட்கு வலியென்னே! இராமாநுசன் கூரத்தாழ்வான் இவர் ஒப்பம் வைத்தாலன்றே தகுதியதாம்’ என்ன, அவ்வரசனும் அவ்வாறேயொரு தூதனுப்பினன். வந்த தூதன் மடத்தின் வாயிலில் வந்து இராமநுசனை விசாரிக்க, இதனையறிந்த கூரத்தாழ்வான் உடையவர் நீராடச் சென்றிருக்கையில் அவரறியாவண்ணம் அவரது உடைகளையும், முக்கோலையும் கைக்கொண்டு செல்லத்தொடங்கினர். இதுகேட்ட பெரியநம்பிகளும் உடன் சென்றனர்.

அப்பால், நீராடிவந்த உடையவர் காஷாயாதிகளைக் கேட்க, அருகிலுள்ளார் நிகழ்ந்தமைகூறக் கேட்டு அவ்வாழ்வானது வெள்ளையுடையைத்தரித்து ‘அவர்கள் சென்ற காரியம் யாதாகுங்கொல்லோ!’ எனக் கவலையாழியுட்பட்டுப் பெரியபெருமாள் திருமுன்பே சென்று பணிந்து,

† “வெறுப்பொடு சமணர் முண்டர் விதியில்சாக் கியர்கள் நின்பாற்
பொறுப்பரி யனகள் பேசி.” எனத் தொடங்கி,

‡ “அறுப்பதே கருமங் கண்டாய் அரங்கமா நகருளானே.”

எனப்பலபடி வேண்டிப் பின் விடைபெற்றுத் தாமும் தஞ்சீடருமாய்ச் செல்கையில் அச்சேவகர் மீட்டும் விரைந்து தம்மிடத்தும் வருதலை நோக்கிச் சீடர்இராமாநுசரிடம் விண்ணப்பஞ் செய்ய, அவரும் வழியிலுள்ள ஒரு பிடி மணலை யள்ளியளித்து ‘அவர்கள் வரும்வழில் இதனை யொழுக்கிவாருங்கள்’ என்று சொல்லி,

§ “கொடுமை செய்யுங் கூற்றமுமென் கோலாடு குறுகப் பெறா
தடவரைத் தோட்சக்கர பாணி சார்ங்கவிற் சேவகனே.”

---

* இப்மலை இக்காலத்து வேறுபெயரால்-வழங்குகின்றது போலும்.

† திருமாலை.

‡ ,,

§ பெரியாழ்வார் திருமொழி.



என விப்பாசுரத்தையும் உபதேசித்தருளினார். அதுகேட்ட அவர்களும் அவ்வாறே செய்ய, அச்சேவகர்களும் அப்பால் அடியிடக் கூடாமையால் மதிமயங்கிப் ‘போகும் பார்பனர் ஏதோ மந்திரமிட்டுச் சென்றார்கள்’ எனத் தம்முட்கொண்டு மீண்டு சென்றனர். உடையவர் முதலோரும் சுகமே போயினர்.

பின்பு, இங்ஙனம் இளையாழ்வார் காணாமையால் முதலிகள் அனைவரும் இரவியைக்காணாத தாமரைத் தடம்போலவும், சந்திரனைக்காணாத குமுதம் போலவும், நல்லாசிரியனைப் பெறாத மாணாக்கன்போலவும், மழையைக் காணாத பைங்கூழ் போலவும், தாய்ப்பசுவைக் காணாத கன்று போலவும், மணமில்லாத மலர்போலவும், நன்னீர் நதியில்லாத நாடுபோலவும், நிதியில்லாத வாழ்க்கைபோலவும், நல்ல நினைவில்லாத நெஞ்சுபோலவும் ஒளியிழந்து மிக வருந்திப் பட்டினியாய்க் கிடக்கையில் ஒருநாள் இளையாழ்வாரும், அவரது ஏனை மாணாக்கர்களும் ஓரிடத்து எழுந்தருளினார்கள். அம்முதலிகள் இவர்களை இன்னாரென் றறியாமலிருந்தும் பார்ப்பாரென் றுட்கொண்டு அவர்க்கு வழிபாடியற்றிய பின்னர், ‘நீவிர் எங்கு நின்றும் எழுந்தருள்கின்றீர்’ என்று வினவ, அவர்களும் ‘யாம் கோயிலினின்றும் வருகின்றோம்’ என்றனர். இச்சொற் கேட்ட அவர்கள், ‘எம்பெருமானார் செய்கின்றது என்?’ என்றவாறே, எம்பெருமானார், ‘நீவிர் அவரை யறிந்தபடி எங்ஙனே?’ என்றனர். அப்பால் அம் முதலிகளும் இவரே யெம்பெருமானார் என்றுணர்ந்து அவரது அடிபணிந்து உணவுமுதலிய வளித்துபசரிக்க உண்டு அன்றிரவு அங்கே கண்வளர்ந்தருளினார்.

பிறகு, கண்ணிழந்த பிராணிபோற் கலக்கமுற்ற கங்குல்நீங்க, சூரியன் மாணிக்க உறையாகிய கடலின் நீங்கி, உலகத்துயிர்களைத் தன் கரத்தால் துயிலெழுப்புவான் கருதிக் குணதிசைக் குன்றில்வந்தான். எம்பெருமானாரும் காலைக்கடன் முதலியன கழித்து ஆங்கயலிலுள்ளார் அனைவரையும் ஆட்கொண்டு வருகையிற் பற்பல அற்புதங்களைச் செய்தருளி, ஆங்கோரிடத்துத் திரிதண்ட காஷாயாதிகளைப் பெற்று முன்போல அவற்றை உபயோகித்தார்.

மற்றை நாள் மேற்றிசைக்கணுள்ள ‘வந்நிபுஷ்கரணி’ என்ற கிராமவழிவாய் மிதிலாபுரி சாளக்கிராமத்தேற எழுந்தருள, ஆண்டையார் யாவரும் மதவேறுபட்டால் இவர்களை அசட்டை செய்தனர். இது கண்ட இளையாழ்வாரும், முதலியாண்டானை நோக்கி ‘இவ்வூரார் நீராடுந் துறைக்கட் சென்று நமது பாதத்தை நீட்டியிரும்’ என்ன, அவரும் அவ்வாறே செய்ய, அத்தீர்த்தத்தின் மேம்பாட்டால் அன்னார் அனைவரும் அகப்பற்று முதலிய அறப்பெற்று இராமாநுசன் திருவடித்தொண்டு பூண்டொழுகுவாராயினர். அத்தனை யோடமையாமல் அங்கே வடுகநம்பியையும் செவ்வனே சடைக்கணித்துச் சமயக் கோட்பாடுகளையும் மேன் மேலும் பரவச் செய்து, அங்கு

னின்றும் மீண்டு சிங்கர் கோயில் வழியே தொண்டனூர்க் கெழுந்தருளினார். ஆங்கு, அந்நாட்டிறைவனான விட்டல் தேவராயன் மகள் பேய்பிடிக்கப்பட்டுப் பற்பல மந்திரவாதிகளாலும் நீக்கப்பெறாது வருந்தி வாடுகையில், வடுக நம்பியும் ஒரு காரிய வயத்தராய் அரசன் மாளிகைக் கெழுந்தருளி, துயரமுற்றிருந்த அவ்வரயன் மனைவியைக் கண்ணுற்று 'யாது பற்றி நீ இங்ஙனந் துயரமுறுகின்றனை ?' என்று வினவ, அவளும் அதன் காரணத்தை யடைவே புகன்றனள். அதுகேட்ட நம்பியும், இளையாழ்வாரது வைபவமனைத்தையும், அவர் பிரமராக்கதனைப் போக்கிய வரலாற்றையும் கூற, அவ்வரசன் தேவியும் பெருங்களிகொண்டு தன் கணவற்குரைக்க அவனும், 'இப்பேய் அவராலே நீங்குமாயின் அவரே நம்மாசிரியராவார்' என்றறுதியிட்டுக் கூறினன். அவ்வளவில், அவ்வரசன் தனது முன்னைக்குருவிற்கு விருந்தளிக்க யத்தனிக்கையில், மனைவியும் கொழுநனை நோக்கி 'நீர் அங்கவினரென்று சொன்டு அவர்கள் நம்மில்லத்தே வாரார்கள்' என்றனள். அவள் சொல்லைக் கடந்து விருந்தளிக்கமுயல, ஆசிரியர்கள், 'நீ முன்னொருகால் டில்லியரையன் கையிற் சிறைப்பட்டு அங்குளியிழந்தனை யாதலின் நுமதில்லத்தில் உணவு கொள்ளோம்' என மறுத்துவிட்டனர்.

பின்னர், அது காரணமாக அவ்வரசனும், அவன்றன் மனைவியும் நம்பி முதலோரது புருஷகாரத்தால் இராமாநுசனைச் சரணடைந்து உய்ந்தனர். இங்ஙனம் இவர்களைக் கடைக்கணித்து அரசனுக்கும் 'விஷ்ணுவர்த்தநராயன்' எனப்பெயரிட்டுப் பேருவகையோடிருக்குமளவில், 'எமது சீடனை நீர் எங்ஙனே மயக்கி நுமது சீடனுக்கிக் கொண்டீர் ; எம்மை வாதில் வென்றல்லவோ அங்ஙனஞ் செயல் வேண்டும்' எனச் சமணர் பன்னீராயிரர் குழாங்கூடித் தர்க்கிக்கத் தொடங்க, நம் இராமாநுசரும் "மின்மினிப்புழு இடியிலகப்படுமலர் போலவும்,' 'தேளுக்கஞ்சிப் பாம்பின் வாயிலகப்படுபவர் போலவும்' ஆயிற்றே! இனிச் செயற்பாலது என்னே! கர்மையின்றொரு வெளியிடாதிருக்க வெண்ணாது" என்று கொண்டு ஒரு மண்டபத்துத் திரைகட்டுவித்து ஆயிரமுடியுடைய ஆதிசேடனுருவங்கொண்டு அவர்களனைவரையும் பலபடிவாதில் வென்று நிற்க, அவர்களுட் சிலர், பெருங்களியுடையராய் இளையாழ்வாரது திருவடிகளில் ஆச்ரயிக்க முயல்கையில், அவரும் அச்சமணர்களை அங்ஙனே கடைக்கணித்து வைணவராக்கித் தமது கழிபேரு மேம்பாட்டை விளக்கியருளினார்.

அப்பால் இச்செய்தியனைத்தையும் அந்நாட்டதிபனான விஷ்ணுவர்த்தநராயனுக்கு அறிவிக்க அவனும் பெருமகிழ்ச்சி கொண்டிருந்தான். இங்ஙனம் சிங்கர் கோயிலிற் சின்னாள் வீற்றிருக்கையில் ஒருநாள், தமது திருக்கையிலிருந்த திருமண் கழிந்தவாறே 'இனி யாம் திருமண் பெறுவதுயாண்டையோ'? என்றுன்னியபடி கண்வளர்கையில் அன்றிரவு திருநாராயணப் பெரு



மாளும், 'அணித்தாக யதுகிரிக்கண் நுமது வரவை யெதிர்பார்த்து நிற்கின்றோம் ; நும் திருவுள்ளத்திற் கியையத் திருமண்ணுமிங்ஙனே யுண்டு ; சடக்கெனப் புறப்பட்டு வாரீர்' எனக் கனவு தந்தருள, ஆங்கே நினைவுடன் விழிப்புற்று இவ்வற்புதத்தை முதலிகட்கறிவித்து விஷ்ணுவர்த்தநராயனையு மழைப்பித்துத் தாம் சொப்பனங் கண்டபடியை யருளிச்செய்ய அவனும் பெரிது மகிழ்ந்தவனாய் எம்பெருமானார் பின் செல்ல, அவரும் பகுதானிய வருடம் தைமாதத்துச் செம்பொன் செய்ய துகிரியேறி 'வேதபுஷ்கரிணி' என்னும் தடத்திற் படிந்த பின்பு, திருநாராயணப் பெருமாள் எழுந்தருளிய விடந் தேடியுங் காணப்பெறாது கவலையாழியுட்பட்டுக் கண் வளர்கையில் அப்பெருமான், மீட்டுங் கனவிலெழுந்தருளிக் 'கல்யாண ஸரஸின் தென் மேற்றிசைக்கணுள்ள சம்பகச் சோலைக்கருகே வளர்கின்ற பெரிய திருத்துழாயின் புற்றினுட் பொலிந்து நிற்கின்றோம் ; ஆங்கே, நுமது விருப்பம் சிறக்கும் வண்ணம் திருமண்ணும் கிடைக்கும் ; அது முன்னமே பெரிய திருவடியால் சுவேதத் துவிபத்தினின்றும் கொணர்ந்து சேமிக்கப்பட்டுளது' என்றனர்.

(இன்னும்வரும்.)

தி. கோ. ஸ்ரீரங்காசாரியர்.

---

## இலட்சுமண சிங்கின் வீரச்செய்கை.

(184–ம் பக்கத் தொடர்ச்சி.)

அவன் பேசிக்கொண்டிருக்கையில் தெருவின் மூலையில் ஒரு வண்டியின் இருபக்கங்களினின்றும் வெளிச்சம் தோன்றிற்று. அது ஒரு சிறு பெட்டி வண்டி. அது சுந்தரவனத்தின் வாயில் வரையில் வந்துநின்றது. வண்டி நின்றதும் அங்கிருந்த சோம்பேறிப் பிச்சைக்காரர்களில் ஒருவன் ஏதாவது காசுபெறலாமென்னும் ஆசையுடன் கதவைத் திறக்க ஓடிவந்தான். அதே எண்ணத்துடன் வேறொருவன் பாய்ந்து அவனை முழங்கையினுலிடித்துத் தள்ளினான். இருவருக்கும் மும்முரமான சண்டை யுண்டாயிற்று. அங்கிருந்த இருகாவற்காரர்களும் ஒரு பிச்சைக்காரன் பக்கமும் சாணைதீட்டுவோன் மற்றொருவன் பக்கமும் சேர்ந்தமையாற் சண்டை இன்னும் அதிகமாயிற்று. அவர்கள் மேல் அடிவிழுந்தது. சிறிதுநேரத்துக்கெல்லாம் வண்டியினின்றுங் கீழிறங்கிய சீமாட்டியைச் சுற்றிப்பலர் தங்கள் கைகளாலும் தடிகளாலும் ஒருவரை யொருவர் தாக்கிச் சண்டை செய்துகொண்டிருந்தார்கள். சிங்கும் சீமாட்டியைக் காப்பவனாய் முன்விழுந்து சென்றான். ஆயினும் அவன் அவ

ளுருரு சென்றதும் ஒரு கூச்சல் கேட்டது. சிங்கும் முகத்தில் இரத்தம் பிரவாகமாய் ஓடக் கீழே விழுந்துகிடந்தான், அவன் விழுந்ததும் காவற்காரர்கள் ஒருபக்கமும் சோம்பேறிகள் மற்றொருபக்கமுமாக ஓட்டமெடுத்தார்கள். என்றாலும் இது வரையிலும் சண்டையிற் சம்பந்தப்படாது பார்த்துக்கொண்டிருந்த சிலர் சீமாட்டிக்கு ஒத்தாசையாகவும் காயமடைந்தவனுக்குச் சிகிச்சை செய்யவும் ஓடிவந்தார்கள். அலமேலுவும் வேகமாகப்படிகளேறி மெத்தைசென்று அங்குநின்று வீதியைப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

"அந்தப் பேதை மனிதனுக்குக் காயம் அதிகம் பட்டதோ" என்று அவள் கேட்டாள்.

"அவன் இறந்து போய்விட்டான்" என்று பலர் இரைந்தார்கள்.

"இல்லை, இல்லை; பிராணனிருக்கிறது. ஆனால் ஆஸ்பத்திரிக்குப் போவதற்குள் அவன் பிராணன் போய்விடும்" என்று வேறொருவன் கூறினான்.

"அவன் ரொம்ப தைரியசாலி. அவன் இல்லாவிட்டாற் சீமாட்டியின் கடியாரமும் பணப்பையும் போயிருக்கும். அவர்கள் அளவிறிகள். பொல்லாத அளகிரிகள். ஆ! இப்போதான் அவனுக்கு மூச்சு வருகிறது" என்று ஒரு ஸ்திரீ கூறினாள்.

"அவன் தெருவிலிருக்க முடியாது, அம்மா அவனை உள்ளே கொண்டு வரலாமா?"

"வாஸ்தவந்தான் அவனை வாசவுள்ளுக்குக் கொண்டாருங்கள். அங்கே நல்ல சோபா இருக்கிறது. இப்படிக் கொண்டாருங்கோ."

மெதுவாகச் சிறிதும் அசையாமல் அவனை உள்ளே கொண்டுவந்துமுன்னறையில் வைத்தார்கள். நான் நின்றவிடத்தினின்றே பலகணிகள் வழியாய்ப் பார்த்துக் கொண்டிருந்தேன். விளக்கு எரிந்து கொண்டிருந்தது; படுதா விடாமையால் அவன் கட்டிலிற் படுத்திருந்தது எனக்குத் தெரிந்தது. அவன் செய்த மோச நடிப்பிற்காக அவனுக்கு இரக்கமிருந்ததோ இல்லையோ அறியேன்: காயம்பட்டவன் அருகிருந்து பட்சத்தோடும் பிரீதியோடும் அந்த அழகிய மாது சிகிச்சை செய்து கொண்டிருந்ததைப் பார்க்கப்பார்க்கப் எனக்கு வெட்கமாயிருந்தது. என்றாலும் சிங்கு எனக்கிட்ட வேலையினின்றும் இப்போது பின்வாங்குவேனாயின் அவனுக்குத் துரோகியாவேனன்றோ. மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு பாணக்குழாயை மடியினின்று மெடுத்தேன். எப்படியானும் அவளை நான் ஒரு தொந்தரவும் செய்யவில்லையே. அவள் வேறொருவருக்குத் தீங்குசெய்யாமலல்லவோ தடுக்கிறோம்" என்று மனதைத் தேற்றிக் கொண்டேன்.



சிங்கும் கட்டிலில் உட்கார்ந்து காற்றில்லாமல் அவஸ்தைப்படுபவன் போலக் கையை வீசினான். உடனே ஒரு தாதி ஓடிவந்து பலகணியைத் திறந்தாள். அப்போதே அவன் கையை மேலே தூக்கக் கண்டேன். அடையாளங் கண்டதும் பாணக்குழாயை உள்ளே விட்டெறிந்து 'தீ' என்றிரைந்தேன், அம்மொழி என் வாயில் வரும்வராததற்கு முன்னமே அங்குநின்றபுருடர் பெண்கள் தனவான்கள் தாதிகள் முதலாயினோரும் "தீ, தீ!" என்றிரைந்தார்கள். மேகமண்டலம்போல் புகையும் அறையைச் சூழ்ந்துகொண்டது, அங்குமிங்கும் பலர் ஓடப் பலகணிவழியாய்க் கண்டேன். சற்றுநேரத்துக்கெல்லாம் 'யாரோ பொய்யாய்ப் பயமுறுத்தினார்கள்' என்று உள்ளிருந்தே சிங்கும் அங்குள்ளவர்களுக்கு உறுதி கூறினது என் காதிற் பட்டது. அக்கூட்டத்தினின்றும் வீதியின் கோடிக்கு வந்து சேர்ந்தேன். பத்து நிமிஷத்துக்கெல்லாம் என் நண்பனும் என்னை அப்புறமழைத்துக்கொண்டு போனான். பெரியவீதி நாங்கள் வந்து சேரும்வரையில் வாய்திறவாமலே வேகமாக நடந்தான்.

'வைத்தியரே, ரொம்ப நன்றாய்ச் செய்தீர்கள். இதைக் காட்டிலும் வேறுவிதமாய்ச் செய்யமுடியாது. எல்லாம் சரியாகவே நடந்தன' என்று அவனுங் கூறினான்,

"உன்னிடத்தில் போடக்கிராப் அகப்பட்டதே."

"அது இருக்கிறவிடம் எனக்குத் தெரியும்."

"எவ்வாறு கண்டு பிடித்தாய்?"

"நான் உன்னிடஞ் சொன்னதுபோலவே அவள் எனக்குக் காண்பித்தாள்."

"எனக்கு இன்னும் ஒன்றும் புரியவில்லை."

"அதை ஒரு ரகசியமாய் வைத்திருப்பதில் எனக்கும் பிரியமில்லை. வீதியிலிருந்தவர்களெல்லாம் நமக்கு உடந்தையென்று உனக்குத் தெரியுமன்றோ! அவர்களை இராத்திரிக்கு மாத்திரம் கூலிக்கமர்த்தினேன்" என்றுசிங்கும்சிரித்துக் கொண்டே சொன்னான்.

"அப்படித்தான் நானும் நினைத்தேன்."

"அப்புறம், சண்டையுண்டானபோது என் கையிற் சிறிது நனைந்த சாய பௌடர் வைத்திருந்தேன். நான் முன்சென்று கீழே விழுந்து என் கையை முகத்தில் தடவியதும் பார்க்கப் பரிதபிக்கத் தக்கவனாய் விட்டேன். இந்தமாதிரி சூது நான் அடிக்கடி செய்வது வழக்கம்."

"அதுவும் எனக்குத் தெரிந்தது."

"பிறகு என்னை உள்ளே தூக்கிக்கொண்டு போனார்கள், அவள் என்ன செய்வாள். உள்ளே விடத்தானே வேண்டும். எந்தவுள்ளே கொண்டு போவது? நான் எந்த வுள்ளென்று சந்தேகித்தேனோ அந்தவுள்ளே தான். அது அந்த அறைக்கும் படுக்கை அறைக்கும் மத்தியிலிருக்க வேண்டும். எது வென்று அறிய விரும்பினேன். என்னைக் கட்டிலின்மேரில் கிடத்தினார்கள். நான் காற்று வேண்டுமென்று சைகைசெய்தேன். அவர்கள் பலகணியைத் திறக்கவேண்டியதாயிற்று. நீயும் உன் வேலையைச் செய்தாய்."

"அதனாலுனக்கென்ன பிரயோசனம்."

"அதுதான் முக்கியம். தன் வீடுபற்றி யெரிகிறதென்றொரு பெண் நினைக்கும்பொழுது தான் எதை அதிகமாய் மதிக்கின்றாளோ அதின்மேரில் உடனே புத்தி நாடும். அது தன்னையுமறியாமலுண்டாகும் ஒருவகைச் சக்தி. நான் பல தடவைகளில் அதனால் பயனடைந்திருக்கின்றேன். விவாகமான ஸ்திரீயோ தன் குழந்தையை நாடுவள். கன்னியாப்பெண்ணோ தன் நகைப்பெட்டியைத் தேடுவள். இந்த சீமாட்டிக்கோ நாம் நாடிவந்த பொருளைக் காட்டிலும் மதிப்புளது வேறொன்றில்லை. ஆகையால் அதைக்காக்க விரைவாள். 'தீ' யென்ற சப்தமும் வெகு நன்றாயுண்டாயிற்று. கல்மனதாலும் கரைக்க அந்த புகையும் இரைச்சலும் போதும். அவளும் நான் நினைத்தபடியே செய்தாள். பொட்டோகிராப்படத்தை அறையின்கீழ் வைத்திருந்தாள். உடனே அவள் அங்கு சென்றாள். அவள் அதைப் பாதியெடுத்ததும் எனக்குத் தெரிந்தது. நான் அது பொய்க் கூச்சலென்று கூறினதும் அவள் அதை அங்கேயே வைத்துவிட்டுப் பாணைக் குழாயைக் கண்டு வெளியே சென்றாள். பிறகு நான் அவளைக் காணவில்லை. நான் எழுந்து வீட்டினின்றும் சாக்குசொல்லி வெளிவரப் பார்த்தேன். அந்தப் படத்தை யுடனே யெடுத்துக்கொள்வதா வென்று சற்று மயங்கினேன். இதற்குள்ளாக வண்டிக்காரன் வந்து விட்டான். அவன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தமையால் தாமதித்துச் செய்வது யுக்தமாயிருந்தது சிறிது பதறினால் என்னெண்ண முற்றும் சிதறுமன்றோ?

"இப்பொழுது?" என்று கேட்டேன்.

நம்ம வேலை முடிந்தாப்போல தான். நீயும் வரச் சம்மதித்தால் உன்னோடும் ராஜாவோடும் நாளை அங்குப் போவேன். சீமாட்டிக்காகக் காக்கும்படி வெளி அறையில் உட்காரவைப்பார்கள். ஆனால் அவள் திரும்பிவரும் போது நம்மையாவது படத்தையாவது காணமாட்டாள். தன் கையாலேயே அதை யெடுத்தலில் ராஜாவுக்கும் அதிக பிரியமாயிருக்கும்.

"ஆனால் எப்போ போகப்போகிறாய்."

"காலை 8-மணிக்கு. அப்போ அவள் இன்னம் எழுந்திருக்கமாட்டாள். நமக்குச் சுலபமா யிருக்கும். மேலும் நாம் துரிதமாய்ப் போகவேண்டும்



ஏனெனில் இந்தக் கல்யாணத்தால் அவள் நடையுடை பாவனைகள் மாறும். அரசனுக்கு உடனே தந்தியடிக்க வேண்டும்.

நாங்கள் ரொட்டிகிடங்கு வீதி சென்று கதவண்டை நின்றோம். சிங்கும் ஜேபியில் சாவியைத் தேடிக்கொண்டிருந்தார். அப்பொழுது யாரோ 'இலட்சுமணசிங்கு, உனக்குச் சலாம்' என்று போய்க்கொண்டே சொன்னான்.

அப்பொழுது தளத்தில் அநேகர் கும்பலாயிருந்தார்கள். ஆனால் வந்தனமோ வெகுவேகமாய்ப் போய்க்கொண்டிருந்த ஒரு சிறுவனினின்றும் கேட்டது.

"அந்த தொனி நான் கேட்டது போலிருக்கிறது. யாரோ அவன் தெரியவில்லையே" என்று சிங்கும் மொழிந்தான்.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று,

க. கிருஷ்ணசாமி அய்யர்.

## கட்டுக்கதைகள்.

### II. கழுதையும் வாலில்லாக் குரங்கும் அகழெலியும்.

ஒரு கழுதையும் வாலில்லாக் குரங்கும் தங்கள் மனக்குறைகளை யொத்துப் பார்த்தன. கழுதை தனக்குக் கொம்புகள் வேண்டுமென்று முறையிட்டது. வாலில்லாக் குரங்கு, தனக்கு வாலில்லாததனாற் சங்கடப்பட்டது. இப்பேச்சைக் கேட்டிருந்த வோர் அகழெலி "நில்லுங்கள், நுமது குறைகளை விட்டொழித்து, நீங்கள் வகித்திருப்பதற்காக நன்றியுள்ளவரா யிருங்கள். எளிய முற்றுங் குருடாகிய வகழெலியோ உங்களனைவரினும் மிக்க கேடான நிலைமையில் இருக்கின்றது" என்று சொல்லிற்று.

நீதி:—நம்மைக்காட்டிலும் மற்றையோர்கள் மிகக் கேடான நிலைமையிலிருக்கும்வரை நாம முறையிடக் கூடாது.

அமைக்குமாறு:—திருப்தி யென்னும் நற்குணத்தை யடைய வெகுநல்ல வழி, நம்மைக்காட்டிலும் மிகக்கேடான நிலையிற் பலரிருக்கின்றனரென்பதை நினைத்துக் கொள்வதேயாம். ஏனென்றால் சாதாரணமாய் நாம் நம் அயலானிடத்துள்ளதோர் சிறந்த நற்பொருள் நம்மிடத்திலில்லை யெனினும், அவனிடத்திலில்லாத வேறு சில நம்மிடத்தி லுள்ளனவாம் என்னும் இம் மனவமைதி காணாதவர்கள் சிலரே. "தான் ஒரு நிலமிழந்தத னிமித்தம் தன்னோடு அனுதாபப்பட்ட ஒருவனுக்கு அரிஸ்டிப்பஸ் என்பார் அளித்தவிடை எனக்கு மிக மகிழ்ச்சியைத் தருகின்றது. ஏன்? எனக்கு இன்னும் மூன்று நிலங்களிருக்கின்றன. உனக்கோ ஒன்றைத்தவிர வேறொன்றுமில்லை. அதனால், நீ

எனக்காக வருத்தப்படுவதைக் காட்டிலும் நான் உனக்காக வருத்தப்பட வேண்டும் என்றார்" என்று அட்டிஸன் என்பவர் கூறினார். நம்மைக் காட்டிலும் மிக்க வதிர்ஷ்டமுள்ளவர்களைப்பார்ப்பதே தொழிலாகக்கொண்டால் தீக்குணம் யாவற்றினும் மிகவும் இழிந்ததும் இன்பத்துக்குப் பெருங்கேடு விளைப்பதுமாகிய பொறாமைக்கு ஆளாய் விடுவோம். "திருப்தியே யியல்புடைச் செல்வம்" என்றார் சாக்கரடீஸும். ஈசுவர விதிநமக்குக் கொடுத்திருப்பதற்கா நாம் நன்றியுள்ளவராயிருந்து, அது கொடாமல் வைத்திருக்கிற செல்வங்களுக்காக ஆசைப்படுவதை விட்டொழிவோம்.

திருப்தியென்னு நற்குணத்தை வளர்ப்பது இன்ப விதை விதைத்தலாம்.

"தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
யம்மா பெரிதென் றகமகிழ்க."

நீதிநெறிவிளக்கம்.

## III. சிங்கமும் நான்கு எருதுகளும்.

நான்கு எருதுகளும் ஒரே வெளியில் ஒன்றுக்கொன்று எப்பொழுதுங் கிட்டவேயிருந்து சேர்ந்து மேய்ந்தன. ஒரு சிங்கம் அடிக்கடி அவற்றைப் பார்த்து அவைகளைத் தனக்கு இரையாகக் கொள்ள மிகவும் விரும்பிற்று. ஆனால் அவைகளில் யாதேனும் ஒன்றன்மீது சுலபமாய்ப் பாயக்கூடிய போதிலும் அவைகள் சேர்ந்திருக்கும்வரை ஜெயித்துவிடுமென்று தெரிந்த சிங்கம் அவைகளில் யாதேனுமொன்றன்மீதும் பாயத்துணியவில்லை. ஆகையாற் பத்திரமாய்க் கொஞ்சத் தூரத்திலிருந்து பார்ப்பதோடு திருப்தியடைந்திருந்தது. அவ்வாறாகவும் அவைகளைப் பிரிப்பதற்கு ஒருபாயங் கருதி அன்பில்லாச் செவிச்சொற்களாலும் தீய குறிப்புக்களாலும், ஒன்றைப்பற்றி மற்றொன்று சொன்னதுபோலச் சொல்லிக் குரோதத்தையும் அவைகளிற் பிரிவையுந் தூண்டும்படி முயலுவேன் என்று மனவுறுதி கொண்டது. அவ்வாறே சிங்கங்கொண்ட எண்ணமுங் கைகூடிற்று. எருதுகள் தமக்குள் மனஸ்தாபப்பட்டு முன்போல் ஒருமித்து வாழாமல் தனித்தனி பிரிந்தன.

இவ்வாறு ஒவ்வோர் எருதும் தனித்து மேய்வது கண்டவச்சிங்கம் அவற்றின்மீது தனித்தனி பாய்ந்து கொன்று அவற்றை ஒன்றன்பின் னொன்றாகத் தின்றது.

நீதி :—ஒற்றுமை பலமாம்.

அமைக்குமாறு :—ஓர் இராச்சியமாவது வீடாவது தனக்குள்ளே பிரிந்தால் நிலைத்து நில்லாது. மனிதசபைகளிலெல்லாம் அவை பெரும் பகுப்புக்களாகப் பகுக்கப்பட்டபோதிலும், அல்லது தனித்தனி குடும்பங்களாக வகுக்கப்பட்டபோதிலும், ஒற்றுமையே பலத்திற்கு மூலமந்திரமாம். மனிதருளத்திற் போர்நடுக்கத்தை விளைக்குமாயினும் அது நலமையோடு கலவாத தனித்தீமை



யன்று. ஏனெனில் அதனால் ஜனசமூகத்தின் வாழ்நாள் உற்சாகமுறுவதனோடு ஒற்றுமையின் இன்றியமையாமையும் வலியுறுகின்றது. சிறந்ததோர் ஆசிரியற்புலவன் ஜனசமூகத்தின்பகையும் போர்புரியுந் தன்மையும் அல்லாமல் ஏதேனும் ஓர் எண்ணமேனும் ஒரு வடிவமேனும் நாகரிகமுள்ள மனிதர்குழாம் மிகவுமரிதாய்க் கண்டுபிடித்திருக்கு மென்றும், ஒற்றுமையூக்கம் பிறர் பகைச்செயல்களால் உதவி செய்யப்பட்டாலன்றி எக்கூட்டத்தாருக்கும் தமக்குள்ளே ஒற்றுமையுணர்ச்சி விளைப்பதற்கு நாம் வீணில் எதிர்பார்ப்போமென்றுங் கூறினான். சன வொற்றுமையைப் பெரிதும் வளர்ப்பது போரேயாம். ஒரு குடிஜனத்தின் ஒன்றின முயற்சியைத் தங்கள் பொதுக்காவல் நிமித்தம் பலப்படுத்தும் அக்கவலைக்கடலில் தனிமக்கள் சுயநயம் ஆழ்ந்து போகின்றது. நமக்கு இயற்கையிலமைந்த அன்போடுகூடிய அனுதாபங்களினால்மட்டும் விளைந்துழி வலியற்றுப்போதியதன்றாய் நிற்கும் ஒரு குலத்தின் பொதுஜன நாட்டம், புறப் பகைஞர்களை எதிர்க்கவேண்டியிருப்புழி, பெருக்கமுறுமாறு தூண்டப்படுகின்றது. தனிவாழ்க்கையில் நேசர்கள் பழக்கம் சுற்றத்தாருக்குப் பேரினிமை பயக்கும். நாம் நம் நேசத்தைப் பாதுகாக்கவேண்டுமென்றால், பொய்ப்பேச்சினாற் பிளவுபடாதவாறும் குண்டுணி மாக்களுடைய வீண்செய்திகளாற் கெட்டுப்போகாதவாறும் நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்,

"கூடிவாழ் வோரே குறையா வலியினர்மற்
றோடிவில கிட்டா றுறுவ துறுகணென்றே
நாடி யறியா நமாங்க டேரவன்றோ
பீடுடைய தாமரைகாள் பெட்பி னொருக்குறைவீர் ?"

தாமரைத்தடம்.

ம. சு. கோவிந்தசிவன்.

---

## புத்தகக்குறிப்பு.

**போஜ சரித்திரம்.**—போஜ சரித்திரம் இப்புத்தகம் ஒன்று எமது பார்வைக்கு அனுப்பியதற்காக வந்தனமளிக்கின்றோம். இது டி. யஸ். நாராயண சாஸ்திரியார் அவர்களால் எழுதப்பட்டது. வடமொழியிலிருந்து மொழிபெயர்த்துத் தமிழில் நாடக ரூபமாய் அமைக்கப் பெற்றது. இடையிடையே பல மேற்கோட் செய்யுள்கள் உள்ளன. இந்நூலாசிரியர் தமிழில் தக்கமொழிகளில்லையென்றும் உள்ள மொழிகளுக்கும் கம்பீரமில்லையென்னு மெண்ணத்துடன் வடமொழிப் பதங்களை விசேஷமாய் உபயோகித்திருக்கிறார். தங்கள் பேச்சில் விசேஷமாய் வடமொழிப் பதங்கள் கலந்துபேசும் பிராமணர்களும் சாதாரணமாயறியக் கூடாத சில மொழிகளிருந்தபோதிலும் பொதுவாய் எல்லாரும் அறியுமாறு எளிய நடையில் எழுதப்பட்டது எனவேசொல்லலாம். கதை மிகவும் நேர்த்தியாயும் மிக ரம்மியமாயுமிருக்கும். புத்தகத்தின் விலையும் அது அச்சிடப்பட்டிருக்கும் நேர்த்தியையும் சீர்ப்பாட்டையும் நோக்கின் ஆசிரியர் லாபத்தை நாடிச்செய்தவர் அல்லரென்று ஊகிக்கலாம். நமது நண்பர் ஒவ்வொருவரும் இதை வாங்கிப் படித்துக் களிப்பார்களென்று நம்புகிறோம்.

மகாதேவ கோவிந்தரானடே :—

நமது இந்துதேசத்துக் கல்விமான்களுட் சிறந்தவரும் அரசவிசுவாசமும் சுதேசாபிமானமு மொருங்கே யுடையவருமான இவர் நாளது மாசம் 16-ஆம் தேதி புதன் கிழமையன்று இரவு 10½-மணிக்கு இறைவனடியை யடைந்தனர். வியாதிகளின் கொடுமைக் கிலக்காகாது திடீரென்று பரலோகமெய்தினமையே இவர் வாழ்க்கையின் நேர்மையைத் தெரிவிக்கின்றது. இவர் பொம்பாய் ஹைகோர்ட்டு ஜட்ஜிகளி லொருவரா யிருந்தனர்; நம்நாட்டின் நலத்தைப் பெரிதுங் கவனித்துத் தன்னலத்தைச் சிறிதேனும் பாராட்டாது வந்த கனவான். நாம் அனைவரும் இவர் இறந்தமையைக் குறித்து உளமழிந்து களியிழந்து வருந்த வேண்டியதே.

நமது சக்கிரவர்த்தினியார் :—உலக யாதா வென்று ஓதப்பெறும் நம் மகாராணியார் 23-ஆம் தேதி இரவு 6½-மணிக்கு இறந்த செய்தியைக் கேள்வியுற்று யாம் துயர்க்கடலி லமிழ்ந்து வருந்துகின்றோம். எம் துக்கத்தை வாய்விட்டு விளம்பவும் முடியவில்லை.

# ஜனப்பிரியன்.

மாதம் ஒருமுறை பிரசுரம் செய்யப்படும்.

புஸ்தகம். 1] சென்னை 1901ஹு பிப்ரவரிமீ [இலக்கம். 8

## வியாதிகள் உண்டாங் காரணமும் அவைகளை நீக்கும் விதமும்.

நம் ஆயுளைக் குறைத்து நமக்குப் பலவித வருத்தங்களை யுண்டாக்கும் பிணிகளினின்றும் தப்ப முதலில அந்த வியாதியுண்டாவதற்குக் காரணத்தையும், அவை நேரிடும் வகையையும் அறிய வேண்டும்.

அகன்ற கடலிற் செல்லும் மாலுமி தன் கப்பலைச் சரியாய்த் துறைமுகம் சேர்க்கச் செல்லவேண்டிய வழியை நன்றாயறிந்து விலையுயர்ந்த தன் கப்பல் கரைதட்டாதபடி பாறைகளையும் மணல் குன்றுகளையும் நீரோட்டங்களையும் அறியவேண்டியது போலவே நாம் ஒவ்வொருவரும நமது தேகமாகிய கப்பலை நீடித்த வாழ்வு சுகம் ஆகிய துறைமுகத்துக்குச் செலுத்த வேண்டுமானால நமது வாழ்நாள் யாத்திரையில தற்செயலாலும் பிணிகளாலும நமக்கிருக்குங் கங்களிலும் நேரிடும் அபாயங்களை அறிவது அவசியம். நமது விஷயத்தில் எப்பொழுதும் நாட்டமா யிருக்கும் சத்துருக்களாகிய வியாதிகளைப்பற்றி இவ்வித ஞானம் இருவிதமா யடையலாகும். ஒன்று—அவைகள் பரவியிருக்கு மிடங்களில் நாம் துணிந்து சென்று அவைகளின் சக்தியை நமது தேகத்தின்மேல் [illegible] பரீக்ஷிப்பது; இரண்டு—மற்றவர் அவைகளைப்பற்றிச் சொல்வதை நம்புவது. வாழ்நாளாகிய இந்தக் கொந்தளிப்புள்ள கடலில நமது

ப்பலைச் செலுத்தப் புத்திமான்களில் இருவித அபிப்பிராயமுண்டென்றால் நம்புவது அரிதாயிருக்கும் என்றாலும் உலகத்தவரெல்லாரும் விசேஷமாய் ஒவ்வொரு யுகத்திலும் நன்றாய்த் தெரிந்த மார்க்கங்களிற் செல்லாமல் அபாயமான கரைகளிலும் நீரோட்டங்களிலும் தாங்களே செல்லப் புது வழி கண்டுபிடிக்க பிரியப்படுகிறார்களென்று தெரியவருகின்றது. அபாயம் இத்தகையதென்று நாமே அறியவேண்டுமென்றும் நம்மிலும் பயங்கொள்ளிகளான மற்றவர்கள் அவ்வபாயங்களை ஒன்றுபத்தாகச் சொல்லியிருப்பார்களென்றும்நாம்ஒவ்வொருவரும்உணர்கின்றோம். வருங்கேடுகளைத் தக்க சமயத்திலறிந்து அவைகளை நிவர்த்திக்கவும் கூடுமானால் அவைகள் நேரிடாதபடி தடுக்கவும் மற்றவர்களைக் காட்டிலும் நம்மாற் கூடுமென்கிற அகம்பாவத்தினால் நமது வலிமையையோ அல்லது அக்கேடுகளைத்தாங்கும் பொறுமையையோ ஒரு கை பார்ப்போமென்று நாம் ஒவ்வொருவரும் பிரியப்படுகின்றோம்.

சில சமயங்களில் இவ்வாறே நாம் வெற்றியையும் அடைகின்றோம். ஆனால் நாம் எதிர்க்கவேண்டிய சத்துருக்களின் பலம், சக்தி, வழக்கம் இவைகளைப்பற்றியும் அவர்கள் நம்மை எவ்வெவ்விடங்களில் எதிர்ப்பார்களென்பதைப்பற்றியும் நமக்கு எவ்வளவு தெரியுமோ அதற்கேற்றவாறே வெற்றியும் உண்டாகும்.

நாம் இங்கு வியாதியின் காரணங்களைக் கூறுவதனால் புத்திமான்கள் வியாதி எதனால் அதிகமாய்ப் பரவுகிறதென்பதை அறியவும், துணிவாளிகள் தாங்கள் கப்பலைச் சேதமின்றி எவ்வாறு செலுத்தக் கப்பல் சிறிதும் கரைதட்டாதபடி பாதுகாக்கப்படுமென்பதைக் கற்கவும் பயன்படும்.

வியாதியென்பது நமது தேகத்தின் அவயவங்கள் தங்கள் தங்கள் தொழில்களைச்செய்யாதபடி இடையூறு நேரிடுவதனால் உண்டாவது. நாம் சுவசிக்கும் காற்று, குடிக்கும் தண்ணீர் உண்ணும் உணவு இவைகள் முற்றும் சுத்தமாயும் சிறிது அசுத்தமாயுமிருந்தாலும் இவைகள் அளவுக்கு மிஞ்சினாலும் வெகு குறைவாய்ப் போனாலும், இன்னும் வெளிச்சம் உஷ்ணம் இவை ஏறினாலும் தாழ்ந்தாலும் எல்லாம் வியாதிகளுக்கு முக்கிய காரணங்களாகும்



நமது சுகத்துக்கு மிகக் கேடானவை உஷ்ணம் சீதளம் என இரண்டே யென்பார். 'உஷ்ணமே பிராணன், சீதளமே மரணம்' என்று கூறுவர். ஆயினும் இது முற்றிலும் வாஸ்தவமன்று. விசேஷ சீதளத்தாற் பிராணிகளுக்கு எவ்வளவு கெடுதியுண்டோ அவ்வளவு கெடுதி விசேஷ உஷ்ணத்தாலு முண்டு.

வெளிச்சமோ உஷ்ணமில்லாது தனிமையாக அதிகமாயிருந்தால் கண்களுக்குத்தவிர மற்ற அங்கங்களுக்கு ஒரு தீங்கும் நேரிடாது. வெளிச்சம் குறைவுபட்டாலோ குழந்தைகள் நன்றாய் வளராது குறுகியும் நல்ல இரத்தமின்றித் தேகம்வெளுத்தும்போகின்றன. வெளிச்சம்புகாவிடங்களிற் பிணிபிரவேசிப்பதுநிச்சயம். வளரும் குழந்தைகளுக்கு விசேஷ வெளிச்சத்தால் உண்டாகுங் குணங்களை நாம் சிறிதும் உணர்வதில்லை. மனிதன் அன்றிமற்றைப் பிராணிகளுக்கும் வெளிச்சம் அவசியம். இதைப்பற்றி ஒருவைத்தியர் பின்வருமாறு பரீட்சை செய்திருக்கிறார்: தவளை முட்டைகளைத் தண்ணீர் நிறைந்த ஒரு பாத்திரத்திற் போட்டு வெளிச்சம் நுழையாதபடி நான்கு மாதகாலம் வைத்திருந்தார். என்றாலும் தவளை உண்டாகவில்லை. பிறகு அவற்றை யெடுத்து வெளிச்சம் விசேஷமாயுள்ள ஒரு பாத்திரத்தில் வைத்தார். 15-நாட்களுக்குள் தவளையுண்டாயிற்று. மேலும் நமது வயல்களில் வரப்பின் பக்கங்களில வளர்ந்திருக்கும் மரங்களின் நிழல்படும் இடங்களில் வளரும் பயிர்கள் விருத்தியாகாதிருப்பதை நாம் தினமும் காண்கிறோம்.

ஒவ்வொருஜாதியாரையும் ஒவ்வொருவியாதியும்விசேஷமாய் வருத்துகின்றது. பித்தம் வாதம் முதலியவை அத்தேசவாசிகளைத் தங்கள் தங்கள் குணத்துக்கேற்ற வியாதிகளால் வருத்துகின்றன. சிலர்க்கேற்றுக்கொள்ளும் ஆகாரமும் மற்றவர்களுக்கேற்பதில்லை. வியாதியின் குரூரம் வயதுக்குத் தக்கபடியும் மாறுகிறது. பிறந்த ஒரு மாதத்துக்குள்ளாகவே பத்தில் ஒருபங்கு குழந்தைகள் இறந்துபோகின்றன. பிறந்த ஒருவருஷத்துட் கால்பங்கு குழந்தைகள் இறக்கின்றன. ஐந்துவருடத்துட் பாதிக் குழந்தைகள் இறக்கின்றன. 20-வயது முதல் 40-வயது வரையில் எந்த வியாதியை

யும் தாங்கச் சக்தியிருக்கிறது. ஆனால் தள்ளாதபருவத்திலோ அற்ப வியாதியும் பிரமாதமாகின்றது.

கடைசியாக ஜன்மவியாதியும் வியாதிகளுக்கு முக்கியகாரணமேயாம்.

## * இராமாயண ஸங்கிரகம்.

அஞ்சிலே யொன்று பெற்றா னஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்றா றாக வாரியர்க் காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற வணங்கைக்கண் டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தா னவனெம்மை யளித்துக் காப்பான்.

### II-ஆம் அத்தியாயம்.

(அயோத்தியா காண்டம்.)

(211-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

ஸ்ரீராமரும் மற்றிருவரும் அப்பொழுது சித்திரகூட பர்வதத்தை நோக்கிச் செல்கையில் இடையிலுள்ள வனங்களைக் கடந்து செல்ல வேண்டி வந்தது. அதுவோ வசந்தகாலம். சூரிய கிரணம் இளஞ் சந்திரிகைபோற் பிரகாசிக்கவும் தழைத்த விருக்ஷங்கள் நிழல் கொடுக்கவும் வாயுவினாற் சஞ்சரிக்கும் நீருண்ட மேகங்களைக்கண்டு வழியினிரு புறமும் மயில்களாடவும், சோலைகளிற் குயில்கள் கூவவும் புஷ்பங்களிலுள்ள வண்டுகள் ரீங்காரம் செய்யவும் மருண்டபார்வையையுடைய மான்கூட்டங்கள் அவர்தம்முட் சீதாபிராட்டியாரைக் கண்டு மயங்கி நிற்கவும், அவர்கள் அதிக உல்லாசமாய்ப்போய்க் கொண்டிருந்தார்கள். சீதை வனப்பினையுஞ் சுற்றிலுமுள்ள இயற்கைப்பொருள்களின் வனப்பினையும் உற்றுநோக்கி ஒன்றற்கொன்றுள்ள ஒற்றுமையும் வேற்றுமையுங்கண்டுகளித்துச்

* இதிலாங்காங்கு எடுத்தாளப்பட்ட செய்யுள்களின் பொருளறிந் தானந்தங் கொள்ளக் கூடாத சிறுவர் சிறுமியர் முதலாயினோர், செய்யுளைக் கவனியாது வசனத்தையே வாசித்துக் கதையினை யறியலாகும்.



சீதாபிராட்டியாரைக் களிப்படையச்செய்து அவளுடன்சந்தோஷமாய்விளையாடிக்கொண்டுபோம்போது இடையிற்பெரியோர்கள் இவர்களைச்சந்தித்துத்தாங்கள் வசிக்குமிடம் அதுதானெனக் கூறலும், சித்திரகூடமென்பது அவ்விடத்திற்றானிருக்கிறதோ வென்று நினைத்துக் கொண்டிருக்கையிற் பரமே உருவெடுத்து வந்ததொத்த பரத்துவாஜ முனிவர் ஸ்ரீராமரை எதிர்கொண்டு காணவந்தார். அம்முனிவர் தண்டகமண்டலம் தாங்கி மரவுரி உடுத்துப் பிரகாசிக்கும் சடாமகுடம் உடையவராய்த் தோன்றியது பரப்பிரம்மஸ்வரூபம் போன்றது. அவர்அக்கினிஹோத்திரஞ்செய்யும்மகாபாக்கியம்பெற்றவர். பிரம சிருஷ்டியிலடங்கிய ஜீவகோடிகளெல்லாம் தம்முயிர் போலுளத்திலறிபவர். பிரமன் ஏழுலகும் ஆக்கென்றால் தான்நாரணன் நாபியிற் பூத்திலரேனும்ஒருநொடியில் சிருட்டி செய்யவல்லவர். அந்த ருஷிவந்த மாத்திரத்தில் ஸ்ரீராமரும்புஷ்பார்ச்சனைசெய்து அவரைவலம்வந்துசரணஞ்செய்தார். அவரும் இவரைஆலிங்கனஞ்செய்து "இந்தவுருவந்தானே நான் பரோட்சத்தில் அடையப்போகிற"தென்று மனங் குதூகலித்துக் கண்ணில் ஆனந்தவாரி பெருகின்றார். பிறகு ஸ்ரீராமரைநோக்கி "சத்துருநிக்கிரகஞ்செய்யும் தனுப்பாணியாவ! சூர! நீ இவ்வேடம்பூண்டு இக்காலத்து இங்கு வந்ததென்னை?" என்றார். பிறகு அதன்காரணமுணர்ந்து துயரடைந்து "என் சினேகிதனான தசரதன் எப்படி உன்னையிவ்வாறு அனுப்பினான்!" என்று துக்கித்துப் பிறகு தேறி அவர்களை உடனே தமது ஆச்சிரமத்திற் கழைத்துச் சென்றார். அவ்விடஞ் சேர்ந்ததும் இராமருக்கு இருப்பிடந்தந்து பூசிக்கவேண்டிய அர்ச்கிய முதலிய அளித்து அகப்பட்ட கனியுங் காயுமீந்து இனிய வார்த்தைசொல்லி முறைகொண்டாடித் தமது புத்திரர்போற் பாவித்து நடத்தினர். அவர்களும் அதிகசந்தோஷம் அடைந்தார்கள். பிறகு பரத்துவாஜர் அவர்களைத் தம்முடனே இருந்து மனத்திற்கு இன்பந் தரும்பொருட்டு வேண்டி அவ்விடம் கங்கையுடன் யமுனையும் சரஸ்வதியுங் கூடுதலின், ஸ்தலவிசேஷ தீர்த்த விசேஷத்தையுங் குறித்து வற்புறுத்தினார். விசுவாசத்துடன் சொன்ன சொல்லையுட்கொண்டு முனிவரைநோக்கி "ஐயா! இவ்விடம் அயோத்திக்கு அதிக தூரத்திலில்லை. இங்கேயே இருப்பேனாயின் யாவரும்

தங்கள் நாடு நகரம்விட்டுச் சிரமப்பட்டு என்னைத்தேடி யிவ்விடம் வருவார்கள்" என்றுசொல்லியவளவில்முனிவரும் இராமருடைய சொல்கைக்குடன்பட்டு "அப்பா, மேற்பத்துகாதம்போனவையாகில் தேவருலகைக் காட்டினுஞ் சௌக்கியமுள்ளதும் அமரர்கள் அநுசலி செய்யத்தக்கதுமான சித்திரகூடமலையிருக்கிறது, நீங்கள் அங்குறையலாம் என்னலும், மூவரும் விடை பெற்றுக்கொண்டு இடையிலுள்ள இடையர்சேரிகளைக்கடந்து அடுத்திருக்குங் குறிஞ்சி நிலத்தையுந்தாண்டிப்போய்க் காளிந்தியென்னும்பெயர்பெற்ற யமுனாநதியைக் கண்டு குதூகலங்கொண்டு அதிலனைவரும் நீராடிப் பிறகு ஊணருந்தி அதைக் கடப்பது எவ்வாறெனயோசித்துக்கொண்டிருக்கையில் இளையோன் மூங்கிற்கழிகளை வெட்டி ஊனுன் கொடியினால் ஒரு தெப்பங்கட்டி இராமனையும் சீதையையும் அதிலேற்றி, தான் ஆற்றிலிறங்கி நீந்தித் தெப்பத்தை நதிக்கக்கரையிற்கொண்டு சேர்த்தான்.

"வாங்கு வேய்ங்களை துணித்தனன் மாலையின் கொடியால்
ஒங்கு தெப்பமொன் றமைத்ததி னும்பரி னலம்போல்
வீங்கு தோளண் றேவியோ டினிதுவீற் றிருப்ப
நீங்கி னனந்த நெடுநதி யிருகையா னீந்தி."

அக்கரையிலுள்ள கனிவர்க்கங்களையும் விநோதக்காட்சிகளையு மனுபவித்துக் கொண்டு வெகுதூரம் போனார்கள். கிளையும் அடிக்கட்டையும் வேர்களும் சுண்டவும் அதன் கீழிருக்கும் மண்ணும் கொதிக்கவும் அதை நினைப்பவருடைய நெஞ்சத்தையுந் தகிக்கும் பாலைவனத்திற் பிரவேசித்தார்கள்.

"அனைய ரப்புன லேறின ரக்கரை யணைந்தார்
புனையும் வற்கலைப் பொற்பினர் நெடுநெறி போனார்
சினையு மூலமும் வேரும்வெந் திருநிலந் தீந்து
நினையு நெஞ்சமுஞ் சுடுவதோர் நெடுஞ்சுர நேர்ந்தார்."

அத்தகைய பாலையைத் தாண்டுவது ஜானகிக்கு முடியாதென் றெண்ணிச் சூரியனுஞ் சந்திரன் போன்றான். காய்ந்து கரிபோனிருந்த மரக்கட்டைகளும் தழைத்தன, நாற்பக்கமுந் தீக்குமனலும் தாமரைக் காடுபோற் றணிந்தது. வறுத்து விதைத்தது போலொத்த முட்போன்ற பருக்கைக் கற்களும் எடுத்துப்பரப்பிய



பூப்போலச் சீதமடைந்து பசுமையு மேற்றன. முறித்துக்கொளுத்தப் பட்டதுபோலொத்த கொடிகளும் பூந்தளிரெடுத்தது. கார்கொண்டல் மேனியன் போகின்றான் என்னுந் தைரியங்கொண்டு குடைகவித்தாலென மேகங்கள் அந்தரத் தெழும் பிசுபி சென்று குறுந்துளிபிலிற்றின. அதிற்சஞ்சரிக்கும்வனகிராதர்களும் தங்களுடைய கொடுந்தொழிலை விட்டுச் சாதுக்களாயினார்கள். பாலைநிலப் பொருள்களெல்லாம் தங்கள் நிலைமாறி மேன்மைபெற்று இவர்கள் கண்ணுக்கும்மனத்திற்கும் இன்பம் பயந்தன.

"வெளிறு நீங்கிய பாலையை மெல்லெனப் போனார்
குளிறு வானமதிக் குழவிதன் சூல்வயிற் றுளிப்பப்
பிளிறு மேகத்தைப் பிடியெனப் பெரும்பனைத் தடக்கைக்
களிறு நீட்டுமச் சித்திர கூடத்தைக் கண்டார்."

மூவரும் இக்கொடிய பாலையை எளிதினிற் கடந்து யானைகளும் நீருண்ட மேகமும் இனந்தெரியாமற் சஞ்சரிக்கும் சித்திர கூட மலையைப் போயடைந்தார்கள்.

(இன்னும் வரும்.)

கல்தளம். துப்புசாமி முதலியார்.

## பதிவிரதைகளினிலக்கணம்.

1. பதிவ்ரதா பதிப்ராணா ஸாநாரீ தர்மபாகினீ
ஶுச்ரூஷாம் பரிசர்யாஞ்ச கரோத்ய விமனஸ்ஸதா.

"தன்னுடைய பர்த்தாவினிடத்தே விரதம் நடத்துபவளாயும், அவனிடத்தே பிராணனுள்ளவளாயும், அவனுக்குச் சுச்ரூஷையும் பரிசர்யை (ஏவல் வேலை) யும் மனத்திற் பிரீதியுடன்செய்கின்றவளே புண்யவதி. அவளே தனது பர்த்தா (கணவன்) வுடன் தர்மபாக முள்ளவளாவள்."

["பர்த்தாவினிடத்தே விரதம் நடத்துவது": கணவனைத் தவிர வேறொருவர் மீதும் ஆசையையாதிருத்தல். "அவனிடத்தே பிராணனுள்ளவள்": தனது பிராணனை அவனுக்கு ஒப்புவித்து, அவன் வேறு தான் வேறு

என்று பாவியாதிருத்தல். இதனாலேயே கணவனுக்குப் 'பிராண நாயகன்' என்றொரு பெயருண்டு. "சுச்ரூஷை" யாவது ஏவுதலில்லாமல், கணவனுடைய மனத்தையறிந்து, அவனுடைய சௌக்கியத்தையும் சந்தோஷத்தையும் உத்தேசித்துத் தானாச் செய்யும் உபசாரங்களாகும். "பரிசர்யை": ஏவின காரியத்தைச் செய்தல். "பிரீதியுடன்": ஏவாமற் செய்யப்பட்ட காரியமாயினும், ஏவுதலின் மீது செய்யப்பட்ட காரியமாயினும், அதனை மனமுவந்து கணவனைத் திருப்திப்படுத்தவேண்டுமென்னும் மனப்பூர்த்தியான விருப்பத்துடன் செய்ய வேண்டும். இல்லையெனின், வேலைக்காரன் சம்பளத்தினிமித்தம் செய்யும் காரியத்திற்கும் மனைவி செய்யுங் காரியத்திற்கும் வித்தியாசமில்லாமற் போம். கணவனுடைய சுகமே தனது சுகம், அவனைச் சந்தோஷிப்பித்தலே தனது சந்தோஷமெனக்கொண்டு செய்பவளே மனைவியாவள். கணவனுடைய அதிகாரத்திற்குப் பயப்பட்டுச் செய்பவள் மனைவியாகாள்; ஏனெனின், மாதாமாதம் சம்பளம் வாங்கும் வேலையாளானவன், உணவு ஆடையாபரண முதலிய பற்பல ரூபமாய்ச் சம்பளம் வாங்கியும் சம்பளமில்லாச் சேவகம் என்று நினைக்கும் பெண்டிர்களைவிடச் சிரத்தையுடனும் பயத்துடனும் செய்வானென்பது நிச்சயமன்றோ?

"புண்ணியவதி": இவ்வாறு கணவனென்னப்படும் மற்றோர் ஆன்மாவைத் திருப்திப்படுத்திச் சந்தோஷிப்பிக்கும் பாக்கியம் எல்லோர்க்குமே கிடைப்பது அரிது. உடல் வேறாயினும் உயிர் ஒன்றாகி, இருவரும் ஒருமித்து ஐஹிக (இவ்வுலகத்துச்) சுகங்களையநுபவித்துக் கடமைகளை விதிப்படி செய்து முடித்து, ஒருவருக்கொருவர் நற்றுணையாய் நின்று, வாழ் நாளை நல்வழியிற் செலுத்தி யானந்தித்துப் பரலோகம் சேர்ந்து, பகவானையடையும் பாக்கியம் எல்லோர்க்குமே கிடைக்குமா? அரிது, அரிது, முக்காலும் அரிது என்க.

"தர்மபாகமுள்ளவள்": கணவன் செய்யும் புண்ய கர்மங்களின் பயனிற் பாதி மனைவியைச் சேருமென்பது சாஸ்திர சித்தாந்தமாம். ஆதலான், அவளுக்குத் 'தர்மபாகினீ' என்று பெயர் வந்தது. மேற் சொல்லிய விதமாக அவள் நடப்பாளாயின், அவள் 'தர்மபாகினீ' யே யாவள். அவ்வாறு நடவாதவள் மனைவியுமாகாள், 'தர்மபாகினீ' யுமாகாள்.]

[இவ்வாறு ஆரியர்கள் சொல்லியிருப்பதனால், இத்தன்மையான மனைவி வாய்ந்தவன் உலகத்திற் பூஜ்யனெனப் படுவான். புருஷன் பூஜிதையடைவானாயின், அவனுடைய மனைவிக்குக் குறைவென்னை? அவனுடைய ஆசைகளும் விருப்பங்களும் அவன் மூலமாய் நிறைவேறுமென்பது உண்மையாம். அஃதன்றி, பந்து மித்திராதியருக்கு இவர்களிடத்தில் விசேஷ கௌரவமுமுண்டாகும். இந்த நன்குமதிப் புண்டாவதற்குக் காரணம்



ஸ்திரீயானவள் தன்னுடைய ஸ்வதர்மத்தை நெறிவழுவாது, முரண்பாடின்றி யநுசரித்தலேயாம்; வேறன்று].

[உலகத்தில் ஸ்திரீகளாய்ப்பிறந்தவர்கள் 1. லஜ்ஜை, 2. மௌனம், 3. பயம், 4. ரோமஹர்ஷணம் (மயிர்க்கூச்சல்) என்னும் நான்கு குணங்களுமுடையவர்களாய், மனத்தைப் பற்பல வழிகளிலும் போகவிடாமலடக்கி நிறுத்திப் பதிவிரதாதர்மத்தைக் கெடுத்துக் கொள்ளாமற்காப்பாற்றிக்கொண்டிருக்க வேண்டும்.

1. லஜ்ஜை.—பெரியோரைக் கண்டவிடத்தும், பொதுவாய் அந்நியர் எதிர்ப்பட்ட காலத்தும் தான் அடங்கி, ஒடுங்கி, இருந்த இடந்தெரியாதிருத்தலாம். இது நாணம் ஆம்.

2. மௌனம்.—இவ்வுலகத்திலுள்ள எல்லாப் பதார்த்தங்களின் விஷயமான ஞானமும் தனக்கு இருந்தாலும், பரலோகசம்பந்தமான விசேஷஞானம் தனக்கு இருந்தாலும், வேறொருவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது தான் குறுக்கே பேசாமலிருத்தலாம். இது மடமை ஆம்.

சில வீடுகளில் ஸ்திரீகள் மௌனம் சாதிக்கும் விதம் வெகு வேடிக்கையாயிருக்கும். வீட்டிற் கணவனுடன் பேசவேண்டுமானால் மெதுவாய்ப் பேசுவார்கள். இது நன்மையேயாம். கணவனுடைய குரலுக்கு ஸ்திரீயின் குரல் தாழ்ந்திருக்கவேண்டும்; அதற்கு ஈடாயாவது, மேலாயாவது இருக்கக் கூடாது. இது ஸ்திரீயின் அடக்கத்தைத் தெரிவிக்கும்பொருட்டாம். வீட்டிலுள்ள வேறு புருஷர்களுடன் பேசுவதில்லை; அவர்களுடன் ஏதாவது பேச வேண்டின் கைகளினால் ஜாடை காட்டுகிறார்கள். மற்றவர்களுடன்பேசாதிருக்கவேண்டுமென்னும் வழக்கத்தின் உத்தேசம் என்னவெனின், பேசுவதற்கு இடங்கொடுத்தால் அதுமுற்றித்தடித்துச் சரசம்விளைக்குமென்று பயந்து அதற்கு இடங்கொடாதிருப்பதேயாம். எந்தவிதத்திலும் அவர்களுக்கு அடக்கமாயிருக்கும் புத்தியை மேலிடச்செய்வதே கருத்தாகும். ஆனால் இது சில வேளைகளில் விபரீதமாய் முடிகின்றது. அவசியமான காலத்தும், ஜாடையினால் தெரிவிக்கமுடியாத காலத்தும், இவர்கள் பேசாதிருப்பதனால் வெகு நஷ்டங்களும் கஷ்டங்களும் நேரிடுகின்றன. இவைகளையுங் கவனியாமல் முரட்டுத்தனமாய்ப் பேசாதிருப்பது நன்றன்று; எதையும் அதிகமாய்ச் செய்யலாகாது, எதிலும் மிதமாயிருக்க வேண்டும்; "அதி ஸர்வத்ர வர்ஜயேத"=அதிகமாய்ச் செய்தல் எந்தவிஷயத்திலும் கூடாது. சாப்பாடு நல்லதென்று அதிகமாய்ச் சாப்பிடலாமா?

இஃதிப்படியிருக்க, மற்றொரு கெடுதியுண்டு. வீட்டிலுள்ள மற்ற புருஷர்களுடன் பேசாதிருப்பதனால் ஸ்திரீகளுக்கு அவர்கள்மீது ஒருவிதமான அபிப்பிராய முண்டாகலாம்; அந்தப் புருஷர்கள் குடும்பத்திற்கு வேறானவர்களென்றும், அவர்களுக்கும் தங்களுக்கும் பற்று இல்லையென்றும், அவர்

கள் அந்நியர்களென்றும், அவர்களிருப்பது தங்களுடைய ஸ்வதந்திரத்திற்குத் தடையா யிருக்கிற தென்றும் தாமபிப்பிராயப்படக் கூடும். அது தப்பிதமாம். அவர்களுக்கு, மற்றெவர்கள் விஷயத்திலு மிருப்பதைவிட, அதிக அடக்கமாயும், மரியாதையாயும், சிரத்தையாயும், பக்தியாயும், கவனமாயும், பயத்துடனே நடந்துகொள்ள வேண்டியதற்காக மௌனம்விதிக்கப்பட்டிருக்க, அவர்களுடன் இவர்களுக்குப் பழக்கம் குறைவானதனால் அவர்களை வேற்றுராக நினைப்பது எத்தனை விபரீதமாகின்றது!

இன்னுமொருவிதமான கெடுதியு முண்டாகின்றது. உலகத்தில் ஒரே மாதிரியான சந்தர்ப்பத்தி லிருப்பவர்களுக்குப் பரஸ்பரமாய் உண்டாகும் அன்பும் சிநேகமும் அதிகமாயிருக்கும்; சிநேகத்தில் அதுவே உண்மையான சிநேகமாம்; ஒரு பணக்காரனும் ஓர் ஏழையும், சந்தோஷமுள்ளவனும் துக்கப்படுகிறவனும், உத்தியோகத்துள்ளவனும் உத்தியோக மில்லாதவனும், குடித்தனஞ் செய்பவனும் சோற்றுக்கடையி லுண்பவனும், இவ்வாறு வேறு வேறு சந்தர்ப்பங்களிலிருப்பவர்கள் எவ்வளவு சிநேகமாயிருக்கிறார்களெனினும், அஃது உண்மையில் உறுதியான சிநேகமாகாது. ஒரே நிலைமையில் இருவரு மிருந்தால் அவர்களுக்குள் அந்நியோந்யம் அதிகமாயிருக்கும். இஃது அநுபவத்தினா லறியக்கூடியது. இதுபோல, வீட்டில் ஸ்திரீகளைப்போல் மெதுவாய்ப் பேசவேண்டியவர்கள் வேலைக்காரர்களாவர். அல்லது, ஸ்திரீகள் வேலைக்காரருடன் பேசும்பொழுது எஜமானனுக்குக் கேட்காதிருக்கும் பொருட்டு மெதுவாய்ப் பேசுவது வழக்கம். இப்படிப் பேசுவதற்காக அவர்கள் அடிக்கடி ஒருவரை யொருவர், விலகி நில்லாமல், சமீபிக்கவேண்டியது அவசியமன்றோ? சாதாரணமாய் மெதுவாகப் பேசும் பொழுது, உற்றாரிடம் அன்புடன் கலந்து மனத்தை விட்டுப் பேசுவதாகத்தோற்றும். இவ்வாறு வழக்கப்படுவதனால் வேலைக்காரருடன் நட்பு அதிகரிக்கின்றது. இது விரும்பத்தகாதது. ஆதலால், ஸ்திரீயானவள் வேலைக்காரருடனாயினும், அவருக்குச் சமானமானவர்களுடனாயினும் பேசவேண்டி யிருந்தால், தான் எஜமானியென்பதையும், தோழியல்லள் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு கண்டிதமாயும், சொற்பமாயும், அதிகாரப்பாங்காயும், பயமும் கூச்சமுமின்றி, சிரிப்புக்கும் சரசத்திற்கும் கொஞ்சங்கூட இடங்கொடாமற் பேசவேண்டும். மெதுவாய்ப் பேசவேண்டு மெனின், தன் அதிகாரத்தைச் செலுத்தாமற் கைவிட வேண்டுமென்றாவது, வித்தியாசமின்றி எல்லோருக்கும் பயந்து நடக்க வேண்டுமென்றாவது அர்த்தமன்று. தனது நிலைமைக்குத் தக்கபடி அதிகாரஞ் செலுத்தி வேலைக்காரரிடம் வேலை வாங்குவது ஸதிரீயின் உரிமையாம். கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது அவளது கடமையாம். உரிமையையும் கடமையையும் கவனித்து நடப்பதே அழகாகும். எங்கு எதற்குப்பயப்படவேண்டுமோ, எதற்கு எந்தச் சமயத்தில் நாணவேண்டுமோ இவைகளைக் கவனியாமல் எப்பொழுதும் எங்கும் ஒரே மாதிரியாயிருப்பது அழகன்று.



இருமாறாட்ட ஜன்மத்திற்குத்தகாது. எவனுக்கும் எஜமானனுமுண்டு, வேலையாளுமுண்டு; தான் அதிகாரத்திற்குட்படு மிடமுமுண்டு, தான் அதிகாரம்செலுத்து மிடமுமுண்டு. எவ்வெவ்விடத்தில் எவ்விதம் நடக்கவேண்டுமோ அதுதெரியாமல் நடப்பவன் புத்தியுள்ள மனிதனாகான். அதுபோல, ஸ்திரீயும் காலம், இடம், சந்தர்ப்பம் ஆகிய மூன்றையு மநுசரித்துத், தனது நிலைமையையும் கற்பையும் உத்தேசித்துப், புத்தியை யுபயோகப்படுத்தி, சாஸ்திரத்தினாலேனும் வழக்கத்தினாலேனும் ஏற்பட்டிருக்கும் விதிகளின் கருத்து நிறைவேறுமாறு நடக்கவேண்டும்; ஸ்திரீக்கும்பகவான் மூளையைக்கொடுத்திருக்கின்றார்; அந்த மூளையை யுபயோகிக்கவேண்டும்; அதனால், புத்தியைக் கூர்மைப்படுத்திக்கொள்ளும் பொருட்டேயன்றி, அந்த மூளையின்மீது மயிரை வளர்த்து அதற்குத் தினந்தோறும் நிரம்ப எண்ணெயிட்டுச் சீவி, பகற்பொழுதிலந்த எண்ணெய் ஊறி நெற்றியின்மீதும் கழுத்தின்மீதும்கசிந்தொழுக, அதனைக்கையினால் வழித்துச் சுவரிலோ, அல்லது, இடையிலுடுத்த சீலையிலோ தடவி அதனைக் கெடுத்து, இராக்காலத்தில் தலையணையிலந்த எண்ணெய்க் கூந்தலைப் புரட்டி அழுக்கும் நாற்றமும், அதனால், வியாதியு முண்டாக்குவதற்காக அன்று என்பதை ஸ்திரீகள் அறியவேண்டும். சமயம் வாய்த்தபொழுதெல்லாம் நாம் உபயோகித்துப் பயின்று, இத்தகைய அப்பியாசத்தினாலதனைக் கூர்மைப்படுத்தி உலகத்தில் வெற்றிபெற்று, அதனைக்கொண்டே மறுமைக்கும் வழிதேடும்பொருட்டு நம்மீது கருணையுடன் பகவான் அளித்திருக்கும் அருமையான ஆயுதமாகிய மூளையை நாம் துருப்பற்றுமாறு செய்து கடைசியாய் மண்ணுக்கு இரையாக்கல் நேர்மையோ? அதனாலடையற்பாலதான பிரயோஜனத்தை யாம் அடைந்தபிறகு அது போவதனாற் குற்றமில்லை.

3. **பயம்.**—கணவனுடைய விஷயத்தில் தனது மனத்தில் எத்தனை பக்தியும் விசுவாசமு மிருந்தபோதிலும், சந்தேகத்திற் கிடமுண்டாக்கும் வார்த்தைகளை யுபயோகித்தால் அதனால் அபாயம் வருமென்று (தீமைவிளையுமென்று) தெரிந்து பயந்து நடப்பதாம். இஃது **அச்சம்** ஆம்.

4. **ரோமஹர்ஷணம்.**—தனது கணவனல்லாத மற்றவர்களுடைய ஸ்பரிஸத்தினு லுண்டாகும் அஸஹ்யம் (மனம் பொறாமை), பயம், அபவாதம் ஆகிய இவைகளுக்குத் தாங்காமல் இதயம் பதைத்து, உடல் அதிர்ந்து, மயிர் சிலிர்த்தல். இது **பயிர்ப்பு** ஆகும்.

உற்சவாதிகளில் தேவாலயங்களுக்கு ஹிந்துக்கள்—ஸ்திரீகளும் புருஷர்களும் குழந்தைகளும்—கூட்டங் கூட்டமாய்ப் போய் அங்கே ஜனமிகுதியால் நடப்பதற்கும் நிற்பதற்கு மிடமில்லாமல் நசுங்கலுற்று மிகக் கஷ்டப்பட்டும் ஸ்வாமிதரிசனம் கிடையாமல், அந்நியர்களின் தேகஸ்பரிசமும், இடிபிடியும் இதனிடையில் நகைகளைக் களவு கொடுப்பதுமே பலிதார்த்தமாய் (பயனாய்)த் திரும்பி வருகிறார்கள். இந்த வழக்கம் கொஞ்சங்கூட நன்று

யிருக்கவில்லை. தேவாலயங்களில் ஸ்திரீகள் வேறாயும், புருஷர்கள் வேறாயும் நடப்பதற்கும், நின்று ஸ்வாமிதரிசனம் செய்வதற்கும் வேறு வழிகள் ஏற்பாடு செய்யவேண்டும். அல்லது, ஒரேவழியாயினும், அதனில் இரண்டு பகுதிகளேற்படுத்த வேண்டும். இல்லையெனின் ஸ்திரீகள், உற்சவகாலங்களில் தேவாலயங்களுக்குப் போவது அநுசிதமாகும். இந்த விஷயத்தைப் பற்றித் தேவாலய தர்மகர்த்தர்கள் தகுந்த யோசனை செய்வது அவர்கள் பல குடும்பங்களுக்கு, முக்கியமாய் ஸ்திரீகளுக்குச், செய்யும் பேருதவியாகும்.

இதுபோல, நதிகளிலும் குளங்களிலும் ஸ்திரீகளும் புருஷர்களும், சோளதேசத்திற்போல, அருவருப்புக்கிடமாய், ஒரே துறை, அல்லது, கட்டத்திற் கலந்திறங்கி ஸ்நானபானாதிகள் செய்யாமல், வேறு வேறு இடங்களில் ஸ்திரீகள் வேறாயும் புருஷர்கள் வேறாயும் இறங்கித் தம்மாடைகளின் மாசுநீக்கவும், உடம்புகுளிக்கவும் ஏற்பாடுசெய்யவேண்டும். ஸ்திரீபுருஷர்கள் வியவஸ்தையின்றிக் கலந்து இறங்கி ஒரு துறையிற் குளிப்பது வெகு அஸஹ்யமாயும் கோரமாயு மிருக்கின்றது. புத்தியுள்ள ஸ்திரீகள் இப்படிப்பட்ட துறைகளுக்கும் தேவாலயங்களுக்கும் போகார். இந்த இடங்களுக்குப்போய் இதர புருஷர்களின் தரிசன ஸ்பரிசனங்களினால், சாஸ்திர விதியினாலும் ஸம்ஸார வாழ்க்கையின் நிர்ப்பந்தத்தினாலும் வழக்கத்தினாலும் பொதுஜன அபிப்பிராயத்தினாலும் தங்களுடைய மனதிலுதித்திருக்கும் ஒருவிதமான நுண்ணிய தன்மையையும், லஜ்ஜையையும், ஸங்கோசத்தையும், அடக்கத்தையும் வரவரப் போக்கடித்துக்கொண்டு, ஹிந்து ஸ்திரீகளுக்குரிய அடங்கிய தன்மை மாறி, புருஷர்களும் தங்களைப்போல மானிடரே என்று வேதாந்தம்பேசி, புருஷர்களுக்குள்ள ஸ்வதந்திரம் தங்களுக்கு ஏன் இருக்கக்கூடாதென்று வீண்வாதம் செய்து, துணிந்ததலை நிமிர்ந்து அண்ணாந்து பார்த்துக் கைவீசிக் காலையுதறிநடந்து; புயங்களதிரக், குயங்கள் குலுங்க, விழிகளின் நயங்காட்டி வேகமாய்க் கொந்தளித்து; 'பார்,' 'பார்' எனப்பாதச் சிலம்புகளினால் வழிப்போக்கரைக் கூவியழைத்து, மோகக்கனல் மூட்டி மையல் செய்து; மகிழ்ந்து மதங்கொண்டுமமதையடைந்து, மறலி (யமன்) விடுகின்ற மாயையெனுந் தூதராய்த் திரியும்படியான மனப்பான்மை (அவ்விடங்களுக்குப் போய்)ச் சம்பாதித்துக் கொள்வதைவிட, ஸ்திரீயானவள் தனது வீட்டிலேயே இருந்துகொண்டு, கடமைகளை நிறைவேற்றி, பரிசுத்தமான ஆடையாபரணங்களைத் தரித்துக்கொண்டு, கணவனே கடவுளெனக் கணப்பொழுதும் மறவாது கருதிநின்று, அவனிருக்கும் வீடே தேவதா கிருகமென நினைந்து, பயபக்தியுடன் அதனைச் சுத்தமாய் வைத்துக்கொண்டு, அவனைத் தொழுது உபசரித்து ஆனந்தப்படுத்துவதே தான் பேரின்பவீட்டை யடைவதற்குச் சாதனமென ஒரு நினைவாகி, 'பதியே கதி' யென்று சரணமடைந்து நற்கதியை நாடுவதே நன்மையாம்.



தெய்வத்தைத் தொழாவிடினும் கணவனை யெப்பொழுதும் மனத்தினால் தொழுதுகொண்டு, இரவில் படுப்பதற்குமுன் அவனைத்தொழுது, அவனே ஞாபகமாய் உறங்கி, மறுபடி விடியற்காலத்தி லெழுந்திருக்கும் பொழுதும் அதே நினைவுடன் எழுந்து, இவ்விதமாக எல்லாக் காலத்திலும் இடைவிடாது பதி பக்தி செய்பவள் மகா உத்தமியாவள்; அவள் ஸத்தியஸ்வரூபியாவள். இப்படிப்பட்டவளைப் பற்றித் திருவள்ளுவ நாயனார் சொல்லுகிறார்:—

தெய்வந் தொழாள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை].

2. பிதா ரக்ஷதி கௌமாரே பர்த்தா ரக்ஷதி யௌவநே
புத்ராச்ச ஸ்தவிரே பாவே நஸ்திரீ ஸ்வாதந்திரிய மர்ஹதி.

"வாலிபத்தில் தந்தையினாலும், யௌவநத்திற் கணவனாலும், கிழத்தனத்தில் மக்களினாலும் ஸம்ரக்ஷிக்கப்பட வேண்டியதேயன்றி, ஸ்திரீகள் ஸ்வதந்திரமாய் வியவகரிக்கத் தகார்."

[வாலிபத்திலும் கிழத்தன்மையிலும் புருஷர்களாயினும் ஸ்திரீகளாயினும் பிறருடைய உதவியின்றி, பிறருக்கடங்காமல எந்தக் காரியமும் செய்ய முடியாதென்பது எல்லோர்க்குந் தெரிந்த விஷயமேயாம். இந்த இரண்டு பருவங்களிலும் நம்மை யன்புடன் ஆதரித்துப் போஷித்துப் பாதுகாத்து நமது நன்மையை நாடுகிறவர்கள் எவரோ அவர்களுடைய ஆளுகைக்கு உட்பட்டு அவர்களுடைய மனத்துக்குச் சிறிதும் விரோதமின்றி, அவர்களுடைய சொற்படி நாம் நடக்கவேண்டியது அவசியமாம். இவ்விதமாக நம்முடைய வாலைப்பருவத்தில் நம்மீது அன்புபாராட்டுபவர் பெற்றோர்களாகவும், முக்கியமாய்த் தந்தையாகவும், மூப்பு நேர்ந்தகாலத்து நம்மிடத்து நன்றி விசுவாசங்களுடன் நம்மை யுபசரிக்கக் கூடியவர்கள் நமது மக்களாகவும், முக்கியமாய்ப் புத்திரர்களாகவும் இருக்கின்றார்கள். இவ்விரண்டு அம்சங்களிலும் புருஷருக்கும் ஸ்திரீகளுக்கும் வித்தியாசமில்லை; இருவரும் சமானஸ்தர்களே யாவர். தந்தையேனும் மக்களேனும் இல்லாவிடத்து, வேறு பந்துக்கள் அவ்வக் காலங்களில் நம்மைக் காப்பாற்றவேண்டிய நிலைமையில் இருக்கின்றோமே யன்றி, ஸ்வதந்திரமாய் நடப்பதற்கு, எந்தக் காரியத்தையும் நாமே செய்வதற்குத் தகுந்த புத்திக் கூர்மையும் சரீர பலமும், சிலவேளைத் திரவியபலமும் இல்லாதிருக்கின்றோம். ஆதலான், வாலிபத்திலும் மூப்பிலும் ஸ்திரீகள் மாத்திரமே ஸ்வதந்திரமற்றவர்களென்று நினைக்கவேண்டாம்; புருஷர்களும் ஸ்வதந்திர மற்றவர்களே யாவர்.

(இன்னும்வரும்.)

கிருகஸ்தன்.

# ஸ்ரீ
# ஆசாரியர்கள் சரித்திரம்.

(217–ஆம் பக்கத் தொடர்ச்சி.)

## இளையாழ்வார் வைபவம்: இரண்டாம் பகுதி.

பின்பு உடையவரும் கண்விழித்து அக்குறித்தவிடங்குறுகிக் கப்புங்கவருமாய்ப் பணைத்துக் கொழுந்துவிட்ட திருத்துழாய் மரத்தைக் கண்ணுற்ற அளவில், ஆனந்தத்தின் மேலீட்டால் மெய்ம்மறந்து அம்மரத்தின் அடியிலுள்ள மண்ணை நீக்குங்கால் புற்றினுள்ளே பொற்கோயில்தோன்றியபின், மற்று * அங்கினிதமர்ந்த மாமாயனுடைய நீலசிகாமணிதிதிதோன்ற, ஆங்கே நாரணனுருவங்கண்டு நலம் மிகுந்து,

† "ஓடுவார்விழுவாருகந்தாலிப்பார்
நாடுவார்நம்பிரானெங்குற்றானென்பார்
பாடுவார்களும்பல்பறைகொட்ட நின்று
ஆடுவார்களுமாயிற்றாய்ப்பாடியே" என்னுமா போலே,

குணலைக்கூத்தடித்து மங்கலசங்க மிருதங்க முதலிய முழக்கிப் பாலாலே அபிஷேகஞ்செய்து முடிமுதல் அடியீறாகக் கண்ணாரக் கண்டனுபவித்துத் தாமே மூன்றுநாள் திருவாராதனஞ் செய்தருளி, ‡ தந்தையின் பொருளைத் தனயன் பெறுவதுபோற், சடகோபனருளிய திருவாய் மொழியின் $ "ஒருநாயகம்" என்ற திருப்பதிகத்தைத் திருநாரணனுக்குச் சமர்ப்பித்து அப்பெருமானையே சரண்புக்கு அனைக் கைவல்ய புருஷார்த்தமனைத்தையும் காற்கடைக் கொண்டொழுகுவாராயினர்.

* இச்செய்தி நிகழ்ந்தகாலம்:—"ஆயிரத்துக்குமேற் பன்னிரண்டு சென்ற வர்த்தமான பகுதானிய வருஷம் தைமாதம் சுக்கிலபக்ஷம் சதுர்த்தசியும் வியாழக்கிழமையுங் கூடின புனர்பூச நட்சத்திரம்" என்பர்.

† பெரியாழ்வார் திருமொழி.

‡ "தமிழ்மறைகளாயிரமும்ஈன்ற
முதற்றாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
இதத்தாயிராமாநுசன்" என்ற பிள்ளான் அருளிச் செயலும் இங்கு அறியத்தக்கது.

$ திருவாய் மொழி: 31–ஆம் பதிகம்.



அப்பால் கல்யாண ஸரஸின் வடமேற்குத் திசையிலுள்ள திருமண்ணையும் பெற்றுத் திருநாரணப் பெருமானுக்குச் சேவையிலமைத்துப் பாஞ்சராத்திர விதிப்படி பிரதிஷ்டையுஞ் செய்தருளினார். இவ்வாறாயும் அப்பெருமானுக்கு உற்சவஞ் செய்யப்போந்த பேறுவாய்த்திலதே! எனக் கவலைகொண்டு கண்வளர்க்கையில், திருநாராயணன் ஸ்வப்பனத்தி லெழுந்தருளி 'நம் உற்சவபேரமான ராமப்பிரியர் இப்பொழுது லீலை கொண்டாடி டில்லிக்குச் சென்று ஓர் மசமதிய அரசனில்லத்தே வீற்றிருக்கின்றார். அங்குச்சென்று எழுந்தருள்வித்து வாரீர்' என்று நியமித்தான். அக்காலையில், நம் உடையவர் செல்ல வழிகாட்டச்சூரியனுழுதித்தான். அதன்பின், திருநாரணனது உரையைச் சிரமேற்கொண்டு டில்லி நோக்கி யெழுந்தருள, அந்நகர்க்கதிபனும் இளையாழ்வாரைக்கண்டு, அவர்க்கியற்றத்தக்க உபசாரங்களை முறைப்படி யியற்றி, 'அடிகள் இவண் எழுந்தருளிய காரியம் யாதோ? தெரிய அருளவேண்டும்' என வேண்டி நிற்கையில், அவரும், 'எமது குலத்தெய்வமான ஸ்ரீராமப்பிரியர் இங்கு நின் அரண்மனைக்கண்ணே வீற்றிருக்கின்றார்; அவரை அளிக்க வேண்டும்' என்ன, அரசனும் 'அங்ஙனே ஆகுக' என்று, மீட்டும் 'கொள்ளைகொண்டு சிறைவைத்த எம்பெருமானைச் சிறைச்சாலையிற் சென்று நீரே சோதித்துக் கொள்வீர்' எனப் பணிந்தனன். அதுகேட்ட நம் இராமாநுசனும் சர்க்கரைப் பந்தலில் தேன்மழை பெய்ததன்மையை யொத்து, அக்கணமே சென்று சோதித்து அத்தேவர்களில் ஸ்ரீராமப்பிரியரைக் காணகில்லாது வருந்திக் கிடக்க, அன்றிரவில் ராமப்பிரியர் இளையாழ்வாரைநோக்கி 'நீர் வருந்துவதேன்! யாம் அவன் மகளாலே பூசை செய்யப்பட்டு அவளது அந்தப்புரத்தே இருக்கின்றோம்; ஆங்கே வந்து எம்மைக்கொண்டு செல்வீர்' என்றனர். பின், கண்விழித்துப் பார்த்து அவ்வற்புதச் செய்தியை அரசனுக்கறிவிக்க அவனும் 'நம்பக்கல் இவ்வளவு அருளுடையவர் தாமே வரக்கடவர்' என்ன, இவரும் 'அவ்விராமப்பிரியரைக் கண்டு திருவடி தொழலாகாதோ?' என்று வினவ, 'அரசன் அதற்குத் தடையாதுளது' என அவரைத் தன் மகளின் அந்தப்புரத்தேற அழைத்துச் சென்றான்.

அங்கே ராமப்பிரியரும் உடையவரைக் கண்டவாறே ஆச்சிரிதவாச்சல்லியந் தோன்ற இட்டசட்டையும் கட்டிய சதங்கையும் வட்டத் திலதமும் பட்டையரைஞாணும், * "மையோ மரகதமோ மழைமுகிலோ மறிகடலோ" எனத்தக்க நறுங்குஞ்சி யலைய, † "தன்னிய லோசை சலஞ்சலனென்றிட" என்றபடி செம்பொற் சதங்கைகள் 'சல்,' 'சல்' என்றொலிக்க அனைவருங் கண்டதிசயிக்குமாறு விரைந்துவந்து உடையவர் திருமடியிலே வீற்றிருந்தார். அவ்வமயத்து நம் இளையாழ்வார் தாம் உற்ற ஆனந்தப்பெருமையினை

* கம்பராமாயணம்.

† பெரியாழ்வார் திருமொழி: 9 ஆம் பதிகம்.

* அவரே கூறவேண்டுமே யன்றி மற்றெவராலுங் கூறவொண்ணாது. அங்ஙனம் உட்கார்ந்த ஸ்ரீராமப்பிரியனை அணைத்துத் தழீஇக்கொண்டாராதலின் அன்றுமுதல் அவர்க்குச் 'செல்வப்பிள்ளை' எனப் பெயர் வழங்கலாயிற்று. இவ்விந்தைகளைக் கண்ட அரசன் உடையவர்பக்கல் மிக்க பக்தியுடையனாய் அவரைப் பெரிதும் உபசரித்துச் சம்பத்குமாரரையும் கொடுத்தனுப்பினான்.

பின்னர் உடையவரும் அங்குநின்று மீண்டு யாதவாத்திரியான திருநாராயணபுரத்தே விரைந்துவந்தார். ஆங்குள்ளாரனைவரும் ஊரை யலங்கரித்து எதிர்கொண்டு சென்று தமது களிப்பின் மிகுதியைச் செய்கையாற்காட்ட ராமப்பிரியர்க்குப் புரோக்ஷணம் முதலிய குறைவற நிறைவேற்றி நித்தியோற்சவம் முதலியவற்றையுஞ் செய்து, † "உன்றன்னோடுற்றோமே யாவோமுனக்கே நாமாட்செய்வோம்" என்றபடி அவர்க்கே தொண்டுபூண்டு கைங்கரிய ஸ்ரீயை அனுபவித்து அவ்வூர்க்கும் 'திருநாராயணபுரம்' எனப் பெயரிட்டு, 'இந்நகரத்தே வாழ்வார்க்குச்

‡ "சிறுகா லையிலா நிலையோ திரியா
குறுகா நெடுகா குணம்வே றுபடா
வுறுகால் கிளர்பூ தமெலா முகினும்
மறுகாநெறி" ஆகிய வைகுந்த மாநகரத் தாட்சி கிடைக்கத் தடையுண்டோ? எனவருளிச் செய்தார்.

[அத் திருநாராயண புரத்திற்குக் கிருதயுகத்தில், ஸநத்குமாரர் ஸத்தியலோகத்தினின்றும் ஆனந்தமயமான திவ்யவிமானத்தோடே திருநாராயணனை எழுந்தருள்வித்துப் பிரதிஷ்டை செய்தமையால் 'நாராயணாத்திரி' எனவும்; திரேதாயுகத்தில், 'தத்தாத்திரேயர்' என்பார் வேத புருஷர் நால்வரையும் தமக்குச் சீடராக்கிக்கொண்டு வந்து புஷ்கணிக் கரையில் இடைவிடாமல் வேதம் ஓதிவந்தமையால் 'வேதாத்திரி' எனவும்; துவாபரயுகத்தில், நம்பிமூத்த பிரானாலும் ஸ்ரீ கிருஷ்ணனாலும் ஆராதிக்கப் பட்டமையால் 'யாதவாத்திரி' எனவும்; இக்கலியுகத்தில் எம்பெருமானார் எழுந்தருளி அபிமானித்தமையால் 'யதிசைலம்' எனவும் பெயர்வழங்கலாயிற்று என்ப.]

பின்பு, உடையவர் பதுமகிரியிற்சென்று பவுத்த ஸமயிகளை வென்று அப் பவுத்தரையும் கற்காணந்தன்னில் அரைப்பித்து வேதாந்தப் பிரவசனம் செய்துகொண்டு அங்கே பன்னிரண்டாண்டு வீற்றிருந்தார். அக்காலத்தில், கோயிலினின்றும் போந்தவந்த ஸ்ரீவைஷ்ணவரொருவர் உடையவரிடஞ் சென்று அவரை நமஸ்கரித்து நிற்க, அவ்வுடையவரும், 'பெரிய பெருமாளும் பெருந்திருச் செல்வமும் செய்கிறபடி என்'? என்று கேட்டருள அவரும், 'தேவர் இல்லாக்குறை யொன்றே யொழிய மற்றேதுமில்லை' என்றனர். இராமாநுசரும், 'சோழன் பக்கல் எழுந்தருளின ஆழ்வான் செய்தியும் பெரிய நம்பிகளின் செய்தியும் யாதாயிற்று'? என வினவ, அவ்வைஷ்ணவரும், 'சோழனது ஏவலாளனொருவன் கூரத்தாழ்வானையும் பெரியநம்பியையும் அரசனவைக்கண் அழைத்துச்செல்ல அவனும் இவர்களை நோக்கிச் "சிவனே பரம்பொருள்" என்று கையொப்பம் வைக்குமாறு வற்புறுத்தக் கூரத்தாழ்வான் "நாராயணனே பரம்பொருள்" என யாவரும் தெள்ளிதினுணருமாறு ஸகலசாஸ்திரங்கட்கும் இணங்கப் பற்பலப் பிரமாணங்களைக்காட்டி அதனை மறுத்துரைப்பாராயினார். அது கேட்ட சோழன் பெருஞ்சீற்றமுடையனாய் ஆழ்வானை நோக்கி, 'நீ முற்றுங்கற்ற மூதறிஞனாதலின் கண்டபடி விண்டுரைக்கவல்லை' எனக்கனன்று "நான் பிடித்த முயலுக்கு மூன்றேகால்" என்பதுபோல மீட்டும் தன் கூற்றே வலியுடைத் தென்று அதற்கே கையொப்பம் வைக்குமாறு உறுத்தினன். ஆழ்வானும் * "சிவத்தினும் துரோணமே பெருமையது" எனக் கையொப்பமிட்டனர். அதுகண்ட சோழன், 'இவர்களைக் கண்ணைப் பறித்து விடுக்க' எனக் கட்டளையிட்டனன். ஏவலாட்களும் அவ்வாறே செய்ய நம்பியும் ஆழ்வானும் மிக நலிந்து அவ்வேதனை பொறுக்கலாற்றாது ஆங்கொரு கொல்லைக்கண் பெரியநம்பி ஆழ்வான்மடியில் திருமுடியும் அத்துழாய் மடியில் திருவடிகளுமாய் இளைத்துக்கண் வளர்க்கையில், ஆழ்வானும் அத்துழாயும் அந்நம்பியைநோக்கி 'உயிர் உடலை விட்டு அகலுங் காலத்துக் கோயிலேறப் போகவேண்டுமோ?' என்ன நம்பியும், அங்ஙனே யாம் செய்யின் மற்றை வைஷ்ணவர்கள் யாவரும் 'மரணமடையுங் காலத்துத் திருவரங்கத்தே செல்லவேண்டுமோ? என ஐயுறுவர்' என்றருளிச் செய்து † ஆங்கே திருநாட்டை யலங்கரிப்பாராயினார்.

அப்பால், சில ஸ்ரீவைஷ்ணவர்கள் அவர்க்குச் செய்யத்தக்க உத்தரகிரியைகளனைத்தையும் குறைவறநடத்தி அன்றிரவிலேயே யாருமறியாவண்ணம் கூரத்தாழ்வானை அழைத்துக்கொண்டு கோயிற்கண் வந்து புகுந்தார்கள். பிறகு ஆழ்வானும் தனக்கும் மரணம் நேர்ந்திலதே! என மனம் வருந்தி

* இளையாழ்வார், ஆதிசேஷனது அவதாரமாதலின், தமது இரண்டாயிரம் நாவினாலும் கூறின் ஒருவாறு உரைக்கடங்கும் என்றாம்.

† திருப்பாவை.

‡ கம்பராமாயணம்.

* 'சிவம்' என்றால் குறுணி (நாலுபடி பிடித்த மரக்கால்.) 'துரோணம்' என்றால் எட்டுப்படி பிடித்த மரக்கால். எனவே நாலுமரக்கால் பிடித்த பாத்திரத்தினும் எட்டு மரக்கால் பிடித்த பாத்திரமே பொருமையது எனப் பரிகசித்துரைத்தார் என்க.

† ஆதலினால், வைஷ்ணவர்கட்கு மரணமடையத் தேச நியதி வேண்டாம் என்றறிக.

* "முறையோ வரணைமேற் பள்ளிகொண்ட முகில் வண்ணனே!" எனச்
சோகித்துவாடினார்' எனக் கூறக்கேட்ட உடையவர் வேரற்ற மரம்போல
வீழ்ந்து துடித்துக் கண்ணீர்மல்கி, ஆங்கு அயலிலிருந்தார் தேற்றத்தேறி அந்
நம்பிகட்குத் தாம் செய்யத்தகும் ஸ்ரீ சூர்ணபரிபாலனம் முதலிய செய்து
ஆழ்வானுக்குக் கண் போயிற்றே! என்று சோகமுடையராய், மாறொன்றில்லா
மாருதி சிறியாண்டானை நோக்கி 'ஆழ்வானது நிலைமையையும், ஆங்குள்ள
மற்றை விசேடங்களையும் அறிந்து வாரும்' என்று கோயிலுக்கனுப்பிவிட்டு
முன்போல வேதாந்த ஆராய்ச்சி செய்துகொண்டிருப்பாராயினர்.

பின்னர், கோயிலை நோக்கிச் சென்ற மாறொன்றில்லா மாருதி சிறியாண்
டான் ஆழ்வானை வணங்கி நிற்க ஆழ்வானும் இவரை உடையவரைச் சேவித்
தாற்போலவே பேரானந்த முடையராய் 'உடையவர் செய்தருள்கின்றபடி
என்?' என்று வினவ, ஆண்டானும் நிகழ்ந்தமை யாவுமடைவே புகன்றனர்.
அதற்குள் ஆழ்வானும், 'உலகமனைத்திற்கும் ஒருயிரானதாமசுகமேவாழ்ந்திருக்
கப்பெறில் ஏழ்தனுந் தீங்குண்டோ? என்று சந்தோஷமுடையரா யிருக்கின்
றார் என விண்ணப்பஞ் செய்க' என்று சொல்லிவிட, அவ்வளவிலே பாக
வதாபசாரப்பட்ட சோழனுக்குக் கழுத்தில் புண்ணுய்ப் புழுத்துப் புரண்
டான் எனக்கேட்டு அதனை நிச்சயித்துக்கொண்டு, மற்றுஞ் சிலரோடு நம்
முடையவரிடம் விரைந்துவந்து அவர் தம் திருவடிகளை ஆனந்தக்கண்ணீரா
கழுவிச் சோழனது சரிதத்தையும் சொல்வாராயினர். அதுகேட்ட இராமா
நுசர், திருமாலினருளை வியந்து செய்தி கொணர்ந்தவர்க்குஞ் சிறப்பளித்து
அவர்பக்கல் பெருங்களி கொண்டொழுகுவாராயினர். அவ்வைணவர்களும்
'முன்பு தெள்ளிய சிங்கன் பிரகலாதனைச்சினந்த இரணியனை ஆகம் பிளந்த
மைய போல இப்பொழுதும் தீயனை வேரறுத்த திருமாலே!' என நெஞ்சு
ருகிக் கண்பனிப்ப நின்று துதித்தனர்.

அதற்கப்பால், உடையவரும் மற்றையோரும் திருநாராயணப் பெரு
மாள் திருமுன்பே சென்று தாம் கோயிற்கட்செல்ல விடை தந்தருளுமாறு
வேண்ட, நாரணனும் அர்ச்சகர் முகமாய் நியமித்தருளினர். அதுபெற்ற உடை
வரும் தம் சீடருட் சிலரை நோக்கி, 'நீவிர், திருநாராயணரையும் செல்வப் பிள்
ளையையும் தர்சனம் பண்ணிக் கொண்டு தொண்டு பூண்டொழுகுவீராக
என்று நியமித்தருள, அவரும் 'தேவர் திருவடிகளைப் பிரியில் யாம் உயிர் த
யோம்;' எனக் கூறினர். அதற்கு உடையவரும், அப்போதொரு சிந்தை
செய்து தமது உருப்படமொன்று உதவி 'இதனைப் பூசித்து வாருங்கள்
எனப் பணித்துத் திருநாராயணனுக்கும் அந்தரங்க கைங்கரியம் கைவிடா
செய்தொழுகுமாறு கட்டளையிட்டமையோடு அவர்களையும் போரக் கடை
ணித்தருளித் தாமும் திருவரங்கத்தெழுந்தருளினர்.

* திருவிருத்தம்.



பின்பு, கோயிலிலுள்ளார் யாவரும் இராமநுசரை யெதிர்கொண்டு
போற்றிநிற்க, அவர் அனைவரையும் போரவுவந்து அழகிய மணவாளன் திரு
மண்டபத்தே சென்று தண்டனிட்டு அப்பால் உறைகோயிலுள்ளே புகுந்து
பெரியபெருமாளையும் நம்பெருமாளையும் திருவடிதொழுது மனமுருகி மலர்க்
கண் களிக்க, கண்ணாரக்கண்டு வாயாரவாழ்த்தி நிற்க, பெருமாளும் தன்
திருப்பவளச் சோதி வாய்திறந்து உடையவரை நோக்கி 'நெடுநாள் தேச
சஞ்சாரத்திற்சென்று போதமெலிந்தீரோ!' என்று வினவ, எம்பெருமானாரும்
பெரிய பெருமாளைக்குறித்து, * "அகமகிழுந் தொண்டர் வாழ அன்பொடு
தென்றிசை நோக்கி" தேவர் பள்ளிகொண்டருள்கையாலே எவருந்தீங்கு
ருர் என்பதிலையுமுண்டோ?' என்ன, திருமாலும் அதற்குவந்து தமது தீர்த்
தம் முதலிய அளித்து 'மடத்தே செல்வீர்' என்று விடை தந்தனுப்பினர்.
எம்பெருமானாரும் உடனே புறப்பட்டு ஆங்குள்ள மண்டபம் முதலிய எல்
லாவற்றையுஞ் சுற்றிச் சேவித்து ஆழ்வான் திருமாளிகைக்கண் எழுந்தருளி
னர். ஆழ்வானும் எதிர்சென்று உடையவர் திருவடிகளிலே வீழ்ந்துவணங்கி
நிற்க, அவரும் இவரையணைத்து வர, இருவரும் கழி பெருந் துயரத்தால்
நெடு நேரம் ஒரு வார்த்தையுஞ் சொல்லமாட்டாதே விம்மிவிம்மித் தழு
தழுத்த குரலால் ஒருவரையொருவர் மெல்லக்குசலம் உசாவுவாராயினர்.

பின்பு, மற்றையோரனைவரும் உடையவரைத் தண்டனிட்டுப் பெரிய
நம்பி திருநாட்டுக் கெழுந்தருளினபடியையும், ஆழ்வானுக்குக் கண்ணற்றபடி
யையும் நினைத்துநினைத்து வருந்தித் 'தேவரீரைப் பெற்றோமே!' என்றானந்
தத்துடன் வீற்றிருந்தார்.

அக்காலத்தில், சித்திரகூடம் அழிந்ததென்று சிலர் சொல்லக்கேட்டுத்
துயர்க்கடலிலாழ்ந்து, அந்த இழவெல்லாம் ஆரும்படித் திருப்பதி சென்று
ஸ்ரீ கோவிந்தராசனையும் அங்கே பிரதிஷ்டைசெய்து, † '"தென்தில்லைச்
சித்திரகூடத்தின் செல்வனை—மின்னணி மழைதவழும் வேங்கடத் தென்வித்
தகனை" என்றதுவே பொய்ம்மொழி யொன்றில்லாத மெய்ம்மொழியாகையா
லே இப்படிப் பலித்ததே!' என்று திருமலை குறுகி வேங்கடத் துறைவனை
வணங்கி ஆங்கு நின்று மீண்டு காஞ்சிநகர்வழியாகக் கோயிலையடைந்தார்.

மற்றைநாள், உடையவர் ஆழ்வானை யழைத்து 'நீர் கண்பெறுமாறு
பேரருளாளனை வேண்டக்கடவீர்' என்ன, அவரும் அதனைமறுக்க, இராமா
நுசர் மீட்டும் தடுத்துரைக்க ஆழ்வானும் அவர்தம் கட்டளையை மறுவண்ணம்
வரதனை வழிபட்டுத் துதிப்பாராயினர். அன்றிரவே அருளாளனும் கனவிற்

* பெருமாள் திருமொழி.

† பெரிய திருமடல்.

றென்றித் 'தந்தோம்' என்றனர். இதுகண்ட கூரத்தாழ்வான் கண்விழித்து விடியற்காலமாயினமைகண்டு நீராட்டம் முதலிய செய்து ஆங்கு உடையவர் ஸந்நிதிக்கட்குறுகி அவரடியணிந்து * "பிணி யொழித்தமரர் பெருவிசும்பருளும் பேரருளாளர்" ஆகையால் எனது விண்ணப்பம் நிறைவேறிற்று என்றார். அப்பால், உடையவரும் ஆழ்வானும் காஞ்சிமாநகரஞ் சென்றனர். அவருள் இராமாநுசர், கோயிற்கட்செல்லச் சிறிது காலந்தாழ்க்க, ஆழ்வான் மட்டும் முன்னே சென்று அருளாளனைத் துதிக்க அவ்வருளாளன் ஆழ்வானை நோக்கி, 'நமக்கு வேண்டுவதென்?' என்ன, அவரும் 'உடையவரது அருள் நோக்கிற் கிலக்காவதே பெரும்பேறு' என்றனர். இச் செய்தியைக் கேட்ட இராமாநுசர் விரைந்துவந்து அருளாளனை நோக்கி, 'எனது எண்ணத்தைத் தலைக்கட்டாது வாளாவிருப்பதிற் பயனுண்டோ?' என, அருளாளன், 'ஆழ்வான் நம்மிருவரையுங் காணவேண்டிய ஊனக்கண்ணையொழித்து ஞானக்கண்ணாற் காணக் கடவராக' என்றனர். பின்பு இருவரும் இங்ஙனம் ஆங்குச் சின்னாள் வீற்றிருந்து பின்னர்க் கோயிலேறச் சென்று முன்போலக் காலங்கழித்தார்.

பின்பொருநாள், திருவரங்கத்தில் நாய்ச்சியார் திருமொழியின் வியாக்கியானத்தில் "நாறு நறும் பொழில்" என்ற செய்யுளைக்கண்டு அதன் பொருளை நன்காராய்ந்து † 'ஆண்டாளது வேண்டுகோளை நாம் தலைக்கட்டுவதே கடன்' எனக்கொண்டு அப்பொழுதே புறப்பட்டு திருமாலிருஞ்சோலைசென்று அதனை நிறைவேற்றிய பின்னர் அங்குநின்றும் மீண்டு ஸ்ரீவில்லிபுத்தூரிற் கோதையடிமணிந்து நிற்ப, சூடிக்கொடுத்தாள், குலமுனிவனைக் குறித்துத் தம் விருப்பினைச் சிறப்பித்தலமையின் பொரவுவந்து, அர்ச்சகர் மூலமாய் "நம் கோயிலண்ணர்" எனப் பெயரிட்டுத் தீர்த்தம் முதலிய தந்து விடை கொடுத்தருள அவ்விடம் விட்டுத் திருநகரி முதலிய திருப்பதிசென்று அப்பால் கோயிற்கண்ணே வந்து வீற்றிருந்தார்.

* பெரிய திருமொழி.

† ஆண்டாள் திருமாலிருஞ் சோலை அழகர்க்குச் சிறந்த விருந்தளிக்கக் கருதி, அங்ஙனஞ் செய்யக்கூடாமையின், "நூறு தடா நிறைந்த வக்காரவடிசில் சொன்னேன்" என்றனள். பின்பு உடையவர், அவள் சொல்லியதைப் பண்ணிமுடித்து அவ்வேண்டுகோளைத் தலைக்கட்டினார் என்க. [இக்காரணம் பற்றியே, வயதிலும் பெரிய ஆண்டாளை உடையவர்க்குச் சிறியள் எனக் கொண்டு "பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள்" என்றார் என்ப.]

(இன்னும்வரும்.)

தி. கோ. ஸ்ரீரங்காசாரியர்.



# சோபாமணி.

(173-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இப்பொழுது நம் முன்னர் வந்து நிற்கும் கலாவானும் அவ்வாறே 'மன்னனாணை கடப்போன் தன்னை முற்றும் இழப்போன்' என்று, நீர்வழிப் பட்ட புணைபோல அவனது மனத்தின்படியொழுகி, அவனாற் கனத்தையும் தனத்தையும் அடையுங் கனமுடையாரினத்திற் கலந்திருக்கத்தக்க குணமுடையனே. அன்றியும், இவனுடைய தாய் மன்னவனது நன்குமதிப்பையும் நட்பையும் பெற்றுக் கௌரவ மடைந்திருத்தலை நீவிர் யாவரும் அறிவீரே. இக்கலாவானே புலந்திய தேயத்தனாயினும் போதசேனத்துப் பொருநர் கலாசாலையில் நம் அரசனாற் சம்மானிக்கப்பட்டு மிக்க சிறப்புடன் கற்றுத்தேறினவன். இத்துணைக் கல்விச் சிறப்பு வாய்ந்தவனும் இவ்வளவு கௌரவமுள்ள அவ்வம்மையின் குமாரனுமான இவனிடத்துக் கம்பீர சித்தமும் சௌரவ வொழுக்கமு மிருத்தல் வேண்டுமன்றோ? அவ்வாறு இருக்குமென்றே நம் கருணையங்கடலான மன்னனும் எண்ணினன் என்பது திண்ணமே. நம் அரச வள்ளல் இவ்வாலிபனைப் பெரிதாதரித்து வந்ததே அதற்குச் சான்றாம். வினால் இவ்விளைஞன் சிறிது பதட்ட குணமுள்ளானென்பது கேள்வி. ஆயினும் பெருந்தகைமை வாய்ந்த நம் பிரதாப வேந்தன் இவன்மீது வைத்த அன்பினால் முன்னொரு முறை இவன் செய்த பிழையைச் சிந்தையிற் கொள்ளாது பொறுத்திருக்கின்றனன். அதனுண்மை பிரஸ்தாப சங்கதியைத் தொடர்ந்திருப்பதனால் அதனை ஈண்டு யான் சிறிது விவரித்தல் இன்றியமையாததாகும்.

இவ் வமயத்தில் வார்த்தாகான் பர்லீந நகரத்துச் சீனமட்கலத் தொழிற் சாலையில் நிகழ்ந்ததையும் அரசன் அதனைப்பாராட்டாது விட்டதையும் நன்றுவிரித்துரைத்தான். பின்னர் இங்ஙனம் தொடுத்துப் பேசினன் :—

இக்கலாவான் தான் செய்த குற்றத்தினை அரசன் பொறுத்திட்ட ஒருமாதத்தினுள் இராஜத்துரோகி யென வசைப் பெயரெடுக்கும்படி தனக்குப் பெருநன்றி புரிந்து நண்பு பாராட்டிய அர

சன்பால் அபசாரப் பட்டது ஆச்சரியத்தை விளைக்கின்றது. இவன் பகிரங்கமாக எதிர்க்கத் துணிவுறாது அந்தரங்கத்தில் அரையன் மனதைப் புண்ணுறுக்கிறான். இவன் இழைத்த தீங்கிற்கு மற்றொரு வேந்தனாயின் அவனது கோபத்தினால் இவன் மரணம் அடைந்திருப்பானே: 'புலிக்குப் பூனை எவ்வளவு!' அக்குற்றத்தில் தொடர்புடையாரைக் கண்டு ஒறுத்திட நினைத்திருப்பானாயின் நம் இறைமகனுக்கு இஃதோர் அரிய காரியமோ! அங்ஙனமிருந்தும் அக்குற்றவாளிகள் தீங்குறாதிருத்தல் அவர்கள் முன்னம்பண்ணிய புண்ணியமே. ஒருகால் அகப்பட்டிலர் போலும். மேலும் இறைவன் 'சிறியார் புரியும் அற்பக் குற்றங்களைப் பொருள் செய்யாத கம்பீர குணபூஷணனல்லனோ' எனினும், தனது அன்பிற்கும் போஷணைக்கும் உரிமையுடையரான ஒருவர் செய்த துரோக கிருத்தியத்தைப் பொறுத்திருப்பா னென்று முற்றும் கருதவுந் தகாது. நமது அரசவள்ளல் இவன் மாட்டு அளவற்ற அன்பு நாட்டி நண்பு காட்டி வாராநிற்க அவ்வன்பினைத் தனது தீச்செயற்குத் துணையாகச் செய்து கொண்டமை சிறிதேனும் நம்பத்தக்கதோ? 'விரல் நுழைய இடங்கொடுக்கத் தலையை நுழைத்தான்,' பரஸேநப்பெரியீர்! இச்செய்தி நம்பத் தகாததுபோலத் தோன்றினும் இவன் குற்றஞ்செய்தது உண்மையே. அதற்குச் சாட்சியங்களும் மற்றை ஆதாரங்களும் இருக்கின்றன.

இங்ஙனங்கூறி அக்கணமே வார்த்தாகரன் பரஸேநக் கிண்ணத்தின்மீது மூடியிருந்த துணியைக்கழற்றி, தனக்குப் பின்புறம் வாக்குமூலம் எழுதுவிக்குமாறு சித்தமாய்க் காத்துக்கொண்டிருந்த சினைமட்கலத் தொழிற்சாலைத் தலைவனுக்கும் மற்றொரு யூதனுக்கும் அதனைக் காட்டினன். பின்னர் அக்கிண்ணத்தைப் பஞ்சாயத்தார் வாங்கிப் பார்த்து, அதன்மேல் 'பிரதாப மன்னன்பெருமைக் குறி' என வரைந்திருப்பதைப் படித்து, அதனை அடுத்துள்ள 'கொடியன்' என்ற மொழியை வியப்புடன் உற்று நோக்கினர். அப்பொழுது வார்த்தாகரன் யூதனை முன்வந்து வாக்குமூலங்கொடுக்கும் வண்ணம் கூப்பிட்டான். இந்த யூதன் முதிர்ந்த வயதுடையவன். அவனது பார்வையில் ஏதோ ஓரதிசயக்குறி தோன்றிற்று. அன்றியும் அவன் சித்திரப் பாவைபோல மெய்த்தொழி லடங்கிப்



பின்னிடா உள்ளத்தனாகி நின்றனன். அவனது கண்ணினுள்ள விழிகள் ஓயாது மருண்டு புரண்டுகொண்டே யிருந்தன. தன்பின்புறம் நிகழும் விடயங்களைத் தான் பார்க்க இயலாமையின் அவன் மிக்க மனக்கவலை யுற்றனன். அவன் பேசத் தொடங்குகையில் மொழி சிதறி வாய் குழறித்தடுமாற்ற முற்றனன். கலாவானின் நேசரும் மற்றையோரும் அந்நிய சாதியானான அவ் யூதனுடைய நடைநொடிகளைக் கண்டும் அவன்றன் பேச்சுக்களைக் கேட்டும் வேறாக எண்ணத் தொடங்கினர். நிஷ்பக்ஷபாதிகளாய சிலர் அவ் யூதன் ஸபாகம்பத்தினால் [அவைக் கோழை] குழறுகின்றானெனக் கருதினர். சலமனன் எனப் பெயர் கொண்ட அவ்யூதன், "ஸர்வ வல்லமையுள்ள கடவுளின் முன்பாக நான்சொல்வது உண்மை. எல்லாம் உண்மை. உண்மையன்றி வேறில்லை" என்று சத்தியஞ் செய்து, வார்த்தாகரன் கேட்கும் வினாக்கட்கு விடை பகர்வானாயினன்.

வார்த்தாகரன்.—நீ இக்கிண்ணத்தை இதற்கு முன்னர் எப்பொழுதேனும் பார்த்ததுண்டோ?

சலமனன்.—உண்டு. பார்த்திருக்கின்றேன்.

வார்த்தாகரன்.—எப்பொழுது? எவ்விடத்தில்? நீ அறிந்தவை அனைத்தையும் பஞ்சாயத்தாருக்குச் சொல்.

சலமனன்.—ஸமஸேநத்தில் அரசன் அரண்மனையின்கண் சித்திர சாலைப் படிக்கட்டின்மீது முதன்முறை நான் பார்த்ததுண்டு. அஃது, எனக்கு ஞாபகம் உள்ளவரையில் இம்மாதம் முதல்தேதி இரவு பத்து நாழிகையின் மேலோ, அன்றிப் பதினைந்து நாழிகை இருக்கலாமோ—அதனை அறுதியிட்டு உறுதியாகச் சொல்ல விரும்புகின்றேன்; ஆயினும் இத்தனை நாழிகைதான் இருக்குமென்று நிச்சயித்துக்கூற இயலவில்லை.

வார்த்தாகரன்.—நாழிகைக் கணக்கு நமக்கு அவசியமில்லை. இந்தக் கிண்ணத்தைப் பார்த்தற்குரிய சந்தர்ப்பம் நினக்கு எங்ஙனம் வாய்த்தது? அதனைத் தெளிவுறக் கூறுதி. விரையாது மெல்ல நிதானித்துப்

பேசு. சிறிதுகாலம் மிகினென், குறையிலென்? எவ்வாற்றானேனும் உண்மை வெளிப்படும் என்பதற்கு ஐயமில்லை.

சலமனன்.—பரதேசத்திலுள்ள சில பிரபுக்களுக்கு அனுப்பும் வண்ணம் வைத்திருந்த வண்ண மட்கலங்களோடு இக் கிண்ணத்தையும் மகாராஜா என் கையிற்கொடுத்து இதனையும் ஏனையவற்றோடு கட்டியனுப்புமாறு கட்டளையிட்டார். சீன மட்கலங்களை நகரங்களிலும் நாட்டுப்புறங்களிலும் நான் விலைசெய்து கொண்டிருந்தமையின் நான் அதன் மதிப்பைச் சிறிது அறிவேன். ஆனதுபற்றி, இப் பேரழகு வாய்ந்த கிண்ணம் முதலில் எனது பார்வைக்கு வந்தது. நான் அதனை ஊன்றிப் பார்வையிட்டு அதன்மீது படிந்திருந்த தூசை எனது கைத்துணியினாலே துடைத்தேன். அக்கைத்துணி தானும் இங்ஙனே இருக்கின்றது. நான் அந்தக் கிண்ணத்தைத் துடைத்துக் கொண்டிருக்கையில் "பிரதாப வேந்தன் மகிமைக் குறி" என்ற வசனங்களைப் படித்துப் பார்த்து அவ்வெள்ளெழுத்துக்கள் நன்று புலப்படும் வண்ணம் துடைத்தேன். அவ்வெழுத்துக்கள் எழுதப்பட்ட புறம் நீல நிறம் பற்றியிருந்தது. நான் அதனைத் துடைக்கவே கைத்துணியில் நீலவன்னம் ஒட்டிய செயலைப் பார்க்க மிக்க வியப்புண்டாயிற்று. அப்பால் அதனை நான் செவ்விதின் ஆராய்ந்தபொழுது ஓரங்குல நீளமும் அரையங்குல அகலமுமுள்ள ஓரிடத்தில் மட்டும் துண்டாய் நீல வருணம் கலந்திருப்பதைக் கண்டேன். இவ்வமையத்தில் மகாராஜர் எனக்கு நேராகத் தமது முதுகைத் திருப்பிக்கொண்டு படிக்கட்டின் மேலே தொங்கவிட்டிருந்த மிக்க தொழிற்றிறமும் அழகும் வாய்ந்த ஓர் அற்புதமான படத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தனர். அத்தருணத்து, திடீலென்று 'ஆண்டவனே!' என்று நான் செய்த பேரொலியை



மகாராஜர் கேட்டுத் திரும்பிப் பார்த்து, 'சலமனா! நீ யென்ன திக்பிரமை கொண்டவன் போலத் தோன்றுகின்றாய்! இந்நேரத்தில் 'ஆண்டவனே!' யென்று கூவுதற்குக் காரணம் யாது? இக் கிண்ணங்களைக் கட்டியனுப்பும் செயலில் உன் ஆண்டவன் வந்து உதவி புரிவானென்று உன்னினையோ?' என மகாராஜா வினவிய வினவுக்கு விடைபகர முடியாது மயங்கி நின்றேன். நான் நீலவன்னத்தைக் கலைத்த இடத்திற் பொறித்திருந்த பதத்தைக்கண்டு கலக்கமும் நடுக்கமுங் கொண்டேன். அப்பதம் 'கொடியன்' என்பது. 'கொடியனான பிரதாபவேந்தன் மகிமைக் குறி' என்பதையே எனக்குள் பன்முறை சொல்லியும் எண்ணியும், 'இஃதென்னை! இங்ஙனம் வரையப்பட்டிருக்கின்றதே!" என்று ஒன்றும் தோன்றாமல் நிற்கையில் மகாராஜா 'அஃது யாது?' என்று என் கையிலிருந்த கிண்ணத்தைச் சடிதியின் வாங்கிப் பார்த்து, எனது கைத்துணியில் நீலவன்னம் தோய்ந்திருந்ததையும் கண்டு யாதும் உரையாடாது அக்கணமே படிக்கட்டை விட்டு அகன்றனர். இவ்விஷயத்தில் இத்தனையே நான் அறிவேன்' என்று இவ்வாறு கூறி அச்சலமனன் என்ற சாக்ஷி நியாயஸ்தானத்திற்கு வந்தனம் செய்துநிற்க, வார்த்தாகரன் அவனை விசாரித்தது அவ்வளவே அமையும் என்று அவனைச் செல்ல விடுத்தனர். அப்பொழுது ஆபத்தரன் எழுந்து, எனது சாக்ஷி விசாரணையில் அவனை வேறுசில கேள்விகள் கேட்கவேண்டுமாதலின் அவனைச் சிறிதுபொழுது நியாஸ்தலத்தினுள் தங்கியிருக்கக் கட்டளையிடும்வண்ணம் நீதிபதியரைக் கேட்டுக்கொண்டான். அவரும் அங்ஙனமே கட்டளையிட்டனர்.

(இன்னும் வரும்.)

கா. ஸ்ரீ. கோபாலாசாரியர்.

## சித்திரகூடம்.

பர்னசாலைக்கெதிரில் மலையோரம்.

ராமன், லக்ஷ்மணன்.

ரா.—அது வாஸ்தவமா, நான் நம்பமாட்டேன்.

ல.—இதோ இந்த மலை ஏறிப்பார்த்தேன். பிரம்மாண்டமான சேனை, வெள்ளம் புரண்டு வருகிறதுபோல், வருகிறது. கப்பல் போன்ற யானையின் முழக்கமும் குதிரையின் கனைப்பும் ரத ஓட்டத்தின் ஓசையும் நன்றாய்க் கேட்கின்றன. பேரிகையின் சப்தத்தினாலும் படபடவென்று காற்றிற் சலிக்கிற கொடிகளினாலும் அயோத்தியிலிருந்து நம்ம ராஜனுடைய சேனையே வருகிற தென்பதற்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை.

ரா.—நம்ம சேனை இவ்விடம் வருவதற்கு காரணம் என்ன! இதென்ன ஆச்சரியம்!

ல.—காரணமா! சந்தேகம்கூட உண்டோ! மஹாபாபி சண்டாளனாகிய பரதன் நீர் காட்டிலும் ஜீவனோடு வசிக்கக் கூடாதென்று நிச்சயம் பண்ணி உம்மோடு யுத்தம் செய்து உம்மைக் கொன்றுவிட்டு ராஜ்ஜியத்தைத் தனக்கே ஸ்திரமாக ஸ்தாபிக்க உத்தேசித்து இங்கே உம்மை எதிர்க்கச் சேனையோடு வந்தான். (பேரிகை முழங்க) அதோ பேரிகை கேட்கிறதே. இவ்வளவு அயோக்கியனான பரதன் நம்முடன் ஜனிக்க நாம் என்ன பாவம் செய்தமோ!

ரா.—லக்ஷ்மணா! நம்முடைய தம்பி பரதனும் அப்படிச் செய்வானா! நீ அவசரசப்படாதே, நான் ஒன்று சொல்லுகிறேன்—.

ல.—நீர் எப்போதும் அவசரப்படாதே அவசரப்படாதே என்று சொல்லியே முழுமோசம் போகிறீர். காட்டுக்குப் போவென்று கைகேயி துணிந்து சொன்னபோதே எனக்கு ஒரே உத்தரவு கொடுத்திருந்தால் அவள் நாக்கைப் பிடுங்கி அவள் கொழுப்பை அடக்கித் தயரதனுடைய முட்டாள் தனத்தைப் போக்கடித்து உம்மை ஸிம்மாஸனத்தில் ஸ்தாபித்துப் பேரிகை



முழக்கியிருப்பேன். பரதன் எதிர்த்து வந்தானேயானால் அவன் பலத்தை ஒடுக்கி அவனை ஒரே அறையால் அறைந்து கால் கைகளுக்கு விலங்கு போட்டு ‘உன் சிம்மாசனம் ஏற வந்த பிள்ளையைப் பார்’ என்று கைகேயிக்கு காட்டியிருப்பேன். எதுக்கும் இடங்கொடாமல் என்னைத் தம்பியென்று நினையாமலும் என் வார்த்தையைக் கேளாமலும், கைகேயியினுடைய துர்ப்புத்திக்கும் பரதனுடைய பேராசைக்கும் போகிறபடி இடங் கொடுத்துவிட்டுப் பைத்தியக்காரத் தனமாக ராஜ்ஜியத்தை விட்டுக் காட்டுக்கு வந்தீர்.

ரா.—லக்ஷ்மணா! நீ எப்போதும் ஆத்திரக்காரன். புத்திசாலியாகிய நீயும் இப்படிச் சொல்வது நியாயமா? மாதா பிதாக்கள் நமக்கு முதல் தெய்வமன்றோ. அவர்கள் வார்த்தையைத் தவறி நடந்தால் நமக்கு நல்லகதி கிடைக்குமா? பிதாவின் வார்த்தை பரிபாலனம் பண்ணாதவன் புத்திரனாகான் என்று நீ கற்ற சாஸ்திர மெல்லாம் என்பேரிலிருக்கிற விசுவாசத்தினால் மறந்தாயோ?

ல.—வாஸ்தவம் தான். மாதா பிதா சொற்படி நடக்க வேண்டியதென்கிற நீதி நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் தாய் தகப்பன்மார் பிள்ளைகள் பேரில் விசுவாசமாக எப்போதும் நடக்கவேண்டியது கடமை யென்று சாஸ்திரத்தில் முறையிடவில்லையோ? சிங்கம் புலி கரடி வசிக்கும் காட்டிற்கு ஓடிப்போவென்று தாய் தந்தையரும் சொல்லுவது நியாயமா? மேலும், ராஜ்ஜியம் ஜேஷ்ட புத்திரனுடையதென்று மனுநீதி முறையிடுகையிற் பரதன் ராஜ்ஜியம் அடைவது சாஸ்திர விரோதமன்றோ. சாஸ்திர மீறி நடப்பவர்கள் கர்ம சண்டாளர்களாகிறார்கள். தர்ம சாஸ்திரம் மீறிநடக்கும் மாதாபிதாக்களினுடைய வார்த்தையைக் கேட்டால் நமக்குப் பாபம் தப்பாமற் சம்பவிக்கும். அப்படியிருக்க அக்கிரமம் செய்வோருக்குப் பயந்து பரதனுக்கு ராஜ்ஜியத்தை விட்டுவிட்டு விவேகக் குறைவாக ஜானகியையும் அழைத்துக்கொண்டுகாட்டுக்கு ஓடி வந்தோம். ஓடுகிறவர்களைக் கண்டால் துரத்துபவருக்கு அனுகூலமன்றோ. ராணுவத்தைச் சேர்த்துக்கொண்டு சித்திரகூடத்தில் உம்மை ஜயித்துத் தான்கீர்த்திபெற வந்திருக்கிற பரதனைப் பாரும். 14-வருஷம் கழித்து ஒருவேளை திரும்பி அயோத்திக்கு வந்து ராஜ்ஜியத்தைக் கேட்பீரென்று யோசித்து இப்போதே உம்மைக் கொலை செய்ய வந்திருக்கிற மஹா பாபியினுடைய நடத்தையைப் பார்த்தீரா? இனி

யாகிலும் அடியேனுக்கு ஓர் உத்தரவு கொடும். ஜானகியைப் பர்ணசாலையில் நீர் பத்திரமாகப் பாதுகாத்துக்கொண்டு இரும். இனி யோசிக்கச் சாவகாசம் இல்லை. நம்பேரிற் பரதனும் அவனுடைய சேனையும் மேல் விழுவதற்குமுன் நாம் சித்தராக இருக்கவேண்டும். உத்தரவு கிடைத்தமாத்திரத்தில் ஒரு நொடிப்பொழுதில் இந்தச் சேனையையெல்லாம் எதிர்த்துச் சின்னபின்னமாக்கிப் பரதனை இவ்விடம் வராமலே புறங்காட்டி ஓடச் செய்கிறேன். அல்லது அவனைப்பிடித்துக் கொன்றுவிட்டு என் பராக்கிரமத்தைக் காட்டுகிறேன். பரதன் யமலோகம் போகவும் நீர் அயோத்தியில் ஸிம்மாஸனாதிபதி ஆகவும் கைகேயி மண்ணில் விழுந்து அழவும் தாயார் கௌசலை சந்தோஷிக்கவும் தர்மசாஸ்திரம் நிலைநிற்கவும் நீர் இதோ காணப் போகிறீர். இன்றையதின சூரியாஸ்தமனத்துக்குட் பரதனைச் செயித்து உம்மைச் சக்கிரவர்த்தியாக்கா விட்டால் நான் லக்ஷ்மணன் அல்லேன். நான் கையிலேந்துவது வில் அன்று. நான் உம்முடைய ——

ரா.—நில்! நில்! லக்ஷ்மணா. சபதம் கூறவேண்டாம். நீ இந்த சேனைமாத்திரம் அன்று. 56-தேசத்து ராஜுவங்கள் சேர்ந்துவந்தாலும் அவைகளையெல்லாம் நொடிப் பொழுதிற் பறக்கடிக்கும்படியான பராக்கிரமம் உனக்கு உண்டென்பது யாவருக்கும் தெரியுமே. ஆனாற் கொஞ்சம் யோசிக்கவேண்டும் லக்ஷ்மணா! உன்னைப் போலவே பரதனும் என்னுடன் கூடப் பிறந்தவனல்லனோ. உன்னைப்போலவே அவனும் இதுவரையில் விசுவாசமாக இருந்தவன் இப்போது என்னுடன் யுத்தமுங்கூடச் செய்ய வருவனா? நம்மைப்போலவே பரதனும் சூரியவம்சத்திற் பிறந்த அரசனன்றோ. பரதனே தமையனுடன் போர்செய்ய வந்தால் லோகத்தில் யார்தாம் தர்மபரிபாலனம் பண்ணப் போகிறார்கள்? ஸ்திரீயாகையாற் கைகேயி மாத்திரம் அயலார் கலக வார்த்தையினால் ஏதாவது நமக்கு விரோதமாக எண்ணம் கொண்டிருந்தாலும் இருக்கலாம். நம்முடைய தம்பி பரதன் ஸிம்மாஸனத்தை இச்சித்திருக்கமாட்டான். என்னைத் திருப்பி அழைத்துக் கொண்டு போக வேண்டுமென்றும் எனக்கே ஸிம்மாசனம் கொடுக்க வேண்டுமென்றும் எண்கிற எண்ணமல்லாமல் என்னுடன் போர் செய்யவும் எண்ணுவனா? அதோ லக்ஷ்மணா! இருவர் வருகிறார்களே. அவர்கள் யார் பார். பரதனா!



ல.—ஆம், ஆம் பரதனும் சத்துருக்கனும் தனியாக நடந்து வருகிறார்கள்.

ரா.—பரதனுடைய போர்க் கோலத்தை நன்றாய்ப் பாரப்பா. அவன் தலை சடையும் மர உரியும் தூசுபடிந்த மேனியும் தேஜசு நீங்கிய முகமும் கவனித்துப் பார். கண்களில் நீர் பெருகக் கைகள் இரண்டும் சிரசின்பேரில் தூக்கி ஸேவித்துக் கொண்டே. முள், கல், அடர்ந்த காட்டில் வெறுங்காலால் நடந்துவரும் பரதனை உற்றுப்பார் லக்ஷ்மணா! பரதனும் யுத்தத்துக்கு வந்ததாக நீ சந்தேகப்பட்டது உனக்கு என்பேரில் உள்ள பிரீதியினால் அன்றோ லக்ஷ்மணா! எனக்குப் பரதனைப் பார்க்கவே மனசு கலங்குகிறது தேகம் சிலிர்க்கிறது. அவன் வியசனத்தைக் கொஞ்சம் ஆற்றி அவனை அழைத்துக் கொண்டு பர்ணசாலைக்கு வா. நான் உள்ளேபோகிறேன். சீக்கிரம் வா லக்ஷ்மணா. உன்னைப்போலவே பரதனும் என்னுடன் பிறந்ததை இனி மறவாதே.

---

## இலட்சுமண சிங்கின் வீரச்செய்கை.

(217-ம் பக்கத் தொடர்ச்சி.)

### அத்தியாயம்—3.

அன்றிராத்திரி நான் ரொட்டி கிடங்குத் தெருவிலேயே நித்திரை செய்தேன். விடியற்காலமெழுந்து நாங்கள் 'காபி' சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் பார்வதிபுர ராஜனும் உள்ளே வந்தான். இலட்சுமணசிங்கின் இரண்டு தோள்களையும் பிடித்துக்கொண்டு அவன் முகத்தை ஆவலோடு பார்த்துக் கொண்டே "நிச்சயமாய் அது உன்கிட்ட அகப்பட்டதா!" என்று கதறினான்.

"இன்னம் இல்லை."

"ஆனால் உனக்குத் தைரியமிருக்கிறதா?"

"எனக்குத் தைரியம் உண்டு."

"அப்படியானால் எனக்கு அங்குப்போகரொம்ப ஆத்திரமாயிருக்கிறது."

"நமக்கு ஒரு வண்டி வேணும்."

"ஏன், என் 'ப்ரூவாம்' வெளியில்ருக்கிறதே."

"அப்படியானால் ரொம்ப சுலபமாய்ப் போச்சு."

நாங்கள் கீழிறங்கி உள்ளே சுந்தரவனத்துக்குப் பிரயாணமானோம்.

"அலமேலுவுக்குக் கலியாணமாயிற்று" என்றான் சிங்கு.

"கலியாணமாச்சா! எப்போ."

"நேற்று."

"ஆனால் யாரை பண்ணிண்டா?"

"நாராயணன் என்கிற ஒரு வக்கீலை."

"ஆனால் அவனண்டை அவளுக்கு ஆசை யிருக்காதே?"

"அவனிடத்தில் அவள் ஆசையா யிருப்பதாகவே நம்புகிறேன்."

"அதெப்படி நம்புகிறே?"

"ஏனென்றால் மகாராஜாவுக்கு இனித் தொந்தரவு இராது. அவளுக்குத் தன் புருஷன்பேரில் பிரியமிருந்தோ உங்கள்பேரில் பிரியமிராது. உங்கள் பேரிலாசையில்லா விட்டாலோ உங்கள் விவாகத்துக்கு அவள் தடை செய்ய யாதொரு காரணமுங் காணேன்."

"வாஸ்தவந்தான். ஆனாலும் சரி: அவள் ராஜவம்சத்தில் பிறந்திரா போய் விட்டாளே! இராணியாயிருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்!" என்றுசொல்லி வண்டியிலேயே யோசித்துப் பிறகும் மௌனமாயிருந்தான்.

சுந்தரவனத்தின் கதவு திறந்திருந்தது, ஒரு கிழவி படிக்கட்டின்மீது உட்கார்ந்திருந்தாள். நாங்கள் 'ப்ருவாமி'லிருந்து இறங்கினதும் எங்களை ஏற இறங்கப்பார்த்து "இலட்சுமணசிங்கோ" என்றாள். என் நண்பனும் திடுக் கிட்டு அவளை உற்றுநோக்கி "நான் இலட்சுமண சிங்குதான்" என்று மறு மொழி கூறினான்.

"அப்படியா! எங்கள் எஜமானி நீவருவாயென்று சொன்னாள். இன்றைக் குக் காலை 5½-மணி வண்டிக்குச் சீமைக்குப் பிரயாணமாய்த் தன் புருஷனு டன்கூடப் போய்விட்டாள்."

சிங்கும் நடைதடுமாறினவனாய் முகம் வெளுத்து "இன்னா! சென்னை யைவிட்டுப் பூட்டான்னு சொல்றே" என்று கூறிப் பிரமித்து நின்றான்.

"ஆமாம் இனி திரும்பி வரமாட்டா."

"காகிதங்களெல்லாம்? எல்லாம்போச்சு" என்று அரசனும் குரல்கம்ப கூறினான்.

"பார்க்கலாம்." வேலைக்காரியை அப்புறம் தள்ளி நாங்கள் உள்ளேசெ ன்றோம். அவசரத்துடன் வீட்டை விட்டதற்கு அறிகுறியாக அலமாரியிலிரு ந்த சாமான்களெல்லாம் நாலாபக்கங்களிலும் சிதறிக்கிடந்தன. சிங்கும் அவை களைத் தள்ளிப்பார்க்க அங்கு ஒரு படமும் ஒரு கடிதமும் இருந்தன. படமே அலமேலுவின் புகைப்படம்; கடிதத்தில் "ம-ா-ா-ஸ்ரீ, இலட்சுமண சிங் அவர்களுக்கு" என்று விலாசம் எழுதியிருந்தது. என் நண்பனும் உடனே அதைப் பிரிக்க, நாங்கள் மூவரும் படித்தோம். அது முதனாள் இராத்திரி எழுதினதாய்ப் பின்வருமாறு அதில் எழுதியிருந்தது:—



எனது பிரியமான இலட்சுமணசிங்கே, நீ ரொம்ப நன்றாய்ச் செய்தாய். என்னை முற்றிலும் ஏமாத்திவிட்டாய். "டீ" என்ற கூச்சல் கேட்டவரையில் எனக்குச் சிறிதும் சந்தேகம் உண்டாகவில்லை. ஆனால் அப்போ என்னை நான் காட்டிக்கொடுத்ததை அறிந்ததும் யோசிக்கலானேன். பல மாதங்களுக்கு முன்னமேயே உன்னைப்பற்றி எனக்கு அநேகர் சொல்லியிருக்கிறார்கள். இந்த விஷயத்தைப்பற்றி அரசன் யாராவது ஒருவனை யேற்பாடுசெய்வதானால் அது உன்னையேயாகும், உனது விலாசமும் எனக்குக்கொடுத்திருந்தார்கள். அப்படி யெல்லாமிருந்தும் உனக்கு வேண்டியதை நானே உனக்கு அறிவிக்கும்படி செய்தாய். எனக்குச் சந்தேகமுண்டான பிறகுகூட பழைய அன்புள்ளசன் னியாசிக்குத்தீங்கு நினைக்கமனம் வரவில்லை. ஆனால் நாடகத்தில் நான் நன் றாய்ப் பழகியிருப்பது உனக்கும் தெரியுமே. புருஷவேஷம் இன்றைக்குப் புதிதல்லவே. அதனாலுண்டாகும் சுயேச்சையை எத்தனையோதடவை நான் அனுபவித்திருக்கிறேன். உன்னைப் பார்த்துக்கொண்டே யிருக்கும்படி வண் டிக்கார ராமசாமியை அனுப்பிவிட்டு மெத்தைமீது சென்று எனது ஆண் உடைகளைத் தரித்து நீ போனதுமே கீழே வந்துவிட்டேன்.

"அப்படியே உன்வீட்டு வாசற்படிவரையில் உன்கூடவே சென்று பேர் போன இலட்சுமணசிங்கே நம்மைத் தேடிவந்தது என்பதை உண்மையாய் அறிந்து கொண்டேன். அப்புறம் முட்டாள்தனமாக உன்னைப் பெயரிட்டுக் கூப்பிட்டு உனக்கு வந்தனமும் சொல்லிவிட்டு என் புருஷனைக் காணக் காட் டுக் கோவிலுக்குச் சென்றேன்."

"இப்படிப்பட்ட பலத்த சத்துரு நம்மைத் தாக்கும்போது ஓடிப்போ போவதே யுக்தமென்று நாங்கள் இருவரும் தீர்மானித்தோம். ஆகையால் நாளை நீவரும்போது ஒருவரையும் காணமாட்டாய். படத்துக்காக உனது கட்சிக்காரர் பயப்படத் தேவையில்லை. அவரைவிட மேலான ஒருவர் என்னை நேசிக்கிறார். நானும் அவரை நேசிக்கிறேன்.

என்னை அரசன் எவ்வளவு குரூரமாய் நடத்தியிருப்பினும் இனி என்னால் அவனுக்கு யாதொரு தொந்தரவும் இராது. எனக்கு ஆதரவாயிருக்கும் படிக்கும், அரசன் எனக்கு விரோதமான காரியங்கள் ஏதாயினும் செய்யின் அவ்வாறு நடக்காதபடி அதற்குப் பிரதியாக ஒரு ஆயுதம் நானேவைத்திருக்க வேண்டியும் அந்தப் படத்தை நானே வைத்துக்கொண்டிருக்கிறேன். நான் இங்குவேறொரு படம் வைத்துவிட்டுப் போகிறேன் அதை அடைய ராஜாவுக் குப் பிரியமிருக்கலாம்.

இப்படிக்கு,

உனது உண்மைத் தோழி,

"நாராயண பத்தினி—அலமேலு."

“பொம்மனாட்டின்னாலும் டொம்மட்டி இவளன்றோ பொம்மனாட்டி. அவ ரொம்ப சுறுசுறுப்பும் தீரமுமுள்ளவளென்று நான் முன்னேயே சொல்லலையா? அவ ராணியாயிருந்தா எவ்வளவு நன்றாயிருந்திருக்கும். ஐயா! என்னைப்போல ராஜவம்சத்திலே அவ பிறக்காது பூட்டாளே” என்று பர்வதகேசனும் கதறினான்.

“நான் பார்த்தவரையிலும் உனது குண நடவடிக்கைகளுக்கு அவள் முற்றும் வேறானவள். இதைவிடச் சரியான முடிவுக்குத் தாங்கள் காரியத்தைக்கொண்டு வரவில்லையே என்று சிறிது துக்கிக்கிறேன்” என்று சிங்கும் பராமுகமாய்க் கூறினான்.

“ஐயா, அப்படியன்று இதைவிட வேறு முடிவு வேண்டுவதில்லை. அவள் வார்த்தையை நம்பலாம். அந்தப்படமும் இப்போ நெருப்பிலிருந்தா லெப்படியோ அப்படித்தான்.”

“மஹாராஜா அவர்கள் அவ்வாறு சொல்ல எனக்குச் சந்தோஷமாயிருக்கிறது.”

“என்றால் தங்களுக்கு ரொம்ப சிரமம். இதற்கு வெகுமானம் என்ன நான் செய்யணுமோ அதை தாங்களே சொல்லவேணும். இந்த மோதிரம்—” என்று செல்லவிலையுயர்ந்த மாகசமிமரகத மோதிரத்தைத் தன் கைவிரலினின்றும் கழற்றிச் சிங்கின் கையில் போட நீட்டினான்.

“மகாராஜாவவர்கள் வேறொரு வெகுமானம் செய்தால் இதுதவி— அது எனக்கு அதிசப் பிரியமாயிருக்கும்” என்று சிங்கும் சொன்னான்.

“அதை இன்னதென்று சொல்லணும்.”

“இந்தப்படம்.”

அரசனும் ஆச்சரியப்பட்டு அவனை விழித்துப் பார்த்தான்.

“அலமேலுவின் படமா! நிச்சயமா, வேணுமானால் எடுத்துக்கோ.”

“மகாராஜா அவர்களுக்கு வந்தனம். அப்படியானால் இனிச் செய்ய வேண்டுவதொன்றுமில்லை. தங்களுக்கு வந்தனம் செலுத்தி செலவுபெற்றுக் கொள்ள வேண்டியதுதான்” என்று தலைவணங்கி அரசன் கைலாகு கொடுக்கும்படி நீட்டின கையையும திரும்பிப்பாராமல் என்னுடன்கூடத் தன்னறைக்குச் சென்றான்.

இப்படியாகப் பிரமாதமான அபவாதம் பர்வதநாட்டுக்கு உண்டாவதாயிருந்தது. இலட்சுமணசிங்கின் அபாரமான உபாயங்களெல்லாம் ஒருபெண்ணின் யுக்தியால் இவ்வாறு பலியாமற் போயிற்று. பெண்களின் சாமர்த்தியத்தைப் பற்றிச்சிங்கு ஏளனம் செய்வது வழக்கம். ஆனால் அதுமுதல் அவன் ஒருநாளும்செய்வதில்லை. அவன் அலமேலுவைப்பற்றிப் பேசும போதும் அவள் படத்தைக் குறிக்கும் போதும் அவள் பெயர் கூறாது “ஸ்திரீ” என்றே அவன் கூறுவது வழக்கம்.

முற்றிற்று.

# ஜனப்பிரியன்.

மாதம் ஒருமுறை பிரசுரம் செய்யப்படும்.

புஸ்தகம். 1] சென்னை 1901ஙு மார்ச்சுமீ [இலக்கம். 9

## * இராமாயண ஸங்கிரகம்.

“அஞ்சிலே யொன்று பெற்றா னஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்றா றாக வாரியர்க் காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற வணங்கைக் கண்டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தா னவனம்மை யளித்துக் காப்பான்.”

### II-ஆம் அத்தியாயம்.

(அயோத்தியா காண்டம்.)

(231-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஸ்ரீராமர் சித்திரகூடப் பர்வதம் சேர்ந்ததும் தன் தம்பியான இலக்குவனால் அமைக்கப்பட்ட பர்ணசாலையி லிருந்துகொண்டு தன் மனைவிக்கு அம்மலையிலுள்ள பற்பல காட்சிப்பொருள்களைக் காண்பித்து மனதிற்கு சந்துஷ்டி யுண்டு பண்ணிக்கொண்டு வந்தார். இவ்வாறாக இங்கு மூவருங் காலத்தைக் கழித்து வந்தனர்.

அயோத்திக்குத் திரும்பி வந்த சுமந்திரர், இராமர் திரும்பி வரவில்லையென்று சொல்லக்கேட்டு தசரதர் உயிர் துறந்தார். ஈமக்கடனைக் கழிப்பதற்குரிய பிள்ளைக ளொருவரேனும் ஊரி

* இதிலாங்காங்கு எடுத்தாளப்பட்ட செய்யுள்களின் பொருளறிந் தானந் தங்கொள்ளக் கூடாத சிறுவர் சிறுமியர் முதலாயினோர், செய்யுளைக் கவனியாது வசனத்தையே வாசித்துக் கதையினை யறியலாகும்.

வில்லை. ஆகையினால் பரதனும் சத்துருக்கனும் பெருமளவும் அரசனது தேகத்தைத் தைலத்தில் அடக்கிவிட்டு வைத்திருந்தார்கள். வசிட்டரும் இளவரசர்களுக்குத் தூதுவரையனுப்பினார். அவர்களும் அவ்வூர் சென்று பரதனிருந்த அரண்மனையை யடைந்து வாயிற் காப்போரை விளித்து 'எங்கள் வரவை அரசர்க்குத் தெரிவியுங்க' ளென்னலும் அவர்கள் இதைத் தெரிவித்த மாத்திரத்தில் பரத சத்துருக்கினர் அதிக ஆனந்தங்கொண்டார். பரதன் அந்தத் தூதுவரைத் தன்முன்பு வரவழைத்து 'எம் தாதையார் க்ஷேமமாக விருக்கின்றனரா' வென்று கேட்டான்.

* "தூதர் வந்தன ருந்தைசொல்லே லெனக்
காதன் முந்திக் களிக்கின்ற சிந்தையான்
போது மென்னெ னப்புக்கவர் கைதொழத்
தீதி லன்கொ றிருமுடியோ னென்றான்."

அதற்கவர்கள் தசரதன் வலியவன்தா (க்ஷேமமாய்த்தானிருக்கின்றா) னென்றார்கள். இலக்ஷ்மணர் ஸ்ரீராமர் சானகியிவ்விருவர்களுடைய க்ஷேமத்தைக் குறித்து மிக்க சிரத்தையுடன் வினவ, உலைவில் (அளவிறந்த) செல்வத்தரா யிருக்கிறார்க ளென்னக் கேட்டவளவில் ஆனந்தஞ் ஜனித்து அஞ்சலி செய்து நின்றான் பரதன்.

† "வலிய னென்றவர் கூற மகிழ்ந்தனன்
இலைகொள் பூணிளங் கோனெம் பிரானொடும்
உலைவில் செல்வத் தனேயென வுண்டெனத்
தலையி னேந்தினன் றாழ்தடக் கைகளே.

இன்னுமுள்ள பந்துக்களுடைய க்ஷேமங்களை விசாரித்த பின்னர் தூதுவர் பரதாழ்வானிடம் தாங்கள் கொண்டுவந்த திருமுகத்தைக்கொடுத்தார்.

---

* தீதிலன் கொல்—க்ஷேமமாயிருக்கின்றனரா?; தீது—கெடுதி, இல்லன் கொல்—வீட்டிலடைந்தவனோ; தீது—தீங்கு, இலன்கொல்—தன் மனைவியையடைந்தவனோ என்பது உள்ளுறை பொருள்.

† வலியன்—பலவான்; வலியன்—நொந்தவன்: உலைவில் செல்வத்தனே—அசைவற்ற செல்வப் பிள்ளையா யிருக்கின்றானே; சஞ்சலபாக்கியமுள்ளவன் என்பது மறை பொருள்.



† "மற்றுஞ் சுற்றத்து ளார்க்கும் வரன்முறை
உற்ற தன்மை வினவி யுவந்தபின்
இற்ற தாகு மெழுதரு மேனியாய்
கொற்ற வன்றன் றிருமுகங் கொள்கென்றார்."

அந்தத் திருமுகத்தை வாங்கிக் கண்ணி லொற்றிக் கொண்டு, வந்த தூதுவர்க்கு வேண்டியவளவு பொருள்கொடுத் தனுப்புவித்தார். வந்ததிருமுகத்தை வாசித்துப் பார்த்ததும் தானும் தம்பியும் தந்நகர்க்குடனே வரவேண்டு மென்றிருத்தல் கண்டு, அவ்வளவு அவசரத்திற்குக் காரணம் தெரியாத போதிலும் பிதாவையும் பிராதாக்களையும் பார்த்துப் பன்னாளாயினதால் அவர்களைப் பார்க்க வேண்டுமென்னும் அவாவெழ அயோத்திக்கேக வெண்ணங்கொண்டு தன் சதுரங்கசேனையும் தன்னுடன் அப்போதே வருவதற்குச்சித்தம் செய்யும்படி உத்திரவு செய்தனன். நால்வகைத் தானையும் நான்கு நிமிஷத்திற் தயாராயின. பரதன் தன் மாதுலனை அனுகி உத்திரவு பெற்றுத் தானும் தம்பியும் நாள் நக்ஷத்திரம் இரவு பகலென்றும் பாராமல் உடனே அயோத்திக்குப்புறப்பட்டுவிட்டனர். தங்களைச் சுற்றிலும் வந்த கஜங்கள் கர்ச்சித்தன, இரதங்கள்சப்தத்துடன் சென்றன. குதிரை வீரர்களும் வாள் வீரர்களும் நாற்புறமும் சூழ்ந்து சென்றனர். சங்கம் ஒலித்தன. பேரி வாத்தியங்கள் கடல்போன்று முழங்கின. இவ்வாறு பற்பல முழக்கங்களோடும் வழியிலுள்ள நதியும் காடும் மலையுந் தாண்டிப் போய் ஏழுநாள் சென்றதும் கோசலைநாட் டெல்லையைக் கண்டார்கள். நாடு நாடாயிருக்கவில்லை. அது இலக்குமி நீங்கிய இல்லம்போற் றோன்றியது.

"ஏர் துறந்த வயலின மைந்தர் தோள்
தார் துறந்தன தண்டலை நெல்லினும்
நீர் துறந்தன தாமரைத் தெனப்
பார் துறந்தனள் பங்கயச் செல்வியே."

---

† பின்னிரண்டடியும், "நீ யூகிப்பாயாக, நீ எழுந்துபோய் விசாரிப்பாயாகில் அரசனுடைய ஆனனம் இற்றதாகும்" என்னும் பொருள்படக் கிடக்கின்றது.

“அலர்ந்த பைங் கூழகன் குளக்கீழனை
மலர்ந்த வாயிற் புனல்வழங் காமையால்
உலர்ந்த வன்கண் ணுலோபர் கடைத்தலை
புலர்ந்து நிற்கும் பரிசிலர் போலவே.”

அந்நாடு முழுதும் செயலற்றிருந்ததைக் கண்டு கலக்கங் கொண்டு நகர் சேர்ந்தவளவில் அந்நகரும் அப்படியே யிருந்தது கண்டு மனக்கிலேச மடைந்து சத்துருக்கனை நோக்கி, “தம்பி இத் தோற்றத்திற்குக் காரணம் யாதெனக் கருதுகிறாய்?” என்னலும் அவன் தகுந்த பதில் சொல்வதற்கு முடியாமற் போனபடியினால், இருவரும் அலமந்து அரண்மனை சேர்ந்தார்கள். பரதன் தனது தாயாகிய கைகேயியினது அந்தப்புரஞ் சென்று அன்னையைக் கண்டு அஞ்சலி செய்து தனது தந்தையினுடைய க்ஷேமத்தைக் குறித்துக் கேட்கையில் அவள் தனது புத்திரனைக்கட்டி அணைத்து முத்தந் தந்து இவனுடைய க்ஷேமத்தை விசாரித்து, “குழந்தாய், அஞ்சல் வேண்டாம். நின்றந்தை காலஞ் சென்று விட்டனர்; நினக்கும் தேசாதிபத்தியந் தந்து போயினர்” என்று தன்முகத்தில் சற்றேனும் துக்கக் குறி காட்டாது சொல்லி முடித்தாள்.

அரசனிறந்தானென்று கேட்டவளவில் திடீரென்று தன்னை மறந்து வேரற்ற மரம்போல் கீழே வீழ்ந்தான் பரதன். சற்றுத் தெளிந்து வாய் குழறவும் கண்களினின்றுஞ் சலம் பெருகவும் அன்னையைப் பார்த்து “அக்கினியைக் காதில்விட்டது போலொத்த சொல்லை உன்னைத்தவிர மற்றெவரும் சொல்லத் துணிவரோ” என்று சொல்லி எழுந்தான், பின்னும் விழுந்தான், ஏக்கமுற்றான், செயல் மறந்தான், கதறினான்.

“எழுந்தன னேங்கின னிரங்கிப் பின்னரும்
விழுந்தனன் விம்மினன் வெய்துயிர்த் தனன்
அழிந்தன னரற்றின னரற்றி யின்னன
மொழிந்தனன் பின்னரு முறுகிற்செவ்வியான்.”

“மேலும் சூரியன் முதலான முன்னோர்கள் கீர்த்தியெல்லாப் பிரகாசிக்கும்படி புதுமையாகப் பரசுராமனையுங் கர்வபங்கம் செய்து சிவதனுவை யிறுத்த சிரேட்டனாகிய ராமனை விட்டு எப்படிப் பிரிந்துபோயினாய்? தலத்தைக்கடைப்பிடியாய்ப் பிடிக்கவுமில்லை,



பெற்ற பிள்ளைக்கு உலகமுழுமையுங் கொடுத்து வரிசைக்கிரமப்படி பட்டாபிஷேக மகோற்சவத்தை நடத்திக் கண்குளிரப் பார்ப்பதற்கில்லாமற் போயினையோ,” என்று பலவாறு சொல்லித் துக்கித்து ஊற்றுக்கண்ணிற் சலம் வருவதுபோற் கண்ணினின்றுஞ் சலம் கரைபுரள அழுது அவன் தன்னைத்தானே தேறுதல் செய்துகொண்டு “எனக்குத் தந்தையும்தாயும் தெய்வமுமாகிய எண்ணிறந்தகுணம் வாய்ந்த இராமனைக்கண்டு அவனடிபணிந்தாலல்லது என் மனத்துன்பம் சிறிதும் நீங்காதென்றெழுந்தான். அவ்வார்த்தையைக் கேட்டுத் திடுக்கிட்டு, “அப்பா குழந்தாய் உன் தமயன் தன் மனைவியுடனும் இலக்குவனுடனும் காட்டிற்குப் போயினான்” என்றாள். அச்சொல் காதிற்புக அக்னி அருந்தினவன்போல் பதைத்தான், திகைத்தான். பிறகு “தமையன் காட்டிற் கேகினது யாதேனும் அவன் கெடுதி செய்ததினாலோ, தெய்வவசத்தாலோ, விதியினாலோ, வேறெதினாலோ! அப்படி இராமனேகெட்ட காரியத்தைச் செய்திருப்பனாகில் அது பூமியிலுள்ளவர்களுக்கெல்லாம் தாய் செய்தது போலல்லவா? கெட்ட எண்ணத்தோடு ஒன்றும் செய்திருக்கமாட்டானே. அப்படியவன் போனது தகப்பனிறந்த பின்போ முன்போ சொல்லுங்க” ளென்றான். அதற்கவள் பெரியவர்களை நிந்தித்த காரணத்தாலுமல்ல, தெய்வத்தாலு மல்ல, அரசனிருக்கும் போதே அவன் வனத்திற் கேகினா” னென்றாள். ஈன்றவனிருக்க அவன் காட்டிற்கேகுதற்குக் காரணமென்ன! அவன் சென்றபிறகு அரசன் இறந்ததற்கு யாது காரணம் என்று பரதன் கேட்க அதற்கவள் “அரசன் கொடுத்த வரத்தைப்பெற்று பிள்ளையைக் காட்டிற்குச் செலுத்தினேன், அப்படி அவனைப் போம்படி செய்து பூமி பரிபாலனம் உன்வச மாக்கினேன். அதற்கரசன் பொறாமை கொண்டு தன்னுயிர் நீத்தனன்”, என்று சொல்வதற்கு முன்னமே இவன் கரங்கள் காதைப் பொத்தின, புருவங் குனிந்து துடித்துக் கூத்தாடி நின்றன, கண்ணினின்றும் இரத்தம் பெருகின, நாசியினின்றும் அக்கினிச் சுவாலை வீசின, கன்னங்கள் துடித்தன, மயிர்க்கால் தொறும் புகை யெழுந்தன. இடியும் பின்னிட கைகள் மண்பிளந்து போம்படி யடித்தன. இவனுடைய கோபாக்கினி எல்லோரையும் தகிக்க ஆரம்பித்தது. தேவர்களும் பயந்தார்

கள், அசுரர்களு மிறந்தார்கள். கொதித்தெழும் கோபத்தினாலே தாயெனப் பார்த்திலனாயினும் தன் தமையனுக்குப் பயந்து "உன் கலகத்தினால் என் தந்தையிறந்தான், தமயன் அடவியடைந்தானென்று உன்வாயைக்கிழிக்காமல் இந்தச் சொல்லை நீ சொல்லக் கேட்டும் உன் முன்னிற்பதாகில் நானிவ்வுலகை ஆசையினால் இராஜ்ஜிய பரிபாலனம் செய்தவனாக ஆகின்றே னல்லவோ! நீ யின்னமும் உயிருடனிருந்தாய், நானும் இருந்தேன், உன்னை ஒழிக்க வில்லை, சாஸ்திர மறிந்த சாதுக்கள் கோபிப்பார்க ளென்று பயந்தேனே யல்லாமல் தாய் என்னும் பெயர் என்னைத் தடை செய்ய வசமோ? அடீபாபி! கொடுமையுள்ள தாயினுடைய கடூரமான கருத்துக்கிசைந்து வம்சபரம்பரையாய் வாய்ப்பட்ட குலதருமத்தைஅழித்து ஒருபழி உண்டாக்கினேன் பரதன் முன் காலத்தில் என்பதான ஓர் அபவாதச் சொல் உண்டாகுவதை விட கீர்த்தி வேறு முண்டோ? நீவிர் வியாதிரூபமல்லவே. உம்முடைய தலைவனுயிரை அருந்தினீர், பிசாசமே நீரின்னும் உயிருட னிருக்கின்றீர். உன் சுகத்தைக் கோரியே அரசனை இறக்கச் செய்தாய், பாவியனான இராமனும் என் தாயான சீதையும் வனத்திற்குச் சென்றதைப் பார்த்து மனமழியவில்லையா! மாந்தர்கள் என்செயல் முழுதும் தெரியாதவர்களாதலின் என்னை நிந்திப்பார்கள், வீணான அபவாதத்தை யடைந்தாய், 'திண்ணாத விஷம் ஒருவனைக்கொல்லாது' என்றொருவாக்கிய முளதென் றெண்ணியிருக்கின்றேன், இல்லாவிடில் என்னுயிரோடு இதுவரையில் யானிரேன். அடீ! துரோகி! உலகுக்குப் பிள்ளையாய் அமைந்து நரகமாகிய உன்னுதரத்திருந்து பிறந்தபாபம் நீங்கி என் துக்கமும் நீங்க மூவுலகினரும் வியக்க நானே யொருபெருந்தவமியற்றுகின்றேன். நீ நடத்திய அனர்த்தங் களொழிய நீயுன்னுயிரை உடனே விட்டுவிடுவாயாகில் சுத்தமாய்ப்போய்விடுவாய். இதுவேயன்றி கடைத்தேறும் வழிஉனக்குவேறொன்றுமில்லை!" என்று இனியிப்பாவியினெதிரினும் நிற்றல் தகாதென்று சொல்லி தன் துயரத்தை நீக்கும் பொருட்டு தாயகோசலையினடிதொழுவேன், என்று கோசலையினந்தப்புரஞ் சென்றான்.

"இன்னண மினையன வியம்பி யானுமிப்
பன்னருங் கொடுமனப் பாவி பாடிரேன்
துன்னருந் துயர்கெடத் தூய கோசலை
பொன்னடி தொழுவெனென் றெழுந்து போயினான்."



அங்குச் சென்று வேரறுந்தமரம்போல் அவள் பாதத்து விழ்ந்து பிரலாபித்தான்.

"எந்தை யெவ்வுலகுளா னெம்முன் யாண்டையான்
வந்தது தமியெனிம் மறுக்கங் காணவோ
சிந்தையி னுறுதுயர் தீர்த்திரா லெனும்
அந்தரத் தமரரு மழுது சோரவே."

பலவாறாய்த் துக்கித்தபரதனுடைய முகவாட்டத்தைப் பார்த்தனள் வம்ச தர்மத்தையும் பொறையையும் நிறையையுந்தாங்கும் கோசலை. தமயனை நீக்கித் தான் பூமியாள எண்ணின னலன், மனம் பரிசுத்த முள்ளவ னென்றெண்ணி பரதனது துயரைநோக்க தான் முன்னினும் அதிகதுயர முள்ளவளாய் அவன் குணத்தை முழுதும் அறியவேண்டி, 'அப்பா', கைகேயி செய்த வஞ்சனை உனக்குத் தெரியாத விஷயமோ? என்றாள்.

"மையறு மனத்தொரு மாசு ளானலன்
செய்யனே யென்பது தேருஞ் சிந்தையாள்
கைகயர் கோமக ளிழைத்த கைதவம்
ஐய நீயறிந்திலை போலுமா லென்றாள்."

காலைப் பிடித்த விதமாய் பிரலாபித்திருக்கும் மைந்தன் அந்தமாதரி இவ்வாறு சொல்லக் கேட்டவுடன் கோபங்கொண்ட சிங்கம்போ லுள்ளம் பொருமி, துக்கசாகரத்தில் மூழ்கி அவளுடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்து அவளுடைய துயர் சற்றொழியும் பொருட்டுப் பலவிதமாய்ச் சத்தியம்செய்தான்: தருமத்தைக்கெடுப்பவன், அருளில்லாதவன், கொலையே தொழிலாகக் கொண்டுதிரிபவன், தாய்பசியுடன் வருந்த தான் உண்டு சுகித்திருப்பவன், சரணமடைந்தவனைக் காட்டிக் கொடுத்தவன். பொய்ச் சாக்ஷி சொன்னவன், சண்டையில் பின்னிடைந்தவன், காப்பாற்றும் பொருட்டு தன்னிடம் வைத்த பொருளைத் திரும்பக் கொடாது மோசஞ்செய்தவன், வீட்டிற்கு நெருப்பிட்டவன், பொய்வழக்கிட்டவன், தெய்வங்களைத் தூஷித்தவன், செய்ந்நன்றி கெட்டவன், புறத்தியார் பசித்திருக்கப் போஜனமருந்தியவன், அயலான் மனைவியைக் கற்பழிக்க

வெண்ணினவன், பிறரைத் தூஷித்தலையே மேற்கொண்டொழுகுபவன், பெண்கள் மீது அபவாதம் சொன்னவன், இன்னும் பற்பலவிதமான கெட்ட காரியம் செய்பவர் போம் நரகத்தினும் இழியதோர் நரகம் புகுவேன் என்தாயாருடைய நடக்கைக்கு நானுடந்தையாயிருந்தால்" என்று சொல்லிய பெருமையிற் சிறந்த பரனை, இராமன் திரும்பி வந்தால் எவ்வளவு சந்தோஷம் உண்டாகுமோ அவ்வளவுசந்தோஷ முற்று அவ்வளவு ஆசை மீதூரக் கட்டிக்கொண்டழுதனள். யோக்கியனான அரசன் செய்கையும் தெரிவித்து பொருமிப்பொருமியழுது துக்கித்தாள்.

"பழமையான உன் வம்சத்தில் முற்பட்டவர்களில் யார்தான் உன்னை யொப்பவர்கள். அரசர்க்கரசே" என்று ஆசீர்வதித்து இவன் குணத்தை நினைத்து நினைத்து ஏங்கியழும் தன் தாயின் காலில் வீழ்ந்தான். தம்பி சத்துருக்கனும் அவளது தாளில் வீழ்ந்தழுதான். அத்தருணத்தில் முனிபுங்கவரும் வந்து சேர்ந்தார். வசிட்டரைக் கண்டவுடன் பரதனுக்கு துக்கம் இன்னு மதிகரித்தது. அவரும் இவனைக் கட்டிக்கொண்டழுது, களங்கமற்ற குழந்தாய்! தயாபரனான உன்பிதா இறந்து நாள் பதினாலாயிற்று. புத்திரர்கள் செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்வா யென்றார்.

"மறவின் மைந்தனே வள்ள லுந்தையார்
இறுதி யெய்தினு னேழி ரண்டினை
சிறுவர் செய்கடன் செய்து தீர்த்தியென்
றுறுவன் மேயினு னுரையின் மேயினன்."

தாயாகிய கோசலையு முத்திரவு கொடுத்தனள். அவனைத் தொழுது சடாமகுடந் தாங்கிய பரிசுத்தராகிய வசிட்டரோடும் போய் யாவரும் துதிக்கும் தசரதருடைய கரும உருவைப்பார்த்து பூமியில்வீழ்ந் துருண்டுபுரண்டழுது தன் கண்ணீரால் தயிலம் பொருந்திய தன் தந்தையின் தேகத்தை யலம்பினான். பரதனை வசிட்டர் சற்று விலக்க, அரசனுடலை வெற்றிச் சங்க முதலியவை தியங்க புதியதோர் விமானத் தேற்றினார்கள். பற்பல மன்னரும் மாந்தரும் புடை சூழ, பிரேதத்தை சரயுநதிக்குக்கொண்டு போனார்கள்.



"சங்கு பேரியுந் தழுவு சின்னமும்
எங்கு மெங்குநின் றிரங்கி யேங்குவ
மங்கு லேய்நகர் மன்னி ராமெனப்
பொங்கு கண்புடைத் தழுவ போன்றவே."

"மாவும் யானையும் வயங்கு தேர்களும்
கோவு நான்மறைக் குழுவு முன்செலத்
தேவி மாரொடுங் கொண்டு தெண்டிரை
தாவு வார்புனற் சரயு வெய்தினார்."

அப்போது சாஸ்திரப்படி காஷ்டமடுக்கி அதன்மீதுபிரேதத்தைவைத்துப்பரதனைப்பார்த்து, "உன் தகப்பனுக்குச் செய்யவேண்டிய ஈமக்கடனைக்கழித்திடுக" வென்றார்கள் பெரியோர். இப்படிச் சொன்னகாலத்தில் பரதன் முன்வரலும், வசிட்டர் அவனைப்பார்த்து "அப்பா உன்தாய் கொடுமையால் அடைந்த துயரத்தினால் உன் தந்தை உன்னையும் பிரேதசம்ஸ்காரத்திற்கு உதவாயென்று நீக்கிப்போனான்" என்றார். இதைக்கேட்டபோது இடியுண்ட நாகம்போல் நைந்து துடிக்கும் நெஞ்சினனாகி "நினைக்குமிடத்தில் என்னைவிட துர்ப்பாக்கியர்கள் யாரிருக்கிறார்கள் சூரியகுலத்தில்? முன்னோர் விதிப்படி என் பிதாவின் பிரேதகிருத்தியத்திற்கு அமைவதான மேன்மையை நான் அடையவில்லை. பூமியை ஆள்வதற்கோ உரியனாயினேன்" என்றேங்கி உணர்வற்றிருக்க தம்பியாகிய சத்துருக்கனால் அன்றையத் தினம் செய்யவேண்டிய கருமத்தைச் செய்துமுடித்தான் வசிட்டன். தகனக்கிரியையானதும் அனைவரும் வீடு சேர்ந்தார்கள். பத்துநாளும் பத்து யுகம்போலப் பரதன் அகோரதுக்க சாகரத்தில் மூழ்கினவனாய் பிதாவிற்குச் செய்யவேண்டிய மற்றைக் கர்மங்களையும் பூர்த்தி செய்தான்.

* "ஐந்து மைந்தனா ளூழியாமென
மைந்தன் வெந்துயர்க் கடலின் வைகினான்

* கருத்து. தகனமென்னும் புருட ஆஹூதி எந்த மக்களேனும் செய்யலாம், மற்றைய கருமம் செய்வதற்கு முன்னோனை யன்றி மற்றவர்களுரியரல்லர் என்னுஞ்சாத்திரம் வழுவாமலும் பிதுர்வாக்கியம் பிசகாதபடிக்கும் தகனகருமமொன்று மாத்திரம் சத்துருக்கனாலும் சஞ்சயன முதலிய மற்றக் கருமம் பரதனாலும் வசிட்டன் செய்வித்தான்.

தந்தை தன்வயிற் றருமம் யாவையும்
முந்து நூலுளோர் முறையின் முற்றினான்."

அரசனில்லாமல் நாடிருப்பது முறையல்லவென்பதைக் கவனித்து அறிவிற் சிறந்த கண்ணியவான்களும் மந்திராலோசனைக்காரரும், வசிட்டர் பரதனுடனிருக்கின்றாரென வறிந்து அவ்விடம் போய்ச் சேர்ந்தார்கள். அங்கிருந்த சுமந்திரர் குறிப்பறியவேண்டி அவர் முகத்தைப் பார்த்தார். அதனைக் குறிப்பாலறிந்த முனிவர் பரதனை நோக்கி, "உலகத்தை இரட்சிக்கக் கடவாய். அஃதுனக்குரியது, பிராமணர்கள், தபசிகள், உன்குலத்து வயோதிகர்கள் மற்றவரசர்கள் முதலானவர்கள் உன்னிடமாய் வந்தகாரியம் நடுவுநிலைமையும் தருமமும் நிறுத்தும்பொருட்டேதான். குற்றமில் குணக்குன்றே, இதைக்கொள்வாயாக. அரசனில்லாத உலகம், சூரியனில்லாதபகலும் நக்ஷத்திரத்தோடுகூடியசந்திரனில்லாத இரவும் தெய்வபக்தியோடு கூடிய உயிரில்லாத உடம்பும் போலாகும். தாவர சங்கம வஸ்துக்களிலும் அரசில்லாத வஸ்து ஒன்றும் பார்த்தோமில்லை. உன்தந்தையோ இறந்து விட்டனன், உன்தமையன்பட்டணத்தைவிட்டுச்சென்றுவிட்டான், அப்படிநேர்ந்தது உன்தாய்பெற்றவரத்தால். தூய்தாய்! நீ இராஜ்யபாரஞ்செய்யக்கடவாய். இது எம்முடைய விருப்பம்" என்றனர். இதைக்கேட்ட வளவில் மிகப்பரந்து சரீரநடுங்கி, [illegible], விழியுஞ் சோர்வுற்று மூர்ச்சித்துத் தெளிந்து தன் கருத்தை வெளியிடுவானாயினான்:—மூவுலகிற்கும் முதல்வனாய் எம்முன்னவனாய்ப் பிறந்தவனிருக்க, யான் முடிசூடுதல் தருமந்தானென்று பெரியோரே சொன்னால் பெற்றவள்நடத்தையில் பிசகுண்டாகுமோ? மூத்தவனிருக்கத் தம்பியர் பூபாலனஞ் செய்தவர்கள் உலகத்திலிருப்பார்களாகில் எடுத்துச்சொல்லுங்கள். நீங்களொரு வேளை இது நல்ல வழியென்று சொன்னாலும் நானிப்பூமியில் ஜீவித்திரேன். என்றமயனைக் கொண்டு வந்து அவனுக்கு முடிசூட்டுவதற்குரிய பிரயத்தனஞ்செய்யுங்கள். அவன்



விரும்பித்திரும்பானாகில் யானும் காட்டிற்கேகி தவம் செய்வேன். அதைவிரும்பானாகில் என்னுயிரைமாய்த்துக்கொள்வல்" என்றான். சபையின் கணுள்ளார் பரதன் குணத்திற்கு வியந்து "இளவரசே, அரசன் முடி தரித்து ஆள்கின்றபோதே இராமனும் முடி சூட்டிக் கொள்ள சம்மதித்தான். இராச சிரேட்டனே, நீயோ, தானே யுன்னை வந்தடைந்தும் அப்பாக்கியத்தைத் தடுத்தவன். உன்னைப் போன்ற குணசாலிகள் யாரிருக்கின்றனர்? பதினான்குலகுக்கும் குறைவுநேரிட்டாலும் உன்கீர்த்திக்கு ஒருகுறைவும் வராது" என்று வாழ்த்தினார்கள். பரதனும் சத்துருக்கனை அழைத்து மேக முழக்கம் போன்று பேரிகை ஒலிக்கச் செய்து, "மன்னனைத்தேடிக்கண்டு இந்நகர்க்குக்கொண்டு வரப்போகின்றோமென்றுசொல்லிச் சேனைகளைச் சீக்கிரம் புறப்படச் சொல்வா" யென்றான். இதைக்கேட்டநகர் முழுதும் உயிர் பெற்றெழுந்தாற்போல ஆர்வரித்தது.

"நல்லவ னுரைசெய நம்பி கூறலும்
அல்லலி லழுங்கிய வண்பின் மாநகர்
ஒல்லென விரைத்ததா லுயிரில் யாக்கையைச்
சொல்லெனு மமிர்தினாற் றுளித்த தென்னவே."

எழுகடலும் ஒன்றுபட்டெழுந்த பெரும் பிரளயத்தைவிட பயங்கரமாய்ப் புறப்பட்டன விஸ்தாரமான சேனை. நகரமும் ஆர்த்தன. துக்கமும் விலகி ஓடின. பிரளயகாலத் தெழுமொலியைப் போற் பெருத்தது ஒல்லெனும் சப்தம். இராமனைப் பார்க்கவேண்டுமென்னு மாசையால் ஏறக்குறைய ஊர் முழுதும் புறப்பட்டது. தாரை, வளை, ஊது கொம்பு, பம்பை, உடுக்கை முதலிய வாத்தியம் கூடச் சென்றனவே யன்றி ஒலி செய்யவில்லை.

"தாரையுஞ் சங்கமுந் தாளங் கொம்பொடு
வார்மிசைப் பம்பையுந் துடியும் மற்றவும்

பேரியு மியம்பல சென்ற பேதமைப்
பூரியர் குழாத்திடை யறிஞர் போலவே.

தாவரு நாண்முத லணிய லாற்றகை
மேவரு கலங்களை வெறுத்த மேனியர்
தேவரு மருள்கொளத் தெரியுங் காட்சியர்
பூவுதிர் கொம்பென மகளிர் போயினர்.''

வழியிலிருந்த நதிகளும் வயல் வெளிகளும், மரமடர்ந்த சோலைகளும், சைலங்களும் யாவரும் பார்க்க அலங்கரிக்கப்பட்ட அயோத்திநகரின் திருவீதிகள் போலாயின. இவ்விதமாய்ச் சேனைகள் செல்ல பரதனும் இளவலும் * வற்கலை யுடுத்துத் தேர்மீது சென்றார்கள்.

(இன்னும் வரும்.)

கல்குளம். குப்புசாமி முதலியார்.

———:0:———

ஸ்ரீ

## ஆசாரியர்கள் சரித்திரம்.

### இளையாழ்வார் வைபவம்: இரண்டாம் பகுதி.

———:0:———

(244-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

அங்ஙனமிருந்த இராமாநுசனைச் சரணடைந்து உய்ந்தவர் ஸ்ரீ வடுகநம்பி அனந்தாழ்வான், கூரத்தாழ்வான் முதலியாண்டான் முதலோர். இவர்களுள் வடுகநம்பி எண்ணெய் தேய்க்குங் கைங்கரியம் செய்பவர்; கூரத்தாழ்வானும் முதலியாண்டானும் ஸ்ரீபாஷ்யம் ஆராய்வதற்குத்துணையா யிருப்பவர்; மற்றையோர் அவரவர்க்குத்தக்க கைங்கரியஞ் செய்பவர்.

### ஸ்ரீ வடுகநம்பி வைபவம்.

வடுகநம்பி என்பவர் எம்பெருமானார் திருவடிகளே தமக்குத்தஞ்சமென்றெண்ணி அவர் பாதுகைக்கே திருவாராதனஞ் செய்து வந்தார். ஒருநாள்

* மரவுரி.



உடையவரது திருவாராதன விக்கிரகத்தையும் தமது திருவாராதனத்திற் குரிய அப்பாதுகைகளையும் ஒருங்குசேரவைத்துக்கொண்டுவர, அதனை இராமாநுசன் கண்டு வடுகா! என்னகாரியம் செய்தாய்? என்று கேட்க, அவரும் 'உங்கள் ஸ்வாமியினும் எங்கள் ஸ்வாமிக்கு வந்த தாழ்வு என்? என்றார். மற்றொருநாள், இவ்வடுகநம்பி உடையவர்க்குப் பால்காய்ச்சிக்கொண்டிருக்கையில் பெரிய பெருமாள் வீதியில் எழுந்தருள உடையவர் பெருமாளைச் சேவிக்கப் புறப்பட்டு வடுகநம்பியையும் அழைக்க, அவர் 'உம்முடைய பெருமாளைச் சேவிக்கவந்தால் என்னுடைய பெருமாள்காரியம்யாதாகுமோ? ஆதலின்யான்வரேன்' என்றருளினார். இப்படி, பகவானிலும் பாகவதரே சிறந்தவர் என்கிற விசேஷதருமத்தைச் சத்துருக்னன் போல உலகத்திற்கு வெளியிட்டருளினார். "தொண்டர்தம் பெருமை சொல்வது மரிதே" என வழங்குவது மிது பற்றியே யன்றோ?

### ஸ்ரீ அனந்தாழ்வான் வைபவம்.

அனந்தாழ்வான் என்பவர் திருமலையில் 'இராமாநுசபுத்தேரி' என்றொன்று கட்டநினைத்து அதற்காக மண் சுமந்துபோகும்போது, அவருடைய புத்திரருள் ஒருவர்சென்று தந்தை வருந்துதலைப்பொறுக்காமல் கூடையை வாங்கப்புக, அவர், 'யான் இதனை உன் கையிற்கொடுத்தால்இளைப்படைவேன்; நீயும்இதனைத் தொடில் இளைத்துவிடுவாய்' என்றார். அதனைத் தடுத்து மீட்டும் அக்கூடையை வாங்க யத்தனித்த அந்தப்புதல்வனை நோக்கி 'நீஎனது ஜீவனத்தை வாங்குவது தகுதியோ? வேண்டுமானால், மற்றொருகூடை எடுத்துக்கொள்' என்ன அவனு மங்ஙனே செய்தனன். பின்னொருநாள், அனந்தாழ்வான்கர்ப்பங்கொண்டிருந்த தம் தேவியின் தலைமேல் மண் சுமத்தாநிற்க, திருவேங்கட முடையான் அவ் வருத்தம் பொறாமல் தாமே ஒரு சிறு பிள்ளையாய் எதிர்வந்து வாங்கிச் செல்ல, தேவியும் சீக்கிரம் வருவது கண்ட அவர் 'நீ விரைந்து வருவதன் காரணம் யாதோ?' என்ன அத்தேவி, 'சிறுபிள்ளையொருவன் எதிரேவந்து எனதுகூடையைவாங்கிச் செல்கின்றான் என்ன' அனந்தாழ்வான் மிக்க கோபங் கொண்டு அவனை 'நீ பானகத்துரும்பேபோற் கைங்கரியத்திற்குத்தடையானாய்' என்று *மண்வெட்டியுங் கையுமாய்த்துரத்த, பிள்ளை வடிவங் கொண்ட அத்திருவேங்கடச் செல்வன் விரைந்தோடிக் கோயிலினுள்ளே புகுந்தான். பின்பொருகால், இவ்வனந்தாழ்வான் நந்தவனத்திற் கொத்திக்கொண்டிருக்கையில் ஒருசர்ப்பந்தீண்டியது. அது கண்ட சிஷ்யரனைவரும் 'விஷத்தைப் போக்க முயலவேண்டுமோ! என்ன, அவர் அச்சொல்லைப்பொருள்செய்யாமல் அலக்ஷியம்பண்ணினார். அப்பால் கோயிலிலேபோக, திருவெங்கட முடையானும் 'விஷத்தைப் போக்க

* ஒச்சியமண்வெட்டியானது அவனது முகவாய்க் கட்டையில் தாக்கிற்று எனவும், ஆகவே திருவேங்கடத்தவன் முகவாய்க் கட்டையினின்றும் இரத்தம் பெருகிற்று எனவும், இதுபற்றியே அத் திருவேங்கடமுடையானுக்கு அவ்விடத்துப்பச்சைக்கற்பூரம் வைப்பது எனவும் ஓர் ஐதிக்யம்வழங்குவதறிக.

முயலக்கடவீர், என்றனன். அதுகேட்ட அனந்தாழ்வான் மாசற்ற நெஞ்சின ராய்கடியுண்ட பாம்பு வலிதாகிற் கோனேரியில்ஸ்நாநஞ் செய்து, திருவேங் கடத்தானைச் சேவிக்கின்றேன். கடித்த பாம்பு, வலிதாகில் 'விரஜை' என்னும் நதியில் மூழ்கி வைகுண்ட நாதனைச் சேவிக்கின்றேன்' என்று விண்ணப்பஞ் செய்தார். மற்றொருகால், அனந்தாழ்வான் கோசலநாடு செல்லுகையிற் கட்டு சாதம் கொண்டு செல்ல அம்மூட்டை முழுதும் சிற்றெறும்பாயிருந்ததைப் பார்த்து "எம் பெருமான் பொன்மலைமேலே தேனுமாவேனே" என்றபடி அவ்வெறும்புகளைப் பாகவதாய்க் கொண்டு, மீண்டும் அவற்றைத்திருமலையிலேயே விடும்படி கட்டளையிட்டருளினார். வேறொரு நாள் இவ்வனந்தாழ்வான் திருவேங்கட முடையானுக்குப்பூமாலை கட்டிக் கொண்டிருக்கையில் அத்திருவேங்கட முடையான் அழைத்தருள இவர் தாம் பேசாதிருந்தனர். பின்பு தம்வேலை முடிந்தவாறே கோயிலினுள்ளேபோக, வேங்கடத்துறைவனும். 'யாம் உம்மையழைத்த காலத்து நீர் வராம லிருந்த தென்? என்ன, இவரும் 'எனது கைங்கரியம் முடியாமையே என்றார். 'இனியாம் உம்மாலையையேற்றுக்கொள்ளோம்' என்ன, ஆகில் இதனை 'இத்திரைக்கம்பியின் மீது போட்டுச் செல்வேன்' என்றங்ஙனே செய்தனர். அப்பால், 'யாம் உம்மை இங்கு நின்றும் போகச் சொல்லின் நீர் என்ன செய்வீர்?' என்ன, இவரும் "பரன் சென்று சேர்திருவேங்கடம்" என்றதை மறந்துவிட்டீரோ, தேவரீரன்றோ வந்தேறி? இவ்விடம் தேவரீரை ஆச்ரயித்தவரது என்றேகொள்க" என்று தமது வாத்ஸல்லியத்தை வெளியிட்டருளினார்.

### கூரத்தாழ்வான் வைபவம்.

இவ்விதமாகச் சிஷ்யசம்பத்துடனே உடையவர் வாழ்ந்தருளுங் காலத்துக் கூரத்தாழ்வான், எம்பெருமானார் முதலோரிடஞ்சொல்லாமல் நம்பெருமாள் ஸந்நிதிக்கட்சென்று தமக்குப்பரமபதம் தந்தருளுமாறு வேண்டப்பெருமாளும் "நமக்கும் உமது உற்றார்க்கும் பரமபதம் தந்தோம்' என்று தமது தீர்த்தம் முதலியவளித்தார். இச்செய்தி கேட்டநம் இராமாநுசனும், தாம் அரையிலுடுத்த காஷாயத்தை யவிழ்த்து ஆகாயத்தெறிந்து மீட்டும் அதனை ஏற்றுக் கொள்ள, சிஷ்யர் 'இஃதென்ன?' என்று வினவ உடையவரும் 'நமக்கு ஆழ்வானுடைய ஸம்பந்த முண்டாகிலன்றி மோட்சமில்லை' என்றார்.

அப்பால், இராமாநுசன் மிக்கதுன்பத்துடன் ஆழ்வானருகே சென்று நீரிப்படிச்செய்தல் கூடுமோ? என்ன அவரும் அதற்கு மறுமொழி கூறாதிருந்தார். பின்பு உடையவர் 'நீர் முற்படச் செல்லுதல் யாது பயன்கருதி?' என்ன, ஆழ்வான் "முடியுடைவானவர் முறை முறை எதிர்கொள்ள" என்றபடி முன்னே பரமபதம் அடைந்தவர்கள் †பிற்படச் செல்பவர்களை யெதிர்கொள்வார்கள். அடியேன் பிற்படில் முறைகேடாம்' என்றனர். அதன்பின் ஆழ்வான் உடையவர் திருவடிகளிலே வேரற்ற மரம்போல ஸாஷ்டாங்கமாய் வீழ்ந்து வணங்கி அவரிடம் விடை பெற்று ஆங்கோரிடத்துச் சென்று தம்புதல்வரானப் பட்டர் முதலியோரை யழைத்து அவர்க்கு 'எம்பெருமானார் திருவடிகளையே தஞ்சமெனக் கொள்ளக் கடவீர்' என்பது முதலான உபாயங்களை யுபதேசித்து அன்றேதிருநாட்டுக்கெழுந்தருளினார். அதற்கப்பால் எம்பெருமானாரும் புதல்வரானபட்டரைக் கொண்டு அவர்க்குச் செய்யத்தகும் பிரம்மமேதம் முதலிய கிரியைகளனைத்தையும் குறைவற நடப்பித்தருளினார்.



பின்னொருநாள் உடையவர், பட்டரை நம்பெருமாள் ஸந்நிதிக் கழைத்துச் சென்று பெரிய பெருமாள் திருவடிகளிலே காட்டிக் கொடுக்க, பெருமாளும் பட்டரை நோக்கி, 'நீர் எம்மை, ஆழ்வானாகவே நினைக்கக் கடவீர்; மற்றேதுமெண்ணீர்' என்று அர்ச்சகர் மூகமாய் அருளிச் செய்து விடைகொடுத்தனுப்பினார். இராமாநுசனும் பட்டரைப் பெரிதும் கடைக் கணித்துத் தமது மடத்தே அழைத்துச் சென்று எம்பாரை நோக்கி, 'இவர்க்குச் சாஸ்திரப் பயிற்சி செய்விப்பீராக' என அவர்கையிற் காட்டிக் கொடுத்துத் தாம் திருவாய் மொழி முதலிய நூலினைச் சிஷ்யர்கட்கு அருளிச்செய்துகொண்டிருப்பாராயினார் இங்ஙனம் வீற்றிருந்த நம்இராமாநுசனைச் சரணடைந்த சிஷ்யர் யாவரும்,

> "இருப்பிடம் வைகுந்தம் வேங்கடமாலிருஞ் சோலையென்னும்
> பொருப்பிடமாயனுக் கென்பர் நல்லோரவை தம்மோடும்
> வந்திருப்பிடம் மாயனிராமாநுசன் மனத்து"

என் கையாலே, ஒருவன் எம்பெருமான் திருவடி தொழுவானாயின் மற்றத் திவ்யதேசங்களை யெல்லாந் தொழுதவனாவான்; அவ்வெம் பெருமானாரை ஆராதிக்கின் மற்றெல்லாரையும் ஆராதித்தவனாவான், என்றும்,

> "இராமாநுசனைத் தொழும் பெரியோ
> ரடியேனுக் கிருப் பிடமே" என்றும்

> "உன்றொண்டர்க்கே
> அன்புற் றிருக்கும் படியென்னை யாக்கியங் காட்படுத்தே"

என்றும் உறுதிகொண்டு ஒழுகுவாராயினார். இவ்வாறிருக்கபின்பொரு நாள், இராமாநுசன் பட்டரை நம் பெருமாள் ஸந்நிதிக்கழைத்துச் சென்று தீர்த்

---

† உடையவர் பரமபத மடைந்தபின்பு தாம் சென்றால் அவர் தம்மை எதிர்கொண்டழைத்துச் செல்ல நேரும், அது முறையன்று என்பது ஆழ்வான் கருத்து.

தம் முதலிய கொடுப்பித்து அப்பால் அப்பட்டரை நோக்கி, மேல் நாட்டில்வேதாந்தத்தில் வல்லானொரு பெரிய வித்வான் இருக்கின்றான் எனக்கேட்டோம். நீர் அங்ஙனே சென்று அவனைத் திருத்தியாட்கொள்ளும், என்றருளிச்செய்து மீட்டும் தமது மடத்தேசென்று அங்குள்ள சிஷ்யர்களைக்குறித்து, 'நீவிர்எம்மைப் பிரிந்தீராகில் அதற்காகப் பெரிதும் துயருறுதொழிமின், பெரிய நம்பி, 'ஸ்ரீ யாளவந்தார்' என்ற பெரியர் திருவடிகளே நமக்குத்தஞ்சம்," என்றருளிச் செய்து அவர் பால் மிக்கக்கருணைகொண்டு மற்றைச் சீடர்களையுங்கூட்டி அவர்கட்கு * ஆறுவாக்கியமருளிச் செய்தார். அவை:

1. **வேதாந்த விழுப் பொருளைக்**கற்றும், கற்பித்தும் வரக்கடவீர்; அது கூடாவிடில்,
2. **† அருளிச்செயலை** ஓதியும் ஓதுவித்தும் வரக்கடவீர். அதற்கும் தகுதி இல்லையாகில்,
3. **திவ்யதேசங்களிற்** சென்று ஆங்கெழுந்தருளிய எம்பெருமான்களுக்குக் கைங்கரியம் செய்யக்கடவீர். அதுவுங்கூடாதாகில்,
4. **திருநாராயணபுரத்தே** சென்று ஆங்கொரு குடில் கட்டிக்கொண்டு வாழுமின்; அதுவும் கூடாதாகில்,
5. **'த்வயம்'** எனும் சிறந்த பெரிய மந்திரத்தினை உச்சரிக்கக் கடவீர், அதற்கும் தகுதியின்றாகில்,
6. **பாகவதரதுஅருள்நோக்கிற்கு** இலக்காக வாழுமின் என்பன.

ஒருகால், உடையவர் சரணாகதியின் திறத்தினை அருளிச் செய்கையில் ஆங்கே, பிள்ளையுறங் காவில்லா தாஸர் அக்கோஷ்டியிலும் எழுந்திருந்து நிற்க, இராமநுசன், இஃதென்ன பிள்ளாய்? எனக்கேட்டருள, அவர், 'மிகச்சிறியனாகியயான் இப்பெரியார்கோஷ்டிக்கு உரியேனாய் வீடடையப்பெறுவேனோ!' என்றார். அதுகேட்ட எம்பெருமானார், 'யான் பெற்றேனாகில் நீர்பெறுவது நிச்சயம். பெரியநம்பிபெறுவரேல் யானும் பெற்றேனாவேன். ஆளவந்தார் பெற்றிருப்பாராயின் பெரியநம்பி பெறுவது உறுதி. யாவர்க்கும், பெரியபிராட்டியார் புருஷகாரமிருக்கையில் ஐயமுண்டாவதென்; நமக்குண்டானசம்பந்தம் ஒருசங்கிலிப்பிணையொப்பதன்றோ? 'கழுதுஉண்ணில், வாழையும் உண்ணும்! என்றுறுதி கொண்டொழுகுவீராக," என்று மீட்டும்,

"எத்தி யிருப்பாரை வெல்லுமே மற்றவரைச்
சாத்தி யிருப்பார் தவம்!

---

* இவை, இராமாநுசன் தமது அந்திமதசையில் அருளிச்செய்த அரும்பொருள்.

† அருளிச் செயல்: திருவாய் மொழிமுதலிய பிரபந்தங்கள்.



என்றிருக்கையாலே, எத்தியிருந்தார் ஸ்ரீ பரதாழ்வான், அவரைச் சாத்தியிருந்தார் சத்துருக்கனன். எத்தியிருந்தான் நம்மாழ்வார், அவரைச் சாத்தியிருந்தார் ஸ்ரீ மதுரகவிகள். எத்தியிருந்தார் பெரியாழ்வார், அவரைச் சாத்தியிருந்தார் நாய்ச்சியார் எனவுமருளிச் செய்தார்.

பின்பொருநாள், கந்தாடைமுதலியாண்டான் உடையவரை நோக்கி 'ஸ்ரீ பெரும்பூதூராகிய அவதார ஸ்தலத்திலே தேவரீருடைய விக்கிரகம் எறியருளப்பண்ண வேண்டும், என்ன அவரும் அங்ஙனே செய்க என்றனுமதியளித்தார். அப்பால் ஆண்டான் தொழில்வல்லானொருசிற்பியைக்கொண்டு காரியம்நிறைவேற்றிப்பின் உடையவர் ஸந்நிதிக்குக் கொண்டுவர, அதுகண்ட நம் இராமநுசன்பெரிதும் உவந்து அவ்விக்கிரகத்தினை அணைத்துத்தழுவிக்கொண்டு'புஷ்யமாதத்தில் [தைமாதத்தில்] புஷ்யநட்சத்திரத்திற் பிரதிஷ்டை செய்யுங்கள், என்று ஓர் திருமுகம் எழுதித்தந்தருளினார். அதற்கப்பால் ஆண்டானும் அக்குறித்ததினத்திற் பிரதிஷ்டை செய்ய * அன்றே இராமாநுசனுக்கும் திருமேனியிற்றளர்ச்சியுண்டாக, அவரும் 'ஆண்டானுக்கு நாம் எழுதித்தந்த நாள்ஈதே என்றறிந்த அளவிற்பேரானந்தமுடையராய், அப்பொழுதேவிரைந்து வருமாறு அவ்வாண்டானுக்கும் திருமுகம் விடுப்ப ஆண்டானும் அதுபெற்ற அப்பொழுதேகடுக எழுந்தருளி இராமாநுசனது அடிக்கமலங்கிட்டினார். பிறகு ஆண்டான்முதலோர், செவ்வனேபழுத்துள்ள தேமாக்கனித் திரள்கள் காத்திருக்குமாபோல அவ்வெம் பெருமானுடைய திருமேனியைக் காத்திருப்பாராயினர்.

அப்பால் முறைமுறையாக எம்பெருமானார்க்குத் திருமேனி தளர்வடைய அவரும் எம்பிரான் திருவடிகளையே தம் முடிக்கணியாகச் சூடிப் "பைகொள் பாம்பேறியுறைபரனேயுன்னை — மெய்கொள்ளக்காண விரும்பு மென்கண்" என்று அவனையேபல பலபடிநினைந்து நினைந்து, திருமணிவடம் முதலிய தரித்துக்கொண்டு மங்களவாத்தியம் முழங்க ஆசாரியர்கள் திருவடிகளைத் தியானித்த வண்ணம் திருநாட்டை யலங்கரித்தார். அத்திருநாடென்னும் பெருநாட்டிலுள்ள நித்திய சூரிகள் ஒரு பரமபாகவதர் இங்குவந்தாரே! எனப் பேரானந்த முடையராய்,

"நாரணன்தமரைக்கண்டு கந்து நன்னீர்முகிற்
பூரணபொற்குடல் பூரித்ததுயார்விண்ணில்
நீரணி கடல்கள் நின்றார்ந்தன நெடுவரைத்
தோரண நிரைத்தெங்கும் தொழுதனருலகே"

என்றபடி தொழுது வந்தெதிர்கொள்ளச் சென்று,

---

* 'அக்குறித்ததினத்தில் அந்த விக்கிரகத்திற்கு, ஒருசிற்பியைக் கொண்டு கண்திறப்பிக்கையில், உடையவரது திருக்கண்களினின்றும் இரத்தம் பெருகிற்று, எனவும் கூறுவார்.

" வந்தவரெதிர் கொள்ள மாமணி மண்டபத்து
அந்தமில் பேரின்பத்தடியரோடு "

*ஸாரூப்பியம் பெற்று அப்பரமபதநாதனுக்கு, கழிபெருமகிழ்ச்சியோடு நித்திய கைங்கரியம் செய்து கொண்டே வீற்றிருப்பாராயினர்.

———:o:———

இப்படிப்பட்ட இவ்விளையாழ்வார் வைபவத்தை, (1) பெரியபெருமாளும், (2) திருவேங்கடமுடையானும், (3) பேரருளாளரும், (4) திருநாராயணப் பெருமாளும், (5) அழகரும், (6) திருக்குறுங்குடிநம்பியும், (7) நம்மாழ்வாரும், (8) நாதமுனிகளும், (9) ஆளவந்தாரும், (10) பெரியநம்பியும், (11) திருக்கோட்டியூர்நம்பியும், (12) திருமலைநம்பியும், (13) திருமலையாண்டானும், (14) பிரம்மராக்ஷஸும், (15) ஊமையும் வெளியிட்டமையாலும் அறியலாம்.

1. **பெரியபெருமாள் வெளியிட்டபடி**: தம்திருப்பவளச் சோதிவாய்திறந்து 'உபயவிபூதியையும் நுமக்கேதந்தோம், என்றருளினமையாலும் ;

2. **திருவேங்கடமுடையான்வெளியிட்டபடி**: உடையவர்திருப்பதிக்கெழுந்தருளியகாலத்து ' தும்பையூர்கொண்டி, என்பாளாரு ஆய்ச்சி தயிர்ப்பணம் பெற வந்துஉடையவரைச்சேவித்துநிற்க, அவர் அப்பெண்ணைச்செவ்வனே கடாக்ஷித்தருள, அவள் மிக்கஞானபக்தி யுடையளாய் எனதுத்தயிர்ப் பணத்திற்கு மாறாகமோட்சம் தரவேண்டும்,என்ன, நம்இராமாநுசன் 'அது கொடுக்கத்தக்கவர் திருவேங்கடவர் 'யானன்று,' என்றஅளவில், ஆகில், அதற்குத் தேவரீர் ஒருசிறுமுறி [சீட்டுத்] தரவேண்டும், என்ன, அவரும் அங்ஙனேதந்தருளினர். அது பெற்ற அவ்விடைப்பெண் திருமலைக்கண்விரைந்துசென்று திருவேங்கடமுடையானுக்கெதிர் அச்சீட்டைப்படிக்க அவரும் அக்கணமே வீடளித்தமையாலும் ;

3. **பேரருளாளன் வெளியிட்டபடி**: யாதவப்பிரகாசனுக்கு,'நம்மிராமாநுசனை ஒருபிரதக்ஷிணம் பண்ணக்கடவிராக' எனஸ்வப்பனம்அளித்தமையாலும்,

4. **திருநாராயணன்வெளியிட்டபடி**: தொண்டனூரிலேஸ்வப்பனங்காட்டியருளி அழைத்துப்போய், தாம் அவர்க்குப் பிரத்தியக்ஷமாகையாலும் ; 'என்னுடைய செல்வப்பிள்ளையன்றோ! என்று அணைக்கும்படி தன்னைக்காட்டிக் கொடுத்தமையாலும் ;

5. **அழகர் வெளியிட்டபடி**: கிடாம்பி யாச்சான், 'தான் திக்கற்றவன், என்ன, அதற்கு அழகர் 'நம் இராமாநுசனைப் பெற்றிருந்தும் இங்ஙனம் கூறல் தகுதியா ? என்கையாலும் ;

* ஸாரூப்யம் — திருமாலைப்போலவே யிருத்தல்.



6. **திருக்குறுங்குடிநம்பி வெளியிட்டபடி**: ஒருகால் உடையவர் முதலோர் நம்பியைச் சேவிக்கச் சென்றபோது அக்குறுங்குடிநம்பி, 'நாம் பலஅவதாரமெடுத்தும் நம்மையறிந்துய்யு முபாயம் அறியாதே அலைகின்ற உயிர்கள் நும்மைச்சரணடைந்து உய்ந்தமகிமையென்னே!' என்றுஇராமாநுசனைப்பெரிதும் உகந்தமையாலும் ;

7. **நம்மாழ்வார் வெளியிட்டபடி**: " கலியுங்கெடுங்கண்டு கொண்மின் " என்று உடையவர் அவதாரத்தை முன்னரேகுறித்தமையாலும் ;

8. **ஸ்ரீமந்நாதமுனிகள் வெளியிட்டபடி**: உடையவர் அவதாரத்தைக் குறித்து 'குளப்படியிலே தேங்கினால் குருவிகுடித்துப்போம், வீரநாராயணபுரத்தேரியில் தேங்கினால் நாடுவிளையும் ' என்றமையாலும் ; இதன் விவரம் : நம்மாழ்வாராகிறகாளமேகம், பெரிய பெருமாளாகிற பெருங்கடலிலே படிந்து, அவனது கல்யாணகுணங்களாகிய நீரினைப்பருகி நாதமுனிகளாகிய மகாமேருவிற்பொழிந்து, உய்யக்கொண்டார் மணக்கால் நம்பிகளாகிய அருவிகளாக இறங்கி: ஆளவந்தாராகிற பேராற்றிற் கூடி, * எம்பெருமானாராகிற பெரிய ஏரியில்வந்து தேங்கி, நம் ஆசாரியர்களாகிற மதகுகளிலே புறப்பட்டு, இச்சம்ஸாரமாகிற கழனிகளிற் பாய்ந்து உயிர்களாகிற பயிர்களை வளர்த்து, மோட்சமாகிற பயனைப்பயக்கும் என்பது.

9. **ஆளவந்தார் வெளியிட்டபடி**: உடையவரது கல்வித்திறமையினைக் கண்டு தம் விரல் நிமிர்ந்தமையாலும் ;

10. **பெரியநம்பிவெளியிட்டபடி**: உடையவர்க்கு ஆசிரியரான பெரியநம்பி, உடையவரிடம் மிக்கபக்தியுடையராய் அவர் திருவடிகளிலே தம் குமாரனை புண்டரீகாக்ஷரையும் ஆளாக்கினமையாலும் ;

11. **திருக்கோட்டியூர் நம்பி வெளியிட்டபடி**: உடையவரது ஆசிரியரான திருக்கோட்டியூர் நம்பி தம் இராமாநுசர்க்குத் திருமந்திரத்தையுபதேசித்த காலத்து ' இதனை ஒருவர்க்கும் புலப்படுத்தாதிருப்பீராக ' என்ன உடையவர் அதனைக்கடந்து, உலகுய்யப்பலர்க்கும் அருளிச்செய்தார். அதுகண்ட நம்பி அவரது பெருங் கருணைக்கு வியந்து தம் குமாரராகிய தெற்காழ்வானையும் நம் இராமாநுசன் திருவடிக்காட்படுத்தினமையாலும் ;

12. **திருமலைநம்பி வெளியிட்டபடி** : உடையவர் திருமலைக்கெழுந்தருளிய காலத்து, நம்பி தாம் எதிர்கொண்டு சென்று தீர்த்தம் முதலிய அளிக்க, அது பெற்ற நம் உடையவர் நம்பியை நோக்கி, 'தேவரீர் எழுந்தருள்வானேன் ?

* 'வீரநாராயண புத்தேரியில் தேங்கினால் நாடுவிளையும்' என்றது தத்துவஞானம் உடையவர்க்கு உண்டாகில் அவர் மூலமாஉலகினர்க்குப் பரவும் என்றபடி : 'திருமந்திரத்தைக் கோபுரத்தேநின்று பலருமறிய உபதேசித்தருளினர்' எனவழங்குவதும் இங்குஸ்மரிக்கத்தக்கது.

சிறியார் ஒருவருமில்லையோ? ' என்ன, அதற்கவர், 'என்னிலும் சிறியார் இங்கு எவருமில்லை' என்கையாலும்; 'உள்ளங்கை கொணர்ந்த நயினார்' என்ற எம்பாரை வைணவராகியளித்தமையாலும்; குமாரரான பிள்ளைத்திருமலை நம்பியையும் அவர்க்கே ஆட்படுத்தினமையாலும்;

13. திருமலையாண்டான் வெளியிட்டபடி: இவரிடம் உடையவர் திருவாய் மொழியின் விசேஷார்த் தங்களைக் கேட்குங் காலத்து "அறியாக் காலத்துள்ளே" என்றபாட்டிற்கு இராமாநுசர் விசேடப் பொருளென்றுரைக்க அது கேட்ட திருமலையாண்டான் 'சாந்தீபன்' என்பானிடம் 'கண்ணன் படித்தவாறுஇவ்வுடையவர் தம் பக்கல் படிப்பது' என்றுகொண்டு அவரிடம் மிக்க பக்திபுடையைராய்த்தம் குமாரர்சுந்தரத் தோளிணையாரையும், இராமாநுசன் திருவடிகளில் ஆச்ரயிப்பித்தமையாலும்;

14. பிரமராக்ஷஸ் வெளியிட்டபடி: யாதவப்பிரகாசருக்கு சிறிதும் அஞ்சாமல் இராமாநுசர்க்கு அஞ்சிப்போனமையாலும்;

15. உமை வெளியிட்டபடி: காஞ்சிமாநகரத்துஜ்ஜந்தாறுவயதுள்ளஊமையாயிருந்தாெனாருவன் உடையவரது அருளாற்பேசுந் திறம்படைத் தமையாலும் என்க.

வாழ்த்து.

கட்டளைக் கலித்துறை.

நல்லார் புகழ்பெரும் பூதூர் முனிவரன் ஞானவெள்ள
மல்லார் புயமால் சமயப் பயிரை வளர்த்திடுக
எல்லா நலனுஞ் செழிதமி ழோங்க வெமக்கருள்செய்
பல்லார் புகழ்குரு கோபாலன் வாழ்கவிப் பார்மிசையே.

இளையாழ்வார் என்னும்

ஸ்ரீ ராமாநுஜா சாரியர் வைபவம் முற்றுப் பெற்றது.

தி. கோ. ஸ்ரீரங்காசாரியர்.

---



## பதிவிரதைகளினிலக்கணம்.

(237-ஆம் பக்கத்தொடர்ச்சி).

ஆனால், ஆணுக்கும் பெண்ணுக்கும் ஸ்வதந்திர விஷயத்தில் யௌவன காலத்தில் மாத்திரம் வித்தியாசம் ஏற்படுவதுபோல் இந்தச் சுலோகத்தினால் தோற்றுகின்றது. இந்தப் பருவத்திற் பெண்ணானவள் ஆணுக்கு அடங்கி நடக்கவேண்டு மென்பது பின்வருங் காரணங்களினால் விளங்கும்.

உயர்ந்த பதவியிலிருக்கு மொருவன் தாழ்ந்த நிலைமையிலுள்ளவனோடு நேரே கலந்து வியவகரியாது, தனக்கு அடுத்தபடியிலுள்ள உத்தியோகஸ்தன் மூலமாய் அவனுக்குக் கீழுள்ளவர்களுக்குப் படிப்படியாய்த் தனது அபிப்பிராயத்தை வெளியிட்டுக் கடைசியாய்த் தாழ்ந்த நிலைமையிலுள்ளவனை யெட்டுவதுபோல, மிகவும் சூக்ஷ்மமாயும் மேன்மையானதாயுமிருக்கிற ஆத்மசைதன்யமானது மிகவும் ஸ்தூலமாயும் இழிவானதாயுமிருக்கிற இந்த ஐம்பூதங்களின் தொகுதியாகிய தேகத்துடன் நேரே கலப்பதில்லை. மற்று எங்ஙனம் எனின், ஆத்மசைதன்யமானது படிப்படியாய்த் தனது தன்மையிற் றாழ்ந்துள்ள தத்துவங்கள் ஒவ்வொன்றினும் முறையே பிரகாசித்துக் கடைசியாய் ஸ்தூலதேகத்தை யெட்டுகின்றது. அந்தத் தத்துவங்கள் நிற்கும் முறை வருமாறு:—

1. ஆத்மா.
2. புத்தி.
3. மனம்.
4. சூக்ஷ்மதேகம்.
5. ஸ்தூலதேகம்.

ஆத்மாவானது ஸ்தூலதேகத்திற் பிராணன் வடிவமாய் விளங்கி, வெளியுலகத்தின் அநுபவங்களைக் கிரகித்துக்கொண்டு திரும்பி, படிப்படியாய்ச் சூக்ஷ்மதேகம், மனம், புத்தி ஆகிய இந்தத் தத்துவங்களின் வழியாய் மேலே (உட்) சென்று, தனது சொந்த இடமாகிய ஆத்மாவை யடைவதே மோக்ஷமெனப்படும். பிரகிருதியின் சம்பந்தத்தினால் உண்டாகும் அநுபவங்களைச் சம்பாதிக்கும் பொருட்டே நாம் ஜன்மமெடுத்தோம். அவ்வநுபவங்கள் அனைத்தையும் ஒரு ஜன்மத்திலேயே நாம் பெறுவது அமையாதாதலின், அடிக்கடி ஜன்மமெடுத்து இறப்பதும் பிறப்பதுமாகிக் கடைசியாய்மேலே குறிக்கப்பட்ட சூக்ஷ்மதத்துவங்களின் வழியே உட்சென்று நற்கதியை நாடி மோக்ஷம் பெறவேண்டும். இதனால் நமக்கு விளங்கியது யாதெனின், மாநுட ஜன்மமெடுத்தவர்கள் எல்லோர்க்கும் 1. ஆத்மா, 2. புத்தி, 3. மனம், 4. சூக்ஷ்ம

தேகம், 5. ஸ்தூலதேகம் எனும் ஐந்து தத்துவங்களும் அமைந்திருக்கின்றனவென்பதேயாம். இவை எல்லோர்க்கும் பொதுவாயின், மாநுடரில் ஆண் என்றும் பெண் என்றும் உள்ள வித்தியாசம் எங்கு ஏற்பட்டது? மேற்சொல்லிய ஐந்துதத்துவங்களுள் எந்தத் தத்துவத்தில் வித்தியாசமிருக்கின்றதென்று பார்த்தால்:

ஆத்ம தத்துவத்தை யொட்டிப் பார்க்கும்போது புருஷனுக்கும் ஸ்திரீக்கும் வித்தியாசமில்லை; ஆண்ஆத்மாவென்பதும் பெண்ஆத்மாவென்பதும் கிடையாது; ஆணிலும் பெண்ணிலும் ஆத்மாவொன்றே, ஒரு தன்மையதேயாகும்.

புத்தியை யொட்டிப் பார்க்கும்போது, ஆணும் பெண்ணும் சமமென்றே கூறலாம்; ஆயினும் பெண்ணுக்கு ஒருவாறு புத்திக்கூர்மை யதிகமாகும்.

மனத்தை யொட்டிப் பார்த்தால், சாதாரணமாய் இருவருடைய மனமும் காமத்தை நாடிநிற்கும். மனமும் மாருதமு (காற்று)மொன்றாகும்; அஃதாவது, மனம்காற்றைப்போல் அவ்வளவு அசைவுற்றது, நிலையில்லாதது, சலித்துக்கொண்டே இருக்கும். இது மனத்திற்குப் பொதுத்தன்மையாயினும், புருஷனது மனத்தினும் ஸ்திரீயினது மனம் விசேஷ சஞ்சலமுற்றது. ஆகவே, நிலையில்லா மனத்தையுடைய ஸ்திரீயானவள் பிரகிருதிசம்பந்தமான உலகத்து அநுபவங்களை ஆராய்ந்து மேற்கொள்ளுமாறு தன்னினும் அசைவற்றுத் திடம் பொருந்தியிருக்கிற மனத்தையுடைய புருஷனைச் சார்ந்து நடக்கவேண்டியதாகின்றது. இந்த மனம் என்னுந் தத்துவத்தில் ஸ்திரீ புருஷ வித்தியாசம் ஏற்பட்டது.

மனம் என்னும் தத்துவத்திற்குக் கீழ் ஸூக்ஷ்மதேக மென்றும் ஸ்தூலதேகமென்றும் இரண்டு தேகங்களுளவெனக்கூறினோம். நமது கண்ணுக்குப் புலப்படுவதே ஸ்தூலதேகமாகும். கண்ணுக்குத் தெரியாததாயும், ஸ்தூலதேகத்தினுள் வர்த்திப்பதாயும், மனத்துக்குமாத்திரம்தெளிவாய்விளங்குவதாயுமிருப்பது சூக்ஷ்மதேகமாகும். நமது கண், காது, மூக்கு, முதலிய அவயவங்களுக்கு அவ்வவற்றிற்குரிய தன்மையை (அஃதாவது, பார்த்தல், கேட்டல், மோத்தல் முதலிய தொழிலைப்புரியுஞ் சக்தியை)க் கொடுப்பது இந்தச் சூக்ஷ்மதேகமேயாம்; எனவே, சூக்ஷ்மதேகமானது ஐம்புலன்களுக்கும் இருப்பிடமாகின்றது. நாம் நித்திரை செய்யுங்கால் இந்தச் சூக்ஷ்மதேகம் ஸ்தூலதேகத்தினின்று விலகி யிருக்கின்றமையால், கண் காது முதலிய அவயவங்கள் தத்தம் தொழிலைப் புரிவதில்லை. சூக்ஷ்மதேகமென்பது ஸ்தூலதேகத்திற்கு ஆதாரமானது; சூத்திரம் போன்றது. அஃது அசைந்தால், ஸ்தூலதேகம் அசைந்தேதீரவேண்டும். சூக்ஷ்மதேகத்தில் வர்த்திக்கின்ற (வியவகரிக்கின்ற) "நான்" என்பவனுக்கு 'உள்மனிதன்' என்றும், 'உண்மையான மனிதன்' அவனே என்



றும், வெளியுலகில் ஸ்தூலதேகத்தில் "நான்" என வியவகரிப்பவன் அந்த 'உள்மனிதனுடைய நிழலாகையால் உண்மையான மனிதனல்லன்' என்றும் சொல்வதுண்டு.

மேலே, ஆத்மா, புத்தி, மனம் என்னுந் தத்துவங்களில் ஸ்திரீபுருஷர்களுடைய நிலைமையையொப்பிட்டுப்பார்த்ததுபோல், அவர்களுடைய 'உள்மனிதன்,' அல்லது, சூக்ஷ்மதேகத்தை யொட்டிப்பார்த்தால், ஸ்திரீயின்சூக்ஷ்மதேகம்மிகவும் லேசானது. ஸ்திரீக்கு இதனிடத்தே பற்று அதிகம், இந்தத்தேகத்தில் வர்த்திப்பதே அவளுக்கு மிகவும் பிரியமான காரியம். இயற்கையிலேயே சூக்ஷ்மதேகமானது பலவிதவிகாரங்களுக்கு (மாறுபாடுகளுக்கு) இடமானது; பலமில்லாதது. இதனை உட்புறத்திருந்து மனத்தினாலும், வெளிப்புறத்திருந்து திடமான ஸ்தூலதேகத்தினாலும் நிலைப்படுத்திக் காக்க வேண்டியது. இவ்வாறு செய்வதற்கு ஸ்திரீக்கு யோக்கிதை இல்லை—அவளுடைய மனம்மிகச்சஞ்சலமானது ஸ்தூலதேகம் பலமற்றது, மென்மையானது. சூக்ஷ்மதேகத்தை மனத்தினால் அடக்கிநியமித்து ஆளாவிடின், அதன் தோற்றங்களுக்கும் மாயாவிகாரங்களுக்கும் உள்ளாகி, சொப்பனத்தைப் போன்ற பொய்யுலகின் மருளிலே மயங்கி நமது தாய்வீடாகிய ஆத்மஸ்தானத்தை மறந்து அந்த ஸச்சிதானந்த சுகப்பேற்றையடையாமற்போவோம். ஸ்திரீயின்சூக்ஷ்மசரீரம் இத்தன்மையது. புருஷனுடைய சூக்ஷ்மசரீரம் இதனினும் உறுதியானது, வன்மையுற்றது; ஸ்தூலத்திற் பிரவர்த்திக்கும் இச்சையுள்ளது; பிரகிருதியின் தன்மையாகிய "நான்" என்னுங் கர்வம் முதிர்ந்து, எங்கும் நிறைந்துள்ள ஆத்ம வஸ்துவானது குறுகி அணுவாகித் தான் வேறெனப் பாவித்துக் கர்வங்கொண்டது; இதனாலேயே அஃது "ஆணவம்" கொண்டதெனப்படுவது. இங்கிருந்து ஆண்தன்மை ஸ்தூலத்தில் வெளியாகின்றது.

இவ்வாறாக மனம் முதலாகிய தத்துவங்களில் ஸ்திரீக்கும் புருஷனுக்கும் வித்தியாசமான தன்மைகள் இயற்கையிலேயே அமைந்திருக்கின்றன. ஒருவரிடத்திற் குறைவாயிருக்குந் தன்மைமற்றவரிடம் அதிகமாயிருக்கின்றது. ஆகையால், ஸ்திரீயும் புருஷனும் ஒன்றுகூடி ஒரே மனமுள்ளவராகி ஒருவருக்கொருவர் இணங்கி, ஜீவயாத்திரை செய்வதில் இருவரும் துணைவராய்க்கூடினோமென நினைத்து நடந்தால், தொலையாத அந்த வழியை ஆயாசமில்லாமலும் சந்தோஷமாயும், மிகுந்தலாபத்துடனும் கடக்கலாம். ஸ்திரீயினிடத்திருந்து புருஷன் மெல்லிய தன்மையையும், இரக்கத்தையும், அன்பையும், பரலோகத்தைநாடும் இயல்பையும், ஸ்தூலத்தினின்று சற்று விலகிச் சூக்ஷ்மத்தைத்தேடும் உருசியையும் அப்பியசித்து நற்கதிபெறலாம். இல்லையெனின், அவன் ஆணவமிகுந்து பிரகிருதியில் ஆழ்ந்து, வெளியுலக வியாபாரமேமிக்கு உள்ளுலகநாட்டமற்று, தற்காலப்பயனையே விரும்பி, மிருகத்தன்மைமேலிட்டு, மாநுடவுருக் கொண்ட அரக்கனென விளங்கிமாய்வான். புருஷனையடுத்த ஸ்திரீ

யானவள் தனக்குள்ள சபலசித்தத்தினால் விளையுந்தீமைகளினின்று தப்பி, சமுசாரவாழ்க்கையில் அபலையான தனக்கு நேரக்கூடிய ஆபத்துக்களுக்கு இரையாகாமல் அவனுடைய மனோபலத்தைக் கொண்டு பிழைத்து, வெளியுலகின் அநுபவத்தையும் பிரகிருதியின் தன்மையையும் தன்றுணைவனது சகாயத்தினால் நன்குணர்ந்து,—கழைக்கூத்தாடியானவன் மிகுந்த சாதனைகள் செய்து கஷ்டப்பட்டுப் பெரு முயற்சியெடுத்துச் செய்யுங் காரியங்களை அவ்வண்ணஞ் செய்யத்துணிவில்லாதவரும் கையாலாகதவருமான நாம் சிறிதும் சிரமமின்றிச் சற்றுங் கருணையற்றுக் குறைகூறி அக்காரியங்களை 'வேடிக்கை' யெனக் கண்டு களித்து அநுபவிப்பதுபோல,—புருஷனானவன் வெகு கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் பிரகிருதியின் அநுபவத்தை எளிதில் மேற்கொண்டு தான் உய்யும் வழியைப் பற்றலாம். ஜன்மமெடுத்ததும் பிரகிருதியின் சம்பந்தத்தினாலுண்டாகும் அநுபவங்களையறியும் பொருட்டே யன்றோ? இவ்வநுபவங்களைப் புருஷன் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்க, ஸ்திரீயானவள் அவனையடுத்திருப்பதனாலேயே ஆயாசமின்றிச் சம்பாதிக்கலாம். தனக்குத் தானே இவ்வநுபவங்களைச் சம்பாதிக்கவோ அவளுக்குச் சரீரபலமுமில்லை, மனோபலமுமில்லை; அன்றி, நிலையில்லா மனமுள்ளவள், எளிதில் மோசம் போகக்கூடியவள். ஆதலால் ஸ்திரீயானவள் உலகவாழ்க்கையிற் புருஷனையடுத்திருத்தலே நன்மையாம்.

(இன்னும் வரும்).

கிருகஸ்தன்.

## பக்தியுள்ள மன்னர்கள்.

முன்னொருகாலத்தில் தர்மத்துவசன் என்று ஒரு பேர்பெற்ற அரசனிருந்தான். அவனுக்கு அமிதத்துவஜன், கிருதத்துவஜன் என இரண்டுகுமாரர்களிருந்தனர். அவ்விருவரில் மூத்தவனுக்கு பக்திசிரேஷ்டனான காண்டிக்யன் என்று ஒரு குமாரனிருந்தான். பகவானைக் குறித்துத் தியானிப்பதையே தொழிலாகக்கொண்ட இளையவனாகிய க்ருதத்துவஜனுக்கும் கேசித்துவஜனென்று ஒரு குமாரனிருந்தான். அந்த கேசித்துவஜனும் தன் பிதாவைப் போலவே வாழ்நாள் முழுவதும் கடவுளைச் சிந்தித்தலே தொழிலாயிருந்தான். ஆயினும் கேசித்துவஜன், காண்டிக்யன் ஆகிய இரண்டு பேரப்பிள்ளைகளும் அண்டை அரசராதலால் அவர்களுள் சண்டை நேரிட்டது. கடைசியில் காண்டிக்யன் அரசிழந்துத் தன் நாட்டினின்றும் துரத்தப்பட்டான். அவன் வனவாசஞ் செய்கையிலும் அவனது குரு மந்திரி, பிரதானி முதலியோரும் மற்றும் சிலரும் அவனைப் பின் தொடர்ந்து காய் கிழங்குகளைத்தின்று பகவந்நாமத்தைத் துதித்துக்கொண்டே மலைகளிலும் காடுகளிலும் அவனுடன்கூடத் தங்கள் காலத்தைக் கழித்துவந்தார்கள்.



ஒருநாள் வெற்றிவீரனாகிய கேசித்துவஜன் ஜனசஞ்சாரமில்லாத காட்டுக்குச்சென்று பகவானைக் குறித்துத் தியானம் செய்துகொண் டிருக்கையில் ஒரு கோரமான புலி தோன்றி அருகிருந்த பசுவைக் கொண்டுபோய் விட்டது. கேசித்வஜனும் விசனாக்கிராந்தனாய் சமஸ்தானத்திருந்த குருப் பிராமணர்கள் அனைவரையும் வரவழைத்து புலி பசுவைக்கொல்லச் சமயம் வாய்க்கும்படி தான் அஜாக்கிரதையா யிருந்ததால் தனக்கு நேரிட்ட பாவதோஷத்தினின்றும் தான் நீங்கப் பரிகாரம் யாதென்று அவர்களை வினவினான். அவனிடத்திருந்த குருப் பிராமணர்களும் அவனிலும் விவேகிகளன்று. ஆகையால் அவர்கள் கசேருவையும் ஸுனகனையும் கேளென்று அரசனிடம் சொன்னார்கள். சுனகர் மகான், நல்ல பக்திமான். அவர் அரசனுக்கு இன்னமாதிரி சொல்வதென்று தோன்றாமல் இப்பூவுலகில் இச்சந்தேகத்தைத் தீர்க்கத்தக்கவர் உன்னால் தோல்வியடைப்பட்டும் காட்டுக்குத் துரத்தப்பட்டு மிருக்கிற உனது பகைவனாகிய காண்டிக்யன் ஒருவனே என்று மொழிந்தார். அந்தப்பாபத்தினின்று நீங்கவேண்டு மென்னும் ஆசை அதிகமாயிருந்ததால் கேசித்வஜனும் நாம் நிராயுதபாணியாய்த் தனிமையாகச் சென்றால் ஒருவேளை கோபத்தால் காண்டிக்யன் நம்மைக்கொன்றாலும் நல்ல காரியங்களில் தலையிட்டுக் கொண்டிறப்பதாலுண்டாகும் மோட்சம் நமக்குக் கிடைக்கும். அன்றி காண்டிக்யன் கருணையுடன் உபதேசம் செய்வானேயானால் அதனால் தனது எக்கியம் பலியாது போகாதே! என்று தனக்குத்தானே உறுதிசெய்துகொண்டு இந்த மோக்ஷசாதனமான உபதேசத்தை பகைவனிடமே அறியத் தீர்மானித்தான். அத்தீர்மானத்தின்படியே கேசித்வஜனும் மான் தோலுடைதரித்துப் பக்திமானான காண்டிக்யன் வசிக்கும் காடு தேடிச்சென்று அவன் ஆச்சிரமமடைந்தான். காண்டிக்யனும் தன் பகைவனைப்பார்த்தமாத்திரத்தில் இனியில்லாத கோபம் மூண்டுத் தன் வில்லைக் கையிலெடுத்துக்கொண்டு கேசித்வஜனைக் கொல்லயத்தனித்தான். ஆயினும் கேசித்வஜனும் தான் வந்தகாரியத்தை வெள்ளெனக் கூறி வில்லை அப்புறம் வைத்துத்தனக்கு உபதேசம் செய்யும்படி வேண்டினான். காண்டிக்யனின் மந்திரிமார்களும் கேசித்வஜனைக்கொன்றால் உலகமுழுமையும் ஆளலாமென்று அவனைக் கொல்லும்படித் தங்கள் அரசனை வற்புறத்தினார்கள். ஆயினும் காண்டிக்யனோ அவர்கள் சொல்லுக்கிணங்கவில்லை. அவ்வாறு செய்யின் நிலவுலகமுழுமையும் தனக்குக்கிடைக்குமென்பது வாஸ்தவமே. ஆனால் அது தனது பகைவனுக்கு மறுவுலகைக்கொடுக்குமன்றோ! இவ்வுலகாட்சியோ நீர்க்குமிழிபோல் நிலையில்லாதது. மறுவுலகாகிய மோட்சமே நித்தியமானது. ஆதலின் தான் அத்தருணத்தில் செய்யவேண்டியது கேசித்வ

ஜனைக் கொல்வதன்று, மற்றுயாதெனில் அவன் நாடிவந்ததை அவனுக்கு உணர்த்தியூட்டுவதேயாம் என்று தானே ஆய்ந்தான்.

காண்டிக்யனும் அவ்வாறே கேசித்வஜனை அவனது சந்தேகத்தைக் கூறும்படி விரும்பினான். சந்தேகமும் கேட்டாயிற்று, அதற்கு விடையும் வினயமாய் வந்தது. கேசித்வஜனும் காண்டிக்யனிடம் செலவு பெற்றுச்கொண்டுச் சந்தோஷத்துடன் தன் நாட்டுக்குத் திரும்பி வந்து யாகாதிகளைத் தக்கவாறு நடத்தி இன்னும் நடத்தவேண்டிய கருமங்களையெல்லாம் சரிவர நடத்தினான். யாகத்தை நடத்தின குருக்களுக்கும் மற்றும் பிராமணர்களுக்கும் வேண்டிய வளவு தனத்தை ஈந்தான். வழக்கம் போலவே யாகத்துக்கு வந்தவர்களுக்கெல்லாம் அவரவர்கள் வேண்டுகோளைப் பூர்த்திசெய்தான். கேசித்வஜனும் எல்லாவற்றையும் விசேஷ ஆடம்பரமாகவே நடத்தினான். என்றாலும் தான் செய்யவேண்டியவாறு எல்லாம் செய்ததாக அவனுக்குத் தோன்றவில்லை. தனது உபதேச குருவாகிய காண்டிக்யனுக்குக் குருதட்சணை செலுத்தவில்லையே என்று உன்னினான். அவ்வெண்ணம் உதித்ததும் தன் இரதமேறி அந்த ராஜரிஷி வசித்த அடர்ந்த காட்டை நோக்கிச் சென்றான். தன் தாயாதி திரும்பி வந்ததைக் காணவே காண்டிக்யனுக்கு ஆச்சரிய முண்டாயிற்று. இம்முறை தன்னிடம் காட்டுக்கு வந்தது தன்மீது விரோத எண்ணத்தாலிருக்கலாமென்று காண்டிக்யனும் சந்தேகங்கொண்டு, 'என் வில்லை அவன்மீது செலுத்தி இன்றே அவன் துரோகத்தை முடிக்கிறேன்' என்று வில்லுடன் ஆயத்தமாய் நின்றான். ஆனால் கேசித்வஜனது அன்பான சொல்லும் களங்கமற்ற பார்வையும் அமைதியான நடையும் அவன் கொண்ட சந்தேகந் தவறென்று விளக்கின. கேசித்வஜனும் தன் தாயாதிக்கு அவர் விரும்பிய வஸ்துவதாவது தான் குருதக்ஷிணை கொடுக்க வேண்டியே வந்ததாக மொழிந்தான். காண்டிக்யனும் சிறிது அப்புறம் சென்றுத் தன் மந்திரிகளுடன் ஆலோசித்தான். மந்திரிகளோ இழந்த நாட்டைத் திரும்பியடைய இதுதான் தருணமென்றெண்ணி அதைக் கேட்கும்படி தங்கள் அரசனை வேண்டினார்கள். காண்டிக்யனோ, அவர்கள் வேண்டுகோளை நிராகரித்தான். அவனும் நிலையற்ற இவ்வுலகை ஆசிப்பது தகாதென்று கருதி இப்பூலோக சம்பந்தமான இருத்தியங்களில் தக்க ஆலோசனை சொல்வதில் தன் மந்திரிமார்கள் சமர்த்தர்களாமென்றும் மறுமைக்கு வேண்டிய விஷயங்களில் அவர்களுக்குச் சிறிதும் ஞானமில்லையென்றும் அவர்களுக்குக் கூறினான். உடனே தன் பந்துவிடம் திரும்பிச் சென்று அவனுடைய வேண்டுகோள் உண்மையானதாவென்று சந்தேகங்கொண்டு பிறகு அது வாஸ்தவமேயென்றறிந்து தனக்கு ஆத்தும ஞானத்தை யுணர்த்தும்படி கேசித்துவஜனை வேண்டினான். உண்மை யாதெனில் கேசித்துவஜன் தன் தாயாதியை வென்று அவனை நாட்டினின்றும் துரத்தியதில் தான் செய்யவேண்டிய க்ஷத்திரிய தர்மத்தையே நடத்தினவன்



ஆகிறான். அவன் நாட்டிலேயே யிருந்து ராஜகாரியங்களைத் தினமும் நடத்திக் கொண்டிருந்தாலும் அவன் உண்மையான ஆத்துமஞானி, பக்திசிரேஷ்டனாய் வனத்தில் தவம் செய்து கொண்டிருந்த காண்டிக்யனுக்கு ஆத்தும ஞானத்தை யுணர்த்தத் தக்ககுரு. கேசித்வஜனும், க்ஷத்திரியன் அதிகமாய் விரும்பும் நாட்டைக் காண்டிக்யன் கேளாததுபற்றி ஆச்சரியமடைந்தான். காண்டிக்யன் தன் பந்துவிடத்தில் கூறியவசனமோ விசேஷ பொருளுள்ளது. "'என் நாட்டை ஏன் நான் திரும்பிக் கேட்கவில்லை' யெனின்? இப்பூலோகவாழ்வோ பேதைமையால் உண்டாகும் பேராசையால் விரும்பும் ஒரு பொருள். சமாதான காலங்களில் தன் குடிகளைக் காப்பாற்றி யுத்தத்தில் தன் பகைவரைக் கொல்வதே வீரன் தொழில். என் நாடு எனக்கு பந்தமாயும் விலங்காயுமிருந்ததோடு அதைக் காக்க எனக்கு வலிமையுமில்லாததால் நீ நாட்டைக்கைப்பற்றிக் கொண்டாய். நான் க்ஷத்திரிய வம்சத்தில் பிறந்தவனாதலால் முதலில் நாட்டை விரும்பினேன். அரசாக்ஷியை வேறொருவரிடம் யாசிப்பது க்ஷத்திரியனுக்கும் வீரனுக்கும் ஏற்றதல்லவே. இந்த காரணத்தால் தான் நான் என் ராஜ்ஜியத்தைத் திருப்பிக் கேட்கவில்லை. அவ்வாறு கேட்டிருப்பேனாயின் அது என் மூடத்தனத்தை யன்றோ விளக்கும். மறுபடியும் என் நாட்டைக் கேட்டால் சுய நயத்தையே பாராட்டினவன் ஆவேனன்றோ," என்று காண்டிக்யனும் மொழிந்தான். கேசித்வஜராஜனும் ஆனந்தங்கொண்டு தன் பந்துவினிடத்தில் அதிக நேசங்கொண்டு அவனுக்கு ஆத்தும ஞானத்தைத் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கினான்.

ஆ. பா. போ.

## உஷ்ணமும் சீதளமும் வியாதியின் காரணங்கள்.

நமது தேகசுகத்திற்கு சீதளத்தினாலும் உஷ்ணத்தினாலும் விசேஷமாய் அடிக்கடி இடையூறு நேரிடுகிறபடியால் அவற்றால் கெடுதி நேரிடாதபடி நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். சாதாரணமாய் உஷ்ணத்திற்கு சீதளமும் சீதளத்திற்கு உஷ்ணமும் மாற்றாயிருக்கின்றது.

முதலாக, சூரியகாந்தி நேரே தாக்கா விட்டாலும் தேகம் விசேஷ உஷ்ணத்தாலடிபடுவதால் சூரிய ஜன்னி என்னும் ஓர் வியாதி யுண்டாகின்றது. அவ்வியாதியோ சடுதியில் மரணத்தை யுண்டாக்குகிறது. இவ்வியாதியால் உஷ்ண தேசங்களில் ஜனங்

கள் திரளாய் மரிக்கிறார்கள். களைப்பு, கிறுகிறுப்பு, ஸ்மரணைக் கேடு முதலிய வியாதிகள் மூளையில் விசேஷ உஷ்ணம் தாக்குவதால் உண்டாவதென்று தேர்ந்த வைத்தியர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். நமது சுகத்துக்குப் பகைஞனாகிய இந்த வியாதிக்குத் தப்பவேண்டுமாயின் வேனிற்காலங்களில் காலை 11-மணி முதல் சாயங்காலம் 3-மணிவரையில் வெய்யில் நம்மேல் படும்படி வெளியில்செல்லக்கூடாது. ஈரவஸ்திரத்தையாவது பச்சையிலைகள் நிறைந்த ஒரு கிளையையாவது தலையில் தரித்தால் உஷ்ணத்தின் கொடுமை ஒருவாறு தணியும். அதிக உஷ்ணத்தினால் தலைகிறுகிறுப்பாவது களைப்பாவது உண்டாயின் உடனே வியாதிஸ்தனைக் குளிர்ந்த நிழலுள்ள இடத்துக்குக் கொண்டுபோய் அவன் தலையிலும் கழுத்து மார்பு முதலிய இடங்களிலும் தேகத்தின் உஷ்ணம் 98-டிக்ரீ வரும் வரையில் பனிக்கட்டியால் மெதுவாய்த் தேய்க்கவேண்டும்.

உஷ்ணம் மிதமிஞ்சியிருத்தலால் வயிற்றுக்கழிச்சல் அதிசார பேதி முதலிய வியாதிகள் உண்டாய் குழந்தைகளும் சிறு பிள்ளைகளும் விசேஷமாய் மரிக்கின்றனர்.

விசேஷ உஷ்ணம் போலவே விசேஷ சீதளம் மழைக்காலங்களில் ஆபத்தையுண்டாக்குகின்றது. என்றாலும் துருவத்துக்குச் சமீபம் போகப்போக இதன்கொடுமை அதிகரிக்கின்றது. குளிர்ச்சியினால் காது, மூக்கு, கைவிரல் முதலியவைகளில் ஒரு விதநோவும் காலில் வீக்கமும் உண்டாகின்றது. தேகத்தின் எந்த அங்கமாவது உஷ்ணமாயிருக்க வேண்டுமானால் இரத்தாசயத்தினின்று இரத்தம் அவ்விடத்திற்குப் போகவேண்டும். ஆனதுபற்றி நாம் அதிக குளிர்ச்சியுள்ள இடங்களில நிற்கும்படி நேரிடுகிற காலங்களில்சிறிதேனும் சும்மாயிராமல் சுறுசுறுப்பாய்த் தேகத்தின் ஒவ்வொரு அங்கமும் அசையும்படி உலாவி இரத்தம் ஓடிக்கொண்டேயிருக்கும்படி செய்யவேண்டும். ஆனால் நெடுநேரம் மிக்க சீதளமான இடங்களிலிருந்தால் இரத்தம் உறைந்து அதின் உஷ்ணசக்தியுங்குன்றிய தேகத்தை அசைப்பது கடினமாய் அடக்கமுடியாத நித்திரையுண்டாகிறது.

“உஷ்ணமே பிராணன் சீதளமே மரணம்” என்னும் பழமொழி பின்வரும் சிறு கதையால் விளங்கும்.



டாக்டர் ஸோலண்டர் என்பவர் குளிர்ந்த நாட்டில் பயணப்படுவதற்கு முன்னால் தன் தோழர்களைப் பார்த்து “யார் உட்காருகிறீர்களோ அவர்களுக்கு நித்திரையுண்டாகும். அவ்வாறு தூங்குகிறவர்களுக்கு ஓரே தூக்கந்தான்” என்று சொல்லி நித்திரை செய்ய அதிக ஆவலுண்டாமென்றும் அதைத்தடுக்கவேண்டுமென்றும் எச்சரிக்கை செய்தார். அச்சமயங்களில் நித்திரை செய்வதால் உண்டாகும் கெடுதி அவருக்கு நன்றாய்த் தெரிந்திருந்தபோதிலும் அவரே தூக்கத்தில் விருப்பங்கொண்டவராய்த் தன்னைச்சிறிது படுக்கவிடும்படித் தன் தோழர்களை வேண்டினார். அவர் முன்னமேயே தங்களுக்கு எச்சரிக்கை செய்திருந்ததால் அவரை அவ்வாறு விட அவர்கள் சம்மதிக்கவில்லை. சிறிது நேரத்துக்கெல்லாம் அவர்களால் முடியாது அவரை 2 வேலைக்காரர்களுடன் விட்டுச் சென்றார்கள். 5 நிமிஷத்துக்கெல்லாம் வெகு கஷ்டத்தோடு அவரைஎழுப்பி, நெருப்புண்டாக்கி பிறகு அவரைக் குளிர்காயச் சொன்னார்கள். வேலைக்காரர் இருவரும் மடிந்தவர்களே. அவரும் சிறிதே மரணத்தினின்று தப்பினார். அவர் அங்கங்கள் வெகுநாள் வரையில் சக்தியற்றுக் கிடந்தன.

நமது தேகத்திலுள்ள அசுத்தங்களெல்லாம் விசேஷமாய் வியர்வையால் வெளியில் செல்லுகின்றன. குளிர்ச்சியோ வியர்வையுண்டாகாமல் செய்கிறது, அதனால் தேகத்தின் சருமங்கள் செய்ய வேண்டிய வேலையை சுவாசப்பையும் மற்ற அங்கங்களும் செய்யும்படி நேரிடுகிறது.

குளிர்ச்சி தேகத்தின்பேரில் தாக்குவதால் இரத்தம் இரத்தக்குழாயில் தங்கமாட்டாமல் உள்ளசென்று குளிர்ச்சியைச் சிறிதேனும் உணராதஅங்கங்களுக்குப் போகின்றது. இதனால் அவ்வங்கங்களில் அதிக இரத்தம் தங்கும்படி நேரிடுகின்றது. அவ்வங்கம் சிறிதுபலவீனமாயிருப்பின் உடனே வியாதியுண்டாகிறது. திருஷ்டாந்தமாக, ஒருவனுக்கு சுவாசப்பை, பலவீனமாயிருந்தால் க்ஷயரோகமுண்டாகிறது. குடல்பலவீனமாயிருப்பின் கழிச்சலும் அதிசாரபேதியும் உண்டாகிறது, இவையெல்லாங் குளிர்ச்சியினாலுண்டாவதன்றோ?

1. நித்திரை செய்யும்போதும்,

2. விசேஷமாய் உழைத்தபின்னாவது வேறு காரணங்களினாலாவது வியர்வையுண்டாயிருக்கும்போதும்,

3. வென்னீரில் ஸ்நாநம் செய்தபிறகும்,

குளிர்ச்சி தேகத்தின்பேரில் தாக்கப்படாது. இவ்விதிகளைக் கவனியாமையினாலேயே நம்மவரில் அநேகருக்குக் குளிரும் இருமலும் உண்டாகின்றன.

ஏதாவது ஒரு அங்கத்தில்மாத்திரம் குளிர்ச்சிதாக்குவதாயின் அது கெடுதியேயாம். கழுத்தின் பின்புறத்தில் குளிர் காற்று படுவதால் தும்மலும் தொண்டைநோவும் உண்டாகின்றன. ஈரத்துணியுடன் நெடுநேரமிருத்தல் தேகத்துக்குத் தீங்கையுண்டுபண்ணும். நம்மவரில், விசேஷமாய் ஸ்திரீகளுக்குள் இவ்வழக்கம் அதிகமாயிருக்கிறது; ஈரவஸ்திரங்களுடன் விசேஷநேரமிராது நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

## வைகுண்டாச்சாரி கதை.

வடக்கே கோதாவரி நதிக்கரையிலுள்ள ஒரு சிறுகிராமத்தில் ஓர் வைணவ பிராமணனிருந்தான். அவன் இயற்கையிலேயே ஏழையாதலால், சாப்பாட்டுக்கு வேறுவழியில்லாமல், தினந்தோறுங் காலையிலெழுந்து, ஸ்நானஞ் செய்து, மடியுடுத்தி, துவாதசநாமஞ் சார்த்திக்கொண்டு, மிகவும் தெய்வபக்தியுள்ளவனைப்போற்காட்டி பிச்சையெடுப்பது வழக்கம். அவ்வூர் ஓர் சிறு குக்கிராமமாகையால், அக்கிராமவாசிகளெல்லாரும் நிரட்சரகுட்சிகளாயிருந்தார்கள். இப்பிராமணன் அவர்களுக்கு இருட்டறையில் மின்மினிப்பூச்சியைப்போல் பிரகாசித்துக்கொண்டு, சோதிடம் முதலானவைகளும் சொல்லிவந்தான். இவர் ஜோசியம் சொல்லுவதில், தீமையானகாரியங்கள் இல்லாமல் எப்பொழுதும் எல்லோருக்கும் நன்மையான காரியங்களையே சொல்லிவந்தபடியால், இவரிடத்தில் அவ்வூர் ஜனங்களுக்கு மிகவும் பற்றுதல் உண்டாயிற்று. அவர் எதைச்சொன்னபோதிலும் நம்ப ஆரம்பித்தார்கள்.

இதையறிந்த அப்பிராமணன் “ காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் ” என்னும் பழமொழிப்படி, இனி இவர்களைவஞ்சித்துப் பணஞ் சேகரிக்கவேண்டுமென்று தீர்மானித்து, ஒருநாட்காலையிலெழுந்து, எப்போதும் போல் ஸ்நான



பானஞ்செய்து, நாமஞ்சார்த்திக்கொண்டு, அவ்வூர் நாட்டாமைக்காரனிடஞ் சென்று, “ ஐயா, நாட்டாமைக்காரரே, நான் சென்ற இராத்திரி ஒருகாட்சி கண்டேன். அதை இவ்வூரார் எல்லாருடைய முன்னிலையிலும் வெளியிடவேண்டும். ஆகையால், அம்பலச்சாவடியில் இன்றுகாலமே ஒன்பது அல்லது பத்துநாழிகைக்கு எல்லோரும்வந்து கூடவேண்டுமென்று பறையறைவியும் ” என்றார். அதைக்கேட்ட நாட்டாமைக்காரன் ஆச்சாரியரிடத்தில் அதிக விசுவாசமுள்ளவனாகையால், உடனே ஊரெங்குந்தெரிவித்து, அம்பலச்சாவடியிற் கூடும்படி எல்லோருக்கும் கட்டளையிட்டான்.

அப்படியே, எல்லோரும் குறித்தநேரத்தில் அம்பலச்சாவடியில்வந்து கூடி, அப்பிராமணன்வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்பிராமணனும் மிகவும் ஆடம்பரத்தோடு வைதீகவேஷம் போட்டுக்கொண்டு, அம்பலச்சாவடிக்குப்போய், அங்கே அவருக்காகப் போடப்பட்டிருந்த ஆசனத்தில் உட்கார்ந்தார். எல்லோரும் என்னசொல்லப்போகிறாரோவென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அந்தப்பிராமணன் அவர்களைப் பார்த்து, “ ஓ! சனங்களே, உங்களுக்கும் உங்கள் சந்ததியாருக்கும் இனி நரகபயமில்லை. நீங்கள் என்னையாதரித்துவந்தபடியால், உங்களுக்கு நன்மையுண்டாகும்படி இதுகாறும் ஸ்ரீவைகுண்டபதியைத் தியானம்பண்ணிக்கொண்டு வந்தேன். அவர் நேற்றிரவில் எனக்குப் பிரத்தியட்சமாகி என்னை வைகுண்டத்திற்கு அழைத்துக்கொண்டுபோய், எனக்கு வைகுண்டாச்சாரி என்னும் பெயரைக்கொடுத்து, ‘ நீ மிகவும் யோக்கியன். உன்னால் அவ்வூரரெல்லோரும் வைகுண்டபதவியடைவதற்கு ஏதுவாயிற்று. அவ்வூரில் மரணமடைகிற ஒவ்வொருவருக்கும், உன்பிழைப்பிற்காக, அவ்வைந்துபொன் வாங்கிக்கொண்டு, ஒவ்வொரு சீட்டுக்கொடுத்தனுப்பு. நான் அவர்களுக்கு வைகுண்டபதவி அளிக்கிறேன் ’ என்று சொல்லி என்னை மறுபடியும் இங்கே அனுப்பிவிட்டார். நான் கடவுளின் மகாத்மத்தையும், தயாளத்தையும் என்ன சொல்வேன்! வைகுண்டகாட்சியை மனுஷனாலும் கேட்கப்போமோ! நீங்கள் அதிர்ஷ்டவான்கள் ; புண்ணியம்பெற்றீர்கள் ” எனப் பலவாறாகப் புகழ்ந்து, சன்மார்க்க வசனங்களை இடைக்கிடையே உபயோகித்து வசனிக்க, ஊரார் எல்லோரும் அதை நம்பி, அன்றுமுதல் அவரைத்தெய்வமாகப்பாவித்து, அவருக்குவேண்டியவைகளெல்லாம் கொடுத்து ஆதரித்து, யாராகிலும் இறந்துபோனால், ஐந்துபொன் எடுத்துக்கொண்டுபோய் அவருக்குக் கொடுத்து, அவரிடத்திலிருந்து வைகுண்டத்திற்கு ஒரு சீட்டுவாங்கி பிணத்தின் கையிற் கட்டிக் கொளுத்திவிடுவது வழக்கம்.

இப்படி அனேகவருஷங்கள் செல்ல வைகுண்டாச்சாரியும் திரண்ட ஆஸ்திவந்தனாகி பெரிய மெத்தைவீடுமுதலானதுங் கட்டிவிட்டார். அவருக்கு வயதும் ஐம்பதுக்குமேலாயிற்று. இப்படியிருக்குநாளில் ஒருநாள், அவ்வூரில்

ஓர் எளியமனிதன் இறந்துவிட்டான். அவனிடத்தில் ஐந்துபொன்னுக்கு ஐவேசு இல்லை. அவ்வூரார் மிகப் பரோபகார சிந்தையுடையவர்களாதலால், எல்லோரும் வரிவைத்துக்கொடுத்து அவ்வெளியமனிதனை வைகுண்டத்திற்கனுப்புகிறதென்று தீர்மானித்து, பணம் தண்டிக்கொண்டுவரும்பொழுது, அவ்வூர்ச் சத்திரத்தில்வந்திறங்கியிருந்த ஓர் வியாபாரியையும் வரிகொடுக்கும்படி கேட்டார்கள். அவன் வரி என்னத்திற்கென்று அவர்களை வினவ, சங்கதியைச் சொன்னார்கள். அவன் மிகவும் ஆச்சரியப்பட்டு, நல்லது என்று சம்மதித்து வரியைக்கொடுத்துவிட்டு, இவர்கள் அறிவீனத்தைக்குறித்து விசனப்பட்டு, அப்பிராமணன்தொழிலை நிறுத்தவேண்டுமென்று தனக்குள்ளே தீர்மானித்துக்கொண்டான். ஊராரும் பணத்தைக்கொண்டுபோய் ஆச்சாரியாருக்குச் செலுத்தி சீட்டுவாங்கி வழக்கம்போலவைத்துக் கொளுத்தி விட்டார்கள்.

வியாபாரியோ, தன்தீர்மானத்தை நிறைவேற்ற மறுநாள் அதிகாலையிலெழுந்து, ஒரு ஓலையையெடுத்து, அதில் "சிறுகாவூரிலிருக்கும் வைகுண்டாச்சாரிக்கு வைகுண்டபதியாகிய நாம் எழுதுவதென்னவென்றால், நீர் தாரதம்மியமில்லாமல், எல்லோருக்கும் சீட்டுக்கொடுத்தனுப்பிவிடுகிறீர். உமது தாட்சணியத்திற்காக நாம் எல்லோருக்கும் இடங்கொடுப்பதால் வைகுண்டத்தில் இடம் இல்லாமற்போய்விடுகிறது. நரகம் காலியாய்க்கிடக்கிறது. இந்த விஷயத்தைப்பற்றியும் இன்னும் வேறுவிஷயத்தைப்பற்றியும் உம்மை முகதாவிற்கண்டு பேசவேண்டியதிருப்பதால், நீர் இச்சீட்டுகண்டதக்ஷணமே புறப்பட்டு வரவேண்டியது. இப்படிக்கு வைகுண்டத்தில் வீற்றிருக்கும் வைகுண்டபதி" என்று எழுதி முத்திரித்து "பூலோகத்தில் சிறுகாவூர் வைகுண்டாச்சாரிக்குக் கொடுப்பது. அனுப்பு வைகுண்டம்" என்று மேல்விலாசம் எழுதி மஞ்சள்பூசி, சுடுகாட்டிற்குப்போய், முன்தினம் பிணத்தைச்சுட்ட சாம்பலுக்குள் புதைத்துவைத்து வந்துவிட்டான்.

பின்பு எல்லோரோடும்கூடி சஞ்சயனம் * செய்யும்படி சுடுகாட்டிற்குத் தானும்போனான். அங்கே மற்றவர்கள் அப்பிணத்தின் எலும்பைப் பொறுக்க சாம்பலைத்திண்டியபொழுது இவ்வோலையகப்பட்டது. அது என்னவென்று பார்த்தபொழுது வைகுண்டாச்சாரிக்கு விலாசம் எழுதியிருப்பதைப்பார்த்து, உடனே அதை எடுத்துக்கொண்டு அவர்வீட்டிற்கு ஓடி சங்கதியை அவருக்குத் தெரிவிக்க, அவர், ஓகோ, ஏதோமோசம் நேரிட்டதென்று தனக்குள்ளே நினைத்து, "வைகுண்டத்திலிருந்து இப்பொழுது எனக்குக் கடிதம்வரவேண்டிய அவசியம் இல்லையே" என்று சொல்லி விழித்தார். அதற்கு அருகிலிருந்த அந்த வியாபாரி "ஐயா, நீர் எங்களைக் கைவிடப்பார்க்கிறீர். உம்

---

* பால் தெளித்தல். இது இந்துக்களுக்குள் பிரேதத்தைத் தகனஞ்செய்த மறுநாள் செய்யும் சடங்கு.



முடைய ஓலை அடிக்கடி வைகுண்டத்திற்குப் போகும்போது, என் வைகுண்டத்திலிருந்து உமக்கு இப்பொழுது ஓலைவராது? அங்கே என்னகாரியம் நேரிட்டிருக்கிறதோ தெரியவில்லை. ஓலையைப் பாரும். உமக்கு வயதுமுதிர்ந்ததினால் கண்கள் சரியாகத் தெரியாவிட்டாலும் நானாகிலும் வாசிக்கிறேன்" என்று சொல்லி ஓலையைவாங்கி முத்திரையையுடைத்து வாசித்தான். எல்லோரும்கேட்டு "ஐயா, புண்ணியாத்துமாவே, நீர் உடனேபோய், வைகுண்டபதியைக்கண்டு காரியத்தை முடிவுசெய்துகொண்டு வரவேண்டும். நீர் அப்படி உடனே செய்யாவிட்டால் அவருக்குக் கோபம் பிறந்து இனி நீர் கொடுக்கும் ஓலையை மதிக்காமல் எங்களை நரகத்தில் தள்ளிவிடுவார். தாமதிக்காமல் உடனே புறப்படும், உடனே புறப்படும்" என்று துரிதப்படுத்த, ஆச்சாரியார் விழிக்க, ஊராரெல்லாரும் ஒருங்குசேர்ந்து அவரைக்கையைப்பற்றி யிழுத்துக்கொண்டுபோய் சுடலையில் வைத்து எரித்துவிட்டார்கள். வைகுண்டாச்சாரியும் யானை தன் தலையில் தானே மண்ணைவாரிப் போட்டுக் கொண்டதுபோல் தன்னுடைய மோசக்குணத்தினாலே மரணமடைந்தான். பின்பு அவ்வியாபாரி அவர்களுக்குப் புத்தி போதித்து அவ்வைகுண்டாச்சாரி ஒரு ஆஷாடபூதியென்று அறிவித்து தன் ஊர்போய்ச்சேர்ந்தான்.

இக்கதையால், சுயப்பிரயோசனத்தை நாடி பிறரை வஞ்சிக்க எத்தனிக்கிறவர்களுடைய வார்த்தையில் நம்பிக்கைவைக்கலாகாது என்றும், அவ்வஞ்சகக்காரர்களுக்கும் தாங்கள் பிறருக்குச்செய்கிற மோசத்தினாலேயே முடிவு நேரிடுமென்றுந் தெரியவருகிறது.

மேலும் நம்மவர்களுக்குள்ளும் இதர ஜாதியாருக்குள்ளும் எத்தனை வைகுண்டாச்சாரிகளிருக்கிறார்கள்! நாம் நம்முடைய சுயபுத்தியை உபயோகப்படுத்தாமல், அவர்கள் மோசக்கருத்துடன் சொல்லும் பெரும் புளுகுகளையெல்லாம் வேதவாக்கியமென்று விழுங்கி, கடைசியில் பொருள் நஷ்டப்படுவதுமல்லாமல் எவ்வளவு அவர்களாலும் மற்றவர்களாலும் இகழப்படுகிறோம்!! இவைகளையெல்லாம் நாம் யோசித்து அறிவோமாக.

—:0:—

R. V. Press:—MADRAS.

## வர்த்தமானக் குறிப்பு.

இந்தியாவின்பஞ்சம் :—பஞ்சத்தின் கொடுமை சகியாது வருந்தி இந்தியாவின் கவர்ண்மெண்டாரால் தற்காலத்தில் ஆதரிக்கப்படுபவர்கள் சுமார் 3-லட்சம் ஜனங்கள்.

---

பஞ்சுவேலை 1851௵ முதல் இந்தியாவில் செய்கிறார்கள். 1899-1900 வருஷத்தில் 186 பஞ்சு இயந்திரங்கள் இருந்தன. இவைகளில் 5-இயந்திரங்கள் வேலை செய்யாதிருந்தன. மற்றவைகளில் 104 இயந்திரங்கள் நூல் மாத்திரம் நூற்கின்றன. 79-நூல் நூற்றல், நெசவு தொழில் ஆகிய இரு தொழிலும் செய்கின்றன. அவைகளில் வேலை செய்பவர்களின் மொத்தம் 1,63,241 பேர். அவர்கள் கைத்தொழில்களில் போட்டிருக்கும் முதல் 1,10,00,000 பவுன், சென்ற 2-வருஷங்களுள் புதிதாய் 23 இயந்திரசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன.

---

எப்பிரல்௴ 12௳ யைக் கடைசியாகவுடைய வாரத்தில் பெங்களூர் பட்டணத்தில் ப்ளேக் வியாதியால் மரணமடைந்தவர்கள் தொகை 7. பெங்களூர் ஸ்டேஷனில் 9. கோலாரில் 23-பேர். மைசூரில் ஒன்றுமில்லையாம்.

---

மகந்து கோலேகேசு :—இந்த கேசில் குற்றவாளிகளான மங்கலதாசு யர்ரவாடு இருவரும் செய்திருக்கும் ஹைகோர்டு அப்பீலில் நார்ட்டன் துரை மங்கலதாசுக்காகவும் பார்டன் துரை யர்ரவாடுக்காகவும் வாதிப்பார்.

---

சென்னை செண்ட்றல் ஸ்டேஷனில் எப்ரிரல்௴ 18௳ யன்று மூன்[illegible] வகுப்பு பிரயாணிகள் தங்குமிடம், ஸ்டேஷன் மாஸ்டர் அறை, தந்[illegible] ஆபீசு, வாசகசாலை முதலிய விடங்களில் வாயுவின் சக்தியால் விளக்கேற்[illegible] வெளிச்சம் உண்டாக்கினார்கள். இது வெகு நன்றாயிருந்ததாம். இனி இ[illegible]வாறே எப்பொழுதும் விளக்கேற்றுவார்கள் போலும்.

---

R. V. Press :—Madras.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 30 SEP 1901 MADRAS


# ஜனப்பிரியன்.

மாதம் ஒருமுறை பிரசுரம் செய்யப்படும்.

புஸ்தகம். 1] சென்னை 1901௵ ஏப்ரல்௴ [இலக்கம். 10


## * இராமாயண ஸங்கிரகம்.

"அஞ்சிலே யொன்று பெற்றா னஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்றா றாக வாரியர்க் காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற வணங்கைக் கண்டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தா னவனம்மை யளித்துக் காப்பான்."

### II-ஆம் அத்தியாயம்.

### அயோத்தியா காண்டம்.

(266b-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கூனியாகிய யமனும் இராமனைத் தேடிப் போவாரோடும் சேர்ந்து போகிறதைப் பார்த்த சத்துருக்கனன் கனன்றெழுந்து அவளை வாரி ஆகாயத்தில் வீச யத்தனித்தான். பரதன் அவனைத் தடுத்து, "அப்பா சத்துருக்கனா! பெரியவர்கள் வழக்கங்கெட் முடித்த பாபியைச் சின்னாபின்னமாகச் செய்தால் நானும் சற்று திருப்தியடைவேன். அப்படிச் செய்தால் என் கர்த்தன் என்னைக் கோபிப்பா னென்பதற்கல்லவா பயந்து நிற்கின்றேன். தாய் என் பதனால் அவளை ஒன்றுஞ் செய்யாது விடவில்லை. முடிவற்ற விப

---

* இதிலாங்காங்கு எடுத்தாளப்பட்ட செய்யுள்களின் பொருளறிந் தானந்தங் கொள்ளக் கூடாத சிறுவர் சிறுமியர் முதலாயினோர், செய்யுளைக் கவனியாது வசனத்தையே வாசித்துக் கதையினை யறியலாகும்.

ரீதமான துயரத்திற் கேதுவாகிய கூனியைக் கோபிப்போமென்றாலும் நமதையன் கோபித்துக் கொள்வான். நாம் நம்வழியே போவோம் வா" என்றான். இரவில் நித்திரை வேளையிலும் புற்றரையிற் படுத்துறங்குவானாயினான் பரதன். அவனுடைய சேனை கங்கைக் கரையில் வந்து சேர்ந்ததைக் குகன் பார்த்தான். * வைவஸ்வதன் எனத் தகும் குகனுக்கு இந்தச் சேனை வெள்ளம் தூசு போற்றோன்றியது. இவனோ மகாவீரன். வீக்கியகத்தியன், கடித்த வுதட்டினன், வெடித்த சொல்லினன், தீப்பொறி பறக்குங் கண்ணினன், அடித்த வுடுக்கையன்; இவன் அந்தச் சேனை வெள்ளத்தைப் பார்த்தவுடன் பரதன் இராமனோடு ஒருவேளை சண்டை செய்ய வந்திருக்கலா மென்றூகித்துத் தன் சேனையையெல்லா மொருங்கு சேர்த்துக் கங்கைக்குத் தென்கரையில் வந்து தன் வேடுவச் சேனையை நோக்கி, "தாயார் கலகத்தினால் படையெடுத்துவந்த பரதன் சேனையைக் கொல்வதற் கேற்பட்டேன், அயோத்திநகர் அரசுரிமையை என் பிராணசிநேகிதருக்குக் கொடுக்கும் பொருட்டு நீங்களும் உங்களால் ஆனவரைக்கும் முனைந்து போர் புரியுங்கள், என்னுயிர்க்குக் கர்த்தன் ஆள்வதற்கு விடாது மோசத்தால் அரசியலைக் கவர்ந்த மன்னரும் வந்தார்கள். என்னுடைய வில்லுக்கு மம்புக்கும் பிழைத்துப் போவார்களாகில் என்னை நாய்க்குகனென்றல்லவா சொல்வார்கள்.

"அஞ்சன வண்ணனென் னாருயிர் நாயக னாளாமே
வஞ்சனை யாலரசெய்திய மன்னரும் வந்தாரே
செஞ்சர மென்பன தீயுமிழ் கின்றன செல்லாவோ
உஞ்சிலர் போய்விடி னாய்க்குக னென்றெனை யேசாரோ."

இப்பரதன் தான் சற்றேனும் யோசனை செய்தானில்லை, தன் தமயனென்றும் பார்த்தானில்லை, இவன் இந்த ஆற்றைத்தாண்ட விடுவேனோ? இவன் உயிரை வைப்பேனோ? என்னண்பன் காட்டில் வாசஞ் செய்ய இவன் உலகாள்வதோ? இராமனுயிர் போவதற்கு முன்னமே நம்முயிர் போவது நல்லதல்லவா?" இப்படியெல்லாம் சொல்லி அதிக உக்கிரத்துடனிற்கும் குகனைப் பார்த்த சுமந்திரன் பரதனிடம் போய், "ஐய! கங்கையினிரு கரைக்கும் தலைவனான குகனென்பவனொருவனிருக்கின்றான். அவன் குணசீலன். இராமனுடைய உயிர்த்தோழன்.

* யமன்.



"கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற் குயிர்த்துணைவ னுயர்தோளான்
வெங்கரியி னேறனையான் விற்பிடித்த வேலையினான்
கொங்கலரு நறுந்தண்டார்க் குகனென்னுங் குறியுடையான்."

உம்மைப்பார்க்கக் கருதி அக்கரையில் வந்து எல்லார்க்கு முன் நிற்கின்றான்" என்றான். இதைக்கேட்டதும் அதிகசந்தோஷமடைந்து, அரசன் ஏற்றுக் கொண்ட நண்பனாகில் என்னை அவன் வந்து பார்ப்பதற்குமுந்தி, நானே அவனைப் போய்ப் பார்ப்பேன்" என்றெழுந்து தன் தம்பியையு மழைத்துக் கொண்டு மற்றவர்களைப் பின் வரச்சொல்லி தான் முன்சென்று ஆற்றங்கரையில் நின்றான். அப்படி நின்றவனுடைய தேகத்தன்மையைப் பார்த்தான், திடுக்கிட்டு நின்றான். மான்றோல் மரவுரிதரித்த வுடம்பும் சந்தோஷமற்ற முகமும் நைந்தமனமு முடையவனைக் கண்டு கையிலிருந்த வில்லும் வீழ, ஸ்தம்பித்து நின்றான், பிறகு தெளிந்து "எதிரிலிருப்பவன் இராமனைப் போன்றொளிர்கின்றான், பக்கத்திலிருப்பவன் இலக்குவனுக்குச் சமானமாயிருக்கின்றான். இருவரும் தவவேடம் பூண்டிருக்கின்றார்கள், என் கர்த்தனுக்குப் பின்றோன்றியவர்களும் பிழை யியற்றுவார்களோ? பார்ப்பதற்குக் களங்கமற்றவனா யிருக்கிறான். குணசிரோட்டன் போற்றோன்றுகின்றான்.

"நம்பியுமென் னையகனை யொக்கின்றா னயனின்றான்
தம்பியையு மொக்கின்றான் தவவேடந் தலைநின்றான்
துன்பமொரு முடிவில்லைத் திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தா ரிழைப்பரோ பிழைப்பென்றான்."

அவனருகிற்சென்று அவன் மனமெல்லாம் ஆய்ந்தறிந்து வருகின்றேன், வழியிற்காத்திருங்க" ளென்று சேனைக்குச் சொல்லிவிட்டு ஒரு மரக்கலத்திலேறி தான்றனியாய் அக்கரைக்குப்போய் சதாகாலமும் இராமனையே நினைத்து ஸ்மரணைசெய்து கொண்டிருக்கும் பரதனைக் கண்டவளவில் அவனும் இவனை வணங்கித் தழுவிக் கொண்டான்.

இவன் பரதனைப் பார்த்து வந்ததெதற்கென வினவ "உலகு முழுதுங்காத்த வென்றந்தை முன்னோர்கள் வழக்கத்தினின்றும் பிறழ்ந்து விட்டான். அதைவிலக்கி, அரசனாகிய இராமனை திருப்பி நகர்க்குக்கொண்டு போகும் வண்ணம் வந்தே" னென்றான். இதைக்கேட்டதும் துக்கமொருபக்கமும் சந்தோஷமொரு பக்கமு முண்டாக பரதனுடைய பாதத்தைப் பற்றிக்கொண்டு "மாதாவின் சொற்கியைந்து தகப்பன் கொடுத்த இராஜ்ஜியத்தைக் கொடியதென்று விலக்கி இக்கோலத்தோடு வந்த வுன்புகழைப் பார்த்தால் ஆயிரமிராமர் சேர்ந்தாலும் உனக்குச் சமானமாவார்களோ!

"தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணி தன்னைத்
தீயவை யென்ன நீத்துச் சிந்தனை முகத்திற் றேக்கிப்
போயினை யென்ற போழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிர மிராமர் நின்கே ழாவரோ தெரியி லம்மா."

பலமானபுஜமுள்ளவனே! சூரியனுடையகிரணமாகியபிரகாசம், மற்றக்காந்தியையெல்லாம் விலக்குவதுபோல் பெருங் கியாதிவகித்த உன் முன்னோருடைய கீர்த்தி உன் புகழுக்குப் பிந்துறும்படிசெய்தாய்" என்றும் இன்னும் பலவாறாகவுந்துதித்தான். பரதன் குகனை நோக்கி "அப்பா! எம்பிரான் இருந்தவிடமெது" என, அவனங்கிருந்த பர்ணசாலையைக்காட்ட அதைக்கண்டு வருத்தமுறலும், இலக்குவனிருந்த விடம் எது வென்னலும், அதற்கு அவன் ஸ்ரீராமரும் சீதாபிராட்டியரும் தூங்கிக்கொண்டிருக்கையில் விற்றாங்கிய கையோடும், புகையெழு மூச்சோடும், ஜலம்பெருகுகண்ணோடும், இரவு கழியும் வரையில் துயின்றிலனாய் இப்பர்ணசாலைக்குப் பக்கத்தில் இலக்குவன் நின்று கொண்டிருப்பது வழக்கமென்பதைக் கேட்ட பரதன் "இராமனுக்குத் தம்பிகளென்று பிறந்தவர்களில் அவற்கு நான் எப்பொழுதும் முடிவில்லாத துக்கத்துக்குக் காரணமானேன். இலக்குவனோ அதை நீக்க நின்றா" னென்றான்.

பரதன் குகனைப்பார்த்து "வேடுவத்தலைவ! இக்கரையினின்றும் அக்கரைக்குக் கொண்டுபோய்விடுவையாகில் என் தமயனிடம் கொண்டுபோய்ச் சேர்த்தல் போலாகும்" என்றதும் குகன் அருகிலிருந்தவர்களை அழைத்துத் "தோணிகளைக் கொணர்க" வெனவும்



பற் பலவிதமான தோணிகளும் வந்து சேர்ந்தன. கங்கையிலும் மற்றெதற்கும் இடமின்றிக்கலங்கள் நிறைந்தன.

"நன்றெனப் புளினர் வேந்தன் நண்ணினன் றமரை நாவாய்
சென்றினித் தருதி ரென்ன வந்தன சிவன்சேர் வெள்ளிக்
குன்றெனக் குனிக்கு மம்பொற் குவடெனக் குபேரன் மானம்
ஒன்றென நாணிப் பல்வே றுருவுகொண் டனைய வான."

அன்னமும் நாணும் நடையுடைய தோணிகள் பரவிய கங்கையினிருமருங்கினும் ஜனங்களும் மற்றவைகளும் ஏற்றியிறக்கப்படுவது, தேவர்களுடைய விமானத்தில் புண்ணிய பாபமாகிய வினைகளானவை மனிதர்களைப் பூமியிலிருந்து சுவர்கத்திலும் சுவர்கத்திலிருந்து பூமியிலும் விடுவது போலொத்தது.

"நங்கையர் நடையி னன்ன நாணுறு செலவின் நாவாய்
கங்கையு மிடமி லாமை மிடைந்தன கலந்த வெங்கும்
அங்கொடிங் கிழித்தி யேற்று மமைதி யினமரர் வையத்
திங்கொடங் கிழித்தி யேற்று மிருவினை யென்ன லான."

தன்சேனை முழுதும் அக்கரையைச் சேர்ந்தபின்னர் ஒரு தோணியில் தானும் தன் தம்பியும் தாயர் மூவரும் சுமந்திரனும் நண்பரிற் சிறந்த குகனும் ஏறிச் சென்றார்கள்.

"தன்னன தம்பியுந் தாயர் மூவரும்
சொன்ன தேர்வலவனுந் தூய தோழனும்
துன்னின ரேறலுந் துழாதுடுப் பெனும்
நன்னயக் காலினா னடத்தன் மேயினான்"

உறவினரும் மற்றவரும் தொழும்படியான கோசலையைப் பார்த்து இவர் யாரென்று குகன்கேட்க, "அரசர்க்கரசராயிருந்த தசரதசக்ரவர்த்தியின் முதல் பத்னி, மூன்றுலகும் படைத்த பிரமனை நாபீகமலத்துத் தோற்றுவித்த திருமாலாகும் இராகவனைப் பெற்றதால் அடையவேண்டிய சுகத்தை, நான் பிறந்ததால் இழந்த பாக்கியவதி" யென்றான் பரதன்.

"சுற்றத்தார் தேவரொடுந் தொழநின்ற கோசலையைத் தொழுது நோக்கி
வெற்றித்தார்க் குரிசிலிவ ராரென்று குகன்வினவ வேந்தர் வைகும்
முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகு மீன்றானை முன்னீன் றானை [றான்"
பெற்றத்தாற் பெருஞ்செல்வம் யான்பிறத்த லாற்றுறந்த பெரியா ளென்

இப்படிச் சொல்லலும் குகன் அவள் காலில் விழுந்து அழுகிறதைக்கண்டு கன்றுபிரிந்த தலையீற்றுப் பசுப்போல் துன்புறுகின்ற கோசலையானவள் இவன் யாரென்ன,

"என்றலுமே யடியின்மிசை நெடிதுவீழ்ந் தழுவானை யிவன் யாரென்று
கன்றுபிரி காராவின் றுயருடைய கொடிவினவக் கழற்கால் மைந்தன்
இன்றுணைவ னிராகவனுக் கிலக்குவற்கு மிளையவற்கு மெனக்கு மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோட் குகனென்பா னிந்நின்ற குரிசி லென்றான்."

அதற்குப் பரதன் "இராகவனுக்கு உயிர்த்தோழன், இலக்ஷ்மணனுக்கும் சத்துருக்கனனுக்கும் எனக்கும் மூத்தவன், இவ்வரசன் குகன் என்னும் பெயருடையான்" என்றான். அதற்கவள் அழுகின்றவர்களைப் பார்த்து "குழந்தைகாள்! துக்கிக்காதீர்கள். நீங்களனைவரும் சேர்ந்து இப்பூமியைக் காருங்கள்" என்றாசீர்வதித்தனள்.

"நைவீரலீர் மைந்தீ ரினித்துயரா லுடிறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவு நலமாயிற் றன்றே விலங்கற் றிண்டோள்
கைவீரக் களிறனைய காளையிவன் றன்னோடுங் கலந்து நீர்கள்
ஐவீரு மொருவீரா யகலிடத்தை நெடுங்கால மளித்தி ரென்றாள்."

தருமமே ஒருருவெடுத்தாற் போன்று அவள் பக்கலில் நின்றவளைப் பார்த்து இவர்யாரெனக் குகன் வினவ, 'தருமம்பிசகாமல் தன் வாக்கை பூமியுள்ளவரையில் நிறுத்திக் காலஞ்சென்ற தசரத மகாராசாவினிளந்தேவி. இராமனுக்குப் பின் பிறந்தவனு மிருக்கின்றானென்று சொல்லும்படிப் பிரியாமலிருப்பவனாகிய இலக்குவனைப் பெற்றவ' ளென்றான்.

"அறந்தானே யென்கின்ற வயனின்றா டனைநோக்கி யைய வன்பின்
நிறைந்தாளை யுரையென்ன நெறிதிறம்பாத் தன்மெய்யை நிற்ப தாக்கி
இறந்தான்றன் னிளந்தேவி யாவர்க்குந் தொழுகுலமா மிராமன் பின்பு
பிறந்தானு முளனென்னப் பிரியாதான் றனைப்பயந்த பெரியா ளென்றான்."

தர்மத்தைப்போக்கியும், தன் புருஷனிறப்பதற்குக் காரணமாகியும், தன்பிள்ளை துக்க சாகரத்தில் மூழ்கவும், கிருபாசமுத்திரமாகிய விராமன் காட்டிற்கேகவும், திருமாலன்றளந்த உலகனைத்தும் தன் மனதில்நினைத்து மனக்கொடுமையால் எவற்றையும் அளந்தவளை யாரெனக் குகன் வினவலும் பரதன் "ஐய! அவள் பாபமென்னும்



பாம்புக்கு பாலூட்டி வளர்ப்பவள், நாங்கள்படும் துன்பமனைத்திற்கும் காரணமானவள், உலகிலுள்ள ஜீவன்களெல்லாம் நிலைகலங்கி உயிரற்ற உடல்போன்று தோன்றும் இந்த ஜகத்தில் துக்கமற்றிருப்பவள் இவளொருத்தி மாத்திரந்தான். பாவியினுடைய வயிற்றில் ஜனித்தேன் யான்? பார்க்கும்போதே இவளின்னாரென்பது தெரியவில்லையா! இவள்தானய்யா என்னையீன்றவள்" என்றான்.

"சூடுமயானத் திடைதன் றுணையேகத் தோன்றறுயர்க் கடலி னேகக்
கடுமையார் கானகத்துக் கருணையார் கவியேகக் கழற்கால் மாயன்
நெடுமையா லன்றளந்த வுலகெல்லாந் தன்மனத்தே நினைந்து செய்யும்
கொடுமையா ளளந்தாளை யாரிவரென் றுரையென்னக் குரிசில் கூறும்."

"படரொலாம் படைத்தாளைப் பழிவளர்க்குஞ் செவிலியைத்தன் பாழ்த்த
குடரிலே நெடுங்காலங் கிடந்தேற்கு வுயிர்ப்பாரங் குறைந்து தேய[பாவிக்
உடரெலா முயிரிலா வெனத்தோன்று முலகத்தே யொருத்தி யன்றே
இடரிலா முகத்தாளை யறிந்திலையே யிந்நின்றா ளென்னை யீன்றாள்."

இதைக்கேட்டு அவ்விரக்க மில்லாளையும் குகன் வணங்கி நின்றான். அப்போது தோணியும் இக்கரைவந்துசேர்ந்தது. தோணியினின்றுமிறங்கின தாய்மாரைச் சிவிகையிலேற்றித் தானும் தன்றம்பியும் கால் நடையாய் மேற்சென்றார்கள். குகனுமவர்களுடன் போயினான். பலகாவதஞ் சென்ற பின்னர் பரத்துவாஜர் ஆச்சிரமத்தை யடைந்தார்கள். அவரை இவர்கள் வணங்கி நிற்றலும் அவர் இவர்களுக்கு அளவிறந்த ஆசீர்வாதம்செய்தார். அவர்பரதனைப்பார்த்து "அப்பா பரதா! மகுடம் புனைந்து ராஜ்ஜிய பாரம் செய்யாது ஏனிக்கோலத்தோடும் இங்குவந்தனை?" என்னலும், இவரே இவ்வாறு சொன்னதற்குப் பரதன் கோபங்கொண்டு "தாங்கள் இவ்வாறு சொல்லலாமா? வரன்முறைத் தவறி யான் இராஜ்ஜியபாரம் செய்யலாமா? இராமன் திரும்பிவந்து பூமியைக்காக்காவிடில் யானு மவனுடன்காட்டிலிருந்துவிடுவேன்" என்றான். இதைக்கேட்ட முனிவருடையவுள்ளம் பூரித்தது. அவர் இவர்களைத்தன் பர்ணக சாலைக்குக் கொண்டுபோய் அதிக உபசாரம்செய்தார். பரதனவற்றை யதிகமாய்க் கவனியாமல் தான் கிழங்கும் காயும் அருந்தி அந்தத் தினமும் மண்ணிற் படுத்துக்காலம்கழித்தான். மறுநாளவ்விடம் விட்டுப்பெ

யர்ந்து சென்று இடையிலுள்ள பாலையைச்சேர்ந்தார்கள். பரதனுடைய பாதம் பட்ட மாத்திரத்தில்

"விழுந்த துளியந்தரத்தே வேமென்றும் வீழின்
எழுந்து சுடர்சுடுமென்றும்—செழுங்கொண்டல்
பெய்யாத கானக" (மாய)

பாலையு மருதமாயது. கொதிக்கும் மணலெல்லாங்குளிர்ந்தன. அரிக்கும் பரல்களெல்லாம் புஷ்பம்போல் மிருதுவாயின. ஆகாயத்தில் நீருண்டமேகங்கள் பந்தல் போட்டாப்போல் நின்றன. பட்டமரங்களெல்லாம் பூத்துத் தழைத்துக் காய்த்துக் கனித்து நின்றன.

பரதனுடைய சேனையின் ஆரவாரம் கடலொலி போல் முழங்கல் கேட்டு தமயனருகிலிருந்த இலக்குவன் செங்குத்தாயிருந்த ஓர் பாறையின் மீதேறி அரவத்திற்கு யாதுகாரணமெனப் பார்க்க, தூரத்தில் சமுத்திரம் போன்ற சேனை வருவது கண்டான். கைகேயியினுடைய தூண்டுதலால் பரதன் படையெடுத்துத் தமையனை உபத்திரவஞ் செய்ய வேண்டி வருகின்றானென நிச்சயித்துக் கொண்டு கோபம் பொங்க இராமனிடம் வந்து "ஐய! சற்றும் யோசியாமல் உம்மீது பரதன் படையெடுத்து வருகின்றா" னென்றான். உடனே சென்று யுத்தசன்னத்தனாய் தமயனிடம் வந்து அவன் தாள் பணிந்து நின்று "ஐயா! பரதன் சேனையையும் பறக்கடித்து அவனையும் நரகுக்கேகச் செய்து விடுகிறேன். நீவிர் அவன் தாய் அழுவதையும் பார்க்கலாம், எனக்குச் சற்றுஉத்திரவு கொடுத்தருளல் வேண்டும்" என்றான். அதற்கு இராமர் "இலக்குவ! நீயே உலகத்தை நிலைகுலைவிப்ப தென்றால், அதனை நீக்கவல்லார்யாவர்? உன்னுடைய பராக்கிரமம் எனக்குத்தெரியாதோ? ஆயினும் யானொன்றுசொல்கிறேன்கேள்; நம்முடையவம்சத்திற்பிறந்தவர்களே குலதர்மத்தினின்றும் நீங்குவார்களானால், மற்றெவர்தாம் இழிந்த தொழில் செய்வதற்கஞ்சுவார்கள்? பரதனுடையநடையோ, வேதத்தில் எவ்வளவு அதைக் குறித்துக் கூறியிருக்கின்றதோ அவ்வளவு குணமும் அமைந்ததே. தாயினுடைய குணத்தைப் போன்றவனல்லன். உனக்கு என்மீதிருக்கும் பிரியத்தால் அதைச் சற்றேனும் நினைத்தாயில்லை. ஆசைமிகுதியால் என்னைப் பார்க்க வருகிறானென்றும் பூமியை என்னிடம் கொடுக்க வருவனென்பது மல்லது



சேனையினால் நம்முடன் சண்டை செய்ய வருவான் என்று பெரியவன் நினைப்பது புத்திசாலித்தனமா? அவனோ தர்மதேவதை. சன்மார்க்கத்திற்கு அஞ்சூராணி, என்னைப்பார்க்கும் பொருட்டு வருவானேயன்றிவேறல்ல, அதையும் உடனே பார்க்கப்போகிறாய்" என்றார்.

"சேணுயர் தருமத்தின் றேவைச் செம்மையின்
ஆணியை யன்னது நினைக்க லாகுமோ
பூணியுன் மொய்ம்பினாய் போந்த தீண்டெனைக்
காணிய நீயிது பின்னுங் காண்டியால்."

பரதனும் தன் சேனையைப் பின் வரலாமென்று சொல்லிவிட்டுத் தம்பியுடன் முன்சென்றான். பரதன் கும்பிட்டுக் குவித்துயர்ந்த கரத்தினனாய் வணங்கின சரீரமுள்ளவனாய், அழுது நைந்த கண்ணினனாய் இராமனும் இலக்ஷ்மணனும் தரித்த உடையினனாய், துன்பமிதுவென்று சித்திரத்தில் வரைந்தது போன்ற உருவினனாய் வருகின்றவனை முற்றுமுணர்ந்த இராமன் பூர்ணமாய்ப் பார்த்து இலக்குவனுக்குங்காண்பித்து, "ஆடம்பரத்துடன் விற்பிடித்தலக்ஷ்மணா! பரதனுடைய யுத்தவேடத்தைப்பாரப்பா! பார்!!" என்றான். இலக்குவன் இதற்கு முன்னமே தன்கையினின்றுவில்லும் கண்ணினின்று ஜலமும்வீழ அலமந்து நின்றான். பரதனும் ராமனையடைந்து ஓவென்றலறி, "தர்மத்தை மறந்தாய், தயையைநீக்கிவிட்டாய், வரிசைக்கிரமத்தைவிட்டாய்" என்றுசொல்லி உணர்வு மறந்துதமயன் றாளில்வீழ்ந்தான் இறந்த தன்றகப்பனைக்கண்டதுபோல். இராமன் கண்ணீர் பெருகப் பரதனை எடுத்துமார்போடணைத்து அவனணிந்திருந்த தவவேடத்தைப்பலமுறையும்பார்த்தான். பலவிதமாய்யோசனைசெய்தான், "அப்பா! நம் தந்தைக்ஷேமமாக விருக்கின்றனரா?" என்றான். அதற்கவன் "ஐயா! உமதுநீக்க மென்னும் நோயால் என்னைப்பெற்ற பாவியின் வரமென்னும் யமனால், சத்தியத்தைப் பூமியில் நிறுத்திச்சுவர்க்கத்தனாயினா" னென்றான். இறந்தானென்ற சொல் புண்ணில் வேல்நுழைந்ததென்னத் தன் காதில் விழுவதற்கு முன்னம் கண்ணும் மனமும் காற்றாடிபோற் கலங்கப் பூமியில் வீழ்ந்தான் தேவதேவனான இராமன். இடியுண்டநாகம்போலலறிப் பிரக்ஞை மறந்தான். அதினின்றும் தெளிந்தவுடன் பலவிதமாய்ப் புலம்பினான்.

" நந்தா விளக்கனைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய் தனியறத்தின் தாயே தயாநிலையே
எந்தா யிகல்வேந்த ரேறே யிறந்தனையே
அந்தோ யினிவாய்மைக் காருளரோ மற்றென்றான் "

" தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டுக்
கானடைந்தே னென்னத் தரியாது காவலநீ
வானடைந்தா யின்ன மிருந்தேனான் வாழ்வுகந்தே
ஊனடைந்த தெவ்வ ருயிரடைந்த வொள்வேலோய் "

இப்படிப் புலம்பின அரசனைத் தம்பியரும் மற்றரசரும் தேற்றினர். வசிட்டரும் அவனை நோக்கி " உலகத்தில் ஜீவனுக்குத் துறவுபூண்கையும் தருமஉருவமான வேள்வி முதலிய புண்ணிய நடையுமல்லாமல் கடைத்தேற வேறுவழியில்லை. இறத்தலும் பிறத்தலும் சுபாவமென்பதைமறந்துவிட்டனையோ வேதமுடிவை அறிந்துணர்ந்த நீ! கர்ப்பத்திற் ஜனித்தற்குமுன் உயிர் நீங்குவதைக் கண்டிருப்பாயல்லவா? களங்கமற்றநீதியோடு அறுபதினாயிரம்வருடம் உலகமெல்லாம் பரிபாலித்த அரசன் விண்ணுலகடைந்ததற்கழவும் வேண்டுமோ? யாராயிருப்பினும் அந்தியகாலத்தைத் தடுக்கக்கூடுமோ?

" சீலமுந் தருமமும் சிதைவில் செய்கையும்
சூலமுந் திகிரியும் சொல்லுந் தாங்கிய
மூலம்வந் துதவிய மூவர்க் காயினும்
காலமென் றொருவலை கடக்க லாகுமோ"

" கண்முதற் காட்சிய கரையி னீளத்த
உண்முதற் பொருட் கெலா மூற்ற மாவன
மண் முதற் பூதங்கள் மாயு மென்றபோ
* தெண்முத லுயிர்க்குநீ யிரங்கல் வேண்டுமோ.

நல்வினையாகிய நறுநெய்யினாலும் ஒப்பற்றகாலமாகியபலமுள்ள திரியினாலும் விதியென்கின்றதழலினாலும் ஆகிய தீபமானது அந்த நெய்யும் திரியுங்குறைந்தால், அரசனே! அவ்விளக்குஅவிவதற்குச் சந்தேகமென்னை?

" புண்ணிய நறுநெயிற் பொருவில் காலமாம்
இன்னிய திரியினில் விதியென் றீயினில்

* பெண் மோகத்தில் விசாரப்பட்டு நசிக்கும் சிவனுக்கு நீ விசனப்படலாமோ என்பதுமொரு பொருள்.



எண்ணிய விளக்கவை யிரண்டு மெஞ்சினால்
அண்ணலே யவிதற் கைய மாவதோ."

உனக்குப்பிதாவாய் வந்தமையால் அரசன் விஷ்ணுவினுலகமடைந்தான். இது தான் நீ பிதாவிற்குச் செய்யும் சகாயம். வேறேயென்ன இருக்கின்றது?

" உண்டுகொ லிதுவல துதவி நீசெய்வ
* தெண்டகு குணத்தினாய் தாதை யென்றலாற்
புண்டரீ கத்தனி முதற்கும் போக்கரு
விண்டுவி னுலகிடை விளங்கி னானரோ."

அப்பா! நீ எதற்கும் துக்கிக்கவேண்டாம், உன்பிதா கடைத்தேறும் வழிவேறேதேனும் உண்டோ? அந்திய கர்மங்களைவிதிப்படி செய்து உன்கையால் பிறகு கிருத்தியம் நடத்துவாய். நீர்க்குமிழி போன்ற தேகத்தைநினைத்து நினைத்து அழுவது அஞ்ஞானசெய்கையல்லவா? கண்ணால்சலம்விடுவதால் அவனைமறுபடியும்காணப்போகிறாயோ? உன் கமலம் போன்ற கரத்தால் தர்ப்பணஜலம் விடுவாய்" என்றார். இராமனும் அந்தக்கிரியைய உத்தர கிரியையினைச் செய்து முடித்தான்; அதன்பிறகு மந்திராலோசனைக்காரர், அரசர்கள், தபசிகள், மற்றைப்பிரபுக்கள், இன்னும் மற்றவர்களும் தன்னைச்சூழ, சீதையிருந்த பர்ணசாலைக்குப் போயினான்; அரசனிறந்ததைக் கேட்ட சீதையும் பதைத்தனள், மனங்கலங்கித் துக்கித்தனள். தாய்மாரைப் பார்த்த இராமனும இராமனைப்பார்த்த தாய்மாரும் அதிகமாய்த்துக்கங் கொண்டாடினர்.

* (1) எண்டகு—புகழத்தக்க, குணத்தினாய்—கீர்த்தியுள்ள இராமா

(2) எண்டகும்—எட்டுத்தகுதியுள்ள, குணத்தினாய்—தொனியுள்ளவனே—அஷ்டாக்ஷர ஸப்தரூபனே.

(3) எண்டகும்—யாவருந் தியானிக்கத் தக்க, குணத்தினாய்—சத்வகுணமூர்த்தியே!

(4) எண்—எண்ணிக்கை (எவ்வளவு அளவோ அவ்வளவு நீண்ட), குணத்தினாய்—தன்மையுள்ளவனே.

(5) எண்—எட்டால், தகும்—மாற, குணம்—(குணக்கணக்காகிய) மூன்றினாற் பெருக்க 24.ல், ஆய்—செபி, எனலால் இருபத்திநான்காவது குணம் வேதமென்பதை யசுர்வேத மிருபத்தி நான்காவது பிரஸ்னம் என் எட்டென்றார், எட்டாவது அநுவாகத்தால் செபியென்றேவினாகும் எனவே உருத்திரபரச்சினம்எட்டாமனுவாக பஞ்சாதியாலென்றுமாம். அரசர்களுக்குரியது யசுர்வேதமாதலின் யசுர்வேதம் இருபத்தினாலாம் பிரச்னமென்றபடி.

மறுநாள் இராமன் பரதனைப் பார்த்து, "அப்பா, பரதா! அரசனளித்த உலகத்தை நீ தாங்காமல் தவவேடங்கொண்ட தென்ன?" எனக் கேட்டலும் பரதன் துடித்துக் கைகூப்பி நின்று, "ஐயா, மனத்தில் நினைத்தற்கரிய வரத்தால் உம்மையும் உமக்குத் தகாத தனிமையினிருத்திப் பிதாவையுங்கொன்று ஆளப்பட்ட பிள்ளையாதலின், நினைத்துப் பார்க்கையில் எனக்குத் தகாதோ இந்தவேடம்? உம்மை இந்நிலையிற்பார்ப்பதற்குப்பாவஞ்செய்துபிறந்த பாவிநான். இறப்பதை எண்ணவில்லை, தவமும் செய்வதற்கு உரியவனுமல்லன். யான் வீணாய்ப்பிறந்தேன், பதிவிரதாபாவம் கெட்டபெண்களழகும், பொறுமையிலிருந்து விலங்கின தபசும், கிருபையில்லாது செய்யுந் தருமமும், பூர்வீகர்களுடைய ஒழுங்கின்நீங்கின அரசின்நீங்கினும் பெரியதாகுமோ? நீவிர் அடையவேண்டிய பாக்கியத்தைவிட்டுவனமடைந்து தவம்செய்வீரென்றால் யான் அவற்றைக்கைப்பற்றி அரசபாரம் தாங்குவனோ? உம்முடைய தகப்பன் கொடுமையினாலும் என்தாயின் கொடுமையாலும் உலகமடைந்த துன்பத்தை நீக்கி, திரும்பிவந்து பூபாலனஞ் செய்தருளுவீர்" என்று மனநொந்து வேண்டினான். கண்ணுங் கண்ணீருமாய் இருப்பதை இராமன்கண்டு "அப்பா! பரதா! வரிசைக்கிரமமும், நிசமும், நடத்துமொழுங்கும், தர்மமும், இவை முதலாகிய தர்ம சாத்திர சம்பந்தப்பட்டவையா

---

(6) எண்டகும்=எட்டென்றதிசய, குணத்து—குணிதத்தால், ஆய்—தாயாயும், தாதை—தகப்பனென்றும், அலால்=ஆகாமல், பதம்அடைந்தாரென்றார். இதனால் எட்டுப்படிவைத்துக்கணிக்கக் கோடியாகியது கோடிஜன்மம் தாய் தந்தை என்று ஜனித்துமரிக்காமல் விண்டுபதமடைந்தாரென்றார்.

(7) எண்=எள்ளாலும், தகும்—தக்க, குணம்—குடத்தாலும், ஆய்=கருமம் உச்சரி என்றார், என்றதால் திலோதக சகிதமாய் குடம் உடை யென்றார்.

(8) எண்டகு=எளியோர்க்கு, (அமைவான) குணத்தினாய்—அருளுந்தன்மையனே.

இவ்விதமான எட்டருத்தமும் இன்னும் பிறவும் பொருளாக வுரைப்பர் தமிழ்ப்பண்டிதர்களிற் சிலர். இவற்றின் பெரும்பாகமும் வருந்திப்பொருள் கொள்ளப் பட்டிருக்கிறதே யன்றிச் செம்பொருளாகாது. கம்பர் இப்பொருள்களை யெல்லாங் கருதி யிவ்வாறு கூறினாரென்பது மியலாது.



161300

வும், வேதவழிதிறம்பாத பெரியவர்கள் ஏவலால் அமைதலேயன்றி வேறில்லை. அப்பெரியவர்கள் யாரெனப்பார்க்கில் தந்தையுந் தாயுமென்று சொல்லப்பட்ட இவர்களையல்லாமல் வேறே ஒருவருமில்லை; நான், தாய்வரங் கேட்பத் தகப்பன் ஆக்ஞையாலே எனக்கிட்ட காட்டிற்குவந்தேன். நீ என்னை இப்போது வேறுவரங்கேட்க அதை விடுகிறது நியாயமோ? ஆராய்ந்த சாஸ்திரபரிஞ்ஞான முள்ளவனல்லவா நீ! என் பிதாவிற்குக் கெட்டபேரை விளைவித்து யானரசாள்வனோ? காடென்னுடையது. இப்போது நிலம் உன்னுடையது. நீபோய் அதை யாள்வாயாக" என்ற மாத்திரத்தில் பரதன் "ஐயா! அப்படி இந்தப்பூமி என் தந்தை எனக்குக்கொடுத்ததால் எனக்குத்தான் பாத்திய மென்கிறீர்கள், அதை நான் இன்றைத் தினம் உங்களுக்குக் கொடுத்தேன். அரசே! வந்து முடிதரித்துக் கொள்வீராக" வென்று அவன் பாதத்தைப் பிடித்துக்கொண்டு கேட்டான். இராமன் "பரதா! சபலசித்தமுடைய நீ பூமியை யென்வசப்படுத்தினால் அதுகிரமமாகுமோ! அபவாதத்திற்கு நடுங்கின மனமுள்ள நந்தகப்பன் உத்தரவு செய்த பதினான்குவருடமும் இன்றைத் தினத்துடன் முற்றிப்போகுமோ! நீ எனக்குக் கொடுத்த பூமியை என் ஏவலால் அப்பதினான்கு வருஷம் முடிகிறவரையில் எனக்குப் பதிலாய் ஆள்வாய். நீ என்னுடையவாக்கை மீறலாமோ? சொன்னதைச் செய்! துன்பமடைந்து சோர்வுறாதே" என்றான். இதற்குப்பதில் சொல்ல எத்தனித்த பரதனை வசிட்டர் விலக்கித் தாமும் இராமற்கு அநேக தர்மோபதேசஞ் செய்து, "அப்பா! எனது வார்த்தையைத் தடுக்காமல் இன்று பரதன் உனக்குத் தந்த நாட்டைக் காக்கக்கடவாய்" என்றார்.

அப்படிச்சொன்ன முனிவரை முனிந்து மாதாபிதா வாக்கியந் தவறலாகா தென்று சொல்லலும் தேவர்களும் அசரீரி மூலமாய் "இதுதான்சரி, அவன் பதினான்கு வருஷமும் இவ்விடம் இருந்து தான்வரவேண்டு" மென்றுசொல்லக்கேட்டு இராமர்பரதனைப்பார்த்து "அப்பா! உன்னைமிகவும்வருந்தியாசிக்கிறேன், நான் வரும்வரையில் நீ பூமியை ஆளக்கடவாய்" என்ன, பரதன் "பதினான்குவருட முடிவில் வராமற்போய் விடுவீராகில் யான் அக்கினிப் பிரவேசமாவேன், இது சத்தியம்! சத்தியம்!! அதுவரை தங்களுக்குப் பிரதி

JL
RM211, N00JP

நிதியாக தங்களுடைய பாதுகைகளைத் தரவேண்டும்" என்றான். அதைக் கொடுக்கப் பெற்றுக்கொண்டு தன்னுடன் வந்தவர்களோடும் கண்ணுங் கண்ணீருமாய் திரும்பிப் போனான். பரத்துவாஜ முனிவரும் மற்றவர்களும் தங்கள் தங்களிடமேகினார்கள். இராமனுடைய ஆக்ஞையால் குகனும்போயினான். பரதன் பாதுகையைத் தலையிற்றாங்கி கங்கையைத் தாண்டி அயோத்தி நகரம் செல்லாது பக்கத்திருந்த நந்திக்கிராமஞ்சேர்ந்து ஸ்ரீராமர் பாதுகைக்குப்பட்டாபிஷேகம் செய்து அதைத் துணையாக வைத்துக்கொண்டு இராமர்க்கு பதிலாய்ச் செங்கோல் செலுத்தி வந்தான்.

இராமனும் இளவலும் தாங்கள் அங்கிருந்தால்பந்து மித்திரர்கள் வருவார்களென்றும் தங்கள்நிமித்தம் அவர்கள் சிரமமடைவார்களென்றும் நினைத்து தக்ஷிணமார்க்கமாய்ச்செல்லயத்தனித்தார்கள்.

அயோத்தியா காண்டம் முற்றிற்று.

கல்குளம். குப்புசாமி முதலியார்.

---

## சென்னை மாதரிரத்தினத்திற்கும் திருமுல்லைவாயில் சிவகாமியம்மாளுக்கும் நடந்த சம்பாஷணை.

கல்விகேள்விகளிற் சிறப்புற்றோங்கி தென் இந்தியா எங்கும் பிரசித்தமான மாதரிரத்தினம் என்னும் பெண், இவ்விந்தியாதேசத்தில் கல்விப்பயிர்ச்சியின்றி பெண்கள் சீர்திருத்தக் குறைவாயிருக்கிறார்களென்று அறிந்து, அக்குறைவை தன்னாலியன்றமட்டும் மாற்றி அவர்களுக்குள் கல்வியபிவிர்த்தி செய்யவேண்டுமென்னும் நோக்கத்தோடு, தன்நாயகனிடம் விடைபெற்றுக் கொண்டு, சென்னையைவிட்டுப்புறப்பட்டு, தமிழ்நாடெங்கும் சுற்றிக்கொண்டு வரும்பொழுது, தஞ்சாவூர்ஜில்லாவிலுள்ள திருமுல்லைவாசல் என்னும் கிராமத்தைச்சேர்ந்து அவ்வூர் பெரியதனக்காரராகிய செங்கல்வராயபிள்ளை வீட்டுக்குப்போய் அவரைக்கண்டு தானின்னாளென்று தெரிவிக்க, அவர் மிகவும் சந்தோஷப்பட்டு, அம்மா வாருங்கள் என்று உபசாரவார்த்தைசொல்லி அழைத்துக்கொண்டுபோய் இருக்கையளித்து தாம்பூலங்கொடுத்து க்ஷேமம் உசாவிய பின் தன்மனைவியாகிய சிவகாமியம்மாளையழைத்து "அடி சிவகாமி, இந்த அம்மாள் யாரென்று உனக்குத்தெரியுமா?" என்று வினவ, அவள் தனக்குத் தெரியாதென்று சைகையாற்றெரிவிக்க, "அடிபைத்தியகாரி, எனக்கு மிகவும் அன்புள்ளசிநேகிதராகிய சந்திரசேகரம்பிள்ளையென்பவர், அங்கிலேய



பாஷையிலும், தமிழ்ப்பாஷையிலும் மிகவும் வல்லவராகி சென்னைபுரிக்குப் போய் அங்கே உத்தியோகத்தில் அமர்ந்திருக்கிறார். அவர் அவ்விடம் போன பின்பு அங்கு இம்மாதர்சிரோன்மணியின் கல்வித்திறத்தைக் கேள்விப்பட்டு, தன் மனதிற்கியைந்த நாயகியென்றறிந்து இச்செல்வவதியை மணமியற்றிக் கொண்டனர். இந்த அம்மாள் உன்னைப்போல் கல்வி யறிவு இல்லாத பெண்களின் நிலைமையைப்பார்த்துப் பரிதாபப்பட்டு, கல்வியபிவிர்த்தி செய்யும்படியாக, தமிழ்நாடெங்கும் சுற்றிக்கொண்டு வருகிறார்களென்றும், நமது கிராமத்திற்கும் வருவார்களென்றும், என் சிநேகிதர் கடிதம் எழுதியிருந்தார். அப்படியே அவர்களும் வந்துவிட்டார்கள்," என்று தன் மனைவிக்குச்சொல்லி அவ்விருவரையும் பேசிக்கொண்டு இருக்கச்செய்து, தன் நண்பன் மனைவிக்கு நல்விருந்தளிக்க உத்தேசித்து காய்கறிபதார்த்தம் சேகரிக்கும்படி படுகைக்குப் போய் விட்டார்.

பின்பு சிவகாமி அம்மாள், மாதரிரத்தினத்தம்மாளைப் பார்த்து "அம்மா, நீங்கள் என் காசுபணத்தைச் செலவுசெய்துகொண்டு ஊரெல்லாம் சுற்றிவருகிறீர்கள்? இப்படி விருதாவில் செலவுசெய்கிற பணத்தை ஏதாகிலும் நகை செய்து போட்டுக்கொள்ளலாமே. அல்லது, காசி இராமேஸ்வரம் முதலாகிய தல யாத்திரைசெய்தாலும் போகிறகதிக்கு நல்லகதி உண்டே" என்றாள்.

அதற்கு மாதரிரத்தினம்:—அம்மா நீங்கள் சொல்லுகிறது நன்றாயிருக்கிறது! கல்வியறிவு இல்லாமல் நம்மைப்போன்ற பெண்கள் முழுமூடர்களாய் இருக்கிற குறையை நிவர்த்திசெய்வதைப்பார்க்கிலும், நகையிலும், தல யாத்திரையிலும் அதிக மேன்மையுண்டென்று நினைத்திருக்கின்றீர்களே! இதுவும் கல்வியறிவில்லாத குறைவுதான்.

சிவ:—என்ன அம்மா! நீங்கள், படிப்பு, படிப்பு என்று பினத்துகிறீர்கள்; பெண்பிள்ளை படிப்பதினால் என்ன பிரயோசனம்? ஆண்பிள்ளையைப் போல உத்தியோகம் செய்யப்போகிறாளா? அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு ஒருகேடா? படித்தால் தன் புருஷனிடத்தில் இருக்கிற மரியாதையும் கெட்டுப்போகும்; அதிலும் இந்த இங்கிலீஷ்படிப்பு எல்லாரையும் கெடுத்து விடுகிறது. வெள்ளைக்காரன் ஆண்பிள்ளைகளை அரைப் பறையனாகச் செய்து விட்டான். இனி பெண்பிள்ளைகளையும் கெடுக்க ஊரெங்கும் பெண்பிள்ளை பள்ளிக்கூடம் உண்டாக்கிவைக்கிறான். என் மகள் மீனாட்சியும், தினந்தோறும், ஆண்பிள்ளைகளைப்போல, புஸ்தகத்தை யெடுத்துக்கொண்டு அங்கே போய்விடுகிறாள். வீட்டில் குழந்தையழுதால் தூக்கிவைத்துக்கொள்ள ஆள் இல்லை. ஒருசமயம் தலைவலி கால்வலி வந்தால் சமையல் செய்யச் சொன்னாலும் செய்கிறாளில்லை. இவள் எப்படித் தன் கணவன் வீட்டுக்குப்போய் வாழ்ந்து குப்பைகொட்டப் போகிறாளோ தெரியவில்லை. இப்படியே படிப்பு பெண்பிள்ளைகளைக் கெடுத்துவிடுகிறது.

மாதர் :—அம்மா, தங்களுக்குக் கல்வியின்மேன்மை இன்னதென்று சரியாய்த்தெரியவில்லை. உங்களைக்குற்றஞ்சாட்டுவதில் என்ன பிரயோசனம். நமது ஆண்பிள்ளைகளிலும் அநேகருக்கு அதின்மேன்மை தெரியவில்லையே! நல்லது கல்வியின்மேன்மை இன்னதென்று சொல்லுகிறேன் கேளுங்கள். தேகவியாதியை நீக்குவதற்கு ஔஷதம் எவ்வளவு இன்றியமையாத காரியமோ அப்படியே அஞ்ஞானவியாதியைப் போக்குவதற்குக் கல்வி இன்றியமையாத மருந்து. கல்வியென்றால் எழுதவாசிக்கத் தெரிந்துகொள்ளுகிறதுமட்டும் அல்ல. நாம் இவ்வுலகத்திலே பிறந்து நமது மரணபரியந்தம் வாழ்நாளைக் கழிக்கவேண்டியிருப்பதினாலே இவ்வுலகம் என்பது என்னவென்றும், இவ்வுலகத்தில் முன்னிருந்தவர்கள் யாரென்றும், அவர்களில் புத்தி விசேஷமானவர்கள் எப்படி ஜீவித்தார்களென்றும், நம்மால் பிறருக்குச்செய்யவேண்டிய காரியங்கள் இன்னவென்றும், குடித்தனமுறைமை செய்யவேண்டியகடமை எவ்வாறென்றும், தெய்வபக்தியென்பது என்னவென்றும், இன்னும் பலவிதமான காரியங்களைக் கற்றறிந்தவர்களால் எழுதப்பட்ட புத்தகங்களைக்கொண்டு வாசித்தும், தெரிந்தவர்களிடத்திலிருந்து கேட்டும் அறியவேண்டியதே கல்வியாம். அவ்வாறு கல்வியிற்றேர்ந்து மிகுந்த அறிவுடையவர்களே மேன்மையான உத்தியோகங்களைச் செய்வதற்குத் தகுந்தவர்கள் என்று அவர்களுக்கு மேலான உத்தியோகங் கொடுப்பதே தவிர, உத்தியோகத்திற்காகவே கல்வி கற்க வேண்டுமென்பது தப்பறையானகொள்கை. இந்த தப்பெண்ணத்தினாற்றான், பெண்கள் கல்வி கற்பது அவசியமில்லையென்கிறார்கள். அறிவு எப்படி பெண் ஆண் இருவருக்கும் அவசியமோ, அப்படியே அவ்வறிவை விர்த்திசெய்கிற கல்வியும் இருவருக்கும் அவசியம்.

சிவ :—அம்மா, உலகம் என்பது என்ன?

மாதர் :—உலகம் என்னும் வார்த்தை இந்தப்பூமியையும், இடவாகு பெயராக நின்று அதிலுள்ள எல்லாவற்றையும் தெரிவிக்கிறது.

சிவ :—இந்தப்பூமியை எப்படி அறிகிறது? அப்படி அறிந்தவர்கள் யார் இருக்கிறார்கள்? ஆனால் நான் சிறுபிராயமுள்ளவளாயிருக்கும் பொழுது இந்தப்பூமியைப்பற்றிக் கொஞ்சம் என்பாட்டனார் சொல்லியிருக்கிறார். இந்தப் பூமியை ஆதிசேஷனென்னும் பாம்பு தாங்கிக்கொண்டிருக்கிறதென்றும் இதற்கு நான்குபக்கமும் நான்கு சமுத்திரங்களிருக்கின்றனவென்றும், அவைகளில் வடக்கு சமுத்திரத்தைக்கண்டவர்கள் இல்லையென்றும், காசிக்கு வடக்கே கைலாயமலையிருக்கிறதென்றும், அதற்கு வடக்கே ஒருவருக்கும் ஒன்றும் தெரியாதென்றும் சொல்லியிருக்கிறார். நான் ஒருவிசை நாகபட்டணத்தில் என் சிறியதகப்பனார் குழந்தைவேல்பிள்ளை குமாரன் திருவேங்கடத்திற்கு காதுகுத்தினபொழுது அங்கே போயிருந்தேன். அப்பொழுதுதான் முதற்றடவை



நான் சமுத்திரம்பார்த்தது. அந்தச்சமுத்திரம் கிழக்குச்சமுத்திரம் என்று சொல்லுகிறார்கள். அம்மா! அந்தச்சமுத்திரம் என்ன இரைச்சல் இரைகிறது! எவ்வளவு பெரிய அலை கரையிலேவந்து அடிக்கிறது! அதைப்பார்க்க எனக்கு மிகவும் பயங்கரமாயிருந்தது.

மாதர் :—அம்மா, தங்கள் பாட்டனார் பூகோளசாஸ்திரம் சரியாய் அறியாதவர். இந்தப்பூமி உருண்டைவடிவாயுள்ளது. இதில் தரைப்பாகமாயிருக்கிறதை ஐந்து பெரிய கண்டங்களாகவும், ஜலப்பாகமாய் உள்ளதை ஐந்து மகாசமுத்திரங்களாகவும் பிரித்திருக்கிறார்கள். இதில் வடசமுத்திரம் கண்டவர்கள் இல்லையென்பது பொய். சாதாரணமாய் நமது இந்துக்கள் இந்த இந்தியாவுக்கு வடக்கு எல்லையாயிருக்கிற இமயகிரி பர்வதத்திற்கும் வடக்கே போனதில்லை. அம்மலையையே கைலாயமலையென்று இவர்கள் சொல்லுகிறார்கள். அது தவறு. வடக்கு மகாசமுத்திரம் உருஷியா, ஸிபேரியா தேசங்களுக்கு வடக்கே இருக்கிறது. அங்கே குளிர் மிகுந்திருப்பதால், ஒரு வருஷத்தில் ஒன்பது மாதகாலம் சமுத்திரம் உறைந்துபோய் பளிங்குபோல் இருக்கும். மற்ற மூன்றுமாதகாலங்களில், திமிங்கல வேட்டையாடும்படி அநேக அஞ்சாதநெஞ்சர்கள் அங்கே போகிறார்கள். இவைகளெல்லாம் சரியாய் அறிவதற்கு, நீங்கள் பூகோளசாஸ்திரம் படிக்கவேண்டும்.

சிவ :—அம்மா, நீங்கள் சொல்லுகிறதெல்லாம் வேடிக்கையாயிருக்கிறது. இந்த வெள்ளைக்காரர்கள் இவைகளையெல்லாம் போய்ப் பார்த்தார்களா? பொய்யும், புரட்டுமாய் எழுதிவைத்து நம்மவர்களை ஏய்க்கிறார்கள். ஐயோ! இந்த இங்கிலீஷ்பாஷையைப் படிக்கிறவர்கள் இப்படிக் கெட்டுப்போவார்களா? என் மகன் மாசிலாமணி, தஞ்சாவூரில் படித்துக்கொண்டிருக்கிறான். அவனும் இப்படித்தான் என்னையும் எங்கள் வீட்டுக்காரரையும் பைத்தியக்காரர்களாக்கிவிடுகிறான். இது நல்ல கூத்தாயிருக்கிறது.

மாதர் :—“அம்மா, தாங்கள் கல்வியையும் அங்கிலேயர்களையும்பற்றி இவ்வளவு தாழ்மையாய் நினைத்து இருக்கிறது, யானையின் உருவத்தைப்பற்றிக் குருடர்கள் நினைத்ததுபோல் இருக்கிறது” என்று இவ்வாறு மாதர் இரத்தினம், சிவகாமி அம்மாளுடன் பேசிக்கொண்டிருந்தபொழுது, சிவகாமியம்மாளுடைய மூன்றாங் குமாரனாகிய சிங்காரவேலு ஓடிவந்து, அம்மா! அம்மா!! என்று அழுதுக்கொண்டு தனக்கு ஏதோ ஒரு வேடிக்கைச்சாமான் வேண்டுமென்று அழுதான். அப்பொழுது சிவகாமியம்மாள் அவனுக்குக்கொஞ்சம் சமாதானம்சொல்ல அவன் கேளாததினால் அவன் முதுகில் இரண்டு அடி அடித்து நீ நாசமுற்றுப்போக! சனியனே! என் என்னை இவ்வாறு அவஸ்தைப்படுத்துகிறாய்? என்று தன் முகத்தை ஒருமுழநீளம் நீட்டிக்கொண்டு முறுமுறுத்தாள். அந்தக்குழந்தைக்கு வேறு போக்கிடம் ஒன்றும் இல்லாததினால் அவனும் தன் தாயின் பயங்கரமான முகத்தைப்பார்த்துத் தேம்பித்தேம்பி

அழுதுகொண்டு நின்றான். இக்காட்சியைப்பார்த்திருந்த மாதரிரத்தினத்திற்கு மனஞ் சகிக்காமல் சிவகாமியைப்பார்த்து, "அம்மா இந்தக்குழந்தை தங்களுடையது தானோ?" என்று கேட்டாள்.

சிவ :—"ஆம், அம்மா, என் கஷ்டத்தை யென்னசொல்வேன். இந்த நாசமாய்ப்போவார்களெல்லாம் வந்து பிறந்து என் பிராணனை வாங்குகிறார்கள். குட்டிச்சுவரைப்போல் வளர்ந்து என்ன பிரயோசனம். வயதும் ஏறக்குறைய ஐந்தாகிவிட்டது. இத்தோடும் சும்மாயிருக்கிறதில்லை. சாப்பிடும்பொழுதும் இருபத்தெட்டுபெயர் அள்ளுக்கட்டி உதையோடவுங் குத்தோடவுந்தான் சாப்பிடுகிறது. படிப்பதற்கும் அப்படியே. அம்மா, எனக்கும் அவருக்கும் போதும் போதும் என்று ஆகிவிட்டது. பின்னும் இந்த நாசமாய்ப்போவாரைப் பார்த்தால் வயிற்றெரிச்சலாயிருக்கிறது. பெற்றகுடல் கேட்கவில்லை. என்ன அம்மா செய்வேன். யாரை நொந்துகொள்ளுவேன். என்னைப்படைத்த பிர்ம்ம தேவனைத்தான் நோகவேண்டும்" என்று விசனப்பட்டாள்.

மாதர் :—அம்மா, "மக்கட்பேற்றிற் பெறும்பேறில்லை" என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். பிள்ளைகளைப்பார்க்கிலும் இவ்வுலகில் பெறத்தக்க பாக்கியம் வேறு உண்டா? இல்லை. அவ்வித பாக்கியத்தைத் தாங்கள் அடைந்திருந்தும், அதைப்போற்றிவளர்க்கத் தங்களால் இயலாமல் கஷ்டப்படுகிறீர்கள். பிள்ளைகளைப் பெறுவதற்குப் படுகிற கஷ்டத்தைப் பார்க்கிலும், அவர்களை வளர்ப்பது பதின்மடங்கு அதிக கஷ்டமுள்ளது. வளர்க்கத்தெரியாதவர்கள் பெற்ற பிள்ளையும், சூதாடி, குடிகாரன், ஆகிய இவர்களடைந்த செல்வமும், மூடர்களுக்குச் சொன்னபுத்தியும், திருடர்கள் கையில் அகப்பட்ட நகையும், புலியின்வாயி லகப்பட்ட ஆட்டையும், மதயானையின் கையிலகப்பட்ட பாகனையும், வாழைமரத்தில் எய்த அம்பையும், குரங்கின் கையிலகப்பட்ட பூமாலையையும் நிகர்க்கும். மனிதர்கள், பதினெட்டு வயதளவும், முதிர்ந்த அறிவுடையவர்கள் அல்லவென்று இராஜாங்கத்தாரும் சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்படியிருக்கக் குழந்தைகளுக்கு, நன்மை தீமை பகுத்தறியும் சக்தியுண்டா? இல்லையே; இவைகளையறிந்திருக்கிற நாம் குழந்தைகளைக் கோபிப்பதில் என்ன பிரயோசனம்? குழந்தைகளுடைய மனம் வெள்ளைக்கடிதத்திற்குச் சமானம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எம்மாதிரியை அவர்கள் பார்க்கிறார்களோ அம்மாதிரியையே அவர்கள் கற்றுக்கொள்ளுகிறார்கள். நாம் எப்பொழுதும் கோபமுள்ளவர்களாய் அவர்களை யெல்லாக்காரியத்திற்கும் அடித்துக்கொண்டே வருவோமானால், அவர்களும் கோபமுள்ளவர்களாகவே வளருகிறதுந் தவிர அடியென்பதிலும் பயமற்றவர்களாயும் மனக்கோழைத்தனமுள்ளவர்களாயும் ஆவார்கள். ஆகையால், எப்பொழுதும் குழந்தைகளை முகமலர்ச்சியோடு அழைத்து இனிய வசனத்தினால் அவர்களைச் சமாதானப்படுத்தவேண்டும். அவர்களுக்கு அதிகபிரியமாயிருக்கிற பண்டங்களை மறைத்துவைத்திருந்து, அவர்கள் நாம் சொல்லுகிற காரியங்களை செய்ய மறுதலிக்கிறபொழுது, இப்பண்டங்களைத் தருவதாகச்சொல்லி அவர்களைத் தூண்டவேண்டும். பயமுறுத்தி செய்விக்கிற வேலையைப்பார்க்கிலும் சந்தோஷிப்பித்துச் செய்விக்கிறவேலை மிகவும் உறுதியுள்ளது. சிலவேளைகளில், குழந்தைகள் ஒன்றுக்கும் அடங்காமல் நமக்கு அதிக கோபம் உண்டாகும்படி செய்வார்கள். அப்பொழுது நாம் அந்தக்கோபத்தை யடக்கி அவர்களை யாதரிக்காமற்போனால் மற்றப்படி இந்த உலகத்தில் வேறு யாரிடத்தில் நாம் கிருபையுள்ளவர்களாயிருக்கப்போகிறோம். கடவுள் எப்படி நம்மிடத்தில் கிருபையுள்ளவராயிருப்பார்? நாம் நம்முடைய பிள்ளைகளைப் பிள்ளைகளாய்ப் பாவிக்காமலிருந்தால், நம்மையெப்படி கடவுள் தமது பிள்ளைகளாக ஆதரிப்பார்? பிள்ளை வளர்ப்பதைப்பற்றித் தங்களுக்குச் சாவகாசமாய்ச் சொல்லுகிறேன். இப்பொழுது நேரம் ஆகிவிட்டது", என்று சொல்லிக் கொண்டிருக்கிற சமயத்தில், செங்கல்வராயபிள்ளையும் காய்கறி பதார்த்த முதலியன ஒரு ஆள் தலையில் எடுப்பித்துக்கொண்டுவந்து, தனது மனைவியை சமையலுக்கு ஆயத்தப்படும்படி கட்டளையிட்டார். அவ்விருபெண்களுக்கும் நடந்த சம்பாஷணையும் முடிந்தது.



பெ. ம. போ.

# மோகனாம்பாள்.

(175-ஆம் பக்கத்தொடர்ச்சி).

## ஐந்தாம் அத்தியாயம்.

பத்மனாபய்யர் அதிகாலையில் எழுந்து கைகால்களைக் கழுவி ஸ்நான அனுஷ்டானாதிகளை முடித்துக்கொண்டு தன்னுடைய கக்ஷிக்காரர்கள் காத்துக் கொண்டிருக்கும் முன்மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார்.

உடனே செட்டியார்கள் எழுந்து கும்பிட்டு விட்டுத் தங்கள் ஏஜண்டு ராமஸ்வாமிப்பய்யரைக்கொண்டு தஸ்தாவேஜுகளை அய்யாரவர்களிடம் கொடுக்கப்படி சொன்னார்கள்.

வக்கீல் அய்யாரவர்கள் கட்டில் உள்ள கடிதங்களை ஒவ்வொன்றாய்த் தெளியப்பார்த்துக் கீழ் நியாயஸ்தானத்தில் சட்டவிரோதமாயும் ஸாக்ஷி நிரூபணங்களில் விரோத அனுமானங்களோடும் காணப்பட்ட விஷயங்களைத் தனியே குறித்துக் கொண்டிருந்தார்.

அதற்குள் ஆறுமுக செட்டியார் சிவக்கொழுந்து செட்டியாரை நோக்கி "அய்யா அவுகளுக்குக் கேசை முந்தி நாம் ஒருதடவை சுருக்கமாய்ச் சொல்லிவிட்டால் நல்லதல்லவா" என்றார்.

"அப்பொழுது தான் அவுகளுக்குத் தெளிவா ஓடும். எங்களும் ராமசுப்பய்யரே 'தேசு விவரம் கொஞ்சஞ் சொல்லுமே காணும்'" என்றார் சிவக்கொழுந்து செட்டியார்.

இதற்குள் பத்மனபய்யர் எல்லா ஆதாரங்களையும் ஐயந்திரிபறப் பரிசோதித்து விவாதத்தின் வரலாற்றைச் செட்டியார்களும் ராமசுப்பய்யரும் ஒருவாறு சொல்லி முடிக்கக்கேட்டுத் தன் குமஸ்தாவை வகாலத்துனமா எழுதும் படி சொன்னார்.

ஆறுமுக செட்டியார் ராமஸுப்பய்யரைப்பார்த்து "அய்யா பீசு இன்னதென்று பேசி விடுங்க. பின்னாலெ இளவளக்கு உதவாதல்லவா" என சிவக்கொழுந்து செட்டியார் "ஆமஞ்சாமி அது முந்தித்தீத்து விடுங்க: மறுபடி என்னாச்சிம் வம்பிலே வரப்போவுது" என்றார்.

"அதற்கென்ன இப்பொ அவஸரம்'ங்கிரேன், அய்யரவான் சொல்ர படி நாம் கேழ்க்கத் தயாராயிருக்கிறோம். நாம் சொல்ரபடி அய்யரவர்கள் கேழ்க்கத் தயாராயிருக்கிறார்கள். மேலும் செட்டியாரவர்கள் விஷயம் அங்கேயும் தெரிந்திருக்கிறது; அவ்விடத்து விஷயம் இவ்விடத்திலேயும் தெரிந்திருக்கிறது. பரஸ்பரம் ஸௌகரியம்போலப் பார்த்துக் கொள்ளுகிறோம்" என்று பீஸு விஷயமாய் அந்த சமயம் பேச இஷ்டமில்லாதவராய்க் காண்பித்துக் கொண்டார் ராமஸுப்பய்யர்.

உடனே மணி ஒன்பதுக்கு மேல் ஆய்விட்டதால் எல்லோரும் கலைந்து அவரவர்கள் இருப்பிடம் போக யத்தனித்து பத்மனபய்யரிடம் விடை பெற்றுக்கொண்டார்கள். பத்மனபய்யரும் எழுந்து உள்ளே சென்றனர். பிறகு ராமஸுப்பய்யர் வெளியில் வந்து பட்டணம் வருவதற்காக ஒரு குதிரை வண்டி அமர்த்த சிறிது தூரம் சென்றனர். சற்றுதூரம் போனவுடன் ஒரு குதிரை வண்டி வந்தது.

"என்னடா வண்டி பட்ணம் வர்றியா."

"ஏறுங்கோ ஸாமி வீட்டுக்குப் போவுது வண்டி."

"சத்தம் என்ன அப்பென்."

"எங்கெ உட்ரதுங்கோ."

"பவளக்காரத் தெரு போகணும்."

"சத்தம் என்ன தெரியாதா எத்தினிவாட்டி வந்திருப்பீங்கோ எத்தினி வாட்டி போயிருப்பீங்கோ."

"சரிதான் அப்பென் எல்லா வண்டியும் ஒரேசத்தத்துக்கு வருதா நீ இன்ன வேணுன்னு சொல்லேன்."

"அர்ரூபாதான் ஸாமி, உங்களுக்குத் தெரியாதுங்களா."



"எ, எ, போ அப்பேன். ஆறு அணா தான் வழக்கம்; சம்மதியானா சொல்லு."

"இன்னம் ஒருத்தர் வச்சுக்கட்டுங்களா? ஆளுக்கு ரண்டணா இல்லாமே என்ன சவாரி ஸாமி?"

"அகப்பட்டால் வைத்துக்கொ. அதுக்காக தாமஸிக்கக்கூடாது."

"வழியிலெ அகப்பட்டா வச்சுக்கொள்ரேன் ஸாமி ஏறுங்கோ."

ராமஸுப்பய்யர் வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டு பத்மனபய்யர் வீட்டை நோக்கி ஓட்டச்சொன்னார். அவ்விடத்திற்குப் போனதும் செட்டியார்களும் ஏறிக்கொண்டார்கள். வண்டி அதிக வேகமாகப் போகாததினால் ராமஸுப்பய்யர் வண்டிக்காரனைப்பார்த்து "வண்டி வேகமாய் போகாமல் போனால் சார்ஜு கொடுக்க மாட்டேன்" என்றார்.

"சார்ஜு கொடுக்காமெபோக ஒங்கபாட்டன் வரோணும் ஸாமி"; குதிரை புச்சு; வேகமா ஓட்டினா வண்டியெல்லாம் அனாய்ப் போகும் ஸாமி."

"என்னடா பாட்டன் பீட்டன் என்கிறாய்", வேகமாய் ஓட்டச் சொன்னா?

"பின்னெ என்னா, ஸாமி சார்ஜு இல்லெலங்க உங்கப்பெனாலே கூட ஆவாது ஸாமி."

இதற்குள் சிவக்கொழுந்து செட்டியார் இவர்கள் இருவருக்கும் சண்டை உண்டாகும்போல் இருந்ததைப்பார்த்து "இடக்கப்பெண் ஓட்டு" என்று வண்டிக்காரனிடத்தில் சொல்லிவிட்டு ராமஸுப்பய்யரை நோக்கி "துருக்கனிடத்தில் என்னத்துக்கு வாய் கொடுக்கிறீங்க" என்று ஸமாதானப் படுத்தினார்.

சண்டா மரத்தடியில் வந்ததும் வண்டிக்காரன் இன்னொருத்தர் வண்டியில் ஏற்ற வேண்டியதற்காக நிறுத்திவிட்டான். பத்துப் பதினைந்து நிமிஷமாக ஒருவரும் அகப்படவில்லை. ராமஸுப்பய்யருக்குக் கோபம் வந்து விட்டது. உடனே வண்டிக்காரனை, நோக்கி "என்னடா வழியில் நிறுத்தக் கூடாது என்று சொன்னேனேடா" என்றார்.

"எட்டு அணாவும் குடுத்தூட்டீங்கோன்னா ஓட்றேன்."

"என்னடா, சொல்றதொண்ணு இங்கே வந்து செய்ற தொண்ணு வண்டிக்காரத் தொழிலைக் காண்பிக்கிறாய்."

"என்ன தொழிலைக் கண்டீங்கோ ஸாமி நீங்க கொடுக்கிற ஆறு அணாக்கு இப்பொத்தான் இம்மாந்தூரம் வந்திச்சு; கொஞ்சங்கூட நிக்காமெ எவன் ஓட்டுவான் ஸாமி" என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது பட்டணம் போகிற ஒரு துருக்கன் வந்து எதிர்ப்பட்டான். அவனை வண்டிக்காரன் பார்த்ததும்,

“ அஜீ, ஹிஜரத் காஞ்ஜானஜீ ” என்றான்.

“ ஹைகோர்ட்.”

“ பைட்டோஜீ.”

“ க்யா போலோ.”

“ க்யா தேத்தோஜீ.”

“ எக் அணா.”

“ ஆவ் ஆவ் ஜீ பைட்டோ.”

துருக்கன் வந்ததைப்பார்த்த ராமஸுப்பய்யர் “என்னடா துருக்கனை வண்டியிலே ஏத்ராய்” என்றதற்கு வண்டிக்காரன்.

“ நமக்கு யாரானா என்ன ஸாமி ஒங்க ஊட்டு வண்டிமாதிரி பேசுரீங்கோ ” என்று சொல்லிக்கொண்டே ஏறியிருக்கும் துருக்கனிடத்தில் ஒரு நெருப்புக்குச்சி வாங்கிக்கொண்டு ஒரு சுருட்டைப் பற்றவைத்தான். வண்டி கடிய வேகத்தோடு போகவே காற்றும் எதிர் நோக்கி அடித்தபடியால் சுருட்டின் புகை அவ்வளவும் வண்டி முழுவதும் வியாபித்தது.

ராமஸுப்பய்யருக்குச் சுருட்டின் புகை சுத்தமாக உதவாது; இந்தப் புகையை முகர்ந்தால் அவருக்குத் தலை வலி வந்து விடுவது வழக்கம். ஆகையால் அவருக்கு மகா ஸங்கடம் உண்டாகி விட்டது. வண்டிக்காரனை சுருட்டுக் குடிக்கக்கூடாதென்று என்ன சொன்னாலும் அவன் கேழ்க்கிறதில்லை: இப்படியிருக்க வண்டி ஒரு கள்ளுக்கடைக்குப் பக்கத்தில் வந்து சேர்ந்தது. இந்த வண்டிக்காரனுக்கு ஒரு நாளைக்கு நாலு வேளைக்குக்குறையாமல் கள்ளுக் குடிக்கவேணும். அன்றைத்தினம் மணி பத்தாகியும் முதல்வேளைகூட குடிக்காததினால் அவனுக்கு உடம்பு சுமார்ப்படவில்லை. ஆகையால் வண்டிக்காரன் அய்யரைப் பார்த்து,

“ அய்ரே, அய்ரேஎ, ரண்டணா கொடுங்கோ ஸாமி.”

“ அதென்னடா இங்கே கேக்கிறாய் வீட்டுக்குப்போய்த் தாண்டா குடுக்கோணம்.”

“ பாருங்கோ ஸாமி, டாணாக்காரருக்குக் கொடுக்கோணம். இல்லாட்டா அவுங்க வண்டியை மறிச்சுக்குவாங்கோ ஸாமி ” என்று சொன்ன வண்டிக்காரனிடத்தில் சிவக்கொழுந்து செட்டியார் இரண்டு அணாக்களைக் கொடுக்க அதை யெடுத்துக்கொண்டு அவன் கள்ளுக்கடைக்குள் நுழைந்து விட்டான். வேண்டியவரையில் கள்ளைக்குடித்து விட்டு வண்டியில் ஏறிய வண்டிக்காரன் பத்துப் பதினைந்து நிமிஷத்திற்கெல்லாம் மயக்க மடையவே அவன் கையிலிருந்த கடிவாளம் கொஞ்சந் தளர்ந்தது. குதிரை புதிதானதால் ஓரமாய்ப் போய் வண்டியை ஒரு பள்ளத்தில் இறக்கிவிட்டது. உடனே வண்டிக்காரன்



திடீரென்று விழித்துக்கொண்டு கீழே இறங்கி வண்டியைச் சரியாகத் திருப்பினான். இதை யெல்லாம் பார்த்த ராமஸுப்பய்யர் கோபங்கொண்டு “ என்னடா குடித்துவிட்டு வண்டியைக் கவுத்து விட இருந்தையேடா இப்போ, பட்டணம்வா போலீஸிலே சார்ஜ் பண்ணச் சொல்றேன் ” என்றார்.

“ அவன் எப்படி இருப்பாண்டா உனக்கு சித்தப்பனா பெரியப்பனா சார்ஜு பண்ரத்துக்கு,” என்ற வண்டிக்காரனை சிவக்கொழுந்து செட்டியார் கொஞ்சம் ஸமாதானமாய்ச் சொல்லி பேசாமல் ஓட்டச் சொன்னார்.

இவ்வளவு சண்டைகளோடு இவர்கள் வீடு போய்ச் சேர்ந்தார்கள். பத்மனாபய்யர் சாப்பிட்டுவிட்டுக் கச்சேரிக்கு வந்து திரும்பி திருவல்லிக்கேணிக்கெதிரே உள்ள சமுத்திரக்கரையில் உலாவுதற்குச் சாலையின் ஓரமாய் வண்டியை விட்டு இறங்கினார்.

## ஆறும் அத்தியாயம்.

சாயந்திரம் மணி ஐந்துக்கு மேலாய் விட்டது. சூரியன், இவ்விரு நிலத்தின் கண் நடக்கும் அநீதிகளைக் கண்டு இனி மனஞ்சகியானாகி விலகி மேற்குத் திக்கில் ஒளிய யத்தனித்தவன்போல் காணப்பட்டான். மேற்குத்திசையில் சுத்த வெண்மையான ஆகாயத்தில் பற்பல இடங்களில் செவ்வானம் ஏற்பட்டிருந்ததை நோக்கின் அகண்டபரிபூரணமான பரமசிவனது திருமேனியில் பொற்சுணங்குண்டாயினவோ எனப் பார்ப்போர் ஐயுறுவார்கள்.

கடலினின்றுவரும் கீழ்காற்றோ யாவருக்கும் உற்சாகத்தையும் மனோதைரியத்தையும் கொடுத்து அவரவர்கள் தத்தம் கலாசாலைகளினின்றும் உத்தியோகஸ்தானங்களினின்றும் வருங்காலத்திருந்த களைப்பை மாற்றுகிறது. செம்படவர்கள் மீன் பிடிக்க ஏறிச்சென்ற கட்டுமரங்கள் திரைகளால் பாதிக்கப்பட்டு அமுங்கி அமுங்கிக் கிளம்புவதைக்காண நமது வாழ்நாளாகிய கடலில் உற்பத்தியாகிற துன்பங்களாகிய திரைகள் நம்மை அமுக்குவதும் அத்துன்பங்கள் நீங்கிச் சிலகாலஞ் சென்ற பின் நாம் கிளம்புவதையும் இக்கடல் நன்கு விளக்குவதாகத் தோற்றிற்று. இவ்வுவர்நீர்க் கடலை எவ்வாறு மரக்கலத்தின் உதவியால் நாம் கடக்கின்றோமோ அத்தகைய பேருதவி நம்முடைய பிறப்பு இறப்பு என்னும் இரண்டுகரைகளை உடைய பவம் என்னும் கடலையும் கடக்க உளதோ என ஒருவன் ஐயுறுங்கால் கடவுளது திருவருளே அம்மரக்கலமாக ஒருவனுடைய அறிவுக்குப் புலப்படுகிறது. அத்திருவருள் நமது நல்வினைப் பயன்களாகிய பலகைகளால் சேர்க்கப்பட்டு பக்தி என்னும் பொருளைக்கொண்டு வாங்கப்படுகிறது. ஆயினும் இத்திருவருளைக்கொண்டு நாம் கரை யேறுவதற்குத் தடையாக சிற்றின்பவாசனைகளாகிய சுழல்கள் பலவுள.

புச்சுழல்களில் அகப்படாது சரிவழியே செல்ல ‘அறிவு’ என்ற மாலுமி நன்னெறி என்ற சுக்கானைப்பிடித்து ஓட்டவேண்டும். ஆகவே இப்பவசமுத்திரத்தின் பெருமை இந்த லவண சமுத்திரத்தினாலல்லவோ விளக்கப்படுகிறது. பின்னும் சந்திரனது தண்மையான கிரணங்கள் அக்கடலில் வீசிப் பிரதிபலிக்கப் பெற்றவாற்றான் அந்நீர் முழுவதும் சொக்கவெள்ளியையுருக்கி விட்டது போல் அமைந்தது. சேய்மையில் பாய் விரிக்கப்பெற்று இயங்கும் சில நாவாய்களும் படகுகளும் தெய்வப் புனலில் நீந்தும் ஹம்ஸங்களை ஒத்தன. பின்னும் கரையோரத்திலுள்ள சாலையிற் கூடிய மனிதர்குழாம் அக்கடலின் அலையெனத்திரண்ட—அவியன்ன துகிலில் வாய்ந்த இறக்கைகள் போன்ற கைகள் அமைந்த சட்டையையும், மயிற்றோகையினும் நீண்டு பிற்புறம் வளர்ந்து பூமி வரையிற்றொங்கும் அரையாடையையும் இடையாலும் துணியாலும் செய்யப்பட்டு நறுநாண்மலரைப் பழிக்கும் செய்மலர்களால் அலங்கரிக்கப்பெற்ற தலை முடியையும் தரித்து சுவேத சருமத்தோடு கூடிய அங்கல மகளிர் * அசுணமென் புட்களோ, அன்னப்பேடோ இன்னும் பல் வகை வெண்பறவைகளின் சமூகங்களோ அல்லது யக்ஷகின்னர கந்தருவாதி வர்க்கங்களைச் சேர்ந்த தெய்வப் பெண்களோ எனப் பார்ப்போர் மயங்குவார்கள். மற்றும் கலையிற் கற்றோர் கற்பின் மிகுந்தோர் ஆக்கம் மிக்கோர், ஊக்கங் கைக்கொண்டோர், பொற்பின் வாய்ந்தோர், சிற்பம் வல்லோர், பாவியல் கற்றோர், ஓவியம் எழுதுவோர் ஆகிய பல்வகை வினைஞர் இனம் இனமாய்ப் பிரிந்து தத்தம் தொழிற்களைப்பற்றி விவகரிப்பார்கள். பின்னும் சாலைக்கும் மணற் புறத்திற்குந் நடுவே சிம் சுபா விருக்ஷங்களாலமைந்த வேலியோடு கூடிய தனிப்பாதையில் சிலர் ஆணும் பெண்ணுமாகப் பிரிந்து உலாவுங்கால் அண்மையில் நாற்புறமும் ஒருவரும் இல்லாத தருணங்களில் அவர்கள் முகத்தோடு முகஞ் சாய்த்து முத்தமிடுங்கால் அவ்விரு முகங்களுக்கேற்ப ஈருடற்கள் இருப்பதாய்ப் பகுத்தறிய இமை கொட்டுதல் இல்லாத தேவராலுங் கூடுமோ.

ஆர். ஸி. கிருஷ்ணசாமி.

* அங்கல மகளிர் = ஆங்கிலேய தேசத்துப் பெண் மணிகள்.



## சிவத் துவேஷாச்சாரி கதை.

தெற்கே சோழமண்டலத்தில் திருக்குடந்தையென்னும் ஸ்தலத்தில் திருவரங்காச்சாரியென்றொரு வைணவப் பிராமணனிருந்தான். அவன் சிறு வயதிலேயே திருவாய்மொழி முதலான அநேக வைதீக நூல்களை ஓதியுணர்ந்து கலைவல்லோனாகி, விஷ்ணுமார்க்கத்தில் அதிகப் பிடிவாதமுடையவனானான். அது முதல் அவன் விஷ்ணுமார்க்கந்தவிர மற்றவைகளெல்லாம் பொய்யென்றும், முக்கியமாய் சைவசமயம் சுத்த அபத்தமென்றும் சொல்லி, சைவர்களை அதிகமாய்ப் பகைத்து, விபூதி, உருத்திராக்ஷம், வில்வத்தளமுதலிய சைவச் சின்னங்களையணிந்த யாரையாகிலும் கண்டால், ஹரி கரி! யென்று கண்ணைப் புதைத்துக்கொண்டு உடனேபோய் ஸ்நானம்செய்து, தேவாலயஞ்சென்று பெருமாளைச் சேவித்து வருவான். அவன் விட்டிற்கு வருகிற யாவரும் விபூதிதரித்துக்கொண்டு வரக்கூடாதென்றும், அப்படிவர இஷ்டமிருந்தால், தெருத்திண்ணைமாடத்தில் ஒரு திருமண் கட்டியும் திருச்சூரணக் குடுக்கையும் வைத்து, அதைத்தரித்துக்கொண்டு வந்தால்தான் அவர்களுடன் பேசுவதென்றும் ஏற்பாடுசெய்திருந்தான். அவனுடைய நாவிதன் வண்ணான் முதலானவர்களும் அப்படியே செய்வது வழக்கம். இவ்வாறு அவன் வீரவைஷ்ணவனாகி சிவனையும் சிவனடியார்களையும் இடைவிடாது பகைத்துவந்தமையால், அப்பிராமணனுக்குத் திருவரங்காச்சாரி யென்னும் இயற்பெயர்போய், சிவத்துவேஷாச்சாரி யென்னும் காரணப்பெயர் அவ்வூர் எங்கும் வழங்கிற்று.

இப்படிச் சிவத்துவேஷாச்சாரியும நாளுக்குநாள் மத வைராக்கியம் முற்றக் காலங்கழித்துவருநாளில், ஒருநாள் அந்திநேரத்தில் காவேரி யாற்றங் கரைக்குப்போய் ஜெபதபமுடிக்கும் பொருட்டுக் கைகால் சுத்தி செய்து கொண்டிருக்கையில் கையில் முகந்த ஜலத்தில் ஒரு உருத்திராக்ஷக்கொட்டை மிதந்தது. அந்திநேரமாகையால் அதைப்பார்க்காமல் தன் முகத்தையும் கண்களையும் தன் கையிலிருந்த ஜலத்தைக்கொண்டு கழுவும்போது அந்தக் கொட்டை உறுத்திற்று. அதென்னவென்று பரிசோதித்துப் பார்த்த பொழுது ஒரு உருத்திராக்ஷக் கொட்டையிருக்கக்கண்டு அந்த வைணவன், “ஹரி கரி! ஆதிமூலம்!” என்று கூவி “ஐயோ! இந்தப்பாவத்தை யெவ்வாறு போக்குவேன். அத்தீண்டொணாக்கொட்டையைத் தீண்டியதுமன்றி முகத்திலும் கண்களிலும் வைத்து அணிந்துகொண்டேனே! எம்பெருமான் திருவடிகளையன்றி வேறெதையும் நமது கண்களில் தரிக்கப்போமா!” என்று வெகுவாகத்துக்கப்பட்டு, அன்றிரவெல்லாம் போசனமின்றித் தூக்கம்பிடியாமல் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்து, காலையில் எழுந்து தன் ஆசானிடஞ்

சென்று அவரைக்கண்டு அவரது திருவடிகளில் சாஷ்டாங்கமாய் விழுந்து தெண்டன் சமர்ப்பித்து எழுந்து நின்று, கண்களினின்றும் நீர் தாரைதாரையாய்ப் பெருகக் கைகட்டி வாய்புதைத்துத் தனக்கு நேரிட்ட பாவ சங்கடத்தை யெடுத்துரைத்து, அதை நிவர்த்திசெய்ய ஒரு வழிகாட்டல் வேண்டுமென்று பிரார்த்தித்தான். அதைக் கண்ணுற்ற ஆசான், நமது சீடன் நீண்டொணுக்கொட்டையைத் தீண்டியன்றோ வருத்தமுற்றிருக்கிறனென்று அவனிடத்தில் கிருபைகூர்ந்து "அப்பா, நீ பயப்படவேண்டாம். நமது எம்பெருமான் உன்மேற் கிருபைகூர்வார். ஆதிமூலமென்றவுடனே வந்து அவ்யானையை இரட்சித்த நமது பெருமாள் இப்போது உன்னைக் கைவிடுவாரா? கைவிடார்" என்று திடஞ்சொல்லி, "நல்லது உன்பாவத்தைப்போக்க ஒரு வழி சொல்லுகிறேன் கேள். மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலானவைகளால் நம்முன்னோர்கள் தங்கள் பாவத்தை நிவர்த்திசெய்து கொள்வது வழக்கம். ஆகையால் நீ இன்றே புறப்பட்டு வழியிலுள்ள திவ்விய திருப்பதிகளுக்குப் போய் பெருமாளைச் சேவித்துக்கொண்டு, கடைசியாய்க் காசிநகரத்தை யடைந்து, நமது நரசிம்மாவதாரனாகிய எம்பெருமான் திருவடிகளினின்றுண்டாகிய கங்கையில் ஸ்நானஞ்செய்து உன்பாவத்தைப் போக்குவாய்" என்று சொல்ல, அப்படியே சிவத்துவேஷாச்சாரியும் தன் வீட்டிற்குப்போய் பிரயாணத்திற்கு வேண்டிய காரியங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டு, திருக்குடலையையெடுத்து அதில் சாளிக்கிராமம் மடிமுதலானவைகளை வைத்துத் தன் தோளில் மாட்டிக்கொண்டு, காசியாத்திரைக்குப் புறப்பட்டான்.

இவ்வாறு காசிக்குப் போகிற வழியில் தன் குருவின் சொற்படி அநேக திருப்பதிகளுக்குச் சென்று பெருமாளைச் சேவித்துக்கொண்டு சென்றான். அப்படிச் செல்லுநாளில் ஒருநாள் பொழுதுபட்டு நாலு நாழிகைக்குமேலாகி விட்டது. முன்னிருட்டுக் காலமாகையால், வழியும் சரியாய்த் தெரியவில்லை. அந்தச்சமயத்தில் மழையும் பெருங்காற்றும் ஆரம்பிக்கவே, பிராமணன் முற்றும் நனைந்து குளிர் சகிக்க முடியாமல் மிகவும் வருத்தமுற்று, இராத்தங்குவதற்கு அருகில் ஏதாவது கிராமமிருக்கிறதோ வென்று சிந்தித்துக்கொண்டு போகும்பொழுது, ஒரு மின்னல் தோன்ற, அம்மின்னொளியால், ஒரு சிறு குடிசையும் அதற்கருகாமையில், புது மட்பாண்டங்களடுக்கி யிருப்பதையுங் கண்டான். அதைக் கண்டவுடனே, பிராமணன் "அதோ சமீபத்தில் தெரிகிற குடிசை நாம் இராத்தங்கிப்போக உதவியாகும். அங்கே புது மட்பாண்டங்கள் அடுக்கி இருப்பதைப்பார்த்தால், குயவன் வீடுபோல் தோன்றுகிறது. குயவன் சற்சூத்திரனாகையால், அக்கிரகாரம் இல்லாத ஊரில், பிராமணர்கள் குயவன் வீட்டில் தங்கலாமென்று சாஸ்திரமிருக்கின்றதே. இஃதன்றியும், முன்னொருகாலத்தில், பாண்டவர்கள் பிராமணவேடம் பூண்டு, துரோபதையை மணம்புரியும்படி, பாஞ்சாலதேசத்திற்குப் போனபொழுது, குசவன் வீட்டில் தங்கியிருந்தார்கள் என்று பாரதத்திலும் சொல்லி இருக்கிறதே. பெரு



மாள் கிருபையால் தான் நமக்கு இவ்வாபத்து வேளையில் இப்பேருதவி கிடைத்தது" என்று தனக்குள்ளே ஆலோசித்து, அக்குடிசை கண்ணுக்குத் தோன்றிய திக்கை நோக்கிச்சென்று, அதிலொரு சிறு ஒட்டுத்திண்ணை யிருக்கக் கண்டு, அதில் ஏறித் தன் ஈரவஸ்திரங்களைக் களைந்து பிழிந்து கையில் வைத்துக்கொண்டு வீட்டில யார் இருக்கிறார்களென்று விசாரிக்கவேண்டுமென்று நினைத்து, அங்கிருந்த ஒரு மாடக்குழியில் கையைவைத்தான். அதில் ஒரு கொட்டைப்பாக்கு இருக்கக்கண்டு அதையெடுத்து, வாயசைந்தால் கொஞ்சம் குளிர் மட்டாய்த் தோன்றுமென்று எண்ணி அதை வாயிற்போட்டுக் கடித்துக்கொண்டு சற்று நின்றான். பின்னும் குளிர் அடங்காததினால், திருக்குடலையிலுள்ள மடியையாகிலும் எடுத்துப் போர்த்திக்கொள்ளலாமென்று தன் கையிலிருந்த ஈரத்துணியை, அங்கே அடுக்கியிருந்த மட்பாண்டங்களின் மேல் வைக்க, அந்த அடுக்கு நழுவி, தடபுட வென்று சத்தித்துக் கீழே விழுந்து மட்பாண்டங்கள் உடைந்தன. இச்சத்தத்தைக்கேட்ட குயவன், தன் மட்பாண்டங்களை ஏதோ மிருகஜெந்து தள்ளிவிடுகிறதென்று நினைத்து, ஒரு திரியைக் கொளுத்திக்கொண்டு தடியெடுத்துத் தன் மனைவியோடு வெளியே வந்து பார்த்தபொழுது, இப்பிராமணன் இருப்பதைக்கண்டு, ஐயா "நீர் யார்?" என்று வினவ, அப்பொழுது பிராமணன் தான் காசியாத்திரைக்குப் போகிறதாகவும், மழைக்காக வந்து ஒதுங்கியதாகவும் சொல்ல, குயவன் உடனே அவனுக்கு உபசார வார்த்தைகளைச் சொல்லி உள்ளே அழைத்துக் கொண்டுபோய், படுக்கைக்கு இடம் சரிப்படுத்திக்கொடுத்து, தான் சூளைக்கு வைத்திருந்த சருகுகளில் கொஞ்சம் கொண்டு தீமூட்டி குளிர்காயும்படி சொல்லி, அவனோடு பேசிக்கொண்டிருக்கையில், அப்பிராமணன் வாயில் பாக்குக் கொட்டையைப் போட்டுக் கடித்துக்கொண்டிருக்கிறதைக் கண்டு, "ஐயா, தங்கள் வாயில் என்ன இருக்கிறது" என்று கேட்டான். அதற்கு அந்தப் பிராமணன், "ஒன்றுமில்லை; தெருப்புறத்து மாடக்குழியில் ஒரு பாக்கு இருந்தது; அதை எடுத்து, குளிர்மட்டாயிருக்குமென்று வாயிற் போட்டு மெல்லுகிறேன்" என்றான். அதைக்கேட்டுக் குயவன், மூடனாகையால் நகைத்துத், தன்னருகிலிருந்த மனைவியைப் பார்த்து, "அடி, ராமி, நான் மத்தியானம், இந்தப் பாக்கைக் கடித்துக் கடித்துப் பார்த்தும் முடியாமல் அதை மாடக்குழியில் போட்டு வைத்தேன். அதை ஐயர் கடித்துப் போட்டார். ஐயருக்குப் பல் மிகவும் பலமுள்ளதுபோலிருக்கிறது" என்றான். இவ்வார்த்தைகளைக்கேட்ட பிராமணன் "ஓகோ மோசம்போனேனே. சூத்திரர்களுக்குச் சாதம் போட்டபின் மிகுந்ததைச் சேஷமென்று பிராமணர்கள் சாப்பிடார்களே! அப்படியிருக்க நான் சூத்திரன் எச்சிலை யருந்தும்படி நேரிட்டதே! இப்படியும் எனக்குத் தலைவிதி யிருந்ததே! ஆ, தெய்வமே! வைகுண்டவாசா! கோவிந்தா! கோபாலா! நாராயணா! வென்று மிகவுந் துக்கப்பட்டுக்கொண்டு அன்றிரவெல்லாம் தூக்கம் பிடிக்காமல் விடிந்து அக்குயவனுக்கும் சொல்லாமல் புறப்பட்டு,

அருகில் ஒரு விஷ்ணுஸ்தல மிருக்கிறதென்று கேள்விப்பட்டு அங்கேபோய், அங்கிருந்த ஒரு வைணவ குருவைக்கண்டு தன் வர்த்தமானத்தைச் சொல்லித் தான் சூத்திரன் எச்சில் தின்ற பாவத்தைப் போக்க வழி சொல்லும் என்று கேட்டான். அப்பொழுது அவர் நீ காசிக்குப்போய், ஸ்நானம்செய்து வரும் பொழுது ஜெகநாதத்திற்குப் போய் பெருமாளைச் சேவித்துக்கொண்டு வா வென்று விடை கொடுக்க, அப்படியே இப்பிராமணனும் மீண்டும் தன் பிரயாணத்தை ஆரம்பித்தான்.

இவ்வாறு வெகுநாள் பிரயாணம் செய்து காசிக்குச்சமீபத்தில் போகும்பொழுது, ஒருநாள் அவனுக்கு ஏகாதசி விரதம் நேரிட்டது. அன்று முழுதும் ஒன்றும் சாப்பிடாமல் விரதமிருந்து மறுநாட்காலையிலெழுந்து, ஸ்நாநம் ஜெபதபம் முதலானவைகளை முடித்துக்கொண்டு துவாதசியில் விரத முடிப்பதற்குப் போஜனத்திற்கு வழியில்லாமல் பாலாகிலும் வாங்கிச் சாப்பிடலாம் என்று, அங்கிருந்த ஓர் இடையன் வீட்டிற்குப்போய், பால் இருக்கிறதோ என்று கேட்க, அவ்விடையன் இருக்கிறதெனறு இரண்டு ஆழாக்குப் பால் வார்த்துக் கொடுத்தான். அதைக் குடித்தும் பசியடங்காததினால், இன்னும் ஒரு ஆழாக்குப் பால் கொண்டு வாவென்று கேட்டான். இடையன் சரி என்று உள்ளேபோய் தன் மனைவியை இன்னும் கொஞ்சம் பால் ஐயர் கேட்கிறார் கொடு என்று கேட்க, அதற்கு அவன் மனைவி இல்லை என்றாள். இடையன், தன் மனைவியைப் பார்த்து நான் ஒருபடி பால் கறந்துகொண்டு வந்தேனே, அது எங்கே? என்று கேட்க அவள், பாலைவாங்கிக் கீழே வைத்து விட்டு நெருப்பு எடுக்கப்போய்த் திரும்பி வந்து பார்த்தபொழுது 'நமது இடை காக்கிற நாய் குடித்துக்கொண்டிருந்தது. நான் பின்பு அதைத் தூரத்திவிட்டேன். அவ்வளவுதான் மிச்சம்' என்றாள். இந்தப் பிராமணன் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று உற்றுக் கேட்டிருந்தபொழுது இந்தச் செய்தி காதில் பட்டவுடனே, முன்னிலும் பதின்மடங்கு விசனமுற்று 'தெய்வ சங்கற்பம் இப்படியும் இருந்ததோ! பறையன் பார்க்கப் போசனம் பண்ணினாலும் பண்ணலாம்; நாய் போசனத்தைப் பார்க்கவும் கூடாது என்று சாஸ்திரமிருக்கின்றதே. அப்படியிருக்க நாயின் எச்சிலையருந்தலாயிற்றே என்று துக்கப்பட்டுக்கொண்டு காசிநகரத்தையடைந்து, அவ்வூரிலுள்ள தமது ஆசாரியர் ஒருவரைக் கண்டு தன் சங்கதிகளைச் சொல்லித் தன் பாவத்தைப் போக்க வழி சொல்ல வேண்டுமென்று மன்றாடிக் கேட்டான். அவ்வாசிரியன் இவனிடத்தில் அன்புகூர்ந்து, நீ பயப்படவேண்டாம்; எவ்விதப்பாவமும் இக் காசிநகரத்தையடைந்தால் சூரியன் முன்னின்றபனிபோல் நீங்கும். நீயும் கஷ்டத்தைப் பொறுத்துக்கொண்டு, இப் புண்ணியஸ்தலத்தை யடைந்தாய்: உனக்கு இனி என்ன குறைவு; நல்லது இக்காசியில் விசேஷ தீர்த்தமாகிய கங்கையாற்றில், ஜனங்கள் நடமாடாத இடத்திற்குப் போய், நீர்க்குள் முழுகிக்கொண்டு



நான் சொல்லுகிற மந்திரத்தைச் சொல்லி முடிந்தபின் தலையை வெளியே எடுக்கவேண்டும். இப்படி நமது பெருமாள் அவதாரம் பத்தையும் குறித்துப் பத்துத்தடவை முழுகுவையானால், உன்பாவம் அதோகதியாகி விடுமென்று ஒரு மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்தார்.

இது நிற்க, அக்காசிநகரத்தில் கீழ்குலத்தானாகிய ஓர் பறையன் இருந்தான். அவன் தகப்பன் விருத்தாப்பியத்தினால் மரணமடைய, அவன் தனக்கு ஆசானாகிய ஒரு வள்ளுவனிடஞ் சென்று தன் தகப்பன் இறந்து போனான் என்றும் அதற்குச் செய்யவேண்டிய சடங்குகள் என்னவென்றும் கேட்டான். அதற்கு அவ்வள்ளுவன், உன் தகப்பனை இன்றைக்குத் தீயிலிட்டுச் சுட்டு, நாளைக்குக் காலை அவன் எலும்பைப் பொறுக்கிக் கொண்டு போய், கங்கையாற்றிற் போடுவாயானால், உன்தகப்பன் பாப்பாரைப்போல கரையேறிப்போவான். ஆனால் நீ பறையனாகையால் ஒருவரும் இல்லாத துறைக்குப் போகவேண்டு மென்றான்.

இதைக்கேட்ட அந்தப் பறையன், தன் தகப்பன் பிராமணர்களைப் போல மோட்சத்தை அடைவான் என்று வள்ளுவன் சொன்ன கருத்தை யறியாமல் தன் தகப்பன் பிராமண வேடம்பூண்டு உயிர்மீண்டுக் கரையில் ஏறிவருவான் என்று நினைத்துக்கொண்டு உடனே போய்த் தகப்பனை மசானத்தில் தகனஞ் செய்து மறுநாட்காலையிலெழுந்து, எலும்புகளை எல்லாம் ஒரு மட்பாண்டத்தில் வைத்துக்கொண்டு ஜனங்கள் நடமாடாத இடத்தை நாடிச்சென்றான். அப்பொழுது, அத்துறையிலேயே முன்சொன்ன சிவத்துவேஷாச்சாரியும் போய் முழுகித், தன் குரு சொன்னபடியே செபத்தைச் சொல்லிக் கொண்டிருந்தான். அந்த மந்திரம் நீண்டதாகையால் ஒருதரம் முழுகி யெழுந்திருக்கச் சுமார் கால்நாழிகை செல்லும். இந்தப் பறையன் அங்கேபோய்ச் சேர்ந்த அப்பொழுதுதான் நீர்க்குள் முழுகி, நரசிம்மாவதாரத்தைக் குறித்து ஜெபித்துக்கொண்டிருந்தான். அதையறியாத இப்பறையன் தன்கையிலிருந்த மட்பாண்டத்தைத் தண்ணீரில் போட்டு நின்றான். சற்றுநேரத்திற்கெல்லாம் அப்பிராமணன் உடனே தலையை வெளியேதூக்க, இப்பறையன் அவ்வள்ளுவன் சொன்னபடி தகப்பன் பிராமணனாகிக் கரையேறினானென்று மிகவும் சந்தோஷப்பட்டு அப்பிராமணனுக்குச் சமீபமாய்ச் சென்று, எனனைப்பெற்ற அப்பா! வாடா, என்று அவனைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டான். அப்பிராமணன் இதென்ன மோசமாயிருக்கிறதே; கிணறு வெட்டப்பூதம் புறப்பட்டதுபோல், நாம் பாவம்தீர்க்க வந்தவிடத்தில், இச்சண்டாளன், நம்மை அவன் தகப்பனென்று அழைக்கின்றானே என்று கோபங்கொண்டு, அடா, துஷ்டா, பிரஷ்டப் பயலே, பிராமணர்கள் நிழலும் உன்மேற்படக்கூடாதே; நீ என்னைத்தீண்டி அப்பா என்று அழைக்கிறாயே; இது என்ன? உனக்கு நாசகாலம் நேரிட்டிருக்கிறது போலிருக்கிறது என்று கோபித்தான். அதற்கு

அப்பறையன் "என்னடா எங்கப்பா உன்மகனை நீ மறந்துவிட்டாயா? இப்பொழுது நீ பிராமணனாய்ப் போனதினால் மேலே பறக்கிறாயோ? போன மாசம், நீ சௌக்கியமாயிருந்தபொழுது, நாமெல்லாம் மாடடித்து விருந்துண்ணவில்லையா? உனக்குப் பூணூல் ஒரு கேடா? என்று சொல்லி அப்பிராமணன் பூணூலையும் அறுத்து அவன் என்னசொல்லியும் கேளாமல், அவன தப்பியோடவும் இடங்கொடாமல் பிடித்த பிடியில் வீடுகொண்டுவந்து சேர்த்துத், தன் பந்துக்களுக்கெல்லாம் சொல்லி எல்லாரையும் விருந்துக்கழைத்துப். பெருமாமிச முதலானவைகளைக்கொண்டு விருந்தளித்தான். இப்பிராமணன் சாப்பிட மனங்கொள்ளாமல் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கக்கண்டு அப்பறையன் தான் ஊட்டிவிட்டால்தான் தன் தகப்பன் சாப்பிடுவானென்று சொல்லித் தன் கையிற் கறித்துண்டையும் சோற்றையும் எடுத்து அவன் வாயில் திணித்தான். பிராமணன் "ஐயோ, பெருமானே! உம்மை நம்பியிருந்த எனக்கு இக்கதி நேரிட்டதே! கிருஷ்ணாவதாரத்தில் துரியோதனாதிகளைக் கொன்று பாண்டவர்களை இரட்சித்தீரே! இப்பொழுது அடியேனை மறந்து எவ்விடம் சென்றீர்" என்று துக்கப்பட்டுக்கொண்டு அன்று இராத்திரி அஸ்தமானமாகி இருட்டினவுடனே சமயம்பார்த்து, சண்டாளத்துவத்தினின்றுந் தப்பி, சிவனையும், சிவனடியார்களையும் மிஞ்சிப் பகைத்ததினாலன்றோ இக்கேடுகள் விளைந்தன; இனித் தன்னுயிர்போல் மன்னுயிரை நேசிக்கவேண்டுமென்று எண்ணி, தப்பியோடித் தன்னூர்போய்ச் சேர்ந்தான்.

படிப்பினை.—இதினால் யாவராயினும், ஜாதித் துவேஷத்தாலும் மதத்துவேஷத்தாலும் பிறரை யிடைவிடாது பகைக்கிறவர்கள், இச் சிவத்துவேஷாச்சாரியைப்போல பலவிதமாய் அவமானமடைந்து துன்பப்படுவார்களென விளங்குகிறது. ஆகையால் நாம் "உன்னைப்போல் உன் பிறனை நேசி" என்னும் வாக்கியத்தைக்கைக் கொள்வோமாக.

## சுகாதார விதிகள்.

நாம் பிறந்தவுடன் முதல் முதல் உட்கொள்ளுவதும் வாயுதான்; இறக்கும்போது கடைசியாக வெளியேவிடுவதும் வாயுதான். போஜனமில்லாமல் நாம் பலநாள் ஜீவித்திருக்கலாம்; ஆனால் வாயுவில்லாமல் சில நிமிஷங்கள்கூட உயிரோடிருப்பது அசாத்தியம். உயிருக்கு அத்தியந்த அவசியமாகிய இந்தவஸ்து உலகமெங்கும் ஏறக்குறைய ஐம்பது மயில் உயரம் பரவியிருக்கின்றது.



ஆதலால் தான் வாயுப் பஞ்சங் கிடையாது. வீட்டிலுள்ள கதவுகளையும், பலகணி (ஜன்னல்)களையும் அடைத்துக்கொண்டு உள்ளே படுத்திருப்பதால் வாயுப் பஞ்சமுண்டாகி மடிகிற ஜனங்கள் சிலர்தான். ஆனால் அசுத்த வாயுவைச் சுவாசித்து வியாதிப்பட்டு மரிப்போர் பலர். ஆதலால் வாயு அசுத்தமாவதற்குரிய காரணங்களை கூடியவரை அகற்றிச் சுத்த வாயுவைச் சுவாசித்து வரவேண்டும்.

நாம் சுவாசிக்கிற வாயுவில் விசேஷித்த இரண்டு வாயுக்கள் உண்டு. ஒன்று ஜீவனுக்கு ஆதாரமாகிய பிராணவாயு; மற்றது உப்புவாயு; பிராணவாயு ஒரு பங்கானால் உப்புவாயு நாலு பங்காக அதனோடு சேர்ந்து அதன் உக்கிரத்தைத் தணிக்கிறது. இவைகளோடு கரி அமலவாயுவும், நீராவியும் கொஞ்சங்கலந்திருக்கிறது. இந்த நாலு வாயுக்களும் சரியான அளவாய் அமைந்திருக்கும்போது வாயு சுத்தமாயிருக்கிறதென்று சொல்லலாம். ஆனால் இந்த அளவு பேதப்பட்டாலும், வேறு விஷவாயுக்கள் இவைகளுடன் கலந்தாலும் வாயு அசுத்தமாகிறது.

வாயு அசுத்தமாவதற்கு முதற்காரணம் ஜீவஜெந்துக்கள் சுவாசிப்பது. நாம் சுவாசிக்கையில் சுத்தவாயு உள்ளே சென்று ஏராளமான கரி அமலவாயுவும் கொஞ்சம் நீராவியுமாக வெளியேவர, வாயுக்களின் அளவு பேதப்பட்டு ஆகாயம் கெட்டுப்போகிறது. முன் ஒருநாள் கல்கத்தா நகரில் இருபது அடி சதுரமுள்ள இருட்டறையில் அடைக்கப்பட்ட 146 பேரில் 23 பேர் மாத்திரம் மறுநாட்காலையில் குற்றுயிராயிருந்தார்கள். மற்றவர்கள் பிரேதங்களாக எடுக்கப்பட்டார்கள். அடைபட்டவர்கள் சுவாசிக்கச் சுவாசிக்க நல்ல ஆகாயம் குறைந்து அசுத்த ஆகாயம் அதிகப்பட்டதே இந்த அகாலமரணத்துக்குக் காரணம். ஆதலாற் சிறிய வீடுகளில் அநேகர் கூட்டமாக வாசஞ்செய்யலாகாது. மேலும் அசுத்த ஆகாயம் நீங்கி சுத்த ஆகாயம் தாராளமாய் வரத்தக்கதாக ஒன்றிற்கொன்று எதிராயிருக்கிற கதவுகளும் பலகணிகளும் பகற்காலங்களில் நன்றாய்த் திறக்கப்பட்டிருக்கவேண்டும். இரவிலும் அப்படியே அசுத்த ஆகாயம் வெளியேபோகவும், சுத்த ஆகாயம் உள்ளேவரவும் வழியிருக்கவேண்டியது அவசியம்.

ஆகாயம் அசுத்தமாவதற்கு இரண்டாங்காரணம் நெருப்பு எரிவது. பிராணவாயு ஜீவனுக்கு ஆதாரமாயிருப்பதுபோலவே நெருப்பு எரிவதற்கும் அது ஆதாரமாயிருக்கிறது. எப்படி மனிதன் கரி அமலவாயுவை வெளியே விடுகிறானோ அப்படியே நெருப்பு எரிவதால் கரி அமலவாயுவுண்டாகி ஆகாயங்கெடுகிறது. ஆதலால் ஆகாயம் தாராளமாய் வந்துபோக ஏதுவில்லாத அறைகளில் அனேக விளக்குகளை வைக்கப்படாது. மேலும் படுக்கை அறையில் பெரிய விளக்குகளை வைத்து இராவெல்லாம் எரியவிடும் வழக்கத்தைத் தவிர்க்கவேண்டும்.

ஆகாயம் அசுத்தமாகிற மூன்றாங்காரணம் வஸ்துக்கள் அழுகிப்போவது. ஜீவஜெந்துக்களும் புல் பூண்டு முதலியவைகளும் அழுகிப்போவதால் சில விஷவாயுக்களுண்டாகி ஜனங்கள் நூற்றுக்கணக்காய் மடிந்து போக நேரிடுகிறது. ஆதலால் நமது வீட்டிலுள்ள சாக்கடைகளை மகா சுத்தமாய் வைத்திருப்பதோடு குப்பை முதலியவைகளை வீட்டுக்கு வெகு தூரத்திற்போட்டு, வாழைப்பழத்தோல் முதலிய அழுகக்கூடிய வஸ்துக்கள் வீட்டுக்கருகாமையிலிராதபடி பார்க்கவேண்டியது. எவ்வகையான துர்நாற்றமுமுண்டாகாதபடி வீட்டையும் முற்றங்களையும் அடிக்கடி பெருக்கிச் சுத்தஞ்செய்யவேண்டும். தரை ஈரமாயிருக்குங் காலங்களிற்றான் வஸ்துக்கள் அதிகமாய் அழுகி நாறும். புல் பூண்டு அழுகிப்போவதால் விஷசுரமுண்டாகிறதெனப் பொதுவாய்ச் சொல்லுகிறார்கள். ஆதலால் மழைக்காலங்களில் வீடும், வீட்டுக்கருகாமையிலுள்ள இடங்களும், நமது தேகமும் சுத்தமாயிருக்கப் பார்க்கவேண்டும்.

REGISTERED ... 1901 MADRAS.

# ஜனப்பிரியன்.

மாதம் ஒருமுறை பிரசுரம் செய்யப்படும்.

புஸ்தகம். 1] சென்னை 1901௵ மே௴ [இலக்கம். 11

## பெற்றோர்பால் நம் கடமையாது?

“அன்னையும்பிதாவு முன்னறிதெய்வம்” என்று தெய்வப்புலமை ஔவையார் கட்டளையிட்டிருக்கும் பிரமாணத்தை யாவரும் கவனித்து ஒழுகவேண்டுவது அத்தியாவசியகம். ஒவ்வொருவனும் தான் சிசுவாகப் பிறந்த காலந்தொட்டு யௌவன பருவம் அடையுமளவும் மாதா பிதாக்களாலேயே முற்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றான். அவர்கள் அக்காலத்தில் தன்னைக் குறைவறப் பரிபாலிக்காவிடில் அவன்கதி என்னாய் முடியும்! மீன் முதலிய சிறு பிராணிகள் உயிர்பெற்று உலகத்தில் தோன்றியவுடனே தத்தம் மாதாவின் பராமரிப்பு இல்லாவிடினும் ஒரு கால் தமது இயற்கை யறிவினால் தமக்கு வேண்டிய ஆகாரவகைகளைத் தேடிக்கொண்டு ஒருவாறாகப் பிழைத்தல் கூடும். மனிதராகிய நாமோ பிரதமத்தில் மாதாவின் பரிவின் விசேஷத்தினாலேயே வளர்ந்துவரவேண்டியதாயிருக்கின்றது. நாம் சிசுக்களாக மாதாவின் கருப்பாசயத்தில் தங்கியிருந்த காலத்து நம்மைப் பத்துமாதம் வரையில் சுமந்தபோதும் பிறகு நம்மை ஈன்றெடுத்தபோதும் நமக்குப் பிணி முதலிய வராமல் தன்னுயிரினும் நம்மை அதிக மேம்பாடாக இரவில் உறக்கமற்றுங் காப்பாற்றி வந்தபோதும் அவள் பட்டபாட்டை அளக்க யாரால் முடியும்? பட்டினத்துப்

பிள்ளையாரென்னும் மஹாஞானியர் தாயின் பரிவைப்பற்றி, "ஐயிரண்டு திங்களா வங்கமெல்லா நொந்து பெற்றுப், பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு, கைப்புறத்திலேந்திக் கனக முலைதந்தாள்" என்றும், "முந்தித்தவமிருந்து முந்நூறு நாட்சுமந்து, அந்திபகலாய்ச் சிவனை யாதரித்துத் - தொந்தி, சரியச் சுமந்து பெற்றதாய்" என்றும், "வட்டிலிலுந் தொட்டிலிலு மார்மேலுந் தோள்மேலுங், கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச், சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்" என்றும், "நொந்து சுமந்து பெற்று நோவாமலேந்தி முலை, தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல், கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்" என்றும் பலவாறாக வியந்து கூறியிருக்கின்றனர். அகப்பற்று புறப்பற்று என்னும் சகல பற்றுக்களையும் அறவே விட்டொழித்த பெருந்துறவியாகிய அம்மஹானும் மாதாவின் பரிவென்னும் பற்றைக் கடைநாள் வரையில் விட்டிலர். இது தான் மனிதனிட தருமம்.

நமக்கு விதிவிலக்குகளைக் காட்டவல்ல கல்வியைக் கற்பித்தும் உணவு ஆடையாதிகளைப் பலவாறாக மெய்வருந்திச் சேகரித்துக் கொடுத்தும் நம்மைப் பரிவுடன் பாராட்டிவந்த பிதாவும் அன்னையைப்போலவே முதல தெய்வமாவார். பிதா ஐந்துவகையான ஆசிரியர்களுக்குள் ஒருவரா யிருக்கின்றாரென்று சாஸ்திரம் முறையிடுகின்றது. மாதா பிதாக்கள் நமக்குப் போதித்துக் கொண்டு வரும் விஷயங்களெல்லாம் நமக்கு நன்மையைத் தரவேண்டு மென்கின்ற நல்ல எண்ணத்தினாலே தான். விதி விலக்குகளை யுணரவல்ல பகுத்தறிவு நமக்கு வருகிறமட்டும் அவர்கள் சொற்படி நாம் நிற்கவேண்டும். இது காரணம்பற்றியே "தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" என்றும், "தாய் சொற்றுறந்தொரு வாசகமில்லை" என்றும் பிரமாண மிருக்கின்றது. நமக்குப் பூரணமாகப் பகுத்தறியும் கல்வியில் அபிவிருத்தி யுண்டான பிறகும் அவர்களுடைய நற்புத்தி போதனங்களை நாம் அலட்சியம் செய்யலாகாது. ஏனெனில், அவர்களிடத்து நெடுநாளைய அனுபவ விசேஷம் இருக்கின்றது. நாம் பெற்றோரினும் மிக்க கல்வி அபிவிருத்தியையும் விவேக விளக்கத்தையும் கொண்டிருக்கும் காரணத்தினால் அவர்களுடைய நியாயங்கள் நமக்குத் தீமையை விளைக்கத்தக்கனவென்று நாம் அபிப்பிராயப்படுகிற பட்சத்தில், அவர்களுக்குச் சித்த சமாதானத்துடன் உண்மையை விளக்கி அவர்களுடைய அங்கீகாரத்தைப பெற்று நாம் ஒரு காரியத்தில் பிரவர்த்திக்க வேண்டியது. இந்த மரியாதையைக் காட்டினும் வேறுகைம்மாறு நாம் அவர்களுக்குச் செயற்பாலதுயாது! மாதா பிதாக்களுக்கு அடியிற்கண்டபடி கைம்மாறு நாம் செய்தல்கூடும்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்னைச்
சான்றோ னெனக் கேட்டதாய்"

தன்னுடைய புத்திரன் கல்வி அறிவு ஒழுக்கங்களில் மேம்பட்டிருக்கின்றானென்று பலரும் மெச்சிக்கூற அதைக்கேட்ட தாயானவள் அவனைப்பெற்ற காலத்தில் அடைந்த மகிழ்ச்சியினும் அதிக மகிழ்ச்சியை அடைவாள்.

"மகன் றந்தைக் காற்றுமுதவி யிவன்றந்தை
யென் னோற்றான் கொல்லெனுஞ் சொல்"

யாதொரு பிள்ளையானவன் தான் அறிவினாலும் ஒழுக்கத்தினாலும் விசேஷப்பட்டிருத்தலைக் கண்டு இப்படிப்பட்ட அரிய புதல்வனைப் பெறுதற்கு இவன் பிதா என்ன தவஞ்செய்தானோ என்று பிறர் சொல்லும்படி நடந்துகொள்ளுவதே தான் தந்தைகளுக்குச்செய்யும் பெருத்த உதவியாகும்.

இவ்விரண்டு குறட்பாக்களில் கூறப்பட்டுள்ளபடி ஒருவன் நடந்துகொண்டு வருவானாகில் அதுவே "தந்தைதாய்ப்பேண்" என்று ஔவையார் கூறியபடி நடப்பதாகும். அன்றியும் அது அவர்களுக்கு நாம் செயற்பாலதாகிய பெருத்த கைம்மாறாகும். அவர்கள் விஷயத்தில் செய்நன்றி பாராட்டாதிருத்தல் எவ்வளவும் தருமமன்று. "மனுவானவர் தமது தருமசாஸ்திரத்தில் ஒருவன் தாய் தந்தையர்பால் நன்றி பாராட்டி ஆயுள்வரையில் அவர்களுக்கு ஜீவனும்சம் கொடுக்கவேண்டியதென்று கூறவில்லை. மனைவி, மக்கள் முதலியவர்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமைப்பாட்டைப்பற்றி மாத்திரம் அவர் கூறியிருக்கின்றனர். ஆகையால் நான் என் மாதா பிதாக்களுக்கு ஜீவனும்சம் தருவதற்குக்

கடமைப்பட்டவனல்லன்." என்று நியாஸ்தலத்தில் சிலவருஷங்களுக்கு முன் ஒருவர் வாதித்தபோது நியாயாதிபதி அவரை நோக்கித் "தாய் தந்தையரிடத்து நன்றிபாராட்டாத வன்னெஞ்சன் உலகத்திலிருக்கவேமாட்டான், அவர்கள் பால் ஒருவன் நன்றியறிதலாகச் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றி வற்புறுத்தித் தருமசாஸ்திரத்தில் கூறுவது அநாவசியமென்று கருதியே மனு அந்த விஷயத்தை விட்டிருத்தல் வேண்டும்." என்று தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்து அக்கட்சிக்காரருக்குச் சமாதானங் கூறினராம். ஸ்ரீராமர் தமது தாய் தந்தையரின் கட்டளையை மறுப்பது யுக்தமன்றெனக்கருதி இராஜ்ஜியத்தைத் துறந்து வனம் புகுந்ததும், தனது மாதாவாகிய குந்திதேவி அருச்சுனன்மேல் இரண்டாவது கணைதொடுக்க வேண்டாமென்று குறையிரக்க அதற்கேற்றபடியே கர்னன் தன் குரோதத்தையும் ஒரு பொருளென மதியாது மாதாவின் வாக்கியத்தைப் பரிபாலித்ததும் சிறந்த அறங்களாம். அப்படிப்பட்ட ஒழுக்கங்களைக் கவனித்து நடப்பதே நமது பெருங் கடமையாகும்.

---

## நீடிய ஆயுளும் நல்வாழ்வும் தரும் மருந்து.

"நீடிய ஆயுளும் நல்வாழ்வும் பெற விரும்புவோர்க்கு ஓர் மருந்து!" என ஒருவன் தெருவில் கூவிக்கொண்டு போவதைக்கேட்ட ஒரு கன்னிகை, தன் தகப்பனாரிடம் ஓடி அந்த ஔஷதத்தை எப்படியாயினும் வாங்கித் தரவேண்டுமென்று வருந்திக்கேட்டாள். தகப்பனும் அம்மனிதன் கூவுஞ் சப்தத்தைக்கேட்டு, வியப்புற்று, அவனை அழைத்து, நீடிய ஆயுசும் நல்வாழ்வுந் தரத்தக்க ஓர் மருந்து உண்டோ? உன்னிடத்திலிருக்குமாயின், அம்மருந்துக்காக என் ஆஸ்தியெல்லாம் வேண்டுமானாலும் தந்துவிடுகிறேன் என்றான். அம்மனிதன் புன்னகையோடு ஐயா! நீர் அந்த மருந்துக்காக காசுபணங் கொடுக்கவேண்டியதில்லை. 'நீ நா கா' என்னும் கட்டளைக்குக் கீழ்ப்படிவதே அம்மருந்து என்றான். இம்மருந்து நமது ஆயுசை நீடிக்கச்செய்து, எப்போதும் பாக்கியசாலிகளாயிருக்கச்செய்கிறதென்பது மெய்யே. ஆயினும் இச்சத்தியம் இலகுவில் நமது மனதில் உதிக்காது. துக்கம் துன்பமடைந்து,



சண்டைசச்சரவுசெய்து, சங்கடப்பட்டு, மனவருத்தமடைவோர்க்குச் சொற்ப ஆயுசும் சஞ்சலவாழ்வுமுண்டென்று சாஸ்திரிகள் சொல்வதைக் கேட்டிருப்பதோடு நமது அநுபோகத்திலும் கண்டிருக்கிறோமே. இப்படி ஆயுசு குறைவதற்கு நாவைக் காவாதிருத்தலே காரணம். வீட்டுக்குள்ளிருந்து குடும்பகாரியங்களைக் கவனித்துவரும் மாதர்களுக்குள் நேரிடும் வாக்குவாதங்களும், கேடுபாடுகளும், மனச் சஞ்சலமும், பொதுவாய் நாவை அடக்காத ஒரே துர்க்குணத்தால் தான் உண்டாகிறதென்று எல்லாரும் எளிதில் அறிந்துகொள்ளலாம்.

"யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு."

கப்பல்கள் மகாபெரியவைகளாயிருந்தாலும், கடுங்காற்றுகளால் அடிபட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போக யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவுஞ் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும். அப்படியே நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்திவிடுகிறது! நாவும் நெருப்புத்தான். அது அநீதிநிறைந்த உலகம். நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைபடுத்தி, ஆயுள்சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும் இருக்கிறது. சகல விதமான மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள், நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷ சுபாவத்தால் அடக்கப்படும். அடக்கப்பட்டதுமுண்டு. நாவை அடக்க யாரால்கூடும்? அது அடங்காத பொல்லாங்குள்ளதும், சாவுக்கேதுவான விஷம்நிறைந்ததுமாயிருக்கிறது. இப்படிப்பட்ட அடங்கா நாவை அடக்கி ஆளுவோரே அதிசிரேஷ்டர். நீடித்துச் சுகித்திருக்க விரும்புவோர் தவிர்க்க வேண்டிய சில குணங்களை இதனடியில் வரைகிறேன்.

1. **தீங்குபேசுதல்**:—வேலையற்று வீட்டில் சும்மா உட்கார்ந்திருக்கும் மாதர் அடிக்கடி இக்குற்றத்துக்குள் அகப்படுகிறார்கள். நாம் ஒன்றுஞ்செய்யாமல் எப்போதாவது இருக்க முடியவே முடியாது. வேலை செய்வோம், படிப்போம், யோசிப்போம், தூங்குவோம், அல்லது அலப்பிக்கொண்டிருப்போம். அலப்புவதிலிருந்து தான் தீங்கு விளைகிறது. அலப்புவதால் தான் அடுத்தவரைக் கெடுத்துப் பேசுகிறோம். அலப்புவதால் தான் நாம் சிறுவர்களாயிருக்கையில் கற்ற "பழிப்பன பகரேல்," "சுளிக்கச் சொல்லேல்," "வாதுமுற் கூறேல்," "கீழோராயினுந் தாழவுரை," "மிகைபடச் சொல்லேல்,' "புண்படவே வார்த்தைகளைச் சொல்ல வேண்டாம்" என்னும் நீதிவாக்கியங்களை மறந்து அவைகளுக்கு நேர் விரோதமாக நடக்கிறோம். நாம் பேசுந் தீங்கானசொற்கள் பிறர் காதில் விழ, அவர்கள் நம்மோடு சண்டைக்கு வரவே, நாமும் கொதித்து எழும்பி,

"தீயினால் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே
நாவினால் சுட்ட வடு."

என்பதைக் கிஞ்சித்தேனும் கவனிக்காமல் கண்டபடி திட்டி இவ்விதமாய் சமாதானக் குறைச்சல் உண்டுபண்ணி, பகை, குரோதம், வைராக்கியங் கொண்டு, சுகத்தைக் கெடுத்து, நமது ஆயுளைக் குறைத்து விடுகிறோம்.

"சொல்லுக சொல்லிற் பயனுடைய; சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்."

2. பொய் பேசுதல்:—இத்துர்க்குணம் நமது தேசத்தவர்க்குள் குடிகொண்டிருக்கிறதென்று அன்னியதேசத்தார் எடுத்துரைப்பதற்கு இடமிருக்கிறது. "சத்தியம் ஜனவிரோதம், அசத்தியம் ஜனரஞ்சிதம்" என்றாற்போல் நடக்கிறவர்கள் எத்தனை? அழும் தங்கள் பிள்ளைகளை அமர்த்த, அழுகிற பிள்ளைகளைப் பிடிக்க இதோ! கள்ளன் வருகிறானென்றும், அதோ! பூச்சியென்றும் அபத்தம்பேசிப்பிள்ளைகளைக் கெடுக்கும் தாய்மார் எத்தனை! உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்வதற்குப்பதிலாக, அயலாரோடு அபத்தம்பேசிப் பிறர்கீர்த்தியைக் கெடுக்கக் கட்டுக்கதைகள் கட்டி "கண்டொன்று சொல்லேல்," "காணாத வார்த்தையைக் கட்டுரைக்க வேண்டாம்" என்னும் அமிர்த வசனங்களை அசட்டை செய்து தங்களுக்குத் துக்கத்தை வருவித்துக் கொள்கிறவர்கள் எத்தனை? உணவுக்கு உப்பு எவ்வளவு அவசியமோ, எல்லா அக்கிரமங்களுக்கும் பொய் அவ்வளவு அவசியமாகக் காணப்படும். உதாரணமாக, திருடுகிறவர்கள் தங்கள் தப்பிதத்தை மறைக்கப் பொய்யென்னுஞ் சொக்காய்க்குள் நுழைவார்கள். பொய்க்குக் காலில்லையாதலால் அது நிலைபெறாததுகண்டு, துணைக்கால் கொடுக்கப் பொய்யின்மேல் பொய்பேசி, அவமானப்பட்டு, தங்கள் சொற்ப ஜீவகாலத்தை நிர்ப்பாக்கியத்தில் கழிப்பார்கள். திருட்டு அயோக்கியமாம். கொலை கூடாதாம். பொய் எல்லாருக்கும் சகசமாம். தலைபோகிற காரியத்துக்குப் பொய் தாராளமாய்ப் பேசலாமாம். "பொய்பேசுகிற வாய்க்குப் போஜனமில்லை" என்றும் "நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்" என்றும் "இறந்தாலும் பொய் தன்னைச் சொல்லவேண்டாம்" என்றும் நாம் படித்த நீதிவாக்கியங்கள் ஏட்டுச் சுரைக்காயோ? ஏட்டுச் சுரைக்காயானால் அவைகளைப் படிக்கிறதில் பலனென்ன? களவு கொலையிலும் பதின்மடங்காய்ப் பொய்யை அருவருத்தாலன்றி நமக்குச் சமாதானமும் நீடிய ஆயுளும் கிடைக்கப் போகிறதேயில்லை.

3. கோட்சொல்லுதல்:—இது மெத்த அவலட்சணமான குணம். மிகுதியான சண்டை சச்சரவுகள் கோட்சொல்லுகிறவர்களாலேயே உண்டாடாகின்றது. "கோட்செவிக் குறளை காற்றுடை நெருப்பு" என்றாற்போல் இவர்கள் ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டுக்குப் போய், ஒருவர் காரியத்தை



மற்றவர்களிடத்தில் சொல்லிப் பகைவரின் பகையை விர்த்தியாக்குவார்கள். இவர்கள் ஒழிந்தால் பாதிச்சண்டை ஒழியும். கோட்சொல்லிப் பிழைக்கலாமென்று இவர்கள் இருந்தபோதிலும் இவர்கள் வஞ்சகம் இரண்டு நாளில் பட்டப்பகல்போலாக, வெட்கத்தால் முகம் நாணி, துக்கத்தில் மூழ்கி சஞ்சலத்தில் காலங் கழிப்பார்கள். இவர்களுக்குச் சுகமேது? நல்வாழ்வு எங்கிருந்து வரும்? "ஊரோடுங் குண்டுணியாய்த் திரியவேண்டாம்," "புறஞ்சொல்லித் திரிவாரோ டிணங்க வேண்டாம்."

4. இச்சகம்பேசுதல்:—இச்சகம் பேசுகிறவர்களின் மத்தியில் வாசஞ்செய்வதிலும் கழுகுகளின்மத்தியில் வாசஞ்செய்வது வாசி; ஏனெனில் கழுகுகள்செத்த சரீரத்தை மாத்திரஞ் சாப்பிடும். இச்சகம் பேசுகிறவர்களோ உயிரோடு சரீரத்தையும் பட்சித்து விடுவார்கள். இவர்கள் வாயிலிருந்து மதுரமான மொழிகள் வந்தபோதிலும் இருதயமோ திறக்கப்பட்ட பிரேதக்குழித் தச் சமமாய் அருவருப்பால் நிறைந்திருக்கும். நயவசனிப்பால் இவர்கள் ஜீவிக்கிறவர்களானபடியால் இவர்கள் இருதயத்துக்கும் உதட்டுக்குமுள்ள தூரத்தை பிறர் இலகுவில்கண்டு இவர்களைப் புறம்பேதள்ள எந்தவேலையுஞ் செய்யத் திராணியற்று நிர்ப்பாக்கியர்களாய் மரிப்பார்கள்.

ஜீவனை விரும்பி நல்லநாட்களைக் காணவிரும்புவோரே! உங்கள் நாவை மேற்காட்டிய தீயவிஷயங்களைப் பேசாதிருக்க கடிவாளத்தால் அடக்குங்கள்.

பே. ம. போ.

## பத்தா பத்தினியரிலட்சணம்.

ஆகாயத்துப் பறவைகளடிக்கடி நமக்கு அறிவு கற்பிக்கும்படி கடவுள் சிருஷ்டித்தவையென்று தெளிவாய்த் தோன்றும். தங்கள் அழகால் கடவுளுடைய மேன்மையைக் காட்டி, குரலால் நமக்கானந்தத்தை மூட்டி, விவேகம், கபடின்மை, சுறுசுறுப்பு முதலிய குணங்களைப் படிப்பிக்கிறதுமன்றி, தங்கள் வாழ்க்கையினாலும் நமக்குப் புத்தி கற்பிக்கின்றன. எப்படியெனில், பறவைகளிற் சில ஜாதிகள் ஜோடியாகவே பிறப்பதுமல்லாமல் அநேகமாய் ஜோடி ஜோடியாய்ச் சஞ்சரிப்பதைக் கவனித்திருப்போம். இவ்விதமாய்ச் சஞ்சரிக்கும் ஒரு ஜோடிப் பறவைகளைச் சற்று கவனமாய்ப் பார்த்து ஆராயுமிடத்து, அவை ஒன்றுக்கொன்று ஒற்றுமையும் அன்பும் ஆதரவுமாயிருக்கிறதோடு, தங்கள் இளங் குஞ்சுகளைப்பற்றியும் அதிக கவலையாயிருக்கின்றனவென்று காணலாம். அவயங் காக்கும்போது ஒன்றுமாற்றி யொன்று அவயங்காத்து, குஞ்சு

பொரித்தபின் இரைதேடிக் கொடுப்பதில் ஒன்றுக்கொன்று உதவியாயிருந்து, குஞ்சுகளுக்குப் பறக்குங்காலமாகையில் பறவை கற்பிப்பதிலும் இருபட்சிகளும் முயற்சிப்பதையும், பலவீனத்தால் அலலது வியாதியினுல் ஒன்று கூட்டோடடைபட் டிருக்கையில் மற்ருென்று அதற்கு இரைதேடிக் கொடுத்து அருகிலிருந்து காவல் காத்துக்கொண்டிருப்பதையும் கவனிக்கும் நாம், பத்தா பத்தினியர் ஒருவருக்கொருவர் அன்பும், ஐக்கியமுமாயிருந்து தங்கள் வீட்டு விஷயத்திலும் பிள்ளைகளை வளர்க்கும் விஷயத்திலும் உதவியாயு மிருக்க வேண்டுமென்று அறிந்து கொள்ளுகிருேம். பின்வரும் சரித்திரமும் மேற்படி இலட்சணங்களையே விளக்குகிறது :—

### சேபினு ஒலிந்தியாள் என்பவர்களின் சரித்திரம்.

கண்டங்களி லெல்லாம் சிறிதாயினும், நிலவளத்திலும், குடிவளத்திலும், சிறப்பிலும், செல்வத்திலும், அறிவிலும், நாகரீகத்திலும், எல்லாவற்றிலும் மேன்மைபெற்ற ஐரோப்பாவில், ஆகாயத்தை யளாவி நிற்கும் மலைச் சிகரங்களின் உச்சியைத் தொட எத்தனிக்கும் வண்ணமாய்த் தாவிப் பாயும் அலைகளையுடைய ஜர்மானியா கடல் தீரத்தில், கோபத்தால் கூத்தாடும் குடிகாரனைப் பார்த்து, அஞ்சாத நெஞ்சும், பரிதாப சிந்தையும், நகைமுகமுமாய் நிற்கும் நற்குணசாலிபோல் அலையடிபட்டும் அசையாமல் நின்று அமைதலும் சந்தோஷமும் நிறைந்திருக்கும் அசுவபுரி நகரத்தில், கண்டவர் களிக்கும் உடலழகும், கேட்பவர் மெச்சும் பேச்சழகும், பழகினேர் புகழுங் குணவழகும் பொருந்திய சேபினு என்ருெரு வாலிபன் இருந்தான். அவன் உயர்குடியிற் பிறந்து தனத்திலும், கனத்திலும், சொற்றிறத்திலும், மனத்திறத்திலும் குறைவற்றவனுதலால், தன்னிலும் மேலான அந்தஸ்திலுள்ள பிரபுக்கள் குடும்பத்திலிருந்தும், தனக்கேற்ற ஒரு பெண்ணைத் தனக்குப் பாரியாகத் தெரிந்து கொள்ள இஷ்டமானுல் கூடுமாயினும், தனக்குச் சமமான குடும்பத்தாளானபோதிலும், தனக்குறைவால் ஏழையாக மதிக்கப்பட்ட ஒலிந்தியாள் என்னும் பெண்க ளிரத்தினத்தையே தனக்கு இஷ்ட நாயகியாக்க எண்ணங்கொண்டார்.

இவ்வொலிந்தியாள் தரித்திரமடைந்த குடும்பத்திலிருந்தும் அழகில் தேவலோகத்து அரம்பையைப் போலிருந்தாள். கல்வியிலும் தையல் வேலைகளிலும், சித்திரமொழுதுவதிலும் அதிக சாமர்த்திய முடையவள். அதுவுமன்றி நடை உடையிலும், நாணம், மடம், அச்சம் பயிர்ப்பு என்ற மாதரிலட்சணங்களிலும் அவளுக்கொப்பாக நல்லவளென்று பெயர் பெற்றவள் அப்பட்டணத்தி லெங்குமில்லை. ஆதலால் சேபினு என்பவன் இம்மாது சிரோமணியைக் கொண்டதற்காகக் குறை கூறுவார் ஒருவருமில்லை. இவர்களிருவரும் ஒருவரோடொருவர் பழகி பல விஷயங்களிலும் ஒரு மனமுடையவர்களாய்



ளங்கினதால் அவர்களுக்குள் அன்பெனு மனல்மூண்டு, பாசக்கயிற்ருல் கட்ண்டு, பாணிக்கிரகணம் பண்ணிக்கொண்டு சமாதானத்தோடு இல்வாழ்க்கை டத்திக்கொண்டு வந்தார்கள்.

இப்படி இவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் மனக்குறையின்றி ஆறுதலோம் சந்தோஷத்தோடும் நாட்கழித்து, கஷ்டம் என்ற எண்ணம் கனவிலும் வரா வர்களாயிருந்து வாழ்ந்த காலத்தில் 'நிழலினருமை வெயிலிற் போனுற் றரியும்,' 'இன்பத்தினருமை துன்பமனுபவித்தாற் றெரியும்' என்பதைக் ாட்டவோ, அல்லது இவ்வுலகில் துக்கங்கலவாத சந்தோஷ மில்லையென்று தரிவிக்கவோ கடவுள் இவர்கள்மேல் துன்பம் ஒன்றை வரவிட்டார். இது சபினுவின் இனத்தாளான ஆரியருள் என்னும் பெருமாட்டியால் வந்தது.

இப்பெருமாட்டி மிகுந்த ஆஸ்திபுடையவள். இவளுக்குப்பின் இவள் ஸ்தியெல்லாம் சேபினுவுக்கே சொந்தமாகுமென்பது எல்லாருடைய எண்ணம். இவள் இதற்குமுன் அமைதலான குணத்துக்கும், தயாள சிந்தைக்கும், ானதர்மங்களுக்கும் பேர் போனவள். சேபினுவின்மேல் இவளுக்கு அதிக ரியம். இவனும் அவளை அதிக கண்யமாயும் மேன்மையாயும் பாவித்து டந்து கொள்ளுவான். ஆனுல் தன் கலியாண விஷயத்தில் மாத்திரம் அவள் ண்ணத்துக்கிசைவாய் நடவாததால் அவளுக்கு விசனத்தை மூட்டிவிட்டான். அவள் தான் அவனைப் பட்சமாய் நடத்தித் தன் ஆஸ்தியை யெல்லாம் அவனுக்கே விடவேண்டு மென்றிருக்க அவன் நன்றி கெட்டவனுய்த் தன்சொல் றி நடந்தது அவளுக்குள் மிக மனக்கசப்பையும் வெறுப்பையும் உண்டாக்கிற்று. கோபப் பிசாசுக்கிடங்கொடுத்தால் கொடிய பிசாசுகள்கூட அநேகம் நுழையும் என்பது உண்மையாய் விளங்கிற்று. மனதில் கோபமிருந்ததால் சேபினு செய்தவெல்லாங் குற்றமாய்த் தோன்றிற்று. அவன் மனைவியோடு ஐக்கியமாயிருந்தது தன்னை அசட்டை செய்ததுபோலும், அவன் மனைவியை நேசித்தது தன்னைப் பகைத்தது போலும் அவள் மனதிற்பட்டது. கடைசியில், முன் அவனைப் பிள்ளைபோல் நேசித்ததெல்லாம் போய் ஒரு மாற்ருனைப் போலப் பகைக்கத் தொடங்கினுள். ஆகவே கோபம் பொருமையையும், பொருமை பகையையும், பகை பழிவாங்கும் ஆசையையும் பிறப்பித்தது தனக்குப் பிள்ளைபோலிருந்தவனைத் தன்னைவிட்டுப் பிரித்தது ஒலிந்தியாளே என்ற எண்ணத்தால், உடலிரண்டும் உயிரொன்றுமாயிருந்த இருவரையும் பிரிக்கப் பற்பல உபாயங்கள் செய்ய எத்தனித்தாள். இப்படிப் பழிதீர்த்துக் கொள்ளவேண்டுமென்று வகை தேடிக்கொண்டிருக்கையில், தேடின முயல் காலுக்குக் கீழகப்பட்டாற்போலத், தகுந்த சமயமும் வாய்த்தது.

சேபினுவுக்கும் இன்ஞெருவனுக்கும் சொத்துக்களைப் பற்றிய விவாதம் வெகுகாலமாய் நடந்துகொண்டு வந்தது. அதனுல் அவன் கையிலிருந்த ரொக்கமெல்லாம் போய்விட்டது. இனிமேல் அவனுக்குத் தன் சொத்தை பல்லாமல் வேறு ஆஸ்தியில்லை. இப்படி யிருக்கையில் "பட்டாலிலேயே

படும் கெட்ட குடியே கெடும்” என்ற பிரகாரம் திடீரென்று வழக்கு இவன் எதிராளியின் பட்சம் தீர்ந்தது. மேல்வழக்குத் தொடர வேண்டுமானாற் பணமில்லை. என்ன செய்வான்? தனக்குத் தாய்போல், தான் இன்னும் நினைத்து வந்த ஆரியனாள் பெருமாட்டியினிடம் உதவிகேட்டால் செய்வாள் என்று எண்ணி அவளிடம் போனான். அவளோ தான் அதுவரையும் மறைத்து வைத்திருந்த கோபத்தையெல்லாம் அப்போதுதான் காட்டினாள். முதலில் அவன் வந்து வெகுநேரம் நின்றுகொண்டிருந்தும் பாராதவள்போ லிருந்துவிட்டாள். பின் இதுவரையும் என்னைத் தேடாமல் இப்போதுதான் சமயம் வந்ததோவென்று சீறினாள். நீ நன்றிகெட்டவன்; அற்ப சிந்தையன்; அடிமையிலுங் கேடானவன்; என் வீட்டுக்கு வந்து என் வாசலைத் தீட்டுப்படுத்தினாய் என்று கதறினாள். என் சொல்லைத் தள்ளி மணஞ்செய்த உன் மனைவி குடும்பத்தில் உதவி தேடு என்று உதறினாள். கடைசியாகத் தான் முழுப் பகையாய்ப் பகைத்த அவன் மனைவியை அவன் விட்டுப் பிரிந்தாலொழிய உதவி செய்யேனென்று ஒரே பிடிவாதவாய்ச் சாதித்தாள். அரைமணிநேரம் ஓய்வில்லாமல் மழைபோற் பொழிந்த கோபவார்த்தைகளைப் பொறுமையாய்க் கேட்டிருந்து, பின்பு பணிவும் அமைதலுமாய்ப் பேசியும் அவள் மனதை வசப்படுத்தக்கூடாமல் துக்கத்தோடு வீடுபோய்ச் சேர்ந்தான். இவ்வளவோடு நின்றதோ?

கோபம் கொடிதுகொடிது; கோபம் குடியைக் கெடுக்கும்; கோபம் பைத்தியம் என்பதும் உண்மையே. பைத்தியம் மற்றவர்களுக்குத் துன்பஞ் செய்வது அபூர்வம். கோபமோ அக்குணத்தை யுடையவரைச் சீர்குலைப்பதோடு மற்றவர்களுக்கும் துன்பத்தை விளைவிக்குமாதலின் பைத்தியத்திலும் கேடான வியாதியாம். உலகத்தின் சங்கதிகளைக் கவனிப்போமானால் கோபம் எத்தனையோ மோசங்களுக்கு ஏதுவாயிருக்கிறதென்றுங், கொள்ளையைத் தவிர மற்றவகைக் கொலை பாதகத்துக் கெல்லாம் கோபமே காரணமென்றுந் தெரியவரும். இச்சரித்திரத்தைக் கேட்கும் நண்பரே, கோபம் சண்டாளமானதால் கோபமென்ற கொடிய வியாதியை உங்கள் முற்றத்தில் கால்வைக்கவிடாமல் துரத்திவிடுங்கள்.

சேபினா போனதும், ஆரியனாள் பெருமாட்டியைக் கோபம் ஆவேசமாக்கிவிட்டது. இன்னும் தன் சொல்லைத் தட்டினானே என்ற எண்ணத்தால் கோபம் பொங்கி, தேகம் நடுங்கி, உதடு துடித்துக் கண்கள் இரத்தமாகிப், பல்லைக்கடித்து, அவனை வைக்கிறேனா பார் என்று சொல்லி, உடனே தன் வக்கீலை வரவழைத்து வெகுகாலமாய் மறந்துபோயிருந்த ஒரு சிறு கடனுக்காகச் சேபினாவின்மேல் பிரியாது செய்து அவனை சிறைச்சாலையிற் போடும்படி செய்தாள்.

ஐயோ பாவம்! சேபினாவுக்கு வந்த துன்பத்துக்கென்ன சொல்லலாம்! சாப்பாட்டுக்குக்கூட ஐவேசில்லை. தன் சொத்துக்களெல்லாம் பகைவன்



கையிலிருந்தன. திரும்ப வழக்காடவோ பணமில்லை. இந்தக் கடன் சிறிதாயினும் எங்கிருந்து கொடுப்பான்? சிறைச்சாலைக்குத்தான் போகவேண்டியது; கைப்பிடித்த நாள்முதல் கால் நிமிஷமேனும் தன்னைவிட்டுப் பிரிந்திராத இன்பநாயகியையும் கண்மணிபோன்ற தன் சிறிய குழந்தையையும் விட்டுப் பிரிய எப்படித்தான் மனவரும்? பெண்கள் நாயகமாகிய அவன் மனைவி தானும் காவலறைக்கு வருவேன் என்று மறுகுகிறாள். தாய் புலம்புவதைப் பார்த்த சிறுவன் தானும் கதறுகிறான். மான்போன்ற நீ, மனிதரை உயிரோடே புதைத்திருக்கும் கல்லறையை யொத்த காவலறையில் எப்படிக் காலங்கழிப்பா யென்று கணவன் குமுறுகிறான். இந்த மறுக்கடியைப் பார்த்துத் துக்கியாதவர்களும் கண்ணீர் சிந்தாதவர்களுமில்லை. ஆரியனாள் தானும் அரைவாசி மனமாறினாள். ஆனபோதிலும் இன்னும் எதுவரையுந் தான் இணைபிரியா திருப்பார்கள் பார்ப்போம் என்ற எண்ணம் மேலிட்டுச் சும்மாஇருந்துவிட்டாள்

அழுதென்ன, புலம்பியென்ன அவர் சித்தம் ஆகக்கடவது என்று சொல்லிக்கொண்டே சேபினா சிறைச்சாலைக்குப் போனான். தன்னுயிர் போன்ற மன்னவனை விட்டுப் பிரியமனந்தாளாமல், ஒலிந்தியாள் தானும் கூடவே சென்றாள். போனதற்காகப் பின்பு சந்தோஷித்தாளே யன்றித் துக்கிக்கவில்லை. ஏனெனில், கட்டுக்காவலுக் குள்ளிருந்த கணவனுக்கு அவளிருந்ததால் உதவியநேகம். அக்கிரமக்காரர் அடைந்திருந்த அவ்விடத்தில் அவளிருந்ததே அவனுக்கொரு ஆறுதலாயிருந்தது. தன் சாப்பாட்டுக்காகவும் தன் புருஷனுக்கு நல்ல பதார்த்தங்களுக்காகவும் பணஞ் சம்பாதிக்கும் பொருட்டு அவள் உட்கார்ந்து சித்திர மெழுதுகையில், அல்லது தையல் தைத்துக்கொண்டிருக்கையில், அவனை அவளுக்கு யாதாமொரு புஸ்தகத்தை வாசித்துக்கொண்டிருக்கச் செய்வாள். அவன் மனம் வாடி சஞ்சல முகமாகுங்காலத்தில், பலவித விநோத சரித்திரங்களை அவனுக்கு வாசித்துக்காட்டி அவன் மனங்களிக்கச் செய்வாள். எப்போதாகிலும் அவளுக்காகப் பரிதாபப்பட்டுத் துக்கித்தானானால் அவனருகிலிருப்பதிலும் அதிக சந்தோஷந் தனக்கில்லையென்றும், அவன் தன்னை நேசிப்பது உண்மையென்றால் தன்னைப்பற்றி கவலைப்படக் கூடாதென்றும் சொல்லிப் பலவாறு ஆறுதல் செய்வாள். இவர்கள் இப்படி அமைதலோடுந் தைரியத்தோடும் சந்தோஷத்தோடும் திருப்தியோடும் சஞ்சரிப்பதைப் பார்த்துக்கொண்டிருந்த சண்டாளரான மற்றவர்களும் குடி, வெறி, சூதாடுதல், சண்டையிடுதல் முதலிய கெட்ட நடத்தைகளை விட்டுவிலகி இவர்கள்வாசிப்பதை வந்து கேட்டுக்கொண்டிருப்பார்கள்.

இவ்விதம் சிலநாட்சென்றபின் ஒருநாள் ஆரியனாள் பெருமாட்டியின் வக்கீலின் குமஸ்தா சேபினாவிடத்தில்வந்து, “சேபினாவே, உன் இனத்தாளான ஆரியனாள் என்னும் பெருமாட்டி மரித்துப்போனாளென்றும், அவள் தன் ஆஸ்தியையெல்லாம் தூர இனத்தானான இன்னொருவனுக்கு விட்டுப் போனாளென்

றும் கேட்டிலையோ" என்றான். இது செவியுற்று, சேபினுவும் அவன் மனையாட்டியும் துக்கம் பொறுக்கமாட்டாமற் கதறி அழுவதைப்பார்த்துத் தங்களைவிட்டுச் சுதந்திரம் போனதற்காகத் துக்கிக்கிறதாக நினைத்து அவர்களை நோக்கி, "அங்கலாய்க்கவேண்டாம். ஆரியனாள் எழுதிய மரண சாதனப்பத்திரம் என் கையில்தானிருக்கிறது. உங்களுக்குவருகிற சுதந்திரத்தில் உங்களுக்கிஷ்டமான ஒருபங்கை எனக்குக் கொடுத்தால் அப்பத்திரத்தைக் கிழித்துப்போடுவேன். அப்பொழுது சுதந்திர முழுவதும் உங்களுக்கே யுரித்தாகும்; துக்கமொழியுங்கள்" என்றான். இதுகேட்டதும் சேபினுவுக்குக் கோபமூண்டு, "போ, துஷ்டமனிதனே, எனது மாதா போன்றவளை இழந்தேனேயென்று நான் துக்கப்படுகையில் நீ என்னைப் பரிகாசம் செய்கிறையா? ஆரியனாள் பெருமாட்டி தன்னிஷ்டப்படி தன் சொத்தை இன்னொருவனுக்குக் கொடுத்தால் அது எனக்குப் பொறுக்காம லிருக்கவேண்டியதென்ன? அந்தம்மாள் போனது எனக்குத் துக்கமன்றி சொத்துப்போனதையிட்டு வருத்தமில்லை. உன் துராலோசனையை நீயே வைத்துக்கொண்டு வந்த வழியைப் பார்" என்றுசொல்லி யனுப்பிவிட்டு, அவன் போனதும் இருவரும் ஒருவரோடொருவர் கழுத்தைக் கட்டிக்கொண்டு அந்தம்மாளுக்காக அழுதார்கள். அவர்களிருந்தால் எப்படியாவது மனதுருகி நம்மை விடுதலை செய்வார்களே; இனிமேல் நம்கதியென்னவென்று சொல்லிக்கொண்டு பின்னும் புலம்பினார்கள், இப்படியழுதகண்ணும் சிந்தியமூக்குமாய் நின்று தவித்துக்கொண்டிருக்கையில் சிறைச்சாலைக்கதவு படீரென்று திறந்தது. இதோ அவர்கள் முன் வந்து நிற்கிறது யார்? அவர்கள் துன்பத்தை நிவர்த்தி செய்யவந்த கடவுளோ?

அங்கே வந்து நின்றது யாரென்றால் சற்றுமுன் இறந்து போனதாகக் கேள்விப்பட்ட ஆரியனாள் பெருமாட்டியே. இவர்களைக்கியத்தைப் பார்த்து முன்னமே மனமிரங்கினாளென்று சொன்னோமே. அதுமுதல் இவள் இவர்களைப்பற்றி அடிக்கடி விசாரித்து வந்ததுமன்றி, மறைவிடங்களிலிருந்து அவர்கள் நடக்கைகளைக் கவனித்தும் வந்தாள். வரவர அவள் கோபமெல்லாம் மாறி அவளுக்கியற்கையான தயாள சிந்தையே மேற்பட இவர்கள் மேல் அன்பும் பெருகத்தலைப்பட்டது. இன்னும் கடைசியாக ஒரு பரீக்ஷை பார்ப்போமென்று அந்த மனிதனை யனுப்பித்தான் ஒளிப்பிடத்தி லிருந்து கேட்டுக்கொண்டிருந்தாள். நடந்ததைக்கண்டு மனதை அடக்கக் கூடாதவளாய் ஓடிவந்து, அவர்களிருவரையும் தழுவியணைத்துக் கொண்டு, "என்பிள்ளைகளே, அஞ்சாதிருங்கள்; நான் இதுவரையும் உங்களுக்குச்செய்த கொடுமைகளை மன்னியுங்கள். ஒலிந்தியாளே! நீ இப்படிப்பட்ட தைரியசாலி யென்றும், பதிவிரதையென்றும் எனக்குத் தெரியாது. சேபினுவே! நீ இப்படிப்பட்ட உண்மையும் அன்பும் ஐக்கியமனமுமுடைய பெண்மணியை மணம் புரிந்ததினால் நீ பாக்கியசாலி. கடந்தது போகட்டும். இதெல்லாம் தெய்வம் அனுப்பிய பரீக்ஷை என்று எண்ணிக் கொள்ளுங்கள். இனிமேல்



உங்கள் வாழ்வே என் கவலையாயிருக்கும்" என்று ஆசாபாசத்தோடு சொல்லி உடனே அவ்விடத்தைவிட்டு அவர்களை யகற்றித்தன் வீட்டுக்கு அழைத்துப் போனாள். பின்னடந்ததைச் சொல்லவேண்டுமோ? ஆரியனாள் பெருமாட்டியினுதவியினால் தன் சொத்தையுந் திருப்பிக்கொண்டான். அந்தம்மாள்மரணா, துக்குப் பின் அவள் ஆஸ்தியும் இவர்களுக்கே வந்தது. ஆகவே இகவளுக்கிருந்த அன்பும் ஐக்கியமும் ஒருகாலத்தில் துன்பத்துக்குக் காரணமா யிருந்ததும், அத்துன்பத்தைச் சகிப்பதற்கு உதவியாயிருந்ததும், அதை நிவர்த்தியாக்குவதற்கு ஏதுவாயிருந்ததும், கடைசியாக அவர்கள் ஜீவகாலமெல்லாம் பக்கத்தோர் போற்றவும், வலியோர் மதிக்கவும், எளியோர் வாழ்த்தவும், எல்லோரும் விரும்பவும்தக்கதாய் சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் வாழ்ந்து சுகித்திருக்கச் செய்ததும் அக்குணங்களே.

# பிடிவாதக்காரன்.

ஜலத்தில் அமிழ்ந்து சாகிறவன் தன் கைக்கு நேரிட்ட பொருள் தன்னைச் சடுதியில் அமிழ்த்திக் கொல்லுகிறதாயிருந்தாலும் அதை விடாது பற்றிப் பிடித்துக்கொள்ளுகிறதுபோல, பிடிவாதக்காரனும் தன்னுள்ளத்திற்றோன்றும் அபிப்பிராயம் மிகவுங் கேடுள்ளதாயிருப்பினும் அதைக் குரங்குப் பிடியாய்ப் பிடித்துச் சாதிக்கிறான். "மூர்க்கரும் முதலையுங் கொண்டது விடா" என்ற முதியோர் வாக்கியம் முற்றிலும் மெய்யே. யோசிக்கும்பொழுது, பிடிவாதக்காரன் தன் அபிப்பிராயத்தைப் பிடித்துக் கொண்டு வாதாடுகிறான் என்றல்ல, அவனது அபிப்பிராயமே பேய் பிடித்தது போல் அவனைப் பிடித்துக்கொண்டு ஆட்டுகிறது என்று சொல்ல வேண்டும். பேய் பிடித்தாலும் பித்தம்பிடித்தாலும் சில வேளை விமோசனமுண்டு. தப்பபிப்பிராயம் பிடித்துக்கொண்டால் அதற்குத் தப்புவதரிது. பிடிவாதக்காரனுடைய அறியாமையின் ஆழத்தையும் நீளத்தையும் அளவிட முடியாது. பட்டப்பகற் போற் பிரகாசமான தெள்ளிய சத்தியத்தின் கிரணங்களும் அதை ஊடுருவிச் செல்லா. அது தன்னாளுகைக்குள் எது வந்து சிக்குகிறதோ அதைத் தடவிப் பிடித்துக்கொள்ளுகிறது. அப்புறம், கலந்த ராட்சதன் கையில் அகப்பட்ட பொருள் விடுதலையானாலும்,

இது விடுதலையாகப் போகிறதில்லை. பிடிவாதக்காரனுடைய மூளையானது எவ்வளவு பலத்த நியாயமும் உட்பிரவேசிக்கக்கூடாத துருக்கம்போலிருக்கிறது. ஆயினும் அதனுள், தப்பெண்ணங்களும் போலி நியாயங்களும் பொய்யானவைகளும் வந்து குடிபுகுந்து வாழ்ந்திருப்பதற்கு, வாசல் விரிவாய்த் திறந்துகிடக்கிறது. பிடித்த பிடி விடாது சாதிக்கிற அகங்காரியுடைய அபிப்பிராயங்கள் எவ்வளவு துர்ப்பலமும் பழுதுமாயிருக்கின்றனவோ, அவ்வளவுக்கு அதிகமாய் அவன் வைராக்கியமும் பலமுமாய் அவற்றைப் பிடித்து வாதிக்கிறான். அல்லவென்றால், அவை நிலையா என்பது அவனுக்குத் தெரியும். நியாயபலமில்லாத அபிப்பிராயங்களுக்கு வாய்ப்பலத்தாலாவது அடைகட்டாவிட்டால் அரைநிமிஷமாவது நில்லாமல் அடியோடே சாய்ந்து விழுமாதலால், தப்பபிப்பிராயமுடையோர் எப்பொழுதும் தங்கள் கருத்துக்களை யதார்த்தவாதிகளைப் பார்க்கிலும் மிகுந்த நிச்சயத்தோடும் உறுதியோடும் சாதித்து வற்புறுத்துவார்கள். அவர்கள் போராடுவதெல்லாம் காரியமல்லாத காரியத்திலேதான். அவசியமும் அரும்பயனுமுள்ள பெரிய காரியங்களையெல்லாம் விட்டு விட்டு, அநாவசியகமும அப்பிரயோஜனமுமானவைகளைமாத்திரம் பிடித்துக்கொண்டு சலஞ்சாதிப்பார்கள். பசுவினது விம்மிச்சுரநத முலையிற் பாலுண்ணவறியாது உதிரம் அருந்தும் உண்ணிபோல, அவரகள் புத்தியானது அற்பமான வீண்காரியங்களைப் பெரிதாக மதித்து ஆவலோடு பற்றுகிறது. உலகத்தில் தன்னைத்தவிர வேறொருவருக்கும் சரியான புத்தியில்லையென்பது மூடனுடைய கொள்கையாதலால், அக்கொள்கையை அநுசரித்து நடக்கும் பிடிவாதக்காரனும தன் புத்தி, தன் யோசனை, தன்னெண்ணம், தன் கட்சி என்றிவற்றைத்தவிரப் பிறிதொன்றையும் அறியான். பிறர் எவ்வளவு நியாயங்கூறினும் "குன்றின் மேற் கொட்டுந்தறிபோற் றலைதகர்ந்து, சென்றிசையா வாதஞ் செவிக்கு." ஆதலால் பிடிவாதமென்னும பேய் பிடித்த மூர்க்கருடன் பேசாதிருத்தலே பெரியோர்க்கழகாம்.

---



# இருசமுசாரிகள்,

அல்லது

# பேராசையின் பெருநஷ்டம்.

இந்தியாவிலுள்ள ஒரு நாட்டில் வெகுகாலமாய் மழைவருஷியாமல் நிலங்களெல்லாந் தீய்ந்து திடலாய்ப்போன சமயத்தில், அந்நாட்டிலுள்ள ஒரு கிராமத்தில் அடுத்து வாசஞ்செய்த நிதானன், பேராசையன் என்ற இரண்டு சமுசாரிகள் ஒருநாள் தங்களுக்குச் சொந்தமான வயல்களைப் பார்த்துவரப் போனபோது, அங்கே குடிப்பதற்குத் தண்ணீர்கிடையாமல் தாகசோகத்தினால் அவர்கள் மிகவும் சோர்ந்துபோய் ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு, தங்கள் ஆடுமாடுகள் மேய்ச்சலற்று மடிந்துபோகிறதையும், காணி பூமிகள் விளையாததினால் தங்கள் சமுசாரம் பிள்ளைகுட்டிகள் தகுந்த ஆகாரமற்று வருந்துகிறதையும் நினைத்து மிகுந்த மனக்கிலேசமுற்று, கடவுள் போதுமான ஜலத்தை அநுக்கிரகிக்க வேண்டுமென்று வெகு ஆவலுடன் பிரார்த்தனை செய்தார்கள். அச்சமயத்தில் திடீரென அங்கே ஒருவித அமைதலுண்டாக, பட்சிஜாதிகள் தம் பாடல்களை நிறுத்திவிட்டன; ஆடுமாடுகள் தம் கூச்சல்களைவிட்டு ஓய்ந்தன. அப்போது அச்சமுசாரிகளிருவரும் இந்நூதனத்தைக் கவனித்து ஆச்சரியமடைந்து, அதற்குக் காரணம் யாதென அறியும் பொருட்டுத் தங்களைச் சுற்றி எப்பக்கத்திலும் பார்த்தபோது, பிரம்மாண்டகாத்திர சொரூபத்தையுடைய ஒரு தேவதூதனானவன் ஆகாயத்தின் வழியாய்த் தங்களுக்கு நேராக இறங்கி வரக்கண்டார்கள். அவன் ஒரு கையில் ஏராளமான அரிக்கட்டுகளையும், மற்றொருகையில் நாசம்பண்ணும் கருவியாகிய கருக்குள்ள ஒரு பட்டயத்தையும் பிடித்துக்கொண்டிருந்தான். அவர்கள் அந்தத் தூதனைக் கண்டவுடனே நடுக்கமுற்று அவனுக்குத் தப்பித்துக்கொண்டோடிப்போக எத்தனித்தார்கள். அப்போது தூதன் சாந்தமும் அமைதலுமான தொனியோடு அவ்விருவரையும் அழைத்து: சாம்பலுந் தூசியுமானவர்களே! உங்கள் உபகாரியாகிய என்னை விட்டு இவ்விதமாய் ஏன் ஓடுகிறீர்கள். நான் உங்களுக்கு நல்லவரங்களைக் கொடுக்கும்பொருட்டு வந்திருக்கிறேன். நீங்கள் இப்பொழுது ஜலத்திற்காக ஆவலாய்ப் பிரார்த்திக்கிறீர்கள் நான் உங்கள் விருப்பப்படி வேண்டிய ஜலத்தைக்கொடுப்பேன். ஆகையால் உங்களுக்கு எவ்வளவு ஜலம் உண்டானால் உங்கள் மனதுக்குத் திர்ப்திகரமாயிருக்குமென்று மாத்திரம் எனக்குச் சொல்லுங்கள். நான் கேட்ட இக்கேள்விக்கு ஆய்ந்தோய்ந்து பாராமல் திடீரென மறுமொழி சொல்லாதேயுங்கள். அதைப்பற்றி தீர்க்காலோசனை செய்யுங்கள். மேலும சரீரசுகாநுபவத்திற்கு வேண்டிய பொருள்கள் மிகக் குறைந்துபோனால் மோசங்கள் நேரிடுகிறதுபோலவே, அப்பொருட்கள் மட்டுக்குமிஞ்சியிருக்

தாலும் பெரிய தீமைகள் சம்பவிக்குமென்பதை உங்கள் மனதில் நன்றாய்ப் பதித்துவையுங்கள். தாகசோகமுள்ள ஒருவன் திடீரெனத் தண்ணீருக்குள் பாய்ந்து முழுகிப்போவதுபோலே நீங்கள் நடவாதேயுங்கள். நல்லது நிதானனே! நீ விரும்பும் வரத்தைக் கேள் என்றான். அதற்கு நிதானன், ஓ அன்பும் உபகாரகுணமும் பொருந்திய நல்லதூதனே! நான் இப்போது மனக்கலக்கமுற்றிருக்கிறபடியால், என் தப்பிதங்களை மன்னித்து, உன் கண்களில் எனக்கு தயவுகிடைக்கும்படி அநுக்கிரகி; உன் உத்தரவின்படி நான் ஆசைப்படும் வரத்தை உனக்கு வெளிப்படுத்துகிறேன். அது யாதெனில், கோடைகாலத்தில் ஒருபோதும் வற்றிப்போகாததும் மாரிகாலத்தில் பிரவாகவெள்ளமாய்க் கரைபுரண்டோடாததுமான ஓர் சிற்றாறு எனக்கு கிடைக்கும்படி நீர் கட்டளையிடவேண்டுமென்றான். அதற்குத் தூதன் மறுமொழியாக: நிதானனைப்பார்த்து: உன் அபீஷ்டப்படி கோறியதை உனக்குக் கட்டளை யிட்டேனென்று சொல்லி, உடனே தன் கையிற் பிடித்திருந்த பட்டயத்தைக்கொண்டு பூமியில் கீற, அந்த க்ஷணமே அவர்கள் நிற்குமிடத்திலிருந்து, ஒரு நல்ல நீரூற்று குமிழிவிட்டுப் புறப்பட்டு, நிதானனுடைய வயல்களுக்குச்சமீபத்தில் ஓர் சிற்றாறாக ஓடிற்று. உடனே அங்கே புல் பூண்டு விருட்சங்கள் செழிப்பாய் ஓங்கி வளர்ந்து பசுமையாய்த் தளிர்விட்டு அலங்காரமாய்ப் புஷ்பித்து சுகந்த பரிமள வாசனையை எத்திசையிலும் வீசின. ஆடுமாடு முதலிய ஜீவஜெந்துக்களெல்லாம் அச்சிற்றாற்றண்டையில் வந்து தம் தாகசோகத்தைத் தீர்த்து ஆனந்தபரவசமடைந்தன. அப்பால் தூதன் பேராசையனைப்பார்த்து, நீ கோரும் வரம யாதென்று கேட்க, அதற்குப் பேராசையன் விஸ்தாரமும் மாட்சிமையும் பொருந்திய கங்காநதியானது இப்போது ஓடும் வழியைவிட்டு விலகி என் நிலங்களுக்குச் சமீபமாய் வந்து பாயும்படிக்கு நீர் கட்டளையிட வேண்டுமென்றான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த நிதானனென்பவன் தன் அயலானாகிய பேராசையன் தூதனிடத்தில் கேட்ட மகா பெரிய வரத்தைப்பற்றி யோசித்து, ஐயோ! இந்தப் பெரிய வரத்தை நான் முன்னாடியே தூதனிடத்தில் கேட்டுக்கொள்ளாமற்போனேனே என்று சற்று மனவியாகுலமடையத் துவங்கினான். அப்போது தூதன் பேராசையனைப்பார்த்து, ஓ மதியீனமுள்ள மனுஷனே! இவ்வளவு பேராசையுள்ளவனாயிராதே. நீ உபயோகிக்கக்கூடாத அல்லது அநுபவிக்கக் கூடாத வஸ்துக்களினால உனக்கென்ன பிரயோஜனம்? உனக்கவசியமானதெதுவோ, அதைமாத்திரம் நீ நாடித் தேடு. இப்படிக்கின்றி நீ பேராசைகொள்வது பெரிய மதியீனந்தான். ஆகையால், நீ நன்றாய் யோசித்து இரண்டாந்தடவை விவேகமாய் என்னிடத்தில் வரத்தைக் கேள் என்றான். இதைக் கேட்டபின்னும் பேராசையன் தான் முன்கேட்ட வரத்தையே தூதனிடத்தில் கேட்டுவிட்டு கங்கைநதியானது தனக்குச் சொந்தமாகுங் காலத்தில் தான் அக்கிராமத்திலுள்ள எல்லாக்குடிகளிலும் மகா பெரியவனாகலாமென்றும், அப்போது நிதானனென்பவன் தனக்குமுன்பாக மிகவும் தாழ்ந்த



அந்தஸ்தை உடையவனாக இருப்பானென்றும் நம்பி, தன்னிலேதானே அகமகிழ்ந்து ஆனந்தபரவசப்பட்டுக்கொண்டிருந்தான். பின்பு தூதனானவன் கங்கைநதியின் திசையை நோக்கி மறைந்துபோனான். அப்போது, இரண்டு சமுசாரிகளும் இனி என்ன சம்பவிக்குமென ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். பேராசையன் அச்சமையத்தில் மிகவும் மேட்டிமையுள்ளவனாய் நிதானனை நோக்கி இழிவோடு பார்த்துக்கொண்டிருந்தான். இப்படியிருக்குந் தருணத்தில் திடீரென அகோரபெருவெள்ள இரைச்சல் கேட்கப்பட்டது; உடனே மகா விஸ்தாரமான கங்கையின் கரை உடைந்து, அதன் ஜலம் மகா பயங்கரமான கோஷ்டத்துடன் புறப்பட்டு, பெருவெள்ளக்காடாய் பேராசையன் வயல்களுக்கு நேராகப் பாயத்தொடங்கிற்று. பின்பு சற்று நேரத்துக்குள் அவனுடைய நிலங்களில்நின்ற விருட்சங்களெல்லாம் சின்னாபின்னமாய் வெள்ளத்தினால் சேதப்பட்டுப் போயின. அவனுடைய ஆடுமாடுகளையும், அவனையும் வெள்ளம் அடித்துக் கொண்டுபோயிற்று. கடைசியில் கங்கைநதியிலிருந்து வெள்ளத்தின் வழியாய் வெளிப்பட்டுவந்த ஒரு முதலையானது அவனைத் திடீரெனப் பிடித்து விழுங்கிவிட்டது.

## முகஸ்துதியில் சந்தோஷப்படுகிறவனே மோசம்போகிறவன்.

ஒரு நரியானது கடும்பசியுள்ளதாய் நெடுநேரமாக எங்கும் அலைந்து இரை தேடிக்கொண்டிருக்கையில், தனக்கு முன்னே நின்ற ஓர் மரத்தின்மேலே ஒரு அணிற்பிள்ளையானது உட்கார்ந்துகொண்டிருக்கிறதைக் கண்டு, இது அகப்படுமானால் நமக்கு நல்ல இரையாகும்; ஆகையால் இதைப் பிடித்து வாயில் போட்டுக்கொள்ளுகிற வகை எப்படி? அது கொஞ்சத்தில் நமக்கு அகப்படத்தக்கதல்லவே. அதை நமது தந்திரத்தினால் மாத்திரம் அகப்படுத்தலாம்போலத் தோன்றுகிறதென்று சற்றுநேரம் ஆலோசனை பண்ணிக்கொண்டிருந்துவிட்டு, அவ்வணிலை நோக்கி: ஓ என் பிரிய சிநேகிதனே! நீ சுகந்தானா என்று சில உபசார வார்த்தைகளைச் சொல்லிவிட்டு, அதைப் பார்த்து: உன் தகப்பனையும் பாட்டனையும் நானறிவேன்; அவர்கள் சர்வவல்லபமுள்ளவர்கள், அதிசாமர்த்தியவான்கள், ஓரே பாய்ச்சலில் ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குப் பாயத்தக்க அபூர்வசக்தியையுடையவர்

கள் என்றது. இதைக் கேட்டமாத்திரத்தில் அணிலானது தனக்கும் அவ்வித சாமர்த்தியங்களுண்டெனக் காட்டும் நோக்கமாக, தானிருந்த மரத்திலிருந்து எதிர்மரத்திற் பாய்ந்தது. பின்பு நரியானது அணிலைப்பார்த்து: மேலும் உன் தகப்பன் முதலியவர்களுக்கு மரத்தின் உச்சியினின்று தரையின்மேல் குதிக்குஞ் சக்தியும் இருந்தது என்றது. உடனே அணிலானது சந்தோஷ பூரிப்புடன் தனக்கும் அச்சக்தி இருக்கின்றதென ரூபிக்கும்பொருட்டு, மரத்தின்மேலிருந்து தரையின் மேல் குதித்தது. உடனே நரியானது அதன்மேல் பாய்ந்து, அதை ஒரே கவ்வலில் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டது. முகஸ்துதியை நம்பிச் சந்தோஷப்பட்டதற்கு வந்த பலன் இதுவே.

---

## ஜீவஜெந்துக்களின் உடைகள்.

வஸ்திரத்தின் பிரயோஜனமென்னவெனில்: க-வது. தேக அனல் சரீரத்தைவிட்டு விரைவாய் நீங்கிப்போகாதிருக்கும்படி செய்கிறது. உ-வது. தூசு முதலிய தீமைசெய்யும் பதார்த்தங்கள் தோலின்மேல் படாதபடிக்குக் காக்கிறது. காற்று, மழை, வெயில் முதலியவற்றினால் தேகத்திற்குச் சேதமுண்டாகாதபடிக்குச் சரீரத்தை மூடிக் காப்பாற்றத்தக்க யத்தனமொன்று ஜீவஜெந்துக்களுக்கு அவசியம். மனிதனைத்தவிர மற்ற ஜீவஜெந்துக்கள் தங்கள் தேகத்தைக் காப்பாற்றுவதற்குப் போந்த உடைகளைச் சம்பாதித்துக்கொள்ள அவைகளுக்குச் சக்தியில்லாததினால், இரக்கமும் ஞானமும் நிறைந்த கடவுள், இயல்பிலேயே அவைகளுக்குத் தகுந்த உடைகளை ஏற்படுத்தியிருக்கிறார். எப்படியெனில், ஆடு மாடு முதலிய ஜெந்துக்களுக்குத் தோலின்மேல் நெருக்கமாய் முளைத்திருக்கும் மயிரையும், பக்ஷிஜாதிகளுக்குத் தோல்முழுமையும் மூடியிருக்கிற இறகுகளையும், மீன் முதலிய பிராணிகளுக்குச் சிலாம்புகளையும், யானை காண்டாமிருகம் முதலிய ஜெந்துக்களுக்கு மிகவும் கனத்த தோலையும் கடவுள் உண்டாக்கியிருக்கிறார். மிருதுவும் மிகவும் நுட்பமுமான தோலையுடைய மனிதனுக்குமாத்திரம் இப்படிப்பட்ட இயற்கையான ஏற்பாடொன்றையும் தேவன் கட்டளையிடவில்லை. ஆனால் அவர் மனிதனானவன் தனக்கு அவசியமான உடைகளைச் சம்பாதித்துக்கொள்ளத் தக்கதாக அவனுக்குப் போந்த விவேகத்தையும் திறமையையும் அருளிச்செய்திருக்கிறார்.

மனிதன் தரிக்கும் வஸ்திரங்கள், தேசவித்தியாசம் காலவித்தியாசங்களுக்குத் தக்கபடி வித்தியாசப்பட்டிருக்கவேண்டும். அதிகக் குளிர்ச்சியுள்ள



தேசங்களில் வாசம்பண்ணும் ஜனங்கள் மிருகங்களின் தோலினாலும், அவைகளின் கம்பளமயிரினாலும் செய்த உடைகளைத் தரித்துக்கொள்ளுகிறார்கள். உஷ்ண தேசங்களிலுள்ளவர்கள், பருத்தி, பட்டு முதலியவைகளாலாகிய வஸ்திரங்களை உடுக்கிறார்கள். எந்த தேசத்திற்கு எந்த உடைகள் அவசியமோ, அந்த உடைகளுக்கு வேண்டிய பொருள்கள் அந்த தேசத்திலேயே உண்டாகும்படி தேவன் ஏற்படுத்தியிருக்கிறார். சீதளதேசங்களில் கம்பளமயிரைக் கொடுக்கிற மிருகங்களுண்டு. உஷ்ணதேசங்களில் பருத்தி பட்டு முதலியவைகள் போதுமானபடி அகப்படும்.

மனிதனைப்போல மற்ற ஜீவஜெந்துக்கள் தேசவித்தியாசம் காலவித்தியாசங்களுக்கு ஏற்க வித்தியாசமான உடைகளைச் சம்பாதித்துக்கொள்ள ஏதுவில்லாததினால், தேவன் அவைகளுக்கு நல்ல ஏற்பாடு ஒன்று செய்திருக்கிறார். பூமியின் முனைகளுக்குச் சமீபத்தில் கொடிய குளிர்ச்சியுள்ள இடங்களில் வாசஞ்செய்யும் மிருகங்களினுடைய தோலின்கீழ் ஏராளமான கொழுப்புண்டாயிருக்கின்றது. இவ்விதமாய்த் தேகத்தைப் பொதிந்திருக்குங் கொழுப்பானது குளிர்ச்சி தேகத்திற்குள்ளிருக்கும் இயந்திரங்களைத் தாக்காதபடிக்குத் தடைசெய்கின்றது. ஒருகாலத்தில் அதிகக் குளிர்ச்சியும், மற்றக்காலத்தில் கொஞ்சக் குளிர்ச்சியுமுள்ள இங்கிலாந்து முதலிய தேசங்களில் வாசஞ்செய்யும் மிருகங்களின் தோலின்கீழ் அதிகமான கொழுப்பு உண்டாகிறதில்லை; ஆனால் அவைகளின் தோலின்மேல் நீண்ட கம்பளமயிர் முளைத்திருக்கும். இக்கம்பளமயிரானது அதிகக் குளிர்ச்சியான மாரிகாலத்தில் அதிக அடர்த்தியாயும் நீளமாயும் முளைக்கும். குளிர்ச்சி குறைவுள்ள காலத்திலோ, கம்பளமயிர் மெல்லியதாயும் குறுகினதாயும் போகும். இப்படிப்பட்ட மிருகங்களை உஷ்ணதேசங்களுக்குக் கொண்டுபோனால் அவற்றிற்கு இயல்பான கம்பளமயிர் வரவர உதிர்ந்துபோக, சாதாரண மயிர்மாத்திரம் முளைக்கும்.

ஜனங்கள் காலவித்தியாசத்திற்கு ஏற்றபடி வித்தியாசமான துணிகளாலாகிய வஸ்திரங்களைத் தரிப்பது தேகசுகத்திற்கு அவசியமான காரியம். குளிர்ச்சி தேகத்தைத் தாக்காதபடிக்கு முற்றிலும் விலக்கத்தக்கது பிளானல் முதலிய கம்பளமயிரினாலாகிய துணிகளே. இவைகளுக்கு இரண்டாவது பருத்திநூல் துணிகள். ஆலண்ட் முதலிய சணல்நாரினால் செய்த துணிகள் குளிர்ச்சியைத் தாங்குவதற்கு ஏற்றவைகளல்ல. நமது தேசத்தில் அதிகக் குளிர்ச்சியான காலங்களில் தவிர, மற்றக் காலங்களிலெல்லாம் ஜனங்கள் தரித்துக்கொள்வதற்கு ஏற்றது பருத்திநூல் வஸ்திரங்களே.

# இராமாயண சாஸ்திரிகதை.

முன்னொரு காலத்தில் தென்தேசத்தில் திருமழபாடியென்னும் சிவஸ்தலத்தில் திருநீலகண்ட சாஸ்திரி யென்னு மோர் புரோகிதனிருந்தான். அவன் மிகவும் ஏழையாதலால் வெகுநாளாய்ப் பிரமச்சாரியாயிருந்து கடைசியாய் அறுபதுவயது ஆனபின்பு ஷஷ்டிபூர்த்திசெய்வதோடு ஒரு எளிய பிராமணப்பெண்ணைத் தான் யாசகம் செய்து சம்பாதித்த திரவிய மெல்லாங் கொடுத்து மணமியற்றினான். பின்பு கொஞ்சக் காலத்திற்கெல்லாம் தெய்வ கடாட்சத்தால் ஓர் ஆண்பிள்ளை பிறந்தது. அவ்விருத்தப்பிராமணன் தன்னைப் புத்தென்னும் நரகத்தினின்றும் மீட்பதற்குப் புத்திர சம்பத்துண்டாயிற்றென்று ஆனந்தபரவசமாகி, சுபதினம் பார்த்து சிவநேச சாஸ்திரியென்று அப்பிள்ளைக்கு நாமகரணமிட்டு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக அக்குழந்தையை வளர்த்துவந்தான். அந்தப் பிள்ளையின் ஜாதகத்தைப் பார்க்க, அதிகக் கல்வியும் ஐஸ்வரியமு முண்டாகுமென்றும், பித்ருஸ்தானம் பலத்திருப்பதால் தனக்கும் தன் மனைவிக்கும் சீக்கிரத்தில் முடிவு நேரிடாதென்றும் மிகச் சந்தோஷமாய் யாசகமெடுத்து ஜீவனம் செய்துகொண்டிருந்தான். இப்படியிருக்க "நாமொன்று நினைத்தால் தெய்வமொன்று நினைக்கும்" என்பதற்கேற்க, அக்குழந்தைக்கு ஐந்துவயதானவுடனே, திருநீலகண்டசாஸ்திரி எதோ ஒரு காரணத்தால் தேகவியோகமானான். அவன் மனைவி அதிபாலியத்தில் விதவையானதைக் குறித்து வெகுவாகத் துயரப்பட்டு யாதொரு ஆதரவுமின்றித் தன் மகனாகிய சிவநேசசாஸ்திரியை யழைத்துக்கொண்டு, அவ்வூருக்கருகாமையிலுள்ள பஞ்சநத க்ஷேத்திரமாகிய திருவையாறு என்னு மூருக்குவந்து அங்கிருந்த ஓர் தருமப்பாடசாலையில் தன் புத்திரனைக் கல்வி கற்கும்படிவிட்டுத் தானொரு வீட்டில் வேலைசெய்து ஜீவனம் பண்ணிக்கொண்டுவந்தாள்.

இப்படியிருக்குங்காலத்தில் அவ்வாலிபனும் அதிக புத்தி சாதுரியமாய் சமஸ்கிருத பாஷையையும் தமிழையும் நன்றாயெழுத வாசிக்கக் கற்றுக்கொண்டு பதினைந்து வயதிற்குள் புராணமுதலானவை பிரசங்கம் செய்யும் சமர்த்துடையவனானான். பின்பு இவ்வாலிபன் கல்விகற்பதை நிறுத்திவிட்டுத் தானும் தன் தாயும் தனியேயிருக்கவேண்டுமென்னும் அபேட்சையினால், அன்றுமுதல் பாரதம் இராமாயணம் முதலிய கதைகளை இராவேளைகளில் ஒரு கோவில் வாசலில் உட்கார்ந்து அங்குவருகிற பெண்பிள்ளைகளுக்கும், கல்வியறிவில்லா முழுமூடர்களுக்குஞ் சொல்லி அவர்கள் கொடுக்கிற சொற்ப வரும்படியைக் கொண்டு ஜீவனம் பண்ணிக்கொண்டு வந்தான். இஃதன்றியும் ஐப்பசிமாதத்தில் துலாஸ்நானம் செய்யும்படி காவேரியாற்றுக்குப் போகிறவர்கள் கேட்கும்படி அவர்களுக்குத் துலாக்காவேரி புராணமுஞ் சொல்லுவது வழக்கம். அப்



படிச் சொல்லும்போது ஸ்நானத்திற்குப் போகிற பெண்கள், அரிசி காய்கறி பதார்த்தங்கள் கொண்டுவந்து இப்பிராமணச்சிறுவன் தனக்கருகாமையில் விரித்துவைத்திருக்கும் வஸ்திரத்தில் போடுவதுண்டு. அப்பதார்த்தங்களை யெடுத்துக் கொண்டுபோய்த் தன் தாயிடங்கொடுக்க, அவள் அவைகளை வாங்கி வெவ்வேறாய்ப் பொறுக்கிப் பாகம்பண்ணுவாள்.

இப்படித் தினந்தோறும் அவன் கொண்டுவருகிற அரிசி காய் கறி பதார்த்தங்களை வெவ்வேறாய்ப் பிரிப்பது அவளுக்கு மிகவும் கஷ்டமாயிருந்தபடியால், ஒருநாள் தன் மகனைப்பார்த்து "அப்பா குழந்தாய், நீ புராணம் சொல்லும்போது காய்கறி பதார்த்தங்கள் கொண்டுவந்து போடுகிற புண்ணியவான்களை வெவ்வேறாய்ப் போடச்சொல்லக்கூடாதா? அவைகளை வெவ்வேறாய்ப் பிரிப்பதிலேயே எனக்குப் பொழுதெல்லாம் கழிந்துவிடுகிறதே" யென்றாள். இதைக்கேட்ட அப்பிராமணச் சிறுவன், அப்படியே யாகட்டுமென்று தன் தாய்க்குச் சொல்லி, மறுநாட் காலையிலெழுந்து, காவேரிக்குச் சமீபத்தில் தான் புராணம் சொல்லும் இடத்திற்குப் போய்த் தன் ஆசனத்திலுட்கார்ந்து தனக்கெதிரே தன் வஸ்திரத்தை விரித்து, ஜனங்கள் ஸ்நானத்திற்கு வருகிற சமயம்பார்த்து புராணத்தைக் கையிலெடுத்துக்கொண்டு "இப்படியாகக் காவேரியம்மாள் மேற்கேயிருந்து கிழக்கே வருகிறகாலத்தில் தன்னிருபக்கத்திலும், படுகைகளிலும், வயல்களிலுமுள்ள பாகல், அவரை, புடலை, கத்தரி முதலிய செடிகொடிகளையும், நெல், கேழ்வரகு, கம்பு, சோளமுதலிய தானியப் பயிர்களையும் அழித்து நாசமாக்கிக்கொண்டு வருகிறாளாம். ஏன் அப்படி வருகிறாளென்றாலோ, அவைகள் முன் ஜென்மத்தில் பாகற்காயைப் பாகற்காயோடு போடாமலும், புடலங்காயைப் புடலங்காயோடு போடாமலும், அரிசியை அரிசியோடு போடாமலும், பிராமணனுக்கு வருத்தத்தை யுண்டுபண்ணின பாவிகளுடையவைகளாம். ஆகையால் ஓ ஜனங்களே நீங்கள் அரிசியை அரிசியோடு போடுங்கள், கத்தரிக்காயைக் கத்தரிக்காயோடு போடுங்கள்" என்று புஸ்தகத்தி லெழுதியிருக்கிறதுபோல் வாசித்தான். இதைச் செவியுற்ற அறிவீனர்களாகிய ஜனங்கள் அவன் சொல்லியது உண்மையென நம்பி, அவ்வாறே காய்கறி பதார்த்தங்களை வெவ்வேறாய்ப் போட்டார்கள். அவைகளை யெடுத்துக்கொண்டுபோய்த் தன் தாயிடத்திற் கொடுத்துத் தான்செய்த தந்திரத்தைச் சொல்ல அவள் அதைக்கேட்டு மகிழ்ந்து, தன் புத்திரன் சாமர்த்தியத்தை வியந்து "அப்பா! என் அருமைக்குழந்தாய், கண்ணைக் கெடுத்த தெய்வம் மதியைக்கொடுக்காதா! நீ சிறு வயதிலேயே உன் தகப்பனை யிழந்தாயானாலும் நீ அதி சூட்சும புத்தியுள்ளவனாயிருத்தல் கடவுளுடைய கிருபைதான்" என்று சொல்லித் தன்மகனை மார்போடணைத்து முத்தமிட்டு ஆனந்தமடைந்தாள். தன் தாய் சொல்லியதைக் கேட்டுப் பூரிப்படைந்து அதுமுதல், தனக்கு ஆக வேண்டிய காரியங்களையெல்லாம் புராணத்திலிருப்பதுபோலவே வாசித்து ஜனங்களை யேமாற்றுவதில் கைதேர்ந்தவனானான்.

இப்படியிருக்குநாளில் ஒருநாள் பிரசங்கம் செய்யும்பொழுது, பிராமணர்களைப்பற்றி வெகுவாகப் புகழ்ந்து பேசிப், பிராமணர்களுக்குதவி செய்பவர்கள் ஒரு அற்ப உதவி செய்தபோதிலும் கோடீஸ்வரராவார்கள்; அவர்கள் செய்த பாவமெல்லாம் அடியோடு தீப்புகுந்த காடுபோல் அழிந்து போகும்; பிராமணர்களுக் கொருவேளை போசனத்திற்கு வழிபண்ணினவர்களுக்குப் பிரமஹத்தி முதலிய மகாபாதகங்களைச் செய்தபோதிலும், நரகபயமே யில்லையென்று பிரசங்கித்தான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு திருடன், நல்லது நாம் வெகுகாலமாய்த் திருடுவதினாலேயே ஜீவனம் செய்துகொண்டு வருகிறோமே; இன்னும் திருட்டுத்தொழிலை நமக்கு ஜீவனமாயிருக்கிறதே; நாம் செய்த பாவத்தையெல்லாம் போக்க வெகு சுலபமான வழி இப்புராணிகர் சொல்லுகிறாரேயென்று தனக்குள்ளே ஆலோசித்துக்கொண்டு, அவன் கையிலுள்ள பணம் செலவழிந்துவிட்டபடியாலும், அவன் பிறவூரானைகையால் கடன் வாங்க அவனுக்குப் பழக்கமானவர்கள் அவ்வூரில் இல்லாததினாலும். அன்றிரவில் ஊரடங்கியபின், அக்கிரகாரத்திற்குப் போய் ஒரு சிறு வீடிருக்கக்கண்டு, அதிற் கன்னமிட்டுள்ளே நுழைந்து அங்குள்ள சொத்துக்களை யெல்லாம் கைப்பற்றி வெளியே ஓடித் தப்பிவிட்டான். அவன் கன்னமிட்டவீடு அப்பௌராணிகன் வீடாதலால், அப்பிராமணன் பொழுது விடிந்தபின் வீட்டிற் களவு போயிருப்பதைக்கண்டு ஏக்கமுற்று, நாமெத்தனையோ பெயரை யேய்த்தோமே, இப்பொழுது கள்வன் நம்மை யேய்த்துவிட்டானே யென்று துக்கப்பட்டு, ஆயினும் நம்முடைய புராணமும் அதைக் கேட்பதற்குப் பேதைப் பெண்களும் உள்ளவரையில் நமக்கு யாதொரு குறைவுமில்லையென்று தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு, மறுநாட் காலையில் வழக்கம்போலவே தன் புராணத்தை யெடுத்துப்போய்த் தன்னிருப்பிடத்திலிருந்து வாசித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அந்தத் திருடனும் அவனிடத்திற் போய், அவன் பிராமணனுக்குதவி செய்தால் பாவமெல்லாம் பறந்தோடும் என்று சொல்லுகிற சமயத்தில், தான் அன்றிரவு திருடின சொத்துக்களில் பொன் கட்டிய உருத்திராட்சம் ஒன்றை யப்பிராமணன் விரித்திருந்த வஸ்திரத்திற்போட்டான். அதைக்கண்ட பௌராணிகன் திடுக்கிட்டு, ஓகோ இது நம்முடையதல்லவா! நமது வீட்டில் இராத்திரி களவுசெய்தவன் இவனாய்த்தானிருக்கவேண்டுமென்றெண்ணி, அப்பா இதேது? திருட்டுச்சொத்தாய்த் தோன்றுகிறதே! பிராமணன் சொத்தையபகரிப்பவர்கள் இரௌரவ நரகத்தையடைவார்கள் என்று சாத்திரமிருக்கின்றதே யென்றான். அதற்கு அந்தக்கள்வன் அந்நரகபயத்தை விலக்குவதற்காகவே உமக்கு இந்த உருத்திராட்சத்தைத் தானஞ்செய்தேன்; ஏனெனில், பிராமணனுக்கு அற்ப உபகாரம் பண்ணினாலும் பண்ணினவர்களுக்கு யாதொரு நரகபயமு மில்லையென்று புராணத்தில் வாசித்தீரே என்று சொன்னான். பிராமணன் புராணத்திலிருப்பதைவிட்டுப் பேராசையினால் பொய் சொன்னதினாலல்லவோ நமக்கிக்கதி நேரிட்டது.



ஆயினும் தண்டப்பிரயோகம் செய்யாமல் சொத்தைமட்டும் கவர்ந்தனனே யென்று மனதைச் சற்றுத் தேற்றிக்கொண்டு இனி அவ்வூரிலிருக்கலாகாது என்று தன் தாயை யழைத்துக்கொண்டு வடக்கே சென்னைநகரை நோக்கிச் சென்றான்.

இவ்வாறு வருகிற வழியில் அநேக ஊர்களுக்குப் போய் அங்கே இராமாயணம் பாரதமுதலிய புராணங்களைப் பிரசங்கித்து யாசகம் செய்து கடைசியாய்ச் சென்னைநகருக்குவந்து அவ்விடத்திற் பெரியதனக்காரர்கள் யாரென்றறிந்து அவர்களிடத்திற்போய்த், தான் தென்தேசத்துப் பௌராணிகனென்றும், இராமாயணம் பாரதமுதலிய புராணப்பிரசங்கத்திற் கைதேர்ந்தவனென்றும் சொன்னான். அதைக்கேட்டு அவர்கள் மகிழ்ந்து தென்தேசத்திலிருந்து இராமாயண சாஸ்திரியார் வந்திருக்கிறாரென்று ஊரெங்குந் தெரிவித்து, அநேக கனவான்கள் வீட்டில் காலக்ஷேபம் செய்யும்படி யேற்பாடுபண்ணி, இவனுக்காக அநேக சமாராதனை முதலானவைகளெல்லாம் செய்து அவனைக் கனப்படுத்தினார்கள்.

இப்படிச்செய்த பிராமண போசனங்களில் ஒருநாள் இப்பிராமணன், ஏறக்குறைய சாப்பிட்டுவிட்டபடியால், குனிந்துபார்க்க முடியாதபடி நடந்து போனான். போகிறவழியில் தன் செருப்பு ஞாபகம் வந்தது. அது காலில் இருக்கிறதோ இல்லையோவென்று குனிந்துபார்க்கக் கூடாமலிருந்தபடியால் தன்னெதிரேவந்த வேறொரு பிராமணனைத்தமரைப் பார்த்து, ஐயா! தாங்கள் தயவுசெய்து என் காலிற் செருப்பிருக்கிறதோ பாருங்கள் என்று சொல்ல, அதைக்கேட்ட அப்பிராமணனும் இவன் சாப்பிட்டதுபோலவே விருந்துண்டவனாதலால், அவனாற் குனிந்து பார்க்கக்கூடாமல் மேலே பார்த்துக்கொண்டு ஐயா இராமாயணசாஸ்திரியாரே, ஆகாயத்தில் நட்சத்திர மண்டலமெல்லாம் பார்த்தும் உம்முடைய செருப்புக் கண்ணுக்குத் தென்படவில்லை யென்றான். அதைக்கேட்ட இராமாயணசாஸ்திரி செருப்பைக் காணோமே யென்று விசனப்பட்டுக்கொண்டு கொஞ்சத்தூரம் போனவுடன் வயிற்றில் வலியுண்டாக ஒரு வீட்டுத் திண்ணையிற்படுத்து அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது அதின் வழியே சென்ற ஒரு வைத்தியன் இவரைப்பார்த்து, ஏனையா துக்கமுகமாயிருக்கிறீரென்று கேட்க, அதற்கவன் இப்பொழுதுதான் பிராமணா[illegible]தம் சாப்பிட்டுவந்தேன், வயிறு வலிக்கிறதென்றான். அதைக்கேட்ட வை[illegible]தியன் இவன் ஒரு சாப்பாட்டிராமன்போற் காணுகிறதென்று நினைத்து, [illegible]தையா, தங்கள் விரற்களிலிரண்டை வாயிலிட்டு வாந்திசெய்து போடுங்க[illegible] தங்கள் வயிற்றுவலி உடனே நீங்குமென்று சொல்ல, அதற்கப்பிராமணன் இரண்டு விரல்கொள்ளுவதற்கு என் வாயிலிடமிருந்தால் இன்ன மிரண்டு வடைகளைச் சாப்பிட்டிருப்பேனே யென்றான். இதைக்கேட்ட வைத்தியன் நகைத்துச் சாப்பாடு ஜீரணிக்கும்வரையிலும், துன்பப்படத்தான் வேண்டுமென்று சொல்லிப் போய்விட்டான்.

பின்பு கொஞ்சம் சௌக்கியப்பட்டவுடன் அப்பிராமணன் எழுந்துபோய் சில பெரிய மனிதர்களைக்கண்டு, யாவருக்கும் பொதுவான ஒரு இடத்தில் இராமாயணக்கதையை ஆரம்பித்துப் பிரசங்கம் செய்யவேண்டுமென்று தன்னபிப்பிராயத்தைத் தெரிவிக்க, அப்படியே ஓர் பெரிய வீட்டுத் தெருப்புறத்தில் மேடைபோட்டு, அதில் பலவிதமான அலங்காரங்களெல்லாம் செய்து, அதில் இராமர்படமொன்றைவைத்து, அதற்குச் சமீபத்தில் சாஸ்திரியாருக்கோர் ஆசனமும், பக்கத்தில் புஸ்தகம் வாசிப்போனுக்கோர் ஆசனமும் போட்டு, இராமாயணக் கதையை நல்ல சுபதினம் பார்த்து ஆரம்பித்தார்கள்.

அன்றுமுதல் சென்னைநகர் முழுதும் இராமாயணசாஸ்திரியார் பெயர் பரவிற்று. தினந்தோறும் அவன் பிரசங்கத்தைக் கேட்க அநேக பெண்களும் அவர்களைப்போலொத்த ஆண்களும் கூட்டம் கூட்டமாய் வந்து அதைக் கேட்டு மகிழ்ந்து, அவனுக்குத் தக்ஷிணையாக விசேஷ திரவியங்களையும் அரிசி பருப்பு முதலியவைகளையுங் கொடுத்து, அவனுக்கு நமஸ்காரஞ் செய்வார்கள். அவனுக்கு இப்படி வரும்படி சாஸ்தியாய் வரவே அதிக ஆனந்தமுண்டாகி முன்னைப்பார்க்கிலும் பதின்மடங்கதிகமாய்ப் பெருத்துவிட்டான்.

தினந்தோறும் தடித்தவுடலும், கறுத்த நிறமும், பெருத்தவயிறும், சாடிவாயும், சப்பைமூக்கும், இரட்டைமண்டையும், உட்குவிந்த கண்களுமுள்ள இப்பிராமணன் பிரசங்கத்தை யாரம்பிக்கும்படித் தன்னாசனத்திலுட்கார்ந்தபின் வேறொரு பிராமணன் ஒரு கையிற் சந்தனக்கிண்ணமும், மற்றொரு கையில் பன்னீர்ச்சொம்பும் புஷ்பமாலையுங் கொண்டுவந்து மிகவும் வணக்கமாயவனெதிரே நின்று, சுவரில் வெள்ளையடிப்பதுபோலவன் தேகமுழுதும் சந்தனத்தைப்பூசி அவன் தலையிற் பூவைச்சூடி கழுத்தில் ஹாரத்தைப் போட்டு அவனுக்குத் தூபதீபம் காண்பித்து அவனையொரு உயிர்த்தெய்வத்தைப்போற் பாவித்து வணங்குவான். பின்பு பிராமணன் கதாப்பிரசங்கத்தை யாரம்பிப்பான்.

இந்தப்பிரகாரம் இவன் நாள்தோறும் பிரசங்கம் பண்ணிக் கொண்டு வரும்பொழுது, ஒரு தினக்கூலிக்காரனும் ஆதிமுதல் மிக விசுவாசத்துடன் இவ்விராமாயணப் பிரசங்கத்தைக் கேட்டு, அப்பிராமணன் சொல்வதெல்லாம் உண்மையென்றே நினைத்துத் தினந்தோறும் தவறாமல் வந்து கேட்பது வழக்கம். ஒருநாள் இராமாயணத்தில், அயோத்தியாகாண்டம், மந்தரை சூட்சிப் படலத்தில், தசரதமகாராஜாவானவர் இராமருக்குப் புத்திபோதிக்கிற சந்தர்ப்பத்தையெடுத்து "அப்பொழுது அந்தத் தசரதமகாராஜாவானவர் தன்னுடைய புத்திரனாகிய இராமனைப்பார்த்து, அப்பா! என்னருமைக் குழந்தாய்! இந்தப் பூலோகத்தில் இராஜாக்கள் பிறப்பது பிராமணர்களைப் பூசிப்பதற்காகவேயன்றி வேறொன்றற்கல்ல; இப்பூமியிலுள்ள எல்லா சிர்ஷ்டிப்புகளும் அவர்களுக்காகவே உண்டாக்கப்பட்டிருக்கின்றன; ஆகையாலவர்களுக்குப் பூதேவதைகளென்று பெயர்; இவ்வுலகத்தைப் படைத்த பிரமனும், அதைக் காக்கின்ற விஷ்ணுவும், அதையழிக்கின்ற உருத்திரன் முதலான எல்லா தேவதைகளும் அவர்களுக்குள் ளடக்கம். இதையறிந்தன்றோ பெரியோர்கள்

"தெய்வாதீனம் ஜகத்ஸர்வம்
மந்திராதீனம் தைவசா
தன்மந்திரம் பிராமணாதீனம்
பிராமணா மம தேவதா:

என்றபடி, இவ்வுலகம் தெய்வத்திற்கடக்கம், தெய்வம் மந்திரத்திற்குள்ளடக்கம், மந்திரம் பிராமணர்களுக்குள் ளடக்கம்; ஆகையால் பிராமணர்களே நமக்குத் தெய்வம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் உன்னுயிர் போவதாயிருந்தாலும் பிராமணர்களைக் காப்பாற்றுவதற்கு நீ பின்னிடையாதேயென்றும், இன்னும் மற்றக்காரியங்களையும் நன்றாய் எடுத்துச்சொன்னார்" என்று பிரசங்கம் செய்தான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த அத்தினக் கூலிக்காரன் "ஆகா! பிராமணாள் காரியம் இன்றல்லவோ நமக்கு விளங்கிற்று; இதுவரையிலும் நாமறியாமற் போனோமே" யென்று நினைத்து, அப்பௌராணிகன் சொல்வதெல்லாம் உண்மை யென்று எண்ணிக்கொண்டு, கதை முடிந்தவுடனே வழக்கம்போல் வீட்டுக்குப் போனான்.

அவன் வீடுபோய்ச் சேர்ந்தவுடன் இரண்டொருநாளாய் வியாதியாயிருந்த அவனுடைய ஒரேபேறான புத்திரன் தோஷம்பிறந்து தேகவியோகமானான். அப்பொழுது இவனும் இவன் மனைவியும் மிகவும் அழுது புலம்பிக்கொண்டிருக்கிற சமயத்தில், இராமாயணசாஸ்திரியார் பிரசங்கம் செய்யும்பொழுது, தெய்வங்களெல்லாம் பிராமணர்களுக்குள்ளடக்கம் என்று சொன்னது அவன் ஞாபகத்திற்குவர, உடனே தன் மனைவியைப் பார்த்து நீயதிகமாய் விசனப்படாதே, நம்முடைய பிள்ளையைப் பிழைப்பிக்க ஒரு வழியுண்டு; தேவதைகளெல்லாம் பிராமணர்களுக்குள் ளடக்கமென்று இராமாயண சாஸ்திரியார் சொன்னார்; ஆகையால் அவரிடத்திற் போய்க் கேட்டால், நம்முடைய பிள்ளையைக்கொன்ற எமனுக்குக் கட்டளையனுப்பி நம்முடைய பிள்ளையை மீட்பிப்பார் என்றான். அதைக்கேட்டு அவன் மனைவியும் சந்தோஷப்பட்டு, அங்கிருந்தபடியே அவ்விருவரும் நேரே இராமாயண சாஸ்திரிவீட்டுக்குப்போய் அவனைக்கண்டு அவனிடத்திற் காரியத்தைச் சொல்ல, அவன் இவனொரு பேதையாயிருக்கிறான்; நாம் இவனிடத்தில் நல்ல வரும்படி பெற்றுக்கொள்ளலாம் என்று தனக்குள்ளே நினைத்துக்கொண்டு, நல்லது, நான் அந்த எமனைச் சாவகாசமாய்க் கண்டுபேசிப் பிள்ளையை மீட்டுத்தருகிறேன்; நீ ஒன்றுக்கும் பயப்படாதே! நீ வீட்டுக்குப்போய், உன் பிள்ளையைக்கொண்டு போய்ப் புதைத்துவிடு! இன்னும் இரண்டொருமாதத்திற்கெல்லாம் உன் பிள்ளையை வரவழைத்துத் தருகிறேனென்று திடஞ்சொல்ல, அதைக்கேட்ட அவ்வகதி மிகச்சந்தோஷமடைந்து தன் மனைவியை யழைத்துக்கொண்டு வீட்டுக்குட் போய் பிள்ளையை யெடுத்து இடுகாட்டிற் புதைத்துவிட்டான்.

அன்றுமுதல் அக்குடியானவன் தினந்தோறும் ஐயர்வீட்டுக்குப் போய் அவனைக்கண்டு அவனுக்கு வேண்டிய சிற்றூழியங்களெல்லாம் செய்து, தன் வரும்படியிற் கொஞ்சம் மீத்தி அவனுக்குக் காணிக்கையாகக் கொடுத்து வருவான். அவன் சொன்ன கெடுவும் வந்துவிட்டது. அவன் பிள்ளையெங்கேயென்று கேட்டதற்கு, அவன், அந்த எமன் ஊரிலில்லையாம்; அவன் வந்தவுடன் வரச்சொல்லி யிருக்கிறேன்; அப்பொழுது ஆகட்டும், நீ அவசரப்படாதேயென்று சொன்னான். இப்படியே அநேக கெடுவுகள் வைத்தும் பிள்ளை வராததினால் இவனும் மனஞ்சலித்துப் பின்னும் அவனைத் தினந்தோறுங் கண்டு கேட்டுக்கொண்டே வந்தான். பின்பு ஒருநாள் இராமாயணசாஸ்திரியார், உத்தரகாண்டத்தில் சாம்புவன் வதைப்படலத்தைப் பிரசங்கித்தான். அப்பொழுது பிள்ளையிழந்த அவ்வேழையும் வந்திருந்தான். அந்த சந்தர்ப்பத்தில், ஒரு பிராமணன் குழந்தை யிறந்துபோனதாகவும், அப்பிராமணன் இராஜாவின் அநீதியினால் இக்குழந்தை இறந்ததென்றும் நினைத்துப் பிள்ளையையெடுத்துக்கொண்டு இராமர் அரண்மனைவாயிலண்டை வந்து கூக்குரலிட, அதைக்கேட்ட இராமர் திடுக்கிட்டு ஓகோ ஏதோ பிசகு நேரிட்டிருக்கிறதென்று வெளியேபோய் காடுகளையெல்லாம் சுற்றிப்பார்த்து, வருகிறபொழுது சூத்திரசாதியிற் பிறந்தவனாகிய சாம்புவன் என்பவன் தவஞ்செய்வதைக் கண்டு, யுகதர்மத்திற்கடாத காரியத்தையவன் செய்தானாகையால் அப்பிராமணன் பிள்ளை யிறந்ததென நினைத்து, அச்சூத்திரனை ஒரேவெட்டாக வெட்டிப்போட, பிராமணன்பிள்ளை உயிர்மீண்டது என்றுசொல்லி, "பார்த்தீர்களா ஜனங்களே! சூத்திரனாகிய அச்சாம்புவன் தவஞ்செய்யப் போமோ! அன்றியும் அவனைத் தவஞ்செய்யவேண்டா மென்றாலும் அவன் கவனியான்! மயிலே மயிலே இறகுபோடென்றாற் போடுமோ! ஆகையாற்றான், அப்பிராமணன் பிள்ளையைப் பிழைப்பிக்க இராமர் அவனை ஒரே வெட்டாக வெட்டிப் போட்டார்" என்று பிரசங்கித்தான்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த அக்குடியானவன், ஓகோ, நாமும் இப்பிராமணனைச் சகசத்தில் கேட்பதினாலன்றோ, சாக்குப் போக்குச் சொல்லுகிறான்; இவனைக் கேட்கிற வழியாய்க் கேட்கவேண்டுமென்று நினைத்து, ஒரு பெரிய தடியெடுத்துப்போய், அவன் வருகிற மார்க்கத்தில் நின்றுகொண்டிருந்து, இராமாயண சாஸ்திரியார் பிரசங்கம் முடித்து வருகிற சமயத்தில், ஐயா! என் பிள்ளையைப் பிழைப்பிக்கும்படி சகசத்தில் கேட்டால் நீர் நாட்போக்குகிறீர், இப்பொழுதாகிலுந் தாருமென்று தன் கையிலிருந்த தடிக்கம்பினால் அவனை நன்றாய்ப்புடைத்தான். அவன் இந்த அடியைத் தாங்கமுடியாமற் கூக்குரலிட, ஜனங்களெல்லாம் வந்துகூடி என்னென்று விசாரித்தபொழுது, அந்த ஏழை மனிதன் தன் பிள்ளையிறந்தது முதல் எல்லாவற்றையும் சொல்லி, இப்பிராமணன் பிள்ளையைத் தருகிறேனென்று தாமதித்தானென்றும், கடைசியாய் இராமர் பிராமணன் பிள்ளையை மீட்பிக்க சாம்புவனைக் கொன்றதுபோல



இவரைப் புடைத்தால்தான் என்பிள்ளை வருமென்று அடித்தேனென்றும் சொன்னான். அதைக்கேட்ட ஜனங்கள் அவன் பேதையென்றறிந்து ஐயரைச் சமாதானப்படுத்தி வீட்டுக்கனுப்பி விட்டார்கள். அதுமுதல் அப்பிராமணன் நாமில்லாது சொன்னதினா லல்லவோ படாதபாடு படவேண்டியதாயிற் றென்று நினைத்து கொஞ்சக்காலம் கழித்துச் சென்னைநகரைவிட்டுத் தன்னூர் போய்ச் சேர்ந்தான்.

**படிப்பினை.**—இதனால் யாவராயினும் சுயப்பிரயோசனத்தைநாடி கட்டுக்கதைகளைக் கல்வியறிவில்லா மூடர்களுக்கு உண்மையெனப் போதித்து மோசஞ் செய்கிறவர்கள், இவ்விராமாயண சாஸ்திரியைப்போல அவ்வறிவிலிகளாலேயே துன்பப்படுவார்களென்று விளங்குகிறது. ஆகையால் நாமெல்லோரும் எப்போதும் உண்மையே பேசல்வேண்டும்.

## ஒற்றைக்கண் பெண்மான்.

ஒற்றைக்கண்ணுள்ள ஓர் பெண்மானானது தானெப்பொழுதும் கடலுக்கருகிலேயே மேயவேண்டுமென்று தீர்மானித்து, ஓர் தகுந்த இடத்தைத் தெரிந்துகொண்டு, அவ்விடத்தில் மேயும்பொழுதெல்லாம் தனக்குத் தீங்கொன்றும் நேரிடாதிருக்கும் பொருட்டு மிகவும் சாவதானமாயிருக்கும். எப்படியெனில், அது தன் குருட்டுக்கண் பக்கத்தை கடலைப்பார்க்க வைத்துக்கொண்டு, தன்னுடைய நல்ல கண்ணினால் கரைப்பக்கத்தைப் பார்த்துக்கொண்டே மேய்ந்து கொண்டிருக்கும். இவ்வுபாயத்தில் தன் முழுநம்பிக்கையும் வைத்ததினால், எனக்கு இனி ஒரு தீங்கும் நேரிடமாட்டாது, எவர்களானாலும் என் பார்வைக்குள் அகப்படுகிறதற்கு முன்னே என்னருகில் வரமாட்டார்களென்று தனக்குள் அடிக்கடி சொல்லிக்கொள்ளும். சிலநாளாய் இம்மானை வேட்டையாட வேண்டுமென்று மிகவும் பிரயாசப்பட்டுவந்த ஓர் வேடனானவன், ஒவ்வொருநாளும் தன் கைக்கு அம்மான் தப்பி ஓடிப்போய் விடுகிறதைக் கண்டு, கடைசியில் அது செய்யும் உபாயத்தை அறிந்து கொண்டான். பின்பு அவன் ஓர் படகின்மேல் ஏறிக் கொண்டு மானுக்கு நேராகத் தான் வருமட்டும் கொஞ்சதூரம் கடலிலே சுற்றிக்கொண்டுபோய், அதற்குத் தெரியாதபடிக்கு அதற்குச் சமீபமாய் வந்து அதை ஒரு துப்பாக்கியினால் சுட்டு வி

டான்; உடனே அது கீழே விழுந்தது. அது மரணாவஸ்தைப்படுகையில், ஐயோ! எனக்கு இப்படியா சம்பவித்தது? கடலுக்கருகான பக்கத்தில் என்னை ஒருவனும் சேதப்படுத்தமாட்டானென்று நினைத்தேனே. இப்பொழுது அவ்விடத்தினின்றே எனக்கு மரணகாயம் உண்டாயிற்று; நான் முழுவதும் நம்பின உபாயமே என் சாவுக்கு ஏதுவாயிருந்தது எனக் கூக்குரலிட்டது.

### படிப்பினை.

நாம் பயப்படவேண்டியதில்லை என்று நினைக்குமிடத்திலேயே மிகுந்த பொல்லாங்கு நமக்கு நேரிடவுங்கூடும். ஆகையால் நாம் செய்யும் உபாயங்களில் மிதமிஞ்சின நம்பிக்கையை வையாமல் எப்பொழுதும் எச்சரிக்கையாயிருப்பது விவேகம்.

## தெய்வச்செயலின் நீதி.

ஓர் உன்னத மலையின்மேல் சந்நியாசி ஒருவன் வாசஞ்செய்து கொண்டிருந்தான். அவன் இப்பிரபஞ்சத்தில் நடக்குங் காரியங்களைக் கவனித்துப் பார்க்குங்கால் அடிக்கடி துன்மார்க்கர் தங்களுக்கு வரவேண்டிய தண்டனைக்குத் தப்பிச் சுகம் அநுபவித்து வருகிறதையும், சன்மார்க்கர் தங்கள் தர்மத்துக்குரிய பலனை அநுபவியாமல் துன்பத்துக்குட்படுகிறதையும் கண்டு திகைத்து, இப்பிரபஞ்சத்தை ஆளுகிறவர் பூரண நீதியுள்ளவரானால் இவ்வித காரியங்கள் உலகத்தில் நடப்பதெப்படியென்று பல சந்தேகங்களுக்கிடங்கொடுத்து, மனவருத்தமடைந்து, தனக்குள்ள ஐயத்தையும் மனக்கலக்கத்தையும் நிவிர்த்தி செய்யவேண்டுமென்று கடவுளை நோக்கி அல்லும் பகலும் பிரார்த்தித்துத் தவசு செய்து கொண்டிருந்தான். இப்படி இருக்குங்காலத்தில், ஓர்நாள் அவன் தன் ஆசிரமத்தில் உட்கார்ந்துகொண்டு, அம்மலை அடிவாரத்திலுள்ள ஓர் சுனை நீரோட்டத்தை நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது ஓர் மனிதன் குதிரைமேலேறி விடாய்த்தவனாய் அச்சுனையினிடத்தில் வந்து சேர்ந்து, குதிரையை விட்டுக் கீழே இறங்கித் தன் தோளில் மாட்டியிருந்த பையைக் கழற்றிக்



கரையின் பேரில் ஓர் ஒதுக்கிடமானவிடத்தில் வைத்துவிட்டு, தண்ணீர் அள்ளிக் குடித்துத் தாகசாந்திசெய்து, இளைப்பாறிக்கொண்டுத் திரும்பிப்போகையில் பொன்காசு நிறைந்த தன் பையை எடுக்க மறந்து குதிரைமேலேறி வேகமாய்ப் போய்விட்டான். அவன் போன சற்று நேரத்துக்குள் வேறொரு பிரயாணி களைத்தவனாய்த் தண்ணீர் குடிக்க அங்கு வந்தபோது பொன்காசு நிறைந்த பையைக் கண்டு, பொட்டெனவெடுத்துப் பதுக்கிக்கொண்டு தீவிரமாய் நடந்து விட்டான். அப்பால் விறகுவெட்டி ஒருவன் காடெங்கும் அலைந்துதிரிந்து, வெகு வருத்தத்தோடு விறகுகளை வெட்டி பெருஞ்சுமை பொன்றைத் தன் தலையின்மேல் சுமந்து கொண்டு, விடாய்த்தவனாய் அச்சுனைக்கு வந்து சுமையை இறக்கிப்போட்டுவிட்டுத் தண்ணீர் அள்ளிச் சாப்பிட்டு, தன் பெரும் ஆயாசந்தீரக் கரையின்பேரில் சற்று நேரம் படுத்திருந்தான். இச்சமயத்தில் முன் குதிரையேறிவந்த மனிதன் அவ்விடத்திற்கு ஆத்திரத்தோடே திரும்பிவந்து, அங்கே விறகுவெட்டியைத்தவிர வேறொருவரையுங் காணாமல், அவனைப்பார்த்து: நான் இங்கு வைத்துவிட்டுப்போன பணப்பை எங்கேயென்றான்? அதற்கவன்: நான் ஒன்றும் அறியேனென்றான். தட்சணம் அம்மனிதன் கோபாவேசங்கொண்டு தன் பட்டயத்தை உருவி விறகுவெட்டியை வெட்டொன்று துண்டம் இரண்டாக வெட்டிப்போட்டு, அவன் மூட்டை முடிச்சுகளைச் சோதித்துப்பார்த்து, தன் பணப்பையைத் தேடியுங் காணாமையால் வெறுமையே திரும்பிப் போய் விட்டான்.

அப்போது இதையெல்லாங் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்த சந்நியாசியானவன் பெருமூச்செறிந்து: ஆ, தெய்வமே! ஒன்றுமறியாத ஏழை ஒருவன் அநியாயமாய்த் தன் உயிரைப் பறிகொடுத்தானே. இதென்ன விபரீதம்! இதென்ன அநியாயம்! பணத்தைக் கைப்பற்றிப் போனவன் ஒருவனிருக்க, குற்றமில்லாதவன் கொலையுண்டானேயென்று மனம்பதறி நாக்குளறிப் புலம்பினான். இச்சமயத்தில் தெய்வவாக்கு அசரீரியாய்ப் பிறந்து: ஓ, சந்நியாசி! இதைப்பற்றி உனக்கென்ன கவலை, நீ உன் தவசில் தரித்திரு. இப்பிரபஞ்ச ஆளுகைக்குரிய காரியங்கள் உன்னுடையதல்லவே. சர்வலோகத்தையும் படைத்தளித்து ஆளுகிறவரும், சர்வஞானமுள்ளவருமாகிய கடவுளுடைய திருச்செயலை உனது சிற்றறிவி

னால் அளந்தறியலாமென்று நினைக்கின்றாயோ? இது மதியீனம். அவருடைய செயல் உன் மேல்பார்வைக்கு எப்படித் தோன்றினாலும் அதைப்பற்றி உன் மனதில் ஒருபோதும் சந்தேகத்திற்கு இடங்கொடாதே. சர்வலோகாதிபதியானவர் ஓர் அணுவளவாவது பழுதற்ற நீதிபரரென்பதைமாத்திரம் உன் மனதில் ஸ்திரமாய் வைத்துக்கொள். அவர் இவ்வுலகத்தை ஆளும்விதம் நேர்முகமாயல்ல, மறைமுகமா யிருக்கின்றது. கருவிகளையும் ஏதுக்களையுங்கொண்டே தமது சித்தத்தை நடப்பித்துவருகிறார். மானிடர் இக்காரியத்தைக் கிரகித்துக்கொள்ளாததினால், அவருடைய திவ்ய லட்சணங்களையும் அவரது அதிசயசெயல்களையும் அறியாமல் ஐயமுறுகின்றார்கள். இது தப்பிதம். நீ இப்பொழுது கண்ட காட்சியைப்பார்க்கிலும் விபரீதமும் விகற்பமுமானது உலகத்தில் வேறென்ன இருக்கிறது. ஆகிலும் நீ அதன் கருத்தை உணர்வாயானால், சர்வலோக கர்த்தாவாகிய கடவுள் குறையற்ற நீதிபரரென்றே சொல்லி அவரை அத்தியந்த பணிவாய்த் துதிப்பாய். அதன் கருத்தைச் சொல்லுகிறேன் கேள்:

சுனையோரத்தில் பணத்தைக் கண்டெடுத்துப்போனவன் யாவனெனில், அநேக வருஷங்களுக்குமுன் அம்மனிதனுடைய தகப்பனின் ஆஸ்தியை சுனையண்டையில் குதிரையேறிவந்து தன் பணப்பையை இழந்த மனிதனுடைய தகப்பனானவன் அநியாயமாய் அபகரித்துக்கொண்டான். ஆகையால் நாம் இச்சமயத்தில் குதிரையேறி வந்தவனுடைய பணம், இரண்டாவது சுனையினிடம் வந்த பிரயாணி கையில் சிக்கும்படி செய்தோம். மேலும் கொஞ்சக் காலத்துக்குமுன் விறகுவெட்டியானவன் குதிரையேறி வந்தவனுடைய தகப்பனைக் காட்டில் தனிமையாய்ப் போகக்கண்டு, அவனிடத்திலிருந்த பணத்தை அபகரித்துக்கொள்ளும்பொருட்டு அவனைக் கொலைசெய்திருந்தான். ஆகையால் அவனிடத்தில பழிக்குப் பழிவாங்கும்படி குதிரையேறிக்கு இப்பொழுது இடங்கொடுத்தோம். ஓ, தபசி! காரியம் இப்படியிருப்பதினால், முன்னும் பின்னுமுள்ள சகல காரியங்களையும் அறிய ஏதுவில்லாத நீ தெய்வச் செயல்களைப்பற்றிச் சந்தேகங்கொள்ளும் மதியீனத்தை இதுமுதல் விட்டுவிடு என்று அசரீரிவாக்குப் பிறந்தது. இதைக் கேட்ட



சந்நியாசி தன் மதியீனத்தை உணர்ந்து, அத்தியந்த பணிவாய்க் கடவுளுக்கு வணக்கஞ்செலுத்தி, அவரைநோக்கி: சர்வஞானமும் பூரணநீதியுமுள்ள கடவுள் நீரே; உமக்கு மறைவாயிருக்கும் இரகசியம் ஒன்றுமில்லை; உமது நாமம் என்றும் துதிக்கப்படுவதாக என்றான்.

## சக்கிலியும் வர்த்தகனும்.

பூர்வத்தில் ஓர் சக்கிலியிருந்தான்: அவன் நாடோறுங் காலை முதல் மாலைவரையினும் உழைத்துப் பாடுபடுகிறவனாயிருந்தும், தன் ஸ்திதியில் மனரம்மியமுள்ளவனாய் எப்பொழுதும் சந்தோஷத்துடன் பாடிக்கொண்டு காலங்கழித்துவருகிறவனாயிருந்தான். இவனுக்கு அடுத்த வீட்டிலோ திரண்ட ஐசுவரியமுள்ள வர்த்தகனொருவனிருந்தான்: இவன் இராப்பகல் பணயோக்கமும் கவலையுங்கொண்டு, மன அமைதலைப் பறிகொடுத்து, பொருள் சேர்க்கும் வகையையே சிந்தித்துக்கொண்டிருந்தான். ஒருநாள் இவ்விரண்டு பேரும் ஒருவரையொருவர் சந்திக்கும்படி நேரிட்டது. அப்போது வர்த்தகன் சக்கிலியைப்பார்த்து: ஆ, என் நல்ல சிநேகிதனே! நீ படும்பாட்டினால் வருஷம் ஒன்றுக்கு எவ்வளவு பணம் சம்பாதிப்பாயென்று கேட்க, சக்கிலி சிரித்துக்கொண்டு, ஐயா! வருஷம் ஒன்றுக்கு எவ்வளவு சம்பாதிப்பாயென்று கேட்கிறீர்? அவ்விதக் கணக்கு எனக்குத் தெரியாது. அன்றாடகம் உழைத்து அன்றாடகஞ் சாப்பிட்டுவருகிறேன். இவ்விதமாய் நான் காலந்தள்ளிவர எப்படியோ வருஷமும் முடிந்துபோகிறது. வருஷம் ஒன்றிற்கு எனக்ககப்படுகிறது இவ்வளவென்று நான் பார்க்கிறதுமில்லை; எனக்குத் தெரியவுந் தெரியாது. அன்றாடக உழைப்பினால் அன்றாடக போஜனம் நடந்துவருகின்றதென்றுமாத்திரம் எனக்குத் தெரியுமென்றான். இதைக்கேட்ட வர்த்தகன் சக்கிலியைப் பார்த்து: அப்படியானால் நாளொன்றுக்குத்தான் எவ்வளவு சம்பாதிப்பாயென்று எனக்குச் சொல்வாயா? என்று கேட்க, சக்கிலி: ஐயா! ஒரு நாளைக்குச் சற்று அதிகமாயகப்படும், ஒருநாளைக்குச் சற்று குறைச்சலாயகப்படும். ஆகிலும் அப்போதைக்கப்போது அகப்

படும் வரும்படியைக்கொண்டு நானும் என் சமுசாரமும் ஜீவனம் பண்ணி வருகிறோம் என்றான். அப்போது வர்த்தகன்: நல்லது என் சிநேகிதனே! இனிவருங் காலத்தில் உனக்கு யாதொரு குறைவும் நேரிடாதபடிக்கு உனக்கு இந்த 100 பொன்காசைத் தருகிறேன். நீ இதைப் பத்திரப்படுத்திவைத்து, உனக்கவசியம் நேரிடுங் காலத்தில் நீ அதை உபயோகப்படுத்தலாமென்றான். சக்கிலி அந்த 100 பொன்காசைப் பார்த்தபோது, உலகத்திலுள்ள திரவியத்தையெல்லாம் கண்டதுபோல அவனுக்கிருந்தது. அவன் அந்தப் பணத்தைச் சந்தோஷத்துடன் வாங்கிக்கொண்டு தன் வீட்டுக்குத் திரும்பிவந்து, அதை வெகு கவலையோடு பத்திரமாய்ப் பூமியில் புதைத்துவைத்தான். அத்துடன் தன் மனச்சமாதானத்தையும் புதைத்துவிட்டான். எப்படியெனில், ஐசுவரியம் அவனை அடுத்த நிமிஷமுதல் அவனுடைய சந்தோஷமும் பாடல்களும் பறந்துபோய்விட்டன. நித்திரை அவன் கண்ணைவிட்டு விலகிக்கொண்டது. தீராக்கவலை, சந்தேகம், வீண்பயம் முதலியவை அவன் மனதைப் பிடித்து அரித்துக்கொண்டேயிருந்தன. இதனால் பகல்முழுவதும் அவன் கண் புதையலிருக்குமிடத்தை நோக்கிக்கொண்டே இருக்கும். இரவிலோ பூனை எலிமுதலியவற்றால் ஏதாகிலும் அரவமுண்டாகுங்கால் அவன் திடுக்கிட்டு எங்கே திருடர்கள் தன் பொக்கிஷத்தை கொள்ளையிட்டுக் கொண்டுபோக வந்திருக்கிறார்களோவென்று சமுசயித்து வெகு திகிலடைந்திருப்பான். இவ்வாறு அவன் வெகுநாளாய் தன் பணத்தினிமித்தம் பெரிய வேதனையடைந்துகொண்டுவந்ததால், அவன் அலுத்துப்போய் தன் முன்னிலைமையையும் பின்னிலைமையையும் ஒத்துப்பார்த்து, தன்னிடத்தில் ஐசுவரியம் வந்ததோடு தனக்கிருந்த மனச்சமாதானமுஞ் சந்தோஷமும் நீங்கிவிட்டனவென்றுணர்ந்து, உடனே தன் அயல் வீட்டுக்காரனாகிய ஐசுவரியமுள்ள வர்த்தகனிடத்தில் ஓடிப்போய், ஐயா! நான் பட்டபாடு போதும், நீர் கொடுத்த 100 பொன்காசையும் திரும்பக் கொடுத்துவிடுகிறேன், அதை நீரே வைத்துக்கொள்ளும், நீர் என்னிடத்திலிருந்தெடுத்துக்கொண்ட நித்திரையையும் மனரம்மியத்தையுமாத்திரம் எனக்குத் திரும்பக் கொடுத்துவிடுமென்றான்.

---

20 SEP 1901 MADRAS

# ஜனப்பிரியன்.

மாதம் ஒருமுறை பிரசுரம் செய்யப்படும்.

புஸ்தகம். 1] சென்னை 1901ஞு ஜூன்மீ [இலக்கம். 12

## சர்மத்தையும் சுத்தத்தையும் பற்றியது.

சர்மம் அல்லது தோலானது தேகத்தின் மேற்புறத்தையெல்லாம் மூடியிருக்கும் ஓர் விசேஷித்த இயந்திரம். இது சில இடங்களில் அதிகத் தடிப்பானதாயும், சில இடங்களில் சொற்பக் கனமுள்ளதாயுமிருக்கும். அது மூன்று பாகங்கள் அல்லது அடுக்குகளுள்ளது.

க-வது. அதன் மேற்புறத்தில், வெண்காயச் சருகுக்கு ஒப்பான ஓர் மெல்லிய தோலிருக்கிறது. இம்மெல்லிய சருகுதோலுக்கு யாதொரு ஸ்மரணை அல்லது உணர்ச்சியுமில்லை. இதன் பிரயோஜனமென்னவெனில்: அது தனக்கு அடியிலிருக்கும் சர்மத்தின் அதி உணர்ச்சியுள்ள பாகங்களின்மேல் ஒன்றும் படாதபடிக்கு அவற்றை மூடிக் காப்பாற்றுகின்றது. கடினமான வேலைமுதலியவற்றினால் இம்மெல்லிய சருகுதோலானது வரவர அதிக உறுதியும் தடிப்புமுள்ளதாகிவிடும். இவ்வாறே மண்வெட்டி வேலைசெய்யும் ஜனங்களுடைய கையிலுள்ள சருகுதோலானது மிகவும் கனத்துக் காய்த்துப்போயிருக்கும். யானை, காண்டாமிருகம் முதலிய சில வகை ஜெந்துக்களின் சருகுதோல் மிகவும் கனத்துக் கடினமாயிருக்கும். சருகுதோலானது தேகத்தின் வெளிப்புறத்திலிருப்பதனால், காற்று உஷ்ணமுதலிய ஏதுக்களால் அது வெகு சீக்

கிரத்தில் காய்ந்து கடினமாகி சர்மத்திற்குரிய உணர்ச்சி சத்துவத்தைக் கெடுத்துப்போட இடமுண்டு. ஆகையால் இப்படிச் சம்பவியாதபடிக்கு ஒரு நல்ல ஏற்பாடு உண்டாக்கப்பட்டிருக்கிறது. அது என்னவெனில்: சர்மத்திற்குக் கீழே நிணைக்கோளங்களென்ற எண்ணிறந்த சிறு கோளங்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. இக்கோளங்களிலிருந்து நிணைக்குழல்களென்ற மிகவும் மெல்லிய நாளங்கள் புறப்பட்டுச் சர்மத்தை ஊடுருவிப்போய், சருகுதோலின் மேற்புறத்தில் முடிகின்றன. இந்நிணைக்கோளங்களிலிருந்து எண்ணெய் போன்ற ஓர்விதக் கொழுப்பானது சருகுதோலின்மேல் இடைவிடாது கசிந்துகொண்டேயிருக்கும். இக்கொழுப்பின் உதவியினால் சருகு தோலானது காற்றினாலும் உஷ்ணத்தினாலும் காய்ந்து வறட்சியாகி, வெடித்துப்போகாமல் எப்பொழுதும் மிருதுவாயும் ஓர்விதப் பளபளப்புள்ளதாயும் இருக்கின்றது.

௨-வது. சர்மத்தின் இரண்டாவதுபாகம் அல்லது அடுக்குக்கு வர்ணத்தோல் என்று பேர். இது சருகுதோலுக்கு அடியில் அதனோடு ஒட்டியிருக்கிறது. இதில் பலவித வர்ணச் சத்துக்கள் அடங்கியிருக்கின்றன. இவ்வர்ணத்தோலை உபாயமாய்ப் பேர்த்தெடுத்துத் தண்ணீரில் போட்டால், அதிலுள்ள வர்ணச் சத்துக்கள் ஜலத்தில் கரைந்துபோம். இம்மெல்லிய தோலில் அநேகவகை வித்தியாசமான வர்ணங்களிருப்பதினால்தான் மனிதருக்குள்ளும் அநேகவகை நிறமுள்ள ஜனங்களிருக்கிறார்கள். ஆபிரிகாகண்டத்திலுள்ள காப்பிரி அல்லது நீக்ரோ ஜாதியாரின் சர்மத்தில் அதிகக் கறுப்புநிறச் சத்தொன்றிருப்பதனால் அச்சனங்கள் மிகவுங் கறுப்பாயிருக்கிறார்கள். அமெரிக்காகண்டத்திலுள்ள சிவப்பு இந்தியர் என்னும் ஜாதியாரின் சர்மத்திலுள்ள வர்ணத்தோலில் ஓர் விதச் சிவப்புநிறச் சத்திருக்கின்றது. ஆனால் இவ்வர்ணத்தோலில் வர்ணச்சத்தொன்றும் முற்றுமில்லாதிருந்தால் அல்லது அதில் மிகவும் சொற்ப அளவான வர்ணமிருந்தால், அப்படிப்பட்ட தோலையுடைய ஜனங்கள் வெள்ளைநிறமுள்ளவர்களாயிருப்பார்கள். ஐரோப்பாகண்டத்திலுள்ள வெள்ளைக்காரரின் நிறத்திற்குக் காரணம் இதுவே. சர்மத்தின் மத்திய அடுக்காகிய இம்மெல்லிய வர்ணத்தோலைத்தவிர, சர்மத்தின் மற்றப் பாகங்களிலெல்லாம் கறுப்பு



மனிதருக்கும் வெள்ளைமனிதருக்கும் சற்றென்கிலும் வித்தியாசமேயில்லை.

௩-வது. சர்மத்தின் மூன்றாவது அடுக்குக்கு மெய்யான சர்மமென்று பேர். இது மற்ற இரண்டு அடுக்குகளைப்பார்க்கிலும் மிகவுங் கனத்தது. இதுவே மிகவும் முக்கியமான பாகம். இதில் தான் எண்ணிறந்த ஸ்மரணை அல்லது உணர்ச்சி நரம்புகள் அடர்த்தியாய்ப் படர்ந்திருக்கின்றது. இவ்வுணர்ச்சி நரம்புகளின் உதவியினால்தான் சர்மத்தின் வழியாக நமக்கு உணர்ச்சியுண்டாகிறது. சர்மத்தின் முக்கிய பிரயோஜனங்களில் ஒன்று உணர்ச்சியே.

விசேஷித்த இயந்திரமாகிய சர்மத்தினால் மிகவும் முக்கியமான வேறொரு பிரயோஜனமுண்டு. அது என்னவெனில்: சாதாரணமாய் நமது கண்ணுக்குத் தெரியாத எண்ணிறந்த சிறு துவாரங்கள் சர்மமெங்கும் நிறைந்திருக்கின்றன. உள்ளங்கைச் சர்மத்தில் ஒரு சதுர அங்குல இடத்தில்மாத்திரம் ஏறக்குறைய 3,500 சிறு துவாரங்களிருக்கின்றன. இப்படியே தேகமெங்குமுள்ள சர்மத்தில் இத்துவாரங்கள் அடர்ந்திருப்பதைக் காணலாம். இத்துவாரங்களென்னவென்றால்: சுவேதகோளங்களென்ற உருண்டை வடிவமுள்ள எண்ணிறந்த சிறு இயந்திரங்கள் சர்மத்திற்கு அடியில் பதிக்கப்பட்டிருக்கின்றன. இச்சிறு இயந்திரங்களிலிருந்து சுவேதக்குழல்களென்ற மிகவும் மெல்லிய நாளங்கள் புறப்பட்டு, சர்மத்தை ஊடுருவிக்கொண்டுபோய் கடைசியில் அதன் மேற்புறத்தில் முடிகின்றன. இச்சிறு சுவேதகோளங்களின் வாய்களே மேலே சொல்லப்பட்ட சிறு துவாரங்கள். சாதாரணப் பருப்பமுள்ள ஒரு மனுஷனுடைய சர்மத்திலுள்ள வேர்வைத் துவாரங்களின் மொத்தத்தொகை ஏழுகோடியிருக்கும். சர்மத்தை ஊடுருவிக்கொண்டுவருகிற எண்ணிறந்த சுவேதக்குழல்களையெல்லாம் ஒரே வரிசையாக வைக்கக்கூடுமானால், அவைகள் 28 மைல் தூரம் நீளும். இச்சிறு இயந்திரங்களினால் என்ன பிரயோஜனமென்றால்: அவைகள் நமது சரீரத்தில் நிமிஷந்தோறுமுண்டாகிற அசுத்தமும் விஷமுமான தேய்வு கழிவு பதார்த்தங்களை வேர்வை ரூபமாக வெளியே போக்குகின்றன. வேர்வையிலுள்ள அசுத்தமும்

விஷமுமான கழிவுபதார்த்தங்கள் எக்காரணத்தினாலாவது தடைப்பட்டு தேகத்திற்குள் கொஞ்சநேரமென்கிலும் தங்குமானால், உடனே சுகங்கெட்டுப் பெரிய மோசங்கள் சம்பவிக்கும். சர்மத்தினுள்ள சுவேதக்குழல்களின் துவாரங்கள் அழுக்கினாலாவது அல்லது வேறெந்தக் காரணத்தினாலாவது அடைபட்டு, அவைகளின் வழியாய் வெளியே நீக்கப்படவேண்டிய விஷபதார்த்தங்கள் சரீரத்திற்குள்ளே நின்றுபோகுமானால், சுகத்திற்கும் ஜீவனுக்கும் பெரிய மோசங்களுண்டாகும். திருஷ்டாந்தமாக: ஒரு மிருகத்தின் சர்மத்தின்மேலெல்லாம் ஏதாவதொருவகை வார்னிஷைக் கொண்டாவது, அல்லது பிசினைக்கொண்டாவது இடைதெரியாத படிக்குக் கனமாய்ப் பூசினால், அம்மிருகம் வெகுசீக்கிரத்தில் மரணமடையும். (Pope Lio) லீயோ என்னும் போப்பானவர் ஒரு பிள்ளைக்குத் தேவதூதன் வேஷந்தரிப்பிக்க உத்தேசித்து, அப்பிள்ளையின் மேனி சொர்ணமயமாகத் தோன்றும் பொருட்டு அதன் மேலெங்கும் தங்கரேக்குகளை ஒட்டுவித்தாராம்; அதனால் அப்பிள்ளை சீக்கிரத்தில் வியாதியடைந்து மரணமடைந்துவிட்டது.

இப்படித் தோலின்மேலுள்ள வேர்வைத்துவாரங்களெல்லாம் ஏககாலத்தில் அடைபட்டுப்போமானால் உடனே மரணம் சம்பவிக்கும்; ஆனால் அத்துவாரங்களில் ஒருபாகமாத்திரம் அழுக்கினாலாவது அல்லது வேறெந்தக் காரணத்தினாலாவது அடைபட்டுப் போமானால், அதினால் சுகத்திற்கு இடையூறுகள் நேரிட்டு, பல வியாதிகள் சம்பவிக்கும். சர்மத்தில் எங்குமடர்ந்திருக்கிற சுவேதக் குழல்களும் நிணக்குழல்களும் நிமிஷந்தோறும் வெளியே கொண்டுவந்து தள்ளும் அசுத்தமும் விஷமுமான சத்துக்கள் நமது தோல்மேலும் நாம் தரித்திருக்கிற வஸ்திரங்களிலும் படிந்து கொண்டே வருகின்றன. இதினால்தான் நமது தேகமும் வஸ்திரங்களும் அதிசீக்கிரத்தில் அழுக்கு முடைநாற்றமுமுள்ளவைகளாய்ப் போகின்றன. ஆகையால்தான் நமது தேகத்தையும் வஸ்திரங்களையும் அடிக்கடி சுத்தம்பண்ணவேண்டிய ஆவசியம் நேரிடுகின்றது. இப்படி அவைகளைச் சுத்தம் பண்ணிக்கொண்டுவராவிட்டால் அவைகளில் படிந்திருக்கும் அசுத்தமும் விஷமுமான பதார்த்தங்கள் மறுபடியும் தோலின்வழியாகத் தேகத்திற்குள் பிர



வேசிக்கிறதற்கும், தோலின்மேலுள்ள சிறு துவாரங்கள் அழுக்கினால் அடைபட்டுப் போகிறதற்கும் இடமுண்டாகிப் பெரிய மோசங்கள் சம்பவிக்கும். இதுவுமன்றி, தோலையும் வஸ்திரங்களையுஞ் சுத்தமாய் வைத்துக்கொள்ளாவிட்டால், சொறி சிரங்கு முதலான அருவருப்புந் தொந்தரையுமான தோலைப்பற்றிய பல வியாதிகளுண்டாவதற்கும் ஏதுவிருக்கும்.

## ஜெயம்.

சத்துருவைத் தோற்கடித்து வெற்றியடைதல்மாத்திரம் ஜெயமல்ல. எடுத்தகருமம் எதுவாயினும் அதில் சித்திபெறுவதே ஜெயமாம். வேறுவகையாய்ச் சொல்லில், ஒன்றின் நல்லமுடிவு ஜெயமும், செட்டமுடிவு அபஜெயமாம். தொடங்கியகாரியம் நன்மையாய் முடிந்து ஜெயம்பெறுகிறவர்களை யாவரும் புகழுவார்கள். அதில் அபஜெயப்படுகிறவனை ஒருவனும் மதியான். ஆகலால் ஜெயமானது ஒருவனுடைய திராணிக்குச் சாட்சிபத்திரம் போலிருக்கிறது. மத்தியில் என்ன இடையூறுகள், துன்பங்கள், விரோதங்கள் வரினும், அஞ்சாமல் நின்று நினைத்தது முடிக்கும் தீரர்களை வியந்து வாழ்த்தாதவர்கள் யார்? ஒரு விஷயத்தை நன்றாய் ஆலோசித்து உறுதியாய் நிர்ணயஞ்செய்து, நமது ஊக்கத்தையும், ஆசையையும், சிந்தனையையுமெல்லாம் அந்த விஷயத்திற்கு நேராகத் திருப்பிவிட்டால், எடுத்தகாரியம் பாதிக்குமேல் நிறைவேறியாயிற்று என்று சொல்லலாம். “எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார், திண்ணியராகப் பெறின்.”

காரியம் இதுவாயினும், நமது தேசத்தில் “விதியினால் வாழ்வதல்லால் மாந்தர், மதியினாலாவதொன்றில்லை” என்கிற சொல்லை விதியாகக்கொண்டு, காட்சி அநுபவம் இரண்டிற்கு மாறாக முயற்சியையும் ஊக்கத்தையும் கைவிட்டுச் சோம்பியிருக்கிறவர்கள் பலருண்டு. மெய்தான், பலவான்கள் எப்பொழுதும் வெற்றியடையவும், முயற்சியுடையோர் எப்பொழுதும் சித்தி பெறவும், நல்

லவர்கள் எப்பொழுதும் வாழ்வநுபவிக்கவும் காணோம். அவ்வாறே சோம்பேறிகளெல்லாம் தாழ்வடையவும், துஷ்டர்களெல்லாம் துயரமநுபவிக்கவும் காணோம். அதுகொண்டு பலவான்களுக்கு ஜெயமில்லை என்றும், முயற்சியுடையோர்க்குப் பலனில்லையென்றும் ஏற்படுமா? துஷ்டர்களுக்குத் துன்பமில்லையென்றும், சோம்பேறிகளுக்குத் தாழ்வில்லையென்றுமாகுமா? இல்லை. எப்பொழுதும், எல்லோரும் என்கிற விசேஷணத்தினால் ஏகதேசங்களில் முறைபிறழ்ந்துவருமென்றும், அவ்வாறு முறை பிறழினும் அதற்குத் தகுந்த முகாந்தரமுண்டென்றும், அந்தந்த முகாந்தரங்கள் இவையென்று நாம் எப்பொழுதுஞ் சொல்ல ஏதுவில்லாமற் போனாலும், அதனால் முகாந்தரங்கள் இல்லையென்றாகாவென்றும் சித்தாந்தப்படுகின்றதேயொழிய மற்றொன்றுமில்லை. ஒருவன் ஒரு துறையிற் சமர்த்தனாயினும் மற்றொரு துறையில் ஏப்பையனாயிருக்கலாம். ஒரு சமயத்தில் சரியாய்ச் செய்தவன் இன்னொரு சமயத்தில் யோசனையின்றி ஊக்கந்தளர்ந்து பிழைபடச்செய்யலாம். ஒருகாலத்தில் வாய்த்த ஏதுக்களும் அநுகூலங்களும் பிறவும் மற்றொருகாலத்தில் ஒத்துவராதிருக்கலாம். இவ்வளவேயன்றி அதற்குரிய பலன் அதனைச் சேராதென்று ஒருக்காலும் ஏற்படமாட்டாது. கடவுளுடைய நியமங்களெல்லாம நிலையும் நிர்விகற்பமுமானவைகளாம். நெருப்புக்குச் சுடுதல் இயல்பென்று நியமித்தாரென்றால், நெருப்பு எந்நாளும் சுடும். சூடு அதைவிட்டுப் பிரியப்போகிறதில்லை. தன்னிலும் கனதியான பொருளைத் தாழ்த்தி லேசானதை மிதக்கச்செய்கிறது ஜலத்துக்குச் சுபாவமென்று அமைத்தாராகில், அது எப்பொழுதும் அப்படியே நடந்தேறும். ஒருக்காலும் திரியாது. வேப்பமரத்திலே மாங்கனியையும், முட்செடிகளிலே திராட்சப்பழங்களையும் பறிக்க முடியாது. மூடனிடத்திலே ஞானத்தையும், புலியினிடத்திலே சாந்தத்தையும் காணக்கூடாது. அவ்வாறே முயற்சியுடையோர்க்குச் சித்தியும், பலவான்களுக்கு வெற்றியும், சோம்பேறிகளுக்கு இழிவும், துஷ்டர்களுக்குத் துக்கமும் நிருமிக்கப்பட்டிருக்கின்றன. இது பொதுவிதி. இவ்விதியில்லையெனறால் சகலமும் தாறுமாறாகி உலகம் நடைபெறுதொழியும். ஆதலால் முயற்சிசெய்து சித்தியடையத் தேடுகிறதே இயல்பாம்.



மனிதர்கள் சித்திபெற நாடுகிறவிஷயங்கள் பெரும்பாலும் பொருளீட்டல், புகழ்சம்பாதித்தல், குடும்பவாழ்வைத் தேடல் என்றவைகளாம். இவற்றையடையத்தான் உலகிற் பெரும்பான்மையோர் ஆவலோடு முயலுகிறார்கள். அவர்கள் விரும்பி முயன்ற காரியம் பெரும்பாலும் அவர்களுக்குச் சித்தியாகிறது. ஆனால் நல்லயத்தனங்களைக் கைக்கொண்டு நியாயமான பிரயத்தனங்கள் செய்து யோக்கியமானவழியில் நின்று ஜெயம் பெறுகின்றவர்கள்தான் யாவராலும் புகழ்பெறத்தக்கவர்கள். அவர்கள் அடைகிற புகழ்ச்சிக்கு அவர்கள் பாத்திரரேயன்றி யற்றப்படியல்ல. ஆயினும் புறவிஷயங்களில் ஜெயமடைகிற இவர்களிலும் மேலான புகழ்ச்சிக்குப் பாத்திரரான வேறொருவகை ஜெயவீரருண்டு. அவர்கள் யாரெனில், தங்கள் உள்ளத்தை ஜெயித்து வெற்றியடைந்திருக்கிற வீரர்களாம். இவர்கள் தான் வாழ்வுடையவர்கள். இவர்கள் அடைந்திருக்கிற ஜெயமேஜெயம். தன்னையடக்கித் தனது துர்க்குணத்தையொழித்து, தன்னுடைய ஆசாபாசங்களை நல்வழிப்படுத்தி, உள்ளது போதுமென்று திருப்தியடைந்து, ஒழுக்கத்தில் நிலைத்து நிற்கிறவனுக்குச் சமமானவீரன் யார்? உள்ளத்தை அடக்குகிறவன் ஒரு கோட்டையைப் பிடிக்கிறவனிலும் பெரியவன் என்று ஓர் ஞானி சொல்லுகிறார். இது விஷயத்தில் அடைகிற ஜெயம் எவ்வளவு சிறியதாயினும், அது ஒருவனுடைய ஆண்மை, தைரியம், உறுதி, பொறுமை, விரக்தி, விவேகம், புத்தி, ஆலோசனை முதலிய சுகுணங்களுக்கு நல்ல அத்தாட்சியாயிருக்கின்றது. இப்படிப்பட்ட ஜெயவீரர்களுக்குக் கிடைக்கிற பலன் நல்ல சுகம், பலம், ஆறுதல், இன்பம், அமைதி, சந்தோஷ முதலிய அரும்பயனுள்ளனவாம். இவர்களுடைய தகுதியையுணர்ந்து அதற்குத் தக்கபடி புகழ்வாரைக் காணோமேயென்றால், உலகம் இவர்களை அறியாது. உள்ளத்தில் ஜெயம் பெறுகிறவன் வாழ்க்கையிற் சுகம் அநுபவிக்கிறவனாம். இவர்கள் தான் சமுசாரமாகிய சாகரத்தில் சங்கடப்பட்டு வருந்தாமல் சன்மார்க்கமாகிய புணைமீதேறி சௌக்கியமாய்க் கடந்து செல்லுகிறவர்களாம். இவர்கள் தான் மேன்மையான பொருளை மேன்மையான வழியால் தேடியடைகிற விவேகிகளாம். இவர்கள் தான் தர்மமே

ஜெயம் என்னுஞ் சத்தியத்தைத் தலைமேற்கொண்டு சித்தியடைகிற புத்திசாலிகளாம்.

உலகத்தில் ஜெயம் பெறுதல் இயற்கையான பல காரணங்களினால் எல்லோருக்குஞ் சாத்தியமல்ல. ஆனால் வாழ்க்கையில் ஜெயம் பெறுதல் எவர்க்கும் கூடிய காரியமாம். இந்த விஷயத்தில் எவரும் முயற்சி செய்யக் கூடும். முயற்சிக்குத் தகுந்த பலனை அடையவும் கூடும். உலகத்தில் சித்திபெற்றவர்கள் வாழ்க்கையில் சித்திபெற்றவர்கள் என்ற இவ்விருதிறத்தாரிலும் அவரவர் செய்கைக்குரிய பலன் மாத்திரம் அவரவரைச் சாருமேயொழிய, ஒரு செய்கைக்குரியது மற்றொரு செய்கைக்கு ஒருக்காலும் தாவாது. உலகத்தில் சித்திபெற்றவர்களுக்கு அவர்கள் தேடிய பொருளோ, புகழோ, உயர்வோ கிடைக்குமேயொழிய வாழ்க்கையிற் சித்திவாராது. வாழ்க்கையில் சித்திபெற்றவர்களுக்கு மற்றதும் அப்படியே. ஆயினும் வித்தியாசமுண்டு. உலகத்தில் எவ்வளவு ஜெயம் பெற்றோராயினும் வாழ்க்கையில் ஜெயம் பெறவிலரென்றால் அப்படிப்பட்டவர்கள் பாக்கியசாலிகளல்ல. வாழ்க்கையில் சித்திபெற்றவர்கள் உலகில் சித்திபெறாராயினும் பாக்கியவான்களே. அப்படியானால் உலகம் வாழ்க்கை இவ்விரண்டிலும் சித்திபெற்றவர்கள் குறைவற்ற பாக்கியவான்களென்பதற்குச் சந்தேகமென்ன? எல்லாப் புகழும் எல்லாக் கனமும் அவர்களுக்கே யுரியன.

## மரணத்தையும் அதன் உத்தியோகஸ்தர்களையும் பற்றிய கதை.

மகா பயங்கரப்படத்தக்க அரசனாகிய மரணமென்பவன் தனக்குப் பிரதமமந்திரி ஒருவனைத் தெரிந்தேற்படுத்திக்கொள்ளத் தீர்மானித்து, நானாவகை வியாதிகளாகிய அகோர ரூபங்களையுடைய தன் உத்தியோகஸ்தர்களெல்லாம் தன்னரமனையில் வந்து கூடவும், மேற்சொல்லிய மகா கனம்பொருந்திய உத்தியோகத்தைப் பெற



றக்கொள்ள விரும்புகிறவர்களெல்லாம் அதற்குத் தகுதியுள்ளவர்களென்று ரூபிக்கவும் கட்டளையிட்டான். அப்படியே அவ்வுத்தியோகஸ்தர்களெல்லாரும் ராஜசமுகத்தில் வந்து கூடினபின், அவர்களில் ஒவ்வொருவனும் ஒருவன்பின் ஒருவனாக ராஜனை நோக்கித் தன்தன் சாமார்த்தியங்களை வியப்புறப் புகழ்ந்து, தனக்கே அப்பிரதான மந்திரிவேலை தகுதியுள்ளதென்று வழக்கிட்டு வாதித்தான். எப்படியெனில், முதலாவது: சுரமென்ற பெயரையுடைய உத்தியோகஸ்தனைவன் முன்னிட்டுவந்து, தன் யோக்கியதையை ரூபிக்கும்பொருட்டு, தான் கொன்ற ஜனங்களின் ஏராளமான தொகையை எடுத்துக்காட்டினான். இரண்டாவது: திமிர்வாதமென்ற உத்தியோகஸ்தன் திட்டென்றெழுந்து, தான் முடமாக்கின எண்ணிறந்த ஜனங்களின் கால்கரங்களை தன் பாத்தியதைக்குப் போந்த அத்தாக்ஷியென்றான். மூன்றாவது: மகோதரமென்றவன், தான் ஜனங்களை ஆச்சரியமானவிதமாய் உப்பச்செய்து உயிர்ச்சேதப்படுத்தும் விதத்தையும், தான் கொன்ற ஜனங்களின் தொகையையும் எடுத்துக் காண்பித்தான். நான்காவது: க்ஷயமென்பவன், தான் நாளடைவில் ஜனங்களை உருக்கி வாதித்துக்கொல்லுந் திறமையைச் சாதுரியமாய் விவரித்துப்பேசினான். ஐந்தாவது: வைசூரி என்பவன், தான் கணக்குவழக்கின்றி வாரிக் கொண்டுபோகும் ஜனங்களைக்குறித்துப் பேசினான். இவ்வாறு அங்கு கூடிவந்திருந்த பற்பல ரோகங்களாகிய உத்தியோகஸ்தர்கள் தம் அரசனாகிய மரணத்தை நோக்கித் தம் அருந்திறமைகளையும் பெருஞ்செய்கைகளையும் வெகு சாமார்த்தியத்தோடு வியந்து கூறினார்கள்.

இப்படி அவர்களெல்லாம் மேற்சொல்லிய பிரதமமந்திரி அலுவல் எனக்கு உனக்கென்று சொல்லி வாதாடிக்கொண்டிருக்குஞ்சமயத்தில், திடீரெனச் சங்கீதமுழக்கமும், ஆடல்பாடலின் ஓசையும் அங்கே உண்டாயிற்று. உடனே ஒழுங்கமும், நாணமுமற்ற முகக்குறிப்புள்ளவளும், வீணாடம்பரமுள்ளவளுமாகிய ஓர் ஸ்திரீயானவள் மரணமென்ற ராஜனுக்குமுன் வந்துநின்றாள். இவள் வலதுபக்கத்தில் நானாவித உசித அறுசுவை உண்டிகளையும், பற்பலவகை மதுபானங்களையும் செய்துகொடுக்கத்தக்க பரிசாரகர்களிருந்தார்கள். அவள் இடதுபக்கத்தில் மகா இன்பமாய் ஆடல்பாடல்கள் செய்யும் சிற்றின்பப்பிரியர்களாகிய வாலிபர் வாலிபிகள் நின்றார்

கள். அவள் இவ்வித பரிவாரத்தைத் தன்னுடன் இட்டுக்கொண்டு ராஜசமுகத்தில் போய்நின்றாள். இந்த ஸ்திரீயின் பெயர்: லொட்டி அல்லது மட்டுமிஞ்சின சிற்றின்பவாஞ்சையே. இவள் ராஜசமுகத்தில் வந்தவுடனே தன் கையினால் சமிக்கைகாட்டி, அங்கு பிரதான மந்திரிவேலைக்காகப் போராடிக் கொண்டிருந்த ரோகங்களையெல்லாம் சற்றுநேரம் பேசாதிருக்கும்படி செய்தபின் அவர்களைநோக்கிச் சொன்னதாவது: ஓ, வெறுக்கப்படத்தக்க வியாதிக்கூட்டத்தாரே! நீங்கள் எல்லாரும் மரணத்தின் பிரதான மந்திரி அலுவலாகிய அவ்வுயர்ந்த உத்தியோகத்திற்குத் தகுதியற்றவர்களென்று நான் நன்றாய் அறிவேன். நானே அதற்கு முற்றிலும் தகுதியுள்ளவள். உங்களில் எவன் எனக்குச் சமானமானவனென்று சொல்லக்கூடும்? நமது கீர்த்திபொருந்திய ராஜனாகிய மரணமென்பவரின் ஊழியத்தில் என்னைப்போல அதிசய சாமார்த்தியத்தையும் பக்தி வைராக்கியத்தையு முடையவனும், என்னைப்போல பெருஞ்செய்கைகளைச் செய்துமுடித்தனும் உங்களில் எவன் என்று சொல்லுங்கள் பார்ப்போம். மேலும் நான் உங்களெல்லாருக்கும் மூலாதாரமுங் காரணமுமானவளல்லவா? என்னிலிருந்தல்லாது நீங்கள் எப்படி உற்பத்தியானீர்கள்? மானிடதேகத்தை ஒடுக்கவும், சீவனைக் குறுக்கவுந்தக்க உங்கள் வல்லமை என்னிடத்திலிருந்தல்லவா உங்களுக்குண்டாகிறது? மட்டுக்குமிஞ்சின போஜனபானம், மிதமிஞ்சின சிற்றின்பபோகம் ஆகிய இவற்றிலிருந்து உற்பத்தியாகாத வியாதி எதென்று சொல்லுங்கள் பார்ப்போம். ஆகையால் நானே உங்களெல்லாருக்கும் பெரியவள். நானே மரணமாகிய நமது ராஜனுக்குப் பிரதான மந்திரி உத்தியோகத்தைச் சரிவர நடப்பிப்பதற்குத் தகுதியுள்ளவள் என்றாள். அரசன் இவள்சொன்ன இவ்வார்த்தைகளை யெல்லாங் கவனமாய்க் கேட்டு, அவைகள் வாஸ்தவமென்று ஒப்புக்கொண்டு, அவளையே தனது பிரதம மந்திரி உத்தியோகத்தில் ஏற்படுத்தி, அவள் தன் வலது பக்கத்தில் வீற்றிருக்கும்படி செய்தான். அந்நாள்முதல் அவள் மரணமென்ற பயங்கரமான அரசனுக்கு அதிபிரீதியுள்ள ஆலோசனைக்காரியும், பிரதான காரியஸ்தியுமாகிவிட்டாள். லொட்டி அல்லது மிதமிஞ்சின சிற்றின்பவாஞ்சையின் மகத்துவம் இவ்வளவாம்.

ஜ—னி.

---



## கற்றுத்தேர்ந்த வித்வானுக்கும் கரடிவித்தை பயின்ற பயில்வானுக்கும் நடந்த சம்பாஷணை.

வயோதிபகாலத்தால் கூனி, கையில் கோல்பிடித்து, நெடும் பிரயாணத்தால் அலுத்து, நீண்ட அங்கி தரித்துவரும் வித்துவானைப் பார்த்து, ஒட்டுச்சல்லடம்போட்டு, பட்டுக்குல்லா வைத்து, ஒய்யாரநடை நடக்கும், இரத்தபுஷ்டியுடைய பயில்வான் சொல்வது:—“ஐயா பெரியவரே! எங்கிருந்து வருகிறீர்கள் உங்கள் பேர் என்ன? உங்கள் ஊர் எது? உங்கள் வேலையென்ன?”

வித்துவான்:—“நமது நாமதேயம் எல்லாம் கற்றுவல்லோன் என்பது. நமக்கு ஒரு ஊரென்று ஊரில்லை. நாம் உலகமெல்லம் சுற்றிவருகிறோம். உன்னைப்போன்றபாலியர்க்கு வருத்துவிக்கிறது நமது உத்தியோகம்?”

பயில்வான்.—“நீங்கள் வறுத்து, விற்கிறது மெய்யேயானால், படியென்ன விலையாய் விற்பீர்கள்?”.

வித்துவான்:—“உன்னைப்போல் புத்தியில்லாதவன் எங்குங் கிடையாது. பாலியர்க்குக் கற்றுக்கொடுப்பது நமது தொழில் என்றோம். நீயோ பயறுமுதலியவை வறுத்து விற்கிறோமென்று எண்ணிக்கொண்டாய். உனக்கு உன் வயிற்றுக்காரியந்தான் பெரிதுபோல் தோன்றுகிறது.”

பயில்வான்:—“ஏது! எனது பராக்கிரமந்தெரியாது புத்தியில்லாதவனென்று என்னைவைகிறீர். புத்தி யில்லாதவன் குணத்தைக் கொஞ்சநேரத்தில் காட்டுவேன். அப்போது தான் உமது புத்தியீனம் உமக்குத் தெரியும். எனக்கு என் வயிற்றுக் காரியந் தான் பெரிது. உனக்குவயிற்றுக் காரியம் பெரிதல்லா விட்டால் மூன்று நாள் சாப்பிடாமலிரும் பார்ப்போம்.”

வித்துவான்.—“கோபித்துக் கொள்ளாதே தம்பி. புத்தியில்லாதவன் என்னும் பதத்துக்கு அருத்தம் தெரியாமையால், வைகிறோமென்று சொல்லுகிறாய். ஆதவன் என்றால் சூரியன் அல்லவா? புத்தியில்லாதவன் (புத்தியில் + ஆதவன்) என்பது, புத்தியில் சூரியனுக்கொப்பானவன் என்று அருத்தமாகுமே. ஆதலால் உன்

னைப் புத்திசாலியென்று சொன்னேனே ஒழிய, புத்தியில்லையென்று சொன்னதாக எண்ணாதே. நீ வயிற்றுக் காரியம் பெரிதென்கிறாய். கற்றுத்தேர்ந்து கடவுளை அறிந்து, பிறர் காரியத்தைப் பெரிதாகப் பாவிப்பதே பேரின்பம். வயிற்றுக்காரியம் பெரிதல்லவென்றால் சாப்பிடாதிருக்கச் சொல்லுகிறாய். நீ மடையன்."

'மடையன்' என்னுந் தொனி காதில் விழுந்த வுடனே பயில்வான் மூர்க்க வெறிகொண்டு, வித்துவானை இழுத்து, குலுக்கி, அலைக்கழிக்கையில், வருத்தஞ் சகிக்க முடியாமல் வித்துவான் உரத்த சப்தமாய் "சற்று பொறு, சற்று பொறு, என் வாய்ப்பிறப்பைக் கேட்டு பின் என்னைத் தண்டி" என்று கதற, இதற்குள் வழியில் போனவர்களெல்லாரும் வந்து, இருவரையும் பிரித்து, காரியத்தை விசாரித்தார்கள்.

வித்துவான் தைரியமாய்ச் சொன்னதாவது :—"இவன் நம்மைப் பட்டினியாய்க் கிடந்து சாகும்படி சபித்தான். நாமோ இவன்மேல் கிருபை கூர்ந்து ஆசீர்வதித்தோம். மடையன் என்பதின் அருத்தத்தை அறியாமல் நமக்கு இவ்வளவு சங்கடத்தைக் கொடுத்திருக்கிறான். மடையன் என்றால் சுயம்பாகி யல்லவோ? விலாப்புடைக்கச் சாப்பிட்டு அன்னக் களஞ்சியமாகிய அவன் வயிறு குறையாதிருப்பதாக என்பது தான் நமது ஆசீர்வாதம்."

அங்கு நின்ற வழிப்போக்கரெல்லாம் வித்துவான் புரட்டைக் கேட்டு, கொல்லென நகைத்தார்கள். பயில்வானோ வித்துவான் மடியில் கைபோட்டுக்கொண்டு, "நீர் உம்முடைய கல்வித்திறத்தைக் காட்டுகிறீர். நான் என்னுடைய தேகவலிமையைக் காட்டுவேன். யார் ஜெயிக்கிறதென்று பார்ப்போம். இந்தப் பிடிக்கு என்ன சொல்லுகிறீர்" என்றான்.

வழிப்போக்கரோ அவன் நாடியைத் தாங்கி, "ஏழை வயோதிபனை விட்டு விடு, விட்டு விடு; உன் பராக்கிரமத்தை உன்னைப் போலொத்த வாலிபரிடத்திற் காட்டு" என்றார்கள்.

பயில்வானோ "அப்படியல்ல இவர் எல்லாங்கற்று வல்லோன் என்று நடிப்பானேன். எல்லாம் கற்று வல்லோனென்றால், கரடி வித்தையுந்தெரிய வேண்டுமே. தோற்றுப்போனதாகச் சொல்லட்டும் விட்டுவிடுகிறேன்" என்றான்.



வித்துவானோ சிறிதுஞ்சித்தங்கலங்காமல், ஜனங்களைக் கையமர்த்திப், பயில்வானின் காதில் மெதுவாய் "என் வஸ்திரம் அவிழ்ந்து போகிறது" என்றார். பயில்வான் பிடித்த பிடியை விடவே, வித்துவான் புன்னகை கொண்டு "நீ பிடித்த பிடி எங்கே? இப்போது யார் ஜெயித்தது?" என்றார்.

ஜனங்க ளெல்லாரும் நகைக்கப், பயில்வான் வெட்கி அவர் வலதுகரத்தைத் தன் இருகைகளாலும் பிடித்து "நல்லது இந்த ஒரு பிடியை மாத்திரம் தவிர்த்து விடுவீரானால், நீர் எல்லாம் கற்ற வல்லோன்தான்" என்றான்.

"முன் பிடித்த பிடியை அவன் காதில் ஓதித்தவிர்த்தார். இந்தப் பிடியை எப்படி நீக்குவார் பார்ப்போம்" என்று ஜனங்கள் ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

வித்துவான் ஜனங்களை நோக்கி, "பார்த்தீர்களா பயில்வான் பராக்கிரமத்தை? இவன் வாலிபனும், பலசாலியாம். தனது இரு கரங்களால் தள்ளாத கிழவனுடைய ஒரு கரத்தைப் பிடித்திருக்கிறான்" என்றார். பயில்வான் நாணத்தால் முகங்குறுகி, தான் பிடித்த பிடியை விட்டுவிட்டான். உடனே வித்துவான் கலைமான் போல் குதித்து, "நீ பிடித்தபிடி எங்கே? இந்தப் பிடியையும் தவிர்த்துவிட்டோமல்லவா?" என்று கூவினார். ஜனங்களெல்லாரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

பயில்வான் பரிதபிக்கப் படத்தக்க குரலோடு, ஜனங்களைப் பார்த்து, "இனி எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று கற்றுக் கொண்டேன். இந்த ஒருமுறை என்னிடத்தில் தயை பாராட்டுங்கள். ஒரே ஒரு பிடிமாத்திரம் பிடிக்கிறேன். இதையுந் தவிர்த்து விடுவாரானால் நான் அவருக்கு அடிமையாகி விடுவேன்" என்று சொல்லி, சிங்கக் குட்டிபோல் கம்பீரநடை நடந்து, வித்துவானுடைய கால்களை இறுகப்பிடித்துக் கொண்டான்.

வித்துவான் குனிந்து பார்த்து, அவன் தமது பாதங்களில் விழுந்து தம்மை வணங்குகிறதாக மற்றவர்களுக்கு அறிவிக்கும் பாவனையாய் "பெற்றுப் பெருகி, பெரிய வீட்டுக்காரனாகி மஹாராஜனாயிரு" என்றார்.

இதுகேட்ட ஜனங்களெல்லாரும், வயிறு புண்ணாகத்தக்கதாய், இடிமுழக்கம்போற் சப்தமிட்டுச் சிரிக்க, பயில்வான் மூர்க்கங்கொண்டு, கால்களைவிட்டுக், காற்றில் பறந்துகொண்டிருந்த வித்துவான் குடுமியைப் பிடித்தான்.

இவன் அக்கிரமத்தை ஜனங்கள் சகிக்க முடியாதவர்களாய், அவர் குடுமியை விடச்செய்து, "அவர் சன்மார்க்கர். நீ துன்மார்க்கன். அவர் தமது யுக்தியால் வென்று கல்வித் திறத்தைக் காட்டினார். நீயோ உன் தேகவலிமையை மாத்திரம் நம்பி மோசம் போனாய். மூன்று முறை நீ தோற்றுப் போனாயே; இனியேன் அவரோடு போராடுகிறாய்? வித்துவான் சாபம் பொல்லாதது. ஆதலால் அவர் பாதத்தில் விழுந்து பணிந்துகொள்" என்றார்கள்.

பயில்வான் கண்ணீரோடு எல்லாரையுஞ் சற்று நேரமங்கு காத்திருக்க வேண்டிக்கொண்டு, ஓரே ஓட்டமாய்க் கடைக்கு ஓடி, சீனிகற்கண்டு, வாழைப்பழந்தேங்காய், வெற்றிலை பாக்கு முதலியவைகளைத் தாம்பாளங்களில் வைத்துத் தன் கற்றுக் குட்டிகள் தலைகளில் ஏற்றி, வித்வானிடம் வந்து அவருக்கு முன் எல்லாவற்றையும் படைத்து, நெடுஞ் சாங்கிடையாய் முகங்குப்புற விழுந்து, அவரைப் பணிந்துகொண்டான். அவன் கற்றுக் குட்டிகளும் அதே மாதிரி சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்தார்கள்.

வித்துவான் எழுந்திருந்து, அவர்களைத் தூக்கிவிட்டுத் தன்னுடன் உட்காரச்செய்து, பயில்வானைப் பார்த்து, "சகோதரனே! பயப்படாதே. உன்மேல் எனக்குக் கோபமில்லை. கரடி வித்தையினும் கல்வி சிறந்ததென்பது மெய்தான். ஆயினும் கல்விப்பெருமை ஆகாது. நாமெல்லாரும் ஓரே தேவனின் பிள்ளைகளாதலால் "உன்னைப்போல் பிறனை நேசி" என்னுங் கட்டளையைக் கற்று, அதைக் கைக்கொள்வதே மெய்யான கல்வி" என்று சொல்லி, தட்டுகளிலிருந்த சீனி, கற்கண்டு, முதலியவற்றை அவர்களுக்கும், அங்கிருந்த மற்ற ஜனங்களுக்கும் கொடுக்க, எலலாருஞ் சாப்பிட்டு, வெற்றிலைபாக்கு போட்டு, மகிழ்ச்சியோடு வந்தனோபசாரஞ் செய்து, ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்து தத்தமிடத்துக்குச் சென்றார்கள்.

பே—னி.



## பிறர்சொற்கேட்பதனாலாய நன்மைதீமைகள்.

உலகின்கண் வாழாநின்ற மானிடர்கள் பம்பல தேசங்களில் பற்பல வித்தைகளிலும் சாஸ்திரங்களிலும் கற்றுத் தேர்ந்திருந்தாலுமவர் ஒவ்வொருவரும் எல்லாவிஷயங்களிலும் தேர்ச்சியடைவதற்கு இடையூறுகள் அநேகமுள.

"வேதநூற் பிராய நூறு மனிதர்தாம் புகுவ ரேனும்
பாதியு முறங்கிப் போகும் நின்றது பதினை யாண்டு
பிணிபசி மூப்புத் துன்பம் பேதைபா லகனதாகும்"

என்றபடி சாதாரணமாக, மனிதர்களுக்கு நூறுபிராயமாக வைத்துக் கொண்டு, அவர்கள் தூங்கிச் செல்லுங்காலமும், நோய், பசி, இளமை, முதுமை முதலியவைகளால் வாணாட்களெல்லாம் வீணாட்களாகிக் கழிந்துபோகக், கல்விப்பயிற்சியிற் செலவழிக்குங்காலம் மிகக்குறைவு என்பதற்குச் சந்தேகமில்லை; ஆதலின் காலத்திற்கேற்றபடி கல்வியுங்குறையும். இதுநிற்க, ஒவ்வொருமனிதரும் அவரவர்கள் முன்னோர்கள் இன்னு மற்றுமுள்ளோர் அனைவரும் இரவும் பகலும் வருந்திப்பயின்ற கல்வியினறிவைப் பயன்படுத்தாது, தாமே தங்கள் சுயமுயற்சியாலேயே கற்றுக்கொள்ளலாமென்று எண்ணினாற் கல்வியறிவு எப்படிப்பெருகும்? கல்வியறிவென்றால் புத்தகம்படித்தல் மாத்திரமன்று; தச்சுவேலை கொல்வேலைகளாகிய கைத்தொழில்வேலை, சித்திரவேலை, சங்கீதப்பயிர்ச்சி முதலிய நானாவிதமான வேலைகளும், அதனுளடங்கும். முற்கூறியபடி நம்முடைய காலம் சிறிதாகையால், மற்றவர்கள் தெரிந்திருந்தவைகளைக்கற்று அதற்குமேல், நாம் கூடுமானவளவில் புதிய சங்கதிகளை அறிதல்வேண்டும். இக்காலத்தில் வழங்குகின்ற சகல சாஸ்திர நூல்களும் முன்னோருடைய அநுபவங்களினாலறிந்தவைகளேயன்றிவேறன்று. ஆகையால், அவர்களியற்றிய பல நூல்களையறிந்துகொள்ளவ தவசியமே. அவற்றைக் கற்றபிறகு "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினானே" என்றதற்கேற்ப அவற்றின் குற்றங்குறைகளைக் களைந்து தம்மநுபவத்தில் சம்பவித்தவைகளை யதனுட்புகுத்தி அஞ்ஞானமாகிய மிருத்

துவையகற்றி மெய்யறிவைப் புகட்ட உலகத்திற் கல்வி நாளுக்கு நாள் குறைவின்றி அதிகரித்துவரும். அக்கல்வி மிகுதியாலாகிய நன்மை பலவாகலின் இங்கு அவற்றைக் கூறுதுவிடுத்தனம். அந்நூல்களை ஆராயாது ஒவ்வொருமனிதரும், தங்கள் சொற்பகாலத்தில் சம்பவித்தவைகளைத் தெரிந்துகொண்டு பிறர்க்கு அறிவிக்காமல் விட்டுவிட்டால் நாளுக்குநாள் கல்வியறிவு மிகாமற் குறைந்துபோகும். இதற்குத் திருட்டாந்தமாக மற்றநாடுகளைவிட கல்வி, நாகரிகம் முதலியவைகளிற் சிறப்புற்றோங்கிய நம்மிந்தியதேசம் சகல சாஸ்திரநூற்களின் பொருளைப் பரவாது, மறைத்துவைத்துக்கொண்டதினால், விர்த்தியாகாதுற் கீழ்த்திசையைநோக்கிச் செல்லுகின்றது. முன்சொல்லியவைகளாலறிந்துகொள்ளத்தக்க தென்னவெனில், பிறர் கற்று சொல்லுகிறவைகளை நாம் கவனிக்கவேண்டுமென்பதே. இதைப்போலவே அவையின்கண் ஒரு காரியத்தைப் பற்றிப் பேசுங்கால் பிறருடைய அபிப்பிராயங்களை யேற்றுக்கொள்ளவேண்டும். அவ்வபிப்பிராயங்கள் உண்மையானாலுஞ்சரி, தப்பிதமானாலுஞ்சரி அவைகளைக் கேட்பதினாலநேக நன்மைவிளையும். முதன்மையாக அவர்கள் சொல்வது உண்மையென்று வைத்துக்கொள்வோம். அவர்கள் சொல்வதை நாம் கவனியாதுவிட்டால், அவ்வுண்மையாலாகும் பலநன்மையை நாம் அடையமாட்டோம். இரண்டாவது அவர்கள்சொல்வது மெய் சிறிதளவுமின்றி மிகப் பொய்யேயாயினும், அதைக் கேட்டுக்கொள்ளவேண்டும். அத்தப்பிதமானவைகளைக்கொண்டு உண்மையும் சரியானதுமாகியவைகளை நன்குவிளக்கலாம். இதற்கு உதாரணமாக, தேகப்பயிற்சிக்காக சிலம்பவேலைகள்செய்யக் கைகால் அசந்து உடம்பு மெலிந்துபோம் என்று ஒருவர் சொன்னதாக வைத்துக்கொள்வோம். தேகப்பயிற்சியால் நாளுக்குநாள் உடற்கூறு பலப்படுமேயொழிய மெலிந்து போவதில்லையென்பது உண்மையாயினும், முன்னெடுத்துமொழிந்தோர் கூறியதைக்கேட்டு அவருக்கு உண்மையைத்தெரிவித்து, அத்தப்பிதமான எண்ணங்களைமாற்ற எவ்வளவு நன்மையுண்டாகும்? அந்தப் பொய்யுரைத்தோரைக் கவனியாதுவிட்டால் அவர் தான் சொல்வதே மெய்யென்று நம்பி தன் உடல்வலிமையையிழப்பாரல்லவா? தான்கெட்டதுமல்லாமற்றன்னைப்போன்ற இன்னும் மற்றவர்களும் அவர் சொற்கேட்டுக் கெடுவரென்பது வெள்ளிடை



மலைபோல் விளங்குகின்றதல்லவா? ஆகையால் பிறர்சொல்வது நன்மையாயினுந் தீமையாயினு மவற்றையேற்று, நன்மையை யனுட்டித்துத் தீமையைக்களைந்து மற்றவர்களு மத்தீங்கினுக் கிரையாகாமற்செய்வது நன்மையல்லவா? இனி ஒருவாறு பிறர்கூறுவதைக் கேட்க விளையுந் தீமைகளைக் கூறிமுடிப்போம். நாம் முன்னர்க் கூறியபடி பிறர்சொல்வதில் நன்மையுந் தீமையும் தண்ணீரும் பாலும்போலக் கலந்திருக்கின்றதாதலின் அவற்றை ஆராய்ந்து அன்னத்தைப்போல் பாலாகிய நன்மையைப் பருகி, தீமையாகிய தண்ணீரை நீக்கவேண்டும். அப்படிச் செய்யாமல் அவர்கள் சொல்வன யாவற்றையு மேற்றுக்கொள்ளின் தீமைவிளையு மென்பதற்குச் சந்தேகமில்லை. இதுமாத்திரமேயன்றி பிறர்சொல்வதை நன்கு ஆராயாமல்விட்டால் அவர்களுண்மையாலுண்டாகும்நன்மைகளும் மகிமைகுன்றி தீங்கையே விளைவிக்கும். நாம்வழக்கமாயநுசரித்துவரும் பலகாரியங்களை அவைகளின் காரணமறியாது நம்முன்னோர்கள் செய்தார்களே நாமும் செய்யவேண்டுமென்றெண்ணி வழக்கக்கோட்பாடுதவிர வேறொரு காரணமுமின்றிச் செய்யும்செய்கைகள் பலவுள என்பது நமக்குத் தெரிந்ததல்லவா. இவைகளைச் சற்று கவனிப்போமாகில் நம்மைச் சூழ்ந்திருக்கும் தீங்குகள் சூரியனைக்கண்ட பனிபோல நீங்கச் சுகத்தை நாடலாமல்லவா? உடம்பிலுள்ள அழுக்கைக்கழுவிச் சுத்தமாகத் தினந்தோறும் குளித்து முழுகுவது தேகசவுக்கியத்திற்கென்றறியாது, குளிக்காது சாப்பிடக்கூடாது என்னும் வழக்கத்தை அநுசரித்துக் குளித்துமுழுகுவோர், தங்களுக்கு ஏதாவது வேலையிருந்தகாலத்தில் குளிக்காது சும்மாயிருந்துவிடுவார்கள். குளித்தால் தேகசவுக்கியமென்று அறிந்தவர்கள் அப்படிச் செய்யாது எவ்வளவுவேலை யிருந்தபோதிலும் குளித்து முழுகுவார்கள். ஆசியாகண்டத்தில் ஏறக்குறைய யெல்லாநாடுகளும், வழக்கத்தையே யநுசரித்துவந்ததால் கல்வி, நாகரிகம், வலிமை, தைரியம் முதலியவைகளிற் குன்றித் தேய்ந்துகொண்டேவருகின்றன. பட்டுநெசவுதொழிலிலும், பீங்கான்வேலைசெய்வதிலும் மிகத்தேர்ச்சிபெற்று, புத்தசமயம்பரவப்பட்டு, நற்றமகான்கள் பலர் அவதரித்த சீனதேசம் வழக்கத்தாலடிபட்டு, மகிமையுஞ் சிறப்புங் குறைவுபட்டுவருகின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் காணப்படுகின்றதல்லவா? இவ்வழக்கங்

களை ஆராயாது அநுசரிப்பதினால் வருந்துன்பங்கள் ஆகாயமும் சிறிதென அகன்று உள. பொருணஷ்டம் தேக அசௌக்கியம் இன்னும் மற்றுமுள்ள பலசங்கடங்களும் நேரிடும். தங்கள் அறிவை உபயோகப்படுத்தாததினால் புத்திகூர்மை மழுங்கிப் பயனழியும். மற்றெல்லாவற்றிலும் அறிவு அளவிறந்த அணியெனக் கருதப்படுமே. அவ்வறிவுக்கு இடையூறுகள் மிக, மற்றெல்லாச்சுகங்களுங் குறையுமென்பது திண்ணம். நம்மைச் சேர்ந்தவர்கள் சொன்னால் நன்மையே கூறுவரென்றும் மற்றவர்கள் சொல்வது தீமையென்று மெண்ணக்கூடாது;

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு”

என்றார் நாயனாரும். அதாவது, எவ்வகைச்சங்கதியாயினும் யாவர் சொன்னாலும் அவற்றின் உண்மைக்கூறுபாட்டையறிவதே மெய்யறிவு என்பது. தற்காலத்தில் ஆங்கிலேயமொழி கற்றவர்கள் சிலர் ஆங்கிலேய வழக்கங்களையெல்லாம் அநுசரித்துவருகின்றார்கள். அவர்கள் வழக்கங்களின் நன்மைதீமைகளைப்பற்றிக் கருதாது சுருட்டுக்குடித்தல், சாராயமுதலிய மதுபானங்களைப் பருகுதல் முதலாகிய துர்வழக்கங்களுக் குட்பட்டு வருந்துகின்றார்கள். ஆகையால் யாவர்கூறினாலும், அவற்றை நன்கு ஆலோசித்து குற்றங்களைக்களைந்து உண்மையை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

பே—ணி.

## திருவாலம்பொழில் சிவஞானம்பிள்ளை கதை.

பூர்வம், தென்தேசத்தில் காவேரி யாற்றங்கரையையடுத்த திருவாலம்பொழில் என்னும் குக்கிராமத்தில் சிவந்திநாதபிள்ளை யென்றொரு வேளாளனிருந்தான். இவன் மிகவும் வறியோனாதலால் அவ்வூர்த் தலைவனாகிய திருமூர்த்தியையர் என்னும் ஓர் பிராமணனிடத்திற் பண்ணைத்தொழிற்செய்து அதில் கிடைக்கிற சொற்ப தவசத்தைக்கொண்டு ஜீவனம் செய்துகொண்டு வந்தான். இவனிவ்வாறு அப்பிராமணனண்டை அதிக விசுவாசத்தோடும் நன்றியறிதலோடும் ஊழியஞ்செய்து வருகிறகாலத்தில் அப்பிராமணன் வீட்டில், சகோதரருக்குள் கலகம் நேரிட்டுத் தங்கள் ஆஸ்தியைப்பங்கிட வாரம்பித்தபடியால், அவர்களுக்குள் மூத்தோனாகிய திருமூர்த்தியையனென்னும்



அவ்வேதியன் தன் சகோதரர்களை வஞ்சிக்க எண்ணி, ஓர் வெண்கலப்பானை நிறைய திரவியத்தை நிரப்பி, அவர்களறியாது, தனக்குண்மையாயும் பிரியமாயும் ஊழியஞ்செய்துவந்த சிவந்திநாதபிள்ளையென்னும் அவ்வேளாளனிடத்திற் கொண்டுபோய், இதை நீ பத்திரமாய் வைத்திருந்து நான் கேட்டாற் கொடு, மற்றியாருக்கும் இவ்விரகசியத்தை வெளியிடாதே யென்று அத்திரவியப்பானையைக் கொடுத்து வைத்திருந்தான். அப் பொக்கிஷத்தை வாங்கி அவ்வேழை வேளாளன் தன் வீட்டுப் பின்புறத் தோட்டத்திற் பத்திரமாய்ப் புதைத்துவைத்தான். பின்பனேகநாட் கழிந்து திரவியங்கொடுத்த வேதியனுக்குத் தேகம் அசௌக்கியப்பட்டு வியாதியாயிருக்கையில், தன்னூழியனாகிய சிவந்திநாதபிள்ளையினிடத்திற் தான்கொடுத்த பொக்கிஷஞாபகம் வரவே, உடனே அங்கிருந்தவர்களிடத்திற் சமாச்சாரத்தை வெளியிடாமல், அவனைத் தான் பார்க்கவேண்டுமென்று அழைத்துவரச் சொன்னான். இதையறிந்த அவ்வேளாளன் அத்திரவியத்தைத்தான் அபகரித்துக்கொள்ள விரும்பி வீட்டிலொளித்துக்கொண்டு, தன் மனைவியிடம் சொல்லி, ஊருக்குப் போயிருப்பதாயும் இன்னும் இரண்டொருநாளில் வந்துவிடுவானென்பதாயும் பதிலனுப்பும்படி யேற்பாடு செய்துவைத்து, அப்பிராமணனுக்கு எவ்வாறு இருக்கிறதென்று அடிக்கடி விசாரித்துக்கொண்டே யிருந்தான். “உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா” என்பதற்கேற்க, இவ்வேழை மனிதனுக்கு நற்காலமிருந்தபடியால், அன்று சாயந்திரமே, பிராம்மணன் தன் கருத்தைப் பிறருக்கு வெளியிடுமுன்னமே, அவனுக்குத் தோஷம்பிறந்து, வாய்ப்பேச்சுகளெல்லாம் ஒடுங்கி கைசாடை காண்பிக்கும் ஸ்திதியில் வந்துவிட்டது. இவைகளையெல்லாம் விசாரித்துக்கொண்டிருந்த சிவந்திநாதபிள்ளை, கைசாடையிலிருக்கிறதென்று கேள்விப்பட்டவுடனே, சடுதியில் வீட்டைவிட்டுப் புறப்பட்டு அதிக விசனப்படுகிறவன்போற் கதறியழுதுகொண்டு ஓட்டமும் நடையுமாய் ஓடி, அவ்வேதியன் அகத்திற் புகுந்து, பிராமணன் வியாதியாய்ப் படுத்திருக்குமிடத்திற்குப் போய் அங்கு நின்றவர்களையெல்லாம் விலக்கிவிட்டு, “ஐயையோ, எனக்கு இக்கதி நேரிட்டதே! என்னை அருமையாய் ஆதரித்துவந்த என்னெசமானுக்கிவ்வாபத்து விளைந்ததே!” என்று புலம்பி யவன் காலடியில் விழுந்தழுதான். இவன் படும்பாட்டைக் கண்ணுற்ற மற்றவர்கள், ஆ! ஹா! இவன் தன் எஜமான்மேல் அதிக விசுவாசமுள்ளவன் என்று அவனைப் பற்றிப் பரிதாபப்பட்டுக்கொண்டிருக்கிற சமயத்தில், அப்பிராமணன் இவ்வேளாளன் முகத்தைப்பார்த்துப் பேசச் சக்தியில்லாததினால் தான் கொடுத்த பொக்கிஷப்பானையெங்கே என்னுங் கருத்தாகத் தன்னிருகைகளையுங் குவித்துக் காட்டினான். அதைக் கண்ணுற்ற அவ்வேழை, ஐயர் பூசணைக்காயின்மேற் மிகப் பிரீதியாய் என்னை நெடுநாளாய்க் கேட்டுக்கொண்டு வந்தார். அது அவருக்கு இப்பொழுது ஞாபகம் வந்ததுபோலிருக்கிறது; அவர் மரணமடையுமுன் நான் தருவித்துத் தருகிறேன்; என்னிடத்தில் விதைக்காக ஒரே ஒரு காயிருக்கிறது, அது போனாற் போகிறது; ஐயரைப்பார்க்கிலும் அது எனக்கு ஒரு பெரிய காரியமல்

லவென்று சொல்லி உடனே தன் வீட்டுக்கோடி ஒரு பெரிய பூசுணைக்காயைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்தான். இவன் வீடுபோய்த் திரும்பி வருவதற்குள் ஐயனும் மரணமடைந்தான்.

இவன் மனதிலதிகச் சந்தோஷமுள்ளவனாயிருந்தபோதிலும் அதிக விசனப்படுகிறவன்போல் நடித்து, இனித் தானவ்வூரி லிருக்கக்கூடாதென்று எண்ணங்கொண்டு, காரைக்காலென்னும் பட்டணத்திற்குப் போய்த் தான் பிராமணனிடத்திலிருந்து அபகரித்த திரவியத்தைக் கொண்டு வியாபாரஞ் செய்யத் தலைப்பட்டு, அதுமுதல் புலாலருந்துவதைவிட்டு, சுத்த போஜனக்காரனாகி, திருவாரூரிலுள்ள நிரட்சரதுட்சியென்னுமோர் பண்டாரத்தைத் தனக்குக் குருவாகத் தெரிந்துகொண்டு தீட்சைபெற்று தினந்தோறுஞ் சிவபூசை செய்வதிலே காலத்தைக்கழித்து வந்தான். இப்படி இவன் வாழ்நாளைக் கழித்து வருகிறநாளில், அவனுக்கோர் ஆண்பிள்ளை பிறந்தது. "பழம் நழுவிப் பாலில் விழுந்தது; அவையிரண்டும் நழுவி யென் வயிற்றில் விழுந்தது" என்றதுபோல், எனக்குக் கடவுள் கிருபையால் செல்வம் கிடைத்ததுமன்றி புத்திரபாக்கியமும் கிடைத்ததே என்று மிகச் சந்தோஷப்பட்டு, சிவபூசை செய்ய ஆரம்பித்ததின் பிறகு அக்குழந்தை பிறந்ததாதலால், சுபதினம்பார்த்து அதற்குச் சிவஞானம்பிள்ளையென்று நாமகரணமிட்டு மிக அருமையாய் வளர்த்துவந்தான். அக்குழந்தை பிறந்த நாள் முதல் வியாபாரம் அதிகரித்துச் செல்வம் பெருகவே, தென்தேசத்திற் பிரதானநகரமாகிய சென்னைக்குவந்து, கப்பல் ஒன்று சொந்தத்தில் வாங்கி விஸ்தாரமாய் வியாபாரஞ்செய்து, மிக்க திரவியவந்தனானான். அப்பொழுது அவன் புத்திரனாகிய சிவஞானம்பிள்ளை, அங்கிலேயபாஷையும் தமிழ்ப்பாஷையுங் கற்கவாரம்பித்து, அதிக சூட்சும புத்தியில்லாதவனாகையால், கல்வியை முற்றுப்பெற கற்கவியலாது தன் தந்தையின் தொழிலையே கற்க முயன்றுகொண்டிருக்கும் காலத்தில், அவனுக்கு வயது பன்னிரண்டாகவே தன்னினத்தாரில் ஒரு பெண் பேசி மிகச் சிறப்பாகக் கல்யாண மஹோற்சவத்தை நடத்தினான்.

இச்சிவஞானம்பிள்ளை பாலியத்திலேயே விவாகமுடித்துத் தன் தந்தையின் வியாபாரங்களையெல்லாம் மேற்பார்த்து மிகச் சாமர்த்தியனாகிச் சென்னைநகரமெங்கும் அவன்பெயர் பரவி வாழ்ந்திருக்குநாளில் அவனுக்கு இருபது வயதாகியகாலத்தில், அவன் தந்தை விருத்தாப்பியத்தால் தேகவியோகமானான். பின்பு இரண்டொரு வருடத்திற் சிவஞானம்பிள்ளைக்கோர் பெண் பிறந்தது. அந்தப்பெண் மிகவும் சௌந்தரியமுள்ளதாயிருந்ததால் அதற்குச் சௌந்தரவல்லியம்மாளென்றுபெயரிட்டு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து, அப்பெண்ணை உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் நவரத்தினங்களாற் பதிப்பித்த ஆபரணங்களா லலங்கரித்துக் கண்குளிரப் பார்த்து மனமகிழ்ந்து வளர்த்துவருநாளில், அப்பெண்ணைப் பாலியத்திலேயே, நல்ல உயர்குல வேளாளனென்று அவன் நினைத்த பண்டாரகுலத்தில்



மணஞ்செய்து கொடுக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு, தன் நண்பனும் அதிகக் கல்வியபிவிர்த்தி செய்தோனுமாகிய ஜெகநாதம்பிள்ளையை வரவழைத்துத் தன்னிஷ்டத்தைத் தெரிவிக்க, அதற்கவன், "நல்லது, நீர் சொல்லுகிறது வாஸ்தவமே. ஆயினும் மனிதர்கள் உலகத்தில் அனுபவிக்கிற சுகானுபவங்களுக்கெல்லாம் ஒவ்வோர் காலமுண்டு. உன்னுடைய புதல்விக்கு இன்னும் வயது ஒன்பது நிறையவில்லையே. அப்பெண் விவாகமென்றால் இன்னதென்றறியுமா? பொம்மைகளுக்குக் கலியாணஞ்செய்து விழாவியற்றுதல்போல், சிறுவர்களுக்கு மணமியற்றுவதிற் பிரயோசனமென்னை? நாம் நம்முடைய சந்தோஷத்திற்காக அவர்களுக்கு மணமியற்ற விரும்பினால், ஆயுள்நாள்முழுதும் சுகதுக்கங்களை யனுபவிக்க இருக்கும் மணமகன் மணமகளாகிய அவ்விருவர்கள் சுகத்தையும் கவனிக்கவேண்டாமா? அதிபாலியத்தில் விவாகம்பண்ணுவதினால் அநேக கெடுதிகள் விளைகின்றனவென்று தற்காலத்திற் கல்விமான்களெல்லாருஞ் சேர்ந்து பாலிய விவாகத்தை நிறுத்த முயல்கிறார்களே" என்று பலவிதமாய்ச் சொல்லியும், சிவஞானம்பிள்ளை அவர்சொல்லியவைகளையெல்லாம் கவனியாது தன்மகளுக்குக் கட்டாயம் மணமியற்றிக் கண்களிகூரப் பார்க்கவேண்டுமென்று சொல்லிப் பண்டாரச்சாதியில் நல்ல மாப்பிள்ளையிருக்குமிடம் நமக்குச் சொல்லுமென, அதற்கு ஜெகநாதம்பிள்ளை, "நல்லதையா, பண்டாரம் பண்டாரமென்று மிகப் பெருமையாய்ப்பேசுகிறீர்களே, பண்டாரத்தாரைப்போல் இழிகுலத்தினர் வேறெங்கும் நான் கண்டதில்லை. அவர்கள் வேளான்பகுதியில் உயர்வுடையோர் என்று சொல்லிக்கொண்டபோதிலும் அவர்களைப்போல இழிதொழிலுடையோர்கள் வேறெங்குமில்லை. உத்தரகிரியைச் சடங்குசெய்வதும், கோவிலில் பூமாலைகட்டுவதும், இன்னுமற்ற இழிதொழில்களுமே அவர்கள் முயற்சி; சிற்சிலர்மட்டுமே, ஓதுவார் என்று பெயர்வைத்துக்கொண்டு "ஊமையனுக் குளறுவாயன் சண்டப்பிரசண்டன்" என்பதுபோல, இரண்டொரு தேவாரப்பதிகங்களைக் கற்று, அபிஷேகாசாரியார் என்று பெருமைபாராட்டி அறிவில்லாதவர்களை யேமாற்றித் திரிகிறார்கள். அவர்களுடைய ஆபாசங்களை முற்றும் எடுத்துச்சொல்ல எனக்கு இப்போநேரமில்லை. என், தங்களுடைய இனத்தார்களுக்குள் ஓர்நல்ல பிள்ளையைப்பார்த்துத் தங்கள் பெண்ணைக் கொடுக்கலாகாதா? எனக்குத்தெரிந்தவளவில், நாகப்பட்டணத்தில் திருவேங்கிடம்பிள்ளை குமாரன் கந்தசாமிபிள்ளையிருக்கிறான். அது தங்களுக்குத்தெரிந்தவிஷயமே. மாப்பிள்ளை குணதிசயங்களைப்பற்றி நானவ்வளவாய்ச் சொல்லவேண்டியதில்லை; அன்றியும் தரங்கம்பாடி முத்துக்குமாரசாமிபிள்ளை மகன் திருச்சிற்றம்பலமிருக்கிறான். அவன் நன்றாய்ப்படித்து அங்கிலேயபாஷையிலும் கைதேர்ந்தவனாயிருக்கிறான். இன்னும் அநேக மாப்பிள்ளைகள் தேடிப்போனால் நம்மவர்களுக்குள்ளேயே யகப்படுவார்கள். என் விருதாவில் பண்டாரம் பண்டாரமென்று, பித்துப்பிடித்ததுபோற் பேசுகிறீர்கள்" என்றான்.

இவைகளையெல்லாம் கேட்டிருந்த சிவஞானம்பிள்ளை, "என் பிரியமுள்ள சிநேகிதரே, நான் தடுத்துச்சொன்னே னென்று மனஸ்தாபப்படவேண்டாம், நான் என்னினத்தவரிற் சம்பந்தஞ்செய்யவேண்டுமானால் தேடிப்போகவும் வேண்டுமோ? என்னுடைய பெண்ணைக் கொள்ளுவதற்காகவே என்னுறவின ரநேகர் காத்துக்கொண் டிருக்கிறார்கள். என்னுடைய கருத்தென்னவெனில், அவர்களி லநேகர் இன்னும் புலாலருந்துவதை விடாதிருக்கிறார்கள். அவர்கள் சம்பந்தத்தையெல்லாம் விலக்குவதற்கே நான் சென்னைபுரிக்கு வந்தது. இனி நாம் சுத்தபோசனக்காரர்களாகிய பண்டாரங்களோடு சம்பந்தஞ்செய்துமேன்மையடைய வேண்டியதேதவிர பழையசம்பந்தத்தையெல்லாம் நீக்கிவிடவேண்டும். இதற்காகவே என் சிறியதகப்பனார் பிள்ளைகளையுங்கூட இங்கேவரவேண்டாமென்று நீக்கிவைத்துப்போட்டேன். மற்றப்படி நீர்சொன்ன இரண்டொரு மாப்பிள்ளை வீட்டாரு மப்படியே. அவர்களெல்லாம் அதிகநீசித்த சைவர்களல்ல"வென்று சொன்னதைக் கேட்ட ஜெகநாதம்பிள்ளை, "ஐயா, புலாலருந்தாது சுத்தபோசனம் செய்வதால் மனிதனுயர்வாகிறானென்று தாங்கள் நினைக்கிறாப்போல் தோன்றுகிறது. அது அறியாமை. ஒவ்வொருவனும் அவனவன் நடைக்கையாலும், கல்வியறிவாலும், செய்கையாலும் மேன்மை தாழ்மை யடைகிறானே யொழிய, பிறப்பினாலும் சாதியினாலும் உயர்ந்தோனாகான். உயர்குலமென்று பிதற்றுகிறவர்களுக்குள்ளும், தீநரகுக் காளாகக்கூடிய கொடிய பாதகர்களும் இழிவானவர்களு முண்டு. தாழ்ந்த குலத்தினருள்ளும், எல்லாராலும் கொண்டாடப்பட்ட நந்தன், திருவள்ளுவரைப்போலொத்த மகான்களுமுண்டு. மேலும் புராதனத்தில் யாவரும் புலாலருந்துபவர்களா யிருந்தார்களென்றும், சுத்தபோசனமென்பதுண்டாகி இருநூறு முந்நூறு வருடங்கள்தானாயிற்றென்றும் கற்றறிந்த சாஸ்திர பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இதற்குதாரணமாக இன்னும் பிராமணர்கள் வாமபூசையென்றும், வேள்வியென்றும் செய்து புலாலருந்துவதைக் கூறுகிறார்கள். இப்பூலோகத்தில், இவ்விந்தியாதவிர மற்றெங்கும் மாம்சபட்சணிகள்தானே. இந்தியாவிலும் 100-க்கு 25-பெயர்கூட சுத்தபோசனக்காரர்களில்லை. இப்படியிருக்க நீர் நல்ல மாப்பிள்ளையாய்ப் பார்த்துப் பெண்ணைக் கொடுக்காமல் என் வீண் எண்ணங்கொண்டு பெண்ணைக்கெடுக்க வழிதேடுகிறீர்" என்றுசொல்ல, இவைகளையெல்லாம் கவனியாது, சிவஞானம்பிள்ளை, "முழுமூடனாயிருந்தாலும் பதினாயிரம் ரூபாய் கொடுத்தாகிலும் பண்டாரத்திலேயே நான் சம்பந்தஞ்செய்வேன்; நீர் எனக்காகப்போய் மாப்பிள்ளை பார்த்துவராவிட்டாலும் அவ்வுதவிசெய்ய மற்றவர்களிருக்கிறார்கள்" என்று கடிந்து தன்கிரகத்தில் பிரதிதினமும் ஒருவேளை போசனமருந்திவரும் சம்பூகப்பண்டாரம் என்பவனையழைத்து மாப்பிள்ளை பார்த்துவரக் கட்டளையிட, அவனும், "நல்லது நான்போய் மாப்பிள்ளை பார்த்துத் தங்களுக்கு எழுதுகிறேன்" என்றுசொல்லி அன்று மறுநாளே புறப்பட்டுத் தெற்கே திருவாரூருக்குப் போனான்.



இது இப்படியிருக்க, கோயம்புத்தூருக்குச் சமீபத்திலுள்ள வோர் குக்கிராமத்தில், விசுவலிங்கபண்டாரமென்றொரு ஓதுவானிருந்தான். அவன் மிகவும் ஏழையாதலால் அவ்வூர் சிவன்கோவிலுக்குப் பூமாலை கட்டிக்கொடுத்துச் சீவனம் பண்ணிக்கொண்டுவந்தான். அப்பொழுது, அவன் முழுமூடனும் கல்வியறிவில்லாதவனுமாகையால், அவ்வூரிலுள்ள ஒரு மயிர்வினைஞன் குலத்துதித்த பெண்ணை விழைந்து, அவளையழைத்துக்கொண்டு யாருக்குந் தெரியாதவ்வூரைவிட்டு ஓடி, பண்டாரங்கள் மிகுதியாயுள்ள திருவாரூருக்குவந்து, ஒரு விபூதி பூசிக்கொண்டு, அவ்வூர்த் தியாகர்கோவிலதிகாரியிடம் சென்று, தானொரு ஓதுவானென்றும் தானும் தன் மனைவியும் பஞ்சத்தின் கொடுமையால் தங்கள் ஊரைவிட்டு ஓடிவந்துவிட்டதாயும், தனக்கு நன்றாய்ப் பூமாலை கட்டத்தெரியுமென்பதாயும், தெரிவித்தான். அவ்வதிகாரி அவன் ஏழையாயிருக்கிறானென்று அவன்மேலிரங்கி அவனைக் கோவிலுக்கு மாலை தொடுத்துக் கொடுக்கும் ஊழியத்திலமர்த்திவைத்தார். அவன் அத்தொழிலால் ஜீவனம்பண்ணிக்கொண்டு அங்குள்ள மற்றப்பண்டாரங்களோ டெல்லாம் உறவாடிக் காலங்கழித்து வந்தான். அப்படி யிருக்கிறகாலத்தில் அவனுக்கு அவன் மனைவியென்று மற்றவர்கள் எண்ணியிருந்த அம்மங்கலிவயிற்றில் ஓராண்பிள்ளை பிறந்தது. அந்தப் பிள்ளைக்கு பிறக்கும்பொழுதே வலதுகாலும் வலதுகையும் நொண்டியாயிருந்தது. அதன்றியும் அக்குழந்தைக்கு ஐந்து வயதானபொழுது அம்மை பூட்டி, வலதுகண் பூவிழுந்து கெட்டுப்போயிற்று. அந்தப் பையன் தமிழ்ப் பாலையிற்பழகி, மூவர் தேவாரப்பதிகங்களைக் கற்றறிந்து தன் தகப்பனோடு சேர்ந்து கோவிலூழியஞ் செய்துகொண்டிருந்தான். சம்பூகப்பண்டாரம் மாப்பிள்ளைக்காக திருவாரூருக்குப் போனபொழுது அந்தப் பையனுக்குப் பதினாறு வயதாயிருந்தது.

இப்படியிருக்க சம்பூகனும் திருவாரூருக்குப்போ யங்கே பலரையும் விசாரித்து மாப்பிள்ளை தேடும்பொழுது, விசுவலிங்கபண்டாரத்து வீட்டில் மாப்பிள்ளை யிருக்கிறதாகக் கேள்விப்பட்டு அவன் வீட்டிற்குச் சென்று, மாப்பிள்ளையைப்பார்த்துத் தனக்குச் சிவஞானம்பிள்ளை அன்னமளித்து வந்தபோதிலும் அது ஒரு வேளையாயிருந்ததேயன்றி இரண்டுவேளையா யில்லையென்ற குறைவினால் அவனுக்குக் கெடுதிசெய்யவேண்டுமெனத் தீர்மானித்து, அவ்விசுவலிங்கபண்டாரத்தோடு ஏற்பாடுசெய்து பெண்ணைக் கட்டிக்கொண்டால் அதிகதிரவியம் கொடுப்பதாய்ச்சொல்லிக் காரியத்தை முடித்துக்கொண்டு உடனே தன் உபகாரியாகிய சிவஞானம்பிள்ளைக்கு,

"எனக்குப் பிரியமுள்ள சிநேகிதராகிய சிவஞானப்பிள்ளை யவர்களுக்குத் தங்கள் நண்பன் சம்பூகன் எழுதிக்கொண்டது என்னவெனில், இப்பவும் இவ்விடத்தில்யாவரும்க்ஷேமம். அப்படியே யவ்விடத்தில் யாவரும் க்ஷேமமாயிருக்கிறார்கள் என்று நம்புகிறேன். நான் சென்னையைவிட்டுப் புறப்பட்டு இவ்விடம்வந்து, மாப்பிள்ளைக்காக விசாரித்தபொழுது, தாங்கள் பூர்வஜென்மத்தில்

செய்த புண்ணியவசத்தினாலோ, அல்லது தங்கள் புத்திரியாகிய சௌபாக்கியவதி சௌந்தரவல்லிசெய்த பூசாபலத்தினாலோ, கும்பிடப்போனதெய்வம் குறுக்கே வந்ததுபோல், இவ்விடத்தில் அபிஷேகாசாரியராகிய விசுவலிங்க பண்டாரம் என்பவருடைய புத்திரன் குருசாமிபண்டாரமென்றொரு மாப்பிள்ளை இருக்கிறாரென்றறிந்து அங்கேபோய், அவரைப் பார்த்தபொழுது, என் மனதிற்குத் திரிப்தியாயிருந்தது. அவரைப் பெற்றோர்களும் சம்மதித்துக்கொண்டார்கள். மாப்பிள்ளை அழகு, குணம், கல்வியறிவு, புத்திசாதுரியங்களைப்பற்றி யதிகமாய் எழுதவேண்டியதில்லை. அழகிலாதவனென்று சொல்லலாம்; தங்கள் வியாபாரங்களையெல்லாம் ஒருகண் பார்வையிலேயே நடத்திவருவார். வேலையாட்களிடத்தி லெல்லாம் ஒற்றைக்காலில்நின்று வேலை வாங்குவார். எவ்வளவு கணக்குகளிருந்தபோதிலும் ஒற்றைக்கையினா லெழுதித்தள்ளுவார். அவரைப்பற்றி யதிகமாய் எழுதுவதிற் பிரயோசனமென்னை? எல்லாம் கடவுள் செயலே. தாங்கள் இக்கடிதம் கண்டவுடனே, சீக்கிரத்தில் கலியாணத்திற்கு வேண்டிய காரியங்களை ஆயத்தப்படுத்திவையுங்கள். வருகிறவாரம் புதன்கிழமை இராத்திரி 12½-நாழிகைக்கு நல்ல முகூர்த்தமிருக்கிறதென்று சோதிடர்கள் சொல்லுகிறார்கள். அதற்குள் ஏற்பாடுசெய்துவிடுங்கள். மாப்பிள்ளையின் ஜாதகக்குறிப்புக்கெட்டுப்போய் விட்டபடியால் ஜாதகமில்லாததற்குப் பாதகமில்லையென்று பொருத்தம் பார்ப்பதை நிறுத்திவைத்துவிட்டேன். நான் செவ்வாய்க்கிழமை இவ்விடம் விட்டுப்புறப்பட்டு அவ்விடம்வந்து எழும்பூரில் முனிசாமிமுதலியார் வீட்டில் தங்கியிருக்கிறேன். தாங்கள், புதன்கிழமை இராத்திரி, சாமத்திற்குமேல், மாப்பிள்ளையை அழைத்துக்கொண்டு மணப்பந்தலுக்குப் போகலாம். காலதாமதம் செய்யக்கூடாது. ஏனென்றால் மற்றப் பண்டாரங்கள் அவர் மனதைக் கலைப்பதற்குள் செய்யவேண்டும். மற்றப்படி சங்கதிகளுக்கு வந்து பேசிக்கொள்ளுகிறேன்" என்று எழுதிக் கையொப்பமிட்டு, கடிதத்தைத் தபால்மூலமாய் சிவஞானம்பிள்ளைக்கு அனுப்பிவிட்டான். அக்கடிதங் கண்டவுடனே சிவஞானம்பிள்ளை மிகவும் சந்தோஷப்பட்டு கலியாணத்திற்காக வேண்டிய காரியங்களையெல்லாம் ஆயத்தப்படுத்த, பண்டாரமும் தான் சொன்னபடியே வந்து எழும்பூர் முனிசாமிமுதலியார் வீட்டிலிறங்கி, மாப்பிள்ளையின் அவலட்சணங்களை யாரும் அறியாதபடி மறைத்துவைத்து, முகூர்த்தத்தன்று இராத்திரி மாப்பிள்ளையின் அங்கஈனங்கள் தெரியாதபடி யவருக்கு உடை உடுத்தி, தலைப்பாகையினால் குருட்டுக்கண்ணை மறைத்துக்கட்டி, இராவேளையாகவே ஒருவருங் கவனியாதிருந்தபடியால், அவசரப்படுத்திக் கலியாணத்தை நிறைவேற்றிவிட்டான்.

விவாகமஹோற்சவத்தின் முக்கிய விஷயமாகிய மங்கிலியதாரண முடிந்தபிறகு, விடிய மாப்பிள்ளையைப்பார்க்க ஒருகண் குருடுபோல் தெரிந்தது. அதற்குமேல் எல்லாருங்கூடிப் பரிசோதித்துப்பார்க்கையில் மாப்பிள்ளை ஒருகாலுங் கையும்முடமாயும் இருக்கக்கண்டு விசனப்பட்டு, சம்பூகனைக்கடிந்து கோபித்துக்



கொண்டு, 'கடிதத்தில், மாப்பிள்ளை அழகைப்பற்றி பிரமாதமாயெழுதியிருந்தாயே, படுபாவி; சூரியனென்றும், சந்திரனென்றும் எழுதினாயே, என்று கோபிக்க, அதற்குச் சம்பூகன், 'ஐயா கோபியாதீர்கள்; நான் உள்ளது உள்ளபடியே எழுதினேன்; அது தங்களுடைய அறியாமையினால் அப்படி நடந்தது; அந்தக்கடிதத்தை யெடுத்துக்கொண்டு வாருங்கள்; இங்கு எல்லாருடைய முன்னிலையிலும் வாசித்துக்காட்டுவோம்; என்மேற் குற்றமிருந்தால் என்னைத்தக்கபடி தண்டிக்கலாம்' என்று சொல்லி, கடிதத்தை விரித்துவாசிக்க, அதில் மாப்பிள்ளையழகைப்பற்றி யதிகமாய் எழுதவேண்டியதில்லையென்றும், அழகிலாதவனென்றும், ஒற்றைக்காலினின்று வேலைவாங்குவானென்றும், ஒரு கையாலெழுதுவானென்றும் எழுதியிருக்கக்கண்டு, 'பார்த்தீர்களா கனவான்களே! நான்உள்ளது உள்ளபடியே எழுதினேனேதவிர வேறொன்றல்லவே; சிவஞானம்பிள்ளை என்மேல் வீண்பழி போடுகிறாரே; இக்கடிதத்தி லெழுதியிருக்கிறதைக் கவனித்துப்பார்த்தால், மாப்பிள்ளை யழகிற் குறைந்தவனென்றும், ஒரு கைகால் நொண்டியென்றும், ஒருகண் குருடென்றும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவுறவிளங்குமே' யென, அதைக்கேட்ட மற்றியாவரும் நகைக்கச் சிவஞானம்பிள்ளை ஆராத்துயரடைந்திருக்கிற காலத்தில், விசுவலிங்கபண்டாரம் திருவாரூருக்கு வருமுன் குடியிருந்த கிராமத்திலிருந்து ஏதோ வியாபாரமுயற்சியாய்ச்சென்னைநகருக்கு வந்திருந்த கருப்பண்ணகவுண்டரென்பவர் அந்தச்சமயத்தி லவ்விடத்தில் வந்திருந்தபடியால், அவரைக்கண்டு கொஞ்சம் தலைமறைவாயிருந்த விசுவலிங்க பண்டாரத்தைப்பற்றிக்கடிதத்தில்வாசித்தபொழுது, அவன் யாவனென்றுபார்க்க, முன் தானிருக்கு மூரிலிருந்து ஓர் மயிர்வினைஞன்குலப் பெண்ணைக் கைப்பற்றிச்சென்றவனென்றறிந்து, கல்வியறிவில்லாதவராதலால், உள்ளதை உள்ளபடியே வெளியிட்டார். இதைக்கேட்டவுடனே, எரிகிறநெருப்பில் நெய்வார்த்து வளர்த்ததுபோல் சிவஞானம்பிள்ளை துக்கசாகரத்தில் மூழ்கி யவமான மடைந்தார். கலியாணவீடு கருமாந்திரவீடுபோ லாயிற்று. வந்திருந்தவர்களெல்லாரும் தங்கள் தங்கள்வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

**படிப்பினை.**—இதினால், யாவராயினும் மூடபுத்தியினால் தங்கள் இனத்தவர்களையும் சிநேகிதர்களையும் இகழ்ந்து, மேல்சாதி கீழ்சாதியென்று வித்தியாசம் செய்கிறவர்கள், இச்சிவஞானம் பிள்ளையைப்போ லவமானமடைவார்கள் என்று நன்றாய் விளங்குகிறது.

## அறியாமைக்குந் தீவினைக்குமுள்ள சம்பந்தங்கள்.

அறியாமைக்குந் தீவினைக்கு மிடையிலேயுள்ள சம்பந்தா சம்பந்தங்களை யாமாராயப் புகுமுன்னர், அறியாமையாவது யா

தென்பதும், தீவினையாவது யாதென்பதும் நிச்சயிக்கப்படல்வேண்டும். அறியாமை யாதென்பதைப் பற்றிக் கொள்கைகள் பலவில்லாமையின், அறியாமையின் பொருளைத் தீர்மானிப்பதில் வீண்காலம் போக்காது தீவினையாவது யாதெனச் சற்று விசாரிப்போம். நல்வினை தீவினையென்னு மிருமொழியும், கற்றோரும் மற்றோரும், முதியோரும் இளைஞரும், ஆணும் பெண்ணும் ஆகிய பலராலும், பலவிடத்திலும், பலகாலத்திலும், பலசம்பந்தத்திலும், பலமுறையும் உபயோகிக்கப்பட்டு வழங்கி வருகின்றமையின், அம்மொழிகளின் பொருளை யாமறிவோமென நினைத்திருக்கின்றேம். ஆயின் உண்மை யாம் நினைப்பதற்கு நேரெதிரே. நல்வினை தீவினையென்னும் மொழிகளை யுபயோகிப்பவரைநோக்கி, 'ஐய, நீர் உபயோகிக்கும் இருமொழிக்கும் சிறிது தயவு புரிந்து பொருள்கூறியருள்க' வெனின் அவரது அறியாமை உள்ளங்கை நெல்லிக்கனிபோற் றெற்றெனப் புலப்படும். நல்வினை அறம் என்னும் இருமொழியும் தீவினை மறம் என்னும் இருமொழியும் ஒரு பொருட்பன்மொழிகளே. இவற்றுள் அறமென்பதற்குப்பொருள் கூறுமிடத்துச் செந்தமிழ் நூலுட்சிறப்புற்றோங்கி மலர்தலையுலகில் பிணையறநின்ற வள்ளுவர்குறட்குத் தெளிவுரையெழுதிய வுரையாசிரியர் பரிமேலழகரும் உரைப்பாயிரத்தில் "அறமாவது மனுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன வொழிதலுமாம்" எனக்கூறிப் போந்தனரென்னில், மற்றோர்க்கியை யாதென்றெடுத்துரைப்பேம். அறம், மறம் என்னுமிரு மொழியும், சின்னாட் பல் பிணிச் சிற்றறிவினராய மாந்தர் பலர்க்கும் ஒரு பொருளுணர்த்தும் மொழிகளன்று. அவற்றின்பொருள் சமயத்திற்குத்தக்கபடி மாறும். கிறீஸ்து சமயத்தார்க்கு அறமாயது இந்துசமயத்தார்க்கு மறமாயும், இந்துசமயத்தார்க்கு அறமாயது புத்தசமயத்தார்க்கு மறமாயும், புத்தசமயத்தார்க்கு அறமாயது மகமதியர்க்கு மறமாயும், தலைதடுமாறிவரும். அத்துடன் நில்லாது ஒரு சமயத்துள்ளேயேயுள்ள பல பிரிவினர்க்கும் வெவ்வேறாயும் பொருள்படும். கிறீஸ்தவர்களுள் கத்தோலிக்கர்க்கு அறமாயது, புரோட்டெஸ்டான்ட் மார்க்கத்தார்க்கு மறமாயும், இந்துக்களில் சைவர்க்கு அறமாயது, வைணவர்க்கு மறமாயும், வழங்கும். அதுவுமன்றி இப்பிரிவு ஒன்றிலுள்ள பல மனிதர்க்கும் பலமாதிரியு மிருக்கும். சைவர்க்குள்



ளேயே கந்தர்க்கு அறமாயது பூதர்க்கு மறமாயும், இராமசாமிக்கு அறமாயது நாராயணசாமிக்கு மறமாயுந் தோன்றும். இவ்விதமே யிம்மொழி யிரண்டுங் காற்றிலகப்பட்ட சருகுபோல நிலையில்லா தலையுமாயின், இவ்விருமொழிக்கும் பொருள்கூறு மார்க்கமெங்ஙனம்? அறம் மறம் என்று பலராலுங் கூறப்படும் வினைகளெல்லாவற்றையுமொத்து நோக்குமிடத்து, நல்வினையாவைக்கும் பொதுவாய தன்மையொன்றும், தீவினையாவைக்கும் பொதுவாய தன்மையொன்று முண்டு. அது யாதெனின், நல்வினை யாவற்றிற்கும் பொதுக்குணம் இன்பம் பயத்தலும், தீவினை யாவற்றிற்கும் பொதுக்குணம் துன்பம் பயத்தலுமே. யாம் ஒன்றைநோக்கி இது நல்வினைசெயக்கடவது எனக்கூறின் யாம்கூறுவது இவ்வினைமுடிக்கி னின்பமுண்டாம் எனப் பொருள்படும். ஒன்றைநோக்கி இது தீவினையென்னக் கூறுமிடத்து அதற்கு அது செய்யிற் றுன்பமுண்டாமென்பதே பொருளாம. நல்வினை தீவினையென்னு மிரண்டிற்கும் யாது பொருள்கூறினும் அப்பொருள் கடையில் இப்பொருளே கொடுக்கும். மனுமுதலிய நூலின் விதித்தது நல்வினையெனக்கூறுமிடத்து மனுமுதலிய நூலில் விதித்ததைச்செய்யில் நமக்குத் துன்பம்பயவாது இன்பமே பயக்குமென்பதே பொருளாம். மனுமுதலிய நூலில் விதித்தவை துன்பம்பயக்குமேல், மனுமுதலிய நூற்குக்கீழ்ப்படிந்து நடப்பவர் யார்? அற்றன்று 'மனுமுதலிய நூலில் மாமிசபோஜனம் விலக்கப்பட்டுள்ளது. மாமிசம் புசித்தால் இன்பம்பயக்குமே, மனுவிற்குக்கீழ்ப்படிந்து யாம் மாமிசம் புசியாது இன்பமிழக்கின்றோமே, நீவிர் மனுமுதலிய நூல்களால் யாம் இன்பமிழக்கில் அந்நூல்களை யார் கீழ்ப்படிவாரெனக் கூறியது ஆதாரமில்லாது போகின்றதேயென' ஆக்ஷேபஞ்செய்யுங்காலத்து விடையளிப்பாம். மனுமுதலிய நூலில் விலக்கிய மாமிசம் புசிப்போர் இரௌரவாதி நரகங்களில் நீடூழிகாலம் வருந்துவரெனக் கூறுவதனால், பின் அந்நரகங்களில் வருந்துவதா லுண்டாம் பெருந்துயரை விலக்குவானிச் சிறுமகிழ்வை யாம் விலக்குகிறேமன்றி, வேறொன்றுமன்று. பின் நமக்குப்பெருந்துயர் வாராதென வறிவோமேல் இச்சிறுமகிழ்வை விழக்கவேமாட்டேம். ஆகையால் நல்வினையென்பவை நமக்குத் தற்காலத்தாவது பிற்காலத்தாவது இன்பம் பயப்பனவையே. தீவினையென்பவை தற்காலத்தாவது, பிற்காலத்தாவது துன்பம் பயப்பனவையே.

நல்வினையாபவை யின்பம்பயப்பவை, தீவினையாபவை துன்பம்
பயப்பவை எனக்கூறில் யார்க்கு இன்பம்பயப்பவையென வோர்வினை
நிகழலாம். செய்பவர்க்கு இன்பம் பயப்பவை யெப்பொழுதும் நல்
வினையாகா. செய்பவர்க்குத் துன்பம் பயப்பவை யெப்பொழுதும்
தீவினையாகா. பலாவின்கனி புண்ண விரும்பியவனொருவன் காட்
டுப்பலாவிலோர் கனிபறித் துண்பானாயின் அது தீவினையன்று.
அதுசெய்யாது கனிபுசிக்கு மவாவினாற் பக்கவீட்டுக்காரன் தோட்
டத்தில் இரவிற் களவாடிப் புசிப்பானாயில் அது தீவினையாகும்.
இரண்டுதொழிலும் செய்தோற்கு இன்பம்பயக்க ஒன்றைத்தீவினை
யென்றும், மற்றொன்றைத் தீவினையன்றென்றுங் கூறிய தென்னை
யெனின், காட்டுப்பலா யார்க்கும் பொதுவானமையால் அவன் பறித்
ததிற் றீங்கின்று. மற்றை வீட்டுப்பலா மற்றொருவன் பொருளா
யிருக்க அவனறியாது இவனபகரித்தமையிற் றீங்காயிற்று. அதுவு
மன்றித் தெருவிலே சென்றொருவன் பக்கத்திலுள்ள தோரேரி
யில் ஒருகுழந்தை மூழ்கக்கண்டான். திடீரென வேரியிற் பாய்ந்து
குழந்தையைக் காப்பற்ற, அவனது ஆடை நீர்மேல் கழல மடியி
லிருந்த பணம் ஏரியிற் சிதறுண்டது. அவன் குழந்தையைக் காப்
பாற்ற விரும்பினமையால் அவனது ஆடையும்போய், ஆடையி
லிருந்த பணமும்போய், விரும்பிச்சென்ற பொருளுமிழந்து தரித்
திரனானால் இவன்செய்தது நல்வினையா தீவினையா? அவற்கு அள
விறந்த துன்பத்தை வருவித்ததேனும், அவன் ஓர் குழந்தையைக்
காத்தமையின் அவனியற்றியது நல்வினையே. ஆகையால் செய்
பவனுக்கு, இன்பம்பயக்கும் வினை சிலகாலத்துத் தீவினையாயும்,
துன்பம் பயக்கும்வினை சிலகாலத்து நல்வினையாயு மிருக்கின்றமை
யின் செய்பவனுக்கு இன்பம்பயத்தலால் ஒரு வினையை நல்வினை
யென்றும், துன்பம்பயத்தலால் ஒருவினையைத் தீவினை யென்றுங்
கூறன்முறையன்று. ஆயின் யார்க்கு இன்பம் பயப்பது நல்வினை,
யார்க்குத் துன்பம் பயப்பது தீவினையென வினவியக்கால், மனிதக்
கூட்டத்திற்கு மொத்தத்தில் இன்பம் பயப்பது நல்வினை யென்றும்
துன்பம்பயப்பது தீவினையென்றுங் கூறப்படும். ஆகவே நல்வினை
யாவது மனிதகூட்டத்திற் கின்பம்பயப்பது. தீவினையாவது மனி
தகூட்டத்திற்குத் துன்பம் பயப்பது. இப்பொழுது தீவினையென்
னுமொழியின் பொருள் யாதென் வொருவாறு நிர்தாரணித்தோம்.



இதன்மேல் தீவினைக்கு மறியாமைக்கு முள்ள சம்பந்தத்தைப்
பார்ப்போம்.

மனித கூட்டத்திற்கு இன்பம் பயப்பது நல்வினை யென்றும்,
துன்பம் பயப்பது தீவினையென்றும், யாம் கூறினமையின், இவ்
வினை இன்பம்பயக்கும், இவ்வினை துன்பம் பயக்கும் என்னும்
பகுத்தறி வில்லா னொருவன் தானே தீவினையொரீஇ நல்வினை
யியற்ற வல்லனல்லன். அறிவுடையா னொருவன் நல்வினை யாது தீ
வினை யாது என வறிந்து தீவினையொரீஇ நல்வினைசெய்ய வல்லனா
யிருக்க அறிவிலானொருவன் தன்னறியாமையினால் தீவினைசெய்யக்
கூடியவனாகின்றான். ஆகவே அறியாமையினால் தீவினை நிகழவிட
மாகின்றது. யாம் நியாயமூலமாய் இவ்வித முரைக்கினும் உலகத்
தில் இவ்விதமே நடை பெறுகின்றதாவெனச் சற்றுவிசாரிப்போம்.
தீவினையா லுண்டாகும்பயன் பலவகைத்தாம். தீவினை செய்பவற்
குமாத்திரமே தீங்கு செய்யலாம். செய்பவன் குடும்பத்திற்
குத் தீங்குசெய்யலாம். செய்பவன் தேயத்திற்குத் தீங்குசெய்
யலாம். மனித கூட்டத்திற்குத் தீங்கு செய்தலுமாம். வித்தி
யாசாலைகளில் ஆண்டாண்டுதோறும் பழகிவந்தோர் பலவித மா
ணாக்கரையும் பார்த்திருக்கலாம். பரீட்சையில் முதலாகத் தேறுவ
தைப்பார்க்கிலும் தம்முடம்பின் சுகத்தை யழியாதிருப்பது நலமென
வெண்ணியிருப்போர் பலர். தன்னுடம்பு கெடினும், முதலாய்த்
தேறவேண்டுமென வாசிப்போருமனேகர். தன்னுடம்பைக் கெடுத்
துவாசித்து இளவயதிலே யமலோகஞ் செல்வதில்வருமூதியமென்
னை? தன்னுடம்புந் தன்னுயிருந் தன் கல்வியினுஞ்சிறந்த பொருள்க
ளென வறியாதோன் தன்னறியாமையினால் தனக்குத்தீங்கு தேடு
கின்றனன். அதுவொன்றோ, தன்வயது முதிர்ந்த தாய் தந்தை
யர்க்கு ஓர் ஆதாரமில்லாதிருத்தற்கும், தன் சிறுபத்தினி, துணை
யின்றாய்ச் சுகமின்றாய், தன் ஆயுள்முற்றும் நீங்காத் துயரிலீடும்
பட்டு ரௌரவாதிநரகங்க ளேழையு மிவ்வுடம்புடனே யநுபவித்தற்
குங் காரணமாகின்றனன். அந்தோ சிறிது ஆலோசித்து நடந்தி
ருப்பனேல் தானும் தன்பத்தினியும், தன்னையடைந்த தாய்தந்தை
யர்க்கோர் ஊன்றுகோலாகி, உலகத்திற்கோர் குடியமாம்படி இனிது
சுகியர்போற் பல குழந்தைகளைப் பெற்று, ஆண்டாண்டுதோறு
மளவிறந்தவானந்த சாகரத்தில் மூழ்கியிருக்கலாமன்றோ? அ

தோ அறியாமையால் வந்ததீங்கு சிறிதா? கொடிது கொடிது
அளப்படுத்தகைத்தோ! இதுநிற்க நாட்டோரங்களுட் சிறு குடிச்
சிகளுட்டிரிந்தோர் சிலர் தம்மனைப்பாங்கரில் மேருமலை போற்
குப்பை குவித்திருப்பதைப் பார்த்திருக்கலாம். அக்குப்பையின்
பாங்கரில் காளிந்தியோ, கங்கையோவென்று கண்டோரஞ்ச அசுத்
தமயமாய் நீர் கரைபுரண்டோடக் காண்டலுமரிதன்று. இத்தகைப்
பொருள்களால் வருந்தீங்கு அம்மனைக்காரனுட னில்லாது அவ்வூர்
முற்றிலுஞ் சூறையாடி நாசமாக்கலரிதோ. அவற்றால் வருந்தீங்
கை யம்மனைக்கார னயிந்தவனேயானால் அச்செய்கை செய்தோயிருக்
கான். அவனறியாமையினா லல்லவோ அவற்றால் வருந் தீங்கைத்
துஷ்ட தேவதைகளால்வருவது என நினைத்து காளிக்குப் பூசையும்,
பேச்சிக்குப் பலியும் வயிரவற்கு மடையுமிட்டுக் கையிலுள்ள சிறு
பொருளையுங் காற்றிலே தூவி, தன்னைக் காப்பாற்றும் வழியற்
றுக் கண்டோரிரங்கக் கேட்டோர்நகைக்கத் தெருவிலலைந்து, திண்
ணையிற்றூங்கி மானிடனென்னும் மணமுமில்லாது போகின்றனன்.
அதுநிற்க ஓர் தேசத்தை யாள்பவனொருவன் அறியாமயினாற் சிறிது
குற்றஞ் செய்யில் அஃது அத்தேசத்துள்ள பலரையும் வருத்து
கின்றதன்றோ! தேசமொன்றை யாள்பவன் சிறிது மூடனாயிருப்
பின் அத்தேயம் அவனால் அடையுந் துன்பத்திற்கு அளவுமுண்
டோ! ஆயின் "ஐய நீர் மேற்கூறிய தெல்லாம் தீவினையாமோ"
வென வினவுவார்க்கு இவை தீவினையன்றேற் பிறிது தீவினையென்
பவை யாவை மனிதர்க்குந் துன்பம் தருபவை தீவினையாமாக
வின்? எனவுரைத்து மேற்செல்வாம்.

பிராஞ்சு தேசத்தவராகிய விக்டர் ஹியூகோ வென்பவர் காட்
டிற்குப் பறவைகள்போலப் பாரீசுக்குச் சோம்பேரிக ளிருக்கின்ற
னர் என்று கூறி யிருக்கின்றனர். அவ்விதமே இச்சென்னையி
லும் சோம்பேரிக ளநேகரைத் தெருக்கடோறுங் காண்கிறோம்.
அவர்கள் தெருவிலே பிறந்து தெருவிலே வளர்ந்து தெருவே யிருப்
பிடமா யிருக்கின்றார்கள். அவர்களுடன் பலபேர் களவிலே பிறந்
து களவிலேவளர்ந்து, களவேதொழிலா யுடையவரா யிருக்கின்ற
னர். அவர்தம் தாய் தந்தையரும், சுற்றத்தாரும், மனச்சந்தோ
ஷத்துடன் களவாடலைநோக்கி தாம் களவாடுதலில் இற்குயாதுமில்
லையென நினைக்கின்றனர். களவாடலிற் சிறந்தவற்கு மிகவும் மரியா



தையுஞ் செலுத்துவார்கள். யுத்தகளத்தில் பலரைக்கொன்றோன்
வீரனாமாறுபோல் அவர்களுள்ளும் பலரைக்கொன்று கொள்ளைய
டிப்போன் பாணிக்கேற்ற மகாவீரனாகின்றான். அவர்களுள்ளே
கள்ளண்ணனெனவோர் பெரிய தெய்வ மிருத்தலுங்கூடும். அக்க
டவுள் கட்டளை யாவருந்திருடியே புசித்தல்வேண்டும். திருட்டிற்
சிறந்தோரே மோக்ஷம் புகுவார், திருடாதோர் நரகத்திலே நீடூழி
காலம் வருந்துவரென வோர்வேத மிருத்தலுங்கூடும். ஆகவே
யவன் பிறந்தநாட்டொட்டு தன் கடமை திருடல்வேண்டும் என
நினைத்து மனவூக்கத்துடன் திருடனாயிருக்கலாம். அவன் திருடல்
புண்ணியமென நினைத்துத் திருடலின் தன்னறிவிற்கெட்டிய வண்
ணம் நடக்கின்றானன்றோ? ஆகவே யவன் திருடல் தீவினையென
வறியாதே திருட அறியாமையாலே திருடனாகின்றான். அந்தோ
அவர்க்குச் சிறிது போதித்தற்கு மனிதரிருந்தனரேல் மனிதற்
குபயோகமானவ ராவாரன்றோ? அவர் குண மெல்லாம் அவர்
வளர்ப்பினாலே யுண்டாகின்ற தன்றோ? ஒவ்வொருவர் குணமு
முண்டாவதற்குக் காரணம் பிறப்பு வளர்ப்பு என விரண்டுண்டு.
பிறப்பினாலே தாய் தந்தையரின் குணம் பிள்ளைகட்கு வருகின்றது.
தந்தை குடிகாரனாயிருப்பின் மகனுங் குடிகாரனாகப் பலமுறையு
மாகின்றான். தந்தை நோயாளியாயிருந்தால் பிள்ளைகளும் பலமு
றையும் நோயாளிகளாகவே பிறக்கின்றார்கள். தந்தை பயித்தியக்
காரனாயிருந்தால் பிள்ளையும் பலமுறையும் பயித்தியகாரனாகவே
யிருக்கின்றான். தந்தையின் குணம் தந்தையி லிருந்தவண்ணமே
மகனிடத்திராது போயினும், தந்தையின் குணத்தை மற்றோரைப்
பார்க்கினும் தான் சீக்கிரமடையக் கூடியவனாகின்றான். இவ்விதம்
தந்தை திருடனாயிருந்தால் மகனிடத்தும் திருட்டுக்குணங்க ளிருக்
கின்றன. ஆகவே மகன் திருடனானால் நல்வழியறியாது பிறப்புவா
சியாற் திருடனாகின்றானன்றிப் பிறிதன்று. ஆனால் திருடன் பிள்
ளையாயிருப்பினும் நல்லோரிடத்து வளருமேயாகி லக்குழந்தை
திருட்டுக்குணம் பலவுமிழந்து நற்குணம் பலவுமடைந்து நல்லோ
னாவதற்கையமிலது. அவ்விதமே நல்லோர் வயிற்றிற்பிறந்த பிள்

ளையாயினும் கெட்டோரிடத்து வளருமாயின் கெட்டோ னாவதற் கையமிலது. ஆகவே ஒருவன் குணம் பிறப்பினாலன்றி வளர்ப்பினா லும் மாறுகின்றது. ஆகவே கெட்டோர் வயிற்றிற் பிறந்தது கெட் டோர் மாட்டுவளருமேயாயின் அப்பிள்ளை கெட்டோ னாவதற்கு ஐயமுளதோ? கொடுமையிலும் முதியோனாவதற்கு ஐயமோ? இவ்விதமே பிறப்பினாலும் வளர்ப்பினாலும் ஒருவன் கெட்டவனா னால் தன் குணத்திற்குத் தான் பாத்திரனல்லன். தானறியாமலே தான் தீயவனாகின்றனன். ஆகவே அநேகர் தமது பிறப்பினாலும் வளர்ப்பினாலும் தாமறியாமலே கொடியராகி நல்வழி யாதெனத் தெரியாது தீவழியை நல்வழியென மயங்கி அளவிறந்த குற்றங் களை யியற்றித் தண்டனைக் குட்படுகின்றனர்.

அதுநிற்க, மேலிந்திய தீவுகளிலொன்றிலே வயதுமுதிர்ந்த தந்தையை யுயிருடன் புதைத்தல் அவர்கள் சமயகோட்பாட்டின் படி வழங்கிவந்தது. ஓர் நாள் ஓர் வயோதிபனைப் புதைக்குங்காலம் வந்தது. வரவே அங்கிருந்த கிறிஸ்தவபோதக ரொருவர் அவ்வ யோதிபனை தன்வீட்டில் மறைத்துவைக்க, அவ்வயோதிபன் போத கர்க்குத்தெரியாது வெளிப்பட்டுத் தன் மகனிடத்திற்சென்று தன் னைப் புதைக்கச்சொல்லிப் புதைக்கப்பட்டனன். பெற்ற தந்தையை யுயிருடன் புதைத்தலினுங் கொடியபாவ மிருக்கின்றதோ? ஆனால் அத்தீவார்க்கு அது ஒரு புண்ணியமாகத் தோற்றிற்றன்றோ? அறி யாமையினாலன்றோ அத்தீவார் இவ்வித கொடிய வினைகளைச் செய் கின்றனர்? அவர்க்குத் தந்தையை யுயிருடன் புதைத்தல் தீவினை யாகத் தோற்றுமேல் அவ்வினையைப்பற்றிப் பேசமாட்டார். இவ்வி தமே மத வைராக்கியத்தினால் அளவிறந்த தீவினைகளெல்லாம் இயற்றப்படுகின்றன. இத்தீவார் நன்றென நினைத்தது நமக்குத்தீய தாகத் தோற்றினாற்போலவே நமக்கு நல்லனவாய்த் தோற்றுவன பல மற்றோர்க்குத் தீயனவாய்த்தோற்றும்.

பெ. போ.

.Rm211N00JP
161300